உ

தமிழ்த்தாய் வாழ்க

தமிழ்ப் பொழில்

தஞ்சைக்
கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு



ஈசுவர ஆண்டு


(1937—38)

பதின்மூன்றும் துணர்

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது

1938

கட்டுரையெழுதிய பேரறிஞர்களும் கட்டுரைகளும்



உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫	ஈசுவர சித்திரை	மலர் க

உ

தென்பாண்டிநாடும்—கொற்கைமாநகரமும்.

கோவை, திரு. சி. து. நாராயணசாமி முதலியார் அவர்கள்

பண்டைக்காலத்தில் பல்கிப் பெருகிய நமது தென்னாட்டில் சேர, சோழ, பாண்டியர் என்னும் தமிழ்வேந்தர் மூவரும் தழைத்தோங்கி வாழ்ந்தனர். "வையை" என்னும் வரநதி பெருக்கெடுத்தோடும் பாண்டி நாடே பழம் பதியாகுமென்று திருவாசகம் ஓதிய "மணிவாசகனார்" புகழ்ந்துரைத்தனர். இப்பழம் பதியாகிய நான் மாடக் கூடலில் முத்தமிழ் வளர்த்த பாண்டியர் வேம்பமாலையணிந்து மீனக்கொடியோடு விளங்கினர். மதுரைப் பாண்டியரினும் வேறாய ஓர் பிரிவினர் "கொற்கைப் பாண்டியர்" என்னும் பெயரில் பாண்டியநாட்டின் தென்பாலுள்ள செந்தமிழ் நாட்டில் அரசுகட்டிலில் அமர்ந்து செங்கோல் செலுத்தினர். அவர்கட்கு அரசிருக்கை பொதியமலையில் தோன்றிப் "பொருனையாறு" என்று பெயரெய்திய வளநதி வற்றாப் பெருக்குடன் கடலொடு கலக்கும் துறையாகிய "கொற்கை" நகரமாயிருந்தது. இத்தொன்மை நகரம்,

"குடியலைந் திரந்து கோலொடு நின்ற
குடியுடை இறைவனும் மூர்க்கனும் பதரே"

என்று நீதி நூல் ஓதிய 'அதிவீரராம பாண்டிய'னுக்குப் பிறப்பக மாயிருந்து புகழ்பெற விளங்கியது. மற்றும் இப்பழம்பதி கொழுஞ்சுவை நிரம்பிய செழுந்தமிழைச் செக்கர்மேனிச் செஞ் சடை வானவனாகிய சிவபிரானிடம் கேட்டுணர்ந்த பொதிய முனிவர் 'அகத்தியனார்' இனிது அமர்ந்துறையும் 'மலையமலையும்' வற்றாத நீர்ப்பெருக்கால் வளம்படுத்தும் 'குற்றாலத்தருவியும்'; கோட்டின் வளமும், கொடியின் செழிப்பும், குறிஞ்சி பூத்த காட்டின்அழகும்; 'தாமிரவருணி' என்னும் தண்பேராறு இருகரை யினும் அலையெறிந்து முத்துக்கொழிக்கும் முன்றுறையும், ஆம். இவ்வுண்மை கண்டே அருந்தமிழ் மூதாட்டி அவ்வையாரும் "பூழியர்கோன் தென்னாடுமுத்துடைத்து," என்றுகூறினர்போலும். சேரரது துறைமுகமாகிய "முசிரியில்" மிளகு எப்படிமிகுதியோ? அதுபோலவே தென்பாண்டி நாட்டிலுள்ள கொற்கை முத்துக் குப்பெயர் சிறந்தது. "மறப்போர்ப் பாண்டிய ரறத்திற் காக்குங் கொற்கையம் பெருந்துறைமுத்து" எனவும்; "விறற்போர்ப் பாண்டி யன் புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை யவிர்கதிர் முத்தம்" எனவும் நாம் அகநானூறு 27. 201ஆம் அடிகளில் காண்கின் றோம். பாண்டியரது சிறைக் கூடத்தில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் கொற்கையில் முத்துக் குளிக்கின்றனரென்று 'பேரிப்லுஸ்'என்ற எகிப்திய கிரேக்நூல் கூறுகிறது. கி.மு. 200ஆம் ஆண்டில் விளங்கிய கலிங்கத்துக் 'காரவேலன்' என்ற அரசனுக் குப் பாண்டிய மன்னன் அழகு மிகுந்த யானைகளையும்; குதிரை களையும்; ஒளிமிகுந்த முத்துக்கள் பல்வகைமணிகள் இரத்தினங் களையும் மரக்கலங்கள் மூலமாக அனுப்பினானென்று கலிங்கத்தி லுள்ள 'ஆதிகும்பா' அதாவது யானைக் குகையிலுள்ள கல் வெட்டில் கூறப்பட்டுள்ளது. பாண்டியனது பரிசுக் கப்பல்கள் கொற்கையினின்றே சென்றனவென்பதை நாம் நம்பலாம்.

முன்றுறை இலங்கும் கொற்கைமா நகரை அடுத்தே முத்துச் சலாபமிடும் முதுபதியும்; தென் திருவாங்கூரைத் தன் னுட்கொண்ட ஆய்நாடும்; தென் திருநெல்வேலிநாடான காரிநாடும்

இருக்கின்றன. இதனுள் குமரித்துறையும், கொற்கைத்துறையும் அடங்கியுள்ளன. பண்டைக் காலந்தொட்டுப் பாண்டிநாட்டுக் கடற்கரையோரத்தில் கொற்கைப் பட்டினமே சிறந்ததோர் துறைமுகப் பட்டினமாகச் சிறப்புற்றுத் திகழ்ந்தது. மகத்தான ரோம் ராச்சியத்தை அகஸ்டஸ் மன்னன் அரசு செய்யத் தொடங்கிய நாள் முதல் கிரிசிலிருந்தும், ரோமாபுரியிலிருந்தும், சீனத்திலிருந்தும், மிசிரத்திலிருந்தும் நிரம்பிய பல்வகைப் பண்டங்களுடன் வரும் மரக்கலங்கள் தமிழ்நாட்டு அலைவாய்த் துறைமுகங்களில் ஒன்றாகிய இத்துறைக்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்து கொற்கைத் துறையினின்று மிளகையும்; மசிலினையும், பட்டுக்களையும், புட்பராகங்களையும், முத்துக்களையும், பொற் கிண்ணங்களையும், பண்டமாற்றுதல் செய்து திரும்பிச் செல்லும். இவ்வுண்மை, "யவனர் தந்த வினை மாணன் கலம் பொன்னொடுவந்து கறியோடு பெயரும்" என்பதால்போதரும். பழமையும், பெருமையும், சீரும், சிறப்புமிக்க இத்திரு நகரைப் பைந்தமிழுணர்ந்த பாவாணர்கள் தமது ஒலிச் சித்திரத்திலே சித்திரியாமல் விடுவதில்லை. அங்ஙனம் விடின் தமது சித்திரத்துக்குச் செம்பாதி அழகு குறைந்து விடுமென்று அவர்களுக்கு அச்சமாயிருந்ததுபோலும். இதுகொண்டே சங்க நூல்களிலெல்லாம் கொற்கையின் வருணனை இடம் பெறுவதற்காயிற்று. வானளாவிய மதில்களாலும், மணிமாடங்களாலும், கூடகோபுரங்களாலும் அணிபெற அமைந்த கொற்கைமாநகரம், பொன்நகரம் போல் பொலிவுற்று விளங்கியது. அதில் பண்டுதொட்டே பாண்டியர்களுக்குக் குலதெய்வமாய்த் திகழும் சிவபிரானுக்குத் திருக்கோயிலொன்று செப்பொன்னாலும், ஒளிமிக்க முத்துக்களாலும், நவரத்தினக் கற்களாலும், சிற்ப சித்திரங்களாலும் புதுமையாகப் புதுப்பிக்கப்பெற்றது. சிற்ப சித்திரங்களை ஒப்புவமையற்ற குஜராத்துச் சிற்பிகளைக்கொண்டு புதுப்பிக்கப் பெற்றதாக அறியப்படுகிறது. அன்றியும் பாண்டியன் 'வெற்றிவேற் செழியன்' அரசுகட்டிலில் அமர்ந்திருந்த காலத்தில் தொன்மை மிக்க தனது கொற்கை நகரத்தில் சிலப்பதிகாரத்துப் பாட்டுடைத் தலைவியான பத்தினிக் கடவுள் "கண்ணகி"க்கு அழகிய கோயிலொன்று புதுக்கி வழிபட்டான்.

அவன் கட்டுவித்த ஆலயம் காலதேவதையின் கடுஞ்சினத்திற்கு இறையாகாமல் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாயும் கொற்கையில் இன்னும் அழியாமலிருந்து இளங்கோவடிகளது சிலப்பதிகாரச் செய்திகளை நமக்கு நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறது.

வெற்றிவேற் செழியனுடைய தந்தை ஆரியப் படைகடந்த முதலாம் நெடுஞ்செழியன் என்பான். இவன் கி. பி. 125ஆம் ஆண்டு முதல் 144 ஆம் ஆண்டுவரை அரசு செய்தான். நீதி தவறாதவன். வடக்கே இமயம்வரை உள்ள ஆரிய அரசர்களை எல்லாம்வென்று இமயத்தின்மீது தனது வெற்றிக் கொடியை நாட்டினவன். இவன் ஊழ் வசத்தால் பொன் செய் கொல்லனுடைய பொய் மொழியை மெய்யென நம்பிக் குற்றமில்லாத கோவலனைக் கோறல் செய்வித்தனன். கோவலன் மனைவி கண்ணகியால் உண்மை உணர்ந்த பின்,

"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது என் ஆயுள் கெடுக"

எனக் கூறி உயிர் விட்டவன்.

இவனன்றோ! அரசன். இவன் மதுரையில் அரசாளும் போது இவன்கீழ் வெற்றிவேற் செழியன் கொற்கையில் அரசாண்டான். வெற்றிவேற் செழியனை 'நன்மாறன்' என்றும்; 'சித்திரமாடத்துத் துஞ்சிய செழியன்' என்றும், கூறுவர். இவன் கி. பி. 144 முதல் 174 வரை மதுரையில் அரியாசனத்திருந்து அரசு புரிந்தான். இவன் காலத்தில் கொற்கை பெரிய துறைமுகமாக நல்ல நிலைமையில் இருந்தது. யவனரும், உரோமரும், பினீசியரும், நீலநாட்டாரும் வந்து வியாபாரத்தை வளரச்செய்தார்கள். இவன் வருடந்தோறும் கண்ணகிக்கு நூறு பொற்கொல்லர்களைக் காவு கொடுத்துப் பழியைப் போக்கிக் கொண்டான். மதுரையிலும், கொற்கையிலும் கண்ணகிக்குக் கோவில் கட்டிச் சிறப்புக்கள் செய்தான்.

கோடிக்குமேல் விலை மதிக்கக்கூடிய ஒளிமிக்க சிறந்த நன்முத்துக்களை ஆண்டுதோறும் அளவிலதிகம் அளித்துவரும்

கொற்கைத் துறையைத் தண்டமிழ் வாணர்கள் "கோற்கையம் பெருந்துறை" என்றும்; அத்துறைக்கு அதிபனாகிய தென்னவனைக் "கோற்கைக் கோமான்" என்றும் தமது சீரிய நாவால் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர். மிகுதியான மாளிகைகளும், வரிசையான தெருக்களும், நீண்டு வளர்ந்த மதில்களும், வானளாவ ஓங்கிய அழகிய கோபுரங்களும் ஒருங்கே நிரம்பிய மதுரைமா நகரம், பாண்டியனது இராசமாநகரமாய்த் திகழ்வதன்முன்னரேயே, கொற்கை ஈடற்ற துறைமுகமாக இலங்கியதெனின், அதன் பழைமை பெருமைகட்கு வேறு சான்றும் விளம்புதல் வேண்டுமோ? இங்ஙனம் புலவர்கள் புகழ்ந்துபாடும் சிறப்புமிக்க. கொற்கைத் துறையின் வளமையறிந்த சோனகரும், யவனரும், தென்குமரிக்குத் தென்பால் அமைந்த நீலநிறத்திரைக் கடலைக் கொற்கைத் துறையென்றே குறித்ததோடு அவர்கள் அத்துறையில் வாழ்ந்த குடிகளோடு உறவுகொண்டு உறைந்திருந்தனர். இத்தகைய சிறப்பமைந்த கொற்கைப் பெருந்துறை தன்னுள் சிறந்த முத்துக்களை விளைவிக்கும் சிறப்பினையுடையதென்றும்; வலம்புரி மூழ்குதலையுடையதென்றும், பழந்தமிழ் நூல்களும் பரக்கக் கூறியுள்ளன. மீனவனது தென்பாண்டி நாட்டின் கொற்கைத் துறையிலேயன்றி குமரித் துறையிலும், பொருனையாற்றிலும், போதியத் தருவியிலும் மிகுதியான ஒளியையும்; பருமனையும் கொண்ட முத்துக்கள் விளையுமென்றும், தமிழ்ப்பெரியாராகிய ஸ்ரீ-குமர குருபர அடிகள்,

"கோடும் குவடும் பொருதரங்கக்
குமரித் துறையிற் படுமுத்தும்
கொற்கைத் துறையிற் றுறைவாணர்
குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்
ஆடும்பெருந் தண்துறைப் பொருனை
ஆற்றிற் படுதண் நிலாமுத்தும்
அந்தண் பொதியத் தடஞ்சாரல்
அருவி சொரியும் குளிர்முத்தும்

என்று அழகுபெறத் தொகுத்தருளினர்.

இங்ஙனம் அழகும், ஒளியும், பருமனும் உயர்வுமுடைய கொற்கைத் துறையிற்படும் முத்தின் வளத்தில் புலவர்கள் ஈடு

பட்டே அவர்கள் அவற்றைத் தமது திருந்திய நாவால் புகழ்ந் தோதுதற்காயினர். அது,

“பேருலகத்து மேஎந் தோன்றிச்
சீருடை விழுச் சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங் குவளை இருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக் கத்து
நற்கொற்கை”

என்று கேட்போர் செவிகளுக்கு அமுது போலிருப்பதால் போதரும்.

இங்ஙனம் கவிஞர்பாடும் சிறப்பமைந்த கொற்கைப் பெருந்துறையின் நினைவினையும், அத்துறையில் கோல்கோணாது அரசு நடாத்திய மன்னனது புகழையும் விளக்கத்தோன்றிய ஓர் புலவர்,

“இருங்கழிச் சேயிறு இனப்புள் ளாரும்
கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போல
தகை பெரிதுடைய காதலி கண்ணே”

என்று சிறப்பிக்கும் சீரியமொழி சிந்தையைக் களிப்பிக்குந் தன்மைத்தாம்.

இன்னும் கொற்கைப் பெருந்துறையில் விளைந்த விலை மதித்தற்கரிய நன்முத்துகள் அளப்பரிய ஆழமும் நெடுந்திரை களையுமுடைய பெருங்கடலையுங் கடந்து சோனகர், யவனர் களது பெண்களின் காது, மூக்கு, கழுத்து முதலிய இடங்களில் அணிகலன்களாகவும்; அரசர்களது திருமுடிகளின் மீது அலங் காரமாகவும் இலங்குவதற்காயின. என்னே! பாண்டியர்க்குப் பாராவாரம் தந்த நன் முத்துக்களின் செல்வச் சிறப்பு.

மதுரைக் காஞ்சியில், ‘மாங்குடி மருதனார்’ “பேருலகத்து” என்ற தொடக்கத்தில் கொற்கை முத்தின் சிறப்பைச் சித் தரித்ததைவிட, இடங்கழிநாட்டு ‘நல்லூர் நத்தனார்’ சித்தரிப்பு மிகவும் செம்மை சான்றதாம். அது,

நறவா யுறைக்கு நாகு நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகை யொடுவந்த
மகா அரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற
கிளர்பூட் புதல்வரொடு கிலு கிலியாடுந்
தத்து நீர் வரைப்பிற் கொற்கை"

என்பது. (சிறுபாணாற்றுப்படை அடிகள். 51-62)

(இதன் பொருளாவது)

[உப்பு வாணிகர் பேரன்புகொண்டு தாங்கள் பெற்றபிள்ளைகளைப் போல் வளர்க்கும் குரங்குகள், தாங்கள் வாணிபத்தின் பொருட்டு அயலிடங்களுக்குச் செல்லும்போது, தங்கள் உப்பு வண்டியுடன் தொடர்ந்து வருமாம். அதன் கழுத்திலே நுணா மரத்தைக் கடைந்து செய்து சிவப்புநிறம் ஊட்டிய ஒருவகை அணியையும்; செவியின் அடியிலே செங்கிடைச்சியினாற் செய்த மலர்மாலையையும், அணிந்து கொண்டிருக்குமாம். அம்மந்தி வீட்டு முற்றத்திலே சிந்திக்கிடந்த பெரிய நன்முத்துக்களை உப்பு வாணிகப் பெண்கள் செவ்விதழ்களினின்றும் வெளியே தோன்றும் பற்களையொத்த நன்முத்துக்களைப் பொறுக்கி அவைகளைக் கிளிஞ்சலின் வயிற்றிலே வைத்து வாளின் நுனி போன்ற அதன் கூர்மையான வாயை மூடிக் கிலுகிலுப்பை செய்து, அவ்வுப்பு வணிகச்சிகளின் புதல்வர் புதல்விகளைக் கூட்டி வைத்துக் கொண்டு அக்கிலு கிலுப்பையைக் கிலிக்கி விளையாடுமாம் என்பது.]

இவ்வாறு சீரும், சிறப்புங்கொண்டு செழிப்புற்று விளங்கிய கொற்கை முதுநகரம், காலதேவதையின் கடுஞ்சீற்றத்தால்

தன் பண்டைப் பெருமைகளையெல்லாம் ஒருங்கே யிழந்து இப்பொழுது "கடற்கரையூர்" என்ற பெயரால் ஒரு சிற்றூராகப் 'பொருனைநாட்டில்' நிலவுகின்றது. நித்திலம் தந்த நீலத்திரைக் கடல் தற்காலம் நான்கு மைலுக்கப்பால் எட்டி நிற்கின்றது. அலையின் ஓசை மிகுந்த முன்னுறை இந்நாள் அடக்கத்துடன் அமர்ந்து உறங்குகின்றது. கொடுப்போர், கொள்வோர்களது பேரொலி சலியாது முழங்கிக்கொண்டிருந்த கொற்கையம்பதி, கணவனை யிழந்த கற்புடை மனைவியைப் போல் மங்கலமிழந்து மாசுற்றிருக்கிறது. முத்தம் கொடுக்குந்தென்கடல் முத்தம் கொடாது விலகிநிற்கின்றது. என்னே! காலம் என்னும்மோசக்காரனது வஞ்சச் செயல், தன் அழகையும், பெருஞ்செல்வத்தையும், கொற்கை இழந்ததெனினும், கபாடபுரம்போல் முற்றும் அழிந்து விடாமல், தன்பழம் பெருமையின் அடையாளங்களை அங்குமிங்கும் சிறிது, காட்டிக் கொண்டிருக்கின்றது. 'குமரிப்பொருப்பன்', 'கொற்கைத்துறைவன்' என்று சிலப்பதிகாரம் வஞ்சிகாண்டத்தின் இறுதியில் புகழ்ந்தோதப் பெற்ற கொற்கைப் பாண்டியர்களின் வழித் தோன்றலாகிய அதிவீரராம பாண்டியன் இக்கொற்கையிலேயே அரசு செய்தான் என்பதற்குச் சிறந்த சான்றுகள் இருக்கின்றன. "வெற்றி வேற்கை வீரராமன், கொற்கையாளி குலசேகரன்" என்னும் சொற்றொடர் அச்சான்றுகளுள் ஒன்றாகும். பாண்டியர்களுடைய அரசிருக்கை (இராசதானி)யானது ஓரிடமாயில்லை. கடல்கோள்களாலும், வேறு காரணங்களாலும் மாறிமாறிப் போயிருக்கிறது. உதாரணமாக:—

(1) முதற்சங்கம் நடைபெற்ற குமரியாற்றங்கரையில் அரசிருக்கையாகச் சிறப்புற்றோங்கியிருந்த தென்மதுரையானது குமரிகண்டம் கடல் கொள்ளப்பட்டபொழுது அழிந்து ஒழிந்தது. அதிலிருந்த புத்தகசாலைகளும் (Libraries) அதனோடு அழிந்து ஒழிந்தன.

(2) தென்மதுரை கடல் கொள்ளப்பட்டபின், இரண்டாம் சங்கம் நடைபெற்ற கபாடபுரமானது அரசிருக்கையாகஇருந்தது.

அதுவும் கடல்கொண்டு ஒழிந்தது. இராமாயணகாலத்தில் கபாடபுரம் அரசிருக்கையாக இருந்தது என்பது வால்மீகிமுனிவரால் தெரியவருகிறது.

(3) அதன்பின்னர் 'பூழி' என்ற ஊரும், அதன்பின்னர் 'மணலூர்' அல்லது 'மணலூர்புரம்' என்ற ஊரும் அரசிருக்கையாக இருந்தன. இதனை, மகாபாரதத்தாலும், "பூழியர்கோன் வெப்பொளித்த புகலியர்கோன்" என்ற மேற்கோளாலும் அறியலாம். மணலூர் அரசிருக்கையாக இருந்தது பாரதகாலம்.

(4) அதன்பின்னர் கொற்கை அரசிருக்கையாக ஏற்பட்டது. மணலூர்ப்புரத்தினின்றும் கொற்கைக்கு அரசிருக்கைமாறியது. வியாபார நிமித்தம் கொற்கைத்துறை அக்காலத்தில் முத்துக்களுக்குப் பேர்போனதாயும், கப்பல்கள் வந்து தங்குவதற்கு வசதியுள்ளதாயும் இருந்தபடியால், பாண்டியர்கள் அதனையே அரசிருக்கைத் தானமாகக் கொண்டனர்.

(5) கொற்கைத் துறைமுகம் கடல் பொங்குவதால் சில பாகம் அழிவுற்றது; அதுகண்ட பாண்டியர்கள் கடலை விட்டு மேற்கே வந்து வைகைநதிக் கரையில் 'கூடல்' என்ற மதுரையை அரசிருக்கையாகக் கொண்டனர்.

ஆனால், கொற்கையிலும், அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வசித்துக் கொண்டுதான் வந்தனர். கொற்கைத் துறைமுகம் முழுதும் கடல் வாய்ப்பட்டபின்னரேயே பாண்டியர்கள் அவ்விடத்தைவிட்டு நீங்கி மலையடுத்த நகரமாகிய தென்காசியில் வசிக்கத் தொடங்கினர். தென்காசி குற்றாலத்துக்கு அண்மையில் உள்ளதால் விரைந்து சீரும், சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது.

சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் (கி. பி. 1422—1463) அரசாளும்போது இவன் தம்பி, சடையவர்மன்—குலசேகரபாண்டியன் (கி. பி. 1429—1473) தென்காசியில் அரசு புரிந்தனன்.

குலசேகர பாண்டியனின் மகன், அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன்.(கி. பி. 1473—1506) இவன் தென்காசியில் அரசுசெய்தவனே.

சடையவர்மன் பராக்கிரமபாண்டியனின் மகன் பராக்கிரம குலசேகரதேவன். (கி. பி. 1463—1499) மதுரையில் அரசு புரிந்தவன்.

இவர்களுக்குப்பின், அபிராமபராக்கிரமபாண்டியன், ஆகவராமன் என்ற உடன் பிறப்பினர் (கி. பி. 1499— 1534) வரை அரசுபுரிந்தனர். அதன்பின்னர் சடையவர்மன் சீவல்லபபாண்டியன் (கி. பி. 1534—1543) வரை அரசுசெய்தான். இவனுக்குச் சந்ததியில்லை. இவன் ஆகவராமனுடைய புதல்வன்.

இவனுக்குப்பின் அபிராமபராக்கிரமனுடைய புதல்வன் சடையவர்மன் பராக்கிரமகுலசேகரபாண்டியன் (கி. பி. 1543-1552) அரசாண்டான். இவனுடைய தம்பி கி. பி. 1552 முதல் 1564வரை அரசாண்டான். இவன் பெயர் நெல்வேலிமாறன்.

இந்நெல்வேலிமாறன் முதல் மகனே நைடதம் பாடிய அதிவீரராமபாண்டியன் ஆவன். இவன் கி. பி. 1564முதல்1604வரை தென்காசியில் அரசு செய்தான். இவனுக்குச் சடையவர்மன் என்ற பட்டமும் உண்டு. இவனுக்கு "அழகன் சீவலவேள்" என்ற மறுபெயரும் உண்டு. (தொடரும்.)

உ

பின்னத்தூர்ச் சுப்பிரமணிய சாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரை மறுப்பின் மேல் செந்தமிழ்ப்பத்திராசிரியர் திரு நாராயணையங்கார் எழுப்பிய தடையும் அதற்கு விடையும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 12. பக்கம் 504.)

பதினான்காவது பிழை:— 'இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற துணர விரித்துரையாதார்' என்னும் திருக்குறளில் ஊழ்த்து நாறாமலர் என்றது 'பூத்துக் காய்க்காத மல்லிகைக்

கொடி' யென்றது போல் நின்றது என்றார் செந்தமிழ்ப் பத்திராசிரியர், அவர் 'ஊழ்த்தும் நாறு மலர்' என்ற உம்மைதொக்கு நின்றது என்பதை அறியார் போலும்.

பதினைந்தாவது பிழை:—'தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியில் 'சார்ந்து வரல்' என்பதன் முடிபு கூறுமிடத்து 'சார்ந்து' என்னும் வினையெச்சம் 'வரல்' என்னும் தொழிற் பெயரின் 'வா' என்னும் முதனிலையோடு முடிந்தது என்று முடிபு காட்டப்பட்டிருக்கிறது. இங்கு அவ்வினையெச்சம் வரல் என்னும் தொழிற்பெயரோடு முடிதற்கு யாதொரு தடையும் இன்மையால், அத்தொழிற் பெயரோடு முடியாது முதனிலை கொண்டு முடித்தற்குக் காரணம், வினையெச்சங்கள் யாண்டும் முதனிலைகொண்டே முடியவேண்டும் என்பது அவர் கருத்துப் போலும்........சூத்திரவிருத்தியிற் காட்டிய முடிபு பயன்படாதென் பதற்கு அம்முடிபே சான்றுகின்றது. எங்ஙனமெனில் இங்கு சார்ந்து என்னும் வினையெச்சம், வரல் என்னும் தொழிற்பெயர் கொண்டு முடியாதாயின், அதன் முதனிலையாகிய வா என்பதும் அத்தொழிற் பெயர்த் தன்மைபற்றி நிற்றலால், அதனைக் கொண்டு முடிதற்கு எந்த நியாயம் உள்ளதோ, அந்த நியாயத் தாலேயே வரல் என்னும் தொழிற் பெயரைக்கொண்டு முடிதற்கும் தடையில்லை. ஆதலால் வினையெச்சங்கள் யாண்டும் முதனிலை கொண்டே முடியவேண்டும் என்னும் நியமம் இல்லை யென்று கூறினர் செந்தமிழ்ப் பத்திராசிரியர்.

தெய்வப்புலமைச் சிவஞானமுனிவர் வடமொழி தென் மொழிக் கடல்களின் நிலைகண்டுணர்ந்து, தமிழ் இலக்கணத் திற்கு வரம்பமைத்த பெரியார். அவர் கருத்தின் ஆழத்தைக் கண்டு; உண்மைப்பொருளை அறிந்து கொள்ளுதற்கு பல பிறவி களிலே அவரைப் பூசித்த தவப்பயன் கிட்டினார்க்கன்றி ஏனை யோர்க்கு இயலாதென்பது, தலைமைசான்றஞானிகளின் கருத்து. அச்சிவஞானமுனிவர் கருத்து இதுவெனச் செந்தமிழ்ப் பத்தி ராசிரியர் பிழைத் துணர்ந்து காட்டி அதனை எளிதாக மறுக்கத் துணிந்தது கற்கிள்ளிக் கையிழந்தற்றும்.

வரல் என்னும் தொழிற்பெயருள், வா என்னும் முதனிலை தொழிற்பெயர் என்பது அச்சிவஞான முனிவர் கருத்தன்று. அம்முதனிலை உரிச்சொல் என்பதே அவரது மயக்கமற்றதுணிபு. இதனை அடியிற் குறிக்கப்படும் அவரது உரைக் குறிப்புக்களால் அறிக.

'நட வா முதலிய முதனிலைகளும் தொழிற்பண்பையுணர்த் தும் சொற்கள் ஆதலின், உரிச்சொல்லேயாம் என உணர்க'' எ-து. (சூ-வி.)

'எழுத்து—எழுதப்படுவது என்னும் பொருட்கண் 'எழுது' என்னும் முதனிலை உரிச்சொன் முன்னர்ச் செயப்படுபொருண் மையுணர்த்தும் ஐகார விகுதி புணர்ந்து........அவ்வைகாரம் கெட்டுக், கெட்டவழித் தகரமிரட்டித்து, எழுத்தெனமுடிந்தது' எ-து. (சூ-வி.)

'அதிர்ப்புக்கடிது' என்பதனைக் குற்றியலுகரவீற்று உரிச் சொல்என்றார், உரிச்சொல் இலக்கணம் அறியாமையின்; 'அதிர்' என்னும் உரிச்சொல், புகர விகுதி பெற்றுத் தொழிற்பெயராய் நிற்குமாறு அறிக'. எ-து. (இ. வி. சூ.) (சிவ. போ. சூ. 2 பேருரைக்குறிப்பு) 'ஆ' என்பது பெற்றத்தினை உணர்த்தும் வழிப் பெயர்ச்சொல் எனவும், இரக்கக் குறிப்பினை உணர்த்தும் வழி இடைச்சொல் எனவும், ஏவற்பொருண்மையை உணர்த்தும் வழி வினைச்சொல் எனவும், ஆதற்புடைபெயர்ச்சியை உணர்த் தும்வழி உரிச்சொல் எனவும் கோடல் எல்லார்க்கும் ஒப்பமுடிந் தமையின், எழுத்தொப்புமை பற்றி, உபசாரத்தால் பல பொருள் ஒருசொல் எனப்படினும், போந்தது..........ஆதற் புடைபெயர்ச்சிக் குறிப்பை உணர்த்துவது உரிச்சொல்லேயாம் என்பது சூத்திரவிருத்தியுள் உரைத்தாம். ஆண்டுக் காண்க, எ-து.

'நிலத்தைக் கடத்தல் குழையை உடைமை என்பவற்றுள் கடத்தல் உடைமையென்பனவும் வினை வினைக்குறிப்பு முதனிலை யடியாகத் தோன்றிய பெயர் ஆகலின், அவை வினை வினைக்குறிப் போடு முடிந்தனவேயாம்' இக்கருத்தானன்றே 'இரண்டாகு

வதே' என்னும் சூத்திரத்தில் 'அவ்விரண்டின்' என்றொழியாது 'அவ்விருமுதலின் தோன்றும் அதுவே' யென்றார்' எ-து. (சூ-வி)

இனி அச் சிவஞானமுனிவர் 'சார்ந்துவரல்' என்பதற்கு முடிபிலக்கணம் கூறுமிடத்துப் பின்வருமாறு கூறினர் அதனை ஊன்றிப் பார்க்க.

"சார்ந்துவரல் என்புழிச் சார்ந்து என்னும் வினையெச்சம் வரல் என்னும் தொழிற்பெயரின் முதனிலையாகிய வா என்பதனோடு முடிந்தது. "வினையெஞ்சுகிளவிக்கு வினையுங்குறிப்பும்" என்புழி வினையென்றது முதனிலையுரிச் சொல்லேயாகலின் விகுதி யெவ்வாற்ருன் வரினும் அதுபற்றி ஆராய்ச்சிவேண்டா எனக் கொள்க. 'எதிர்மறுத்து மொழியினும் பொருணிலை' திரியா என்றதூஉம் இக்கருத்தே பற்றி யென்பது இன்னும் வினையெச்ச முடிபு பாயிரவிருத்தியுள் உரைத்தாம் கடைப் பிடித்துக்கொள்க.' எ-து.

இதனால் நிலத்தை யென்னும் இரண்டாவது கடத்தல் என்னும் தொழிற் பெயரைக் கொண்டு முடியாது அத்தொழிற் பெயரின் முதனிலையாகிய கட என்னும் வினையைக் கொண்டு முடியும் என்பதும், குழையைஎன்னும் இரண்டாவது உடைமை யென்னும் குறிப்புத் தொழிற் பெயரைக்கொண்டு முடியாது அதன் முதனிலையாகிய உடையென்பதனோடு முடியும் என்பதும், அவ்வாறே சார்ந்துவரல் என்புழிச் சார்ந்து என்னும் வினை யெச்சம் வரல் என்னும் தொழிற் பெயரைக்கொண்டு முடியாது அத்தொழிற்பெயரின் முதனிலையாகிய வா என்னும் தொழிலைக் கொண்டு முடியும் என்பதும், அதுவேயன்றி உண்டு வாரான் என்ற எதிர்மறுத்த மொழியிலும் உண்டு என்னும் வினையெச்சம் வாரான் என்ற எதிர்மறை வினை முற்றைக்கொண்டு முடியாது அதன் முதனிலையாகிய வா என்பதனோடு (வருதற்றொழிலோடு) முடியுமென்பதும் ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாதல் விளக்கினர். வினையை ஒழிபாக உடையது வினையெச்சம். அது பெயரைக்கொண்டு முடியவும் பெறும் என்ருல் வினையெச்சம் என்னும் குறியீடு பிழைபடுமாறு அறிக.

வினையென்பது வினைச்சொற்கும் வினைப்பெயர்க்கும் முதனிலையாய் உண் தின் என வருவது என்றும் வடநூலார் அதனை

தாது என்பர் என்றும் சேனாவரையர் கூறியவாறு காண்க (சூ 415. உரை.)

வடநூலார் தாதுவென்று குறியிட்டு வழங்கிய வினைமுதனிலையெல்லாம் உரிச்சொல் என்றும் அவையே குறைச்சொல் எனப்பட்டனவென்றும் தெய்வச்சிலையார் கூறியதும் காண்க. (உரி. சூ. 1-உரை.)

ஆதலால் 'சார்ந்து வரல்' என்புழிச் சார்ந்து என்னும் வினையெச்சம் வரல் என்னும் தொழிற்பெயருள் வா என்னும் முதனிலை யுரிச்சொல்லோடு முடிந்துக் காட்டியது பசுமரத்தாணியாதல் காண்க.

'பொருண்மை சுட்டல்' என்னும் சூத்திரத்து 'வினைநிலையுரைத்தல்' என்ற முதல் வேற்றுமைச் சூத்திரத்தில் 'வினை' யென்றதும் இவ்வினை முதனிலையே, 'சாத்தன் வந்தான்' என்பது போலச் 'சாத்தன் வந்தவன்' என்பதும் வினைகொள வருதற்பாலது. 'சாத்தன் தெய்வம்' என்பது போலப் பெயர்கொள வந்ததன்று.

'அலர்நாண ஒல்வதோ, அஞ்சலோம்பென்றார், பலர் நாண நீத்தக்கடை' என்னும் குறளுரையில் நாண என்னும் வினையெச்சம் ஒல்வது என்னும் தொழிற்பெயருள் ஒல்லுதல் தொழிலோடு முடிந்தது என்றும், பரிபாடல் 1 உரையுள், பாழ்பட மரபிற்றாக என்னும் வினையெச்சங்கள் விசும்பில் என்புழி இன்மையாகிய குறிப்புக்கொண்டது. என்றும் பரிமேலழகர் குறித்தார்.

இதனால் இவர் 'வினையெஞ்சு கிளவிக்கு வினையுங்குறிப்பும், நினையத்தோன்றிய முடிபாகும்மே' என்னும் சூத்திரக்கருத்தை இனிதுணர்த்தினர் ஆவர்.

தல், அல், பு, கை முதலிய விகுதிபெற்றுப் புடைபெயர்ச்சியை உணர்த்திநிற்கும் தொழிற் பெயர்ப் பொருளும் வேறு: உண், தின் வா என்றாற்போலும் முதனிலையால் உணர்த்தப் படும் தொழின்மாத்திரமும் வேறு: என்பது சான்றோர் கருத்து

என்பது முன்னரே விளக்கினும். அடியில்கண்ட சான்றோர் உரைக் குறிப்புக்களானும் அது தெளிக.

(கோவை-87). கொள்ளப்படாது மறப்பது அறிவிலென் கூற்றுக்களே. கொள்ளப்படாது என்பது வினைமுதன்மேலும் செயப்படுபொருண் மேலும் அன்றி வினைமேனின்ற முற்றுச் சொல்-'அகத்தின்னுவஞ்சரை அஞ்சப்படும்' (குறள்) என்புழிப் போல.

(ஷை. 176) 'சூருறு சோலையின்வாய் வரற்பாற்றன்று தூங்கிருளே' வரற்பாற்றன்று. வினைமேல் நின்றது.

(சித்தியார் சூ1. செய்.1) 'கொள்ளப்படாது மறப்பது' என்புழிப் போலப் போவது என்னும் ஒருமை அத்தொழின் மேல் நின்றது. (ஆடியன்மாமயில். சிந்தா-நாம. 209). ஆடுதல் என்று வினைமேனின்ற வினைப்பெயரன்றி அவ்வினைமாத்திரை உணர்த்தி நின்றது-கல்லாடம் செய்1. உரைமேற்கோள்.

(சிந்தா-கோவிந்தை. 8) 'உடைதும் சுடுவில்தேன் உடைந்த தொப்பவே' சுடுவில்-சுடுவால்-சுடுதலால் தேனினம் கெட்டாற் போல-சுடுதல் என வினைமேனின்ற வினைப்பெயரன்றி வினை மாத்திரை உணர்த்தி நின்று உருபேற்றது.

(குறள்) 'பெறுமவற்றுள்யாம் அறிவதில்லை' அறிவது அறிதலைச் செய்வது, என அத்தொழின்மேல் நின்றது.

இனி அப்பரிமேலழகர் சில விடங்களில் வினையெச்சங்களைத் தொழிற்பெயர் வினையாலணையும் பெயரோடு முடித்துக் காட்டுவதும் உண்டு. அஃது அவர் பிறிதோரிடத்தில் குறித்த முதனிலை முடிபு இலக்கணத்தை ஆண்டும் உய்த்துணர்ந்து கொள்ள வைத்தவாறு என்று கொள்க. எவ்வாற்றானும் வினையேச்சம் வினைகோண்டு முடிதற் பாலதேயன்றிப் பெயர்கோண்டு முடியாது என்பது கடைப்பிடிக்க.

இனிச் சிலர், வினையெச்சத்திற்கு முதனிலை முடிபு காட்டுதல், எதிர்மறை வினைச்சொல்லோடு தொடர்ந்த வழியேயென்று கூறுவர். அவர் அறியார். விதி வினைச்சொல் தொடர்ந்த வழியும் காட்டப்படும். இதனை மேல் காட்டப்படும் உதாரணங்களுட் கண்டு கொள்க.

இனிப் பதினாறாவது பிழை:—உண்ணான் உண்டிலன் என்றாற்போலும் எதிர்மறை வினைகளில் காலம் புடைபெயர்ச்சியென்று ஒருவகையான புடைபெயர்ச்சி வினை உண்டென்று செந்தமிழ்ப் பத்திராசிரியர் மொழிந்தார். இவர் முயல் கோடுடைத்து என்பார் போலும். எதிர்மறை வினைகளில் வினைநிகழ்ச்சி யென்பதே இல்லையென்று 'எதிர்மறுத்து மொழியினும் தத்தமரபிற், பொருணிலை திரியா வேற்றுமைச் சொல்லே' என்னும் சூத்திர வுரையில் சேனாவரையர் முதலியோர் தெளிவுறக் கூறினார். புடை பெயர்ச்சியெனினும் வினைநிகழ்ச்சியெனினும் ஒக்கும் என்றும், நட, தா, உண், தின் என்னும் முதனிலையால் உணர்த்தப்படும் தொழிற் பண்புப் பொருள்கள் 'வினையே செய்வது' என்னும் சூத்திரத்துக் கண்ட காரகங்களால் புடைபெயர்ந்து தொழில் நிகழ்ச்சியுறும் வழிப் புடைபெயர்ச்சி உண்டென்றும் நடத்தல், வருதல், உண்டல், தின்றல் என விகுதிபெற்றுத் தொழிற்பெயராய் நின்ற நிலைமையே புடைபெயர்ச்சியை விளக்குவது என்றும் பிரயோகவிவேக நூலார் முதலியோர் இலக்கணம் விளங்கவுரைத்தது முன்னமே உணர்த்தப்பட்டது.

பதினேழாவது பிழை:—இல்லை உண்டு என்றாற் போலும் குறிப்பு வினைச்சொற் களிலும் புடைபெயர்ச்சி உண்டென்றார் செந்தமிழ்ப்பத்திராசிரியர் அங்குப் புடைபெயர்ந்த வினையாதெனமறுக்க.

வினையெச்ச முடிபு பற்றிப் பண்டை உரையாசிரியர் கருத்து

வினையெச்ச முடிபைப்பற்றிய பொதுவிதி மேற்குறித்த 'வினையெஞ்சுகிளவிக்கு வினையும் குறிப்பும் நினையத்தோன்றிய முடிபாகும்மே.—ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே' என்பது. ஆகையால் ஒரு வினையெச்சத்தைத் தொடர்ந்து பலவினைச் சொற்கள் வந்து மயங்கி, அவற்றுள் இன்ன வினைச்சொல்லோடு அது முடிந்ததென்பது விளங்கப்பெறாத நிலைமையில், அதனை விளக்குவதும், குறிப்பு வினைச்சொல் வந்ததாயின் அதனை விளக்குவதும், அந்தக் குறிப்பு வினைச்சொல்லின் ஆக்கச்சொல்லை விரித்து முடித்தலும், 'முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின' 'ஏனையெச்சம் வினைமுதலானும்' என்னும் சிறப்புவிதி பற்றித்

தன் கருத்தாவின் வினையையே கொண்டு முடியவேண்டும் வினையெச்சங்கள் அப்படியே முடிந்தனவென்று விளக்குதலும், தன் கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையையுங்கொண்டு முடியும் என்ற வினையெச்சங்கள் அவ்வாறே இன்ன வினையைக் கொண்டு விளக்குதலும், வினையெச்சத்தைத் தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினைத்தொகையும் தொடர்ந்துவரின் அவற்றின் முதனிலையைப் பிரித்து அதற்கு முடிபாகக் காட்டுதலும், எதிர்மறை வினைச் சொல்லும் வினைப் பெயரும் தொடரினும் அவ்வாறே முதனிலையைப் பிரித்து முடிபு காட்டுதலும், வினையெச்சத்துக்கு முடிக்குஞ்சொல் தொக்கு நின்றவிடத்து அச்சொல்லை வருவித்து முடித்துக் காட்டுதலும், அம்முக் கிளவியும் சினைவினைதோன்றிற் சினையொடு முடியா முதலொடு முடியினும், என்னும் சூத்திரவிதிபற்றிச் சினையின் வினையெச்சம் முதல்வினையோடு முடிந்தவாறு காட்டுதலும், 'பன்முறையானும் வினையெஞ்சுகிளவி—சொன்முறை முடியாது அடுக்குநவரினும்' என்னும் சூத்திரவிதிபற்றி வினையெச்சங்கள் அடுக்கி ஒரு முடிபு கொள்வதனைக் காட்டுதலும், 'வினையெஞ்சு கிளவியும் வேறு பல்குறிய' என்னும் சூத்திரவிதிபற்றி ஒரு வினையெச்சம் வேறு வாய்பாடாக'வும் முற்றாகவும் திரிந்ததேல் அதனைக் காட்டுதலும் உரையாசிரியர்க்கு நியமம்; செந்தமிழ்ப்பத்திராசிரியர் கருதிய வாறு அன்று.

வினையெச்ச முடிபு பற்றிப் பண்டை உரையாசிரியர் உரைக் குறிப்பு.

பேராசிரியர். (கோவையார் 298) 'மத்தகஞ்சேர் தனிநோக் கினன் வாக்கிறந் தூறமிர்தே, பொத்தகஞ் சேர்ந்தென்னை உய்ய நின்றோன்.' வாக்கிறந்து என்பதும் அமுதொத்து என்பதும் அகஞ்சேர்ந்து என்பதனோடு இயையும்.

(ஷை298) 'என் கடைக்கண்ணினும் யான் பிற ஏத்தாவகை யிரங்கித், தன் கடைக்கண்வைத்த.'—கடைக் கண்ணினும் என்னும் வேற்றுமைச் சொல்லும் ஏத்தாவகையென்னும் வினை யெச்சமும் கடைக்கண்வைத்த என்னும் வினை கொண்டன.

(ஷ 202) 'பணையுந் தடமுமன்றே நின்னொடேகின் எம் பைந்தொடிக்கே.' ஏகின் என்னும் வினையெச்சம் பணையும் தடமு மாம் என விரியும் ஆக்கத்தோடு முடிந்தது.

(ஷ 290) 'பரங்குன்றினிற் பாய்புனல் யாமொழுகக் கதி யுடையான்.' ஒழுக என்னும் வினையெச்சம் கதியை உடையான் என்னும் ஆக்கத்தை உட்கொண்ட வினைக்குறிப்புப் பெயரோடு முடியும்.

(ஷ 79) யாழுமெழுதி யெழின்முத்தெழுதி இருளின் மென்பூச் சூழுமெழுதியொர் தொண்டையுந் தீட்டி........இளமாம் போழும் எழுதிற்றோர் கொம்பர் உண்டேல். செய்தென் எச் சங்கள் எழுதிற்று என்னும் தொழிற்பெயரின் எழுதுதலோடு முடிந்தன.

(ஷ 16) 'தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தம் திங்களின் வாய்ந்து, அளிவளர் வல்லியன்னாய் முன்னியாடு.' வாய்ந்து வாய்ப்ப என்பதன் திரிபாகலின், அளிவளர் என்னும் பிறவினை கொண்டது.

(ஷ 182) 'ஆரம்பரந்து திரைபொருநீர், முகில் மீன் பரப்பிச் சீரம்பரத்திற் றிகழ்ந்தொளிதோன்றும்.' பரப்பி யென்னும் வினையெச்சம் சீரம்பரம் என்னும் வினைத்தொகையின் முன்மொழியோடு முடிந்தது. பரப்பி விளங்கும் என ஒரு சொல் வருவித்து முடிப்பினும் அமையும்.

(ஷ 315) 'விருப்புறுவோரை விண்ணோரின் மிகுத்து நண்ணார் கழியத்-திருப்புறு சூலத்தினான்.' மிகுத்து என்னும் வினையெச்சம் திருப்புறு சூலம் என்புழித் திருப்பு என்பதனோடு முடிந்தது.

(ஷ 26.) 'நல்வினையுந் நயம் தந்தின்று—துப்புறவே.' துப்புற என்னும் எச்சம் தந்தின்று என்பதில் தருதல் என்பத னோடு முடிந்தது.

(ஷ 41) 'அறியச் சிறிதும்—மாவியன்றன்ன மென் னோக்கி நின்வாய் திறவாவிடின் என்னாவி.......அழிகின்றதே' அறிய என்னும் வினையெச்சமும் சிறிது என்னும் வினையெச்சமும்

திறவாவிடின் என்னும் எதிர்மறை வினையில் திறத்தலோடு முடிந்தன.

(ஷை 65) 'பிழைகொண்டொருவிக் கெடாதன்பு செய்யின்.' ஒருவியென்னும் வினையெச்சம் கெடாது என்னும் எதிர்மறை வினையெச்சத்தில் கெடுதலோடு முடிந்தது.

(ஷை 97) 'கற்றில கண்டன்னம் மென்னடைகண் மலர் நோக்கருளப்—பெற்றில மென்பினை பேச்சுப் பெறுகிள்ளை, கண்டு என்பது கற்றலோடும் அருளஎன்பது பெறுதலோடும் முடிந்தது.

(ஷை, 47) 'பல சொல்லி யென்னை' சொல்லி என்னும் வினையெச்சத்திற்குப் பெறுவது என ஒருசொல் வருவித் துரைக்கப் பட்டது.

(ஷை 49) என்னறிவால் வந்த தன்றிது முன்னும் இன்னும் முயன்றால்—மன்னெறி தந்த திருந்தன்று தெய்வம் வருந்தல் நெஞ்சே' இன்னும் இருந்ததெனக் கூட்டி, முயன்றால் என்னும் வினை எச்சத்திற்கு முடிக்கும் என ஒரு சொல் வருவித்து முடிக் கப்பட்டது.

(ஷை 60)'பல்விலனகப் பகலைவென்றோன் தில்லை பாடலர் போல்—எல்லியன் நாகத் தோடேனம் வினவிவன் யாவன் கொலாம்,—வினய் என்பது பாடமாயின் வாரா நின்ற என ஒரு சொல் வருவித்து முடிக்க.

(ஷை 247)'மீள்வது செல்வதன் றன்னை....கிழவோனொடுங் ......கண்ணுள்.........சுரநீந்தி........அணுகுவரே' அணுகுவர் என்புழித் தலைமகள் தொழிலும் உண்மையால் நீந்தி யென்னும் எச்சம் வினைமுதல் வினை கொண்டதாம். (இவளும் இவனும் சிற்றில் இழைத்தும் சிறுபறை யறைந்தும் விளையாடுப—என் றாற் போல் கிளவி சூ 2 சேனு. உரை)

(ஷை 257) 'வான்றோய் பொழிலெழின்மாங்கனி மந்தியின் வாய்க் கடுவன்—தேன்றோய்த்தருத்தி மகிழ்வ கண்டாய்' அருத்தி யென்பதற்கு 'நெடுஞ்சுரநீந்தி' என்பதற்கு உரைத்த துரைக்க.

(ஷை 1)'மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடை வாய்ந்து'—வாய்ந்து நடையின் வினையாகலால் சினைவினைப் பாற்பட்டு முதல் வினையோடு முடிந்தது.

(ஷை. 35) 'புயலுளவே மலர் சூழ்ந்திருள் தூங்கிப் புரள்வனவே' சூழ்ந்து தூங்கி யென்பன சினைவினைப் பாற்பட்டு முதல்வினை கொண்டன.

(ஷை 116) 'வானுழை வாளம்பலத்தரன் குன்றென்று வட்கி வெய்யோன்—தானுழையா விருளாய்ப்புறம்........கார்ப் பொழிலே.' புறம் இருளாய் என்பதும் நாகம் மலர்ந்து என்பதும் சினைவினை முதன்மேல் ஏறிநின்றன. புறம் இருளாய் என்பது இடத்திநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏறி நின்றது.

(ஷை 222) 'புலியூர் மன்போற் பிறையணி மாளிகை சூலத்தவாய் மடவாய்—நின்போல் நடையன்னம் துன்னி முன்தோன்றும் நன்னீணகரே.' சூலத்தவாய் என்னும் சினைவினையெச்சம் முன் தோன்றும் என்னும் முதல்வினையோடு, முடிந்தது. அன்னம் துன்னியென்னும் இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏறி நின்றது.

(ஷை 282) 'வேயினமென்றோள் மெலிந்தொளிவாடி விழி பிறிதாய்ப்—பாயினமேகலை பண்டையள் அல்லள்' ஒளிவாடி யென்பதும் விழிபிறிதாய் என்பதும் சினைவினைப் பாற்படும்.

(ஷை 103) 'கொக்குஞ் சுனையும் குளிர்தளிரும் கொழும் போதுகளும்—அக்குன்றில் என்றும் அலர்ந்தறியாத இயல் பினவே.' தளிர் அலர்ந்தறியாத என்னும் சினைவினை முதன்மேல் ஏறியும் போது அலர்ந்தறியாத என்னும் இடத்து நிகழ்பொருளின் வினை இடத்தின்மேல் ஏறியும் நின்றன.

(ஷை 69) 'மைந்நிற வார்குழன் மாலையும் தாதும் வளாய் மதஞ்சேர்—இந்நிறமும் பெறின் யானும்குடைவன் இருஞ் சுனையே' வளாய் வளாவ என எச்சம் திரித்துரைப்பினும் அமையும்.

(ஷை 205) 'நறப்பாடலம் புனைவார் நினைவார்' புனைவார் என்னும் முற்றுச்சொல் செயலென் எச்சமாகத் திரித்துரைக்கப் பட்டது. இதனல் வினைமுற்று வினையெச்சமாய்த்திரியும் என்பது இவர் (பேராசிரியார்) கருத்துபோலும், நச்சினர்க்கினியர் கருத்து எச்சமே முற்றய்த் திரிந்ததென்பது. ஆகவே, கோவையார் உரை நச்சினர்க்கினியரது என்பார்கோள்கை பிழையென்பதற்கு இதுவும் ஓர் சான்றும்.

(ஷை, 45) விலக்கியணைந்தது, விலக்காநின்று அணைந்தது

(ஷை. 118) தொழுதெழுவார். தொழாநின்று துயிலெழு வார். (தொடரும்.)

தில்லையுலா

திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்

(முற்றெடர்ச்சி துணர் 12, மலர் 12, பக்கம் 452)

அஉ. வடியா ளவிட்ட வண்டரண்ட மெல்லாங்
கொடியாய மாயோன் குலாவ—அடிபணிந்து

அந. நல்லதிருத் தோழன் நரவாக னன்முத்தன்
வல்லதிருத் தேரின் மருங்குவரச் சொல்லரிய

அச. ஈசர் பதினொருவ ரேறிவரு தொல்விடையும்
தேசுடைய பன்னிருவர் திண்டேரும்—வாசப்

அரு. பெருங்கோட்டுத் தாருநிழற் பேராள னேறும்
பருங்கோட் டயிரா வதமும்—கருங்கடல்சூழ்

அசு. மண்ணுந் திசையும் வளருந் திருநாபிக்
கண்ணன் கடவுட் கருடனும்—தண்ணறுந்தார்

அஎ. வேலன் களிமயிலும் வேதாவி ேனுதிமமும்
பாலன் திருமுத்தின் பந்தரும்—நீலநறுஞ்

அஅ. செம்முகத்து வெண்கோட்டுச் செல்வவயிற் றைங்கரத்து
மும்மதத்து நாயகனூர் மூடிகமும்—வெம்மருப்புச்

அகூ. செங்கண் விடையும் திருநீற்றுச் சோழன்றன்
பொங்குடைய தாரைநெடும் போர்மாவும்-ஐங்கணைப்போர்

கூ0. மாரன் சிறுதேரும் வாகீசர் பொற்றேரும்
தோன்றன் நண்பன் றிருத்தேரும்—பாரிற்

கூக. பெருவாழ்வை யெல்லாம் பெருந்துறையி னீத்த
திருவா சகப்புலவன் றேரும்—உரிமைதிகழ்

கூஉ. ஏழாயிரத்துத் தொளாயிரவ ரிட்ட திறை
தாழா நிமிர்ந்த தபோதனரும்—ஆழிவாய்

கூ௩. ஒப்பற்ற வல்விடத்தை யூட்ட மனமிசைந்த
முப்பத்து முக்கோடி மூர்க்கரும்—தப்புரைக்கில்

கூ௪. நாதனையும் பின்னென்னும் நாற்பத்தெண் ணாயிரவர்
சோதி திருநீற்றுத் தொண்டரும்—ஆதியுலாச்

கூ௫. சொன்ன நரபதியும் தொன்மாட மாமதுரைத்
தென்னன் வரகுணனுஞ் சேவிப்பத்—தன்னுடைய

கூ௬. தில்லை மறுகே திருவனந்தற் றெய்வவுலா
எல்லையிலான் போதுகின்ற எல்லைக்கண்—தொல்லைச்

கூ௭. சகலகலை மங்கை தடங்கடல் சூழ்மங்கை
மகரசல மானில மங்கை—முகைபவிழும்

கூ௮. செங்கமல மங்கை திசைவளைத்த மால்வரைமேல்
மங்கையர்கள் வானோர் மடமாதர்—பொங்குபுனல்

கூ௯. மாதரொழுமகளிர் மாநாக கன்னியர்கள்
ஆதி யிவனென் றறிந்திறைஞ்சி—வீதியிடை

௧00. விண்ணிலுயர் கோபுரத்தும் வெண்ணிலா முன்றிலினும்
மண்ணில் மடமாதர் வந்தீண்டிக்—கண்ணுதலோன்

௧0௧. ஆகமத்துள் நின்றாடு மாடரவப் பூணினையும்
பாகத்தையும் சிறிது பாராதே—காகளங்கள்

௧0௨. தேமன் குழலி திருவேளைக் காரனெனும்
நாமந்தனைக் கேட்டு நாணாதே—மாமறையோன்

௧0௩. திங்கள் முடிமேற் றிருக்கொன்றை நாண்மாலை
எங்கள் சுரிகுழலுக் கென்றுரைப்பார்—தங்கள்

௧0௪. இருகுவளை வாள்விழியா லெண்டோ ளுடையோன்
திருவழகை யெல்லாம் திளைப்பார்—வரியரவப்

௧0௫. பூணார நின்றாடும் பொன்னம் பலத்தானைக்
காணாத கண்ணென்ன கண்ணென்பார்—சோணாட்டின்

௧0௬. மங்கை தவமும் மலையாள் பெருந்தவமும்
கங்கை தவமும் கருதுவார்—எங்கள்

௪0எ. மனமெங்கே தாயர் வருந்தியிட்ட சங்கின்
இனமெங்கே யாமெங்கே யென்பார்—எனைநோக்கி

௧0அ. சற்றே நகைத்தார் தனிமாலையுந் தோளும்
பெற்றோ மினியென்று பேசுவார்—பொற்றொடியீர்

௧0௯. அந்த வெயில்மூன்று மப்போழுதே வேவித்த
திந்த நகைகாணு மென்றுரைப்பார்—சுந்தரற்குத்

௧௧0. தன்னந் தனித்தூது தாள்சிவக்கப் போனானை
வன்னெஞ்ச ரென்னல் மறமென்பார்—என்னே

௧௧௧. மயலறிந்த தில்லை மதுரை குடியேறி
யியலறிந்த வாசியோ வென்பார்—அயலார்முன்

௧௧௨. நஞ்சமுண்ட செவ்வாய் நளினந் திறந்தொருகால்
அஞ்சலென்று சொல்லீ ரஞ்சொன்னீர்—பஞ்சசரம்

௧௧௩. ஆரே யவனியின்மே லாற்றுவா ரவ்வுரிமை
நேரே யறிவீரும் நீரென்பார்—வேரி

௧௧௪. முருகார் நறுங்கொன்றை மொய்தாம மார்பி
லொருகா லணைவீ ரொழிவீர்—சருகா

௧௧௫. யறவாடும் நெஞ்சுடையே னன்னையெயிற் றின்னம்
பிறவாமற் பாரீர் பிரானே—அறனிலாத்

௧௧௬. தாயிருக்கக் கூற்றுதைத்தீர் சந்த்ரோ தயமென்னுந்
தீயிருக்க நஞ்சமுண்டு தீங்குசெய்தீர்—மாயவிளந்

௧௧எ. தென்றற் பொருப்பிருக்கத் தெய்வட மேருவெனுங்
குன்றைச் சிலையாகக் கோட்டினீர்—என்றென்று

௧௧அ. வண்டு படிகின்ற மாலைக்கு மாலிங்கன்
கொண்ட மடவார் குழாத்தொருத்தி—கண்டங்

பேதை.

௧௧௯. கரியா னுறைகயிலை!கற்பகப்பூஞ் சாரற்
பிரியாத பேதைச் சிறுமான்—கரையிறந்த

௧௨0. பேராளன் வேணியிலும் பேரரவச் செவ்வாயிற்
சேராத பச்சைச் சிறுதிங்கள்—ஊருடையான்

௧௨௧. பொன்னின் திருவீதி பூகநிழற் பூவோடை
தன்னிற் பிறவாத் தருணமுகை—சென்னிப்

௧௨௨. பெருக்கா றுடைய பெருமான்றென் னூரர்த்
திருக்கா வணத்துலவாத் தென்றல்—உருக்கியெமை

கஉங. யல்லற் பிறப்பறுக்கு மாளுடைய நாயகனூர்
தில்லைக் கடற்பிறவாச் சிற்றமுதம்—வல்லபமு

கஉச. பொய்யுங் கொலையும் புதிதுண் டறியாத
மையுண் டகன்ற மலர்விழியாள்—கையால்

கஉரு. விரும்பா வுறவணைத்து வெண்பணிலப் பாவைக்
கரும்பாத கொங்கை யளிப்பாள்—சுரும்ப கலாத்

கஉசு. தண்ணென்ற செங்கழுநீர்த் தாதும் பனிநீரும்
மண்ணுங் கலந்த மலர்க்குழலாள்—நண்ணிக்

கஉஎ. கரையற்ற காதலுடன் கைத்தாயர் சூழ
நிரையிற் கலந்தனளாய் நிற்பாள்—திருவெழுத்தாற்

கஉஅ. சேணுடர் பொன்மேய்ந்த சிற்றம் பலமென்றுங்
காணாத மால்தேடும் காலென்றும்—சோணாட்டிற்

கஉகூ. காவிற் கிளியிற் கண்டிருந்து சொல்வதெல்லாம்
பாவைக் கிருந்து பயிற்றுங்கால்—மூவர்

கஙo. உரைசெய் தமிழி னொருநாலு வேத
முரச முடனே முழங்க—வரகுணனும்

கஙக. செய்யதமிழ் மாறனுக்குந் தெய்வவுலாச் சேரனுக்குந்
துய்ய திருநீற்றுச் சோழனுக்கும்—வையகஞ்சூழ்

கஙஉ. திக்காளும் வேந்தர்க்குந் தில்லைவா ழந்தணர்க்குஞ்
சக்கரா யுதன்றனக்குந் தம்பிரான்—முக்கண்ணன்

கஙங. ஆதித் திருமன் றுடையா னருணமணிச்
சோதித் திருத்தேர்மேற் றோன்றுதலும்—பேதையுந்

கஙச. தம்பிரான் செங்கைத் தமருகத்தின் பேரொலியும் [தான்
வம்புலாங் கொன்றையின்மேல் வண்டொலியும்-அம்பலத்

கஙரு. பொன்னின் சிலம்பொலியுங் கேட்டுப் புறப்படா
மன்னுந் திருவீதி வந்தணுகிப்—பின்னும்

கஙசு. எமையா ளுடையா னிருகமலக் கண்ணின்
அமையாத தண்ணளிக்கு மல்ல—உமையாளைப்

கஙஎ. பார்த்த கருணையறிந் தல்லபவ ளத்தோண்மேற்
சாத்திய தாமந் தனக்கல்ல—கூத்தனூர்

கஙஅ. சென்னிமிசை யம்புலிக்குஞ் செங்கைமான் கன்றுக்குங்
கன்னி யிருகமலக் கண்பிசைய—அன்னையருஞ்

கஙகூ. செங்கைமான் கன்றைத் திருவம் பலமுடையீ
ரெங்கள்மான் கன்றவோ வேந்தினீர்—கொங்கவிழுந்

கசo. தாதுற்ற கொன்றைச் சடாமுடிமே லம்புலியைப்
பேதைக்குத் தாரீர் பெருமானே—பேதையால்

கசக. வாடுகின்ற வெங்கள் மடமா னருமையெல்லாம்
ஆடுகின்ற நீரே யறிவீரே—நாடறிய

கசஉ. மன்றி லுறைவார்க்கு வன்கண்மை தக்கதோ
என்று பலகா லியம்புதலுங்—கொன்றைநறுந்

கசங. தாரான் சிறிதே நகைத்துத் தமிழ்மலயத்
தேரானுந் தாமுந் தெருவகன்றார்—ஓரணங்கு

பேதும்பை.

கசச. மல்ல லிளமயிலின் மன்றுடையான் சோணாட்டில்
அல்லி மலரோடை யன்னமும்—பல்லவங்கள்

கசரு. கோது மழலைக் குயிலும் பசுங்கிளியும்
பேத மறிகின்ற பெற்றியாள்—சோதிதருஞ்

கசசு. செம்பஞ்சு நூபுரமுஞ் சீறடிக்குப் பூந்துகிலும்
அம்பொன்செய் மேகலையு மல்குலுக்குப்—பைம்போதில்

கசஎ. மன்றல் மிருகமதம் மாதரார் பூங்குழலுக்
கென்றுந் தெளிகின்ற வெல்லையாள்—வென்றி

கசஅ. வினைவாளர் தாம்வளைக்கும் வெஞ்சிலைமேற் றோன்று
முனைவாளி யன்ன முலையாள்—நனையவிழுங்

கசகூ. காலை நறுமலராற் கைத்தாய ரொப்பித்த
கோல மழியாத கூந்தலாள்—நீலமெனத்

கருo. தேமன் குவளையெனச் செந்தா மரையென்னக்
காமங் கடைக்கணிக்குங் கண்ணினாள்—மாமதவேள்

கருக. குன்றஞ் சுழிக்குங் குடகாவிரி யென்றும்
மன்றென்றுந் தில்லை வனமென்றும்—இன்றளவுங்

கருஉ. கண்ணன் புவியிடந்துங் காணாத காலென்றும்
வண்ணந் தெளிகின்ற வார்த்தையாள்—தண்ணறும்பூஞ்

கருங. சோலை நடுவிற் சுடர்வயிர மாணிக்க
மாலை யருவி மலராளகக்—கோலத்

கருச. திலகநுதற் கன்னியருஞ் சேடியரும் சூழ
இலகுமணிப் பீடத் திருந்து—பலகலைய

கருரு. வெங்க ணரவின் சுடிகை வெயிலெறிப்பத்
திங்கள் நிலவெறிக்குஞ் செஞ்சடையோன்—பங்கயமும்

கருரு. பாலாழி பாம்பணையும் பாழ்பட் டொழியாமல்
ஆலால முண்ட வருளென்றுங்—காலன்

கருஎ. முடுக்கும் பெருப்பிறப்பில் மூழ்காம லெம்மை
யெடுக்குந் திருத்தா ளிரண்டும்—முடித்தொண்டன்

கருஅ. கொண்டிருந்த பாலகனைக் கூசாமல் கூறுக்கக்
கண்டிருந்த செங்கமலக் கண்மூன்றும்—பண்டங்கன்

கருகூ. சொல்லான வேத மொருநான்குஞ் சூடகக்கை
வில்லான மாமேரு வெற்புடையோன்—இல்லாக

கசூ0. அன்னை யுடையான் அகிலாண்ட மாளுடையான்
என்னை யுடையா னெழுத்தஞ்சும்—பொன்மாடத்

கசூக. தில்லை யிறைவ ருடனே சிறந்தேறுந்
தொல்லை முனிவர் தொழிலாறும்—கொல்வியிசை

கசூஉ. சிற்றுயன் றேடிய சிற்றம்பலம் பணியப்
பெற்றூர் பெருத பிறப்பேழும்—பொற்றெருடியாள்

கசூந. பாடல் பயிலுமணிப் பைம்பொற் கழங்கேந்தி
யாடல் பயிலு மளவின்கட்—கோடாமற்

கசூச. செங்கட் கருடன் மிசையே திருமாலும்
துங்கப் பரிமிசையே சோழனும்—பொங்குசிறை

கசூரு. ஓதிமத்தின் மீதே யுபனிடத்து நான்முகனும்
போதகத்தின் மீதே புரந்தரனும்—மாதிரஞ்சூழ்

கசூகூ. வென்றி மயிலின் மிசையேநம் வேலோனும்
தென்றல் மிசையே சிலைமதனும்—நின்றுலவு

கசூஎ. கேவணத்துச் சந்த்ர கிரணத் தெளிதாளக்
காவணத்து ளெங்கள் கவுணியனுஞ்—சேவிப்ப

கசூஅ. முன்னின் றமரரெல்லாம் போற்ற முதலியார்
பொன்னின் திருத்தேர்மேற் போதுதலும்-நன்னுதல்தன்

கசூகூ. அங்கை மலர்சிவப்ப ஆடுங் கழங்கொழிந்து
செங்கனக வீதியின்கட் சென்றணுகி—வெங்கட்

கஎ0. பருவா யரவம் பரந்திருக்கு மேனி
யொருபாக மெல்லா மொருத்தி—யிருள்கிழிய

கஎக. மின்னே நிகரனைய வேணியிலு மேலொருத்தி
யன்னே யிவரொருவ ராரென்றூர்—என்னே

கஎஉ. பிரிந்தன மென்கொடிக்குப் பேதைப் பருவம்
தெரிந்தன மென்குதலைச் செஞ்சொல்—விரும்பாத

கஎ௩. பண்டைநெஞ்ச மல்லம் பாயின்மே லிக்கொடியைக்
கொண்டுவந்த நம்மேற் குறையென்றாள்-ஒண்டொடியாள்

மங்கை.

கஎ௪. மற்றொருத்தி மங்கை மதுரவரி வெஞ்சிலைவேள்
பொற்றடக்கை யம்பு புதிதுண்பாள்—பெற்றெடுத்த

கஎ௫. தாயர் கரமுந் தனபாரமும் பிரிந்து
பாயில் துயிலும் பருவத்தாள்—தூய

கஎ௬. கடமருப்பு வாரணத்தின் கன்னிக் குலைபோல்
விடமருப்பிற் கொள்ளும் விழியாள்—கடல்வண்ணன்

கஎஎ. உந்தி மடுப்போ லுலகமெல்லாம் கைகுவிய
வந்து குவியும் வனமுலையாள்—பைந்தொடியைக்

கஎஅ. கண்டோர் மனமோ கருங்கங்கு லின்னிறமோ
வண்டோ குடியேறும் வார்குழலாள்—எண்டிசையும்

கஎ௯. வீசு மதிநிலத்தும் வெண்ணிலாத் தென்றலுக்கும்
ஆசை யுளதெனினு மாரறிவார்—ஈசன்

க௮0. கயிலை மலைபாடிக் காவேரி பாடிப்
பயிலுமொரு சோணாடு பாடி—யுயர்தவத்தால்

க௮க. முக்கட் சிவனுடனே மூவா யிரமறையோ
ரொக்கக் குடியிருக்கு மூர்பாடிக்—கைக்கனலே

க௮௨. கொங்கவிழுங் கொன்றையந்தார் பாடிக் குரகதமும்
வெங்களிறு மான விடைபாடிச்—சங்கரற்கு

க௮௩. மேலாய வா....மாம் வெற்றிக் கொடியுடையான்
பாலாழி சேற்பன் பதம்பாடி—மேலோர்

க௮௪. எழுதரிய வேதத் தினமுரசு பாடி
பழுதில் திருவாணை பாடிச்—செழுமுகில்தோய்

க௮௫. அந்தண் பொழிலிடையே யம்மனையு மூசலும்
பந்தும் பயிலும் பருவத்து—வந்தாள்

க௮௬. உவரோத வேலைவிட முண்டிருண்ட கண்டன்
சிவலோகன் தேவாதி தேவன்—குவிமுலையாள்

க௮எ. தானும் விமலன் கடந்தேரின் முன்சென்ற
தேனு மமுதினிய செஞ்சொல்லாள்—மானனையீர்

க௮அ. அந்திப் பிறைமவுலி யாளுடையான் பாகத்தி
லிந்தப் பசுந்தோகை யாரென்றாள்—பைந்தொடியே

கஅகூ. ஆன்ற புவனங்க ளெல்லா மடைவடைவே
யீன்று முதிரா விளங்கொடிகாண்—மூன்றுமத

ககூ0. வெள்ளமிகுங் குன்றினையும் வேலானை யும்புகலிப்
பிள்ளையையும் பெற்றதொரு பேதைகாண்-தெள்ளுமுனி

ககூக. யாகந் தனைவிட் டிமவானில் வந்தவிளந்
தோகை சிவகாம சுந்தரிகாண்—மாதலத்தோர்

ககூஉ. அஞ்சி யழிவதுகண் டாகத்தா னன்றுண்ட
நஞ்சை யமுதாக்கு நாயகிகாண்—கிஞ்சுகவாய்

ககூங. மின்னே யெனவுரைப்ப வேனெடுங்கண் மெல்லியருக்
கன்னே யொருவ ரெளியவரார்—அன்னையீர்

ககூச. சென்று தொழுதிவரை யானுந் திருத்தோளில்
மன்றலணி நாண்மாலை வாங்குவேன்—என்றென்று

ககூரு. பித்தாகி யென்னையவர் பின்னே விடுமென்று
கைத்தாயர் தங்களையுங் கைகடப்பாள்—

ககூகூ. பைங்காட்டி லஞ்சப் பரிபுரநின் றேலமிடச்
செங்காட்டில் முன்போன சேவடியும்—முன்காட்டில்

ககூஎ. மாதவஞ் செய்திருந்து வாழ்வா ரகத்திற்போய்
பாதகஞ் செய்த பவளமும்—காதலித்துப்

ககூஅ. பெற்றோர் பிடித்தரியும் பிள்ளைக்காற் பூசதங்கைச்
சிற்றோசை கேளாத் திருச்செவியும்—பெற்றோர்

ககூகூ. சிறுசந்து மென்குறங்கு செய்தார்க ளென்றுங்
கறிகண்டு கூசாத கண்ணும்—பிறவிதனில்

உ00. பற்றிலோர்க் கெல்லாம் படைக்குந் தலையிறைச்சிப்
பெற்றிலோ மென்னும் பெரும்பசியும்—சற்றிரங்கா

உ0க. வன்னெஞ்சமும் முடையான் வல்வினையேன் பெற்றெடுத்த
அன்னம் படுவ தறிவரோ—முன்னம்

உ0உ. அரிந்த மகவை யழைப்பித்தார் மீண்டும்
புரிந்து நகைசெய்து போனார்—அருந்தவத்தால்

உ0ங. எங்க ளிறைவ னருளுக் கிலக்காக
மங்கை யவள்நிற்க மற்றொருத்தி—துங்க

மடந்தை.

உ0ச. நிகரப் பருவயிர நீலரத்தி னச்சோதி
மகரக் குழையாண் மடந்தை—திகிரியங்கை

௨௦௫. துங்க மழவிடையான் சுற்றுஞ் சடாமுடிமேற் ....
றிங்க ளனைய திருநுதலாள்—சங்கரன்றன்

௨௦௬. பொன்னம் பலமும் புலியூரும் போற்றலர்தம்
வன்னெஞ்சினு மிருண்ட வார்குழலாள்—முன்னும்

௨௦௭. அரிபிரம ரஞ்சியநா ளாளுடையா னுண்ட
கரிய விடமனைய கண்ணாள்—புரிசடையோன்

௨௦௮. வாரி விடமுண்ண வானோ ரினிதுண்ணு
மாரமுத மன்ன வதரத்தாள்—ஊருடையான்

௨௦௯. சீற்றமு மென்கமலச் சேவடியா லேவுண்ட
கூற்றமு மன்ன குவிமுலையாள்—போற்றி

௨௧௦. விழிகுவித்து நின்றுதொழும் மெய்யடியார் தங்கள்
இருபிறவி யினுந்தே யிடையாள்—பழையமறை

௨௧௧. தேட வரிய திருமேனியி லணிந்த
ஆடரவின் பைப்போலு மல்குலாள்—நாடரிய

௨௧௨. தண்டா ரிதழியணித் தம்பிரா னம்பலம்போற்
கண்டார் மனமுருகுங் காட்சியாள்—திண்டே

௨௧௩. ரிரவியுட..
விரவி யருண வெயில்வீச—வரையுலவு

௨௧௪. மாட விளமயிலி னாயகமென் னாயமுடன்
நீடு மறுகதனி னின்றிலங்கத்—தோடவிழு

௨௧௫. செங்குவளைப் பூந்தடமுஞ் செந்நெற் பெருவனமும்
பைங்கமலக் காடும்..............................சங்கம்

௨௧௬. பொருநீர்க் கருங்கடலும் பூகவன முஞ்சாடும்
விரிநீர்க் குடகா விரியும்—திருநீற்றின்

௨௧௭. வென்றி விரும்பி மீனவர்கோ னன்னாட்டித்
சென்ற புலவன் றிருப்பதியும்—மன்றலம்பூஞ்

௨௧௮. சோலையு மென்கதலிச் சூழலும் வானோர்க
ளாலயமு....................................நீலநெடுங்

௨௧௯. கொண்டல் பயிலுங் கொடிக்கோ புரநிரையுங்
கண்டு.......................................ஒண்டொடியே

௨௨௦. ஆதி முளரி யயன்படைத்த நாடென்றே
சோதித் திருநடஞ்செய்..............................

௨௨௧. திருமேனி யோரி ரண்டுமொன் றாகி
யுருகிய நாள்வேரித் திளைக்கும்—கரு

உஉஉ. ....வெம்போர்
விளைக்கின்ற பைங்கருப்பு வில்லும்—வளைப்புண்ட

உஉ௩. வின்னிசை மென்சுரும்பும் யான்றபுது தாதுண்ணுங்
கன்னி யிளங்குயிலின் காகளமு—முன்னணிபோல்

உஉச. மாயனார் மைந்தனுக்கு மானிலத்தி லுண்டான
நாயனார் தாப்படைத்த நாடென்றே—சேயிழையீர்

உஉ௫. தில்லை யிறைவர் திருவுளமீ தானக்கால்
வல்லியரை யென்செய்யான் மாரவேள்—மெல்லியலீர்

உஉ௬. என்று மனநடுங்கு மெல்லைக்கண் வானோர்கள்
நின்று தொழுது நெருங்குகின்ற—மன்றுடையான்

உஉஎ. காவேரி நாடன் கயிலைத் தடஞ்சிலம்பன்
தேவாதி தேவன் சிவலோகன்—மூவ

உஉஅ. ரொருத்த னிமல னுமையா ளறியு
நிருத்த னிலவெறிக்கு நீற்றன்—திருத்தேரில்

உஉ௯. வீதி குறுகு தலுமெய் கலந்து
காதலுடன் சேரனொடு காணாத—சோதி

உ௩0. விரவுந் திருச்சிலம்பும் வேதமு நின்றார்ப்பப்
பாதஞ்செய் செங்கமலம் பாரீர்—வரிவண்டு

உ௩க. பைந்தெரியல் விட்டிரிய பாகீரதித் தரங்கம்
வந்தேகு கொன்றை வனம்பாரீர்—இந்து

உ௩உ. பிடியொன்று மின்னிடையீர் பேராமற் கண்கண்டு
படிகின்ற வுந்திமடுப் பாரீர்—கொடியருகே

உ௩௩. வந்தவரைக் காண வடிவமெலாங் கண்படைத்த
இந்திரனைப் பாரீரெனவுரைத்தாள்—பைந்தொடிதன்

உ௩ச. பாதாதி கேசத் தளவும் பகழிநறும்
போதாக மாரவேள் போய்மலைந்தான்—ஆதிரையான்

உ௩௫. தன்னை யலர்சொரிந்த சாபத் தனிவீரன்
மின்னை யறிந்து விடுவானோ—பின்னொருத்தி

(தொடரும்.)

வடநாடு சென்ற தமிழரசர் காலம்

வித்வான். திரு. மா. இராசமாணிக்கம் B.O.L.

கி. மு. 298-கி. மு. 272 வரை யாண்ட மோரிய வமிசத்து இரண்டாம் அரசனும் சந்திரகுப்தன் மகனும் அசோகன் தந்தையுமான 'பிந்து சாரன்' காலத்தில் மோரிய ராச்சியம் எருமையூர் (மகிஷ மண்டலம்) வரை பரவியிருந்தது. கிழக்கே பெண்ணையாறு வரையும் மேற்கே 'கலியாணபுரி' யென்னும் யாறுவரையும் மோரியர் அரசு பரவி யிருந்தது. அதுவரை வென்று அடிப்படுத்திய பிந்து சாரன் தமிழகத்தைக் கொள்ள நினைந்து படையெடுப்பை நடத்தினான். அப்படையெடுப்பைப் பற்றிய குறிப்புகள் அகநானூற்றில் மாமூலனார் பாடல்களாலும் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றாலும் நன்குணரலாம். ஆயின், மோரியர்க்குத் தமிழகம் உட்படவில்லை என்பது, அசோகன் காலத்தில் அது சுயாதீன நாடாகவே இருந்தமைபற்றித் தெளிவாம்.

எனினும் இப்படையெடுப்புத் தமிழ்வேந்தர்க்குப்பெருத்த அவமானத்தை விளைத்ததாகலின், பிற்காலத்தில் வந்த கரிகாற் சோழன், நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் என்போர் வடநாடு சென்று ஆரிய மன்னரை வென்று மீண்டதாகத் தெரிகிறது. இவ்வரசர் காலங்களை ஆராய்வது தமிழ்ச் சரித்திரத்துக்கு இன்றியமையாததாகுமன்றோ? இவர் தம் காலங்களைப் பலர் பலவாறு தம் மனம் போனபடி வெளியிட்டுள்ளனர்; கால நிலைகளை ஊன்றிப்பாராமலும் உண்மைச் சரித்திரச் சான்றுகளை முற்ற ஆராயாமலும் மொழிப் பயிற்சி மாறுதலை ஆராயாமலும் ஆராய்ச்சி நிகழ்த்தி 'முடிவு' கண்டோர் பலராவர். இனி உண்மையாகக் கொள்ளத் தக்க காலங்கள் தாம் எவை எனக் காண்போம்:

செங்குட்டுவன் காலம்.

கரிகாலன் காலத்தை ஆராயப்புகுந்த T. G. ஆராவமுதன் அவர்கள் தமது நூலில், "கி. மு. 327-கி. மு. 232-க்குஉட்பட்ட

காலம் சந்திரகுப்தன், பிந்துசாரன், அசோகன் இம்மூவர் காலமாதலால், அக்காலத்தில் தமிழ்வேந்தர் வடநாடுசென்றிருத்தல் இயலாது; கி. மு. 184—கி. மு. 148 வரைக்கும் பட்ட காலம் புஷ்யமித்ர சுங்காவின் காலம்; கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் ஆந்திரர் ஆதிக்கம் வலுப்பெற்றிருந்த காலம்; கி.பி. 3-ம்நூற்றாண்டில் இப்படையெடுப்பு நடந்திருக்குமெனத்திட்டமாகக் கூற இயலாது; கி. பி. 4, 5-ம் நூற்றாண்டுகள் குப்தர்கள் ஆண்ட காலம்; கி.பி. 6-ம் நூற்றாண்டு ஹர்ஷன் காலம்; கி. பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆந்திரர் வன்மையுடையராயிருந்தமையினாலும் அதன் பிற்பகுதியில் பிற்கால குப்தர் வலியராயிருந்தமையாலும் தமிழ்வேந்தர் படையெடுப்புநடந்திராது," எனக் கூறி, "தமிழ் வேந்தர் படையெடுத்த காலம் (1) அசோகனுக்குப் பிற்பட்ட மோரியர் (கி. மு. 232-கி. மு. 184) காலமாகவோ, (2) புஷ்யமித்ர சுங்காவுக்குப் பிற்பட்டகாலமாகவோ (கி. மு. 148-கி. மு. 27), (3) ஆந்திரர் ஆட்சி குன்றிய கி. பி. 3-ம் நூற்றாண்டின் தொடக்கமாகவோ இருத்தல் வேண்டும்" என முடிபு கூறினர்.[1]

இவர் கூறிய மூன்றுகாலங்களில் முதல் இரண்டு காலங்கள் முற்றும் சரியே. மூன்றும் காலம் கி. பி. 163-லிருந்தே கி. பி. 300 வரை அஃதாவது குப்தராச்சியம் ஏற்படும்வரை எனக் கொள்ளலே முறை. என்னை? கி. பி. 163-ல் இறந்த (கவுதமிபுத்ர சதகர்ணியின் மகனான) புலுமாயிக்குப் பின் வந்த ஆந்திர அரசர் வலியற்றவர் எனப்படுதலின்[2] என்க. எனவே தமிழரசர் வடஇந்தியாமீது படையெடுக்க வசதியாக இருந்த காலங்கள்(1) கி. மு. 232-கி. மு. 184, (2) கி. மு. 148-கி. மு. 27, (3) கி. பி. 163-கி. பி. 300 ஆகிய மூன்றும். இனி, இவற்றுள் செங்குட்டுவன் காலத்தை ஆராய்வோம்:

செங்குட்டுவன் பத்தினிக்கு விழா வெடுத்தபோது வந்திருந்த அரசருள் 'கடல்சூழ் இலங்கைக் கயவாகு' ஒருவன்,

1. Vide his 'The Sangam Age,' p. 56, 57.

2. C. S. Srinivasachary's 'A History of India', p.49 (2nd ed.)

எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இலங்கையில் இருந்த பத்தினிச் சிலை ஒன்று இப்போது பிரிட்டிஷ் காட்சிச் சாலையில் இருப்பதைக் கொண்டும் சிலப்பதிகாரக் கூற்றைக்கொண்டும் கயவாகு இலங்கையில் பத்தினிக்கொரு கோயில் எடுத்தான் என்பது விளக்கம். இக்கயவாகுவின் காலம் கி. பி. 171-கி. பி. 193 என இலங்கைச் சாஸனம் கூறுகிறது.[3] இரண்டாம் கயவாகுவின் காலம் கி. பி. 12-ம் நூற்றூண்டென்பது ஈண்டுஅறிதல் நலம். இதுவே செங்குட்டுவன் வாழ்ந்த காலமாகும். இக்காலம் மேற்கூறிய மூன்று காலங்களில் இறுதிக் காலத்தோடு ஒன்றுபடுகிறது. இக்காலத்தே, கி. பி. 166-கி. பி. 196 வரை தமிழகத்துக்கு வடக்கே கங்கையாறு வரை பிரபல முற்றிருந்த ஆந்திர 'சதகர்ணி' அரசன் 'யக்ஞஸ்ரீ' என்பவன்.[4] இச் 'சதகர்ணி' என்பதன் மொழி பெயர்ப்பு 'நூற்றுவர் கன்னர்' எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது; நூற்றுவர் கன்னர் செங்குட்டுவன் நண்பர்; அவன் கங்கையாற்றைக் கடக்க உதவியவர்.[5] கயவாகுவின் காலமும் யக்ஞஸ்ரீயின் காலமும் ஒன்றுபடுதலால் இவ்விருவரும் செங்குட்டுவன் காலத்தவர் என்பதும், நூற்றுவர் கன்னர் (சதகர்ணி) என்ற சிலப்பதிகாரத் தொடர் 'யக்ஞஸ்ரீ சதகர்ணி'யையே குறிப்பதென்பதும் நன்கு புலனும். இக்கருத்தையே K. G. சேஷஐயரும் கூறுதல் கவனிக்கத்தக்கது.[6] மேலும் சிலப்பதிகாரத்தோடு இயைபு கொண்டதும் ஒரே காலத்ததுமாகிய மணிமேகலையை மதம் பற்றியும் சரித்திரம் பற்றியும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்துள்ள பேரறிஞராகிய டாக்டர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரும் மணிமேகலையின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றூண்டின் பிற்பகுதிதான் என முடிபு கூறியிருத்தலும் சிலப்பதிகார காலத்தை உறுதிப்படுத்துதல் காண்க.[7]

---

3. Archialogical Survey of Ceylon, xiii, 1896, pp. 47-48.
4. V. A. Smith's 'Early Histry of India', p. 223 (4th ed.)
5. Silappadikaram K. 26, lines 148—154.
6. Christian College Magazine, Sep-Oct. 1917.
7. Vide his 'Manimekalai-in its Historical Setting'.

கயவாகுவின் காலம் கி. பி. 171—கி. பி. 193
யக்ஞஸ்ரீயின் ,, கி. பி. 166— ,, 196

எனவே, கி. பி. 166—கி. பி. 193-க்குட்பட்ட காலத்தேதான் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்டிருக்கவேண்டும். செங்குட்டுவனோடு உத்தரகோசலத்தில் போரிட்ட பாலகுமரன் மக்களான கனக விசயரும் வேறு பலரும் குஷான் இராச்சியத்துக்கும் வடகிழக்கே இருந்த சிற்றரசர்களாவர். செங்குட்டுவன் படையெடுத்ததாக நம்பக்கூடிய கி. பி. 166—கி. பி. 193-க்குட்பட்ட காலம், கனிஷ்கனுக்கும் பின் வந்த 'ஹூவிஷ்காகுஷான், வாசுதேவ குஷான்' இவர்கள் காலமாகும்.[8] இவர்கள் காலத்தில் செங்குட்டுவன் பிரயாகைக்கு மேற்பட்ட இடத்தில் கங்கையைக் கடந்திருத்தல் இயலாது; ஏனெனின் பிரயாகை வரைக்கும் குஷான் இராச்சியம் பரவியிருந்ததால் என்க. பிரயாகைக்கு நேர் வடக்கே ஏறக்குறைய 'உத்தர கோசலம்' இருக்கிறது. மேலும் பிரயாகைக்குக் கிழக்குப் பிரதேசத்தில் ஆந்திரர் ஆட்சி இருந்ததா? எவர் ஆட்சி இருந்தது? என்பன துணிந்து கூறக் கூடவில்லை. எனவே, செங்குட்டுவன் பத்தினிக் கல்லைக் கொணரச்சென்ற காலமும் அப்போதைய வடநாட்டு நிலையும் மேற்கூறினவற்றிலிருந்து நன்குணரலாம். சுருங்கக் கூறின், செங்குட்டுவன் வடநாடு சென்ற காலம் கி. பி. 166—193க்கு உட்பட்ட காலமாகவே இருத்தல்வேண்டும் என்பதை யறிக.

(தொடரும்.)

தமிழ்ச்செய்திகள்.

நமது பொழில் :— தமிழன்பர்களின் பேராதரவினாலும் தமிழ்த்தாயின் தண்ணளியாலும் 12-வது மலர் விரிந்து இதுபோது 13-வது மலர் முகிழ்க்கின்றது. திங்கள் வரியாகிய அன்பு நீரூட்டி ஆதரிக்கும் சந்தாநேயர், கட்டுரை வழங்கி பொழிலைக் கவின்பெற இயற்றும் தமிழ்ப் புலமை மிக்கோர், ஆகிய இருதிறத்தினரின் தமிழ்த்தொண்டு ஞாலத்தின் மாணப் பெரிது.

8. V. A. Smith's 'Early History of India', p. 294 (4thed).

நூலாராய்ச்சியும், கலைபயில் தெளிவும் கட்டுரைவன்மையும் உள்ள அறிஞர்கள் பயிலுதற்குரிய இத் தமிழ்ப்பொழிலைத் தமிழ்ப்புலவர்களும், தாய்மொழி வளர்ச்சியில் கருத்துடைய தமிழன்பர்களும், தமிழ்ச் சங்கங்களும், உயர்தரப் பள்ளிகளின் அங்கமாய்த் திகழும் மாணவர் கழகங்களும் ஆதரிக்க முற்பட்டால் இது செழிப்புற்று வளர்ந்து பன்னலங்களையும் நல்கும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரியின் ஆண்டுவிழா :—தாது பங்குனி 30-ம் நாள் மாலையில் மிகமிகச் சிறப்பாக விழா நடைபெற்றது. இவ்விழாவின் அங்கமாக நிகழ்ந்துவரும் **பஞ்சாபகேசன் கழக** ஆண்டு விழாவினையும், கண்காட்சிக் கூடத்தின் திறப்பினையும், மாணவர் பந்தய விளையாட்டுப் பரிசளிப்பினையும் கல்லூரிக் கண்காணிப்பாளர் (Deputy Inspector of Schools) திருவாளர். R. இராமசாமி ஐயர் அவர்கள் (B.A., L.T.,) தலைமையிருந்து செவ்வனம் நடத்தினர். கல்லூரியின் ஆண்டுவிழாவானது, தஞ்சை வளநாட்டின் தொடக்கக் கல்விக் கழகத்தின் தலைவர் (President Tanjore District Educational Council) திருவாளர். S. இராமலிங்கசாமிநாட்டார் அவர்களின் (B.A.B.L.) தலைமையில் புகழோங்கநிகழ்ந்தது. அதுபோது மாணவர்களும், பெற்றோர்களும், அன்பர்களும் ஆயிரக்கணக்கினராய்க் குழுமியிருந்து அவையை அலங்கரித்தனர். விழாவின் இறுதியில் கல்லூரியின் தலைமைஆசிரியர் திருவாளர். சிவ. குப்புசாமிபிள்ளை அவர்கள் இயற்றியநாடகம் "வள்ளல்மலையமான் திருமுடிக்காரி" கல்லூரிமாணவர்களால் தமிழ்ச்சுவை மலிபவும், தமிழ்நாகரிகத்தின் தனிச்சிறப்பு விளங்கவும், வீரமாதிய நாடகச்சுவைகள் ததும்பவும், அவையோர் மகிழ்ந்து வியப்பவும் அரங்கேற்றப் பெற்றது. மாணவர்களின் கல்வித்திறனையும், சொல்வளனையும், மொழி மதுகையையும், இசைச் செல்வத்தினையும், கல்லூரியின் சிறப்பினையும் தலைவர்களும், அனைவயினரும் புகழ்ந்து போற்றினர். இன்னிசை மலியவும், தமிழ்த்தாயின் வாழ்த்தொலி தழங்கவும், விழா இனிது நிறைவேறியது.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா :—1936-ல் நடைபெற்றிருக்கவேண்டிய இவ்விழா இன்னும் நடைபெறாதது குறித்து தமிழன்பர்கள், விழா என்று நடைபெறும்? என்று நடைபெறும்? என உசாவி வருகின்றனர். இத்துணை மெய்யன்பர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நல்வாழ்வில் கருத்தூன்றியிருத்தலால் விழா சிறப்புற நடக்குமென்பது தேற்றம்.

தமிழகத்தின் நடுநாடாகத் திகழும் தஞ்சை நகரில் தமிழ்மொழி, அறிவுக்கலை, கவின்கலை, தொழிற்கலை ஆதியவற்றைப் பயின்று புலமையுறுதற்கான உயர்தரக் கல்லூரி நிறுவுதல் தமது முதன்மை நோக்கமென சங்கத்தார் 'வெள்ளி விழா விண்ணப்பத்தில்' தெரிவித்தனர். இவ்வெண்ணம் நிறைவேறுதற்கு வேண்டிய பொருளின்மையால், இவ்வாண்டில் வெள்ளி விழாவை நிகழ்த்தவும், அதுபோது 'கரந்தைக் கட்டுரை'யெனும் நூலொன்றை விழாவின் நினைவு மலராக வெளியிடவும் முயன்று வருகின்றனர். இதன் பொருட்டாக அன்பர்கள் பலர் நன்கொடைகள் தாமே அனுப்பி வருகின்றனர்.

விழா நிகழ்த்துதற்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள் போதிய அளவு சேரவில்லையாதலால் இந்தக் கோடை விடுமுறையில் விழா நடப்பதற்கில்லை. சங்கத்தின் பொறுப்பாளிகளான தலைவர் நோய் காரணத்தாலும், பிறர் தத்தமக்குரிய தடைகளாலும், அவ்வரிய கருமத்தை முற்றுவித்தற்கான முயற்சியை மேற்கொள்ள முடியாதிருப்பது வருந்தற்பாலதாம்.

இந்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் புலவர்களும், தமிழன்பர்களும், குற்றாலம் உயர்தரக்கல்லூரி ஆசிரியர்களும் அங்குள்ள சில மாணவர்களும், செய்யாறு உயர்தரக் கல்லூரியில் II. III. IV. பாரங்களில் கல்வி பயிலும் மாணவர்களும் தாந்தாமே தொகுத்து அனுப்பிய நன்கொடைகளின் அருமை மிகமிகச் சிறந்தது. இச்சீரிய தொண்டு சிறக்கவும், தமிழ் நலமும், நற்பயனும் விளையவும் தமிழ்ப் பெருமக்கள் ஒவ்வொருவரும் தத்தமாலியன்றவாறெல்லாம் உதவி செய்ய முற்பட்டால் வெள்ளிவிழாவும் தமிழ்த்தொண்டும் காலங்

தாழ்க்காது தொடங்கி நடத்தப்பெறும். அதுபோது கரந்தைப் பேரவையில் விழாவெடுக்க வரும் அன்பர் அனைவரும் சங்கத்தார் கொண்டுள்ள சீரிய நோக்கங்கள் நிறைவேறுதற்கான வழிதுறைகளை அமைத்து, ஆக்க வேலைகட்கு அடிகோலுவார்கள் என்பது கருத்து.

தஞ்சைநகரில் நடந்த கலைவாணர் கூட்டம்:—(The Tanjore Provincial Educational Conference) சென்னைமாகாணத்தின் பல பகுதிகளிலிருக்கும் அங்கில ஆசிரியர் பலர் திட்டம் செய்தவாறு, 1937 ஏப்ரல் 6, 7, 8-ம் நாட்களில் தஞ்சையில் கூட்டம் நிகழ்ந்தது. இதன் பொருட்டு வெளியிடப்பட்ட நிகழ்ச்சி நிரலில், தொடக்கக் கல்வி, (Elementary Education) பள்ளியிறுதிக் கல்வி (School Final Education) உடற்பயிற்சிக்கல்வி (Physical Education) நிலநூற் கல்வி (Geographical Education) ஆதிய பகுதிகளைப்பற்றி விரிவான ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தது. இவற்றிற்கான ஆரவாரத்தில் இப்பேரறிஞர் பண்டிதர்களை மறந்தாரில்லை. இவர்களை நினைவுகூர்ந்து, பண்டிதர் கூட்ட (Pundits Conference)மெனமட்டும் கண்டு, நிகழ்ச்சியின் விவரங்களைக் குறிக்காது அரைமணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. பண்டிதர் கூட்டத்தில் தலைமையிருத்தற்குப் புலமை நிரம்பிய ஒருவரைக் காணாராய், இம்மாகாணத்தின் காங்கிரசுத் தலைவரையே தலைமையில் வைத்தனர். அரசியற் குழப்பத்தில் தட்டழிந்து நிற்கும் அறிஞர்கள் யாது செய்ய வல்லார்? நாட்டு மொழிகள் மதுகையும் வளனும் உறுதற்கு ஆவன இயற்றும் வழி அறியாது, இந்தி மொழியே தேசமொழியென்றும், கட்டாயப்பாடங்களில் ஒன்றாக அதனையும் மாணவர் பயிலச்செய்தல் வேண்டுமென்றும்கூறிய அரசியற்தலைவரின் கூற்றையேஆராய்ச்சியின்றி தமது முடிபாக ஏற்றுக் கலைந்தனர். இக்கூட்டத்தினரின் ஏழை மதிக்கு மிகமிக இரங்குகின்றேம்!! இந்திமொழி பயின்றறியாத மாந்தர்கள் வடநாட்டிலும் தென்னாட்டிலும் கோடிக்கணக்கினராயிருக்கஅதனைத் தேசத்தின் பொதுமொழி என்பது பொய்க் கூற்றல்லவா? தமிழ் நாட்டு மாந்தர் இந்திமொழியைப்

பயிலவேண்டிய அவசியந்தான் என்னை? இந்திமொழியானது தமிழ் மொழியைப் போன்றதொரு உயர்தனிச்செம்மொழியா? "கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை," "யாமறிந்த மொழி களிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்," எனும் புகழுரைகளிற்காணும் சிறப்புகள் எவையேனும் இந்தி மொழியில் காணுமாறுளதா? இந்திய நாட்டினர் நூற்றுக்குத் தொண்ணூறினும் மேற்பட்டவர் கல்லா மாந்தராய் இருப்பவும், பன்னூறு ஆண்டுகளாய்ச் செய்துவரும் முயற்சிகளாலும் இத் தகைய பெருந்தொகுதியினர் எழுத்தறியாதிருப்பவும், இவ்விழி தகவு தீர்வதற்குத் தாய்மொழியே ஏற்ற கருவியெனக்கொண்டு ஆவன செய்வது முதற்கருமம் என்பதோராது இந்திமொழியை வளர்க்க முற்படுவது "கருந்தனம் கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டு அரிப்பரித் தாங்கெய்த்துப் பொருள் செய்திடல்" என்னும் முதுமொழியை நினைப்பூட்டுகின்றது. நம்மிடம் என்றேனுவரவிருக்கும் வடநாட்டவரை வரவேற்று உபசரிக்கவும், நாம் என்றோ வடநாடு சென்றால் ஆங்குள்ள மக்களுடன் உரை யாடவும் கருவியாயுள்ள காரணத்தால் எம்மொழியைப் பயிலு வதே கருமமென வன்கண்மை பேசும் தலைவர்களின் பேதை மையும், அதற்குச் செவி சாய்க்கும் நம்மவரின் அடிமை மனப் பான்மை (Slave Mentality) யும் எள்ளி நகையாடற் பாலன. தமிழ் நாட்டின் நலன்களைப்பேணும் கருத்துடைய அறிஞர்கள், அரசியல்வாதிகளின் பிதற்றுரைகளால் மயங்காது விழிப்புட னிருந்து "சேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல்வேண்டும்."

மதிப்புரை.

ஈழகேசரி ஆண்டுமலர்:— 'ஈழகேசரி' எனும் வாரத்தாள் செந்தமிழ்த்தாள்களில் சிறந்ததொன்று. இதன் பதிப்பாசிரியர் திரு. பொன்னையா அவர்கள் தமிழ்மக்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத மொழி வளர்ச்சி, தமிழ் நாகரிகம், அரசியற் சீரமைப்பு, பொருளாதாரம் ஆதிய பலதுறைகளிலும் முயன்று ஈழகேசரியைச் செவ்விதின் வளர்த்து வருகின்றனர்.

இதுபோது வெளிவந்திருக்கும் ஈழகேசரி ஆண்டுமலர் கவின்பெற்ற ஓவியங்களுடனும், தமிழ்ச்சுவைமிகும் கட்டுரைகளுடனும் சிறந்து மிளிர்கின்றது. இதனை காரைநகர் தமிழ்ச் சங்கத்திற்கு உதவிய ஆசிரியர் அவர்களின் வள்ளண்மையைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

தொல்காப்பியம்: எழுத்ததிகாரம்:—ஈழகேசரியின் ஆசிரியர் திரு. நா. பொன்னையா அவர்களின் நன் முயற்சியால் இராவ் பகதூர். சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களின் ஞாபகார்த்த வெளியீடாக, தொல்காப்பியம் எழுத்ததிகார மூலமும், நச்சினார்க்கினியர் உரையும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்நூலைப் பயில்வோர் ஐயந்திரிபறக் கற்பதற்கெளிதாய், தமிழ் வித்துவான். திரு. சி. கணேசையர் அவர்கள் எழுதிய உரை விளக்கக் குறிப்புகளை ஆங்காங்கு சேர்த்திருப்பது பாராட்டுதற்பாலது. நல்லதாளில், உருவமைந்த எழுத்தில், பதித்து கவின் பெற இயற்றியதும், இராவ்பகதூர். சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களின் உருவப்படத்தையும் அவர் வரலாற்றையும் வெளியிட்டதும் பதிப்பாசிரியர் அவர்களின் மொழிப்பற்றை நன்கு தெரிக்கின்றன.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய மாசி, பங்குனி நன்கொடை

		ரூ.	அ.	ப.
திங்கள் நன்கொடை				
திரு. K. நடராசன் B.A.,B.L., (Advocate.)	அவர்கள்	5	0	0
,, L. K. பிரணதார்த்திஅரன்பிள்ளை	,,	1	4	0
ஆண்டு நன்கொடை				
,, வ. மருதப்பா பிள்ளை மளிகை	,,	50	0	0
,, K. S. கலியாணசுந்தரம் பிள்ளை	,,	25	0	0
,, A. பொன்னுசாமி நாடார் (ரூ. 1000-க்கு 3-வது தவணை.)	,,	100	0	0
,, N. N. CT. சிதம்பரஞ்செட்டியார்	,,	5	0	0
,, Bajji ரங்கையா செட்டியார்	,,	5	0	0
,, சங்கீதம் நாகாசாமி செட்டியார்	,,	2	0	0
,, N. L. சின்னகிருட்டின நாயுடு	,,	50	0	0
,, A. S. ராமனுதன் செட்டியார்	,,	25	0	0
,, கனகசபை நாயக்கர் Post Master.	,,	2	0	0
,, A. கைலைகுரு Co-operative Inspector.	,,	1	0	0

மருத்துவசாலைக்கு உதவிய அன்பர்கள்.

நிக்கல்சன் டவுன் பாங்கி	25	0	0
திரு. சு. இராமசாமி ராசு	1	0	0

தாது பங்குனி, ஈசுவர சித்திரையில்

வெள்ளிவிழாவிற்கு உதவிய அன்பர்கள்.

அண்ணாமலைநகர் திரு. S. சோமசுந்தரபாரதியார் M.A.B.L. அவர்கள் வழி:

திரு. பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார்	அவர்கள்	10	0	0
,, வித்துவான். R. இராகவையங்கார்	,,	7	8	0
,, பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	,,	7	8	0
,, ,, A. சிதம்பரநாத செட்டியார்	,,	5	8	0
,, ,, S. இராமசாமிப் புலவர்	,,	5	0	0
,, ,, A. பூவராகம் பிள்ளை	,,	4	0	0
,, ,, T. P. பழனியப்ப பிள்ளை	,,	3	0	0
,, ,, R. கந்தசாமியார்	,,	4	0	0
,, ,, M. அருணாசலம் பிள்ளை	,,	3	0	0
,, ,, R. P. அமிர்தலிங்கம் பிள்ளை	,,	3	0	0
,, ,, R. வரதராசையர்	,,	3	0	0
,, ,, T. P. K. இராமநாதஞ் செட்டியார்	,,	3	0	0
,, ,, வெள்ளைவாரணம்	,,	2	0	0
,, ,, S. சோமசுந்தர பாரதியார் M.A.,B.L.,	,,	15	10	0
,, ,, S. K. கோவிந்தசாமிபிள்ளை B.A. Hons.	,,	10	0	0
,, வித்வான் வகுப்பு மாணவர்களும் பிறரும்		24	14	0
ஆனர்சு மாணவர்கள் ஒன்பதின்மர்		9	0	0

திருவத்திபுரம் வித்வான். A. S. துரைசாமிப்பிள்ளை அவர்கள் வழி:—

திரு. பழனியப்பன் உள்ளிட்ட மாணவர்களும் மாணவிகளும்	3	6	0

திருக்கோயிலூர். திரு. கோதண்டபாணி பிள்ளை B. A., அவர்கள் வழி:—

திரு. S. வரதராசலு நாயுடு	அவர்கள்	Devanur	10	0	0
,, T. M. வேணுகோபால்	,,	திருக்கோயிலூர்	5	0	0
,, சுக்கூர்சாயபு	,,	,,	15	0	0
,, க. ஒ. பெருமாள்சாமி பிள்ளை	,,	,,	20	0	0
,, ச. நீலகண்டா ரெட்டியார்	,,	மாடாம்பூண்டி	7	0	0
,, V. இராசகோபால பிள்ளை	,,	அரகண்டநல்லூர்	10	0	0

தஞ்சை திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை B.A.B.L. அவர்கள் வழி:—

திரு. V. R. அரங்கநாத முதலியார்	அவர்கள்	திருச்சி	5	0	0
,, T. M. தயாபரமூர்த்தி முதலியார்	,,	உறையூர்	5	0	0
,, V. V. ரமணசாஸ்திரிகள் M.A.	,,	வேதாரண்யம்	14	12	0
,, அக்னீசுவரம் பிள்ளை	,,	தஞ்சை	5	0	0

கரந்தை திரு. S. A. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் வழி:—

திரு. M. சூர்யமூர்த்தி செட்டியார் B.A., B.L.,	அவர்கள்	வேதாரண்யம்	10	0	0

நன்கொடைகள்

குற்றாலம் திரு. P. சாமிநாத பிள்ளை B.A.L.T. அவர்கள் வழி:—

திரு.	நாராயணசாமி ரெட்டியார்	அவர்கள்	3	0	0
,,	V. T. ராஜ்	,,	3	0	0
,,	வேங்கடராமையர்	,,	3	0	0
,,	K. வேங்கடராமன்	,,	1	0	0
,,	S. சுந்தரேசையர்	,,	1	0	0
,,	G. S. சீனிவாசையர்	,,	1	0	0
,,	T. தோப்பையர்	,,	1	0	0
,,	S. சீனிவாசையர்	,,	1	0	0
,,	S. கிருஷ்ணமூர்த்தி ஐயர்	,,	1	0	0
,,	இராமச்சந்திரன்	,,	1	0	0
,,	S. சுப்பையா முதலியார்	,,	1	0	0
,,	S. குஞ்சிதபாதம் பிள்ளை	,,	1	0	0
,,	R. அகோரம் பிள்ளை	,,	1	0	0
,,	S. பார்த்தசாரதி	,,	1	0	0
,,	A. கிருஷ்ணமூர்த்தி ஐயர்	,,	0	4	0
,,	T. R. திருவேங்கடத்தையங்கார்	,,	0	4	0
,,	M. கலியாண சுந்தரம் பிள்ளை	,,	0	4	0
,,	நடராச நாடார்	,,	0	4	0
,,	சுப்பிரமணியம்	,,	0	4	0
,,	மாணவர்கள்:—S. குருநாதன், A வேங்கடேசன், C மாசிலாமணி, சண்முகம்; மாணவிகள்:—இலக்குமி, சரசுவதி, தலா 0—2—0 வீதம்		1	8	0
,,	A. சிதம்பரமுதலியார் அவர்கள்	கோயமுத்தூர்	5	0	0
,,	கு. மாணிக்கம் பிள்ளை ,,	கருந்திட்டைக்குடி	1	0	0
,,	வித்துவான் இ. சிவகுருநாதன் அவர்கள்	பெண்ணாகடம்	1	0	0
,,	திரு. மு. தங்கவேலன் ,,	,,	1	0	0

தஞ்சை திரு. T. P. K. அழகிரிசாமி பிள்ளை அவர்கள் வழி:—

திரு.	நா. கந்தசாமி பிள்ளை	அவர்கள்	தஞ்சை	2	0	0
,,	T. P. K. அழகிரிசாமி பிள்ளை	,,	,,	2	0	0
,,	V. அழகிரிசாமி நாயுடு B.A.,B.L.	,,	,,	1	0	0
,,	T. S. நாராயணசாமி ஐயர்	,,	,,	3	0	0
,,	A. தியாகராச பிள்ளை	,,	சென்னை	5	0	0
,,	A. கோவிந்தசாமி பிள்ளை	,,	வானூர்	5	0	0
,,	சொ. மாணிக்கம் பிள்ளை	,,	தில்லையாடி	6	12	0
,,	M. சொக்கலிங்கம் பிள்ளை	,,	கீழப்பெரும்பள்ளம்	26	12	0
,,	K. C. இராசதுரை செட்டியார்	,,	பிறையாறு	8	12	0

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௩	ஈசுவர வைகாசி	மலர் ௨

உ

'கபிலர்' என்னும் நூலின் ஆராய்ச்சி.

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்.

கட்டுரை 1.

என் நண்பர் வித்துவான் திரு. வே. வேங்கடராஜலு ரெட்டியாரவர்களால் எழுதப்பெற்று, சென்னைப் பல்கலைக்கழ கழகத்தினரால் வெளியிடப்பட்ட 'கபிலர்' என்னும் உரைநூல் சென்ற யாண்டிலே அறுப்பப்பெற்று எனக்குக் கிடைத்தது. கிடைத்தும், யான் சிலயாண்டுகளாக நோயால் நலிவுற்று அவ் வப்பொழுது செய்யற்பாலவாய இன்றியமையா வினைகளன்றிப் பிறிதொன்றும் ஆற்றகிலாதிருந்து வருதலின் அதனைப் படித்துப் பாராதிருந்து விட்டேன். இப் பங்குனித்திங்களின் இறுதியிற் பிறிதொரு வேலையும் முன்னில்லாமையின் செவ்வி வாய்த்து அதனைப் படித்தறியலானேன். ரெட்டியாரவர்களது ஆராய்ச்சி யறிவை முன்னமே 'பரணர்' என்னும் நூலால் அறிந்துளேனு

கலின், இப்பொழுது புதுவதாக வியப்பொன்றும் தோன்ற வில்லை. ரெட்டியார் தமதுநூலின் முன்னுரையில், இற்றைக்குப் பதினைூண்டுகளின் முன் என்னால் எழுதிவெளியிடப் பெற்ற 'கபிலர்' என்னும் உரைநூலைச்சுட்டி, அஃதிருக்கவும் இஃது எழுதியது மிகையாகாதெனற்குக் காரணங் கூறுவாராய், "நாட்டாரவர்கள் பெரும்பாலும் கல்லூரி மாணவரின் பயனைக் கருதி அந்நூலை எழுதியுள்ளார்கள். இஃது அன்னதோர் நோக்கத்தால் எழுதப்பட்டதன்று" என்றுரைத்து, இரண்டிற்கு முள்ள வேறுபாடு சிலவற்றைக் குறித்திருப்பதுடன், நூலினகத்தும் சில விடங்களில் அந்நூற்கருத்துக்களைத் தாம் வேண்டு மாற்றால் ஆண்டிருக்கின்றனர். அஃது என்பால் அவர் வைத்துள்ள அன்பிற்கும் மதிப்பிற்கும் அறிகுறியாம் என்றே எண்ணு கிறேன். எனினும், எனது நூலின் கருத்துக்களை ஆண்டுள்ள வகைமையிற் கற்பார்க்குத் திரிபுணர்ச்சியுண்டாகாவாறு சில வற்றை விளக்குதல் கடனெனக் கருதியும், அதனோடு எனக்கு அமைதியிலவாகத் தோன்றும் அந்நூற்பொருள்களிற் சில வற்றையேனும் வெளிப்படுத்தல் அன்னவர் ஆராய்ச்சி பின்னுந் தூய்மையுறுதற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் உரியதாமென ஓர்ந் தும் அவையிற்றைச் சிறு கட்டுரைகளாக எழுதி வெளியிடத் துணிந்தேன். இச்செயல் அந்நூலின் ஆசிரியர் பாலுள்ள நட்பின் கிழமைக்கும், மதிப்பிற்கும், தமிழ் வளர்ச்சிக்கும் பொருந்தியதாகுமென்பதே எனது துணிபு.

அந்நூலிற் புதுமையாகக் காணப்படும் சில சொல்லாட்சி முறையை முதலில் ஆராய்தற்கு எடுத்துக் கொள்கின்றேன். முகித்தல், அங்கனம், காண்கின்றது, நஃகீரர் என்பன முறையே ஆராயப்படும்.

"பரணர் என்னும் நூலை யான் எழுதி முகித்த பின்னர்" என அந்நூலின் முன்னுரை தொடங்குமிடத்தே 'முகித்த' என்றொரு சொல் ஆளப்பட்டுளது. 'பரணர்' என்னும் நூலின் முன்னுரையிலும் "அவர்களனைவரது வரலாற்றையும் ஒருங்கே எழுதி முகிப்பது அரிதாகுமாகலின்" எனவும், "தொல்காப்பி

யத்திற்கு ஓர் உரை எழுதக்கருதி, அதில் எழுத்ததிகாரத்திற்கு இப்போது உரை எழுதி முகித்திருக்கின்றேன்'' எனவும் ஈரிடத்தில் இவ்வினையின் ஆட்சி உளது. இதனை வழங்குவது வழுவாகாது என்று காட்டுதற் பொருட்டு "முகிந்தது என்னுஞ் சொல், வழக்கிலும் பழைய ஏடுகளிலும் வழங்குதலானும், 'ஆற்றிற் பாலத்தை முகித்தே னல்லேன்' (குற்றாலத்தல. கண்டகசேதன. 39) என்று செய்யுளிலும் வந்துள்ளதனானும், 'முகிதுது' என்று கன்னடத்திலும், 'முகிஸெனு' என்று தெலுங்கிலும் வழங்குதலானும், முகிஎன்னுஞ்சொல் தொன்மையதே என்பது அறியப்படும்'' எனக்கீழ்க்குறிப்பில் விளக்கம் எழுதப்பட்டுளது. (கபிலர்—முன்னுரை.) தமிழ் லெக்சிகனிலும் இச்சொற்குப் பொருள் கூறுமிடத்தே 'ஆற்றிற்பாலத்தை' என்னும் இம்மேற்கோளும், கன்னடத்திலும் தெலுங்கிலும் இது வழங்குமாறும் காட்டப்பட்டுள்ளன. சங்கப்புலவர்களைப்பற்றி ஆராய்ச்சியுரை எழுதும் ஆசிரியரொருவர் பிற்காலத்துத் தலபுராணம் ஒன்றில் ஓரிடத்துக் காணப்படுவதன்றிக் கடல்போற் பரந்துள்ள தமிழ் இலக்கிய இலக்கணங்களில் யாண்டும் வழங்கப்படாததும், உரையாசிரியன்மார் எவரானும் தீண்டப்படாததும், எவ்விடத்து எத்திறத்து மக்களாலோ அருகி வழங்கப்படுவதுமாகிய திசைச் சொல் ஒன்றை முதன்மையாக நாட்டுவதும், அதனைப் பழைய தமிழ்ச்சொல் என்று நிறுத்தப்புகுவதும் நேர்மையுடையவாகத் தோன்றவில்லை. 'முகித்த' என்று எழுதியவுடன் அதனை விளக்குவான் புகுந்ததே அது தமிழ்மக்களின் வழக்கிலில்லாதது என்பதற்குச் சான்றாகும். அன்றியும், முகித்தல் வினையை நூன் முழுதும் கொண்டுய்க்காது முன்னுரையளவில் முடித்திருப்பது எழுதினோருக்கும் அஃது அருவருப்பு விளைத்திருக்குமென்பதனைக் காட்டா நிற்கும்.

இனி, 'அங்ஙனம்' முதலியவாகத் தமிழறிஞர் பலரானும் வழங்கப்படுஞ் சொற்கள் இதனகத்தும், 'பரணர்' என்னும் நூலினகத்தும் அங்கனம், இங்கனம், எங்கனம், யாங்கனம் என்றிங்ஙனமே வழக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழங்குவதே செவ்விது என்பது இவற்றை எழுதினோர் ஆய்ந்துகண்ட முடிபாகும்.

"ஆங்கனம் தணிகுவ தாயின் யாங்கும்" (நற். 322)

'ஈங்கனஞ் செல்க தானென என்னை
யாங்கறிந் தனனோ தாங்கரும் காவலன்' (புற. 208)

'யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலன் மண்டிலம்' (புற. 8)

என்று, ஆங்கனம் ஈங்கனம் யாங்கனம் என்னுஞ் சொற்களே பழைய செய்யுட்களில் வந்திருத்தலானும், ஙகரம் மொழிமுதற் கண் வாராதென்று தொல்காப்பியம் கூறுதலானும், அங்கனம் ஆங்கனம் இங்கனம் ஈங்கனம் எங்கனம் யாங்கனம் என்னுஞ் சொற்களே பழமைய என்பது அறியப்படும். ஆகலின், யான் இந்நூலில் அங்கனம் இங்கனம் யாங்கனம் என்னுஞ் சொற் களையே வழங்கியுள்ளேன்." (கபிலர்—முன்னுரை) என்று கூறப்பட்டிருத்தல் காண்க.

குற்றாலத் தலபுராணத்தில் ஓரிடத்து வந்து விட்டது என்பது கொண்டு 'முகித்தல்' வினையை ஆளத் தொடங்கினோர் பல நூற்றாண்டுகளாகப் பலரானும் வழக்கினும் செய்யுளினும் வழங்கப்பட்டு வருவதும், ஒரு சிறந்த ஆசிரியரால் இலக்கணம் விதிக்கப்பட்டதும் ஆகிய சொல்லை அவ்வடிவில் வழங்க மறுப் பது வியப்பாகவுள்ளது. நன்னூலாசிரியர் இற்றைக்கு எழு நூறாண்டுகளின் முன்பிருந்தவர் என்பது யாவர்க்கும் ஒப்ப முடிந்தது. அவர்

"சுட்டியா வெகர வினவழி யவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே"

என்று இலக்கணங் கூறியிருத்தலின் அவர் காலத்தின் முன்பே அங்ஙனம் முதலிய சொல்வழக்கு அவ்வடிவுடன் நிலவியதென் பது பெறப்படும். அவ்வாறு பயில வழங்குவதனை அறவே யொதுக்கிப் புதியதொரு வாய் பாடுகொண்டு வழங்குவது மரபு நிலை திரித்துப் பொருளுணர்ச்சிக்கு ஊறு செய்வதேயாகும்.

"மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்"

என்னும் தொல்காப்பியச் சூத்திரமும், 'மரபினை நிலைதிரித்துச் சொல்லுபவெனின், உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிது பிறிதாகும்' என அதற்குப் பேராசிரியர் கூறிய உரையும் நோக்கற்பாலன.

இனி, பழைய செய்யுட்களில் 'அங்ஙனம்' முதலியன வழங்காமையின் உண்மையும், தொல்காப்பிய விதியின்மையும் ஆய்தற்குரியன. ஙகரவொற்று அகரவுயிருடனன்றிப் பிறவுயிர்களோடு தமிழில் யாண்டும் வருதல் இல்லை. அவ்வுடன் கூடிய 'ங' என்னும் உயிர்மெய் தானும் அங்ஙனம் இங்ஙனம் உங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் என்னும் ஐந்து சொற்களிலன்றி வேறிடத்து உடனிலையாக மயங்கி வருவதன்று. ஆகலின், செய்யுளில் எதுகைத் தொடையில் அச்சொற்களை அமைத்தல் அரிதென்பது கூறல் வேண்டா. ஙகரத்துடன் மயங்குதற்குரிய வேறுமெய் அதனோடு பிறப் பொற்றுமையும் ஒலியொற்றுமையுமுடைய ககரம் ஒன்றுமே யாம். ஆகலின், செய்யுட் செய்யும் புலவர் எதுகைத் தொடையில் ஙகரத்தைக் ககரமாகத் திரித்து வழங்குதல் இயல்பே. "யாங்ஙனமொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்" எனத் திரியாது கூறினும் எதுகையாதற் கிழுக்கின்றாம். இறையனார்களவியலின் மூன்றாஞ்சூத்திரம் "ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன்" என்றே படிக்கப்பட்டு வருகின்றது. அன்றியும் வழங்குதற்கு அருமையுடைய சொற்களை எளியவாகத் திரிதல் இயல்பு. மரூஉச் சொற்களிற் பல அவ்வாறு வந்தனவே. அங்கனம் என்பதே பழைய வுருவாயின் வழங்குதற்கு எளிமையுடைய அச்சொல் அங்ஙனம் எனத்திரிதல் பொருந்தமின்றாம். ஆயின், ஙகரம் மொழிமுதற்கண் வாராதென்று தொல்காப்பியம் கூறுதலின் 'ஙனம்' என்பது தொன்மையதாதல் எங்ஙனம் எனின், அங்ஙனம் முதலிய சொற்களை அ—ஙனம் என்றிங்ஙனம் பிரித்துப் புணர்த்துவது தொல்காப்பியர் கருத்தன்றாம். ஆகலின், ஙகரம் மொழிமுதற்கண் வருமெ‌ன அவர் விதித்திலர்.

> "பகுதி விகுதி இடைநிலை சாரியை
> சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
> முன்னிப் புணர்ப்ப முடியும் எப்பதங்களும்"

என்று நன்னூலார் ஒரு சொல்லையே முதனிலை முதலியவாகப் பிரித்து முடிக்குமாறு கொண்டாற் போலத் தொல்காப்பியர் கொண்டிலர். தொடர்மொழிகளிலுங்கூடப் பண்புத்தொகை, வினைத்தொகை முதலியவற்றை நிறுத்த சொல்லும் குறித்து

வருகிளவியுமாகப் புணர்க்கலாகாதெனல் அவர் கருத்தென்பது "உயிரும் புள்ளியும் இறுதியாகி" என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். 'ஙவ்வும் முதலாகும்' எனக் கூறிய நன்னூலாரும் சுட்டு வினாக்களின் பின் வருமென்றாரேயன்றித் தனித்து முதலாகுமெனக் கூறினாரல்லர். ஆகலின், தொல்காப்பியனார் ஙகரம் மொழி முதலில் வருமெனக் கூறாமையின் அங்ஙனம் என்பது பழைய வழக்காகாதெனத் துணிதல் பொருந்தாமை ஓர்க. ஆயின், அது பழைய வழக்கே எனத் துணிதற்குத்தான் சான்று என்னை எனின், கூறுவல். தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் இயலாகிய நூன் மரபில் உடனிலை மெய்ம்மயக்கம் கூறும் நூற்பா

"மெய்ந்நிலை சுட்டின் எல்லா வெழுத்தும்
தம்முற் றாம்வரூஉம் ரழவலங் கடையே"

என்பது. இதில், ர, ழ என்னும் இரண்டும் ஒழிந்த பதினாறு மெய்யும் தம்முன் தாம் வந்து மயங்குமென ஆசிரியர் விதித்திருத்தலின் ஙகர ஒற்றின்முன் ஙகரம்வந்து மயங்கும் சொல் இருந்ததாகல் வேண்டுமன்றோ? தமிழிலே சுட்டு வினாக்களின் பின் ஙனம் என்பது இயைந்துவரும் அங்ஙனம் முதலிய சொற்களன்றி ஙகரம் உடனிலையாக மயங்கற்குரிய வேறு சொல் யாதுளது? திரு. வேங்கடராஜலு ரெட்டியாரவர்கள் பல யாண்டுகளின் முன்பே தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு உரையெழுதி முடித்துளார் என்பது 'பரணர்' என்னும் நூலின் முன்னுரையால் அறியப்படுகின்றது. அதன்கண், மேல் எடுத்துக் காட்டிய "மெய்ந்நிலை சுட்டின்" என்னுஞ் சூத்திரத்திற்கும் உரையும், உதாரணமும் எழுதப் பட்டிருக்கவே வேண்டும். அவையிற்றை இடையே ஒருகால் நினைக்கவு முடியாமற் செய்த மறதியின் வன்மையே வன்மை. அம் மறதியால் அவர் தாமெழுதிய புத்தகங்கள், கட்டுரைகள் யாவற்றினும் பிழையுள்ளதோர் முடிபினை மேற்கொண்டாராவர்.

தொல்காப்பியம், எட்டுத்தொகை முதலிய சங்கவிலக்கியங்கட்குப் பல நூற்றாண்டுகளின் முன்னர்த்தோன்றியதென்பது ரெட்டியாரவர்கட்கும் உடன்பாடே. அந்நூலினாலே அறுதி

யிடப்படுதலின் அங்ஙனம் முதலிய சொல் வழக்கும் பழமைய தென்பது போதரும். அதனையறிந்தே நன்னூலாரும் அதற்கு மாறின்றித் தமது மதமும்தோன்ற இலக்கணம் கூறிப்போந்தா ரென்க.

இனி, கபிலர் என்னும் அந்நூலின்கண் "புராணக் கதை களும் பல காண்கின்றன; சிலவற்றில் ஒவ்வொரு சொல்லே காண்கின்றது; சிறிதும் மாறுபாடில்லாத அடிகளும் பரக்கக் காணுதலின்; ஐவர் புலவர் இயற்றியன எனக் காண்கின்றன வாகலின்; கபிலர் பாடிய கலிப்பாட்டுக்களுள்ளும் நாடக வழக் குக் காண்கின்றது; நாலசைச்சீரைப்பற்றிய இலக்கணமும் காண் கின்றது; ஞானவெட்டியான் என்னும் நூலிலும் காண்கின்றது; ஒளிறு என றகர உகரம் காண்கின்றது; ழகரத்துக்கு டகரம் காண்கின்றது; ககர ழகரம் மாறிக் காண்கின்றது." (பக்கம்—33, 34, 35, 37, 38, 44, 49, 116, 117.) என்றிங்ஙனம் பலவிடத் தும் 'காண்' என்பதனடியாகவரும் வினைச் சொற்கள் காணப்படு கின்றன. இவை பலவிடத்தும் பரக்கக் காணப்படுதலின், இங்ஙனம் எழுதுவதே இலக்கணம் எனக்கருதி எழுதப்பட்ட வாதல் வேண்டும். ஆசிரியர் தொல்காப்பியனார்

"வினையே செய்வது செயப்படு பொருளே
நிலனே காலம் கருவி யென்றா
இன்னதற் கிதுபய னாக வென்னும்
அன்ன மரபி னிரண்டொடுந் தொகைஇ
ஆயெட் டென்ப தொழின்முத னிலையே"

என்பதனால், வினை தோன்றுதற்குரிய காரணங்களைக் கூறி,

"அவைதாம்,
வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்"

என்பதனால், சில வினைக்கண் அவற்றுட் குன்றத் தகுவன சில குன்றிவரும் என்றார். சேனாவரையர் "குன்றத்தகுவனவாவன செயப்படு பொருளும் ஏற்பதும் பயனுமாம்" என அதனை விளக்கி, கொடியாடிற்று, வளிவழங்கிற்று என அவை குன்றி வருதற்கு உதாரணங்காட்டினர். எனவே சில வினைகளிற் செயப்படுபொருள் குன்றிவருதல் இயல்பு. காண்டல் வினையோ

செயப்படுபொருள் குன்றுதது. செயப்படு பொருளை விரித்துரைக்கும் "காப்பின் ஒப்பின்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தில் "நோக்கலின்" என வருதல் காண்க. காப்பு முதலாயினவெல்லாம் பொருள்பற்றி ஓதப்பட்டனவாகலின், நோக்கல் என்பதில் அப்பொருள்பற்றிவரும் காண்டல், பார்த்தல் என்பனவும் அடங்கும். எனவே, காண் என்பதனடியாகவரும் வினைச்சொற்களை, புராணக் கதைகளும் பல காணப்படுகின்றன, சிலவற்றில் ஒவ்வொரு சொல்லே காணப்படுகின்றது' என்றிங்ஙனம் வழங்குதலே மரபாகும். உரையாசிரியர் பலரும் அம்மரபு பிறழாமலே வழங்கி வருவாராயினர்.

"செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே"

என்னுஞ் சூத்திரம் வழக்கின்கண் ஓரோ வழிச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்படும் மரபு வழுவை அமைத்தற்கெழுந்ததே. அவ்வழுவமைதியையே மேற்கொண்டு நூல் உரைகளில் யாண்டும் எழுதுதல் முறைமையன்றாம். இனி, வேற்றுமொழிப் பயிற்சி ஒன்றே கொண்டு தமிழின் இயல்பினை விளக்கலுறுவார் சிலர் தொல்காப்பியத்திலே செயப்பாட்டு வினையைப்பற்றிய குறிப்பு இல்லை எனவும், ஆகலின் தமிழின்கண் செயப்பாட்டுவினை இன்றெனவும் கூறுநிற்பர். செயப்படுபொருள் என்னும் பெயரிலிருந்தே செயப்பாட்டுவினையுண்மை பெறப்படுவதனையும், தொல்காப்பிய முதற் சூத்திரத்தின் தொடக்கமே "எழுத்தெனப்படுப" என அதனைக் குறிப்பிடுதலையும்,

"சொல்லப் பட்டன எல்லா மாண்பும்
மறுதலை யாயினும் மற்றது சிதைவே"

எனப் பிறாண்டும் அஃது ஆளப்படுதலையும் அவர் அறியார். ரெட்டியார் செயப்பாட்டுவினை பலவற்றைத் தாம் வழங்குதலின் அக்கொள்கையினர் அல்லரென்பது பெறப்படும். ஓர் அரைப் பக்கத்திலே (பக். 137) "கூறப்பட்டிருத்தலின், குறிக்கப்பட்டுள்ள, தொகுக்கப் பட்டுள்ளன, காட்டப் பட்டுள்ளன" என்றிங்ஙனம் எட்டிடத்தில் வழங்கியுள்ளமை காண்க. அங்ஙன

மாகவும் காண்டல் வினை ஒன்றின்மட்டில் அவர் கருத்து மாறுபட்டது என்னையோ? ஆயின், காணப்படுகின்றது, காணப்படுகின்றன என ஓரிடத்தும் அவர் வழங்காமற் போகவில்லை. எனினும் முன்னது பெருவரவிற்றாகவும், பின்னது சிறுவரவிற்றாகவும் இருத்தலை நோக்கின், காண்கின்றது என்பதனையே அவர் நினைவு கூர்ந்து வழங்கியுள்ளார் என்பதும், காணப்படுகின்றது என்பது பயிற்சி மயத்தால் அவரறியாமலே போந்ததாம் என்பதும் பெறப்படும். கற்போர் புதுவதாக வுள்ளதனையே விருப்புடன் நோக்குவராதலின் காண்கின்றது என்பதே அவருள்ளத்தில் நிலைபெறுவதாகும். ஒரு பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி வினைஞரால் எழுதப்பட்டு, உயர்ந்த தாளிற் பரிய உருவினதாகப் பொலிவுற அச்சிடப்பட்டுள்ள புத்தகத்திற் காணப்படுதலின் எத்துணையர் இவ்விழி வழக்கினை விழுமிய வழக்காகக் கொண்டனரோ என உன்ன அச்சமுண்டாகின்றது.

இனி, தமிழ் நூற்களில் யாண்டும் நக்கீரர் என வழங்குஞ் சொல் இதில் நற்கீரர் என ஆளப்பட்டுளது. இதன் ஆசிரியர் முன்னர் எழுதிய 'பரணர்' என்னும் நூலினும் நக்கீரர் என்றே பலவிடத்தும் வந்துளது. அந்நூலின் கீழ்க் குறிப்புக்களுள் ஒன்றிலேதான் "நக்கீரர் என்பது நற்கீரர் என வழங்கிய சொல்லின் திரிபாகலாம் எனத் தோன்றுகின்றது" என வடநூல் ஒன்றிலே கண்ட 'நத்கீரர்' என்னும் வடிவுக்கு விளக்கம் எழுதுழி நற்கீரர் என்று குறிக்கப்பட்டுளது. இந்நூலின்கண் நக்கீரர் என்னும் வழக்கு அறவே கைவிடப்பெற்று, நற்கீரர் என்பதே வழங்குமாறு மேற்கொள்ளப்பட்டுளது. "இனி, நல்லந்துவனார் நல்லிறையனார் நல்லுருத்திரனார் என உயிர் முதன் மொழிகள் வந்தவிடத்தும், நன்னாகனார் நன்னாகையார் என மெல்லெழுத்து முதன்மொழிகள் வந்த விடத்தும், நல்விளக்கனார் நல்வெள்ளியார் நல்வேட்டனார் என இடையெழுத்து முதன் மொழிகள் வந்த விடத்தும் நல் என்னும் அடைமொழியே வந்திருத்தலின் வல்லெழுத்து முதன் மொழிகள் வருமிடத்தும் நல் என்னும் அடைமொழி நிற்றலே முறையாமாகலானும், நற்காட்சி நல்லொழுக்கம் நன்ஞானம் என்று சிறப்புடைப்பொருள்

களைக் கூறுமிடத்தும் நல் என்னும் அடைமொழியே வந்திருத்த லானும், பிறவாற்றானும் நற்கீரர் என்னுஞ் சொல்லே அமை வுடையதென்றும், நக்கீரர் என்னுஞ்சொல் மரூஉமொழி என்றும் தேர்ந்து, நற்கீரர் என்னுஞ் சொல்லை மேற்கொண்டுள்ளேன்" என அத்துணிபிற்கு ஏதுக் கூறப்பட்டுள்ளது.

நற்கீரர் என்னுஞ் சொல்லே நக்கீரர் எனத் திரிந்ததாகல் வேண்டும் என்பது என்கருத்திற்கும் இசைந்ததே. நான்காண்டு களின்முன் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒரு சிறப்புக்கூட்டத் தில், 'நல்லந்துவனார்' என்னும் பொருள்பற்றி யான் பேசிய பொழுது, நவ்வந்துவனார் என வழங்குதல் பொருந்தாதென விளக்குழி இதனை விரித்துரைக்கலானேன். எனினும் சான் றோர் வழக்கொடு முரணி நற்கீரர் என வழங்குதல் தகுதியன்று என எண்ணி யான் அவ்வழக்கினை மேற்கொண்டிலேன். வல்லின முதன்மொழிகள் வருமிடத்து மாத்திரமே நக்கண்ணையார், நக் கீரனார், நச்செள்ளையார், நத்தத்தனார், நப்பசலையார், நப்பண்ண னார், நப்பாலத்தனார் என நல் என்பது திரிந்து வருதலின் அதற்கு ஏது என்னென ஆராய்தலே முறைமையாம். வழங்கு தற்கு எண்மையது ஆதலே முதலில் அதற்குக் காரணமாதல் வேண்டும். வல்லெழுத்து ஆறனுள் க ச த ப என்னும் நான்கு மெய்யும் உடனிலையாகவன்றி வேறு மெய்யுடன் மயங்குதல் இல்லை. அதற்குக் காரணம் அருமுயற்சியுடன் அதனைக்கூற வேண்டியிருத்தலே. தமிழெழுத்துக்களின் மயக்க விதியெல் லாம் அவை பெரும்பாலும் எளிய முயற்சியுடன் வழங்குதற் பயத்தவே. ட ற என்னும் இரண்டு மெய்யும் க ச ப என்ப வற்றோடு மயங்குமாயினும் அதனை வழங்குதற்குச் சிறிது அரு முயற்சி வேண்டப்படுகின்றது.

"கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கை விளங்கக் காணாய்"

என ஒரு மொழியிலும் இளங்கோவடிகள் றகரத்தைப் பகர மாகத் திரித்திருப்பது காண்க. மகளிர் பேச்சில் **நப்பெண்டு, நப்பிள்ளை, நச்சோல்** என்பன கேட்கப்படுகின்றன. இவ்வாற்றால், ஒரு குறிலின்பின் வரும் றகரவொற்று வேறு மெய்களோடு

மயங்கின் சிறிது வழங்குதற்கு அரியதாதல்பெறப்படும். அஃது உடனிலையாக மயங்குழியும் அத்தகையதே. இளம்பிராயத்தினரைப் பேசுவித்து இப்பொழுதும் அதனை அறிதல் சாலும். எனினும் அதுகொண்டே அத்தகைய சொற்கள் பலவற்றையும் திரித்து வழங்குதல் கருத்தன்றாம்.

நக்கீரர் முதலிய வழக்குப் பண்டுதொட்டு நிலைபெற்று வருவதொன்று. இரண்டு திருவிளையாடற் புராணங்களிலும், சீகாளத்திப் புராணம் முதலியவற்றிலும் நக்கீரர் என்னுஞ் சொல் பலவிடத்து வந்துளது. சுருங்க வுரைக்கின் பழையவும் புதியவுமான நூல், உரைகள் யாவற்றினும் நற்கீரர் என்பது அன்று, நக்கீரர் என்பதே காணப்படுவது என்னலாம். எட்டுத் தொகை, பத்துப் பாட்டுக்களிலே பாடினோர் பெயரைப் புலப் படுத்தும் குறிப்புக்களில் நக்கீரனார், நச்செள்ளையார் முதலிய பெயர்கள் வழங்கியிருத்தலின் அவை தொகுக்கப்பெற்ற அத் துணைப் பழங்காலந் தொடங்கியே ஆன்றோர் பலரானும் அவை அங்ஙனம் வழங்கப்பெற்றன என்பது போதரும். முற்காலத்து நல்லிசைப் புலவர்கள் ஒருவர் ஒருவரைப் பாராட்டும் இயல்பினர் என்பது

"புலனழுக் கற்ற அந்தணாளன்
பரந்திசை நிற்கப் பாடினன்"
"இன்றும் பரணன் பாடினன்"
"அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"

என்னும் இவைமுதலியவற்றால் அறியப்படும். அவர்கள் ஒருவர் செய்யுளிலுள்ள சிறப்புடைய தொடர்களின் சுவையை நுகர்ந்து இன்புறுதலும், அவற்றையும், அவற்றை இயற்றினோரையும் பாராட்டுதலும் உடையர் என்பது ஒருவர் பாட்டிலுள்ள சொற்றொடர் அங்ஙனமே பலருடைய பாட்டுக்களில் வருதலானும், பதிற்றுப்பத்திலுள்ள ஒவ்வொரு பாட்டுக்களும் மறம் வீங்குபல் புகழ், சான்றோர் மெய்ம்மறை என்றிவ்வாறு அவற்றில் வந்துள்ள சிறப்புடைய தொடர்களாற் பெயர் கூறப்படுதலானும், சில புலவர்கள் அணிலாடு முன்றிலார், இரும்பிடர்த்தலையார் என்றிங்ஙனம் அன்னோர் பாட்டிலுள்ள தொடர்பற்றி எழுந்த சிறப்புப்

பெயர்களால் வழங்கப் பெறுதலானும் அறியப்படும். இங்ஙனம் சிறந்த புலவரொருவர் பெயரின் முன்னுள்ள நல் என்னும் அடைமொழியைத் திரித்து நக்கீரனூர் என்றாற்போல ஒருவர் வழங்கா நிற்க ஏனோரும் அதனைப் பாராட்டி அவ்வாறு வழங்குதற்குரிய பிறபுலவர் பெயர்களையும் அவ்வணம் வழங்கினராதல் வேண்டும். அவ்வழக்கே பின்னரும் பாட்டு உரைகளிற்பயின்று வருவதாயிற்று. இங்ஙனம் பயிற்சிமிக்க வலியுடைய வழக்கினைப் புறக்கணித்து 'நற்கீரர்' என அழிவழக்குத் தொடர்வது முறையன்றாம். இப்பெயரினை இங்ஙனம் திரித்தோர் இனி நக்கண்ணையார், நச்செள்ளையார் முதலிய ஏனைப் பெயர்களையும் திரித்து வழங்கும் இயல்புடையராவர். இங்ஙனம் இவர் தாம் நினைத்தபடியெல்லாம் சொற்களின் உருவைமாற்றி வழங்குவரேல், அது தெலுங்கு, மலையாளம் போலும் பிறிதொரு மொழியாவதன்றித் தமிழாகாது என்க.

வடநாடு சென்ற தமிழரசர் காலம்

வித்வான். திரு. மா. இராசமாணிக்கம் B.O.L.

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 1. பக்கம் 34.)

கரிகாலன் காலம்.

வடநாட்டுப் படையெடுப்புக்குரிய மூன்று காலங்களில் ஈற்றுக்காலம் செங்குட்டுவனுடையதென மேற் கூறிவிட்டதாலும், கரிகாலன் செங்குட்டுவற்கு முற்பட்டவனாதலாலும், கரிகாலன்காலம் மேற்கூறப்பெற்ற முதல் இரண்டு காலங்களில் ஒன்றாக இருத்தல்வேண்டும். கரிகாலன் இலங்கைத்தீவை வென்று ஆயிரக் கணக்கான அடிமைகளை இலங்கையினின்றும் கொணர்ந்தான் என்பதும் கவனித்தற்குரியது. இலங்கைச் சரிதமாகிய மஹா வம்சத்தால், அசோகன் காலத்து ஈழ நாட்டரசனான தேவனம்பிரியதிஸ்ஸாவுக்குப்பின் மூவர் இலங்கையை ஆண்டனர் எனவும், கி. மு. 170-ல் தமிழரசர் இலங்கையைக்

கைப்பற்றி 70 ஆண்டுகள் ஆண்டனர் எனவும், பின்னர்க் கி.மு. 44—கி.மு. 17-க்கு இடையே 15 ஆண்டுகள் ஆண்டனர் எனவும் அறியலாம்.[9] இவற்றுக்குப் பின்னர்த் தமிழர் இலங்கைமீது படையெடுத்தது முறையே கி. பி. 660—கி. பி. 1065, கி. பி. 1200—கி. பி. 1266-க்கு உட்பட்ட இருகாலங்களில் என்பதும் மஹா வம்சம் கூறுவது.[10] எனவே, முதல் இரண்டு இலங்கைப் படையெடுப்புகளில் ஒன்று கரிகாலன் சம்பந்தம் பெற்றதாகல் வேண்டும். இவ்விரண்டுக்கும் வடநாட்டுப் படையெடுப்புக்குரிய முதல் இரண்டு காலங்களும் பொருந்துகின்றனவா என்பதைக்காண்போம்:

(1) தமிழரசர் வடநாட்டின்மீது படையெடுக்க வசதியான முதற்காலம் கி. மு. 207-கி. மு. 184.

இலங்கைமீது தமிழரசர் படையெடுத்து ஆண்ட முதற் காலம் கி. மு. 170—கி. மு. 101.

இவற்றால், கரிகாலன் ஆட்சிக்காலம் கி. மு. 180—கி. மு. 140-வரை இருந்ததென உத்தேசமாகக் கூறலாம்.

(2) வடநாட்டின்மீது படையெடுக்க வசதியான இரண்டாம்காலம் கி. மு. 148—கி. மு. 27.

இலங்கைமீது தமிழரசர் படையெடுத்து ஆண்ட இரண்டாம்காலம் கி. மு. 44—கி. மு. 17-க்குஉட்பட்ட 15 ஆண்டுகள்.

இவற்றால், கரிகாலனது ஆட்சிக்காலம் கி. மு. 60—கி. மு. 20 என உத்தேசமாகக் கூறலாம்.

எனவே, கரிகாலன்காலம் கி. மு. 180—கி. மு. 140-க்குட் காலமா? கி. மு. 60—கி. மு. 20-க்குட்பட்ட காலமா? என்பது ஆராய்தற்குரியது. இதனை நிர்ணயிக்கப் பெருந்துணைபுரிவது அக்காலத்தில் 'கடல் வாணிபம்' ஒன்றேயாம். கரிகாலனைப்

---

9. 'A Short History of Ceylon' pp. 722-725, by Dr. W. Geiger, in 'Buddhistie Studies'ed. by B. C. Law.

10. 'History of Buddhism in Ceylon', pp. 493,494, 500; by Dr. W. A. De Silva, in 'B. Studies' ed. by B. C. Law.

பாடப்பெற்ற பொருநர் ஆற்றுப் படையிலும் பட்டினப்பாலையிலும் புகார்ச் சிறப்பும் கடல் வாணிபச் சிறப்பும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழர் ரோம ராச்சியத்தோடு வியாபாரம் செய்யத் தொடங்கியது முன்னரேயாயினும், அது வளர்ச்சியுறத் தொடங்கியது கி. மு. முதல் நூற்றாண்டிற்றான் என்பது ரோமர்கள் எழுதிவைத்த குறிப்புகளால் உணரலாம். கி. மு 39—கி. மு. 14 வரை ரோமச் சக்கரவர்த்தியாக இருந்த 'அகஸ்டஸ்' என்பானுக்குப் பாண்டிய மன்னன் கி. மு. 20-ல் தூதுக் கோஷ்டி ஒன்றை அனுப்பினான் என்பது நோக்கத் தக்கது. இஃதொன்றே தமிழர் ரோமரோடு கடல் வாணிபம் சிறக்க நடத்தினர் என்பதற்குப் போதிய சான்றாம். இக்கடல் வாணிபம் கி.பி. 215-வரை அஃதாவது அலெச்ஸாண்டிரியப்படுகொலை வரை மும்மரமாக நடைபெற்று வந்தது.[11]

சோழ மன்னருள் இமயம் வரை சென்று மீண்டவன் கரிகாலன் ஒருவனே என்பது வெளிப்படை. அவன் சென்று மீண்டது உண்மையே என்பதற்குப் புதிய ஆதாரம் ஒன்றும் கிடைத்திருப்பது நோக்கத் தக்கது. "ஸிக்கிம் இராச்சியத்துக்குக் கிழக்கே அதற்கும் திபேத்துக்கும் உள்ள எல்லையை வரையறுத்து நிற்கும் மலைத்தொடர்க்குச் 'சோழ(ர்) மலைத்தொடர்' (Sola Range) என்றும், அதனை அடுத்துள்ள பெருங் கணவாய்க்குச் 'சோழர்)—கணவாய்' (Sola Pass) என்றும் பெயர்கள் காணப்படுகின்றன.[12] 'சோல' என்பது ஸிக்கிம், திபேத் பாஷைகளில் உள்ள சொற்களுக்குப் பொருந்தவில்லை" எனப் பண்டிதர் மு. இராகவையங்கார் புதிதாகக் கண்டுபிடித்து வெளியிட்ட செய்திக்குத் தமிழ்உலகம் அவர்பால் நன்றிபாராட்டக் கடமைப் பட்டுள்ளது.[13]

---

11. V. A. Smith's 'Early History of India', p. 471.
12. 'Imperial Gazetteer of India;, Sikkim, Vol. X. p. 327; Vol. XXII. p. 365.
    'Hand „ „ Vide 'Sala Pass?.
13. Vide 'Kalaimagal', Vol. I. pp. 62, 63 (1932).

இதுகாறுங் கூறியவற்றால், கரிகாற் சோழன் வடநாடு சென்று, சிலப்பதிகாரம் கூறுமாப்போல

"பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமையவர் உறையும் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற்"[14] பெயர்ந்தமை

உண்மை என்பதும், அக்காலம் கி. மு. முதல் நூற்றாண்டின் இடைப்பட்ட காலமே யாகல் வேண்டும் என்பதும் நன்கு விளங்கும் செய்திகளாம்.

கரிகாலன் ஆட்சிக் காலமென உத்தேசமாகக் கொண்ட கி. மு. 60—கி. மு. 20-க்குட்பட்ட காலத்தில் மகதராச்சியம் சுங்கர் வசத்தினின்றும் 'கண்வ வம்சத்தினர்' கைக்கு மாறி விட்டது. கி. மு. 73-ல் 'வாசுதேவ கன்வா' மகதநாட்டு அரசனானான்; அவனுக்குப் பின் மூன்று கன்வர் கி. மு. 28-வரை ஆண்டனர். அதற்குப்பின் மகதநாடு ஆந்திரர் வசப்பட்டது. எனவே, கரிகாலன் வடநாட்டின்மீது படையெடுத்த காலத்தில் கன்வ வம்சத்தவரே மகதநாட்டை யாண்டு வந்தவராவர். அவர்கள் வலியற்ற அரசர்களே.[15] அவர்கள் காலத்தில் கௌசாம்பியைத் தலைநகராகக் கொண்ட 'வச்சிர' நாடும், உச்சைனியைத் தலைநகராகக் கொண்ட 'அவந்தி'நாடும் சுயாதீனம் பெற்றிருத்தல் வேண்டும். இல்லையேல், கரிகாலன் சென்று மீண்ட போது (மகத நாட்டரசன் பட்டி மண்டபமும்), வச்சிரநாட்டு வேந்தன் கொற்றப் பந்தரும், அவந்தி வேந்தன் தோரணவாயிலும் கொடுத்தனர் எனச் சிலப்பதிகாரம்[16] கூறுவதில் பொருள் இல்லை அல்லவா? இந்நாட்டரசர்கள் சந்திரகுப்த மௌரியன் காலத்திலிருந்து சிற்றரசராகவும் அடிமைப்பட்டும் ஹர்ஷனுக்குப் பின்னும் இருந்து வந்தனர் என்பதற்குச் சரித்திரமே சான்றாகும். * இது நிற்க.

---

14. Indravilavureduthа Kathai, li. 96—98.
15. V. A. Smith's 'Early History of India,' p. 215, 216.
16. Indravilavureduthа Kathai, li. 99—104.
* V. A. Smith's 'Early History of India', p. 369.

கரிகாலன் சம்பந்தமான குழப்பங்கள்.

'கரிகாற் சோழன் பெருஞ் சேரலாதனோடு போரிட்டான்; பெருஞ் சேரலாதன் தோற்று நாணி வடக்கிருந்து உயிர் நீத்தான்' என வருஞ் செய்யுளைக் கொண்டும், வடக்கிருந்த பெருஞ் சேரலாதன் செங்குட்டுவன் தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனே என மயங்கியும், செங்குட்டுவன் காலம் கி.பி. 2-ம்நூற்றாண்டெனின், அவன் தந்தையின் காலத்தவனான கரிகாலன் கி.பி. முதல் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி. 2-ம் நூற்றாண்டின் தொடக்கத்தினன் எனப் பலரும் முடிவு கட்டி விட்டனர். அவர் கூற்றை நம்பி வி. ஆர்தர் ஸ்மித் என்பாரும் அங்ஙனமே கூறிவிட்டனர்.[17] இம்மயக்கத்தைத் தெளிய வைத்த பெருமை திரு. K. N. சிவராஜ பிள்ளையவர்கட்கே உரியதாகும். அவர் எழுதியுள்ள நூலில், "பெருஞ் சேரலாதனைத் தோற்கடித்த கரிகாலன் முற்பட்டவன்; இமயம்வரை சென்ற கரிகாலன் பிற்பட்டவன்; சங்க நூல்களில் கரிகாலன் என இருவர் கூறப்பட்டுள்ளனர்" என வெகு அழகாக விளக்கியுள்ளமை பொன்னே போலப் போற்றத் தக்கது.[18] விரிவினை அறிய அவாவுவோர் அவர்தம் நூலிற்கண்டு மகிழ்க.

இஃதன்றி மற்றொரு செய்தியும் ஈண்டு அறியத்தகும்: முதற் கரிகாலன்பால் தோற்று நாணி வடக்கிருந்த 'பெருஞ் சேரலாதன்' வேறு; பெருவிறற் கிள்ளியோடு போரிட்டு அவனுடன் களத்திலேயே மாண்ட 'நெடுஞ் சேரலாதன்' வேறு.[19] இவற்றால், இமயஞ் சென்று மீண்ட கரிகாலனுக்கும் செங்குட்டுவன் தந்தைக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பதை நன்குணர்தல் வேண்டும். இத்தகைய மயக்க முடிபுகளால் தமிழ் வேந்தர்வரலாறுகள் பாழடைந்து சரித்திராசிரியர்ஒதுக்கித்தள்ளக்கூடிய நிலையை அடைந்தன என்பதில் வியப்பில்லை. பொறுமையாகச் சரித்திர அறிவுடனும் இலக்கிய அறிவுடனும் பார

---

17. Vide his 'Early History of India', p. 482 (4th ed.)
18. Vide his 'Chronology of the Early Tamils', pp. 91—94.
19. Vide Purananuru S. 62, 63.

பட்சமற்ற பகுத்தறிவுடனும் இலக்கியம் ஆராயப்படுதல் வேண்டும். அந்நிலை ஏற்படும் நாளே தமிழகத்துக்குரிய நன்னாளாகும்.

கரிகாலன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டெனவும் இரண்டாம் நூற்றாண்டெனவும் கூறினோர் அனைவரும் அவனது இலங்கைப் படையெடுப்பும் வடநாட்டுப் படையெடுப்பும் அக்காலங்களில் நடந்திருக்கக் கூடுமா என்பதை அறவே மறந்தனர் என்றே கொள்ளக் கிடக்கிறது. கி. பி. முதல் 5 நூற்றாண்டுகளில் இலங்கைப் படையெடுப்பே நடந்ததில்லை என இலங்கைச் சரிதமே சான்று பகர்கிறது. கி. பி. 7-ம் நூற்றாண்டில் கச்சியை யாண்ட நரசிம்ம பல்லவனுக்கும் இலங்கை யரசனுக்கும் தொடர்புண்டென்பதை இலங்கைச் சரித்திரம் கூறுகிறது. எனவே, கரிகாலன் இலங்கைமீது படையெடுத்த காலம் கி. மு. வில் தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகிறதன்றோ? இவை அனைத்தையும் விட, இரண்டாம் கரிகாலனைப் பற்றிய பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை இவற்றின் நடைக்கும் முதற் கரிகாலனைப்பற்றிப் பாடப்பெற்ற புற-அகப் பாடல்களின் நடைக்கும் உள்ள சிறிதளவு வேறுபாடு நுணுகி ஆராயத்தக்கது. இரண்டாம் கரிகாலனைப் பற்றிய இரண்டு பாக்கட்கும் மணிமேகலை, சிலப்பதிகாரம் இவற்றுக்கும் உள்ள பேரளவு வேறுபாடும் ஆராயத்தக்கது. சரித்திர ஆராய்ச்சியோடும் பாஷை ஆராய்ச்சியும் இன்றியமையாதது.

இனி அடுத்த இதழில் மிக்க குழப்பத்துக் கிடமாகவுள்ள 'இமயவரம்பன்—நெடுஞ்சேரலாதன்' வரலாற்றினை ஆராய்வோம்.

(தொடரும்.)

தென்பாண்டிநாடும்—கொற்கைமாநகரமும்.

கோவை, திரு. சி. து. நாராயணசாமி முதலியார் அவர்கள்

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 1. பக்கம் 10.)

இவன் காலத்தில் இவனுடைய பெரிய தந்தை சடைய வர்மன் பராக்கிரம குலசேகர பாண்டியனின் இரண்டாவது புதல்வன், வரதுங்கராமபாண்டியன் என்பவன் கி. பி. 1588-ஆம் ஆண்டில் முடி சூடிக்கொண்டு கரிவலம் வந்த நல்லூரில் இருந்து அரசு புரிந்தான். ஆகையால் கரிவலம் வந்த நல்லூரும் பாண்டியருடைய அரசிருக்கையாகச் சிறிதுகாலம் இருந்தது. கரிவலம் வந்த நல்லூரானது, சங்கரநயினர் கோயிலுக்கு அருகேயுள்ளது.

அதிவீரராம பாண்டியனும், வரதுங்கராம பாண்டியனும் தமிழில் மாபெரும் புலவர்கள். இவர்களை "அரசப் புலவர்கள்" என்றும் கூறுவர். சீரிய செந்தமிழ் நூல்கள் பலவியற்றி, தமிழ்மொழிக்கு ஒப்பற்ற திருத்தொண்டாற்றிய செல்வரும் ஆவர்.

அதிவீரராம பாண்டியனுடைய பெரிய தந்தையார் குலசேகர பாண்டியன் காலம்வரை அதாவது கி. பி. 1552-ஆம் ஆண்டுவரை கொற்கை, பாண்டியர்களுக்கு அரசிருக்கைத் தானமாக இருந்ததென்றும்; அதன் பின்னர் ஏற்பட்ட அழிவுகளால் கொற்கை சீர்குலைந்து போய்விட்டதென்றும், கொற்கை முற்றும் அழிவுபட்ட பின்னரேயே கரிவலம் வந்த நல்லூர் அரசிருக்கையாயிற்றென்றும் கொள்ளக் கிடக்கின்றது.

இனி, கொற்கையின் துறைமுகச் சிறப்பையும், அதில் விளையும் முத்துக்களின் அருமை பெருமைகளையும், அது இருந்த விடத்தையும், அதன் அழிவு முதலியவற்றையும்பற்றி மேனாட்டு யாத்ரீக அறிஞர்கள் வியந்தோதிய சிறப்பு மொழிகளையும் ஒருவாறு கூறி இக்கட்டுரையை முடிப்பாம்.

'பேரிபிளஸ் மாரீஸ் எரிதிரே' (Priplus maris Eriythrai) என்ற யவன நூலும், 'தாலமி' (Ptolemy) என்ற யவன நாட்டுப் புலவரது பூமி சாத்திரமும், கி. பி. 80; 130-ஆம் ஆண்டுகளில் 'கொற்கை கடற்றுறைப் பட்டினங்களில் சிறந்த துறைமாகவும், உலகில் எங்கும் காணக் கிடையாத அரும்பெரும் முத்துக்கள் இங்கு அகப்படுகின்றதென்றும்; முத்துக் குளிப்பதிலும், சங்கறுப்பதிலும், உப்பு விளைவிப்பதிலும், சிறந்த கைத்தொழில் இடமென்றும்; நெறி தவறாத பாண்டியர்கள் அரசு செய்திருந்தார்களென்றும் விவரிக்கின்றன. முத்துக் குளிப்பதில் பெருந் துறையாகவும்,' நாகரிகஞ் சிறந்த பெரும் பட்டினங்களில் ஒன்றாகவும் விளங்கியிருந்த கொற்கை, கடலுக்கு இறையாகிப் பாழ்பட்ட விடத்தின் சிலபகுதிகளையும்; அப்பகுதிகளுக்கு உட்பட்ட ஆதிச்சநல்லூர், கோட்டாரம், மணப்படை முதலிய இடங்களையும் துருவிச் சோதித்த ஆராய்ச்சியாளர்கள், அவ்விடங்களில் சில பாண்டிய நாணயங்களும்; சிங்கள நாணயங்களும் அகப்பட்டன வென்றும்; அவைகளில் இரும்பு, பொன் முதலிய உலோகப் பொருள்காற் செய்யப்பெற்ற பொருள்கள் சிலதும், இருந்தன வென்றும்; அப்பொருள்களை உபயோகித்த மக்கள், நல்ல நாகரிகம் வாய்ந்தவர்களாகவே இருந்திருக்க வேண்டுமென்றும், கூறுகின்றார்கள். கடற்றுறைப் பட்டினமாகப் புகழ்பெற விளங்கிய கொற்கையில் பாண்டியர்கள் தங்கள் மீன் முத்திரையுள்ள செம்பு, பொன், வெள்ளி நாணயங்களை உற்பத்தி செய்வதற்கு ஓர் இடத்தை அமைத்திருந்தார்கள். அதற்கு "அக்கசாலை" என்று பெயர். இப்பொழுதும் அவ்விடம் அப்பெயருடன் ஒரு கிராமமாக இருக்கிறது. இதுபோலவே அவர்கள் அரண்மனையிருந்த விடத்திற்குக் "கோட்டாரம்" என்ற பெயரும்; நால்வகைப் படைகள் தங்கியிருந்த இடத்திற்கு "மணப்படை" என்றும் பெயர் இட்டிருந்தனர். இவ்விரண்டு இடங்களும் இப்பொழுதும் அப்பெயருடன் சிற்றூர்களாக விளங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆராய்ச்சியாளர்கள் துருவிச் சோதனை செய்த குறைந்ததினும், மிகக் குறைந்ததான இடங்களில்; பழைமையான

கொற்கை நகரம் இருந்ததின் அடையாளமாகப் பாழ்பட்ட கோட்டை, கொத்தளம், அகழ், மதில்கள், மாட கூடங்கள், கோவில்கள், திருக்குளங்கள் ஆகியவைகளின் அறிகுறிகள் உள வென்றும், "மார்க்கபோலோ" "பேரிபிளஸ்" முதலிய மேனாட்டு ஆங்கில அறிஞர்கள் "கோல்கி" என்று கூறும் அழிவுபட்ட விடத்திலேயே இருந்ததென்றும் கூறியிருக்கின்றனர்.

முந்திய கொற்கையும், பிந்திய கொற்கையும் இப்பொழுது திருநெல்வேலி சில்லா பூமி சாத்திர நூலின்படி திருநெல்வேலி சில்லா ஸ்ரீவைகுண்டம் தாலூகா "ஆதிச்சநல்லூர்;" ஏறல், பழைய காயல், புதுக்கோட்டை, சாயர்புரம், தூத்துக்குடி, தட்டப்பாறை" ஆகிய ஊர்களின் நடுவே யுள்ளன.

ஆயின், ஒளருக்த யுகத்துக்கு விளக்குப்போல் விளங்கிய கொற்கை மூதூர், தென்கடல் திறந்ததன் பெருவாயால், விழுங்கப்பட்டபோது, அதனுள்ளிருந்த பிறநாட்டிற் கிடையாத பெருஞ் செல்வங்கள் யாவும் மணலின்கீழ் அகப்பட்டுப் புதையுண்டிருத்தல்வேண்டும். புதையுண்ட விடத்தை வெட்டிப் பார்த்துத் தமது பண்டைப் பெருமையெல்லாம் கண்டு களிக்க வேண்டுமென்ற பேரவா, தமிழ் நாட்டு மக்களின் மனத்தை அலைத்துக்கொண்டு தானிருக்கிறது. அரசாங்கத்தாரின் கருணையிருந்தால் தானே விருப்பம் முற்றுப்பெறும். மேனாட்டு "ஹோமர்," என்ற புலவர், தமது "இலியாது" (Iliad) காவியத்திலே சிறப்பித்த "திராய்" (Troy) நகரத்தைத் தோண்டிப் பார்த்து விட்டது. கிரேக் நாட்டின் இடிந்த பாழான பாகங்களையும்; ரோமாபுரியின் எரிவாய்ப்பட்ட செல்வங்களையும்; ஆயிரம் ஆயிரமான பொருட்செலவில் ஆராய்ந்து பார்த்து அதிசயங்களைக் கண்டு ஆனந்தித்தாய்விட்டது. எஞ்சிய இவ்விடத்தையும் தோண்டிப் பார்க்கத் திருவருளால் காலம் கைகூடுமாயின், தமிழ்நாடும், கொற்கைமாநகரத்தின் இழந்த அரும் பெரும் பாக்கியங்களையெல்லாம் கண் களிக்கக் கண்டு மகிழ்ச்சியடைந்துவிடும்.

தண்டமிழ் பிறந்ததும்; தென்றல் பிறந்ததும்; சந்தனம் தோன்றியதும், முத்துப் பிறந்ததும்; வாணிகம் மேலோங்கி

விளங்கியதும்; தொழிற் சிறப்பு மிக்கதும், இவ்வனைத்திற்கும் தலைமையாகச் சிவபிரானிடத்தும்; முருகவேளிடத்தும், செந்தமிழ் கேட்டுணர்ந்த அகத்தியனார் பொதியமலையும்; நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவஞ்செய்யும் குமரி யெல்லையும் தென்பாண்டி நாடான இத்திருநெல்வேலியிலே யெனின், இதன் பெருமையை நம்மால் அளவிட்டுக் கூற முடியுமோ?

ஊண் பித்தியார்

(சங்ககாலத்து நல்லிசைப் புலமை மெல்லியலார்.)

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்

'ஊண் பித்தியார்' என்று அழைக்கப்பெறும் இந்நல்லிசைப் புலமை மெல்லியலார் பெயர் எட்டுத் தொகையுள் ஒன்றாகிய குறுந்தொகையில், 'ஊன்பித்தி' 'ஊண்பித்தி' 'ஊர்ப்பித்தி' என்றும்; புறநானூற்றில் 'மாற்பித்தியார்' என்றும்; சில புறப்பாட்டு மூலப்பிரதிகளில் 'ஊர்ப்பித்தியார்' என்றும் வழங்கப்படுகிறது. இங்ஙனம் ஒருவர்க்குப் பல திறப்பட்ட பெயர்கள் வழங்க நேர்ந்தது ஏடெழுதுவோரால் நேர்ந்த தவறுதலோ, அன்றி அக்காலத்தில் இவர்க்கு இவ்வாறு பெயர் வழங்கத் தொடங்கியதோ, யாதோ, இன்னதென அறியக் கூடவில்லை. இவரை, நல்லிசைப் புலமை மெல்லியரென்றும்; சங்ககாலத்தவரென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர், இவர் இயற்பெயர் "பித்தியார்" என்பதாம்.

தொன்னூல் உரையாசிரியர்களாக வாய்ந்தவருள் 'செய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம், 'செய்து' என்னும் எச்சம், செய என்னும் எச்சப் பொருட்டாக நின்றது என்பாரும்; பிறவாறு கூறுவாருமாகித் தம்முள் இகலி உரை கண்டார் பலரும், இவர் பாடிய குறுந்தொகைப் பாட்டுள் வரும்—"உரற்கால்யானை

யோடித் துண்டேஞ்சிய'' என்ற ஓர் அடியினையே செய்யுள் வழக்காக யாண்டும் எடுத்துக் காட்டுவர். அன்னோர் காட்டும் அவ்வடியுள்வரும் 'உண்டேஞ்சிய' என்ற சொன்னய உரிமையால் 'ஊண்' என்ற அடைமொழிபெற்று ''ஊண்பித்தியார்'' என வழங்கப்பெற்றார் என்றல் ஓர் யூகமாகும்.

அல்லது கருப்பு நிறமுள்ள யாட்டினை வெள்ளாடு என்றாற் போன்று தங்கணவர் பிரிந்த பெருந்துயரால் ஊணை விலக்கி அலைவுற்றமை காரணமாக ''ஊண்பித்தியார்'' என்றலும் ஒன்று.

மொழி நூல் (பாஷா தத்துவ சாஸ்திரம்) என ஒன்று தனிப்படக் காணற்கு அரிய இக்காலத்து அறியக் கூடியவை இவ்வளவே. நிற்க

இப்பெண்பாற் புலவரது கணவனாக வாய்ந்தார் இல்லறப் பற்றினைவிடுத்து, சோலைகள் சூழ்ந்த மலைப்புறத்தே தவஞ் செய்யச் சென்றனர். அவர் சென்ற நிலைபறியாத இவர், தங் கணவரின் வரவைப் பன்னாள் நோக்கியும் வாராமையால், தங் கொழுநர் தம்மைப்பற்றி நினைந்திலரோ! ஒரோவழி அங்ஙனம் நினைத்தும் மீளற்குவழி வலாமையின் வந்திலரோ! என எண்ணமிட்டார்.

> ''உள்ளார் கொல்லோ! தோழி யுள்ளியும்
> வாய்ப்புணர் வின்மையின் வாரார் கொல்லோ!
> வரற்புகா வருந்திய மாவெருத் திரலை
> யுரற்காலி யானை யொடித்துண் டெஞ்சிய
> யாஅ வரிநிழற் றுஞ்சு
> மாயிருஞ் சோலை மலையிறந் தோரே''
>
> (குறுந்தொகை. 232.)

''கருதார்கொல்! தோழி! கருதியும் (மீளற்காம்) வழி கூடாமையின் வாரார்கொல்? மணல் வழியிற் புகுந்து வருந்திய ஆண்மான், யானை ஒடித்துண்டு குறைந்த யாமரத்தின் செறியாத நிழலிற் றுயிலும் சோலையையுடைய மலையிடைச் சென்றார்'' என்பது கருத்து.

'அருநிழல்' என்னும் பாடம். மா இரு—கரிய பெரிய; அன்றி, மீமிசை யெனனுமாம். மெய்ப்பாடு—பெருமிதம். பயன்—ஆற்றுவித்தல்.

இங்ஙனம் எண்ணமிட்டு, பன்னாள் தம்முறைவிடத்தே காத்திருந்தும் வாராமையினால் இறுதியில் தாமே தம் உரியரைத் தேடிச்சென்று காட்டகத்தை யடைந்து சடைமுடி பாரத்துடன் தவக்கோலம் பூண்டு விளங்கும் அவரைக் கண்டார். 'மலை போன்ற உருவமும், கரிய நிறமும், நீண்ட துதிக்கையும், வலிமையும், கொடிய தன்மையுமுடைய யானை, தவத்தால் மிக்குயர்ந்த தங்கணவற்கு விறகு முதலியவற்றைக் கொணர்ந்து (புறநானூற்று 251 ஆம் செய்யுள் உரை) அளிப்பதைக் கண்டு வியந்தார். முன்பு தம்மை அன்பான சொற்களால் உளப்படுத்தியவர் இவரே அறிந்தார். இவர் கூற்றுகவரும், "இல் வழங்கு மட மயில் பிணிக்குஞ், சொல்வலை வேட்டுவ னாயினன்" (புறம். 252) "மனையின்கண் விளங்கும் மடப்பத்தையுடைய மயிலை, (மடப்பம்—மகளிர் குணங்களிலொன்று; மயில்—மயில் போன்ற சாயலையுடைய மனைவியை) அகப்படுத்திக் கொள்ளும் சொல்லாகிய வலையையுடைய வேட்டைக்காரன்" என்பது மேற்குறித்த செய்யுட்டொடரின் கருத்து. இது பாராட்டத் தகுந்தது. மாற்பித்தியாராகிய இப்பெண்பாற் புலவர், பாலைத் திணையையும்; அதன் புறமாக வாகைத் திணையையும் எடுத்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாகக் குறுந்தொகையுள் 232ஆம் பாட்டும்; புறநானூற்றுள் 251, 252ஆம் பாட்டுகளுமாக மூன்று பாட்டுகள் கிடைத்திருக்கின்றன. தொல்காப்பிய உரையாசிரியர்கள் தாபதவாகைக்கு எடுத்துக் காட்டாக இவர் பாடிய புறப்பாட்டுக்களையெடுத்து ஆட்சி செய்திருக்கின்றனர். தாபதவாகை—பாலைத்திணையின் புறனாய வாகைக்கு உரியது.

இத்தகைய பெண்பாற்புலமையாளர் பாக்களைப் பிற்காலத்தவர் திணை துறைப்படுத்தித் தொகை நூலுட் கொண்டனர்.

திருக்குறளுதலிய நெறிமுறை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L., தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 7. பக்கம் 235.)

பேரின்பத்தை எய்துங் காதலே உலக மக்களுக்கு பெரும் பான்மையான இயல்பாதலின் அறிவுடைய மக்கள் ஐம்பொறி களானும் ஒருங்கு நுகரப்பெறும் சிற்றின்ப நுகர்ச்சியைத் தடுத்து, ஆயிழை யாருடன் கூடி யின்புறும் அறத்தை முதற்கண் ஆற்ருது. தவவொழுக்க நிலைநின்று தலைதடுமாருர். சிற்றின்ப அனுபவத்தில் காணப்படும் மயக்கமும் தியக்கமும் மக்கள் அறிந்து அவைகளை வெறுப்பினுல் நீக்கிய பின்னர் தாம் அவர் களது மனநிலை பேரின்பத்தைப் பெறும் வழியை நோக்கிச் செல்வது இயற்கையேயாகும். இல்லின்கண் கற்புடைய மனைவி யோடிருந்து அறத்தினை புரிதலல்லாது தவநெறியைப் பின்பற்றி ஒருவன் தொடங்குவானேயானுல் வேட்கையெனும் மாசு அத் தவத்தினிடை யடையப் பெறின் அத்தவவொழுக்கமும், அவ் வொழுக்கத்தின் தலைநின்று இறைவன் பாலுண்டான தூய உள்ளமும் என்னுகும்! துறவற மடைந்தாரையும் இல்லறத்தே புகுத்திவிடும் நீரதாகவுடைய இச்சிற்றின்பத்திலே நம்மனதைச் செலுத்தி விடுவதினுல் அதன் சிறுமையும் வெறுமையும் தெளி வாகத் தெளியப்பெற்று இஃது பிறவிப் பெறும் பயனை அடை தற்குரிய கருத்திற்கும் நோக்கத்திற்கும் இணக்கமாய் வேண் டப்படாததென அறிந்து நம்மனம் பரம்பொருளிடை நுகரப் படுமின்பம் குறைபாடில்லாத பேரின்பமெனக் கருதி அதன் பாலே பெரிதும் ஈடுபட்டு நிற்கும். எனவே இச்சிற்றின்ப நிலை பேரின்ப உண்மை நிலையைக் காட்டும் தகைமை வாய்ந்ததெனப் பெற்ரும்.

இதனைக் குறித்தன்றே பொய்யில்புலவர் இன்பமென்பது இன்னதென அறிய வொண்ணுதவர்க்கு பேரின்பத்தின் செம் மையினையும் பெருமையினையும் எடுத்துரைத்து அன்னுரை

பேரின்ப நெறியிலே ஈடுபடச் செய்வது இயலாததெனவோர்ந்து, அகத்தே நிகழும் காமங் கலந்த காதலின்ப ஒழுக்கத்தினையும் அதன் சிறப்பினையும் காமத்துப்பாலில் அடக்கி விளக்கியுள்ளார். காதலொழுக்கத்தைக் கூறவந்த நாயனர் காதலரிருவருக்கும் ஊடலுண்டாவது இயற்கையெனவும் அத்தகைய ஊடலே அவர்களுக்கு உவகையைத் தரத்தக்கதென 'உணலினுமுண்ட தறலினது காமம், புணர்தலி னூடலினிது' என விளக்கிக்கூறி, ஊடலின் தன்மையை 'துனியும் புலவியுமில்லாயிற் காமங் கனியுங் கறுக்காயுமற்று' என வெகு அழகாகக் கூறுவது வியக்கத் தக்கதே. இவ்வாறு காதலரிருவர் ஒருயிரும் ஈருடலுமாய் காதல் மயமாக ஒன்றி வாழ்ந்து பெறக் கூடியப் பேறுகளைப் பெற்று, பின் வாழ்க்கையின் நிலையாமையறிந்து, சிறுநெறி நீக்கிப் பெருநெறி கைப் பெற்றொழுகும் மனப்பான்மையுடையராய் இறைவனது பேரின்பத்தைப் பெற முயலுவர்,

காமஞ் சான்ற கடை கோட்காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

என்பது தொல்காப்பியம்.

'காதற் காமங் காமத்துச் சிறந்தது, விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி புலத்தலிற் சிறந்தது' என்றதினுன் இச் சிற்றின்பம் காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதென நம் தமிழகத்துச் சான்றோர் கூறி யிருத்தலானும், காதலனும் காதலியும் 'சுரும்புணக்கிடந்த நறும்பூஞ் சேக்கையில், கரும்பும் வல்லியும் பெருந்தோள் எழுதி முதிர் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும், கதிர் ஒருங்கிருந்த காட்சிபோல'க் கலந்து மகிழ்ந்து ஒன்றி வாழ்தல் கடமையாகும். இவ்வாறு இல்லறத்தில் நின்று ஒழுக்கத்தில் மேம்பட்டு ஒழுகுவார் 'மறப்பருங் கேண்மையொடு அறப்பரிசாரமும் விருந்து புறந்தரும் பெருந்தண் வாழ்க்கையும்' உடையராய் வாழ்வார். இத்தகைய நல் வாழ்வென மதிக்கப்படும் இல்வாழ்க்கையினை நடாத்துதற்கு பெண் மக்கள்

9

தம் கணவன் மார்களுக்கு உறுதுணையா யிருந்தொழுகும் ஒழுக்கமும், மேற்கொள்ளத் தக்க கடப்பாடுகளும் பலவுள. மாதரார்க்கு உயிரினும் நாணம் போற்றத் தக்கது. 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே' என்று எழுந்த தொல்காப்பிய அடியானும் இவ்வுண்மை வலியுறுத்தப் பெறும். காதல் விருப்பம் முற்றுப் பெறாது மடலூர்வோர் நாணினை முற்றும் இழக்க வேண்டுதலான் அதனைப் பெண் மக்கள் நினைத்தலும் செய்யாரென அகப்பொருட்டுறை விளக்கும் பண்டைத் தமிழ் நூல்களில் பரக்கக் காணலாகும். இதனைக் கண்ணுற்றே நாயனார் பெண் மக்கள் நாணினைப் போற்றி ஒழுகி வாழவேண்டுமெனக் கொண்டு, அவர்களுக்கு மடலேறல் 'கடலன்ன காமமுழந்து மடலேறாப், பெண்ணிற் பெருந்தக்கதில்' என்ற திருக்குறளால் கடியப்பட்டதூம் காண்க.

நாணினும் சிறந்தது கற்பாதலான், கண்ணிற்கு ஒளி போன்று மகளிர்க்கு கற்பு இன்றியமையாதது. குலமகட்குத் தெய்வம் கொழுநனாதால் அவன் சொற் கடங்கி நடப்பதூம், அச்சமும் அன்பும் பெருக அவனுக்கு பணிவிடை செய்வதூம் அறமும் ஆன்ற நோன்புமாதலால், அவர்கள் பிற அறமும் நோன்பும் புரிவது மிகையாகும். மற்றும் அவர்கள் கடவுள் வழிபாட்டினும் கணவர்க்கியற்றும் வழிபாடே தலை சிறந்ததெனக்கருதி பிறிதோர் தெய்வமும் வணங்கக் கடமைப் பட்டாரல்லர்.. இன்முகமும் இனிய சொல்லும் உடையாளாகி கற்பு நெறியினின்றும் வழுவாமல் தன்னைத் தானே காத்து கணவனைப் பேணி பெரும் புகழ் பெருக்கும் தன்மையவரே நல்லொழுக்கம் வாய்ந்த பெண்ணென்று சொல்லப்படுவர். இப்பெண் மக்கள் புகுந்த மரபும் அவரால் நன்மையுறுதலான், இவர்கள் வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களை யறிந்து கடைப் பிடித்தொழுக வேண்டும். 'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல, வில்லாகித் தோன்றாக் கெடும்' என்றதினுன், மனைத் தக்க மாண்புடையாள் தன்னைக் கொண்ட கணவரது வரவினிற்குத் தக செலவு செய்பவளா யிருத்தல்வேண்டும். என்னெனின் துறவறம் யாக்கை நிலைக்கேற்ப செயப்படல் வேண்டுமாறு இல்

லறமும் பொருளளவிற் கேற்ப செயப்படல் வேண்டும். இத்தகைய கற்புடைப் பெண்டிர் பெய்யென்று சொல்ல பெருமழை பெய்யும். தீயும், தெய்வமும் அவர்கள் ஏவின செய்தொழுகும்; இத்தகைமையினை யுடையவர்களிருக்கும் நாட்டினில் வேந்தன் கொற்றம் சிதையாது: வானமும் பொய்யாது; இத்துணைப் பெருமை வாய்ந்த மகளிர் வாழ்க்கைத் துணைக்கு சிறந்ததோர் அணிகலம் நன் மக்களைப் பெறுதலே யாமென 'மங்கலமென்ப மனைமாட்சி மற்றத, னன்கல நன்மக்கட் பேறு' எனவும் 'பெறு மவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த, மக்கட் பேறல்ல பிற' எனவும் திருவள்ளுவர் உணர்ந்து அருளிச் செய்ததனையு மறிக. அன்றியும் புதல்வரைப் பெறுதல் எனும் அதிகாரத்தின்கண் தந்தை மகற்காற்றும் நன்றியை 'தந்தை மகற்காற்று நன்றிய வையத்து, முந்தியிருப்பச் செயல்' என்ற குறளிலும், மகன் தந்தைக் காற்றுமுதவியை 'மகன் தந்தைக் காற்று முதவியிவன் றந்தை, யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்' என்ற குறட் பாவிலும், திருவள்ளுவர் நமக்கு தெள்ளிதில் தெளியப்படுத்தி, எவரெவர் எந்தெந்த நிலையில் நிற்கின்றனரோ அவரவர்கள் தம் தம் கடமையை செவ்வனே செய்து தீர வேண்டுமென பலபடச் சொல்லி மக்களை ஒழுக்க முடையராய் நல்லாறு கடைப் பிடித் தொழுகும்படி செய்விப்பது போற்றத் தக்கது.

இனி குடிமக்கள் வாழ்க்கையும் ஒழுக்கம் மேம்பட அறத்தின்வழி நின்று உலகத்தைப் புரக்கும் செங்கோலரசர்க்குரிய நல்லொழுக்கத்தினைப்பற்றி ஆராய்வோம். பொருள் கூறுவான் தொடங்கிய நாயனார் பொருளீட்டத்திற்குத் துணைக்காரணமாய் நின்ற அரசநீதி கூறவே அடங்குமெனத் துணிந்து அதனையே வற்புறுத்தி இருபத்தைந்து அதிகாரங்களால் கூறுவாராயினர். மன்னனுக்கும் மன்பதைகட்கும் ஒரு தலையான் வேண்டப்படுவனவாகிய கல்வி, கேள்வி, அறிவுடைமை, நல்லாரிணக்கம், சிற்றினஞ் சேராமை, பெரியோரைத் துணைகோடல், காலமறிதல், இடனறிதல் தெரிந்து தெளிதல், ஊக்கமுடைமை முதலியன யாவும் முன்னர் கூறினோம். இனி அரசர்க்கே சிறக்கும் செங்கோன்மை, ஒற்றாடல் முதலியன யாவும் காண்குவம்.

'படைகுடி கூழமைச்சு நட்பரணாறு, முடையா னரச ருளேறு' எனத் திருவள்ளுவர் அருளிச் செய்தவாறு அரசன் அரசு புரிவதற்கு ஆறு அங்கங்களை யுடையவனா யிருத்தல் வேண்டும். அவை முறையே அமைச்சு, அரசன், கூழ், படை, நட்பு, குடி எனப்படும். மற்றும் அரசன் அறனல்லவை நீக்கி அன்பும் அறமுமே யாக்கையாகக் கொண்டு முறைவேண்டினார்க் கும் குறைவேண்டினார்க்கும் காண்டற்கு எளியவனாகவும், கடுஞ் சொல் கூறாதவனாகவும், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற இந்நான்கு இயல்புகளையுடையவனாகவும், நாட்டாரையும், உற்றாரையும், தக்காரையும் மெலியாரையும், பகைவரையும் ஒப்ப நாடி முறைசெய்து காப்பாற்றுகிறவனாகவும், பிறர் துயர் பேணும் பெருமையு முடையவனையும், சிறுமையும் சினமும் செருக்குமிலாதனுயுமிருத்தல் வேண்டும். இஃதொடு நில்லாது மன்பதை காக்கும் மன்னன் செயத்தகும் கருமங்கள் யாவும் முடிக்கும் உபாயத்தை எண்ணித் துணியக் கடவன். 'செய் தக்க வல்ல செயக் கெடுஞ் செய் தக்க, செய்யாமையானுங் கெடும்' என்பது பொய்யா மொழி. இவ்வாறே ஓர் தொழிலை இயற்றுமுன் அரசன் தன் வலியும், வினைவலியும், மாற்றான் வலியும் துணைவலியுமாராய்ந்து, அத்தொழிலைச் செய்யக் கடவன். அவ்வாறு அவ்வரசன் செய்யின் அவனடையாத பொருள் யாதுமில்லையெனக் கூறின் அஃது வெற்றுரை யன்று. இவ்வாறு தொழில்செய்யும் முறைமையான் பகைவரை அஞ்சும் பான்மையில் வைத்து எண்ணிய கருமங்களை யெண்ணி யாங்கு மன உறுதிகொண்டு முடிக்கும் ஆற்றல் வாய்ந்த அரசன் அரசி யல் நடாத்துவதற்கு இன்றியமையாத பொருளை மிகுதியாக உடையவனா யிருத்தல்வேண்டும்.

(தொடரும்.)

திருவாசகத்தே "நமச்சிவாய வாஅழ்க" என்ற அகவல் பாவின் ஆய்வு

திருவாளர். வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியாரவர்கள், காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 11. பக்கம் 412.)

28. வல் அசுரர் ஆகி * மனிதர் ஆய் தேவர் ஆய்—வலிய முருட்டுப் பண்பினை உடைய அசுரர்கள் இனத்தன் ஆகியும், மனிதர்கள் இனத்தன் ஆகியும், தேவர்கள் இனத்தன் ஆகியும்,

அசுரர், மனிதர், தேவர் எனப் பன்மையால் கூறியது அவர்களுள் பல பாகுபாடுகள் உள்ளன ஆகலால். உயர்திணை பற்றியும் ஆம். அசுரர்கள் பிறப்பை, மனிதர்கள் பிறப்பின் சிறந்தது என்றேனும், தேவர்கள் பிறப்பின் இழிந்தது என்றேனும், இவ்விருவகைப் பிறப்புக்களினுள்ளேயே அடக்கிக்கொள்ளுதல் வேண்டும். (அசுரர் என்பது பண்பு பற்றிய பெயர். அது புராண கற்பனை போலும்.) அதன் ஏது என்னை எனின், "மக்கள், தேவர், நரகர்உயர்திணை" என்றார் அன்றி, மக்கள், தேவர், நரகர், அசுரர் உயர்திணை என அசுரர்களை—அரக்கர்களைவிதந்து சொல்லாமையால்.

முனிவர் என்பார், மக்களின் சிறந்து பிரிந்தாரே அன்றி, வேறாக ஒரு பிறப்பு இனத்தர் அல்லர். ஆதலால், திருவாதவூர் அடிகள், "முனிவராய்ப்"பிறந்தேன் என்றார்கள் எனல்பொருத்தம் அன்று. ஸ்ரீவியாசர், ஸ்ரீசுகர் போன்ற பெரும் முனிவர்களின் பிறப்பை முனிவர் பிறப்பு எனலாம் எனின், திருவருள் துணையாலும், நல்வினைப் பயனாலும், பேர் அறிவொடு பிறந்த மக்கள் பிறப்பினர்களே அன்றி, அவர்களும், தனித்த ஒரு பிறப்பு இனத்தர் அல்லர். அன்றி, "முனிவராய்" என்ற பாடம் மோனைத் தொடையாலும் முரண் ஆகின்றது. மேலே நின்ற "கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்" என்ற அவ்விடைச் செருகல் அடியின் பொருட்டு "வல்அசுரர் ஆகி" என்ற இவ்வடியில் "மனிதராய்" என நின்ற சிறந்த பாடத்தினை

"முனிவராய்" எனச் சிறப்பில் வகைப் படுத்தினர் போலும். இவ்வேதுக்களினால், இவ்வடியில் *முனிவராய் என்ற பாடம் பொருத்தம் அன்று. மனிதராய் என்ற பாடமே பொருத்தமும் கவிக் கருத்தும் ஆகும்.

29. செல்லா நின்ற இ தாவர *செங்கமத்துள்—பிறவாகவும் நடைபெறுகின்ற இத்தகைய அசையாமையும் அசைவும் என்றவற்றுள்,

* சங்கமத்துள்—என்ற பாடம் மோனைத் தொடையால் முரண் ஆகின்றது. ஆதலால், அப்பாடம் பொருத்தம் அன்று. செங்கமத்துள்—என்ற பாடமே கவிக்கருத்து ஆகும். "சங்கமம்" வடசொல் திரிபு. ஆதலால், கருடன்—கெருடன் எனவும், கலுழன்—கெலுழன் எனவும், கங்கை—கெங்கை எனவும், உறழ்தல் போல சங்கமம் என்ற மொழியும் செங்கமம் என உறழ்தற் பாலதாம்.

30. எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்—எல்லாவகைப் பிறப்புக்களிலும் பிறந்து பிறந்து வருந்தினேன். எம்முடைய பெருமானே!

"மெய்யே யுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்" என்ற இவ்வடி, இவண், பொருள் இயைபு இன்மையாலும், எதுகைக்கு ஏற்பத் துணை அடி ஒன்று இன்றித் தனித்து நிற்றலாலும், யகர எதுகை அடிகள் ஏழனுள்ளும் இடைச்செருகல் எனக் கழித்தற் பாலதாம்.

31. உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற (32) மெய்யா!—யான் உய்யும் பொருட்டு என் மனத்து இடத்தே ஓம் என்னும் மொழியின் பொருளாய் வீற்று இருக்கின்ற அழிவு இல்லாதவனே!

32. விமலா! விடைப்பாகா! வேதங்கள் (33) ஐயா! என (வேதங்கள், விமலா! விடைப்பாகா! ஐயா! என)—வேதங்களைக் கசடு அறக்கற்ற விழுமியோர்கள், நின் அன்பர் அல்லராய் இயல்பாகவே அழுக்கு (மும்மலம்) இல்லாதவனே! என்றும், ஏறு

ஊர்தி! என்றும், இறைவனே! என்றும் கூறி வாழ்த்தி நின்னைக் காண முயலினும் அவர்களால் காணப்படா வண்ணம்,

வேதங்கள்—ஆகுபெயர். இவ்வகை அன்றி, "ஆரிய வேதங்கள் தலைவோனே என்று அழைப்பவும், அவற்றிற்கு எட்டாமல் இருப்பவன்" எனலும், தூயர் ஆயினார்க்கு அல்லது, ஆரிய நான்மறைகளாலும், அவன் அறியப் படாதவன் எனலும் பொருத்தம் அன்று. ஆரியர்களால் எழுதப்பட்ட புராணங்கள் எல்லாம் பொய்க் கதைகள் என்று புகலும் ஒருவர், "உயிர் இல்லாததும் ஒலித்திராளும் ஆகிய" ஆரியர் தம் வேத நூற்கள் பேசும் பண்பினை உடையன என்பதனை மட்டும் ஏற்றுக்கொண்டு "ஆரியர் தம் வேத நூற்களால், சிவபெருமான் அறியப்படாதவன் எனச் சொல்லி, அவ்வேதங்களையும், அவ்வேதங்களுக்கு உரிய ஆரியர்களையும் பழித்துக்கூறி மகிழா நிற்பின் அவர் தம் நிலைமையும், அவரைப் பின்பற்றிப் பழிப்பார் தம் நிலைமையும் நடு நின்று ஆயும் நல்ல அறிஞர் முன் என்ன ஆகும்? (நகைப்பிற்கு இடனாகும்.) அந்தோ! "உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் வையத்து, அலகையா வைக்கப்படும்" என்ற தேவர் தம் திருமொழியின் குறிப்புப் பொருளைப் போற்றுவான் அவர்களின் செயலை விடுத்து யான் மேல் ஆய்குவென்.

ஆரிய வேதங்கள் இறைவனை அறியாதன ஆயின் ஆரிய வேதங்கட்கு ஒப்பு அல்லது உயர்வு ஆகிய பண்டைய தனித் தமிழ்மறை (வேதம்) என்பது யாது? அம்மறை எந்தக்காலத்தே எவ்விடத்தே எதன் பொருட்டு இறைவனை நேரில் அழைத்துப் பார்த்துப் பேசிற்று? அம்மறையை எந்த எந்த முந்தை ஆசிரியர்கள் தங்களால் ஆக்கப்பட்ட எந்த எந்த நூற்கள் இடையே அல்லது உரைகள் இடையே இது தமிழ்மறை அல்லது சைவர் தமிழ்மறை எனச் சுட்டிச் சிறப்பித்து ஆண்டார்கள்? என்பன விளங்கவில்லை. எவரேனும் அறிந்து இருப்பின் அவர் "தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்." என்ற பொய்யா மொழியைப் போற்றிப் புகலுவர் ஆயின் யானும் அவரைப் பெரிதும் போற்றுவன்.

33. ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே!—விண்ணின் உயர்ந்தவனும், கடலின் ஆழ்ந்தவனும், நிலத்தின் பரந்தவனும் ஆகி அணுவின் நுணுகியவனும் ஆய் இருப்பவனே!

34. வெய்யாய்! தணியாய்! * இயமான்! விமலாஅ!—வெப்பத் தன்மையை உடையவனே! தண்ணிய தன்மையை உடையவனே! யாவருக்கும் தலைவனே! இறைவனே!

இயமான்—யஜமான் என்ற வடசொல் திரிபு. அது இவண் அண்மைவிளி. "இயமான்—னும் விமலா" எனப் (வகையுளிப் படுத்திப்) பாடம்கொண்டால் மோனைத் தொடையால் முரண் ஆகின்றது. மோனைத் தொடை முரணுமைப் பொருட்டு "இயமான்" எனப்பிரித்தும், தளை தட்டாமைப்பொருட்டு "விமலாஅ' என அளபெடை கூட்டியும், இரண்டு விளிப்பெயர்கள் ஆகக் கோடலே பொருத்தமும் கவிக் கருத்தும் ஆம். *இயமானனும் விமலா என வகையுளிப் படுத்தலும், இருபெயர் ஒட்டாகப் பொருள் கொள்ளுதலும் பொருத்தம் அன்று.

35. பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்து அருளி—நின் அடியார்களின் துன்பங்கள் யாவும் சென்று நீங்கும் பொருட்டு நின் அருளினாலே அவர்களைத் தேடிச்சென்று,

"அருளிவந்து" என மொழி மாற்றுக. வந்து—சென்று. போய்அகல—இருபெயர் ஒட்டும் ஆம்.

36. மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்சுடரே!—அவர்கள் மனத்தே ஐயமும் திரிபும் நீங்குதற்கு ஏது ஆன நல்ல ஞான வடிவம் ஆகித் திகழ்கின்ற சுடர் மேனியானே!

"சுடர் மெய்யே" என மொழி மாற்றுக.

37. எ ஞானம் இல்லாதேன் இன்பம் பெருமானே!—எத்துணையும் நல்ல ஞானம் இல்லாதவன் ஆகிய என்னிடத்தும் ஆசிரியனாக வந்து இன்பத்தினை அருளிய பெருமானே!

38. அ ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே!—அடியார்கள் உடைய அறிவு இன்மையைப் போக்குவிக்கும் நல்ல அறிவு வடிவாய் இருப்பவனே!

இறைவன் ஆகமங்கள் வடிவாகவும், ஆசிரியர்கள் வடிவாகவும் நின்று அஞ்ஞானத்தை நீக்குபவன் ஆதலால் அகல்விக்கும் எனப் பிறவினை வாய்பாட்டால் கூறினர்.

39. ஆக்கம் அளவு இறுதி இல்லாய்!—பிறத்தலையும், இத்தனைப் பிராயத்தன் என்ற கால அளவினையும், இறத்தலையும், என்றும் இல்லாதவனே!

39. அனைத்து உலகும் (40) ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்! அருள் தருவாய்! எல்லா உலகங்களையும் படைப்பவனே! படைத்தவற்றைக் காப்பவனே! காத்தவற்றை அழிப்பவனே! அழித்தவற்றை அருள் செய்பவனே!

அடிகள், புணர்ச்சிப் பத்தில், பா, பத்தில் "காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதும்" என்றார்கள். அதனை இவண் நினைக்க.

"போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்' என்ற இவ்வடி எதுகைக்கு ஏற்ப துணை அடி ஒன்று இன்றித் தனித்து நிற்றலால் இடைச் செருகல் ஆம். "ஆக்கம், ஆக்குவாய், போக்குவாய்," என்ற ககர எதுகை அடிகள் மூன்றனுள்ளும், "போக்குவாய்" என்ற இவ்வடி தலையாகு எதுகையே ஆயினும், பொருள் இயைபு இன்மையால் இடைச் செருகல் எனக் கழித்தற்கு உரியதாம்.

41. நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!—பூவில் முற்றும் தங்கிய மணம் போல உலகங்கள் எல்லாம் குறைவின்றித் தங்கி இருக்கின்ற பண்பை உடையவனே! அன்பர் அல்லாதவருக்கு நெடுமையில் இருப்பவனே! அன்பு உடையவருக்கு அண்மையில் இருப்பவனே!

நாற்றத்தின் நேரியாய் என்றது இறைவன் எள்ளின் உள் எண்ணெய்போல எங்கும் நிறைந்தவன் என்னும் ஓர் வழக்குப்படி ஆம். நாற்றத்தின்—நாற்றம்—மணம், அத்து—சாரியை; இன்—உவம உருபு.

42. மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே!—திருப் பெருந்துறையில் குருந்த மாத்து அடியில் யான், நின் புகழைச் சொல்ல இயலாதபடி என் சொல்லையும், நின் அழகின் பெருமையை நினைக்க இயலாதபடி என் நினைவையும் கடந்து என்முன் நின்ற ஆசிரியனே!

இறைவன், வாக்கு மனங்கட்கு எட்டாதவன் என்றபடி.

43. கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போல (44) சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று (சிறந்த அடியார் சிந்தனை உள் நின்று கறந்தபால் கன்னல் ஒடு நெய் கலந்தால் போல தேன் ஊறி) அன்பால் சிறந்த நின் அடியார் மனத்தே நீ தங்கி ஆவின் நின்றும், புதிதாகக் கறந்து காய்ச்சிய பாலில், கரும்பின் சாற்றினால் ஆகிய பாகையும், தேன் நெய்யையும், கலந்தால் அன்ன இனிமையைப் பெருக்கி,

பாலொடு நெய்கலந்து உண்ணல் வழக்கின்று. அவ்வழக்கு இன்மையைப் "பாலொடு தேன் கலந்தற்றே" என்ற தேவர்தம் திருமொழியாலும், "பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து" என்ற ஒளவைப் பெருமாட்டியார் தம் திருமொழியாலும் அறிக. கன்னல்—ஆகுபெயர். ஒடு—எண் ஒடு. நெய்—தேன் நெய்; விகாரம். நிற்க, அடிகள், திரு அம் மானையுள், பா, பதினன்கில் "தேனையும், பாலையும், கன்னலையும் ஒத்து இனிய கோனவன்" என்றும், பா, பதினறில் "தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்" என்றும், திருப்பூவல்லியுள் பா, பதினொன்றில் "பாலும் அமுதமும் தேனுடனும் பராபரமாய்" என்றும் கூறிய குறிப்பை இவண் நினைக்க.

45. பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!—ஒருவர், இழிகுலத்தே பிறந்தவர் ஆயினும், அவர் நினக்கு அன்பு உடையவராய் இருப்பின் அவரை இழி குலத்தார் எனச் சொல்லப் படும் பிறப்பினால் ஆகிய அவருடைய இழிவைக் கெடுக்கும் எமக்குப் பெருமானே!

கள்—சாரியை. பிறப்பு ஆகுபெயர். பிறப்பினால் ஆகிய இழிவைக் கெடுத்தல் ஆவது இழிகுலத்தே பிறந்தவர்கள் எனச்

சொல்லப்படும் திருப்பாணர், திருநந்தனர் முதலிய அடியார்களை உயர்குலத்தே பிறந்தவர்கள் எனச் சொல்லப்படும் பார்ப்பனர்களையும் வணங்கும்படிச் செய்தமையே யாம்.

46. நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்!-வெண்மை, பொன்மை, செம்மை, பசுமை, கருமை, ஆகிய ஐந்து வகை வண்ணங்களாக இருப்பவனே!

"ஐந்து நிறங்கள் உடையாய்" என மொழி மாற்றுக. ஓர்—அசை. இவ்வகை அன்றி, இறைவன் ஐந்து தொழில்களை உடையவன் என்றும், ஐம் பெரும் பூதங்கள் வடிவன் ஆனதால், அவைகளின் நிறங்களை உடையவன் என்றும், ஐந்து திருமுகங்களை உடையவன் ஆனதால், அம்முகங்களின் ஐந்து நிறங்களை உடையவன் என்றும் கூறுவர் சிலர். அவற்றுள் பொருந்துவன கொள்ளுக.

46. விண்ணோர்கள் ஏத்த (47) மறைந்து இருந்தாய்! எம் பெருமான்! (53) விமலா!—தேவர்கள் புகழ்ந்து சொல்லியும், அவர்களால் காணப்படா வண்ணம் கரந்து இருந்தவனே! எம் பெருமானே! விமலனே!

47. வல் வினையேன் தன்னை (48) மறைந்திட மூடிய மாய இருளை (மறைந்திட மூடிய மாயஇருளை வல்வினையேன் தன்னை)—நல்ல அறிவு சிறிதும் தோன்றாதபடி (அதனைக் கெடும்படி) மூடிய மிக்க அறிவு இன்மையை உடையவனும், தீய வினையை உடையவனும் ஆகிய என்னை,

நல்ல அறிவினை வெள்ளை அறிவு என்றும், நல்லது அல்லாத அறிவினைக் கரிய அறிவு என்றும் கூறும் வழக்குப்பற்றி, இருளை அறிவு இன்மை என்றும், அதனால் மூடப்பட்டது நல்ல அறிவு என்றும் கொள்ளுக-மாயஇருள்-இருபெயர் ஒட்டு; ஆகுபெயர்.

49. அறம் பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி—புண்ணியம் பாவம் என்ற இரண்டு அவிழ்த்தற்கு அரிய கயிறுகளினாலே கட்டப்பட்டதும்,

அறம் பாவம் என்றதற்கு நல்வினை, தீவினை என ஆகுபெயரால் கூறினும் பொருந்தும்.

50. புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி— புறத்தே தோலால் மூடப்பட்டதும், உள் இடம் முற்றும் புழுத் தற்கு ஏது ஆன நிணம் ஆகிய அழுக்கால் செறிக்கப் பட்டதும்,

மூடுதல்—வெற்றிடம் இன்றி நிரப்புதல். அடிகள், ஆசைப் பத்துள், பா, இரண்டில் "மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல் போர்த்த குப்பாயம்" என்றும், அடைக்கலப் பத்துள், முதற்பாவில், "புழுக்கள் உடைப் புன்குரம்பை" என் றும் கூறிய குறிப்பை இவண் நினைக்க.

51. மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை—அழுக்கைச் சொரிகின்ற ஒன்பது புழைகளை உடையதும் ஆகிய உடலுள் வாழும்,

குடில்—உடல். ஐ—உருபு—மயக்கம்.

52. மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய— புலன்கள் ஐந்தும் வருந்தும்படி வஞ்சனையைச் செய்தலால்,

"புலன் ஐந்தும் மலங்க" என மொழி மாற்றுக.

53. விலங்கு மனத்தால் விமலா உனக்கு—நல்ல நெறியின் நின்றும் நீங்கிய மனத்தைக் கொண்டு உன்னிடத்தே,

"விமலா" முன் 47-ல் கூட்டப்பட்டது. விலங்குமனம்— வினைத்தொகைத் தொடர்.

54. கலந்த அன்பு ஆகி கசிந்து உள் உருகும்—பொருந்திய அன்பு உடையவன் ஆகி மனம் நெகிழ்ந்து உருகும்,

"உள் கசிந்து உருகும்" என மொழி மாற்றுக.

55. நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி—நன்மை என்பது இல்லாமையால், சிறுமை உடையவன் ஆகிய என்னையும் விரும்பி,

தான்—அசை.

56. நிலம் தன்மேல் வந்து அருளி நீள் கழல்கள் காட்டி— திருப்பெருந்துறையாகிய திருப்பதியின் கண்ணே நின் அருளி னாலே வந்து நின்னுடைய பெருமை பொருந்திய திருவடிகளைக் காட்டி,

"அருளிவந்து" என மொழி மாற்றுக.

காட்டி என்ற வினை எச்சத்தின் 58-ல் சிறந்த என்றபெயர் எச்சத்துச் சிறத்தலொடு முடிக்க. தன்—சாரியை.

57. **நாயின் கடையாய் * நடந்த அடியேற்கு**—அறியாமை யால் நாயினும் கீழாய் ஒழுகிய அடியேன் இடத்து,

* "கிடந்த" என்ற பாடம் மோனைத் தொடையால் முரண் ஆகின்றது. ஆதலால் நடந்த என்ற பாடமே பொருத்தமும் கவிக் கருத்தும் ஆம்.

58. **தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே!**—ஈன்றாளின் அன்பினும் சிறந்த அன்பினை உடைய பண்பினனே!

59. **மாசு அற்ற சோதி! மலர்ந்த மலர் சுடரே!**—குற்றம் இல் லாத ஒளியே! பூத்த பூவின் பொலிவே!

மாசு அற்ற சோதி என்றது சூரியனின் ஒளிபோல் தோன்று தலும் மறைதலும் இன்றியும், சந்திரனின் ஒளிபோல் தேய் தலும் வளர்தலும் இன்றியும், தீயின் ஒளிபோல எழுதலும் தாழ்தலும் இன்றியும், என்றும் ஒருதன்மைத்தாய் உள்ள இறை வனின் ஒளிப் பண்பினைக் குறித்தபடியாம். சோதி—அண்மை விளி.

60. **தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!**—ஔிவண் ணனே! இனிமை பொருந்தியதும், இறத்தலை ஒழிப்பதும் ஆகிய மருந்தே! முத்தி நகரின் முதல்வனே!

அடிகள், புணர்ச்சிப் பத்தின் பா, ஒன்பதில் "பிறவிப் பிணிக்கு ஓர் மருந்தே" என்றார்கள். அக்குறிப்பை இவண் நினைக்க. அமுது—அமிர்தம்; வடசொல் திரிபு. ஏ—விளிஉருபு முன் அடி 12-ல் "தேசன் அடி போற்றி" என்றதன் உரைக் குறிப்பைக் காண்க. தேசன்—நெருப்பு என்ற பொருள்சுட்டும் தேஜ் என்னும் வடசொல் அடியாகப் பிறந்த பெயர். சிவபுரம்— முத்திநகர். முத்தி இடத்தினைப் பௌத்த ஜைனர்களாகிய பிறரும் சிவகதி, சிவபுரம் என்பர்.

61. பாசம் ஆம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!—*உயிர்களைப் பிணித்த புண்ணிய பாவங்கள் ஆகிய கயிறுகளை அறுத்துப் பாதுகாக்கும் தலைவனே!*

"பற்று ஆம் பாசம்" என மொழி மாற்றுக. முன்னும் அடி 49-ல் "அறம் பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி" என்றார்கள் அடிகள். இவண் அக்குறிப்பை நினைக்க.

62. நேச! அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட (நேச! நெஞ்சில் வஞ்சம் கெட அருள் புரிந்து) *அன்பு என்னும் பொருளுக்கு இடமாக இருப்பவனே! அடியார்கள் நெஞ்சு இடத்தே வஞ்சனைத் தோன்றாமைப் பொருட்டு நின்னாலே அருள் செய்து,*

63. பேராது நின்ற பெரும் கருணை பேர் ஆறே!—*அந்நெஞ்சின் நின்றும் நீங்காது நின்ற அன்பாகிய வெள்ளத்துக்குப் பெருமை பொருந்திய அருள் ஆகிய பெரிய ஆறு பொன்றவனே!*

கருணை—அருள். ஆறு என்றதனுக்கு ஏற்ப வெள்ளமும் கருணை என்றதனுக்கு ஏற்ப அன்பும் வருவித்து உருவகம் செய்க.

64. ஆரா அமுதே அளவு இலா பெம்மானே!—*தெய்க்கத் துய்க்கத் தெவிட்டாத இனிமையாய் இருப்பவனே! நெடியன் குறியன் எனச் சுட்டு அளவால் சொல்ல இயலாத பெருமையை உடையவனே!*

நெடியது குறியது எனச் சுட்டிச்சொல்ல இயலாத பெருமை என, பெருமைக்கு அடையாக்கலும் ஆம்.

65. ஓரா தார் உள்ளத்து உள் ஒளிக்கும் ஒளியானே!—*நின் பெருமையை அறியாதார் மனத்து அகத்தே கரந்து நிற்கும் கரவனே!*

ஒளியான்—ஒழிதல் என்ற சொல்லின் திரிபு ஆகிய ஒளிதல் என்னும் தொழில் பெயர் அடியாகப் பிறந்த பெயர். ஒளிதல்—மறைதல்; கரத்தல்.

66. நீராய் உருக்கி! என் ஆர் உயிராய் நின்றானே!—*நின் பெருமையினை அறிந்தார் மனத்தினை நீர் போல் நெகிழச் செய்பவனே! என்னிடத்தே பொருந்திய உயிராக இருப்பவனே!*

உருக்கி—பெயர்; அண்மைவிளி, ஆய்—உவம உருபு—மேல் அடியில் ஓரா தார் என்றதனுல் இவண் (ஓர்ந்தார்) அறிந்தார் என்ற பெயரை வருவித்துக் கொள்ளுக.

67. இன்பம் உம் துன்பம் உம் இல்லானே! உள்ளானே!—என்றும் துன்பம் இல்லாதவனே! இன்பம் உள்ளவனே!

இவ்வடி, எதிர் நிரல் நிறை பொருள்கோள். உம்மைகள்—சாரியைகள். இவ்வகை அன்றி, "இன்பமும் துன்பமும் ஆகிய இரண்டும் இல்லாதவனே!" எனவும், "அவை இரண்டும் உள்ள வனே!" எனவும் உரைத்தல் பொருத்தம் அன்று. உரைப்பின், அவ்வுரை, இறைவன் ஒருகால் துன்பம் உடையவன் என்றும், இன்பம் இல்லாதவன் என்றும் பொருள் தந்து திருச் சைவசித் தாந்த ஆகம நூற்களோடு முரண் ஆம்.

68. யாவையும் ஆம் அல்லையும் ஆம் (69) சோதியனே!—எல்லாப் பொருள்கள் ஆகியும், அப்பொருள்களின் வேறு ஆகியும் ஒளியாய் இருப்பவனே!

69. துன் இருளே! தோன்றுப் பெருமையனே!—செறிந்த இருளாகி இருப்பவனே! நின் திருவருளைப் பெறுதார், தம், கண் புலனுல் காணப்படாத பெருமையை உடையவனே!

70. ஆதியனே! அந்தம் நடு ஆகி அல்லானே!—எல்லாப் பொருள்கள் இடத்தும் முதலாக இருப்பவனே! எல்லாப் பொருள்கள் இடத்தும் கடையும், நடுவும் ஆகியும், அவற்றின் வேறு ஆகியும் இருப்பவனே!

71. ஈர்த்து என்னை ஆள் கொண்ட எந்தை! பெருமானே!—என்னை வலித்து அடிமைகொண்ட இறைவனே! பெருமானே!

"என்னை ஈர்த்து" என மொழி மாற்றுக. எந்தை—இறைவன். முன் அடி பதினொன்றின் உரைக் குறிப்பை நினைக்க.

(தொடரும்.)

தமிழ்ச்செய்திகள்.

சர்மனிதேசத்து பர்லின் (Berlin) நகரில் திருவள்ளுவர் திருநாள்:—பர்லின் நகர், இந்து மாணவர் கழகத்தார் 10-5-37 தேதியில் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடினர். அதுபோது பர்லின் பல்கலைக் கழகத்தின் Ausland-Hoschschule லில் தமிழ்ச்சொற்பொழிவாளராகிய Dr. H. பேதன் (Beythan) அவர்கள் "தமிழ் இலக்கியத்தின் முற்றோற்றம்" என்பது பொருளாக விரிவுரை நிகழ்த்தினர். அதன் பெரும் பகுதி திருக்குறள்பற்றியே இருந்தது.

மதிப்புரை.

கம்பராமாயணசாரம்: அயோத்தியா காண்டம்:-இது அயோத்தியாகாண்டத்தில் கவிநலம் நிரம்பியபாடல்கட்கு இராவ்சாகேப் V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய அகல உரை நூலாகும். முதலியார் அவர்களின் தமிழ்ப்புலமையும், ஆராய்ச்சித்திறனும் தமிழுலகு நன்கு அறியும். ஒவ்வொரு பாடலின் கவிநயமும், பொருட் செறிவும் செவ்விதின் விளக்கப்பெற்றிருக்கின்றது. புலமைமிக்கோரது நன்மதிப்பிற்குரித்தாய இந்நூல் தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்படவேண்டும்.

நல்லதாளில் கவின்பெறப்பதித்து இந்நூலை வெளியிட்ட தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினரின் தமிழ்த்தொண்டு யாவராலும் போற்றுதற்குரியது.

இதன் விலை ரூபாய் 1—6—0; 1—12—0.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	ஈசுவர ஆனி	மலர்
௰௩		௩

உ

திருவாசகத்தே "நமச்சிவாய வாஅழ்க" என்ற அகவல் பாவின் ஆய்வு

திருவாளர். வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியாரவர்கள், காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 2. பக்கம்79.)

72. கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தே!—நுண்ணியதும், பொய் அற்றதும் ஆகிய அறிவைக் கொண்டு அறிவார் உடைய நினைவில் இருப்பவனே!

ஆல்—உருபு மயக்கம். தம்-சாரியை-கருத்து-ஆகுபெயர். ஏ-விளி உருபு *கருத்தின் என்றபாடம் இவ்வடியின் கீழ் "நோக்கரிய நோக்கே" என்ற இடைச்செருகல் அடிக்கு ஏற்பத்திரிக்கப்பட்டது போலும். கருத்தின் என்ற பாடம்—பொருள் இயைபு இன்மையால் பொருத்தம் அன்று. கருத்தே என்ற விளிப்பெயர் பாடமே பொருத்தமும் கவிக் கருத்தும் ஆகும்.

"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுணுக்கே" என்ற இவ்வடி இவண் இடைச்செருகல் ஆம். எதுகைக்கு ஏற்பத்துணை அடி ஒன்று இன்றித் தனித்து நிற்றலானும், பொருள் இயைபு இன்மையானும், "நோக்கரிய, போக்கும், காக்கும்" என்ற ககர எதுகை அடிகள் மூன்றனுள்ளும் இந் "நோக்கரிய" என்ற அடியே இடைச்செருகல் எனக் கழித்தற்பாலதாம்.

73. போக்கும் வரவும் புணர்வும் இலா புண்ணியனே!— ஒரு காலத்தே கெடுதலும், ஒரு காலத்தே ஆதலும், சில காலத்தே இருத்தலும், சொல்லப்படுதல் இல்லாதது ஆகிய (என்றும் அழியாத) புண்ணியத்தை உடையானே!

இறைவன் இயல்பாகவே வினையின் நீங்கினவன் என்றபடி. "சென்று அடையாத திரு உடையான்" என்ற திருமொழியை இவண் நினைக்க. முன் அடி 39ல் குறிக்கப்பட்ட பொருள் மற்றும் இவண் வேண்டாவாம். அவ்வடியின் உரையைக்காண்க.

74. காக்கும் எம் காவலனே! காண்பு அரிய பேர் ஒளியே!— எம்மைக் காக்கும் காவலனாக இருப்பவனே! நின் திருவருளைப் பெறாதார், காணுதற்கு இயலாத பெரிய ஒளியாய் இருப்பவனே!

"எம் காக்கும் காவலனே" என மொழி மாற்றுக.

75. ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா!—முத்தியாகிய ஆற்றின்கண் இன்பம் ஆகிய வெள்ளம் போன்றவனே! யாவருக்கும் மூத்தவனே!

"இறைவன் இன்ப வடிவன்" என்றபடி. இன்ப வெள்ளம் என்றதனுக்கு ஏற்ப முத்தி ஆறு என உருவகம் செய்க. முன் அடி 63ன் உரையைக் காண்க. அத்தா என்றதற்கு அடிகள், புணர்ச்சிப்பத்தின் ஈற்றுப்பாவில் "கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கு எல்லாம் மூப்பாய்" என்றார்கள். அக்குறிப்பை நினைக்க.

மிக்காய் நின்ற (76) தோற்றச்சுடர் ஒளியாய்!—அரி அயர்கள் முன்னே நின் உருவின் அளவினை அவர்களால் அறியப்படா வண்ணம் பெரிய தழல் போலும் உருவாய் நின்ற ஒளியே!

"மிக்குசுடர் தோற்றம் ஆய் நின்ற ஒளியாய்" என மொழி மாற்றுக. சுடர்—தழல்.

76. சொல்லாத நுண் உணர்வாய்!—இவ்வண்ணம், இவ்வுரு எனச் சுட்டிச் சொல்லுதற்கு இயலாத நுண்ணிய உணர்வு வடிவாய் இருப்பவனே!

77. மாற்றம் ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவு ஆம் (78) தேற்றனே!—நின் திருவருளை நாடும் நெறியில் ஐயமும் திரிபும் உற்ற அடியார்கள் முன் வேறுவேறு வடிவன் ஆகிச் சென்று அவ்வவர்களுக்கு ஏற்ற நல்ல அறிவை ஆக்கும் தெள்ளியனே!

வையகம்—ஆகு பெயர். வந்து—சென்று.

78. தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள் (என் சிந்தனை உள் தேற்றத் தெளிவே.)—என் மனத்து அகத்தே தெளிவின் தெளிவாய் இருப்பவனே!

79. ஊற்று ஆன உண்ணார் அமுதே! உடையானே!—ஆறு, கேணி முதலியவற்றின் ஊற்றில் தோன்றியவும், உண்ணுதற்குப்பொருந்தியவும் ஆகிய நீராய் இருப்பவனே! என்னை அடிமையாக உடையவனே!

80. வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப (81) ஆற்றேன்—காலம் கழியக் கழிய பல வேறுபாடுகள் தோன்றுதற்கு ஏது ஆன ஊன் நிறைந்த உடம்பின்கண் இருத்தற்கு வலிமை இல்லாதவன் ஆயினேன். ஆதலால்,

81. எம் ஐயா அரனே ஓம் என்று என்று (ஓம் எம் ஐயா! அரனே என்று என்று)—ஓம் எம் ஐயா! என்றும், ஓம் அரனே! என்றும்,

இறைவனின் திருப்பெயர்களை வணக்கத்தின் பொருட்டுச் சொல்லுந்தோறும், (நினைக்குந் தோறும்) ஓம் என்ற மொழியை ஒவ்வொரு திருப்பெயரின் முன்னே கூட்டிச் சொல்லுதலே (நினைப்பதே) மரபு என்பதனை அறிவிப்பான், என்று என்று

என இருமுறை (அடுக்கிக்) கூறினர். ஆதலால், ஓம் என்ற மொழியை இருவிடத்தும் கூட்டுக. இவ்வகை அன்றி, ஒகாரத்தைப் பிரித்து இடைச் சொல்லாகக் கழிப்பின் என்று என்று என இருமுறை (அடுக்கிக்) கூறிய கூற்று நின்று பயன் இன்மையும், கூறியது கூறலும் ஆம். அன்றிப் பொருள் இயையும் இன்றாம். நிற்க, ஒகாரத்தை விளிக்குறிப்பாகக் கோடலும் பொருத்தம் அன்று.

82. போற்றி புகழ்ந்து இருந்து பொய் கெட்டு மெய் ஆனர்— நின் திருப்பெயர்களை மறவாமல் புகழ்ந்து வாழ்ந்து, அதனல், பொய் அறிவு கெட்டு மெய் அறிவு பெற்றார்—உடைய,

போற்றுதல்—பாதுகாத்தல். இவண் மறத்தலைப் பாது காத்தல். மறத்தலைப் பாதுகாத்தல் ஆவது மறவாது இருத்தல். அப்பொருள் தருதலைச் சீவக சிந்தாமணியுள் நாமகள் இலம்பகத்தே 22-வது பாவிலே "கண் எனக் குவளையும் கட்டல் ஓம்பினர்" என்ற அடியில் "கட்டல் ஓம்பினர்" என்றதற்கு அதன் உரை ஆசிரியர் நச்சினர்க்கு இனியர், "களை பறித்தலைப் பரிகரித்தார்" என்றார். அதனல் ஓம்பினர் என்றதற்குக் "களை பறியாமையை ஓம்பினர்" (பாது காத்தார்) என்றாயிற்று. அதனல் அறிக. ஓம்புதலும், போற்றுதலும், பாதுகாத்தல் என்ற ஒரு பொருள் சுட்டிய பெயர்களாம். புகழ்ந்திருந்து என்றதனை எழுந்திருந்து என்பதுபோல ஒரு சொல்லாகவும் கொள்ளல் ஆம்.

"மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே" என்ற இவ்வடி பொருள் பொருத்தம் உற்று இருப்பினும், இவண், எதுகைக்கு ஏற்பத்துணை அடி ஒன்று இன்றித் தனித்து நிற்றலால் இடைச் செருகல் ஆம். ஆதலால் கழிக்க.

83. கள்ளம் புலம் குரம்பை கட்டு அழிக்க வல்லானே!— வஞ்சனையைச் செய்கின்ற ஐந்து புலன்களை உடைய உடலில் பிறத்தற்கு ஏது. ஆன தீவினையின் வன்மையை அழிக்க வல்லவனே!

குரம்பை—ஆகு பெயர். அடிகள், அடைக்கலப் பத்துள்ளும் புழுக்களுடைப் புன்குரம்பை என்றார்கள் அக்குறிப்பை நினைக்க.

84. நள் இருளில் நட்டம்பயின்று ஆடும் நாதனே!—செறிந்த இருளில் கூத்தினைப் பலகாலும் ஆடும் தலைவனே!

85. தில்லை உள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!—தில்லைத் திருப்பதியின் கண்ணே திருச்சிற்றம்பலத்தே ஆநந்தக்கூத்து ஆடுபவனே! அழகிய பாண்டி நாட்டை ஆட்சியாக உடையவனே!

86. அல்லல் பிறவி * அறுப்பாய் அரனே யேன் (அரனே என் அல்லல் பிறவி அறுப்பாய்)—அரனே! என்னைத் துன்பத்துக்கு ஏது ஆன பிறத்தலின் நின்றும் நீக்கிக் காப்பாய் ஆக.

"அறுப்பானே ஓவென்று" என்ற பாடம் "சொல்லற்கரியானை" என்ற அடி முதல் "பணிந்து" என்ற ஈறுவரை உள்ள நான்கு அடிகளும் தனிவெண்பா என்பதனை அறியாது அதனை இப்பாவின் பகுதியாக நினைத்தவரால் செறிக்கப்பட்ட இடைச்செருகல் ஆம். ஆதலால் அப்பாடம் பொருத்தம் அன்று.

அடி ஒன்று முதல் பதினாறுவரை வாழ்த்தலும், பதினேழு முதல் இருபதுவரை திருவாதவூர் அடிகள், தம் நெஞ்சில் நினைத்த நினைப்பும், இருபத்து ஒன்றுமுதல் எண்பத்து ஆறுவரை இறைவன் மாட்டு இரத்தலும், (வேண்டுதலும்) கூறியபடியாம்.

அடி இருபத்து ஒன்று முதல் இருபத்து ஐந்துவரை "பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்," இருபத்து ஆறு முதல் முப்பதுவரை "எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்" முப்பத்து ஒன்று முதல் எண்பதுவரை "வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப" எண்பத்து ஒன்றில் "ஆற்றேன்" எண்பத்து ஆறில் "அரனே! என் அல்லல் பிறவி அறுப்பாய்" எனக் கூட்டி முடிக்க.

இப்பாவின் கருத்துரை—(அடி 24-ல்) "நின் பெருமை பொருந்திய புகழினைப் (25) புகழ்ந்து சொல்லும் வழியைச்

சிறிதும் அறியாதவன் ஆகிய யான், (30) எல்லாவகைப் பிறப் புக்களிலும் பிறந்து பிறந்து வருந்தினேன். (மேலும்) (80) காலம் கழியக் கழியப் பல வேறுபாடுகள் தோன்றுதற்கு ஏது ஆன ஊன் நிறைந்த உடம்பின்கண் வாழ்தற்கு (81) வலிமை இல்லாதவன் ஆயினேன். (ஆதலால்) (86) அரனே என்னைத் துன்பத்துக்கு ஏது ஆன பிறத்தலின் நின்றும் நீக்கிக்காத்தருள வேண்டும்'' எனத் திருவாதவூர் அடிகள், இறைவன்மாட்டு விண் ணப்பித்தனர் என்று கொள்ளுக.

இப்பா இவ்வளவே—இப்பாவின் உரை முற்றிற்று.

''சொல்லற் கரியானைச் * சொல்லின் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து—சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து'' என்ற இந்நான்கு அடிகளும்

தனிவெண்பா. நூற்பயன் கூறிய பாயிரம் ஆம். இப்படிக் கூறுதலைப் பலசுருதி என்பர் வடமொழியார். இவ்வெண் பாவின் பொருள்—''புகழ்ந்து சொல்லுதற்கு அரியன் ஆகிய சிவபெருமானை ஒருவர் புகழ்ந்துசொல்ல எண்ணின், அவர், அச் சிவபெருமான் உடைய திருவடிக்கண் தம் மனத்தினை நிறுத்தி அந்''நமச்சிவாய வாஅழ்க'' என்ற பாட்டில் சொல்லியபொருளை அறிந்து சொல்லுவார் ஆயின், சிவபுரத்தின் உள்ளார் பலரும் தம்மை எதிர்கொண்டு பணிந்து ஏத்த அவர் அச் சிவபெரு மானின் திருவடியினைச் சென்று அடைவர்'' என்பதாம்.

சிவபுரத்தின் உள்ளார் பணிந்து ஏத்துதலைத் திருச்சேர மான்பெருமாள் நாயனார் தம்மையும், திருச்சுந்தரமூர்த்தி நாயனார் தம்மையும், திருக்கயிலாயத்தில் திரு உபமன்னிய முனிவர் முதலிய பலரும் எத்திப் பணிந்து எதிர் கொண்டமை யால் அறிக.* ''சொல்லித் திருவடிக்கீழ்'' என்றபாடம்பொருள் இயைபு இன்மையால் பொருத்தம் அன்று. சொல்லின் என்ற பாடமே பொருத்தமும் கவிக் கருத்தும் ஆம்.

இப்பா கலிவெண்பா அல்லை என்றதன் ஏதுமேல் வருமாறு.... இச்சொல்லற்கு அரியானை என்ற வெண்பா, திருமுருகாற்றுப்

படையின்கடையில் தனியாகக்குறிக்கப்பட்ட"நற்கீரர் தாமுரைத்த நன் முருகாற்றுப் படையைத், தற்கோல நாடோறும் சாற்றினால்— முற்கோல, மாமுருகன்வந்து மனக்கவலை தீர்த்தருளித் தானினைத்த வெல்லாம் தரும்." என்பது போன்ற நூற்பயன் கூறியபாயிரம் ஆகும். திருவாதவூர் அடிகள், மற்ற பாக்கள் கடையேயும், பதிகங்கள் கடையேயும், திருத்தேவாரங்களை அருளிய ஆசிரியர்கள்போல நூற்பாயிரம் (திருக்கடைக் காப்புக்) கூறியவழக்கு இன்மையால், இச்"சொல்லற்கு அரியானை" என்ற வெண்பா, அடிகளால் ஆக்கப்பட்டது அன்று. அது வேறு எவராலோ ஆக்கப்பட்டது. ஏட்டுப் புத்தகத்தே இந்"நமச்சிவாய வாழ்க" என்ற பாவின் ஈற்றில் இவ்வெண்பா, சேர்த்து எழுதப்பட்டு இருத்தலைக் கண்டவர், இவ்வெண்பாவையும் கூட்டி ஒரு பாவாக நினைத்து இந்"நமச் சிவாய வாஅழ்க" என்ற ("என்" என்னும் ஈறுடு முடிந்த) அகவற் பாவின் ஈற்று "என்" என்ற மொழி முன்"று" என்ற எழுத்தைக் கூட்டி "என்று" என எச்ச வாய் பாடாக்கி இச் "சொல்லற் கரியானை" என்ற வெண்பாவையும் சேர்த்து ஒன்றுபடுத்தி ஒரு பாவாக ஆக்கினர்போலும். ஒன்று படுத்திய தனி வெண்பாவின் ஈற்று வாய் பாட்டினுக்கு ஏற்ப இந்"நமச் சிவாய வாழ்க"என்ற"அகவற்பாவை" உண்மைக்கும், முன் ஆசிரியர்கள் வழக்கிற்கும், மாறாகக் "கலிவெண்பா" எனப் பெயரையும் மாற்றினார்கள். முதலாகப் பெயரை மாற்றியவர்கள், திருத்தணிகைத் திருச் சரவணப் பெருமாள் ஐயர் அவர்களே போலும்.

ஐயர் அவர்கள், தாம் பதிப்பித்த திருவாசகத்தே இந் "நமச் சிவாய வாழ்க" என்ற பாவின் கடையில் "இம்முதற் செய்யுளுக்குப் பெயர், (தமக்குக் கிடைத்த) பல பிரதிகளில் "சிவ புராணத் தகவல்" என்று எழுதப்பட்டிருக்கின்றது." எனக் குறித்தார்கள். அன்றித் தாம் இரு பாக்களையும் ஒரு பாவாக்கிப் பெயரை மாற்றியதற்கு ஏற்ப இலக்கணமும் குறித்தார்கள். ஆதலால், அவர்கள் தான், திருவாசகத்தை முதலாகப் பதிப்பித்தவர்கள் என்றும், அகவற்பா என்ற பெயரைக் கலிவெண்பா என மாற்றியவர்கள் என்றும், யான் நம்புகின்றேன்.

திருக்குறள்—திருவள்ளுவ மாலையுள் "ஆவனவும் ஆகாதன வும் அறிவுடையார், யாவரும் வல்லார் எடுத்து இயம்பத்— தேவர், திருவள்ளுவர் தாமும் செப்பியவே செய்வார், பொருவில் ஒழுக்கம் பூண்டார்." என்ற வெண்பாவினுக்குச் "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்." என்ற தேவர் தம் திருமொழிக்கு ஏற்ப "அறிவு உடையார் யாவரும் ஆவனவும் ஆகாதனவும் ஆகிய விதி விலக்குகளை விதந்து சொல்ல வல்லவர்கள் அன்றிச் சொல்லியபடி ஒழுக வல்லவர் அல்லர். தேவர் திருவள்ளுவர் தாமும் பொருவில் ஒழுக்கம் உடையார் ஆதலால் சொல்லியபடியே செய்வார்." எனச் செவ்விய நெறியில் பொருள் கொள்ளக் கிடந்தும், திருத் தணிகை + ஐயர் அவர்கள், "மக்களுக்கு ஆவனவும், ஆகாதன வும், அறிவுடையர் யாவரும் இனி இதிலிருந்து எடுத்துச்சொல்லு தற்கு வல்லவர் ஆவர் ஆதலால், தேவராகிய திருவள்ளுவராலே சொல்லப்பட்டவற்றையே ஒப்பில்லாத ஒழுக்கத்தை மேற் கொண்டவர் செய்வார்." என்று உண்மைக்கும் பாயிர முறை மைக்கும் மாறுப் பொருள் எழுதினார்கள். (திருக்குறள்— திருநாவலர் தம்பதிப்பு) ஆதலாலும், திருவாசகத்தே "போகம் வேண்டில் வேண்டிலேன்" என்ற பாவில் இடை அடியில் சீர் குறைவு பட்டு இருந்தும், குறைவைக் குறித்துக் காட்டாமலும், நிரைத்துக் கூட்டாமலும் விட்டு இருத்தலாலும், திருவாச கத்தே பல இடங்களில் பிழைகள் செறிந்து இருந்தும், அவை களை எடுத்துக் காட்டாமல் விட்டு இருத்தலாலும் அவர், தம் ஆய்வில் ஆழ்ந்து சூழ்ந்திலர் போலும்.

ஆசிரியர் பெரும்பற்றப் புலியூர் நம்பிகள், தம்மால் ஆக்கப் பட்ட திரு ஆல வாய்த் திருவிளை ஆடல் புராணத்தே "நமச் சிவாய வாழ்க" என்ற முதற் குறிப்பால் இப்பாவைக் குறித் தார்கள். ஆயினும், திருவாதவூர் அடிகள் புராண ஆசிரியரும், பழய திருப்பெருந்துறை புராண ஆசிரியரும் ஆகிய இரு ஆசிரி யர்களும், தங்களால் ஆக்கப்பட்ட புராணங்கள் இடையே இப் பாவை "அகவற்பா" என்றே குறித்தார்கள். அவ்விரு புராண ஆசிரியர்களும் யாப்பு இலக்கணம் அறியாமலே புராணம் செய் தார்கள் என்று சொல்லுதல் பொருத்தம் அன்று.

அவ்விரு புராண ஆசிரியர்கள் காலத்தே "நமச் சிவாய வாழ்க" என்ற இப்பா ஐபம் அற "அகவற்பா" ஆகவே இருந்தது போலும். திருவாசகத்தை முதலாகப் பதிப்பித்த திருத்தணிகை + ஐயர் அவர்களே தம் மனப் போக்கின்படி இவ் வகவல் பாவின் ஈற்றில் நின்ற பாயிரம் ஆகிய "சொல்லற்கு அரியானை" என்ற தனிவெண்பாவைக் கூட்டி அவ்வெண்பாவின் ஈற்றினுக்கு ஏற்ப இவ் வகவல் பாவுக்குக் கலிவெண்பா எனப் பெயர் கூறினார்கள். அவர்கள், நன்கு ஆழ்ந்து சூழாது "கலி வெண்பா" எனக் கூறிய முடிபினை நம்பிய பிறரும் நன்கு ஆழ்ந்து சூழாதவராய் "கலி வெண்பா" எனவே முடிபு கூறினார்கள். மேலே குறிக்கப்பட்ட ஏதுக்களினால், இந் "நமச் சிவாய வாஅழ்க" என்ற பாவைக் கலிவெண்பா எனல் பொருத்தம் அன்று. இப்பா, (இன்றுள்ள தளைக்கு ஏற்ப) முற்றும் வெண் தளையால் நடந்து "என்" என்ற ஈரொடு முடிந்த "நிலை மண்டில ஆசிரியப்பா" எனலே பொருத்தமும் கவிச் கருத்தும் ஆம்.

இவ்வகவல் பாவைக் "கலிவெண்பா எனக் கூறுபவர் கூற்றுக்கு ஏற்ப இப்பாவின் ஈற்று (86) அடியில்" அல்லல் பிறவி அறு என்றவரை நிறுத்திக் கொண்டால் கலி வெண்பாவுக்கு உரிய ஈறு நின்றபடியாம். அவ்வீற்று அடியின் கடைப்பகுதியை இடைச் செருகல் ஆம் எனக் கழிக்க. அப்படிக் கழிப்பினும், "சொல்லற் கரியானை" என்ற நான்கு அடிகளும், நூற்பாயிரம் ஆகிய தனி வெண்பாவாம். ஆயினும் யான் மேலே காட்டிய ஏதுக்களின்படி இந் நமச் சிவாய வாஅழ்க என்ற பாவை (இன்றுள்ள தளைக்கு ஏற்ப) முற்றும் வெண் தளையால் நடந்து "என்" என்னும் ஈரொடு முடிந்த "நிலை மண்டில அகவற்பா" எனலே உண்மையானதும், பழமையானதும் ஆகிய பெயர் என்பது என் முடிபும் துணிபும் ஆம். வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம், தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம், ஒரும் வையத்தியற்கை" என்ற சீவக சிந்தாமணியார் திருமொழியை அறிந்த தமிழ் உலகு இவ்வாய்வினை நடு நின்று ஆய்ந்து தக்கது ஒன்றனை எடுத்துக் காட்டும் என்ற நம்பிக்கையால் இவ்வாய்வினை யான் வெளியிடலை விரும்பினேன்.

இவ்வகவல் பாவைத் தம் மயக்கத்தால் முதலாகக் "கலி வெண்பா" எனப் பெயரை மாற்றிக் கூறிய திருத்தணிகை ஐயர் அவர்களே, இப்பாவின் இடையே பலஇடங்களில் அகவல் பாவிற்கு உரிய இயல் தளைகளை எழுத்துக்களைக் கூட்டியும், மாற்றியும் வெண்தளையாகச் செய்து இருத்தலும் கூடும். அவைகளை இன்று ஆய்ந்து முற்றும் களைய முயலுதல் இயலாமையே ஆயினும், தட்டலும், மாற்றலும் செய்யப்பட்ட இடங்களுள் பலவற்றை நடு நின்று ஆயும் நல்ல அறிஞர் என்றும் அறிவர்.

இப்பாவிடையே என்னால் குறிக்கப்பட்ட திருத்தங்களைப் பற்றியும், உரையிடையே குறிக்கப்பட்ட பொருள் இயைபைப் பற்றியும், தங்கள் எண்ணத்தினை வெளியிட விரும்பும் நல்ல அறிஞர்கள், வன் சொல் கொண்டு வரையார்கள் என யான் நம்புகின்றேன். அவர்கள், "ஆக்கமும் கேடும் அதனால் வருதலால், காத்து ஓம்பல் சொல்லின்கண் சோர்வு." என்ற பொய்யா மொழியைப் போற்றி வாழ்பவர்கள் ஆதலால், அவர்களின் நன் மொழியை யான் பொன்னே போல் போற்றுவன். அல்லாதவர்கள், எவ்வகையால் எத்துணை வேண்டினும், இன்சொல் கொண்டு எழுத எண்ணார்கள். அவர்கள், "இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" என்ற மெய்ம் மொழிக்கு மெய்யராய் வாழ்பவர்கள் ஆதலால் யான், நலத்தின் கண் நாரின்மை தோன்றின் அவனைக், குலத்தின்கண் ஐயப் படும்," என்றும் "ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய, வழுக்கியும் வாயாற்சொலல்," என்றும் அருளிய தேவர்தம் திரு மொழிகளைப் போற்றுவான், அவர்களின் துன்ப மொழியைத் தூற்றுதலும் செய்யேன்.

நிழலின் பெருமை அன்ன பேர் அறிஞர் தம் உரையின் பெருமையை அறிதற்கு வெய்யலின் சிறுமை என்ன அமையும் என யானும் இச்சிற்றுரையினை எழுதினேன்.

"அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு."

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல்.

இவ் வாய்வு உரை முற்றிற்று.

வணக்கம் திருவாதவூரர்தம் திருவடிகட்கே.

அடியேன் கருத்து.

முத்து. சு. மாணிக்கவாசகன், ஆரணி.

அடியேன் திருவாசகத்தில் "முந்தை வினைமுழுதும் மோய வுரைப்பன் யான்" என்பதில் உள்ள 'மோய' என்பது 'முடிய' என்னுஞ் சொல்லின் மரூஉவாகும். முடிய என்பது மோய என மரூஉதல் இயல்பு. பதிற்றுப்பத்து 22-ல் மூயின, 42-ல் மூய என வந்துளது. "பரணர்" 216-ம் பக்கம் பார்க்க. முகவாய்-மோவாய், தொகுப்பு—தோப்பு, பகுதி—பாதி, விடுதி—வீதி, உவலை—ஓலை, புகுந்து—போந்து, அருந்து—ஆர்ந்து, நிகளம்—நீளம், நிகர்—நேர், தவறு—தாறு, நெருநற்று—நேற்று, என்பன போல்வன இங்கு நோக்கத் தக்கன. முடிய, மூய, மோய, என்பன ஒருபொருளன. முந்தை என்றதற்கு, மோய என்பது மோனையாய்ப் பொருந்துவது கருதற்பாலது. யான் முந்தை வினை முழுதும் முடியச் சிவபுராணந்தன்னை உரைப்பன் எனச் செம்பொருள் கொள்வதே சிறந்தது. இஃது அடியேன் கருத்தாகும். இக்கருத்தை அறிவிக்கத் தூண்டியது நம்பொழி வின் (துணர் கஉ. மலர் ம. பக்கம் 380ல் உள்ள) செய்தியே. இக்கருத்துப் பொருந்துமேற் கொள்ளுக. இன்றேல் தள்ளுக. அடியேன் பாட்டுக்கு அடியேன் பொருள் தவறுதல் வியப்பே.

திருக்குறளுதலிய நெறிமுறை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L., தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 2. பக்கம் 68.)

அரசற்கு தீதின்றி வரும் பொருளை எடுத்துரைக்க வந்த நாயனர் 'உறுபொருளு முல்கு பொருளுந்தன் றொன்னார்த், தெறுபொருளும் வேந்தன் பொருள்' எனக் கூறலுற்றார். போர் வயிற்சென்று பொருளீட்டுதல் அரசற்குரிய முறையெனவும்

இக் குறட்பா தெளியப் படுத்துவதால், அரசர்க்கு ஆக்கம் தருவது அறப்போரேயன்றி மறப்போரன்று. அரசன் சான்றோர் பழிக்கும் வினையினைச் செய்யாது அறப்போரிலே பெறும் பொருளைச் சேர்த்தல்வேண்டும். அவ்வாறில்லாது மறப்போரினில் பெறப்பட்ட பொருளெல்லாம் பச்சை மட்கலத்தே நீர் நிறைத்து வைத்ததுபோன்று நில்லாதழியுமென தெய்வப் புலவர் 'சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட், கலத்துணீர் பெய்திரீஇ யற்று' என விளங்க வைத்தது அறியத் தக்கது. அறப் போரினையியற்றும் மன்னன் மாற்றரசரோடு போர் செய்தல் பேராண்மையானும் அம்மாற்றரசர் வலியிழந்து தாழ்வு உற்றாரெனில் அதுபோது பெருந் தன்மையுடையனாய் அவர் மீது இரக்கமும் அன்புங்கொண்டு அருளொழுகு கண்ணும் அறங்கிடந்த நெஞ்சு முடையவராயிருத்தல்வேண்டும். இஃது அரசர்க்குரிய ஆண்மைக்கு அழகாகும். இதனை நாயனார் 'பேராண்மையென்ப தறுகணொன் றுற்றக்கா, லூராண்மை மற்றதனெஃகு', என அருளிச் செய்தார். எனவே அறப்போரியற்றும் அரசன் பகைவர்மேற் படையெடுத்து போர் செய்யத் தொடங்குமுன் மாற்றாரது வலியும் இடமும் காலமுமறிந்து போரில் முற்படல்வேண்டும். ஞால முழுவதையும் கைப் பற்றக் கருதும் மன்னர் காலம் கருதியிருப்பர். ஆகவே இவர்கள் பகைமன்னர்களைப் போரில் புறங்கண்டு, வெற்றி கொள்ள விரும்புவாராகில் தத்தந்த இடனறிந்து போர் செய்தல் வேண்டும். அவ்வாறு இடந்தவறி செல்லத் தகாத இடத்தில் சென்று படையிலும் பலத்திலும் மிகக் குறைந்த பகை மன்னர்பால் செல்லும் பெருவலிகொண்ட அரசரதுபடையும் இடருற்று தோல்வியுறும். இதனை

(1) நெடும் புனலுள் வெல்லுமுதலை யடும்புனலி
னீங்கின் அதனைப் பிற

(2) காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு

என உவமை முகத்தால் உலகப் பொருள்களின் உண்மையினை யெடுத்துக் காட்டும் குறட்பாக்களான் மிக அழகுபட பெரு

நாவலர் அருளியது அறியத்தக்கது. மற்றும் இடனறிந்து போர் செய்வதுமல்லாமல், வெற்றி வேட்கையுடைய அரசர்கள், பகைவர்க்கு வலிகுன்றியகாலமும் தனக்கு வலிய காலமுமறிந்து நீரும் உணவுங் கிடைத்தற் குரிய காலத்தில் போர் செய்தல் வேண்டுமென 'பகல் வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல் லும், வேந்தர்க்கு வேண்டும்பொழுது' என்ற குறட்பாவால் திருவள்ளுவர் அறிவிக்கின்றதை உற்று நோக்குக. கூர்ந்து நோக்குங்கால் மன்னர்களுக்குப் போரினில் வெற்றி தருவது கூரிய வேலன்று அவனது பெரும் படையுமன்று, பின்னர் யாதெனின் அவனது நீதி தவறு செங்கோல் ஆட்சியே. இந்த உண்மையினை 'வேலன்று வென்றி தருவது மன்னவன், கோலதூஉங் கோடாதெனின்' என்ற குறட்பாநன்குணர்த்தும்; அந்தணரது நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நிற்கும் மன்னவனது செங்கோலை நோக்கி குடிகள் வாழுமாதலான், அரசன் குற்றம் ஆய்ந்துணர்ந்து குடிகளிடத்தும் நடுவு நிலைமை பொருந்தி செங் கோலோச்சல் வேண்டும். இதனுண்மை 'ஓர்ந்து கண்ணோடா திறை புரிந்தியார் மாட்டுந், தேர்ந்து செய்வஃதேமுறை' என்ற குறட்பா விளக்குதல் காண்க. குடிகளிடத்தே நடுவு நிலைமை யினின்று ஒழுகும் அரசன் குடி புறங்காத்தோம்பிக் குற்றங் கடிதலும் வேண்டும். 'தண்டமுங் கருணை யென்றறி வாயே' என்பது கைவல்லியம். இத்தகைமையாய் தீதின்றிக் குடிகளைக் காக்கும் அரசன் குடிகளினால் இறைவனெனப் பெரிதும் பாராட் டப்படுவன்; உழவர் களையெடுப்பதாக பைங்கூழ் வளம் பெற்று வளருதல் போன்று நாட்டின் நலம் சிறக்க மன்னர்கள் குற்றங் கடிதலைக் கைக் கொளல்வேண்டும். கொலையினாலே கொடியவரை மன்னன் தண்டிக்காத இடத்துப் புல்லுக்களைக்கு அஞ்சுகின்ற பயிர் போன்று குடிமக்கள் பல அல்லலுற்று துன் பப்படுவர். இதனை திருவள்ளுவர் 'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடுநேர்' என எடுத் துரைப்பது கருதத்தக்கது.

கொடுங் குற்றமியற்றும் கொடியாரையும் அவர் செய்யும் குறும்பையும் அரசன் ஒற்றரால் உணரவேண்டியதால் ஒற்

ரூடல் அரசற்கு இன்றியமையாததாகும். ஒற்றரை ஆளாத மன்னனுக்கு கொற்றம் இல்லையென்பது 'ஒற்றனொற்றிப் பொருடெரியா மன்னவன், கொற்றங் கொளக் கிடந்ததில்' என்ற குறளால் விளங்கும். அதனால் அறத்தைப் போற்றும் அறிவுடைய அரசன் தன்னாட்டினிலே நிகழக் கூடிய இயக்கமும் தியக்கமும் வயக்கமாய்த் தெரிந்து உணர்ந்துபவராகிய ஒற்றரை அமைத்துப் பேணுவர். அரசனுக்குப் பல்வகைத் தொழிலால் காரியமியற்றுபவரையும், சுற்றியிருக்கும் சுற்றத்தாரையும் வேண்டப்படாத பகைவரையும் ஆய்ந்து அவரது தன்மை குணம், செயல் முதலியன அவ்வப்போது அரசனுக்கு யாவருமறியாவண்ணம் அறிவுறுத்தும் தொழிலையுடையவர்தாம் ஒற்றரென்று ஒற்றரின் தொழிலை திருவள்ளுவர் 'வினை செய்வார் தஞ்சுற்றம் வேண்டாதாரென்றாங், கனைவரையு மாராய்வ தொற்று' என உற்றறிந் துணர்த்திபது அறியத் தக்கது. மற்றும் ஒற்றர் கூறும் கூற்று உண்மையாவெனத் தெரிந்து அதன்படி பின் அரசியல் மேன்மைக்காக நடக்க வேண்டியவைகளைச்செய்தற்கு ஒற்றர் தங்களை ஒற்றறிஞப்தலும் அரசர்க்குரிய கடனாகும். இதனை 'ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ ரொற்றினா லொற்றிக் கொளல்' என முதற் பாவலரால் உணர்த்தப்பட்டது பாராட்டற் குரியது. மற்றும் திருவள்ளுவர் அறிவுடை அரசன் மெய்ம்மை வெளிப்பட ஒற்றரை எவ்வாறு ஆளவேண்டிய முறைமையினையும் 'ஒற்றொற்றுணராமையாள்கவுடன், மூவர், சொற்றொக்க தேறப்படும்' என்ற பொய்யா மொழியால் அறைதலுற்றார்.

முறை செய்து அறமும் செலுத்தி குடிகளையோம்பும் மன்னன் அவர்களை வருத்தாது அவர்களிடமிருந்து கிடைக்கப் பெறும் இறைப் பொருளைப் பெறுதல் வேண்டுமென அற நூல் கூறுநிற்கும். இவ்வாறில்லாது குடிகளின் மனம் நொந்து துன்பத்தால் பெறப்படும் இறைப்பொருளே மன்னனுக்கு பெருங் கேடு விளைவிப்பதாகும். 'அல்லற் பட்டாற்று தழுத கண்ணீரன்றே, செல்வத்தைத் தேய்க்கும்படை' என்பது தமிழ்மறை. கண்ணகல் ஞாலத்தில் வாழுமுயிர்கள் மழையின்மையால் எவ்

வாறு துன்புறுமோ அவ்வாறே அளியானது சிறிதுமில்லாது ஆளும் வேந்தனது நாட்டிலுள்ள குடி துன்புறும். உயிர்களெல்லாம் மழையினை நோக்கி வாழுமென்றாலும், மழையாலாகும் உணவுப் பொருளிருந்தும், மன்னன் நீதியில்லாதவிடத்துப்பயன் ஒரு சிறிதுமிலவே. அத்தகைய நாடு கடும்புலி வாழும் காடே. ஆகவே குடிகளையோம்பிக்காக்கும் மன்னனைக்காப்பது அவனது செங்கோலே யெனப் பெற்றாம். இச்செங்கோன்மை மன்னர்களுக்கு இல்லையாயின் உலகினைக் காக்கும் அவனது ஒளி இல்லையாயிற்று. 'மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல், மன்னாவா மன்னர்க்கொளி'.* என்ற குறட்பா ஈங்கு கருதத் தக்கது, இவ்வொளி அவன்பால் இல்லையாயின் அம்மன்னனைக் குடிகள் இறைவனுகக் கருதி ஒழுகார். குடிகளையோம்பி உலகம் காக்கும் வேந்தனை குடிகள் 'இவர் இளையர்' என்றது போன்ற சிறு சொற்களையும் உளையக் கூறாது அவர் பாலிருக்கின்ற ஒளியைக் கருதி போற்றி ஒழுகவேண்டுமென்பதை 'இளையரின முறைய ரென்றிகழார் நின்ற, வொளியோடொழுகப்படும்' என்ற குறளால் திருவள்ளுவர் எடுத்துரைத்ததால், வேந்தன் குடிகளிடத்து நடந்து கொள்ளும் ஒழுக்கமும், குடிகள் வேந்தன்பால் நடந்து கொள்ளும் ஒழுக்கமும் அறியலாயிற்று.

இனி, செங்கோல் வளைதலுறாது அரசியல் நடாத்தும் அரசற்கும் அவ்வரசற்கு அருந்துணையாயிருக்கும் அமைச்சருக்கும் இன்றியமையாத வினைத்திட்பம், வினைத்தூய்மை, அவையறிதல் அவையஞ்சாமை, குறிப்பறிதல், தூது, மன்னரைச் சேர்ந்தொழுகல் முதலிய ஒழுக்கங்களைச்சிறிது ஆராய்வோம். அரசற்கு அமைச்சர் அவயவம் என்றருளினர் அறிவு நூலுடையார். கூர்த்த மதிவளம் மிக்குடையராய் அரசற்கு அறமும் நீதியும் ஆக்கமும்கூறி திண்ணிய நெஞ்சத்தோடு விழுத்தகு மொழிகளை பேசும் திறனுடையராய்த் திகழ்பவரே அமைச்சராதற்குரியர். மதிநுட்பம் நூலோடுடையராகிய அமைச்சர் தீநெறியிற் படரா

---

* 'உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி,
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்'—சீவக சிந்தாமணி.

உள்ளத்தராய் நன்னெறியுற்று அரசரது செங்கோல் வழுவா திருக்க அவன் நலம் நாடி அவன் மனத்தை அறவழியில் திருப்பி என்ஞான்றும் நல்லறமே இயற்றுமாறு ஊக்கியும், அவன்மனம் தீயவழியிற் சென்றுழி அவ்வரசற்குப் பலபடச்சொல்லி அவ் வண்ணம் அவனதுமனம் போகவொண்ணுதே தடுத்தும் அவன் றன் இசை மாற்றியும் அவனைப் பொதுவறப் புரக்கும் அற நெறிச் செல்வராகவும் அருளுடைச் செல்வராகவும் திருத்தி வழிப்படுத்தி அறங் காப்பார்.

இத்தகைய அமைச்சருக்குரிய அருங் குணங்களில் சிறப்பு வகையான் முதன்மைபெற்றது சொல்வன்மை. சொல்லென்பது யாதெனின் அஃது 'கேட்டார்ப் பிணிக்குந்தகையவாய்க் கேளா ரும், வேட்ப மொழிவதாஞ் சொல்' என்றார் திருவள்ளுவப் பெருந்தகையார்; இச்சொல்லால் ஆக்கமும் கேடும் வருதலான் நாநலமென்ற நலனுடைமை அமைச்சருக்கு இன்றியமையாதது; அமைச்சர், சொல் வன்மை வாய்க்கப்பெற்று சாற்றும் மாற்றத் தினடைதெரிந்து அரசவையின் குறிப்புநோக்கி அவையகத்தே அஞ்சாது கூறும் பான்மையினை யுடையரா யிருத்தல் வேண்டும். மற்றும் பேசுந்திறமையான் அமைச்சர், வருத்து வோரையும் வருந்துவோரையும் மகிழ்வித்தலில் வல்லராயிருத் தல்வேண்டும். இத்தகையாரை வெல்லுதல் யாவர்க்குமரிதெ‌ன 'சொலல் வல்லன் சோர்வில னஞ்சா னவனை, யிகல் வெல்லல் யார்க்கு மரிது' என்ற குறட்பா விளங்க வைக்கும், இவ்வாறு பேசுந்திறன்வாய்ந்த அமைச்சர்கள் அரசனைச்சூழ்ந்து அரசியல் நடாத்துங்காலை போர் முதலியவை நேர்ந்துழி, தம் பகைவர்க் குத்துணையாயினாரை அவரிடமிருந்து பிரித்து விடுதலினும், தம் பக்கல் சார்ந்தாரை பொருள் கொடுத்துதவியும், மகிழ்விக்கும் இனிய மொழிகளை அமைபமறிந்துரைத்து அவரைப் பேணிக் கொள்ளுதலினும், தம்மைவிட்டுப் பிரிந்தாரை மீண்டும் தம்மிடம் பொருந்தும்படி கருவியும் காலமுமறிந்து செய்தலினும் கைபோ யவர்களாதல் வேண்டும். இதனை 'பிரித்தலும் பேணிக் கொள லும் பிரிந்தார்ப், பொருத்தலும் வல்ல தமைச்சு', என்ற குறட் பாவில் நாயனார் விளங்க வைத்தலை நோக்குக. இவ்வாறியற்றும்

தொழிலில் அமைச்சர், சான்றோர் பழிக்கும், புகழொடு நன்றி பயவா வினைகளைச் செய்யாது உண்மை நெறியில் தவறுதொழு கல்வேண்டும். மேலும் மனம் தெளிந்து செய்வதாகத் துணிந்த தொழிலிடத்து அஃது முடித்தற்குளதாகும் முயற்சியையும், அதற்கு வரும் இடையூற்றினை நீக்கி முடித்தாலெய்தும் பயனும் சீர்தூக்கிப் பார்த்து, 'சூழ்ச்சி முடிவு துணிவெய்தலத் துணிவு, தாழ்ச்சியுட் டங்குதறீது' எனத் தேர்ந்து பின்னிடுதலும் தாமதமுமின்றி, 'பொருள் கருவிகாலம் வினையிட னைந்து மிருடீர வெண்ணி' இவ்வமைச்சர்கள் எடுத்த தொழிலை துணிவுடன் செய்யக் கடவர்.

அறமுதலிய நாற்பயன்களையும் விளங்க அரசனுக்குச் செவியறிவுறுக்கும் அமைச்சர், தம்மை அரசனுக்கு அடிமையாக்கிக் கொள்ள முற்பட்டில்லாராய் மனதைத் திட்பமும் செப்பமுமுடையராய் அரசரைவிட்டு மிக நீங்காமலும் அவரிடம் மிக நெருங்காமலும் தீக்காய்வார் போன்றொழுகக் கடவர். மற்றும் அமைச்சர், தந்நலம் மறந்து, மன்னரால் விரும்பப்பட்டவைகளைத் தாம் விரும்பாது அவரது சுகமொன்றினையே மதித்து ஆங்கே இறந்த சிந்தனையுடையரா யிருத்தல்வேண்டும். 'மன்னர் விழைப விழையாமை மன்னரான், மன்னிய வாக்கந்தரும்' என்பது பொதுமறை. அரசரது முன்னிலையில் அமைச்சன் தன் அண்மையிலிருப்பாரது செவியிலே ஒன்றைச் சொல்லுதலையும், பிறர் முகநோக்கி நகையாடுதலையும் நீக்கி ஒழுகக் கடவரென்று தெய்வப்புலவர் 'செவிச் சொல்லுஞ் சேர்ந்த நகையுமவித் தொழுகல், லான்ற பெரியா ரகத்து' என்ற வாயுறை வாழ்த்தால் விளக்கியுள்ளார். அரசன் நமக்கு நெடுநாட்ப் பழக்க முடையனுதலின், பண்பல்ல செய்யின் அம்மன்னன் பொறுப்பன் எனவும் அமைச்சர் கருதாதிருத்தல்வேண்டும். ஏனெனின், இவ்வுரிமை அமைச்சருக்கு பின்னர் கேடுவிளைவிக்குமாதலான், இஃதுபற்றியன்றே நாயனர் 'பழையமெனக் கருதிப் பண்பல்ல செய்யுங், கெழுதகைமை கேடுதரும்' என்றுணர்த்தியது உளங்கொளற்பாலது. (தொடரும்.)

இன்றும் அன்றும்

திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் M.A.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைநகர்

இன்று இரண்டு பெண்கள் அழுத கண்ணுஞ் சிந்தியமூக்குமாக நிற்கிறார்கள். எதிரே மதியத்தின் வெண்ணிலவு தோன்றுகிறது. அண்ணாந்து நோக்கி வெண்ணிலாக் காணும் அவர்கள் இன்று பௌர்ணிமை என அறிகிறார்கள். அறிந்தவுடன் கண்ணீர் இன்னும் பெருகுகிறது. அருகே யிருக்கும் புலவர் "கலங்காதீர், மகளீர்" என்கிறார். உள்ளடக்கிய அவலத்தொடு அந்நங்கையர் ஒன்று நவில்கிறார்கள். அது இது:—"சென்ற உவவு நாளில் எம் தந்தையும் இருந்தார்; எங்கள் நாடும் எங்களதாய் இருந்தது. இந்நாளிலோ அந்தோ! எந்தையும் இல்லேம்; எம் நாடும் பிறர் கொண்டார்!" அற்றை நாளிற்கும் இற்றை நாளிற்கும் உள்ள வேறுபாடு என்னே என்று எண்ணும் புலவர் பெருமானும் நீர் வார் கண்ணினராய் அடியெடுத்து வைக்க மாட்டாது நின்கின்றார். பின் அப்பெண்டிரைத் தேற்றியழைத்துச் செல்கின்றார். வழியில், சில உப்பு வண்டிகள் உமணராற் செலுத்தப்பட்டு வருகின்றன. புலவரும் இருமகளிரும் ஒருசார் ஒதுங்கி நிற்கின்றனர். நின்றவண்ணம் வண்டியை எண்ணுகிறார்கள் வனிதைய ரிருவரும். புலவர் இரங்குகிறார்: பாவம்! இப்பெண்களின் முன்னைய நிலை எது? இப்போதைய நிலை எது? ஆ! அன்று, தமது தந்தையின் வலியினை யறியாது, மாற்றார் சிலர் துணைவலியும் இடவலியுமில்லாதே தமது தந்தையொடு பொருவதற்கெனத் தொலையில் வருங்கால், மாடத்தின் மீதிருந்து அவரது அறியாமைக்கு இரங்கி அவர்தம் எண்ணினைக் கணக்கிட்ட இவ்விரு மகளிரும், இன்று ஈத்திலைக் குப்பையின்மீது நின்று உப்பு வண்டிகளை எண்ணலாயிற்றே! அன்று பெரிய மாடமாளிகை கூடகோபுரங்களில் இன்னகையொடு வாழ்ந்த இவர், இன்று சிறிய இல்லின்கண் பீர்க்கங்காய் காய்த்த இடத்திலும் சுரை படர்ந்த இடத்திலும் சற்றுமுன் இன்னலொடு தங்கநேர்ந்ததே!!

இவற்றையெல்லாம் கண்டுவைத்தும் நான் இன்னும் உயிருடன் உள்ளேனே!!! தனக்கேயுரிய பறம்புநாட்டு முந்நூறுஊர்களையும் பரிசிலர்க்கு ஈந்துவிட்ட என் நண்பன் பாரியின் புதல்வியர் இவ்விருவர்க்கும் ஒருரும் இல்லையே! ஆ. ஆ!! பாரியாகினும் உளனு!!! அவனையும் வஞ்சித்தனரே!" இன்னணம் அலமரும் அப்புலவர் கபிலரைவிட்டு இன்னொரு புலவர் சொற்களை நோக்குவோம்.

"என்னே இது! இதுதானே முன்னர் நாளங்காடியும் அல்லங்காடியும் நிறைந்து, பல்வகைப்பட்ட மக்களும் இயங்குதலால் ஒருவர் மார்பிற் பூசிய சந்தனம் நெருக்கத்தான் பலர் மார்பிற் பட்ட பெருந்தெருவாய் இருந்தது? முன் தேர் பல குழித்த இத்தெரு இப்பொழுதோ கழுதைகள் பலவற்றால் உழப்பட்டுக் கேடடைந்து கிடக்கிறது! அண்மையில் உள்ள வயல்களிற் பயிர்கள் செழித்து வளர்ந்தோங்கி முன்னரெல்லாம் நின்றன. புள்ளினங்கள் அப்பயிர்களில் இருந்த வண்ணம் முன்னெல்லாம் இன்னொலி எழுப்பி இன்புறுத்தின. இற்றைஞான்றோ, வயல் வயலாயில்லை. குதிரைகளின் குளம்புகளால் பயிரெல்லாம் அழிந்தொழிந்து போகும்படி வீரரால் தேர் செலுத்தப்பட்டுப் பாழ் நிலயே காணப்படுகிறது." இங்ஙனம் ஒன்னார் நாடு அழிந்ததற்கு இரங்கி ஒரு புலவர் தம்மரசன்முன் பாடுகின்றார். அவர் பெயர் நெட்டிமையார். இப்புலவர் சொல்லோடு மேனாட்டுப் புலவர்திலகர் கோல்டுசிமித்து என்பாருடைய சொல்லை ஒப்பிட்டு நோக்கலாம். பின்னவர் தாமெழுதிய "ஒரு நகரின் நள்ளிரவுக் காட்சி" என்ற கட்டுரையில், நாடு காடாகும் என்னும் நியதியை விளக்குமிடத்திற் பின்வருமாறு உரைக்கின்றார்:— "பூடுகள் நிறைந்த இவ்விடத்தேதான் அவர்தம்அரண் இருந்தது. இஞ்ஞான்று நஞ்சுடைப்பூச்சிகளும் புழுக்களும் இயங்கும் இவ்விடத்திற்றான் அவரது அத்தாணிமண்டபம் இருந்தது. இன்னதென்று அறிய முடியாதபடி சிதறுண்ட கற்கள் குவிந்துள்ள இங்கேயே அவருடைய நாடக மேடைகளுங் கோவில்களும் இருந்தன. பெருவாழ்வும், பேரவாவுமே அவை வீழ்ந்து கிடப்பதற்குக் காரணம்." இதனை நெட்டிமையார் வாக்கோடு சேர்த்துப் படிக்குங்கால்,

"நரைமூ தாளர் நாயிடக் குழிந்த
வல்லின் நல்லகம் நிறையப் பல்பொறிக்
கான வாரணம் ஈனும்
காடாகி விளியும் நாடுடை யோரே"

என மருதனிளநாகனுர் மொழிந்ததும் நினைவுக்கு வருதல் இயல்பே. "முன் கடவுட் கோட்டமா யிருந்தபொழுது சில நரை கிழவர்கள் சூதாடிய ஒரு மூலையில் அடிக்கடி சூதாடு கருவி பட்டுக்குழிகள் உண்டாயிருந்தனவன்றே! அக்குழிகளில் இப்பொழுது காட்டுக்கோழிகள் முட்டையிடுகின்றன!! ஆ! உன் பகைவருடையநாடு காடாயினதே" என இரங்குவார்போன்று தமது அரசனுகிய பாண்டியனெருவனது வெற்றியைப் பாடிய இடம் அது.

இவற்றிற்கெல்லாம் இலக்கணம் போன்றிருந்து, இன்ப நிலையாமையையும் செல்வ நிலையாமையையும் செவ்விதின் வற்புறுத்துவன போன்றுள கீழ்வரும் இரண்டு நாலடி வெண்பாக்களும்:—

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேருகி வீழ்வர்(தாங் கொண்ட
மனையாளை மாற்ருர் கொள)."

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று."

இவண் ஏன் அவ்வளவு புகை? ஓ, ஓ, பிணம் சுடுகாடு போலும்! ஆம், ஆம், நரிகள் ஓடுகின்றன. அவ்வுருவங்கள் பேய்கள்போலும்! அதுதான் கோட்டான்குரலோ? இஃதென்ன, ஈண்டும் யாழிசை கேட்கிறது. அன்று, குழலிசை அது. இல்லையில்லை அப்பெண்ணே இசைப்பதுபோலும்! ஏன் இங்கு வந்து அழுகிருள் இவள்? குழந்தையை இழந்திருக்கவேண்டும்; அன்றேல், கணவனைப் பிரிந்த கடுந்துயர் பொருது வந்திருக்க

வேண்டும். சற்று விலகி யிருந்து எப்படி அழுகிறாள் என்று பார்க்கலாம்:—

"வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்(டு)உயரரங்கின் நிழல்போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகை குழறிப் பாராட்ட
இவ்வா றாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க் கியல்வேந்தே."

ஒரு குழவியின் அழுகுரலும் கேட்கிறது. என்ன இது! அக் குழவி பிறந்ததற்கு இப்பெண் அழுவதுபோல் தோன்று கிறதே!! மன்னர் மரபைச் சேர்ந்தது அம்மகவு என்றும் தோன்றுகிறதே!!! என்ன புதுமை! ஒருகால் "மணப்பேன்" என்று சொல்லிக் கைவிட்ட ஒரு காமுகனின் கடுஞ்செயலால் இஃது இங்ஙனம் நிகழ்ந்ததோ? அங்கிருந்து வருகின்றவரைக் கேட்டுப் பார்க்கலாம். பார்த்தால் புலவர் போற்றுகிறார். அவர் கூறுகின்றது இது:—ஐய! அப்பெண் ஓர் அரசியாயிருந் தவள். பெண்டிர் பலரையும் திருவாலும் உருவாலும் வென் றமையால், விஜயை எனப் பெயர் படைத்தவள். அவள் கணவன் சச்சந்தன் என்பான், ஏமாங்கத நாட்டு அரசன். ஆற் றலும் வீரமுஞ் செறிந்தவன் எனினும், இப்பெண்பால் வைத்த கழிகாதலால் மண்ணை ஒருவன்பால் ஒப்படைக்க, அவன் வஞ் சித்து இவனையே கொன்றனன். இறந்துபடு முன்னர், வருகின்ற தீமைக்கு அஞ்சி, இக்கர்ப்பிணியை மயிற்பொறியில்வைத்து வெளியிடத்தே கணவன் அனுப்ப, இவள் சோர்ந்து வந்து இம் மயானத்து இக்கோலத்தில் இருக்க நேரிட்டது. அரசன் இருந் தால் எத்துணைச் சிறப்புச் செய்வன் இம்மகவு காரணமாக, எத் துணைக் கொடை புரிவன் என்றெல்லாம் நினைத்து இப்பெண் ஏங்குகின்றாள். அரசமாளிகையிற் பற்பலர் சூழ்ந்து, இன்னியம் இயம்ப, கணிகள் ஜாதகம் கணிப்பப் பொற்றட்டில் பிறக்க வேண்டிய இப்புண்ணியன் சுடுகாடாகிய பாயில், அருகே ஒரு வரும் இல்லாது பிறக்க நேரிட்டதே என்று கவல்கிறாள் இவள். அன்றெல்லாம் இவள் வானுலகவின்பத்தை யொத்த பேரின்ப மெல்லாம் அரசனது அணிதிகழ் கோயிலிலிருந்து துய்த்தவள். அன்றெல்லாம், சிலதியர் பலர் சூழப் பல நட்சத்திரத்தின்

நடுவே செல்லுந் திங்களைப்போலத் தலைமையொடும் பெருமையொடுஞ் சென்றவள்; இன்றோ, தன்னந் தனியாகப் பேயும் பிணமும் மலிந்த இச்சுடுகாட்டில், கேட்பாரற்ற இவ்விடத்தில் இவள் இத்துயருறுவதைக்கண்டால், பாவஞ்செய்தவர் துயருறுவரென நூல்கள் சொல்வதைக் கேட்டிருப்பவரெல்லாம் பிரத்தியட்சப்பிரமாணத்தால் தன்னைக்கண்டு அறிக என இவள் கூறுவதுபோல் தோன்றுகிறது. இந்தக் கருத்தை உடனே ஒரு செய்யுளிலே அமைத்துப் பாடிக்கொண்டே போய்விட்டார் அப்புலவர் திருத்தக்கதேவர். அதனைச் சீவக சிந்தாமணியிற் காணலாம்:—

"உண்டென உரையிற் கேட்பார் உயிருறு பாவம் எல்லாம்
கண்டினித் தெளிக என்று காட்டுவாள் போல ஆகி
விண்டொட நிவந்த கோயில் விண்ணவர் மகளிற் சென்றாள்
வெண்டலை பயின்ற காட்டுள் விளங்கிழை தமியளானாள்.

அப்பால், ஒரு தொண்டு கிழவர் கோலைக் கண்ணுய்க் குனிந்து வருகிறார்; நரையும் திரையுமாயுள்ள அப்பெரியார் ஏதோ ஒன்று சொல்ல நினைக்கிறார்போல் காணப்படுகிறார். ஆயினும், சொல் வரவில்லை. ஏன்? இருமல் இடையே குறுக்கிடுகிறது. அது அடங்கினதும், விட்டுவிட்டு அவர் கூறும் சில சொற்கள் நம்மால் அறியப்படுகின்றன. அவற்றிலிருந்து, அவர் இளமையில் விளையாட்டுப் பதுமைகளுக்குப் பூச்சூட்டி மகிழ்ந்தாரென்றும், குறுமகளிரொடு கபடமின்றி ஆடித்திரிந்து அலைந்தாரென்றும், உயர்ந்த மரத்திலிருந்து நீர்த்தடாகங்களில் குதித்துத் துடுமென ஒலியெழுப்பிக் கரையிலிருந்தவரை மருள வைத்தாரென்றும், உள்ளே மூழ்கி மணலைக்கையில் எடுத்துப் பிறர்க்குக் காட்டினரென்றும் அறிகிறோம். அவர் இப்பொழுது அந்நாட்களை நினைக்கிறார்; நினைத்து வருந்துகிறார். என்னே! இளமையிற் செய்ததை முதுமையிற் செய்ய முடியவில்லையே! என நினைந்து இளிவரலுறுகின்றார்.

இத்தொடித்தலை விழுத் தண்டினருக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு மேல் செல்வோம். பேரரசனும் பல்லாண்டு ஆண்டவனும் நரைகண்டு துறக்கலுற்றவனும் ஆகிய

தசரதன் "இறக்க வேண்டும் என்னும் மெய்ம்மையை மறத்த லிற் பிறிதொரு பெருங்கேடுண்டோ? துறவென்னும் தெப்பம் துணையாகப் பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்திக்கரையை அடைய எண்ணியுள்ளேன். ஆதலால் இராமனுக்கு அரசினை நல்கி மாதவம் புரிய விரும்புகின்றேன். நும் கருத்து யாதோ?" என அவையினரை வினவுகின்றான். இராமன் ஆள்வன் என்ப தால் ஒருசார் இன்பமும், தசரதன் துறப்பன் என்பதால் ஒரு சார் துன்பமும் அடைந்து அவையினர் மயங்கும் தறுவாயில், வசிஷ்ட முனிவர் "வீர! இராமன் உன் உயிர்க்கு இனியனாய் இருத்தல் போலவே மன்னுயிர்க்கெல்லாம் இனியனாய் உளன். கற்றவரும், மற்றவரும் அவனைத் தாம் தாம் உண்ணும் நீரினும், தத்தம் உயிரினும் சிறந்தவனாக மதித்து உவகை யுறுகிறார்கள்" என்றெடுத்து இயம்புகின்றார். அப்பொழுது தசரதனுக்கு உண்டாகும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இராமனைப் பெற்ற பொழுது உற்ற உவகையினும் பெரியதோர் உவகை உண்டா கிறது. அறுபதினாயிரம் ஆண்டு தன்னுலகைக் காத்துப் பகையை ஒடுக்கிப் பிற பல இன்பங்களெல்லாம் நிறையப்பெற் றிருந்தும், நன் மகவில்லாக்குறை ஒன்று தீர்த்துக் கொள்ளப் பெரியதோர் புத்திரகாமேட்டியாகம் அருஞ்செலவிற் செய்து, தசரதன் இராமனைப் பிள்ளையாகப் பெற்றனன் என்றால், பெற்ற ஞான்று இருந்திருக்கக் கூடிய இன்பத்தை அளவிட்டுக் கூற வல்லார் எவர்? மகன் பிறந்தான் எனக் கேட்டவுடனே அங் கிருந்த தோழியரும் ஆடினர் பாடினர் ஓடினர் உவகையால் என்றால், பெற்ற தாயும் தந்தையும் எத்துணை மகிழ்ச்சி அடைந் திருக்கவேண்டும்? நிதிநிறை சாலைகளின் தாளை விலக்கி, நிதி யனைத்தும் வறிஞரெல்லாம் வாரிக்கொள்க எனப் பறையறைவித் தான் பாருடைத் தசரதன் என்றால், அவனது உவகை எத் தகைத்தாய் இருந்திருக்கவேண்டும்? அவ்வுவகையினும் மிக்க தோர் உவகை தோன்றலுங்கூடும் என்று எண்ணின், அது அப் புதல்வனது மணவணி காணும் திருநாளில் உண்டாகத் தக்கதா யிருத்தல்வேண்டும். அத்திருநாளிலும், பிறந்த திருநாளிலும் பெற்ற பேரின்பத்தினும் பெரியதோர் இன்பம் தசரதனுக்கு

வசிஷ்டர் மொழியில் உண்டாயிற்று எனக் கம்பர் வாக்கால் அறிகின்றோம்:—

"மற்றவன் சொன்ன வாசகங் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும்(....)பெரியதோர் உவகையன் ஆனான்."

காரணம் யாது? மகன் பிறந்தான் என்பதினும், அறிவுடைய னான் என்பதினும், நற்குணங்கள் நிரம்பினான் எனச்சான்றோ ராற் சொல்லப்படுதல் சிறப்புடைத்து. தன்மகன் சால்புடை யன் எனத் தானறிந்திருந்தாலும், பிறர் வாயிலாகக் கேட்டல் இனிது. அதனினும் இனிது சான்றோன் எனச் சான்றோரால் தன்மகன் எண்ணப்படுதலைக் கேட்டல். இம்மகிழ்ச்சி, பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் ஒக்கும். "ஈன்ற பொழுதிற் பெரி துவக்கும் தன்மகனைச்—சான்றோன் எனக் கேட்டதாய்" எனத் திருவள்ளுவர் கூறியதில் உள்ள தாயென்னும் சொல், ஒழிந்த தன்னினமாய தந்தையென்னும் சொல்லையும் உட்கொண்டது. எனவே பெற்ற அன்றினும், மகன் நல்லவன் எனப் பெரியோ ராற் சொல்லப்படும் இன்று தோன்றும் உவகை பெரிது பெரிது.

தியாகராசர் கழிநெடில்

தமிழ்ப்பேராசிரியர். திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்

இது, திருவாரூரின்கண் திருக்கோயில் கொண்டெழுந் தருளிய தியாகராசர் தோத்திரம். கழிநெடில் என்பது ஐந்து சீர்க்கு மேற்பட்ட அடியா னிகழ்வது. சொற்சுவையும் பொரு ளமைதியும் உள்ள இத்தோத்திரத்தை இயற்றிய ஆசிரியரைக் கமலை ஞானப்பிரகாசர் என்பர். போதியசான்று கிடைத்திலது.

தண்ணார்மதியும் பகீரதியும் சாந்தமெழுது திருத்தோடுந்
தவிராதணிமும் மாலிகையுந் [1] தம்பேர்கொடுத்த கரைத்ததுசும்
பண்ணார் [2] தவளப்பாளிதமும் பதுமராகப் பலபணியும்
பசும்பொன் குயிற்றுநவரத்னப் பணிவாங்கதமு மணிச்சிலம்பு

1. தியாக விநோதனென்னும் திருநாமத்தை எழுதிய சேலை.
2. தவளப்பாளிதம் பச்சைக்கர்ப்பூரம்.

மெண் [3]ணுடரவக் கிண்கிணியுமிழைத்த சுடர்ப்பூ வாசிகையு
மிமைத்த [4]வீரகண்டயமு மிணங்குமிடங்க டொறுந்தரித்துக்
கண்ணாரமுத மயலிருக்கக் கனகவரியா சனத்திருக்குங்
கருணாநிதியை யாரூரிற்கண்டார் பிறவிக் காணுரே. (க)

திங்களெனவெண் குடைநிழற்றச் சிங்காதனத்தி லினிதேறித்
தேவியிருக்க மகனிற்கச் செழித்தகவரிப் பணிமாறத்
தங்கத்தகளி விளக்கேந்தித் தளருமிடையா ரணிநெருங்கச்
சங்குபடக மெக்காளந்தாளஞ் சின்னம் துடிமுழவம்
பொங்குகடலி னொலியடங்கப் பிறவின்னியங்கள் மழைகாட்டப்
புவனுதிபர்கள் திசைபோற்ற புரைதீர்பருதிக் கடலாடிக்
கங்குலுதவுந் [5]திருவந்திக் காப்புக்கண்டு வீற்றிருக்குங்
கருணாநிதியை யாரூரிற்கண்டார் பிறவிக் காணுரே. (உ)

மோனவிரதந் திசைதொறும் மொய்த்தோர்பிடிக்க வோவியம்
முத்தநகையார் புடைசூழ முறையேநந்தி கணம்பரவ [போல்
நானநறிய [6]பசுந்தென்றல் நடக்குந்திருச்சா லகத்திடையே
நாலுமறையு மொருமூவர் நாதத்தமிழும் புறத்தமிழும்
பானல்விழியார் சங்கீதப் பாட்டும் பற்றுமணியாழும்
பலதந்திரிகொள் வீணைமுதல் பஞ்சக்கருவி கஞ்சமுறக்
கானமழலை தவழ்ந்துகுழைக் காதுநிறைய வீற்றிருக்குங்
கருணாநிதியை யாரூரிற்கண்டார் பிறவிக் காணுரே. (ந)

விதித்தநாளில் வருந்தேவர் மிடைந்ததிருக்கா வணத்தில்நின்று
வேளைதெரிய வேத்திரக்கை மேலோரருளிப் பாடென்ன
பதித்தமணி மாளிகைமுன்றிற் பரவிநெருங்கு மவரவர்க்கு
பணித்தமுறையே முடித்தூசும் பழுக்காயிலையும் மடிநீட்டி
மதித்தவகத்து ளடியாரும் புறத்து ளடியாருமருவ
வாழுங்கோயின் முதன்மையரும் மற்றுளோரும் புடைசூழக்
கதித்த வீரசோழியத்திற் கவரியசைய வீற்றிருக்கும்
கருணாநிதியை யாரூரிற்கண்டார் பிறவிக் காணுரே. (ச)

---

3. ஆடரவக்கிண்கிணி தியாகர் திருவடிகளிலணிவது.
4. வீரகண்டையம்-தியாகரின் வாட்படை.
5. திருவந்திக்காப்பு—மாலைக்காலத்தில் தியாகருக்கு நடைபெறும் அலங்காரம். இத்தரிசனம் மிக்க விசேடமுடைத்தென்பர்.
6. தென்றற்காற்று திருமேனியில் வீசுமாறு சாளரத்தருகில் வீற்றிருக்கச்செய்து வழிபடுதல்.

பாந்தள்நெளியப் பாரசையப் பதினுலகு மொருங்கிண்டப்
பரமர்முழவ மிசைந்தேங்கப் பலமாமறையும் புகழ்பாட
மாந்தாரவென் றெடுத்தவொலி வானம்பிளந்து திசை தூர்க்க
வகுத்தகனக மதிலெனவே வளைந்ததிரைக்குள் வந்தேறித்
தீந்தந்திமிதோ திமிதெனவே திக்குநெருங்க வசைந்தாடிச்
செம்பொ னடிக்காயிரமுதவி செருக்கிபவனி விளையாடிக்
கந்தாமணிமா மண்டபத்திற் கவரியசைய வீற்றிருக்கும்
கருணாநிதியை யாரூரிற் கண்டார் பிறவிக்காணாரே. (ரு)

வழுத்தவிரவு செனங்களுக்கு வரைசூழ்புவனம் சிறிதெனவே
வந்துவந்து மணிமாட மறுகுதெற்றி யாடரங்கம்
பழுத்தசோலை யெங்கெங்கும் பரவிநின்றார் நின்றபடி
பணியப்பரவப் பங்குனியைப் பலரும்புகழப் பணையார்ப்ப
அழுத்துமகுட மழைகிழிக்க ஆடுங்கொடிகள் திசையளக்க
அசையுமசையா தெனநடக்க ஆழிபுரளுந் தொறுஞ்சேடன்
கழுத்துநெரிய வரும்பெரிய கனகத்தேரி லுலாப்போதும்
கருணாநிதியை யாரூரிற்கண்டார் பிறவிக் காணாரே (சு)

சுடருமந்தா கினிச்சடையிற் சுவறப்பெருமைக் கறுநதியும்
சுளித்துவேணி நனைத்திருக்குந் தொன்னீர்க்குணர்ந்து பொருவபோ
லுடையபஞ்சக் குரோசத்தி னுள்ளேயடங்காப் பழமலையை
யுருட்டியினிமாங் கனிகனிந்தே யூறுமமுதாம் பசுந்தேனும்
வடிகொளினிய சுவைப்பாலும் மதுரத்தயிரும் நறுநெய்யும்
வழிபாலிதச் சந்தனச்சேறு மருவுபுனலுங் கலித்தோடிக்
கடல்வாய்மடுப்ப வபிஷேகம் கண்டுகனகா சனத்திருக்கும்
கருணாநிதியை யாரூரிற் கண்டார் பிறவிக்காணாரே. (எ)

பாலுக்கினிய மொழிகாணப் பரமானந்தச் சுடர்வீசப்
பகுத்துவகுத்த பல்லுயிருட் பலமாபரிசு வெளிதோன்ற
நாலுக்கிசைந்த மறைபரவ நதியுமதியு மிடைததும்ப
நகைசேர்பாடகக் குண்டலந்தவழ நாதமணிக் கிண்கிணியசைய
மாலுக்குரிய படகியம்ப மதங்கமஞ்சு முக்குடங்கள்
வட்டத்துடனே யிசைந்தேங்க மழலைமுழவஞ் சதிகாட்டக்
காலுக்கிசைய [1]வசபைநடம் காட்டிக்கனகா சனத்திருக்கும்
கருணாநிதியை யாரூரிற் கண்டார் பிறவிக்காணாரே. (அ)

---

1. வசபாநடம் ஓர்வகை நடனம் தியாகர்க்குரியது.

பொருநீர்க்கடல்கள் புகுந்தாலும் போதாதள்ளித் தாவவெனப்
போந்தோர் புற்றின்குட திசையிற்பொய்கை படிந்துபடிந்தேறி
வருமூவினையின் வேர்சாய வந்துவந்து பணிந்தேதம்
மற்றப்போய தேவரெல்லாம் மகுடமிழைய நெருக்குண்டு
பெருமாநந்தி கணம்புடைக்கும் பிரம்பினடிகொண்டய லொதுங்
பேரானந்த முலகடங்கப் பெறும்பங்கு னியுத்தரநாளில் [கப்
கருதாடரவக் கிண்கிணிக்கால் காட்டியரவா சனத்திருக்கும்
கருணாநிதியை யாரூரிற் கண்டார் பிறவிக்காணாரே. (கூ)

வாணாளிரந்து மவனிரங்க மலரோன்விதியா திளைப்பாற
வருத்தவருத்த பல்லுயிருள் மருவும்பாவக் கதிசேரப்
பூணார்முலையார் பல்லாண்டுபோற்றி யிசைப்பப் பதஞ்சலியும்
புலியும்பசுவும் முனிவருடன் போந்துபணிந்து பணிந்தேகச்
சேணாடமரர் புடைசூழச் சிலையார்திருவா திரைநாளிற்
றிருவாசகப்பூந் தேன்பருகிச் செந்தாமரைக் கண்ணனுமின்னங்
காணாதரவக் கிண்கிணிக்கால் காட்டியரியா சனத்திருக்குங்
கருணாநிதியை யாரூரிற் கண்டார்பிறவிக் காணாரே. (ய)

முற்றிற்று.

தியாகராஜர் பள்ளேசல்

இது, தமிழ்ப்பிரபந்தங்களுள் ஒன்று. கடவுள்வணக்கமும், மூத்தபள்ளி, இளையபள்ளி, பள்ளன் இவர்களின் பெருமையும், மழைநீர் பெருகி ஐவகை நிலங்களிற்செல்லும் வனப்பும், அந் நிலங்களின் கருப்பொருள்களும் எடுத்துரைத்தலும், மணிமுத் தாறு பெருக்கெடுத்து வருதலும் மீன்வகை கூறலும் குயிற் கூவல் கேட்டலும், இடையிடையே அகப்பொருட்டுறைகளை இனிதாக எடுத்துரைத்தலும், பண்ணைத்தலைவன் வரவு, அவனைப்

பங்குனி யுத்தரமும்—திருவாதிரையும்—பாதசேவைக்குரியநாட்கள்.

ஆடவக்கிண்கிணிக்கால்—ஆடரவமும் கிண்கிணியும் அணிந்ததிருவடி யென்று பொருள் கொள்க.

பள்ளத்திகள் கண்டுதொழுதல், அவன் பள்ளனைப் பண்ணைச் செயல் வினவலும், பள்ளன் அதனையும், எருத்துமாடு, ஏர்க்கால், மேழி, கொழு, நெல்வகைகளையும் எடுத்துரைத்தலும், பண்ணைக் காரன் பள்ளனை விதை தெளிக்கச் சொல்லலும், நடவு நட பள் ளத்திகளை அழைத்தலும், பள்ளத்திகள் ஒருவரையொருவர் ஏசுதலும் என்னும் இவ்வுறுப்புகளுறப் பாட்டுடைத் தலைவர் தியாகராஜரின்பெருமை ஆங்காங்குதோன்றச், சிந்து, விருத்தம், வெண்பா, கலிப்பா, சந்தப்பா, கலித்துறை விரவிவர பாடப்படுவது. இதனை உழத்திப்பாட்டு எனவும் வழங்குவர். மூத்த பள்ளத்தியை வன்மீகப்பள்ளி எனவும், இளைய பள்ளத் தியைச் சீரங்கப்பள்ளி எனவும் கூறுவர். இவர்களின் ஏசல் வாயிலாகக் கடவுளரின் செய்கை பல தெளியலாம். இதனை இயற்றியவர் கமலை ஞானப்பிரகாசர் என்பவர். இதுகாறும் அச்சிடப்பெறாத நூல்களில் இஃது ஒன்றாகும்.

கடவுள் வணக்கம்

காப்பு வெண்பா

சீர்பரவு மாரூர்த் தியாகற்குச் செந்தமிழாற்
பார்புகழும் பள்ளேசல் பாடவே—வார்மருவு
கொங்கை யுமையீன்ற குஞ்சரனும் வேலவனுங்
கங்கை சரசோதியுமே காப்பு

சந்த விருத்தம்

வாதாவி விநாயகர் வணக்கம்

பூமாதொரு மாதவ மினிதுறை நீராடிய வாவியி னறைகமழ்
பூகாடவி மேவிய பொழில்களு மெழில் வீறப்
பாமாதிசை வீறிய புகழ்பயி லாரூரர்தி யாகர்த மனமகிழ்
பாவானபள் ளேசலி னிசை வகை பலகூற

ஏமாசல மாகிய புயமிசை யாகாச மளாவிய பணமணி
ஏகாசம தாமென வணிதரு மியலாளன்
மாமால்மரு கேசன் முனம்வரு போர்மாமத வாரண முகமுள
வாதாவி விஞயக னிருபத மறவேனே (1)

முருகர் வணக்கம்

மேவு மகண்டப் பெருமாள்புகழ் வீதிவிடங்கப் பெருமாள் திரை
வேலேவிடம்புத் தமுதாமென விரும்பிய பெருமாள்
தேவரக ண்டப்பெருமாள் கறை தாவிய கண்டப்பெருமாள்மிசை
சீர்பெற வுகந்தபள் ளேசலி னிசைபாட
வாவி நிறம்பொற் கலாப மயூர மெனுஞ்சொற் பரிமீதினில்
வானவர் தம்பொற் பதிகாவல் செய் வடிவேலன்
ஆவ லுடன்கைத் தழையேகொடு வேடுவர் மங்கைக் குயர் காமுகன்
ஆறு முகன்பொற் பதநாவினில் நவில்வேனே (2)

கமலாலய நாயகி வணக்கம்

சனகாதியர் சேவடியிணைதொழ வடதாருவி னீழலி லருமறை
தனேயோதிய தேசிக ரிமையர் தமையாள்வார்
அனமெனமுன் னுடுதலரியவ ரருளாளர் தியாகர்தம் மனமகி
ழுடைவானபள் ளேசலி னிசைவகை நசைகூர
இனகொடியி னேர்தரு மெழிலினள் திரிசூலி மனோன்மணி திரிபுரை
இமயாசல மேவிய வுமையவ ளெமையாள்வாள்
கனகாசல மாகிய முலேயின ளருமாதவமாகிய நிலேயினள்
கமலாலய நாயகி யிருபத மறவேனே (3)

கலிப்பா

தாளுஞ் சிலம்புந் தடவரவக் கிண்கிணியுந்
தோளுஞ் செவ்வந்தித் தொடையுமற வாதருளீர்
மூளுங் கருணை முகத்தா லடியவரை
யாளும் பெருமாள்தென் ஞரூர்ப் பெருமாளே (4)

[வன்மீகப்பள்ளி, சீரங்கப்பள்ளிகளுடன் பள்ளன் வருகையும்
அவர்களின் பெருமையும் கூறுதல்.]

சிந்து

போரங்க மானகலை மாரன்கை மேவுசிலை
போலுந் திருநுதலில் வெயர் வரும்பக்
கூரங்க வேல்விழிகள் நேரங்க மானதொரு
குற்றிடைக் கொடி துவண்டு குலைந்தலைய
தாரங்க மானகுழற் காரங்க மானவண்டு
தந்தனு தனனு வென்று தமிழ்பாட
வாரங்க மானகொங்கைச் சீரங்கப் பள்ளியுடன்
வன்மீக நாதப் பள்ளன் தோன்றினனே (5)

கச்சைகட்டிச் சுள்ளினேடு கள்ளு மிகப்பருகிக்
களித்தேப்ப மிட்டுவெறிக் கண்கள் சிவப்ப
மெச்சுமிள நகைசெய்து மீசைதன்னை முறுக்கி
வெண்ணீறு தனைமுக மீதி லணிந்து
பச்சைமணித் தொண்டுகட்டிப் பவளத் தாவடங்கட்டிப்
பருக்கச் சேந்திருக்கத் தொப்பார முங்கட்டி
வச்சிரமாமணிக் கொட்டுமணித் தோளின் மிசைத்தோன்ற
வன்மீக நாதப் பள்ளன் தோன்றினனே (6)

பைங்கமலத் திருமுகம் வெயர்வுறப் பாதமலர் பரிபுர மொலியெழப்
படைவேல்விழிக் கடைபோர் செய்மலரங் குழையசைய
வங்கைமலர் சரிவளை யசைதர வணிமுறுவல் சிறுநகை யொளிதர
வளகாடவி நெகிழ்வுற வளியின மிசைபாடக்
கங்கைதனைச் சடையணிபெருமாள் காலனைக்காலா லடர்ந்திடுபெருமாள்
கணைவேளுடல் பொடிபட வெரிசெய் கண்ணுதற்பெருமாள்
செங்கமலைப் பதியுறைபெருமாள் தேவரகண்டப் பெருமாள்தன்
திருநாமம் பாடியாடும் பள்ளத்திகள் தோன்றினரே (7)

குஞ்சரமேய துணைமுலை யசையக் கோர்வை மணித்திரள் புரளக்
கோலநுதற் சிந்தூர மழகுறக் கொடியிடைதுவள
அஞ்சனமேய கயல்விழிபுரள வமுதமொழிக் குமுதமலர்ந்திட
அணியுமணிப் பணிபலபல வசைவுற வளிக்குழல் நெகிழக்

கஞ்சமலர்க்கொடி படர்பெருமாள் காயாமலர் வண்ணப்பெருமாள்
காவேரியின் நடுவணைமிசை கண்டுயில் பெருமாள்
செஞ்சிலைவேள் தனையருள்பெருமாள் திருவரங்கப்பெருமாள் பெருமைத்
திருநாமங்கள் பாடியாடும் பள்ளத்திகள் தோன்றினரே (8)

வெண்பா

விரவு சிலைமதவேள் வெங்கால னென்னு
மிரவுமிக முப்பதுக மென்னும்—பரவு
கறைக்கண்ட னேகமலைக் கண்ணுதலே யென்னும்
பிறைக்கண்ட நேருநுதற் பெண் (9)

பொன்பரப்பிய திருவீதியிலே கணைபரப்பிய சிலைவேள் கிலைதரும் புகழ்
[பரப்பிய கமலாலயமெனும் புரியுறைபெருமாள்
அன்பர்க்கெளிதாகிய பெருமான் அருமைப்பெருமாள் கலைமானுறை
[யங்கைப் பெருமாள் மலைமானுறை யாகப்பெருமாள்
தென்புறத்திளந் தென்றலிழைத்திடுந் திருச்சாலக வரிசைப்பெருமாள்
[சிங்காசன மழகியபெருமாள் தியாகப் பெருமாள்
மின்பரப்பிய சடைமுடிப் பெருமாள் வீதிவிடங்கப்பெருமாள்
[தன் திரு நாமம் பாடியாடும் பள்ளிகானே (10)

அண்டர்மனைக் கொடியிடை மடவியர் அளையத்தயிர்ப்படு மழகியமெய்க்
[கலைபிடித்தழுதிடு திருமால்
மண்டலமுண் டெழுவரை யுண்டெழு புவனமுண்டொரு வடபத்திர
[மிசைத்துயில் மதலையின் வடிவுள திருமால்
கண்டகர வெஞ்சமர்பொரு கிருதனையொருபது சிரமிருபது காமறக்
[கரதூடணர் முடிதூளெழ வொருகணை தொடு திருமால்
தெண்டிரைவெண் சங்குமுழங்கிய திருக்காவேரி வளைந்திட வளர்ந்தருள்
[திருவரங்கத்திருமால் திருநாமம் பாடியாடும் பள்ளிகானே (11)

கட்டளைக் கலிப்பா

காலமுமந்திப் படைபொருதல் பாரீர் காலமறிந்து களபமுலை சேரீர்
சீலமறிந்து பணிவிடைசெய் யேனே சேவடிவந்து தினமும் வருடேனே
ஒலிடுவண்டு குமுறுகுழ லாரே யோசை முழங்கு குயிலின் மொழியாரே
வேலையடர்ந்த கலகவிழி யாரே வீதிவிடங்கர் கமலை யனையாரே (12)

வேறு

அன்பர்க் கெளிதாகிய பெருமாள் திருவந்திக் காப்பழகிய பெருமாள்
ஆடுதண்டினில் தோடசைந்திட அசைந்தாடும் பெருமாள்
பைம்பொற் ரேடழகிய பெருமாள் செவ்வந்தித் தொடையணி பெருமாள்
பாலொத்திடு மொழியாளுறையும் பாகப் பெருமாள்
கம்பிக்கா தழகியபெருமாள் கனக வசந்தப் பெருமாள்உயர்
கங்காளப் பெருமான் தேவரகண்டப் பெருமாள்
செம்பொற் சிங்காதன மழகிய பெருமாள் தியாக விநோதப் பெருமாள்தன்
திருநாமம் பாடியாடும் பள்ளி நாமே (13)

முண்டக நாபிதனில் நான்முகவண் டிருந்து மூலமறை மொழி முழங்க
[வைத்தோன்
அண்டர் மகிழ்ந்திடவே மோகினியாகி முனம் ஆரமுதம் பகர்ந்த அன்புடை
[யோன்
வண்டெனவே யுகந்து வாவியில் வன்கமலில் மாயமுட னுறைந்த மாய
[வனர்
தெண்டிரை வாவிசூழும் சீரங்க ராசனர்தம் திருநாமம் பாடியாடும்
[பள்ளிநாமே (14)

கடவுட் பரவல்

குயிலுக்கு நீணிலா வெயிலுக்கு மாரவேள் கொடுமைக்கு வாடலாமோ
மயிலுற்ற சாயலாள் மயலுற்றிடாமலே மருமத்தி லாளொணாதோ
சயிலுற்ற நாதரே யரவுற்ற பாதரே தமிழ்விட்ட தூதனரே
கயிலைத் தியாகரே கனகத் தியாகரே கமலைத் தியாகனரே (15)

மேகம் குடகில் பொழிதல்

குறிஞ்சி நிலம்

கனத்தமேகக் குலங்கள் கூடிக் கலங்கி வேலை விலங்கவே
கருகிய நீரைப்பருகி வானத் தருகினேறிப் பெருகவே
வனத்துமிகுந்தகுடகிற்பொழிந்துவழிந்துகரையிலெழுந்துமேல்
வரகுடன் பயில் தேக்கு மாரமும் நூக்கியே கரைதாக்கியே
யினத்திற் குறவர் புனத்திலிதணும் எடுத்தகுடிலு மிதக்கவே
யிரைந்து குமுறிவிரைந்து மருவியிருவிக் குருவிவெருவவே
அனத்தை நேர்தரு குறத்திகாதலி லழுந்துவேள்பதம் வழுத்தியே
அவருங்குறிஞ்சி மலருமருவி யதிர்ந்துபாலை யெதிர்ந்ததே()

(தொடரும்.)

உ

பின்னங்குடிச் சுப்பிரமணிய சாத்திரியார் தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்புரை மறுப்பின் மேல் செந்தமிழ்ப்பத்திராசிரியர் திரு நாராயணையங்கார் எழுப்பிய தடையும் அதற்கு விடையும்

திரு. ம. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்,
தமிழ்ப்புலவர், மன்னார்குடி.

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 1. பக்கம் 21.)

வினையெச்ச முடிபுபற்றிப் பரிமேலழகர் உரைக் குறிப்புக்கள் (குறள் 886) 'அரம்பொருத பொன்போலத்தேயும் உரம் பொருது உட்பகையுற்றகுடி' உட்பகையால் பொரப்பட்டுக்குடி உரந்தேயும் அரம்பொருத பொன்போல் எ-று. பொருது என்னும் செயப்பாட்டு வினையெச்சம் தேயும் என்னும் வினை கொண்டது தேய்தல் உரத்தின் தொழிலாயினும் குடிமேல் ஏற்றுதலின் வினைமுதல் வினையாயிற்று.

(ஷை-938) 'பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்து—அல்லல் உழப்பிக்கும் சூது.' 'பொருள் கொடுத்து' என்பது பாடமாயின், அவ்வெச்சத்திற்கு முடிபு மேற்கொளீஇ என்புழி மேற்கோடல் ஆகிய வினைமுதல் வினை.

(ஷை-643) 'கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்.' அவாய் என்னும் செய்தெனெச்சம் மொழிவது என்னும் செயப்பாட்டுவினை கொண்டது.

(ஷை-463) 'ஆக்கங்கருதி முதலிழக்கும் செய்வினை யூக்கார் அறிவுடையார்.' கருதியென்னும் வினையெச்சம் இழக்கும் என்னும் பெயரெச்ச வினைகொண்டது.

(ஷை-1168) 'மன்னுயிரெல்லாம் துயிற்றி யளித்திரா என்னல்லதில்லை துணை.' துயிற்று—துயிற்றுதலான். எனத் திரிந்து நின்ற வினையெச்சம் என்னையன்றி வேறு துணையுடைத்தாயிற்றில்லையென அவாய் நிலையான் வந்த உடைத்தாதலோடு முடிந்தது.

(ஷை-868) ‘குணமிலனுய்க் குற்றம் பலவாயின் மாற்றூர்க்—கினனிலனு மேமாப் புடைத்து.’ என்னும் செய்தெனெச்சம் உடையவென வந்த பெயரெச்சக் குறிப்புக்கொண்டது.

(ஷை-815) ‘செய்தேமஞ் சாராச்சிறியவர் புன்கேண்மை எய்தலின் எய்தாமை நன்று.’ சாராத என்னும் பெயரெச்சம் கேண்மை யென்னும் பெயர் கொண்டது. சிறியவர் என்பதனைக் கொள்ளின் செய்து என்பது நின்று வற்றும்.

(ஷை-944) ‘அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல-துய்க்க துவரப்பசித்து’ பசித்தல் வினை ஈண்டு உடையான்மேல் நின்றது.

(ஷை-93) ‘முகத்தானமர்ந்தினிது நோக்கி அகத்தானும் இன்சொலினதே அறம்.’ நோக்கியென்னும் வினையெச்சம். இன்சொல் என அடையடுத்து நின்ற முதனிலைத்தொழிற்பெயர் கொண்டது.

(ஷை-352) ‘இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி மாசறு காட்சியவர்க்கு.’ மருணீங்கியென்னும் வினையெச்சம் காட்சியவர் என்னும் குறிப்பு வினைப்பெயர் கொண்டது.

(ஷை-604) ‘குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து மாண்ட உஞற்றிலவர்க்கு.’ மடிந்து எனத் திரிந்து நின்ற வினையெச்சம் இலவர் என்னும் குறிப்பு வினைப்பெயர் கொண்டது. செந்தமிழ்ப் பத்திராசிரியர் இலவர் என்பது எதிர்மறை வினைப்பெயர் என்றும், இல் என்பது எதிர்மறைவினை முதனிலையென்றும் கூறினர். பரிமேலழகர் இலவர் என்றது குறிப்பு வினைப்பெயர் என்றுரேயன்றி எதிர்மறை வினையென்றுரிலர். எதிர்மறை வினைக்கு முதனிலையும் தனியாக வேண்டினரிலர். வினை முதனிலையோடு எதிர்மறை விகுதி புணர்ந்து எதிர்மறை வினையாவதன்றி, எதிர்மறை வினையெனத் தனியே கிடையாது. இது சேனுவரையர் உரையானும் உணர்க. இவ்விலக்கணம் முன்னமே விளக்கப்பட்டது.

(பரிபாடல்-3) ‘திணிநிலம் கடந்தக்கால் திரிந்தயர்ந் தகன்றோடி நின்னஞ்சிக் கடற்பாய்ந்த-அன்னவர்.’ திரிந்து அயர்ந்து அஞ்சி அகன்று ஓடியென்னும் செய்தெனெச்சங்கள் வாய்ந்த என்னும் வினைமுதல் வினைகொண்டன.

(ஷை-13) ‘இலங்கொளி மருப்பிற் களிறுமாகி மூவுருவாகிய தலைபிரி யொருவனை.’ ஆகியென்னும் வினையெச்சம் ஆகிய என்னும் பெயரெச்சத்து ஆதலோடு முடிந்தது.

(ஷை-17) 'தேம்படு மலர்குழை பூந்துகில் வடிமணி, யேந் திலைசுமந்து சாந்தம் விரைஇ, விடையரை யசைத்த வேலன் கடி மரம் பரவினர் உரையொடு பண்ணிய இசையினர், கோலெரி கொளைநறை புகைகொடி யொருங்கெழ—மாலைமாலை யடியுறை இயைநர்.' எழ எனவும் சுமந்து எனவும் நின்ற வினை எச்சங் களும், பரவினர் இசையினர் என்னும் முற்றுவினை யெச்சங் களும் இயைநர் என்னும் தொழிற்பெயருள் இயைதலோடு முடிந்தன.

(ஷை-19) 'உரிமாண் புனைகலம் ஒண்டுகில் தாங்கிப்—புரி மாண் புரவியர் போக்கமை தேரர்—தெரிமலர்த்தாரர் தெரு விருள் சீப்ப.' சீப்ப என்னும் எச்சத்திற்கு முடிபாகியபோந்து என்னும் சொல் வருவிக்கப்பட்டது.

(ஷை-11) பரந்து தெவி என்னும் செய்தெனெச்சங்கள் கவர்புற என்னும் வினைமுதல் வினைகொள்ள அச்செயலெனெச் சம் வழக்கிற்று என்னும் பிறவினைகொண்டது.

(ஷை-15) 'மசுமுயங்குமந்தி வரைவரை பாய—முகிழ் மயங்கு முல்லை முறை நிகழ்வு காட்ட....சிலம்பிற் சிலம்பிசை ஓவாது.' மந்திபாய முல்லைகாட்ட என நின்ற செயவெனெச் சங்கள் இசை ஓவாது என்னும் பிறவினைகொண்டன.

(ஷை-22) 'தாரணிமைந்தர் தவப்பயன் சான்மென........ ஏரணி யிலங்கெயிற் றின்னகையவர்.' சான்மென என்னும் வினையெச்சம் இனிய நகையினையும் உடையவென இரண்டாவத னோடு விரிந்த பெயரெச்ச வினைகொண்டது. இது 'வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்' என்பதனால் வினைக் குறிப்போடு முடிதல் பெற்றது. சேந்தமிழ்ப் பத்திராசிரியர் இம்முடிபு அறியாது வேறு கூறினர். அது ஆறுவது பிழையாக முன் னமே மறுக்கப்பட்டது.

(குறள்-210) 'அருங்கேடன் என்பதறிக மருங்கோடித் தீவினை செய்யானெனின்' ஓடியென்னும் வினையெச்சம்செய்யான் என்னும் எதிர்மறை வினையுள் செய்தலோடு முடிந்தது.

(ஷை-548) 'எண்பதத் தான்ஓரா முறைசெய்யா மன்னவன்' எண்பதத்தான் என்னும் முற்று வினையெச்சமும் ஓரா என்னும் வினையெச்சமும் செய்யா என்னும் பெயரெச்சமறையுள் செய்தல் வினை கொண்டன.

சில்பதிகார வரும்பதவுரை

(காதை-28) நிறுத்தித் தழீஇ என்னும் எச்சங்கள் அகவன் மகளிர் என்னும் பெயரில் அகவுதற்றொழிலோடு முடிந்தன.

(ஷை-ஷை) உறீஇ ஏத்த என்னும் எச்சங்கள் அரும்பிய என்னும் பெயரெச்சத் தொழிலோடு முடிந்தன.

(ஷை-ஷை) ஆரிய மன்னர் தொகுதியொற்றுமை பற்றிக் காட்டி வணங்கி கொண்டோர் எனச் சிலர்வினை வேறுநில்லா வினையொடு முடிந்தது.

(ஷை-ஷை) ஏந்தியெனும் வினையெச்சம் எனும் என்னும் பெயரெச்ச வினையோடு முடிந்தது.

(புறம்-14) புலவு நாற்றத்தபைந்தடி—பூநாற்றத்த புகை கொளீஇ யூன்றுவை கறிசோறுண்டு வருந்து தொழிலல்லது பிறிது தொழிலறியாவாகலின் நன்று மெல்லிய கொளீஇ யென்னும் எச்சப் அமைத்தவென ஒருசொல் வருவித்து கொளுத்தி அமைத்த என முடிக்கப்பட்டது.

(ஷை-15) 'நெடுந்தேர் குழித்த ஞௌ்ளலாங்கண்—வெள் வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி' பூட்டி யென்னும் எச்சத் திற்கு உழுது என்னும் சொல் தந்துரைக்கப்பட்டது.

(ஷை-22) 'பொலங் கோட்டுப் பைந்தும்பை—மிசையலங் குலைய பனைப்போழ் செரீஇ' செரீஇ யென்னும் எச்சத்தினை ஆடும் என ஒரு சொல் வருவித்து முடிக்க.

இத்துடன் மதுரைச் செந்தமிழ்ப் பத்திராதிபர் வினை யெச்ச முடிபு என்ற பொருள்பற்றி யெழுதிய கட்டுரையின் மறுப்பு மன்னார்குடி இயற்றமிழாசிரியர் நாராயணசாமிப் புலவர் மகனார் சோமசுந்தரனார் வரைந்தது முற்றும்.

இம்மறுப்புரையில் விளக்கப்பட்ட இலக்கண வகைகள்.

1. கருமகருத்தா விலக்கண விளக்கம்

2. 'செயப்படு பொருளைச் செய்ததுபோல' என்னும் சூத் திரத்திற்குச் சங்கர நமச்சிவாயர் உரைத்த உரையும் காட்டிய உதாரணங்களும் போலியென்பது

3. அச்சங்கர நமச்சிவாயர் உரையைத் தழுவி ஆறுமுக நாவலர் முதலியோரால் எழுதப்பட்ட காண்டிகையுரையும் போலியுரை எ—து.

4. வினையாலணையும் பெயரின் இலக்கணம் அவர்கள் நன்குணராமை

5. இம்மாடு யான் கொண்டது என்ற தொடர்மொழியில் எழுவாய் பயனிலையின் முடிபும் அவர் நன்கு உணராமை

6. வினையாலணையும்பெயர் (வினைப்பெயர்) வகை

7. கருத்தாவின்மேல் (வினைமுதன் மேல்) நின்ற வினைப் பெயர்

8. செயப்படு பொருண்மேல் நின்ற வினைப்பெயர்

9. கருவியின் மேனின்ற வினைப்பெயர்

10. வினை மேனின்ற வினைப்பெயர்

11. இடத்தின்மேனின்ற வினைப்பெயர்

12. காலத்தின்மேனின்ற வினைப்பெயர்

13. இம்மாடு யான் கொண்டது என்னும் தொடரில் எழுவாய் பயனிலை முடிபு

14. 'பொருண்மை சுட்டல்' என்னும் சூத்திரக் கருத்து

15. அச்சூத்திரத்தில் 'வினைநிலை யுரைத்தல்' என்பதனால் 'சாத்தன் உண்டான்' என்றவழி சாத்தன் என்னும் எழுவாய்க்கு முடிபு உண்டான் என்பதன் முதனிலையாகிய உண் என்பதும், 'சாத்தன் பெரியன்' என்ற வழிப் 'பண்புகொள வருதல்' என்பதனால் பெரியன் என்புழிப் பெருமையாகிய பண்பு முடிபு என்பதும்

16. 'இம்மாடு யான் கொண்டது' என்புழி எழுவாய் இம்மாடு என்பதும் அதற்குப் பெயர்ப் பயனிலை 'யான் கொண்டது' என்பதும் கொள்ளுதல் யான் என்பதன் வினையாதலால் யான் என்பதற்கு முடிபு கொண்டது என்றல் ஆகாது, முதனிலையாகிய கொள்ளுதலோடு முடியும் என்பதும்

17. 'வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும் நினையத் தோன்றிய முடிபாகும்மே' என்றதனால் வினையெச்சம் வினைமுதனிலைபைக் கொண்டும் வினைக்குறிப்பின் முதனிலையைக்கொண்டும் முடியும்என்பதும் ஆசிரியர் தொல்காப்பியனார்க்குக் கருத்து எ-து

18. கருவி கருத்தாவிற்குச் சேனாவரையர் முதலியோர் காட்டிய 'இல்லம் மெழுகிற்று; இல்வாழ்வன் என்பான்' என்றாற் போல்வனவே உதாரணமாகும் எ-து

19. வினைச்சொல்லின் வகை வினைமுற்று, வினையெச்சம் பெயரெச்சம் என்னும் மூன்றுமே—வினைப்பெயர் (தொழிற் பெயரும் வினையாலணையும் பெயரும்) பெயர்ச் சொல்லின் வகையே எ-து

20. 'மூவுருவாகிய தலைபிரியொருவனை' என்புழி ஒருவனை என்ற ஐ விகுதி முன்னிலையை விளக்கலின் முன்னிலையொருமை வினைக்குறிப்பு முற்றே எ—து

21. அடுக்குமொழித் தொடர்

22. ஒரு சொல்லடுக்கு

23. ஒருபொருண்மேல் பல பெயர் வரும் அடுக்கு

24. உருபடுக்கு

25. ஆறுவது ஒழிந்த உருபுகளில் ஒன்று பலபொருள் வழியவாய் வரும் அடுக்கு

26. ஆறுவது ஒழிந்த உருபுகளில் ஒன்று ஒரு பொருண் மேல் வரும் பல பெயர் வழி அடுக்கு

27. 'யானையது கோட்டை நுனிக்கட்பொருட்டு வாளால் குறைத்தான் எனப் பல வுருபுகள் விரவி வருதல் அடுக்கன்று எ—து

28. உருபு விரவி அடுக்கும் என்ற இளம். நச்சி. சங்கர. முதலியோர் உரை பொருந்தாமை

29. முற்று வினையடுக்கு

30. வினையெச்ச வினைச்சொல்லடுக்கு

31. பெயரெச்ச வினைச்சொல் லடுக்கு

32. 'குயிலைச் சிலம்பகிக் கொம்பினை' என்பது நன்னூலில் 'உருபுபல வடுக்கினும்' என்பதனுல் முடியும் எ-து.

33. அதனை ஒரு பொருண்மேல் பலபெயர்வரின் இறுதி ஒரு வினைகொடுப்ப என்பதனுல் சங்கர நமச்சிவாயர் முடித்துக் காட்டியது பொருந்தாது எ-து.

34. 'கட்கினியாள் காதலன் காதல்வகை புனைவாள்' இதனை உருபடுக்கென்று மயிலைநாதர் குறித்தது—பொருந்தாது எ-து.

35. இதனை முற்றெச்சவடுக்கு என்ற இலக்கண விளக்க நூலார் உரையும் பொருந்தாது எ-து.

36. வினைச்சொல்லின் முதனிலையே வினையெச்சப்பொருள் படுதலும் பெயரெச்சப்பொருள்படுதலும் முற்றுவினைப்பொருள் படுதலும் உண்டென்ற (இலக்கணக்கோத்து நன்னூல்) உரை பொருந்தாது எ-து.

37. உண்டு நடவான் என்றவழி உண்டு என்னும் வினை யெச்சத்திற்கு முடிபு நடவான் என்னும் எதிர்மறை வினைச் சொல்லுள் முதனிலையாகிய நட என்பது என்று இலக்கணக் கொத்து நூலார் கூறியதே இலக்கணம் என்பதும், அவ்வாறு முடித்தல் உரையாசிரியர்க்கும் பரிமேலழகர்க்கும் நியமம் என்ற அவர் கூற்றிலே உரையாசிரியர் என்றது பேராசிரியரையே. செந்தமிழ்ப் பத்திராசிரியர் கொண்டவாறு இளம்பூரணரையே யன்று என்பதும்.

38. இல்லை—இல.[1] என்றாற்போல்வன எதிர்மறை வினைச் சொல் என்று செந்தமிழ்ப் பத்திராசிரியர் கூறியது போலியுரை யென்பதும், அவை இன்மை யென்பதன் அடியாகப் பிறந்த குறிப்பு வினைச் சொற்களாம் என்பதும் அல்ல அன்று முதலி யன அவ்வாறே அன்மை யென்பதன் அடியாகப்பிறந்த குறிப்பு வினைச் சொற்களாம் என்பதும்.

39. அவை யெதிர்மறை வினைச் சொல்லென்று இளம் பூரணர் நச்சினார்க்கினியர் சங்கர நமச்சிவாயர் முதலியோர் கூறி யனவெல்லாம் போலியுரை எ—து.

40. வினையின் புடைபெயர்ச்சி யிலக்கணம் இன்னதென் பது.

இனி முடிவுரை.

இத்துணையும் விரித்துரைத்தவாற்றால் செந்தமிழ்ப் பத்தி ராசிரியர் திருநாராயணய்யங்கார் வினையெச்ச முடிபுபற்றி உரைத்தனவெல்லாம் போலியுரையென்பதும், அவர் பேருரை யாசிரியராகிய இலக்கணக்கோத்து நூலார் சிவஞானமுனிவர் இவர்கள் கூற்றையும் மறுக்கத் துணிந்தது, அறியாமையின் மேல் உய்தியில் குற்றமாகும் என்பதும் உணர்த்தப்பட்டது. இன்னும் இச்செந்தமிழ்ப் பத்திராசிரியர் கட்டுரையில் குற்றம்

காணப்புகின் விளையாட்டு மகளிர் அட்டமணற்சோற்றில் கல்லாராயப் புகுந்தால் ஒக்கும் ஆதலின் இஃது இத்துடன் அமைக. கல்வியறிவான் உயர்ந்த சான்றோர் அவரது கட்டுரையும் இம் மறுப்புரையும் நடுவு நிலைமையொடும் நோக்கி அவற்றுள் நல்லதும் பொல்லாததும் இன்னதென்று வெளியிடல்வேண்டும்.

(உரிமையுரை) கவி.

பண்ணார் மொழியாள் பாகன்சீர்
பரவும் வேளாண் குலதிலகன்
பாரோர் பசிக்கப் பாராதான்
பரந்த தமிழின்கொடி படரும்
விண்ணா றெயில்சூழ் தஞ்சைகிழான்
மெய்யன் நீலமேகன் சேய்
விரிந்த கலைகள் பலவுணர்ந்த
விரகன் வேட்பமொழி வல்லான்
கண்ணார் கரந்தைக் கழகத்தின்
காவலன் கரம்போல் நல்லமைச்சன்
கந்தசாமி யெனும் பெயரான்
சேனுவரையம் கரை கண்டான்
எண்ணு எந்தம்இடர் களைந்தான்
இமையார் மருந்தே எய்திடினும்
எமக்கீத் துண்பான் அவற்குரித்தாம்
யானுய்ந் தெழுதுமிவ் வுரையே.

தமிழின் கொடி—தமிழாகிய கொடி, தமிழ்க் கலையின் வெற்றியைக் குறிக்கும் கொடியெனினும் ஒக்கும்.

விண்ணாறு—தஞ்சையைச் சூழ்ந்தோடும் ஆறு, வானாறு எனினும் அமையும்.

கழகத்தின் காவலன்—சபா நாயகன்—உமாமகேச்சுரன். கரம்போல் என்றது. 'உடுக்கை யிழந்தவன் கைபோல' என்ற தன் கருத்தை உட்கொண்டு நின்றது.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫	ஈசுவர ஆடி	மலர் ௪

விந்தைகள்

ஆசிரியர்:

திருவாளர் பெ. நா. அப்புஸ்வாமி அவர்கள்

இவ்வுலகம் தோன்றியதே ஒரு விந்தை. இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் யாவும் விந்தைகள். அவற்றினிடையே மனிதராகிய நாம் தோன்றியது விந்தையிலும் விந்தை.

களிப்பு நிறைந்த தூய மனங்களாலே, அன்பும் ஆனந்தமும் பெருகும் பிரகாசமான கண்களாலே, குழந்தைகள் இவ்வுலக விந்தைகளைக் கண்டு பேரானந்தம் அடைகிறார்கள். ஓடும் நீரின் அழகையும் காயும் நெருப்பின் அழகையும் கண்டு மகிழ்கிறார்கள். நிலாவின் அழகும் நாய்க்குட்டியின் அழகும் குழந்தை மனத்திலே ஒன்றுபோலப் படுகிறது. அந்த மனத்திலிருந்து பெருகும் களிப்பு வெள்ளமானது முகத்திலே புன்னகையாகத்

ததும்புகிறது. அலை அலையான சிரிப்பாக நம்மேல் வந்து மோதுகிறது: நம்மையும் நிலைக்காத ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திவிடுகிறது. விந்தை மிக்க உலகத்திலே உள்ள விந்தைகள் அனைத்தையும் விந்தை விந்தையாக அனுபவிப்பதற்குப் பிறந்த அற்புத சிருஷ்டிகள்தான் குழந்தைகள்.

நாமும் ஒருகாலத்தில் குழந்தைகளாய் இருந்தோம். ஆனால், வயது ஏற ஏற, போலி அறிவு மிக மிக, விந்தைகளை அனுபவிக்கும் திறமைகளை நாம் இழந்துவிட்டோம். ஆயினும் சிற்சில வேளைகளில் இவ்வுலகத்தில் காணும் சிற்சில நிகழ்ச்சிகளும் பொருள்களும் நமது மனங்களைத் தாக்கி, அவற்றைக் கவர்கின்றன. அவ்வேளைகளில் நாமும் விந்தைகளை உணர்கிறோம். மீண்டும் சிறு குழந்தைகளாகி ஆனந்தமடைகிறோம்.

ஓரிடத்தில் உள்ளோருக்குச் சாமானியமாகத் தோன்றுவன சில, மற்றோரிடத்தில் உள்ளோருக்குப் பெரிய விந்தைகளாகத் தோன்றுகின்றன. புதிதாக நகரத்துக்கு வருகிற பட்டிக்காட்டான் நகரத்திலே எத்தனை விந்தைகளைக் கண்டு அனுபவிக்கிறான்! ஒரு காலத்தில் விந்தைகள் என்று எண்ணப்படுவன இன்னொரு காலத்தில் மிகவும் சாமானியப் பொருள்களாகி விடுகின்றன. முற்காலங்களிலே மேலை நாடுகளிலே உள்ள மனிதர்கள் விந்தைகள் என்று கருதிய பொருள்கள் எத்தனையோ இருந்தன. அவற்றில் குறிப்பிட்ட சில செயற்கை விந்தைகளை அவர்கள் மாபெரும் விந்தைகள் ஏழு எனக் கொண்டாடினர். அவையாவன:

1. பாபிலோன் நகரத்துப் பூந்தோட்டம்.

சற்றேறக்குறைய இரண்டாயிரத்து அறுநூறு வருஷங்களுக்கு முன்னே பாபிலோனியாவிலே நெபூகெட்நெஸ்ஸார் என்னும் சக்கரவர்த்தி ஒருவன் இருந்தான். பாபிலோனியா ஒரே சமவெளியான பிரதேசம். அங்கே பெயருக்குக்கூட மலைகள் கிடையா. அவ்வரசனுக்கு உயிருக்குயிரான மனைவி ஒருத்தி இருந்தாள். அவள் மலை நாட்டிலிருந்து வந்தவள்.

பாபிலோனியாவின் சமவெளிகளைப் பார்த்துப் பார்த்து அவளுடைய அழகிய கண்கள் அலுத்துப்போயின. மலை நாட்டின் ஏற்றத்தையும் தாழ்வையும், உயர்வையும், சரிவையும் அவள் மீண்டும் பார்க்க விரும்பினாள். 'சக்கரவர்த்தியின் மனைவியாயிருந்தும் இயற்கையின் அழகை அனுபவிக்கும் பாக்கியம் எனக்கு இல்லையே' என்று அவள் ஏங்கி மனம் வருந்தினாள். அவளுடைய வாடிய மனத்தைக் குளிர்விப்பதற்காகவும், அவளுடைய குவிந்த முகத்தை மலர்விப்பதற்காகவும், அரசனால் அமைக்கப்பட்டது இப்பூந்தோட்டம்.

இவ் வாச்சரியமான தோட்டமானது உப்பரிகையின் மேல் உப்பரிகையாகக் கட்டப்பட்டது. மேல் உப்பரியின் உயரம் முன்னூறு அடி. ஒவ்வொரு உப்பரிகையிலும் செடிகள், கொடிகள், மரங்கள். ஆ! எத்தனை நிறநிறமாய்ப் பூக்கும் புஷ்பச் செடிகள்! எத்தனை மரங்கள்! சோலைகள்! மேலும் கீழுமாய், மேடும் பள்ளமுமாய் மலைப்பிரதேசத்தைப்போலவே அமைந்திருந்தது இத்தோட்டம். இந்தத் தோட்டத்திலே எங்கே பார்த்தாலும் ஓடைகள் சலசலவென்று ஓடிக்கொண்டிருந்தன. நகரத்துக்குப் பக்கத்திலுள்ள யூப்ரடீஸ் நதியின் நீரை எத்தனையோ இயந்திரங்கள் இறைத்து இத்தோட்டத்தில் பாய்ச்சின. பூந்தோட்டத்தில் உலவிய அரசி வெளி உலகத்தையே மறந்தாள்; பாபிலோனியாவின் சமவெளியையும் மறந்தாள். அவள் மனம் தளிர்த்துத் தழைத்தது. அவள் முகமும் மலர்ந்து சிரித்தது. தூரவிருந்து பார்ப்போர் கண்களுக்கு அந்தத்தோட்டம் வானவெளியிலே தொங்குவதாகவே தோன்றிற்று. அரசனுடைய அன்பினால் பிறந்த அழகிய பூந்தோட்டம் சிலகாலமே நிலைத்திருந்தது. அந்தோ! காலத்தின் கொடுமையால் அழிந்து போய் விட்டது. இன்னொரு விந்தை:

2. பைடியஸ் செய்த ஸியுஸ் விக்கிரகம்.

சற்றேறக்குறைய இரண்டாயிரத்து நானூறு வருஷங்களுக்கு முன்னே கிரீஸ் தேசத்திலே பைடியஸ் என்ற ஒருவர் இருந்தார். அவர் மிகவும் பிரக்கியாதி பெற்ற சிற்பி. கிரேக்க

நாட்டின் மாபெருந் தெய்வமான ஸியுஸ் என்னும் தெய்வத்தின் விக்கிரகம் ஒன்றைச் செய்தார். ஒலிம்பியா என்னும் இடத்திலே அதை ஸ்தாபித்தார். அதன் உயரம் அறுபது அடி. பொன்னாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட அந்த விக்கிரகம் மகோன்னதமாக வீற்றிருந்தது. அதன் அளவையும், காம்பீரியத்தையும், அதன் விலை மதிப்பையும், அழகையும் உலகம் கண்டு, பேசி, எண்ணி, கொண்டாடிற்று. அந்தோ, இதுவும் முற்றிலும் அழிந்துபோயிற்று.

இந்த விந்தை தோன்றி இருநூறு வருஷங்களுக்குப் பிறகு, அதாவது சுமார் இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன்பு, கிட்டத்தட்ட ஒரே காலத்தில் நான்கு விந்தைகள் தோன்றின. அவற்றுள் மூன்றை இயற்றியவர் கிரேக்க நாட்டுச் சிற்பிகள். அவற்றுள் ஒன்று:

3. ஆர்டிமிஸ் தெய்வத்தின் திருக்கோயில்

ஆசியா மைனர் எனப்படும் தேசத்திலே முன் காலத்திலே கிரேக்க நாட்டினர் ஏராளமாகக் குடியேறி வந்தனர். அங்கே உள்ளது எபிஸஸ் என்னும் சிறு நகரம். அந்தப் பிரதேசத்தில் உள்ள அந்நாட்டுப் பழைய ஜனங்கள் ஏதோ ஒரு இயற்கைத் தேவதையை வணங்கிக்கொண்டிருந்தார்கள். அந்தத் தெய்வமும் கிரேக்கர்கள் வணங்கி வந்த ஆர்டிமிஸ் என்னும் பெண் தெய்வமும் பல அமிசங்களில் ஒத்திருப்பதைக் கண்ட கிரேக்கர்கள் அவ்விரண்டு தெய்வங்களையும் ஒன்றாக்கி, அந்தத் தேவதைக்குக் கோயில் ஒன்றைக் கட்டினார்கள். அந்தத் தேவதையை வழிபடுவோரின் தொகை நாளுக்கு நாள் மிகுந்து கொண்டு வரவே, அதற்கு ஏற்பக் கோயிலையும் அவர்கள் பெரிதாக்கிக் கொண்டே வந்தார்கள். இப்படிப் பல திருப்பணிகள் நடந்தன. ஐந்தாம் முறை திருப்பணி நடத்திக் கட்டி முடித்த பெருங் கோயிலானது சுமார் இரண்டாயிரத்து இருநூறு வருஷங்களுக்கு முன் கட்டி முடிந்தது. ஐந்நூறு அறுநூறு வருஷகாலம் அது உலகத்தில் புகழ்பெற்று விளங்கிக் கொண்டிருந்தது. பிறகு அந்நாட்டைப் படையெடுத்து வந்த அந்நிய நாட்டார்

அதைச் சூறையிட்டு, நெருப்புக்கு இரையாக்கிப் பாழாக்கினர். தெய்வத் திருக்கோயில் மண்ணோடு மண்ணாய்விட்டது. அக் கோயிலிலிருந்த தூண்களின் அடிப்பாகங்களிற் சில இப் பொழுது லண்டன் காட்சிச் சாலையில் இருக்கின்றன. மற்றொரு விந்தை:

4. மாஸோலஸ்ஸின் சமாதி

கிட்டத்தட்ட அதே காலத்தில், அதே நாட்டின் இன்னொரு பாகத்தில் ஹெலிகர்னாஸஸ் என்னும் இடத்தில் மாஸோலஸ் என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் மரண மடைந்ததும் அவனுடைய பிரிவாற்றாமைக்கு மிகவும் வருந்திய அவனுடைய மனைவி, அவனுடைய உடலை அடக்கம் செய்த இடத்திலே அவனுடைய ஞாபகச் சின்னம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று எண்ணினாள். அந்தக் காலத்திலே சகலமான கலைகளுக்கும் பெயர்போன கிரேக்க நாட்டிலிருந்து சிறந்த சிற்பிகளை வரவழைத்து ஒரு கட்டடம் கட்டுவித்தாள். அச் சிற்பிகள் நீண்ட சதுர வடிவமான ஒரு மேடையைக் கட்டினார்கள். அதன் மேலே வேலைப்பாடமைந்த தூண்களை நிறுத்தினார்கள். அதற்குமேலே ஒரு தளவரிசையையும், அதன்மேலே நான்கு குதிரைகள் பூட்டிய அழகிய தேரையும் நிருமித்தார்கள். அந்தத் தேரின் தட்டிலே அரசன் அரசி ஆகிய இருவருடைய பிரதிமைகளை வைத்தார்கள். அதைப்போல் அழகிய சமாதியை உலகத்தார் அதுவரையிலும் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை. மாஸோலஸ் அரசனுடைய சமாதி என்பதால் அதற்கு மாஸோலியம் என்று பெயர் ஆயிற்று. சமாதி செய்த இடத்தில் கட்டப்படும் அழகிய ஞாபகச் சின்னத்தை இன்றளவும் மாஸோலியம் என்று சொல்லுவதிலிருந்து இதன் சிறப்பு ஒருவாறு விளங்கும். ஆனால், மாஸோலஸ் அரசன் அடைந்த கதியை அவனுடைய சமாதியும் அடைந்து விட்டது! இன்னும் ஒன்று:

5. ரோட்ஸிலுள்ள சூரிய விக்கிரகம்.

இதுவும் அதே காலத்தைச்சேர்ந்ததுதான். கிரீஸ்தேசத்துக்கு அடுத்த ஈஜியன் கடலிலே ஆசியா மைனர் நாட்டின் தென்மேற்குப் பாகத்துக்கு அடுத்தாற்போல் உள்ளது ரோட்ஸ்

என்னும் சிறு தீவு. இந்தத் தீவிலே குடியேறிய கிரேக்கர் சூரிய தேவனது விக்கிரகம் ஒன்றை அமைத்தார்கள். அதன் உயரம் நூறு அடி. கல்லாலும் மண்ணாலும் கட்டப்பட்டதன்று இவ்வுருவம். செம்பையும் ஈயத்தையும் உருக்கி வார்த்த விக்கிரகம் இது. அங்கே உள்ள துறை முகத்தின் வாயிலுக்குக் காவலாக இப் பெரும் பிரதிமையானது நின்று கொண்டிருந்தது. இதன் ஆயுள் வெகு சீக்கிரம் முடிந்துவிட்டது. இதை நிறுத்தி அறுபது வருஷங்கள் ஆகுமுன் அந்த நாட்டிலே ஒரு பூகம்பம் உண்டாயிற்று. அப்போது இந்த விக்கிரகம் ஆடிச் சாய்ந்து கீழே விழுந்து துண்டுதுண்டாய் உடைந்துபோயிற்று. சற்றேறக்குறைய ஓர் ஆயிர வருஷகாலம் மண்ணோடு மண்ணாய்க் கிடந்தது. பிறகு உடைந்து சிதறிக் கிடந்த துண்டுகளைப் பொறுக்கி எடுத்துப் பழைய வெண்கல விலைக்கு ராத்தற் கணக்காக எடைபோட்டு விற்றார்கள். என்ன கொடுமை! மற்றும் ஒரு விந்தை:

6. பாரோஸ் தீவின் கலங்கரை விளக்கம்.

இதுவும் அதே காலத்தைச் சேர்ந்தது. எகிப்து தேசத்திலே அலெக்ஸாந்திரியா நகரத்துக்குப் பக்கத்திலே உள்ள சிறு தீவு ஒன்றுக்குப் பாரோஸ் என்பது அக்காலத்துப் பெயர். அந்தத் தீவின் கீழ்ப் புறத்திலே எகிப்து நாட்டு மன்னர்மன்னனாகிய இரண்டாம் டாலெமி அரசன் கலங்கரை விளக்கம் ஒன்றைக் கட்டுவித்தான். இது ஐந்நூறு அடி உயரமுள்ளதாக இருந்தது. அடி முதல் சிகரம் வரையில், முழுவதும், வெள்ளை வெளேரென்ற தூய சலவைக் கல்லால் கட்டப்பட்டது. அதன் மீது வெய்யில் படும்போது அந்த ஸ்தம்பமே ஒளி வடிவமாகத் தோன்றுமாம். அழகும் பயனும் ஒருங்கு சேர்ந்து உருவெடுத்தது இக் கலங்கரை விளக்கம். இதுவும் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது.

7. எகிப்து நாட்டுப் பிரமிட்டுகள்.

பண்டைப் பழங்காலங்களிலே எகிப்து தேசமானது நாகரிகத்தில் சிறந்து இருந்தது. அத்தேசத்து மன்னர்களுக்குப் பார்வோன்கள் என்று பெயர். அவர்கள் இறந்துபோன பிறகு

அவர்களுடைய உடலுக்குப் பரிமளகந்தங்களிட்டுப் பலவிதமாகப் பக்குவப்படுத்துவார்கள். அவர்கள் இவ்வுலகத்தைவிட்டுப் பரலோகம் சென்றபோது, இம்மையில் அவர்கள் அனுபவித்த சுகங்களை மறுமையிலும் அவர்கள் அடையும் பொருட்டு அவர்களுடைய மனைவியர்களையும், ஏவலாட்களையும், தேர் குதிரை முதலிய வாகனங்களையும், ஆபரணங்களையும், பொன்னையும், விசிறி சாமரம் முதலியவற்றையும் அவர்களோடு கூட அடக்கம் செய்வது வழக்கம். இவை அனைத்தையும் ஒன்றாக வைக்கும் பொருட்டுக் கட்டிய பெரிய சமாதிகளுக்குப் பிரமிட்டுகள் என்று பெயர். அடிப்புறத்திலே அகன்று சச்சவுக்கமாகவும், உச்சிப்புறம் சிறுத்து முனையாகவும் உள்ளது அவற்றின் வடிவம். எகிப்து நாட்டிலே சுமார் எழுபத்தைந்து பிரமிட்டுகள் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் முக்கியமானவை கீஸே என்னும் இடத்திலுள்ள மூன்று பெரிய பிரமிட்டுகள். அவற்றுள் ஒன்று மிகமிகப் பெரியது. அதன் அடிப்புறத்திலே ஒவ்வொரு பக்கத்தின் அளவும் கிட்டத்தட்ட ஒன்றரை மைல் நீளம் உள்ளதாக இருக்கிறது. அதன் உயரம் நானூற்று எண்பத்தொரு அடி. அதிலுள்ள கற்களைக்கொண்டு சென்னை ராஜதானி, மைசூர், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை ஆகிய இவற்றைச் சுற்றி ஒரு கற்சுவர் கட்டலாம்! கட்டினது போகக் கற்களும் மிஞ்சும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

முற்கூறிய விந்தைகள் எல்லாவற்றைக் காட்டிலும் இது காலத்தால் முற்பட்டது. இது சுமார் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்னாலே கட்டப்பட்டது. மற்ற விந்தைகள் யாவும் அழிந்துபோன போதிலும், இது இன்றுவரை தங்கி நிற்கின்றது. காலம் செல்லச் செல்ல இதன் விந்தை மிகுந்து வருகிறது என்றே சொல்லவேண்டும். ஆயினும் இக்காலத்தில் நாம் இதையும்கூட அவ்வளவு பெரிய விந்தையாக மதிப்பதில்லை. ஏன்?

இதனினும் பெரிய விந்தைகள் இப்பொழுது நம்முடைய மனத்தைக் கவர்ந்துவிட்டன. பழைய விந்தைகளுக்கு நமது மனத்தில் இடமில்லாமல் போய்விட்டது. இவ்வாறு நமது

சின்னஞ்சிறு மனத்திலே வந்து குடிகொண்ட விந்தைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. அவை எத்தனையோ ஆய்விட்டன.

ஆகாயத்தில் பக்ஷிகளைக் காட்டிலும் உயரமாய்ப் பறப்பதும்; கடலில் மீன்களைக்காட்டிலும் வேகமாய் நீந்துவதும்; நிலத்தின்மேல் காற்றைக்காட்டிலும் கடுமையாய்ச் செல்வதும்; பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள ஒருவரோடு ஒருவர் பேசுவதும், ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்வதும்; இரும்புப் பெட்டிக்குள் இருக்கும் பொருளையும் பளிங்குப் பெட்டியில் இருப்பதைப்போல் காண்பதும்; புண்ணுலாம் பெரும் புழையிற் கனல் நுழையினும் நோவில்லாதிருப்பதும்; ஆகாசவாணி அசரீரியாய்ப் பேசுவதும்; எமதூதர்களோடு போராடி அவர்களை வெல்வதும் ஆகிய இவைபோன்ற விந்தைகள் நாள்தோறும் நிகழ்கின்றன. இவற்றினிடையே கல்லுக்கும் கட்டடத்துக்கும் இடம் ஏது? பழம் விந்தைகள் போயின, போயின. புது விந்தைகள் வந்துகொண்டே யிருக்கின்றன. வாழ்க விந்தைகள்!

இவை யாவற்றினும் பெரிய விந்தை இன்னொன்று இருக்கிறது. அதைச் சற்று வருத்தத்தோடேதான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. அது என்னவெனில், நமதுகண்ணெதிரே நிகழ்ந்து கொண்டேயிருக்கும் இத்தனை விந்தைகளையும் நாம் கண்டும், கேட்டும், அனுபவித்தபோதிலும், இவற்றின் நுட்பங்களைச் சிறிதேனும் அறிந்து கொள்ள முயலாதிருக்கும் விந்தையே, அவ் விந்தை.

மலையுங் கடலும்

திருவாளர்
க. ப. சந்தோஷம் அவர்கள் B.A.,L.T.

"அருள்நிதி தரவரும் ஆனந்தமலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே" (மணிவாசகம்)

உயர்ச்சிக்கும் பெருமைக்கும் மலையையும், ஆழத்திற்கும் விரிவிற்குங் கடலையும் எடுத்துக்காட்டாக நாம் வழங்குகின்றோம். 'நேற்றிருந்த தின்றில்லை, இன்றைக்கிருப்பது நாளையில்லை' என்று சொல்லும் வண்ணம் நம்மைப்படுத்திருக்கின்றவையெல்லாம் மாறுமிந்த உலகத்தில், பிறப்பு, வளர்ச்சி, முடிவு என்ற முத்தொழில்களும் இடைவிடாது நிகழ்ந்து நமதுள்ளத்தை அலைக்கழிக்கு மிவ்வையகத்தில், என்றும் ஒன்றுபோலவேயிருந்து மனத்துக் காறுதல் தருகின்றவை மலை, கடல், ஆறு, ஆகாயம் முதலியவையாம். இதுகுறித்தே உடலுழைப்பாலும் மன உழைப்பாலுஞ் சோர்ந்த மக்கள், அமைதியை விழைந்து மலை, கடல், காடு, ஆறு முதலியவற்றை நாடிச் செல்கின்றனர். முற்காலங்களிலும் உளத்தையடக்கி இறைவனோடொன்றியிருக்க, விரும்பிய துறவிகள் காடு, மலை, கடற்கரையடைந்தங் குறைந்தனர். இங்ஙனமாயினும், மலையுங் கடலும் என்றும் ஒன்றுபோலவே யிருக்கின்றனவென்று சொல்லுதலியலாது.

மலைகளில் மிகஉயர்ந்தது நம்மிந்திய நாட்டின் வடவெல்லையாகவமைந்திருக்கும் இமயமலை என்பதை யாவருமறிவர். இதன் சிகரங்கள் பலவற்றினுஞ் சிறந்து விளங்குவது எவரெஸ்ட் ஆகும். இதனுயரம் 29,000 அடி. அதாவது ஐந்துமைல். கடலிலும் மிகத்தாழ்வானவிடம் ஐந்துமைல் ஆழமுடையது. இங்ஙனம், வையகத்தின் மிக உயர்ந்தவிடமும் மிகத் தாழ்வானவிடமும் அளவில் ஒத்திருக்கின்றன.

இமயமலை ஒருகாலத்திற் கடலுக்குள்ளிருந்து கிளம்பிற்றென்று நிலநூற்புலவர் துணிந்துரைக்கின்றனர். இவ்வாறு

கூறுதற்குச் சான்றாக, கடலில் வாழுமுயிர்களின் எற்புச் சட்டங்கள் இமயமலைச்சிகரங்களில் காணப்படுவதை அவர்கள் காண்பிக்கின்றனர். இது மறுக்க முடியாத வுண்மை.

கயல்விழிக் காரிகைக்குங் கண்ணுதற் கடவுட்குங் கைலையங்கிரியில் திருமணம் நிகழ்ந்தஞான்று, இமயமுட்பட வடதிசை முழுவதுந் தாழ்ந்ததென்றும், தென்றிசை யுயர்ந்ததென்றும், இதுகண்ட முத்து மூரல் முகிழ்த்த முக்கட்பிரான் மகத்துவமிகுந்த அகத்தியரை யழைத்துத் தென்றிசை சென்று வையகத்தை ஒரு நிலைப்படுத்த ஏவினுரென்றும் புராணம் புகலும். இது கைலையங்கிரியில் நிகழ்ந்ததென்று சொல்வதால், இமயம் ஆழியினின்றும் வெளிப்பட்ட காலத்திற்குப் பிறகு நடந்ததாதல்வேண்டும். அக்காலத்திலேயே தமிழ்நாடு மிகச் சிறப்புற்று விளங்கிற்று.

தமிழ்நாடு ஞாலத்தின் மிகப் பழைய பகுதிகளுள் ஒன்றென்பதற்குச் சான்றுகள் பலவிருக்கின்றன. மற்றும், குமரிக்குத் தெற்கே பரவியிருந்த தமிழ்நாடு கடலாற் கொள்ளப்பட்ட காலத்து இமயந்தோன்றி யிருக்கவேண்டுமென்று சில புலவர் கருதுவது பொருத்தமாகவே தோன்றுகின்றது. சிவனுர் திருமணம் நடந்தபொழுது வடதிசை தாழ்ந்தது தென்றிசை யுயர்ந்தது. ஏன்? விண்ணவரும் மண்ணவரும் அத்திருமணத்தைக் காணக் கைலையில் ஒன்றுகூடியதால் வடதிசை தாழ்ந்ததென்பது புராணங் கூறுங்காரணம். தாழ்ந்து கடலுக்குள்ளிருந்த இமயமலைப் பகுதி உயர்ந்து மலையாகியிருக்க, அது மறுபடியும் மேற்கூறிய காரணத்தால் தாழ்ந்ததென்று சொல்லுவதெங்ஙனமொக்கும்?

'வடதிசை தாழ்ந்தது, தென்றிசை யுயர்ந்தது' என்ற சொற்றொடர்களுக்கு அறிவியல் வகையிற் பொருள் கொள்வோமாயின், தென்னுட்டு மக்கள், கல்வி, செல்வம் முதலியவற்றாற் சிறந்து விளங்கினுர்களென்றும், அத்துணைப் பழமைபெருத வடநாட்டினர் இத்துறைகளில் தாழ்ந்திருந்தனரென்றுந்தான் நாம் நினைத்தல்கூடும். வேறு வகையில் வடதிசை தாழ்தலும்

தென்றிசை யுயர்தலும் பொருந்தாமை வையகத்தினுருண்டை வடிவங்கொண்டு பெறப்படும். தென்னாடு போந்து வையகத்தைச் சரிநிலை செய்ய அகத்தியர் ஏவப்பட்டாராயின், தென்னாட்டிலுள்ளவற்றைக் கற்று வடநாட்டாரை உயர்த்துமாறு கட்டளை பெற்றாரென்றே நாம் கொளல்வேண்டும்.

தமிழ்நாடு வந்த அகத்தியர் தமிழ்மொழியைச் சிவபிரானிடம் பெற்றாரென்பதுகொண்டு, தொன்றுதொட்டு தமிழ்த் தெய்வமாய் விளங்கியது சிவமே என்றறியலாம். இந்நாட்டு மொழிகளையாராய்ந்த மேலை நாட்டுப் புலவர் இம்முடிபிற்கே வருகின்றனர். வையகம்போற்றும் கவி இரவீந்தரநாத்தாகூரும் ஏறக்குறைய இருபதியாண்டுகட்குமுன் சென்னை கோக்கலே மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில் திராவிடர்களுடைய தெய்வம் சிவமென்று திண்ணமாய்க் கூறினர். இஃதன்றி மொழியாராய்ச்சியில் வல்ல வட இந்தியப் புலவர்கள் திராவிடமொழிகளிலிருந்து வடமொழி எடுத்தாண்ட சொற்கள் பலவென்று பாராட்டியுள்ளார்கள். இவ்வாறிருக்கத் தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களல்லாத வேறு புலவர்கள் ஆரியத்திலிருந்தே எல்லாந் தமிழிற்கு வந்தனவென்று இன்னும் புலம்புகின்றனர்.

கடலின் நடுவிலிருந்து இமயந்தோன்றிய காலத்திலஃதொரு எரிமலையாக வெளிப்பட்டிருக்க வேண்டுமென்றும், நடுக்கந்தரும் வையகவதிர்ச்சிக ளப்பொழுதுண்டாயிருக்க வேண்டுமென்றும் நாம் நினைத்தல் தவறாகாது. இதற்குப் பின் பூமியதிர்ச்சிகளோய்ந்து எரிமலைகள் தணிந்தனவாயினும், அஞ்சத்தக்க புயல்கள் அவ்வப்போது வீசி அச்சம் விளைவித்தன. இன்றும் இமயமலைச்சாரலில் எழுகின்ற புயல்கள் மிகக்கொடியவையாயும் பெருங்கேடு செய்கின்றனவாயுமிருக்கின்றன. இக்காரணங்களால் யாவற்றிற்கும் முடிவாகிய சிவத்திற்கு ஏற்புடையவிடம் இமயமாயதுபோலும். இஃதொரு புறமிருக்க, இமயமலையினுயரமும் தனிமையும் அமைதியோடிருந்து நினைவிலாழ்வதற்குப் பொருந்தியவையாயின. இது குறித்து தட்சணா

மூர்த்தி என்ற சிவ வடிவமும் இமயத்தோடு பொருந்துவதாயிற்று. இதுபற்றி ஆங்கிலப் புலவரொருவர் பின்வருமாறு கூறுகின்றார்:—

"Siva, the Destroyer, Regenerator, and Lord of Bliss, found a fitting material symbol in the snow-clad mountain peak. Fire was his element, at once destructive, purifying, and regenerative. Possibly some active volcano in the Himalayan regions may have first suggested the association; but Siva's destructive forces would be sufficiently represented by the fury of the Himalayan storms and by the desolation caused by the frequent earth quakes which rent the Mountain sides. Nothing could more finely symbolise the spiritual power of Meditation than the serene majesty of the highest Himalayan peaks in the morning sunlight (The Ideals of Indian Art, by E. B. Havell. Chapter V Pages 75—76)

தென்னுடைய சிவன் வடநாடேகி இமயமமர்ந்ததற் கிஃதோர் காரணமாயிற்றுபோலும். தமிழ்மொழியிலுள்ள கருத்துக்கள் வடமொழி நூல்களில் மறைந்து கிடப்பதைச் சிறிது விளக்கி மேற்செல்வோம். 'மாயோன் மேய காடுறை யுலகமும்' என்பது தொல்காப்பியம். ஈண்டு, காட்டிற்குரிய தெய்வம் திருமாலெனக் கூறப்படுகிறது. வடமொழியில் இத்தகைய ஒரு கொள்கையிருப்பதாகத் தெரியவில்லை. காட்டு நிலத்தைத் தமிழர் முல்லை என்பர். முல்லை நில மக்கள் இடையர். முல்லை நிலத்தெய்வமாகிய திருமால் இடையரிடையே கண்ணனாய்த் தோன்றினன் என்பது தமிழ் மரபிற்கொத்தது. மற்றும், முல்லை நிலச் செல்வம் பாலாகும். பாலே உயிரைக்காப்பது. இதுபற்றிக் காத்தற் கடவுளாகிய திருமாலுக்கும் பாலுக்கும் ஓர் இயைபு தோன்றுகின்றது. திருமால் பாற்கடற் பள்ளி கொண்டானென்பர். அன்றியும், மந்தர மலையை மத்தாய் நிறுத்திப் பாற்கடலைக் கடைந்த ஞான்று திருமாலினை முன்னின்று நடத்தினனென்பர். இது முல்லை நிலத்தொழிலாவது

காண்க. இவற்றையெல்லாம் 'மாயோன் மேய காடுறை யுலகமும்' என்பதிலிருந்து பெறல் எளிது. இதுபோன்றே சண்டை தொடங்க வேந்தர், பகைஞர் நாட்டிலுள்ள ஆனிரை கவர்தலாகிய தமிழ் வழக்கு பாரதத்திற் புகுந்திருக்கின்றது.

கடலும் மலையுமாகிய இரண்டிற்கும் பொதுவாகிய ஓர் தன்மையாதெனின், சேய்மைப் பார்வைக்கிவையிரண்டும் நீலமாய்த் தோன்றுதலாம். சேய்மையிலுள்ள ஓர் மலையைப் பார்ப்போமாயின், அது நீல நிறமாய்த் தோன்றி, காண்பதற்கினிதாய் விளங்குகின்றது. கடலுமிவ்வாறே தோன்றி விண்ணின் நீலத்தோடு கலக்கின்றது. மலை என்ற சொல்லுக்கு நேரான வடமொழி பர்வதமாகும். பர்வதத்தின் மகளென்ற காரணத்தால் பார்வதி என்று பெயர் பெற்ற உமையவளுக்கு நிறம் நீலமாவது குறித்து நீலாம்பிகை என்றும் பெயரெழுந்தது. இனி, நீலமேகஸ்யாமள வர்ணனென்றும், கார்வண்ணனென்றும் பேசப்படுகின்ற திருமாலுக்குக் கடல்வண்ணனென்றும் பெயருண்டு. கடல்வண்ணனென்ற பெயர் நீல நிறம்பற்றியே வந்தது. நீலநிறத்தில் உமையவளுந் திருமாலும் ஒத்திருத்தல் பற்றி இருவரையும் உடன் பிறந்தாரென்று கூறும் ஒரு மரபும் உண்டு. நிற்க.

கடலிருக்குமிடத்தில் நிலந்தோன்றுவதும், நிலத்தைக் கடல் கொள்வதும் ஒவ்வொரு காலத்தில் அஞ்சத்தக்கவகையில் நிகழுமாயினும், சிற்றளவில் இடையூறின்றி எப்பொழுதுமே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. சென்னையிலுள்ள கடற்கரை முப்பது நாற்பதியாண்டுகட்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது விரிந்திருக்கின்றது. கடலில் ஆங்காங்கே புதிய தீவுகள் தோன்றுகின்றன. சென்னையையடுத்த மகாபலிபுரத்தில் கடல் உள் வந்திருக்கின்றதென்று நினைக்கவிடமுண்டு. கழுமலத்தை யடுத்திருந்த காவிரிப்பூம் பட்டினமிருந்தவிடத்திலும் கடல் முன்னிருந்த நிலையிலில்லை. சஹாரா என்ற ஆப்பிரிக்காவிலுள்ள பாலைவனம் ஒரு காலத்திற் கடலாயிருந்தது. உலாந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளில் கடலிற்கணையிட்டுத்

தடுத்து நிலத்தை மக்கள் தமதாக்கிக் கொண்டிருக்கின்றனர். இங்ஙனம் கடலிருந்தவிடம் நிலமும், நிலமிருந்தவிடம் கடலு மாவது காண்கின்றோமாயினும், புதியமலைகள் அண்மைக் காலத் திலெங்குந் தோன்றியதாக நாம் கேள்விப்பட்டதில்லை. ஆயி னும், முற்காலத்தில் நேர்ந்த பெரிய கடற்கோள்களும், புதிய நிலந்தோன்றலுமாகிய நிகழ்ச்சிகள் மறுபடியும் நடைபெறலாம்.

நானிலமென்பது தமிழில் வையகத்திற்கு மற்றொருபெய ராகும். நானிலமாவன, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். இவ் வகையிலிவற்றை வரிசைப் படுத்துவதால் மலையில் தொடங்கிக் கடலில் முடிகின்ற ஒருமுறை ஏற்படுகின்றது. 'மாயோன்மேய காடுறை யுலகமும்' என்று சூத்திரம் செய்த தொல்காப்பியனார், முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று வரிசை செய்தார். காடுகள் பெரும்பாலும் மலையின் கீழ்ப்பகுதிகளில், மலைக்கும் மருதத்துக்கும் இடையிலிருப்பதால், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையே சிறந்ததென்று கொள்ளலாம். முதல் முதல் ஞாலத்திற்றோன்றிய மக்கள், விலங்குகளை வேட்டை யாடித்தின்று காய் கனிகளையுண்டு திரிந்தார்கள். பன்னெடுங் காலத்திற்குப்பின், ஆடுமாடுகளைப் பழக்கி அவற்றினுதவி கொண்டு வாழ்க்கை நடாத்தினார்கள். இவற்றைக் குறிஞ்சிநிலை, முல்லைநிலை என்று கூறலாம். இவ்விரண்டு நிலைகளிலும் பயிர் செய்தல் அத்துணை நன்றாக முதிர்ச்சி பெற்றிலது. பயிர்செய் தலை நன்றாகக் கற்குமுன் மக்களுக்கு உணவின் கவலை ஓயாது. உணவின் கவலையே பெரிதாகவிருக்கும் வரையில் அறிவு வள ராது. மருத நிலத்தையடைந்த பின்னரே மக்கள் தமக்கு வேண்டிய உணவை முன்னரே தொகுத்து வைத்துக்கொண்டு, தம்மையும் பிறரையும் பற்றியும், விண்மண் என்பவற்றைப் பற்றியும் ஆராய்ச்சி செய்ய அமைதியுங் காலமும் பெற்றார்கள். இது குறித்தே முற்காலத்தில் தோன்றிய பெரிய நாகரிகங்க ளெல்லாம் ஆற்றங்கரை நாகரிகங்களாக விளங்கின. நைல் நதிக்கரையில் தோன்றிய எகிப்திய நாகரிகமும்; யூப்பிரட்டீஸ், டைகிரிஸ் நதிகளின் கரையில் தோன்றிப் பரவிய பாபிலோனிய நாகரிகமும்; சிந்து நதிக்கரையில் வளர்ந்தழிந்த சிலவாண்டு

கட்குமுன் வெளிப்படுத்தப்பட்ட மொஹஞ்சோடாரோ நாகரிகமும், நாம் மேற்கூறியதற்கு எடுத்துக் காட்டாய் இலங்குகின்றன. தமிழ் நாட்டிலும் வைகைக் கரையிலும், காவிரிக் கரையிலுமே நாகரிகம் முதிர்ச்சி பெற்றதென்பதை நாமறிவோம். இதன் பிறகு நாகரிகம் கடற்கரையை நோக்கிச்செல்வதாயிற்று. கொற்கையுங் காவிரிப்பூம்பட்டினமும் பாண்டிய சோழ நாடுகளுக்குத் தலைநகர்களாயது ஒருவாறிதைக் காட்டுகின்றது. இக்காலத்தில் வானூர்திகள் வாயிலாய் நடக்கும் போக்கு வரத்துக்கள் பெருகுவதால் தலைநகர்கள் கடற்கரையிலிருந்து வேறிடங்களுக்குச் செல்லும் நிலைமை ஏற்படலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசை பொருத்தமுடையதென்பதைக் காட்ட இவ்வளவு கூறலாயிற்று.

(தொடரும்.)

தமிழ் நூற்களும் கல் வெட்டுக்களும்

ஆசிரியர்,
வை. சுந்தரேச வாண்டையார்,
திருவையாறு.

நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்துக்கு நேர்.

என்ற தமிழ் முதுமகளின் அமிழ்துறழ் மொழியை உன்னி நோக்குங்கால், மனிதருக்குத் தாம் பிறர்க்குச் செய்த உதவியும் அதனால் தோன்றிய புகழும் பன்னெடுங்காலம் நின்று நிலவ வேண்டுமென்ற அவா இருத்தல் இயல்பே என்பது புலனாகும். அதனால் தாம் வருந்தித் தேடிய அரும்பெரும் பொருளை ஊருணி நீர்போல் உலகத்தார்க்கு உதவுமாறு அறஞ் செயப் புகுந்தோர்

பலர், தம் காலத்துக்குப் பின்னர் அவ்வறச் செயல் மறைந்து போகாமைப் பொருட்டும், பிறரும் தம்மைப்போல் அறஞ் செய்து புகழும் புண்ணியமும் ஈட்டற் பொருட்டும் தம்காலத்து அரசனும் பெருமக்களும் அறியப் பொது இடங்களில் பலரும் காணத் தகுதியாய் அவ் அறச் செயல்களைக் கல்லில் பொறித்து வைப்பது வழக்கமாயிருந்தது. அத்தகைய கல்வெட்டுக்கள் பல ஆயிரக் கணக்காக நம் தமிழ் நாட்டிற் காணக்கிடக்கின்றன. அவை பெரும்பாலும் பல்லவராட்சி தொடங்கியதன் பின்னரே யாம்.

இதனால் பல்லவராட்சிக்குமுன் கல்லில் எழுதும் வழக்கம் இல்லையெனக் கருதல் கூடாது. செந்தமிழ் நூற்களில் மிகப் பழையதாகிய ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்துக் காணும்

'காட்சி கால்கோ ணீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்'

(தொல்-புறத்திணையியல். 60) என்னும் வரிகளால் புறமுதுகு காட்டாது போர் செய்து பட்ட வீரர்க்குக் கல் நடுதலுண்டென்பது பெறப்படும். அந்நூற்பா விதிகொண்டு கல் நடுதலைப் பற்றிப் பாடிய பாட்டுக்கள் பல புறநானூறு, அகநானூறு, திருக்குறள், புறப்பொருள் வெண்பாமாலை, முதலிய பல நூற்களிலும் காணப்படுகின்றன. அந்நடுகலில் வீரனது பெயரும் பெருமையும் எழுதலும் உண்டு என்பது,

"அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்"

என்ற புறநானூற்றுச் செய்யுள் (264) வரிகளாலும்,

"ஆடவர், பீடும் பெயரும் எழுதி அதர் தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்"

என்ற அகநானூற்றுச் செய்யுள் வரிகளாலும்,

"அவன் பெயர் கண்மிசைப் பொறித்துக்
கவின்பெறக் கன்னாட்டின்று"

என்ற புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுவினாலும் பெறப் படும்.

ஆனால் அறங்களைப்பற்றிக் கல்லில் எழுதிவைக்கும் வழக்கம் அப்பழங் காலத்தில்லை.

இவ்வாறு அறச் செயல்களைக் குறித்துப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் தொடக்கத்தே, அக்காலத்து மன்னனது மெய்ப்புகழும், பின்னர் இன்னார் இன்ன அறத்தின் பொருட்டு இத்தனை பொருள் வைத்தார் என்பன முதலிய செய்திகளும் குறிக்கப்பெறும்.

இம் மெய்ப்புகழ்கள் * சோழ மன்னர்களில் முதலாம் இராச ராசன் காலமுதற்றான் விரிவாகக் கூறப்பட்டன என்பது தோன்றுகிறது.

இக்கல்வெட்டுக்கள் இன்றேல் தமிழ்நாட்டு வென்றி வேந்தர்களது பெருமைகளும் அக்காலத்து நாகரிக மேம்பாடுகளும், புரவலர், புலவர் முதலியோர் வரலாறுகளும், பலதூய தமிழ்ச் சொற்களும், எத்தனையோ அரிய செய்திகளும் வெளியாகாமல் மறைந்தேபோயிருக்கும். தம் காலத்துச் செய்திகளைப் பிற்காலத்தார்க்கு விளக்கும் பேரொளி விளக்கங்களாக இவை இருக்கவேண்டுமென்று கருதியேபோலும் அக்காலத்தார் கல்வெட்டுக்களைப் பழுதுறாமல் எண்ணெய் பூசிப் பாதுகாத்து வந்தனர். கல்வெட்டுக்களுக்குச் செப்புத் தகடுகளில் படி எழுதி வைத்திருந்தனர். கல்வெட்டுக்களுக்கு எண்ணெய் தீட்டியுளரா என்பதைக் கவனிப்பது கோயில் மேற்பார்வையாளர்களின்

மெய்ப்புகழாவது:—

"சீர்நான்காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி" (பன்னிரு பாட்டியல்.)

"தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீ ரடியா
லெழிலரசர் செய்தி யிசைப்பர்"

வச்சணந்திமாலை-செய்யுளியல். சூ. 34.

கடமையாயிருந்தது. இக்காலத்தில் இவ்வழக்கம் இல்லாது போனதால் எத்தனையோ கல்வெட்டுக்கள் பொறிந்துபோய்ப் பழுதுற்றன. அந்தோ! அவற்றுள் எத்தனை அரிய செய்திகள் மறைபட்டனவோ?

தமிழ் வேந்தர்களது ஆட்சிக் கதிர் மறைந்து தமிழர்களின் பெருமையும் அறிவுங் குன்றித் தமிழ்நாடு அறியாமையாகிய யிருளில் உறங்கிக் கிடந்தகாலையில் இக் கல்வெட்டுக்களின் அருமை பெருமைகளை மாந்தர் அறியாதிருந்தனர்.

அந்நிலையில் தமிழ்நாட்டின் நற்காலமாக உல்ஷ் என்ற துரை மகனார் இந்தியாவுக்கு வந்து, ஈண்டுள்ள கோயில்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்களைக் கண்டு, அவற்றின் அருமையை யுணர்ந்து அரசப் பிரதிநிதியிடம் கூறி, அக்கல் வெட்டுக்களைப் படியெடுத்து ஆராய்ச்சி செய்வதற்கென ஓர் துறை (Department) ஏற்படுத்தியதோடு தாமும் உடனிருந்து ஆராய்ந்தார். திருவாளர்கள் து. அ. கோபிநாத ராயர், வி. வெங்கையர் என்பவர்களையும் இத்துறையில் பழக்கிவைத்துச் சென்றார். இப்பெரியோர்களாலும் பின் வந்தோர்களாலும் கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுப் புத்தக வடிவமாய் வெளிவந்துள்ளன. இதுவரையிலும் ஏழு தொகுதிகள் வெளிவந்துள்ளன. எட்டாம் தொகுதியும் விரைவில் வெளிவரும். எடுத்த கல்வெட்டுக்களிலும் சற்றேறக்குறைய முப்பதினாயிரம் கல்வெட்டுக்கள் இன்னும் வெளியிடப் பெறவில்லை. இவையனைத்தும் வெளிவருமாயின் பல அரிய செய்திகள் வெளியாகும் என்பது திண்ணம்.

நிற்க, இக்கல்வெட்டுக்கள் தமிழ்நூற் பயிற்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராய்வாம்.

ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலம்

தேவாரத் திருப்பதிகங்களில் புகழ்ப்பெற்ற சிவதலங்கள் பல இத்தமிழ் நாட்டிலுள. தமக்கெனத் தனிப்பதிகம் பெற்றவை பாடல்பெற்ற தலங்களெனவும் பிறபதிகங்களைப் பாடிய பாடல்களினகத்தும், பொதுப்பதிகங்களினகத்தும்

வைத்துக் கூறப்படுவனவாய்த் தமக்கெனப் பதிகங்களில்லா-தவை வைப்புத்தலங்களெனவும் பெயர் பெறும். அத்தகைய வைப்புத்தலங்களிற் பல இக்காலத்தில் பண்டைப்பெயர் சிதைந்தும், வேறு பெயர் பெற்றும் அவை யாண்டுள என அறிதற்கு மியலாதிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்வதற்குக் கல்வெட்டுக்கள் பெரிதும் உதவி செய்கின்றன. எடுத்துக்காட்டாக, இரண்டொரு தலங்களைப்பற்றி ஆராய்வாம். (முன்னும் பல காலங்களில் திருப்பிடவூர், பிரம்பில், என்னும் தலங்களைப்பற்றி ஆராய்ந்து வெளியிட்டுள்ளேம்.)

திருநாவுக்கரசரது தலத் திருத்தாண்டகம் நான்காம் திருப்பாட்டில் ஏமநல்லூர்* என்ற தலம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அது யாண்டையதென ஆராய்வுழி, ஒரு கல்வெட்டு அதனைப் புலப்படுத்துகின்றது. தஞ்சாவூர் சில்லா, கும்பகோணந்தாலூகா திருப்பனந்தாளுக்கு அருகில் திரைலோக்கி என்று ஓர் ஊர் உளது. அவ்வூருக்குக் கிழக்கே யொன்றும் மேற்கே யொன்றுமாக இரு சிவன் கோயில்கள் உள. அவைகளுள் கிழக்கில் உள்ள கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்களுள் முதலாம் இராச ராச மன்னனது அருமை மகனாகிய கங்கைகொண்ட சோழனது பதினொருவது இராச்சிய ஆண்டில் தீட்டப்பட்டதே பழமையானதாகும். அதில் இவ்வூர் "ராஜேந்திர சிம்ஹ வளநாட்டு மண்ணிநாட்டு திரைலோக்கி மகாதேவி சதுர்வேதி மங்கலம்" என்று குறிக்கப்பெற்றுளது. இவ்வூரைக் குறிப்பிடும் தஞ்சை இராச ராசேச்சுரத்தில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசராசன் கல்வெட்டொன்றில்† "ராசேந்திர சிம்ஹ வளநாட்டு மண்ணிநாட்டு ஏமநல்லூ

---

* எச்சில் இளம ரேம நல்லூர் இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி
அச்சிறு பாக்க மளப்பூர் அம்பர் ஆவடு தண்டுறை யழுந்தூர் ஆறை
கச்சினங் கற்குடி கச்சூர் ஆலக் கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி
கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங் கயிலாய நாதனையே காண லாமே.

† S. I. I. Vol. II, Part III, Page 317, Line 7. 'ராஜேந்திர சிம்ஹ வளநாட்டு மண்ணிநாட்டு ஏமநல்லூராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதிமங்கலத்து சபையார் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு'.

-ராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதி மங்கலம்'' என்ற தொடர் காணப்படுவதால், இக்காலத்துத் திரைலோக்கி என வழங்கப்படும் ஊரே ஏமநல்லூர் என்னும் வைப்புத்தலமென்பது வெளிப்படுகிறது. முதலாம் இராச ராச மன்னன் தன் மனைவியின் பெயரை அவ்வூருக்கிட்டுத் திரைலோக்கி என மாற்றினன் போலும்.

குறிப்பு:—இத்திரைலோக்கி திருவிசைப்பாப்பெற்ற தலமன்று.

சில குறிப்புக்கள்.

இராசேந்திர சிங்க வளநாடு:—முதலாம் இராச ராசன் காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் இராசேந்திர சிங்க வளநாடு என்பது ஒன்றாகும். இது காவிரிக்கும், வெள்ளாற்றிற்கும் (நிவா) இடையிலுள்ள நிலப்பரப்பாகும். முதலாம் இராச ராசன் காலம் முதல் அதிராசராசன் காலம் முடிய இதற்கு இப் பெயர் வழங்கி வந்தது.

மண்ணிநாடு:— மேற்கூறிய இராசேந்திர சிங்க வளநாடானது, மண்ணிநாடு, இன்னம்பர்நாடு, பொய்லகநாடு, என்பனவாகப் பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் மண்ணிநாடு என்பது ஒன்றாகும். ஏமநல்லூராகிய திரைலோக்கி மகாதேவி சதுர்வேதிமங்கலம், இடவை, நாட்டார் மங்கலம், பனந்தை (பனந்தாள்) வேம்பற்றூராகிய ஆவணி நாராயணச் சதுர்வேதிமங்கலம், திருக்குடித்திட்டை, (திருக்களத்திட்டை) திருவிசலூர், ஆகிய இவ்வூர்கள் மண்ணிநாட்டைச் சார்ந்தனவென்று தஞ்சை இராசராசேச்சுரத்துக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

திருச்சிற்றேமம்

சோழநாட்டுத் தேவாரம்பெற்ற தலங்களுள் திருச்சிற்றேமம் என்பது ஒன்றாகும். இது திருஞான சம்பந்தப் பெருமானல் பாடப்பெற்ற பெருமையும் பழமையும் வாய்ந்தது. இத்தலம் திருத்தருபூண்டி தாலூகாவிலுள்ள சிற்றும்பூரே என்று சிவஸ்தல மஞ்சரி ஆசிரியர் குறித்தார். அது தவறென்று இப்போது புலனாகிறது. அவர் குறித்த சிற்றும்பூர் சிவன் கோயிலில் காணப்படும் முதற் குலோத்துங்கன் கல்வெட்டுக்களில் வேண்டலைக் கூற்றத்துச் சிற்றுமூர் என்னும் பெயருடையதாய்க்

காணப்படுகிறது. ஆனால் பட்டுக்கோட்டைத் தாலூகாவி லுள்ள திருச்சிற்றம்பலம் என்ற ஊர்ச் சிவன் கோயிலிற் காணப்படும் பல கல்வெட்டுக்களிற் முதற் பராந்தகனது கல் வெட்டு ஒன்று அவ்வூரைத் திருச்சிற்றேமம் என்று உணர்த்துவ தாலும் ஏனைய கல்வெட்டுக்களும் அவ்வாறே அவ்வூர்ப் பெய ரைக் குறிப்பிடலாலும் பிற்கூறிய வூரே அத்தலமென்பது போதரும். (Annual Reports on Epigraphy for 1926).

தலைஞாயிறு

இது, ஞானசம்பந்தப்பெருமான், சுந்தரமூர்த்தி அடிகள், இவர்களால் பாடப்பெற்ற திருக்கருப்பறியலூர் என்னும் தல மாகும். இது திருப்புன்கூருக்கு அண்மையில் உள்ளது. இது மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் தனிநாயகச் சதுர்வேதி மங்கலம் என்று வழங்கப் பெற்றது. பின்னர் அதுவே தலை ஞாயிறு என்று மருவி வழங்கலாயிற்று. (Annual Reports on Epigraphy for 1926—27. Inscriptions 140 to 150.)

யாப்பருங்கலக்காரிகை ஆசிரியரின் பெயர்

புலவர்களின் பெயர்கள் பிற்காலங்களில் வழங்குவோரால் நிகழ்ந்த மருவினாலோ, அல்லது ஏடு எழுதுவோர்களின் கவனக் குறைவாலோ சிற்சில எழுத்துக்கள் மாறிப் பொருளும் மாறு பட்டனவாய் வழங்கிவருகின்றன. எடுத்துக்காட்டாக, இக் காலத்துச் செய்யுள் இலக்கணம் கற்போரெல்லாராலும் பெரி தும் பயிலப்பட்டு வருகின்ற யாப்பருங்கலக்காரிகை ஆசிரியர் பெயரிலும் இம்மாறுபாடு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். அவர் பெயர் அமுதசாகரர் என்றே காரிகை நூற் பதிப்புக்களில் காணப்பெறுகின்றது. ஆனால் அப்பெயர் அதுவன்று. அமித சாகரர் என்பதேயாம். அதற்கு அந்நூற் பாயிரத்திலுள்ள 'அளப்பருங் கடற்பெயர் அருந்தவத்தோனே' என்ற அடியே போதுமான சான்றாகும். அளப்பரும் என்றது, அமிதம் என் றும், கடல் என்பது சாகரம் என்றும் பொருளுணர்த்தும். ஆகையால் அமித சாகரர் என்பதே அவர் பெயராயிருத்தல் வேண்டுமென்று ஆசிரியர் திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் முதற்கண் எழுதி வெளியிட்டார்கள்.

அவர்கள் கொண்ட முடிபு உண்மையே யென்பது மாயூரந் தாலுகாவிலுள்ள திருநீடூர் என்னும் தேவாரம் பெற்ற தலத்தில் பொறிக்கப்பெற்றுள்ள முதற் குலோத்துங்கனது முப்பத்தெட்டாவது ஆண்டுக் கல்வெட்டில் காணப்படும் ஒரு செய்யுளால் உறுதியாகும். அது பின்வருமாறு:—

சுவஸ்தி ஸ்ரீ

(1) எண்டிசை உலகை ஒருகுடை நிழற் கீழிருத்திய குலோத்

(2) துங்க சோழற்கி யாண்டொரு முப்பத் தெட்டினிற் சோணாட்டிசை

(3) வளர்திரு விந்தளூர் நாட்டுன்..................டைநீடிய நீடூர் உமையோ

(4) டு நிலாவின பெருமாற்கு வந்து...........லைமலை டெ[ய] வச் சிலையாலுந்த

(5) ம விமான மிங்கமைத்தான் தண்டமிழ் அமிர்த ஸாகர முனியை ஐயங்கொ

(6) ண்ட சோழமண்டலத்துத் தண்சிறு குன்றநாட்டுத் திருத்து...............

(7) னூற்காரிகை அவனைற் கண்டவன் மருமான் காரிகை குளத்தூர்

(8) காவல் நிலாவினன் எவர்க்குங் கருணையுந்தி[யாகமுங்] காட்டியமிழ

(9) லைநாட்டுவேள் கண்டன் மாதவனே.

(Epigraphia Indica Vol. 18 Part II Nidur Inscriptions by Mr. K. V. Subramania Aiyer.)

இக்கல்வெட்டைப் பற்றிய சில குறிப்புக்கள்:—

இந்தளூர்:— இது மாயூரத்திற்கு வடபுறத்திலுள்ளது. இதுபோது திருவழுந்தூர் என்று வழங்கப்பெறுகிறது.

மிழலை நாடு:—இராசேந்திர சிங்கவளநாடு பலநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் மிழலை நாடு என்பது ஒன்றாகும். இது காவிரிக்கு வடக்கிலுள்ளது.

யாப்பருங்கலக்காரிகையைப் பாடுவித்த இடம்:—செயங் கொண்ட சோழ மண்டலத்து, சிறுகுன்ற நாட்டுக்காரிகைக் குளத்தூர்.

ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற தலைவர்:— யாப்பருங் கலக் காரிகையைப் பாடுவித்தவரின் வழித்தோன்றல் ஆவர்.

திருமந்திரவோலை என்ற சொற்றொடர்க்குப் பொருள்

தமிழ் நூற்களுள் பொருள் விளங்காது கிடந்த சில சொற் களுக்கு, கல்வெட்டுக்கள் பொருள் விளக்குவனவாயுள்ளன. எடுத்துக்காட்டாக,

"முறையிடத் திருமந்திர வோலையாண்
முன்வணங்கி முழுவதும் வேந்தர்தாம்
திறையிடப் புறநின்றன ரென்றலும்
செய்தநோக்கில் வந்தெய்தியிருக்கவே"

என்னும் கலிங்கத்துப்பரணி 315-ஆம் தாழிசையில் காணும் திருமந்திர வோலையாள் என்னும் தொடருக்குப் பொருள் விளங்குவது அரிதாயிருந்தது. அதன் பொருள் சிதம்பரத்தில் பொறிக்கப்பெற்றுள்ள ஓர் கல்வெட்டில் (S. I. I. Vol. IV Inscription No. 222)

"குலோத்துங்க சோழன் திருமாளிகைப் புறவாயில் வடப் பக்கத்திலே கல்வெட்டக்கடவதாகப் பெறவேணுமென்று தான் நமக்குச் சொன்னமையில் இப்படி செய்யக் கடவதாகச் சொன் னோம். இப்படி செய்யப் பண்ணுவது எழுதினேன் திருமந்திர ஓலை இராசேந்திர சிங்க மூவேந்த வேளான்" என்ற தொடரி லேயிருந்து அப்பெயர் அரசன் ஆணையை எழுதுவோர்க்கு வழங்கி வந்ததெனத் தெரிகிறது.

எனவே இக்கல்வெட்டு ஆராய்ச்சியால் தமிழ் நூற்களில் விளங்காது கிடக்கும் இவைபோன்ற பல செய்திகள் ஐயமற வெளிப்படும் என்பது திண்ணம். ஆகையால் தமிழ்மொழியின் ஆக்கங் கருதும் அன்பர்கள் பலரும் கல்வெட்டாராய்ச்சியில் முனைந்து பயிலுதல் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் பேருதவி செய்ய ஏதுவாகும்.

தமிழிலக்கிய மகவு

ஆசிரியர்

திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள், M. A.

தமிழிலக்கியத்தே ஆங்காங்கே காணப்படும் மகவினைப் பற்றிய செய்திகளுட் சில ஈண்டுத் தரப்படும். அவற்றைக் காணும் அன்பர்கள் அவைபோன்ற பிறவற்றையுங் கண்டறிந்து மகிழ்வார்களென்னுங் கருத்துடனே இக்கட்டுரை எழுகின்றது. மக்களில்லாதவர் பொன்னுடையரேனும், புகழுடையரேனும் மற்றென்னுடையரேனும் உடையரல்லர் என்னும் நளவெண்பாக் கருத்தை அறியார் தமிழிலக்கிய மறிந்தாருள் இரார் என்பது ஒருதலை. அக்கருத்தைத் திருவள்ளுவர்தம் அரிய நூலினுங் காணலாம். ஒருவன் பெறக்கூடிய பேறுகள் பலவற்றுள் அறிவறிந்த மக்களைப் பெறுதலே பெரும்பேருக வள்ளுவரால் வாழ்த்தியுரைக்கப் பட்டுள்ளது. அதனையே புறநானூற்றுச் செய்யுளொன்றும் தாங்கிநிற்கின்றது. அச் செய்யுள் பாண்டியன் அறிவுடை நம்பியால் அருளப்பட்டது. அதன்படி, படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் பெருஞ் செல்வத்தை உடையரேனும், அறிவை இன்பத்தான் மயக்குகின்ற மக்களையில்லோர் பயனற்ருேர் ஆவர் என்பது அறியப்படுகின்றது.

இங்ஙனம், மகவினை யில்லார்க்கு இல்லை பலன் என இவையுரைப்பதற்கேற்ப, மகவினையுடையார்க்கு உள்ளபலனை அந்நூல்களும் வேறு பிற நூல்களும் விதந்தோதக் காண்கின்ருேம். "மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம்" என்ருர் வள்ளுவனர். மக்களது மெய்யைத் தாம் தீண்டுதல் பெற்ருேர்க் கின்பம் என்றும், மக்கள் தமது மெய்யைத் தீண்டுதலும் பெற்ருேர்க்கு இன்பம் என்றும் கொள்ளக்கூடிய முறையில் இக்குறட்பகுதியை வைத்த வள்ளுவரின் வாய்மையை என்

னென்பது! தனது மக்களைப் பிரிந்து சில்லாண்டு சென்று பின் அவரைக்காணலுற்ற நளன் ஓடிவந்து அவரையெடுத்து வீரப் புயத்தணைத்து 'மக்காள் நீர் என் மக்கள் போல்கின்றீர்; யார் மக்களென்றுரைத்தான்' எனப்படிக்கின்றோம் அன்றோ? அவன் அவரைத் தனது வீரப் புயத்தே விரும்பியணைத்த காலத்து உற்ற இன்பத்தை யாவரே சாற்றவல்லார்? புறநானூற்றிலும் மக்கள் உடலுறுதலால் வரும் இன்பம் உரைக்கப்பட்டுளது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் தன் பகை வருடைய செயலாகக் கோவூர்கிழார் ஒரு பாட்டுப்பாடியுள்ளார். (புறம் 41) அதனுள், அப்பகைஞர் தத்தம் பூங்கட் புதல்வரை முத்திச்செல்லும் செய்தி செப்பப்பட்டுளது. புதல்வர் உட லுறுதலால் வரும் இன்பம் என்பது ஒன்று இலதேல், போருக்குப் புறப்படும் அவர் அப்புதல்வரை முத்திக்கொண்டு சென்றிரார் அன்றோ? அதிலும், உறங்கிக்கொண்டிருக்கும் மகாரது கண்ணை முத்திப்போகார் அன்றோ? இனி, குழவி ஞானசம்பந்தமும் அழைத்தவருடைய செழுமுகங்களைத் திரு நகையால் மலர்வித்தும், வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செல உகைத்தும், உருகி மனங்கரைந்து அலையுமாறு உடனணைந்து தழுவியும், பெருகிய இன்பினைப்பெருக அளித்ததாக அன்றோ சேக் கிழார் பெருமானும் வாக்களித்திருக்கின்றார்! மேலும், பள்ளி யிலிருந்து கொண்டுவரப்பட்ட தமது பிள்ளை கறியமுதாகுமே எனுங்கருத்தால் திருவெண்காட்டு நங்கையார் அதனை உச்சி மோவாது, மார்பின்கண் அணைத்து முத்தமுண்ணுதிருந்தார் என்றும், பின்னர்க் கறியான சீராளன் பரமரருளால் ஓடிவந்த காலையில் அவனையெடுத்துத் தழுவித் தமது கரமுன் அணைத்துக் கணவன் சிறுத்தொண்டனார் கையிற் கொடுக்க, அவரும் கையில் எடுத்துக் களிகூர்ந்தார் என்றும் அப்பெரியாரே உரைக்கக் காண்கின்றோம். இதனாலும் மகவினது உச்சிதனை முகத்த லாலும், அதனைமார்பிலணைத்து முத்தமுண்ணலாலும், எடுத்துத் தழுவலாலும், கையில் வாங்கிக்கொள்ளலாலும் வருவதோர் ஊற்றின்பத்தை உற்றார் உளர் என்பது தெளிவாகின்றது.

இவற்றையெல்லாம் கவிஞர் பாரதியாரும் தமது "கண்ணன் —என் குழந்தை" என்ற தலைப்பின்கீழ் தந்துள்ளார்.

"சின்னஞ் சிறுகிளியே — கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
....
....
உச்சிதனை முகந்தால் — கருவம்
ஓங்கி வளருதடி
கன்னத்தில் முத்தமிட்டால் — உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ — கண்ணம்மா
உன்மத்த மாகுதடி"

என்னும் அடிகளை நோக்குக.

மெய்தீண்டலால் வரும் இன்பம் இன்னணம் இயம்பப் பட்டுளதுபோல், மகாரின் மழலைமொழியால் வரும் இன்பமும் மொழியப்பட்டுளது. தத்தம் மக்களுடைய மழலைச்சொற்களைக் கேட்டிராதவர் அன்றோ குழலினிது யாழினிது என்று கூறுவர் என்கிறார் நாயனார். "யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா பொருளறி வாரா ஆயினும் தந்தையர்க்கு அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை" என உரைத்துள்ளார் ஔவைப் பிராட்டியார். புதல்வர்தம் மழலை இனிது என்றாராயினும், இனம்பற்றிப் புதல்வியார் மழலையும் இனிது என்றார் எனக் கோடலே சிறப்புடைத்து. ஆனால், "மகாரின் மழலை யாழொடு ஒவ்வாவிட்டாலும்" என்று பொருள்படும்படி "யாழொடுங் கொள்ளா ஆயினும் என்று கூறிய அவர் வாக்கு நாயனாரின் வாக்குக்கு ஒவ்வாது என்பதில் ஐயமுண்டோ? பிள்ளை யொன்றும் பெற்றிலா அப்பிராட்டி, தம்பிள்ளை சொல்லைக் கேட்டிருக்க முடியாதன்றோ? தம்பிள்ளை சொல்லைக்கேளாத அவர், 'மழலை யாழொடு பொருந்தாவிட்டாலும்' என்று சொல்லி னமையால் தாமே நாயனார் குறளுக்குக் கரியாயினாரன்றோ? மக்களது சிறு குதலையைக் கேளாத செவியும் செவியோ என்ற கருத்து நளவெண்பாவில் வருதலையுங்காண்கிறோம். "காரண

மின்றி நகைக்கும்பொழுது சிறிதே தோன்றும் அரும்புபோலும் பற்களோடும், பேச முயல்கின்ற இனிய மழலைச்சொற்களோடும் மடிமீதிருக்க வருகின்ற தம் புதல்வர்மேலுள்ள புழுதி தம்மேற் படிந்து அழுக்காகப் பெறுகின்றவர்களே நல்வினையாளர்கள்" என்று துஷ்யந்தன் கூறியதாகச் சாகுந்தல நாடகத்தே காண்கின்றோம். பாரதியாரும் "சொல்லும் மழலையிலே கண்ணம்மா, துன்பங்கள் தீர்த்திடுவாய்" என்று பகர்ந்துள்ளார்.

மகவினைக் காண்டலாலும் ஓர் இன்பம் உண்டு என்பது உய்த்துணர் வகையான் ஒரு புறநானூற்றுச் செய்யுள்கொண்டு அறியப்படுகிறது. தனக்குப்பிறந்த தவப்புதல்வனைக் கண்டும் அதியமானது சினம் தணியாதிருந்தது. அதைக்கண்ட ஔவையார் சொல்லியது இது:—"செறுவர் நோக்கியகண் தன்சிறுவனை நோக்கியுஞ் சிவப்பானாவே." இதனால், சிறுவனை நோக்குதலால் ஓரின்பம் உண்டாதலில்லை என்பது கருத்தன்று. மற்று, அதியனது பகைவர்மாட்டு வெகுளி பெரிதாக இருந்தது என்பதே கருத்து. இப்பகுதியிலிருந்து, சிறுவனைக்காணின் சினம் தணியும், அஃது இக்கால அங்ஙனம் ஆகாதது வியப்பே என்பதே பெறப்படும். குழந்தையைக் காண்பதால் ஓரின்பம் உண்டாம், அவ்வின்பத்தின்முன் வெகுளி நில்லாதாகும் என்ற இக்கருத்தே பாரதிப்பெரியாராலும் ஓதப்பட்டுளது. அதனை "முல்லைச் சிரிப்பாலே — எனது மூர்க்கந் தவிர்த்திடுவாய்" என்பதனால் அறிக.

இனி, மகாரின் படம் சிலவற்றைக் காண்போம். சாகலாசனார் என்னும் புலவர் அகநானூற்றுள் தந்துள்ள ஒன்றில் ஒரு குழவியின் கையும் வாயுமே வருணிக்கப்பட்டுள. ஆயினும், அவற்றாலேயே ஒருகுழந்தை தென்படுவதுபோற்றோற்றுகிறது. அக்குழந்தையின் கை தாமரையிதழை யொத்திருக்கிறதாம். தாமரையிதழ் என்றவுடன் அதன் சொர சொரப்பு கைக்குமுண்டோ என்னும் ஐயங் களையவேண்டி, தாமரையின் உள்ளிதழ் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலும், உள்ளிதழ்க்கு அயலே உள்ள இதழையொத்தன அக்கைகள் என இயம்பப்பட்டுள்ளன. அதனால், கைகளின் வெண்சிவப்பு நிறமும்

மென்மைத்தன்மையும் பெறப்பட்டன. மெலும், அக்கைகள் இலக்கணக்குறையற்றவை எனக் கூறப்பட்டுள்ளன. அதாவது ஆவை எல்லா இலக்கணமும் நிரம்பியவை என்றவாறு. அதன் வாய் அழகிது என்று சொல்லப்பட்டுள்ளது. பவளத்தை ஒரு புறமும் அவ்வாயை ஒருபுறமும் வைத்துநோக்கினால் பவளம் 'இதன்முன் நான் நிற்கத்தக்கேனோ' என்று மருண்டு ஓடிவிடும் அவ்வளவு சிவப்பு நிறமுடையது வாய் என்றவாறு. அவ் வாயினின்று தோன்றுஞ் சொற்களோ தேனினும் இனியவை. அவை நகைப்பை விளைக்கத்தக்கவை. காரணம்; குழவிசொல்ல நினைக்கும் சொல் நாக்கொடு சேர்ந்து வராமையே. அம்மா என அழைக்க நினைக்கும் குழவி 'மா' என்று கூறுகிறது. அப்பா என விளிக்க நினைந்து 'பா' எனவே கூறுகின்றது. இவையெல்லாம் அமையாவென்று அவ்வாண்குழந்தை பொன்னால் ஆகிய அணி வேறு தாங்கி நிற்கிறது. இக்குழந்தையைக் கண்டால், பெற்றோரின் பகைவர்கூட எடுத்தணைத்து முத்திக் கொள்ள விரும்புவார் என்பதில் ஐயமுண்டோ? இக்குழந்தைப் படத்தைக் கீழ்வரும் அடிகள் காட்டுகின்றன,—

> " நாயுடை முதுநீர்க் கலித்த தாமரைத்
> தாதின் அல்லி யயலிதழ் புரையும்
> மாசில் அங்கை மணிமருள் அவ்வாய்
> நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்
> யாவரும் விழையும் பொலங்தொடிப் புதல்வன் "

மற்றோர் குழந்தையின் படத்தைப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று காட்டுகின்றது. அம்மகவு பெரிய இடத்திலே பிறந்து வளர்ந்து வருகிறது. அடிமேல் அடிவைத்துத் தளர்ந்து தளர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக நடக்கிறது. நடக்கும் பொழுதே தனது சிறிய கையை இப்படியும் அப்படியும் நீட்டுகிறது. நீட்டிக்கொண்டே உள்ளிடம் சேர்கிறது. அங்கே அதன் தந்தையார் உண்ண உட்கார்ந்திருக்கிறார். அருகேவந்து கையை உண்கலத்தில் இடுகிறது. இட்டுத் தோண்டுகிறது. தோண்டினதைத் தரையிலே நழுவவிடுகிறது. அதனையே மீண்டும் எடுத்துக் கலத்திற் போடுகிறது. சிறிதெடுத்து வாயாற்

கௌவுகிறது. பின் அக்கையையே மீண்டும் கலத்தில் இட்டுத் துழாவுகிறது. கொஞ்சம் சோற்றை எடுத்து வாயிற் கொள்கிறது. கைக்கெட்டியதெல்லாம் வாய்க்கு எட்டி விடுகிறதா? சிலசோறு கீழே விழுந்து விடுகின்றன. அவற்றுள் சில அதன் மார்பிலேயே விழுந்து கிடக்கின்றன. போதாக்குறைக்கு தந்தையாருக்கு வேறு, சோறுஊட்டவும் தொடங்கிவிடுகின்றது. அது அவர் வாயிற்பாதி உடம்பிற்பாதி சேர்கிறது. தந்தையார் உடனலக்கலை நன்றாகக் கற்றவர். குழவியோ அழுதகண்ணீர் துடைத்த கையொடு, தவழ்ந்து நடந்து புழுதிபடிந்த கையோடு கையோடு கொடுக்கிறது சோற்றை. பெறுவதா விடுவதா என்ற ஆராய்ச்சியே கிடையாது அப்பெரியார்க்கு. அவருடைய அறிவெல்லாம் எங்கேயோ போய்விடுகிறது. அவர் அறிவைக் குழந்தையின் இன்ப அன்பு மயக்கிவிடுகிறது. ஆ! இக்குழந்தையின் பெருமை என்னே!

இன்னொரு மகவினை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தந்திருக்கிறார்கள். அதனையுங்காண்போம். அக்குழந்தை தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கிறது. கள்ளங் கபடு வந்து இன்னுங் குடிகொள்ளாத பேதை அக்குழந்தை தெருவில் திருவிடை மருதப்பர் உலா வருகின்றார். அவர் யாவர் என கேட்கிறாள் அச்சிறுமி தன் அன்னையை. "நம்மையெல்லாம் ஆட்கொண்டு நாம் வேட்டவையளிக்க அம்மையொடும்வரும் அப்பர் அவர்" என்னும் விடையைப்பெறுகிறாள். உடனே அவர் முடியில் உள்ள அம்புலியை வாங்கித்தருமாறு வேண்டுகிறாள். கேட்ட அன்னை அஃது அவ்விடம் விட்டுப் பெயர்ந்தால் வேறெங்கும் உருவொடு நிற்கமாட்டாது என்று கூறுகிறாள். பின், அவர்கையிலுள்ள மானை வாங்கித்தருமாறு கேட்கிறாள் சிறுமி. அன்னைநகைத்து அம்மானின் முழக்கத்தால் அண்டமெல்லாம் உதிருமே எனக்கூறி வாயையடக்குமாறு பணிகின்றாள். சிறுமியோ அடங்காது மற்றொன்று கேட்கிறாள். இப்போது தன் மரப்பாவைக்காக அவரது தோள்மீதுள்ள தொடையை வாங்கித்தருமாறு வேண்டுகிறாள். வேண்டுவதோடு இப்பொழுது நிற்க மனமில்லை அவளுக்கு. ஏதேனும் ஒவ்வோர்

ஏதுகாட்டிக் கேட்டதெல்லாம் மறுக்கப்பட்டதைக் கண்ட அவனுக்கு இதுவும் கிடைக்காதோ என்ற ஐயமே பெரிதாகி விடுகிறது. அதனால், தாயின் முன்றானையைத் தொட்டு அலைக் கழுறுகிறாள் கேட்குங்காலே. தாய் பார்க்கிறாள். சமாதானம் கூறிப்பயனொன்றும் எய்தாது என நினைத்துச் சமாதானம் ஏதோ கூறுவாள்போலக் கூறி, முனிவாள்போல் முனிந்து 'வாய்தன்னை அடக்கு' என்று அடக்கிச் செல்கிறாள். அம்மகவும் வீட்டினுள்ளே புகுந்துவிடுகிறது அழுதுகொண்டே. இக் குழவிப்படத்தால், அ்தன் கண்டதைக்கேட்கும் இயல்பும், கேட்ட ஒன்றைப் பெறாவிட்டால் துணியைப் பிடித்திழுத்துத் துன்பந்தரும் இயல்பும் செவ்வனே தெளியப்படுகின்றன.

மகாரின் பண்புகள் இன்னுஞ் சிலவற்றையும் தமிழிலக் கியத்தில் நாம் காணலாம். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் மலயமானுடைய மக்களை யானை இடறும் பொருட்டு விடுமுன் கோவூர்கிழார் பாடியதாக ஒரு பாட்டு புறநானூற்றிற் காணப்படுகிறது. அதிலிருந்து அப்புன்றலைச் சிறுவரிருவரும் தாய்தந்தையரிடமிருந்து பிரித்துக் கொணரப் பட்டமையை நினைத்து அழுதுகொண்டிருந்தனரென்றும், அவ் வழுகையைச் சற்றுநேரங் கழிந்தபின் மறந்தனர் என்றும், அங்ஙனம் மறப்பதற்கு காரணமாயிருந்தது அவரை இடற நிற்கும் களிற்றைக் கண்டமையே என்றும், பின் மன்றினைச் சுற்றிப்பார்த்து வெருவி யழுதனர் என்றும் அறிகிறோம். இதனால், சிறுமகார் தாய் தந்தை சுற்றம் இல்லாவிடத்தே அழுவரென்பதும், விளையாட்டுப் பொருளைக் கண்டால் சற்று நேரம் அழுகையை அகற்றுவரென்பதும், மீண்டும் அவ்விளை யாட்டுப்பொருள் ஒருபொருளாகாது பழைய அழுகை வருதலு முண்டென்பதும், பழக்கமில்லாத மன்றிலோ வேறிடத்திலோ சேர்க்கப்பட்டால் அவர்களுக்கு அச்சமுண்டாமென்பதும் அறியப்படுகின்றன.

மகாரின் மற்றொரு பண்பினை "மண்ணியல் சிறுதேருள்" காண்கிறோம். அயல் வீட்டுக் குழந்தையுடன் அக்குழந்தைக்கு

உரிய பொன்வண்டி கொண்டு விளையாடி வந்த உரோகசேனன் என்னுஞ் சிறுவன் பொன்வண்டியை எடுத்துக்கொண்டு அக் குழந்தை தன்வீடு சேர்ந்தபிறகு வருந்தி யழுதான் என்றும், தனக்கும் பொன்வண்டியே வேண்டுமெனத் தன் அன்னையின் தோழி இரதசேனிகையிடம் விரும்பி யுரைத்தான் என்றும், அவள் ஒரு மண்வண்டி செய்து கொடுப்பப்பெறாது மறுத்து அழுது கொண்டிருந்தானென்றும் அறிகிறோம். அச்சிறுவனை யெடுத்துக்கொண்டு இரதசேனிகை வசந்தசேனை யெனும் அவனது மாற்றாந்தாயிடம் செல்ல, அவள் உசாவியறிந்து தன் அணிகலன்களைக் கழற்றிக்கொடுத்துப் பொன்னியல் வண்டி பெறுமாறு சொல்ல, அச்சிறுவன் பெற்றுக்கொள்ள மறுத்தான் என்றும் அறிகிறோம். இவ்விடத்தில் அச்சிறுவனின் உயரிய அறிவு ஆசிரியரால் எடுத்துக் காட்டப்பட்டுளது. வசந்தசேனையை அவன் முன்பார்த்திராதவன் ஆதலால், அவள் தன் அழுகைக்குக் காரணம் வினவியதும் 'அவள் யார்' என இரதசேனிகையைக் கேட்கிறான். அவள் 'உன் தாய்' என்ன, அவன் 'என் தாயாயின் எப்படி அலங்காரமுடையளாயினாள்?' என்று கேட்கிறான். அதற்குள்ளாக, வசந்தசேனை தனது அணிகளைக் கழற்றி "இப்பொழுது நான் உன் தாயாயினேன், இவ்வணிகலன்களைப் பெற்றுக்கொள்" என்று கூறுகின்றாள். சிறுவன் 'நீ அழுவதால் நான் பெறமாட்டேன்' என்று கூறுகின்றான். அச்சிறுவனுக்குத் தந்தை சாருதத்தர் முன் பெருஞ் செல்வராயிருந்து அக்காலை வறிஞராயுள்ளது தெரியும். தந்தை வறியராயிருக்கத் தாய் எப்படி அவ்வளவு அணிகலன்களை அணியக்கூடும் என்ற ஐயம் அவன் அறிவுக்குத் தோன்றுகின்றது. வசந்த சேனையோ இவன் சொற்களால் ஒருபுடை மகிழ்ந்து தன் அணிகளைத் தந்து தாயாயினேன் என்கிறாள். அணிகளைக் கழற்றிவிட்டமையால் அலங்காரமற்றவள் ஆனதோர் காரணம் பற்றியே தான் தாயாயினதாகவும், அவ்வணிகலப் பொருளை அவனுக்குக் கொடுத்து விட்டதாலும் தாயானதாகவும் கருத்துத்தோன்றும்படி அவள் கூற்று உளது. அழுது கொண்டு கொடுப்பவரிடம் வாங்கக் கூடாது என்ற எண்ணம் அச்சிறுவனிடம் தோன்றியதும் அவன் பண்பொன்றை உணர்த்தும் அன்றோ!

நளன் தன் மக்களோடும் மனைவியோடும் காடு செல்லக் கருதிச் சென்று கொண்டிருக்குங்கால், சிறிதே தொலை சென்றதும் அவனுடைய மக்கள் வருந்தி " எம் தாயே, எம் தந்தையே, வழியானதெல்லாம் கடந்தோமா? " என்றனராம். இதனாலும், மகாரின் இயல்பினுளொன்று அறியப்படும். அது, சிறுவர் நடந்து வருங்கால் விரைவிலேயே 'வீடு வந்துவிட்டதா, ஊர் வந்துவிட்டதா' என்று கேட்பதனோடு ஒக்கும்.

இன்னணம், சேயைப்பற்றி கூறிவருங்கால் சேய்க்கும் தாய்க்குமுள்ள தொடர்பு ஒன்று புலப்படுகின்றது. அதனை தமிழிலக்கியமெங்கும் பரக்கக்காணலாம். தாய் ஏதோ காரணம் பற்றி அடிக்கும்போது கூட, குழந்தை அன்னாய் என்றோ அம்மா என்றோ அவளையே அழைக்கின்றது. இக்கருத்தை அம்மூவனார் என்ற ஒரு புலவர் குறுந்தொகைப்பாட்டு ஒன்றுள் வைத்தமைத்திருக்கின்றார். அப்பாட்டு வருமாறு:—

" தாயுடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு
அன்னா யென்னுங் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை யளிப்பினும்
நின் வரைப்பினள் என்றோழி
தன்னுறு விழுமங் களைஞரோ இலனே "

இக் கருத்தையே தாங்கி நிற்கிறது குலசேகராழ்வார் பாசுரம் ஒன்றும். " அரிசினத்தால் ஈன்றதாய்அகற்றிடினும் மற்றவடன் அருள் நினைந்தே அழுங்குழவி யதுவேபோன்று இருந்தேனே " என்பதை நோக்குக.

(தொடரும்.)

பெரிய புராணப் பதிப்பு வரலாறு

Bibliography of Periyapuranam

திருவாளர். தி. த. நாராயணசாமியவர்கள்

அச்சுக்கலை. ஜான் கூட்டன்பர்க் (John Gutenberg) முதன் முதல் அச்சுக்கலையை, இங்கிலாந்தில் வெஸ்டுமினிஸ்டரில் காக்ஸ்டன் (Caxton) துரைமகன் கி. பி. 1475ல் ஆங்கில மொழியில் தொழிற்படும்படிசெய்தான். ஆனால் தமிழ் எழுத்துக்கள் † 1577ல் கொச்சியில் முதன்முதல் செதுக்கப்பட்டது. ஹாலண்டு தலைநகரான ஆம்ஸ்டர்டாமில் [1] 1678ல் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் மூலிகைகளின் பெயரை தெரியப்படுத்த

---

† The art of printing was introduced into India by the Goa Jesuits about the Middle of the 16th centuary. A seminary and Church dedicated to St. Thomas seem to have been built by the jesuits as Ambalaceeua, now a small village inland from Cranganore and a few miles from the Mouth of Angamali:.............The first Malabar Tamil types had been cut by a lay brother of the jesuits, Joannes Gonsalves, at Cochin in 1577.

Linguistic Survey of India Vol IV Dravidian family p 301.

[1] Extract from classfied catalogue of Tamil Printed books compiled by John Murdoch in 1865.

The first Tamil types seem to have been cut at Amsterdam in 1678, to express the names of some plants in the large work, Horti Indici Malabarici. Ziegenbalg asserts, however, that they were so bad, that even the Tamils themselves could not make them out, [Preface to grammatica Damulica.] It would appear that the next attempt was made at Thalle, about 1710, to supply Tranquebar Mission.

கையாளப்பட்டன. அவ்வெழுத்துகள் அவ்வளவு ஒழுங்காக அமையவில்லை. பின்னர் [2] 1710 ஹேல் நகரில் தமிழ் அச்சுகள் ஆக்கப்பட்டு தரங்கம்பாடி கிருஸ்துவ மிஷனுக்கு அனுப்பப் பட்டன. இவ்வாறு அச்சுத்தொழில் தோன்றி பலவாண்டுகள் கடந்து தமிழ் அச்சுக்கள் தமிழகத்திற்குவந்தும் 1843ல் தான் முதன் முதல் திருத்தொண்டர் புராணம் பதிப்பு வெளிவரலா யிற்று. அதன்பின் போந்த பதிப்புகளின் வரலாற்றை, கலை மாச்செல்வர்கள் அரிதிற் தேடிவைத்திருந்த நூற் கருவூலத்தின் துணைகொண்டு ஒருவாறு ஈண்டு கூறுவாம். இப்புராண முதற் பதிப்பு வந்த ஞான்று, தமிழ்நூல்கள் பதிப்பில் வாராமையினால் விளைந்த இடுக்கண்ணை, அக்காலத்தில் ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய கீழ்வரும் சில வரிகளே தெரிவிக்கும்.

தமிழ்ப்புத்தகம். [3]"முற்காலத்தில் உள்ள மகிமைபொருந் திய புலவர்களாலே தமிழிற் செய்யப்பட்ட நூல்களுள்ளும் அளவில்லாதவைகள், அச்சிற் பதிப்பிக்கும் வழக்கம் இல்லாமை யால் இறந்து போயின. இறவாது இக்காலத்தில் எஞ்சி இருப் பவைகளும் கையெழுத்துப் பிரதிகளிலே எழுத்தும் சொல்லும் மிகுந்தும் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு பிழை பட்டனவாய், சில விடங்களில் மாத்திரம் அருகி வழங்கு

---

[2] Fenger says, "The people there, though unacquainted with the Tamil language, succeeded in making Tamil letters, which they hastily tried and sent to Tranquebar; where the first part of the new Testament, as well as other things was printed with them. This sample, the very first thing ever printed in Tamil Characters, was the Apostle's creed, and the friends at Halle when they despatched it with the printing press requested soon to be requited by a copy of the New Testament in Tamil." The printing of the New Testament was completed at Tranquebar in 1715.

[*History of Tranquebar Mission p. 87.*]

[3] திருக்கோவையார் உரை முதற்பதிப்பிலுள்ளது—ரௌத்திரி, ஐப்பசி (1860).

கின்றன. அவைகளுள் யாதாயினும் ஒன்றைக் கற்க விரும்புவோர் அது இருக்கும் இடம் ஆராய்ந்தறிதல் அரிது. அறிந்தாலும், பெறுதல் அரிது. நெடுநாளாகச் செய்த பெருயினாலே பெற்றாலும் எழுதவல்லார் கிடைத்தல் அரிது. முயற்சி கிடைத்தாலும், எழுத்துக்கூலி மிகப் பெரிதாதலால் எழுதுவித்துக் கொள்ளுதல் அரிது. எழுதுவித்துக் கொண்டாலும் ஒத்துப் பார்வையிட்டுக் கொள்ளுதல் அரிது. ஒத்துப் பார்வையிட்டுக் கொண்டாலும், கற்கும்போது, பிழையற ஓதுதலும் பொருள் துணிதலும் கூடாமையால் விளையும் வருத்தம் மிகப்பெரிது. ஒருநூலைக் கற்றற்கே இப்படிக்கால நீட்டமும் பெருமுயற்சியும் பொருட்செலவும் வருத்தமும் உளவாமாயின், சிலவாழ் நாளையும் அதற்குள்ளே பல பிணிகளையும் கவலைகளையுமுடைய சிற்றறிவினராகிய மனிதர்கள் சில காலத்திலே பல நூல்களைக் கற்று வல்லாராதல் எப்படி! இதனாலன்றோ, நமது தேசத்தார்க்குத் தமிழ்க் கல்வியிலே விருப்பமும் முயற்சியும் மெல்லமெல்லக் குன்றுகின்றன. இவ்வேதுவினால் இப்பொழுது எஞ்சியிருக்கும் நூல்களும் விரைவின் இறந்துவிடுமென்பதற்கு ஐயமில்லை. ஆதலால் யாவருக்கும் எளிதிற் பயன்படும்பொருட்டு, முக்கியமாய் உள்ள நூல்களையும் உரைகளையும் பலவிடங்களினின்றும் வருவிக்கப்பட்ட பல பிரதிருபங்களைக்கொண்டு ஒருவாறு பரிசோதித்து, அச்சிற்பதிப்பித்துப் பிரகடனஞ்செய்தல் வேண்டும்.''

மூலமும் உரையும். இவ்வாறு பல வசதிகள் குறைபட்டிருந்தகாலத்தில் முதன்முதல் சென்னை பல்கலைக்கழகத் தலைமை தமிழ்ப்புலவர் மழவை வீரசைவரானமகாலிங்கையர் 1843ல் (விசுவாவசு-சித்திரை) பொழிப்புரைப் பதிப்பைத்துடங்கி, 1846ல் (பராபவ-ஆனி) முதற்பகுதியை முடித்தார். இரண்டாம்பகுதி, 1848ல் (பிலவங்க-தை) முடியுமுன் ஐயர் திருவடி நீழலெய்தியமையின், ஐயர் முடித்து, எஞ்சி நின்ற காரைக்காலம்மையார் பகுதி 50-ம் செய்யுள் முதல் முதற்காண்டம் முடிய களத்தூர் வேதகிரி முதலியார் உரை எழுதி வெளியிட்டார். இப்பகுதிகள் இரண்டும் சதுரங்கபட்டினம் சாமி முதலியார் குமாரர் அண்ணு

மலை முதலியாரது சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் வீராணந் தோட்டம் கோவிந்த நாயகர் அச்சடுக்கி வெளியிட்டவை. இப் பதிப்பில் ஐயரது நுண்மாணுழைபுலமை தெள்ளிதின் புலனாகும். இவைகளில் அந்தந்த பகுதிகளுக்குரிய பாட்டுமுதற் குறிப்பும் உள்ளது. இதனை அடுத்து காஞ்சி. சபாபதிமுதலியார் 1859ல் (சித்தார்த்தி-ஆனி) முதற்காண்டத்தை தேவாரக் குறிப்பு, வசனசுருக்கம், முதலியவற்றுடன் வெளியிட்டார். பின் 1870ல் (பிரமோதூத-மார்கழி) இவர் ஆராய்ச்சிசெய்து திருநெல்வேலியிலிருந்த பட்டினம் நமச்சிவாய செட்டியார் உதவியினால் திருமயிலை. சுப்புராய ஞானியார், பூவாடை வெங்கிடராவ் அவர்களது வர்த்தமான தரங்கணி அச்சுக்கூடத்தில் முழு நூலையும் பதிப்பித்து வெளியிட்டார். இப்பதிப்பில்தான் முதன் முறை மூலம் முழுமையும் திருமுறைக் குறிப்பும் வசன சுருக்க முள்பட வெளிவந்தது. இதன்பின் பேரம்பலம்பிள்ளை குமாரர் சிதம்பரம், இராமலிங்கம் பிள்ளை 1879ல் (பிரமாதி) நாவலர் வசனத்தை ஒத்த உரைநடையுடன் மூலத்தை வெளியிட்டார். ஆறுமுக நாவலர் அவர்கள் 1879ல் (பிரமாதி கார்த்திகை உக) காலமானபின் அவர் ஆராய்ந்து காரைக்காலம்மையார் பகுதி வரை எழுதிய சூசனத்துடன் முதற்காண்டத்தை 1884ல் (தாரண) சதாசிவப் பிள்ளையால் வெளிப்படுத்தப்பட்டது. இவர்களே இரண்டாங்காண்டமூலத்தை 1889ல் (சர்வதாரி-புரட்டாசி) வெளியிட்டு முடித்தனர். திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் பதவுரை வெளியீட்டில் ஈடுபட்டு நான்கு பகுதிகளாக 1886 (பார்த்திப-சித்திரை), 1888 (சர்வஜித்து-பங்குனி), 1891 (விகுருதி-புரட்டாசி) 1898 (விளம்பி) ஆண்டுகளில் முடித்தனர். தம்பிரானவர் எயர்கோன் 234வது செய்யுள் வரையே உரை செய்தார். அதன்மேல் இறுதிவரை பெம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலைய தேசிக சுவாமிகள் ஆதீனம் சிதம்பரம் ராமலிங்க சுவாமிகள் உரையிட்டு முற்றுவித்தனர். இவ்விதம் இரண்டாவது உரைப்பதிப்பு முடியு முன்னரே பொழிப்புரைப் பதிப்பை சஞ்சிகை வெளியீடாக சென்னை வேதாகமோத்தசைவ சித்தாந்த சபையாருள் ஒருவரும், சென்னை கிருஸ்துவக் கல்லூரித் தமிழ்ப் பண்டிதருமாகிய சூ. சுப்புராயநாயகர் 1892ல் (கர)

ஆரம்பித்து முதற்காண்டத்தை 1893லும் (விஜய), இரண்டாம் காண்டத்தை 1896லும் (துன்முகி) முடித்தார். உரையாசிரியர்களில் இவர் ஒருவரே தமது ஆயுள்காலத்தில் உரையைமுற்றும் எழுதி வெளியிட்டவர். இதனை அடுத்து செந்தில்வேல் முதலியார் பன்னிரு திருமுறைகளையும் ஒரே வடிவுள்ள தொகுதிகளாக வெளியிடக்கருதிய அமைப்பின்கீழ் நாவலர் மூலத்தைத் தழுவி 1903ல் (சுபகிருது-தை) ஒரு மூலப்பதிப்பை வெளிப்படுத்தினர். இதன்பின் திரு வி. கலியாணசுந்தரமுதலியார் 1907ல் தமது இளமைப்பருவத்தில் மூலம், புதியஉரைநடை, தேவாரக்குறிப்பு, குறிப்புரை, இன்ன பிறவற்றுடன் தொடங்கி 1910ல்முடித்தார். அப்பதிப்பு அக்காலத்திய சைவமுறையைத் தழுவி வெளி வரலாயிற்று. ஆலாலசுந்தரம் பிள்ளை 1916ல் (நள-புரட்டாசி-விஜய தசமி) உரையெழுதவும் அச்சிடவும் தொடங்கி முடியுமுன் காலமாயினர். இவ்வுரை இவரது குமாரர் ஏகாம்பரம் பிள்ளையால் வெளியிடப்பட்டு வருகிறது. அவற்றில் இதுவரை நான்கு சருக்கங்களே வந்திருக்கின்றன. அதன்பின் நாவலரது பதிப்பே பலமுறை அச்சிட்டு உலவலாயிற்று. இப்பொழுது நிலவும் நாவலர் பதிப்பு ஏழாம்பதிப்பு. இப்பால் திருவாரூர். வி. கலியாணசுந்தர முதலியார் முன் இளமையில் வெளியிட்டபதிப்பில் பலகுறைபாடுகளிருப்பதையுன்னி அவற்றைக்களைவான்வேண்டி முன்னைப்பதிப்பினும் திருந்திய எளிய உரைநடை, அகச்சான்று சங்கநூல் மேற்கோள், முற்பதிப்புகளின் திட்ப நுட்பங்கள், ஓலைகளின் ஒப்பு நோக்கு முதலியன அமைய நூலாராய்ச்சிக் குறிப்புடன் 1934ல் (பவ-வைகாசி-பூசம். சேக்கிழார்நாள்) வெளியிட்டார். இப்பதிப்பின் மூலத்தை சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் பதிப்பித்த அடக்கவிலைப் பதிப்புக்கு பயன்படுத்திக் கொண்டனர். இவ்விரு பதிப்புகளில் தான் முதன்முறையாக முழுதும்பாட்டு முதற்குறிப்பகராதி உளது. இப்பொழுது கோவை. சுப்பிரமணியமுதலியாரால் சென்னை பல்கலைக் கழக ஆதரவில் ஒருபதிப்பு சஞ்சிகையாக வெளிவருகிறது. இவைகளன்றி திருப்பரங்குன்றத்து சரணர் பதிப்பும் சென்னை பக்த ஜன சபையார் 1886-87ல் (ஜய-விஜய) வெளியிட்ட கை

யடக்கமான பதிப்பும் கேள்விப்படுகிறேன். இவை எனக்கு கிடைத்தில. பெரியபுராண அரும்பதவிளக்கம் என்றொரு பழைய குறிப்புரை யாழ்பாணத்திலுண்டு. அது "செந்தமிழில்" வெளிவந்துள்ளது.

உரைநடை. ஆறுமுக நாவலர் அவர்கள் பெரிய புராண வசன முதற்பதிப்பை புராண படன ஐதீக முறைக்கு ஏற்ற வாறு படத்துடன் தமது முப்பதாவது வயதாகிய 1852ல் (பரிதாபி-சித்திரை) வெளியிட்டார். சிதம்பரம் பே. ராமலிங்கம் பிள்ளை புராணப் பதிப்பிலுள்ள வசனம் நாவலர் வசனத்தை ஒத்தது. அப்பதிப்பில் வசன ஆசிரியர் பெயரில்லை. இப் பதிப்பு நாவலர் இறந்த 1879ல் வெளிவந்தது. பின் 1884ல் (தாரண-ஆடி) ஊ. புஷ்பரத செட்டியார் பழய வசனம் ஒன்றை வெளியிட்டார். இவ்வசனப் பதிப்பில் ஆசிரியர் பெயர் இல்லை. இது குறிப்பிடத்தக்கது. இம்மூன்று வசனப்பதிப்புகளும் ஒருங்கேகொண்டு பார்த்தால் வசனம் ஒரு பழமையானதென்றும் அது ஒருவற்கு சொந்தமானதல்லவென்றும் புலப்படுகிறது. அன்பர்கள் இதனை தெளிவுபடுத்துவார்களாக. புத்தகக்கடையில் சாதாரணமாக விற்கப்படும் வசனம் பலகாலமாக வழங்கி வருகிறது. இவையேய அன்றி கலியாண சுந்தர முதலியார் பதிப்புகளில் வசனம் புதிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இவற்றில் பின்னையது எளிய நடையயின்றது. இவையே அன்றி புராணப் பகுதிகள் சில வசனமாக வெளிவந்திருக்கின்றன. அவைகளில் தலையாயது வடலூர் ராமலிங்கசுவாமிகள் மநுமுறை கண்டவாசகம். இதன் முதற்பதிப்பை பாளையம். சுப்புராய செட்டியார் வித்தியானந்த அச்சுக்கூடத்தில் 1854ல் (ஆனந்த-ஆனி) அச்சிட்டார். சுவாமிகளது சீடர் தொழுவூர் வேலாயுத முதலியார் 1871ல் பெரிய புராண வசனம் ஒன்றை எழுதி வெளியிட்டார். இவையே அன்றி நெல்லை கா. சுப்பிரமணியம்பிள்ளை, சென்னை சே. சிவஞானம் பிள்ளை, கா. நமச்சிவாய முதலியார் முதலியோர் எழுதிய நால்வர் வரலாறுகள் இக்கால முறைக்கு ஏற்ப எழுதப்பட்டன. 1899ல் கனக சபாபதி முதலியார் திருநாவுக்கரசர் என்ற வசனநூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

மொழி பெயர்ப்பு. யாழ்ப்பாணத்து கொக்குவில் சபாரத்தின முதலியார் சம்பந்தர் சரித வசனத்தை ஆங்கிலத்தில் 29—4—1920ல் வெளியிட்டார். நல்லசாமிப்பிள்ளை அவர்கள் பெரிய புராண சரிதங்களை ஆங்கிலத்தில் எழுதியதின் ஒரு பகுதி 1924ல் வெளிவந்தது. சில மொழி பெயர்ப்புகள் சென்ற காலத்தின் திறத்தைஎடுத்து சோதிக்கும் நோக்கமுடைய குழுவினர்களால் வெளியிடப்பட்டுவரும் பத்திரிகைகளில் வந்துள்ளன. இவையே அன்றி தெலுங்கில் இதன் மொழிப்பெயர்ப்பு ஒன்றை அறிகிறேன்.

இவைகளே எனக்குக் கிடைத்த பிரதிகள். வேறு உளவெனின் அன்பர்கள் தவராது தெரிவிப்பார்களாக. இவ்வுரையில் குற்றங்குறைகள் உளவேல் மன்னிக்க.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

ஈசுவர வைகாசி, ஆனியில்

வெள்ளி விழாவிற்கு உதவிய அன்பர்கள் நன்கொடை

		ரூ.	அ.	ப.
திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள்	கிழக்குமருதூர் வசூல்	20	0	0
திரு. T. P. K. அழகிரிசாமி பிள்ளை அவர்கள் வழியாக:—				
திரு. T. S. சபாபதி பிள்ளை B.A. அவர்கள்	ஜில்லா ரிஜிஸ்ட்ரார், தஞ்சை	10	0	0
திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை B.A., L.T. அவர்கள்	உரத்தநாடு	10	0	0

		ரூ.	அ.	ப.
திரு. அ. வடிவேலர் அவர்கள் வழியாக:—				
திரு. பா. துரைசாமி பிள்ளை அவர்கள்	திருக்காட்டுப்பள்ளி	3	0	0
,, கோ. கலியபெருமாள் நாயுடு அவர்கள்	,,	1	0	0
,, மு. வடிவேற் பிள்ளை ,,	,,	1	0	0
,, பிச்சைமங்கலார் ,,	,,	1	0	0
,, M. கோவிந்தராச நாட்டார் ,,	பாபநாசம்	5	0	0
,, R. ஏகாம்பரநாதன் ,,	,,	1	0	0
,, P. வேலாயுதம் பிள்ளை ,,	,,	0	8	0
,, N. கிருஷ்ணமூர்த்தி சர்மா ,,	,,	0	4	0
,, S. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்	ஐயம்பேட்டை	5	0	0
,, மு. இரத்தினவேற் பிள்ளை ,,	,,	3	0	0
,, A. N. அஜீஸ் சாகிபு ,,	,,	1	0	0
,, K. விசுவநாதையர் ,,	,,	1	0	0
,, A. G. சுந்தரராசசெட்டியார் ,,	,,	1	0	0
,, T. R. அப்துல் சத்தார் ,,	,,	0	8	0
,, A. விசுவநாதையர் ,,	,,	0	8	0
,, கந்தசாமி நாட்டார் ,,	ஒம்பத்துவேலி	1	0	0
,, A. சண்முகம் பிள்ளை ,,	பாம்பாட்டித்தெரு தஞ்சை	1	0	0
,, ஜீவேந்திர முதலியார் ,,	மாரியம்மன்கோயில்	0	4	0

மருத்துவசாலைக்கு உதவிய அன்பர்கள்.

தஞ்சை நகராண்மைக் கழகம்	120	0	0
திரு. K. N. சின்னையா நாயுடு அவர்கள்	0	8	0

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௩	ஈசுவர ஆவணி	மலர் ௫

தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பாராய்ச்சி

திரு. K. கோவிந்தன் தமிழ் மாணவன்

(ஔவைத்தமிழகம், திருவத்திபுரம்.)

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி, பதிப்பாசிரியர், திரு. S. வையாபுரிபிள்ளை, B.A., B L. அவர்களால், பரிசோதிக்கப்பட்டு திரு. S. கனகசபாபதிபிள்ளையவர்களால் வெளியிடப்பெற்ற தொல்காப்பியப் பொருளதிகார முதற்பாகம், தமிழ் பயிலும் பலர்க்கும் பேருபகாரமாக விளங்குகின்றது. அதனை, ஊன்றிப் படித்து வருங்கால், அதனுட் பொருந்தாபாடங்கள் சிலவிளங்குவதைக் கண்டேன். அப்பாடங்களை அவ்வாறே கொள்ளின், உண்மைப் பொருள் காண வியலாது, குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான் போலவும், பயில்வோர் இடற்

படுவர் ஆதலின், உண்மைப் பாடங்களை வெளியிடின், அவர்க்கு நன்மை பயக்கும் என்று கருதி இதனை எழுதலானேன்.

சேனாவரையர்போன்ற பேராசிரியர்களும், முக்குணவயத்தான் முறை மறந்தறைவர் எனின், நம்போன்றார் இவ்வாறு மயங்குதல் வியப்பேயன்று. பெருங்கல்வியும், பேரறிவும், ஒருங்கே வாய்ந்த, நுண்மாணுழை புலத் தமிழ்மாண் புலவராய அவர் அதுபற்றி இகழவும் படார்; அதனான் அவர் புலமை நலம் கெடவும் மாட்டாது. யானும் அக்குணவயத்தான் மாறுபடக் கூறவும் கூடுமாதலின், யான் கூறுவதே மெய்ம்மையுரையென்கின்றேன் அல்லேன்; அறிவுடைப் பெருமக்கள் ஆராய்ந்து உண்மைப் பொருள் கூறின், அதனை அன்போடும் ஏற்றுக்கொள்வதேயன்றி, அவர்க்கு எழுமையும் கடப்பாடுடையேன் என்பதை மிகப் பணிவாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"முதல்கரு வுரிப்பொரு ளென்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை."

என்ற சூத்திரத்தின் கீழ், முல்லைக்கு முதலுங் கருவும் வந்து உரிப்பொருளாற் சிறப்பெய்தி முடிந்ததற்கு மேற்கோளாக.

"முல்லை வைந்நுனை தோன்ற வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற்
பரலவ லடைய விரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறங் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானங்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையோடு வதியும்,
தாதுண் பறவை பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்வினைத் தேர
னுதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது

நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தட்
போதவிழ் அலரி நாறும்
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே." —அகம். 4.

என்ற செய்யுள் நச்சினார்க்கினியரால் காட்டப்பட்டுள்ளது.

அச்செய்யுள், "கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டு வருவல்" எனக் கூறிப்பிரிந்து சென்ற தலைவன், அப்பருவம் எய்தவும் வாராததினால் வருந்திய தலைவிக்குத் தோழி, அப்பருவம் வந்தமையைக் காட்டி அவர் வருவார் நிற்பாரல்லர் என வற்புறுத்தியதாகத் துறை கூறுகின்றது. அச்செய்யுளின்பொருள் கண்டன்றி அதனை ஆராய்தல் இயலாதாகலின் அதற்கு ஓர் உரையொன்று ஈண்டுத் தருவல்,

முல்லை வைந்துனை............................படர்ந்தே."

என்றது, தோழி தலை மகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது, எனத் துறைப் பெயர் பெற்றது. "குறித்த காலம் வந்தது, அவரும் வந்தார்என ஆற்றுவித்தது" என்பர் நச்சினார்க்கினியார் (தொ. பொ. 3.)

உரைப்பாடம்:—விழவின் உறந்தைக் குணாது குன்றத்து அலரின் நாறும் அரிவை! உதுக்காண்; தோன்ற, அவிழ, தெறிப்ப, புறக்கொடுப்ப, வானம் கானத்தில் சிதற, கார்செய்தன்று; (அதனால்,) நாடன், பறவை பேதுறல் அஞ்சி, ஆர்த்த தேரன், புரவி வள்பரிய நின் நலம் படர்ந்து தோன்றும் என்பது.

உரை:—பலரானும், பலகாலும் புகழுதற்குரிய சிறப்பு வாய்ந்த விழவினையுடைய, உறையூர்க்குக் கீழ்ப் பக்கத்ததாகிய நெடிய பெரிய சிராப்பள்ளி மலையின்கண் மிக்கிருக்கின்ற காந்தட்போதுகள் மலர்ந்த அலரினைப்போல, மணம் வீசும் ஆராய்ந்து அணிந்த தொடியினையுடைய அரிவையே! உவ்விடத்தே பார். முல்லையினது கூரிய மொட்டுக்கள் தோன்றவும், தேற்றுமரத்தின் மொட்டுக்களோடு, பசிய அடி மரத்தினையுடைய கொன்றையின் மெல்லிய மொட்டுக்கள் கட்டவிழ்ந்து மலரவும், இரும்பை முருக்கினாலொத்த, கரிய பெரிய மருப்பினையுடைய மான், பால்படு குழிகள்தோறும் துள்ளியோடவும்,

இடமகன்ற ஞாலம், நீர் பெறுததினால் உண்டாய வருத்தம் நீங்கவும், திருவில், மின், இடிபோன்ற தொகுதிகொண்டமேகம், அழகுபெற்ற கானத்தில், விரைந்த மழைத்துளிகளைப் பெய்து கார்ப்பருவம் செய்தது ; ஆதலின் சிறு மலை நாடனாகிய நம் தலைவன், பூக்கள் நிறைந்த புதரின்கண் தத்தம் துணையொடுவதிந்து தாது தேர்ந்து உண்ணும் வண்டுகள், தன் தேரிற்கட்டிய மணியொலிகேட்டு வெருவுமென்றஞ்சி, அம்மணிநா அசைந்து ஒலியா வண்ணம், கட்டியமாட்சியினையுடைய, வினைமேற்சென்ற தேரினையுடையனாய், வளைந்த தலையாட்டத்தாற் பொலிந்த கொய்யப்பட்ட உளை மயிரினையுடைய குதிரையினது, வளைந்த வாய்வார்; நரம்பு ஆர்த்ததுபோல ஒலிப்ப, மிக்க விரைவாக நினது உயர்ந்த நலத்தை நினைந்து தோன்றுவான் ; நீ வருந்தற்க. எ-று.

ஒடு, அதனோடியைந்த ஒருவினைக்கிளவி ; பிணியவிழ்த்தல் வினை, இல்லம், கொன்றையென்ற இரண்டற்கும் ஒத்தலின், இல்லம், முதலிற் கூறும் சினையறி கிளவி. இரும்பு திரித்தாலன்ன என்றும், நாம் பார்த்தாலன்ன என்றும் வரற்பாலன, "இரும்பு திரித்தன்ன," என்றும், "நாம் பார்த்தன்ன" என்றும் வந்தன; "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத் திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று." (குறள். 22.) என்புழிப் போல மா, கருமை இரு பெருமை. அவலடைய அவல்தோறும். கருவி வானம்: தொகுதி கொண்டமேகம். "கருவி தொகுதி" (தொல். சொல். 354.) கதழ் விரைந்த மழைத்துளி, "கதழ்வும் துணைவும் விரைவின் பொருள்" (தொல். சொல்.315) என்பது விதி. குரங்குவளைப் பொலிந்த கொய்சுவற் புரவி "யென்பது குறுஞ்சீர் வண்ணம்; இதில் "பொலிந்த" என்னும் "செய்த என்னும் பெயரெச்சத்திற்கு முடிபாகிய புரவியை இடைவரும் சொற்கள் விசேடித்து நின்றன" என்பர் நச்சினார்க்கினியர். (தொல். சொல். 455.)

இல்லம்: தேற்றுமரம். "இல்லின் படுகாழ்" என்பர் பிறரும் (பெருங். 35: 125) இதனைத் தேறு என்று நூல்களுள் வழங்குப. இக்காலத்தில் தேற்றுமரம் என உனரநடையில் பயின்று வரும். பிணியவிழ: அரும்புகள் முறுக்குண்டு இருத்தலின்.

அதனைப் பிணி, தளை, பொதி என்ற சொற்களால் வழங்குதற் கேற்ப, "பிணி விடும் முருக்கிதழ்" (கலி. 33.) என்றும், "தளை யவிழ்கோதை" (சிந். 65) என்றும், "பொதியவிழ் வைகறை" (கலி. 52.) என்றும் விடுதல், அவிழ்தல், என்ற சொற்களை, மலர் தல் என்ற பொருளில் ஆள்ப. வினைத்தேரன்: வினைமேற் சென்ற தேரன்; நல்ல வேலைப் பாடமைந்த தேரன் எனினு மாம். மாண்பாவது, வண்டின் கூட்ட இன்பத்திற்குக் கேடு வருதற்கஞ்சி மணிநாக்கைகை அசையாமல் கட்டியதாம். "பூத்த பொங்கர்" என்றதனால் பசிப்பிணிதீர நுகரும், பொருளை அது குறைவறக் கொடுப்ப உண்டு மகிழ்ந்து வதியும் எனவே, யாமும் இல்லறம் நிகழ்த்துதற்கும், நுகர்தற்கும், ஏற்ற பொருள்களைக் குறைவறப் பெற்றுப் பின் இன்பம் நுகர்தல் வேண்டுமாதலின், அப்பொருள் பெறச் சென்ற நம் தலைவர், சிறிது காலம் கடந்து வரினும் நீ ஆற்றியிருத்தல் வேண்டும் என்று கூறினளாம், "போதவிழ் அலரின் நாறும் அரிவை" என்றதனால், அவர் புணர்ந்த காலத்துப் புதுமணம் நாறும் அரிவையெனவே, அவர் பிரிந்தது சேய்த்தன்று என்பதும் கூறினள். இனி, பேரா சிரியர், இச்செய்யுளை, நோக்கென்னும் உறுப்படங்கிய செய்யு ளிற்காக மேற்கோளாகக் காட்டி, விழுமியதோர் உரையும் வகுக் கின்றார். அதனைப் பொருளதிகார 416-ஆம் சூத்திரத்துட் காண்க.

கார்ப் பருவம் எய்தினமையைத் தெளித்தற் பொருட்டு கார்ப் பருவ நிகழ்ச்சிகளைப் பலவாக எடுத்துக் காட்டுவாள், தலைவன் இத்தகையன் ஆதலின், வாராது நிற்பானல்லன் வரு வன் என்பதை வற்புறுத்துதற்காக, "துணையொடு வதியும். தாதுண் பறவை பேதுறலஞ்சி, மணிநா வார்த்த மாண்வினைத் தேரான்" என்று கூறினள்.

முன்பே நெஞ்சகத் தன்புடைய நம் தலைவர், தாம் வரு கின்ற வழியில், வண்டுகள் தம்முன் கூடி நுகரும் இன்பத்திற்கு இடையூறு செய்யக்கருதாராய், தேரிற்கட்டிய மணிநா அசையா வண்ணம் யாத்து வருகின்றார். அத்தகையார் நின்னைப் பிரிந்து நெடுநாள் உறையார் விரைவில் வருவார் என்று வற்புறுத்திய

வாறு காண்க. இவ்வாறு கூறுதல் மரபாதலை, "அன்புறு தகுந விறைச்சியுட் சுட்டலும், வன்புறையாகும் வருந்திய பொழுதே" (தொல். பொருண். 231.) என்ற சூத்திரத்தானும் அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையானும் உணர்க.

இனி இப்பதிப்பில் கொண்டாங்கு, "துணையோடு வதிந்த தாதுண் பறவை" எனக் கொள்ளின், இறந்தகாலப் பெயரெச்சமாய், முன்னொரு காலத்துத் துணையொடு வதிந்த வண்டு எனப் பொருள்படுதலின், தலைவன் வருவுழி வதியவில்லையெனப் பொருள்பட்டு, செய்யுளின் இயற்கை நலம் கெட்டு, வற்புறுத்து தற்கேற்றதோர் சொல்லின்றாகி விடுதல் காண்க. ஆதலின், அதனைத் "துணையொடு வதியும்" என்றேனும் "துணையொடு வதிந்து" என்றேனும் கொள்ளின், பொருந்தும் என்க. செய்யுள் இலக்கண வரம்பிகவாமையும் காண்க. இனி, பேராசிரியர்,

"மாத்திரை முதலா வடிநிலை காறு
நோக்குதற் காரண நோக்கெனப் படுமே"

(தொல். பொருள். 416.)

என்ற சூத்திரத்தின்கீழ், நோக்கென்னும் உறுப்பமைந்த பாட்டிற்கு உதாரணமாக, இதனைக் காட்டி, இதற்கு ஓர் அரிய உரையும் வகுப்பாராயினர். இரண்டாம் பதிப்பை ஆராய்ந்து திருத்திய, பிரம்மஸ்ரீ. வே. துரைசாமி ஐயர் அவர்கள், பேராசிரியர் எழுதிய உரையாகிய "துணையோடு வதியும் தாதுண் பறவை" எனவே பிரிவஞ்சி என்றவாறு என்ற வாக்கியத்தைத் தடித்த எழுத்தால் பதிப்பித்து, அதற்கு முற்பக்கத்திலேயே, "துணையொடு வதிந்த தாதுண் பறவை" எனப் பதிப்பாராயினர். இச்சிறு ஆராய்ச்சியும் செய்ய ஆற்றல் வாய்க்கப்பெறாத ஐயர் அவர்கள் போன்றார், தொல்காப்பியம் போன்ற பேரிலக்கியங்களைப் பதிப்பிப்பதற்கு எவ்வாற்றானும் உரியரல்லர் என்க.

மஹாமஹோபாத்யாய, பிரம்மஸ்ரீ டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்களும், சிந்தாமணி 892, 893-ஆம் செய்யுட்களின் உரையுள் "துணையொடு வதிந்த, தாதுண் பறவை" என்றே பதித்தார் எனின், அதுவும் குற்றமாம் என்க.

இனி, பேராசிரியரும் வதியும் என்றே கொண்டார் ஆதலானும், பொருள் நெறியிலும் பொருந்துவது அதுவேயாமாதலானும், வதிந்த என்பது பிழைபடு பாடமாதல் அறிக. இனி துணையொடு வதியும் என்புழியும், வதியும் இயல்பினவாயினும், அவன் வருவுழி வதிந்தனவே? அன்றோ? என்னும் ஐயம் நிகழ்தலின், வதியும் என்பதைக் காட்டினும் வதிந்து என்பதே நேரிய பாடமாதல் அறிக.

இனி, "மணிநா வார்த்த" என்றவிடத்து, ஆர்த்த என்பது சப்தித்த என்றும் பொருள்படுதலானும், திரு. வே. சாமிநாதையர் அவர்களும், "யாத்த" என்றேகொண்டார் ஆதலானும், இருபொருள்படும் அப்பாடம் கொள்ளுதலினும், அகநானூற்றினுள் காட்டப்பெற்ற யாத்த என்ற பாடத்தைக் கோடல் நேரிதாம் என்க.

2. இனி, "மாயோன் மேய காடுறை யுலகமும்" (தொல். பொருள். 5.) என்ற சூத்திரத்தின்கீழ், பக்கம். 21-ல், "இனி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற முறையென்னையெனின், இவ்வோழுக்கமேல்லாம் இல்லறம் பற்றிய ஒழுக்கமாதலின், கற்பொடு பொருந்திக் கணவன் சோற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின், அது முற்கூறப்பட்டது." என்ற வாக்கியம் ஒன்று அமைந்துள்ளது. இதனுள், "கற்பொடு பொருந்திக் கணவன் சொற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ் செய்தல் மகளிரது இயற்கை முல்லையாதலின் அது முற்கூறப்பட்டது." என்னும் சொற்றொடர் அமைதி பெறவில்லையாதலின், பொருளும் இனிது விளங்கவில்லை யாதலானும், அதனை, "கற்பொடு பொருந்திக் கணவன் சோற்பிழையாது இல்லிருந்து நல்லறஞ்செய்தல் மகளிரது இயற்கை." என வாக்கியத்தை முடித்து, "அது முல்லையாதலின் முற்கூறப்பட்டது" என மாற்றிப் பொருள் கொள்ளின் நன்றெனை நான் கருதுகின்றேன்.

3. இனி, பக்கம் 37-ல், "முடிவுநிலைப் பகுதிக்கண் முணணப்படுமெனவே, அத்துணை யாக்கமின்றி ஒழிந்த மருதமும்,

நெய்தலும் முடியா நிலமாய் அத்துணை முன்னப்படாதாயிற்றுப் பாலைக் கென்பதாம்" என்ற வாக்கியம் ஒன்று உள்ளது. அதில், "மருதமும், நெய்தலும்..............முன்னப்படாதாயிற்று என்ற தொடருள் ஒருமை, பன்மை மயக்கம் உண்மையின், அத் தொடரை "மருதமும் நெய்தலும்....................முன்னப்படா வாயிற்று" எனத் திருத்திக் கொள்க.

4. இனி, "திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப
புலனன் குணர்ந்த புலமை யோரே."

—தொல். பொருள். 12

என்ற சூத்திரதின்கீழ், நெய்தற்கண் மருதம் மயங்கியதற்கு உதாரணமாக,

" கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
யொள்ளிழை யுயர்மணல் வீழ்ந் தென
வெள்ளாங் குருகை வினவு வோனே." —ஐங். 122.

" கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
உறாஅ வறுமுலை மடாஅ
வுண்ணாப் பாவை யூட்டு வோளே." —ஐங்குறு. 128.

என்ற இரண்டு செய்யுள்களையும் மேற்கோளாகக்காட்டி, 'இவை பெதும்பைப் பருவத்தாள் ஒரு தலைவியொடு வேட்கை நிகழ்ந் தமையைத் தலைவி கூறித் தலைவன் குறிப்புணர்ந்தது.' என அதன் துறையைப் பதிப்பித்து, பிழை திருத்தத்தில், "தலைவி கூறித்," என்பதைத்"தோழி கூறித்,"எனத் திருத்திஉள்ளார்கள்,

இம் முதற் செய்யுளே,

" கிழவோள் பிறன்குண மிவையெனக் கூறிக்
கிழவோன் குறிப்பினை யுணர்தற்கு முரியள் "

—தொல். பொருள். 234.

என்ற சூத்திரத்தின்கீழ், தலைவி வேறொரு தலைவியுடைய குணங்கள் இத்தன்மையவென்று தலைவற்குக்கூறி, அவள்மாட்டு இவன் எத்தன்மையனுயிருக்கின்றான் என்றுதலைவன் குறிப்பினை யறியக் கருதியதற்கு உதாரணமாகக் காட்டியிருப்பதையும்

அறியாது, ஓரிடத்தே ஒருதுறைபற்றி மேற்கோள், காட்டிய ஒரு செய்யுளையே, காட்டிய அவரே, வேறோர் இடத்தே அச் செய்யுளையே வேறு ஒரு துறைக்கு மேற்கோளாகக் காட்டார் என்பதையும் உணராது, "தோழி கூறுங்கால், தலைவியரைக் கூறப்பெறுள் என்பதூஉம், பரத்தையரைக் கூறின், அவர்க்கு முதுக் குறைமை கூறிக் கூறுவளென்பதூஉங் கொள்க." என நச்சினார்க்கினியர் கூறியதனையும் உணராது, தோழிக்கு, இத் தகைய கூற்றுக்கள் உண்டா இன்று என்பதையும் ஆராயாது, மெய்ப்பாடத்தையும், பொய்ப்பாடமாகப் பிறழ உணர்ந்து, மெய்ப்பாடத்தை நீக்கிப் பொய்ப் பாடத்தைப் பதிப்பித்தது, அவர்க்கு ஆழ்ந்த பொருளிலக்கணப் பயிற்சி இன்மையினைக் காட்டுகிறது.

இனி, ஐங்குறு நூற்றுப்பழைய உரைகாரர், " பரத்தை தலைமகற்குச் சொல்லியது; பெதும்பைப்பருவத்தாள், ஒரு பரத்தையோடு கூடி மறைந்து ஒழுகாநின்றானென்பதறிந்து தலைவி புலந்துழி, " இத்தவறு என்மாட்டில்லை; நீ, இப்புலவியை நீக்கவேண்டும் " என்று தோழிக்குத்தலைமகன் கூறும் புலவியை நீக்கக்கருதிய தோழி அவளிளமை கூறி நகையாடிச்சொல்லியதூஉமாம்" என்று துறை வடிப்பாராயினர், அவர் கூற்றுப்படி. இது, பரத்தை கூற்றாகவாவது, தோழி கூற்றாகவாவது இருத்தல் வேண்டுமேயன்றி, தலைவி கூற்றன்று வென்பது பெறப்பட்டது.

தலைவன், வேறொரு தலைவி பாலேனும், பரத்தை பாலேனும், வைத்திருக்கும் உள்ள முடைமையினை, அறிதல் தலைவிக்கேயுரித்து பரத்தைக்கின்று என்பது, " கிழவோள் பிறள் குணம் " (தொ. பொ. 234) என்பதனாற் பெறப்பட்டதாகலானும், தோழி கூற்றன்று என்பது மேலே பெறப்பட்டது ஆதலானும், இப்பத்திற்கு முந்தியபத்தாகிய தோழிக்குரைத்த பத்தில், " இற்செறிப்பாரெனக்கேட்ட தலைமகள் வரையாது வந்தொழுகுந் தலைவன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியது" என்பன போன்ற தலைமகள் கூற்றுக்களே நிகழ்தலானும், அடுத்த பத்தாகிய, பாணர்க்குரைத்த பத்திலும்,

"வாயில் வேண்டிவந்த பாணன் தலைமகள் காதன்மைகூறின ஞகத்தலைமகள் வாயில் மறுப்பாள் அவற்குக்கூறியது" என்பன போன்ற தலைமகள் கூற்றுக்களேநிகழ்தலானும், இடையில் உள்ள இப்பத்தில் உள்ளனவும் தலைவி கூற்றுக்களாகவே இருத்தல் வேண்டுமாதலானும், ஐங்குறு நூற்றுப்பழைய உரை கூறும் துறை குற்றமாதல் அறிக. அதைப்பின்பற்றி, "தலைவி கூறித்" என்ற மெய்ப்பாடத்தைத் "தோழி கூறித்" என்று மாற்றியதும் குற்றமாம் என்க.

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே,
யெடுப்பதூஉம் எல்லாம் மழை."

என்புழி, கெடுப்பதூஉம் என்பதற்கு, முன், பின் குறள்களில் மழையின்மையினையே கூறியதனால், மிக்க மழை பெய்தலினால் கெடுவனவாகவும், "மழை பெய்யாது நின்று கெடுப்பதூஉம்" எனப் பொருள் கூறியதும் காண்க.

நூல் பதிப்பிக்க விரும்புவோர் தாம் பதிப்பிக்க விரும்பிய நூலைத் தக்க ஆசிரியர் ஒருவர் பால் முறைபடக் கற்றல் வேண்டும். கற்று வருங்கால், பாடங்கள் பல மாறுபடத் தோன்றும். தோன்றிய அவைகளின் முன்னும், பின்னும் நோக்கியும், வேறு ஏடுகொண்டு ஒப்பு நோக்கியும், பொருளுடன் ஆராய்ந்தும், பொருந்தும் பாடங்களைக் கொள்ளுதல்வேண்டும். இவ்வாறு,பலகாலும், ஆராய்ந்து சேமித்துவைத்த குறிப்புக்களை யுறுதுணையாகக் கொண்டு நூல் பதிப்பித்தல் வேண்டும். அவ்வாறு ஒன்றும் செய்யாது முற்பதிப்பில் கண்டவற்றுள் சிலவற்றைத் தாம் வேண்டியவாறே திருத்திக்கொண்டும், பயனற்ற குறிப்புக்கள் சிலவற்றைக் குறித்துக் கொண்டும், பதிப்பிப்பதனால் கெடுவன இவ்வளவு என்பது இவ்வெடுத்துக் காட்டான் இனிது விளங்கும். இதனால் அன்றே, "படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என்று வழங்குவாராயினர்.

நக்கீரதேவ நாயனர் அருளிச்செய்த
காரெட்டு மூலமும் உரையும்

திருவாளர், அ. நடேச பிள்ளை அவர்கள்
உயர்தரக் கல்லூரி, பொன்னேரி.

1. *அரவ மரைக்கசைந்த வண்ணல் சடைபோல்*
விரவி யெழுந்தெங்கு மின்னி—அரவினங்க
ளச்சங் கொண் டோடி யணைய வடைவுற்றே
கைச்சங்கம் போன்முழங்குங் கார்.

உரை:—*கார்*—மேகம், *அரவம்*—சர்ப்பத்தை, *அரைக்கு*-இடையில், *அசைந்த*—கட்டிய, *அண்ணல்*—(சிவ) பெருமானது, *சடைபோல்*— சடாபாரத்தைப்போல, சூழ்ந்து — *எழும்பி*, *எங்கும்*—(வான்) முற்றும், *விரவி*—கலந்து, *மின்னி*—மின்னலை வீசி, *அரவு இனங்கள்*—சர்ப்பக்கூட்டங்கள், *அச்சம்*—பயம், *கொண்டு*—தாங்கி, *ஓடி*—விரைந்து, *அணைய*—(தத்தம்புற்றில்) சேர, *அடைவு*—முறை, *உற்று*—கொண்டு, *கை*—(அச்சிவ பெருமானது) கரத்து, *சங்கம்போல்*—சங்கினைப்போல, *முழங்கும்*—ஒலிக்கும்.

ஏ—அசை, அரைக்கு—உருபுமயக்கம்.

அடைவுற்று முழங்கும் என்றார், மின்னல் தோன்றிய பின்பு, ஒலி கேட்கும் இயல்பு பற்றி.

கார், அண்ணல் சடைபோல் மின்னி, கைச்சங்கம்போல் முழங்கும். என முடிக்க.

'சடைபோல' என்றும் பாடம், அப்பாடத்திற்கு அண்ணல் சடை போல என அலகிடுக.

கருத்து:—கார் மின்னி முழங்கும்.

(1) அரவம் அரைக்கசைத்தவண்ணல்
'அரையாடு நாகமசைத்த பிரான்' (மணிவாசகர்)
'அரைசேரரவனும்' (அப்பர்)
'அரவம் அரையார்த்தவன்' (சம்பந்தர்)

(2) சடை மின்போன்றது

'மின் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை' (சேரமான்பெருமாணாயனார்)
'மின்னிலங்குசடை' (சம்பந்தர்)
'சடைமின்னு பொன்முடி' (சேந்தனார்)
'முடிவண்ணம் வானமின் வண்ணம்.' (அப்பர்)
'மின்னலங் கலஞ்சடை' (சுந்தரர்)

(3) கார் எழுதல்

'எழுந்த கொடுஞ் செலவெழிலி' (பத்து-முல்லை)
'எழுந்த கருங் கொண்டல்' (நெல்லைவரு-கோவை)
'எழுந்த கார்.' (கல்லாடம்)

(4) அரவினங்களச்சங் கொண்டோடி யணைதல்

'பொறிவிழிப் பாந்தள் புற்றளை வதிய' (கல்லாடம்)

(5) கைச்சங்கம்

மாலொருபான் மணந்த திருமேனியும் இறைவற்குண்மை யின் சங்கம் அவற்காயிற்று.

'மாலொரு பாலும் மகிழ்கின்ற நாதன்' (சம்பந்தர்)
'மாலு மோர் பாக முடையார்' ,,

2. மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்றன்
கையார் சிலைவிலகிக் காட்டிற்றே—மையவா
யழலரவம் பூண்டா னவிர்சடைபோன் மின்னிக்
கழலரவங் காண்புற்ற கார்.

உரை :— அழல்—நஞ்சினையுடைய, ஐவாய்—ஐந்து தலையுள்ள, அரவம்—பாம்பை, பூண்டான்—அணிந்த சிவபெருமானது, கழல்—கழலைப்போல, அரவம்—(இடி) ஒலி, காண்பு—காண்டலை, உற்ற—கொண்ட, கார்—மேகம், அவன்றன்—அப்பெருமானது, மை—கருமை, ஆர்—பொருந்திய, மணி—அழகிய மிடறுபோல்—கண்டம்போல, கருகி—கறுத்து, அவிர்சடை போல்—விளங்குகின்ற சடைக்கற்றைபோல, மின்னி—மின்னல் செய்து, கை—கையில், ஆர்—பொருந்திய, சிலை—வில்லைப்போல் விலகி—குறுக்கே (வானவில்) இட்டு, காட்டிற்று—காண்பித்தது. மற்று, ஏ, அசைகள்.

கார் கருகி, மின்னி, சிலைவிலகிக் காட்டிற்று என முடிக்க. மணி—நீல ரத்தினமுமாம்; முன்னுமவ்வாறே கொள்க.

கருத்து :— கார் கருகி மின்னி வில்விட்டது.

(1) மையார் மணிமிடறு
'மையாரும் மணிமி டற்றாய்' (அப்பர்)
'மையார் மணி மிடறன்' (சம்பந்தர்)

(2) கார் மிடறுபோற் கருகியிருத்தல்
'புலியூரான் மிடற்றின்............எழில்வாய்த்த
பனிமுகில்' (சிற்றம்பலக்கோவை)
'சிற்றம்பலத்தான் மிடற்றின்
முற்படு நீண்முகில் (,,)
'மிடற்றிருளெனச் செறிதரு
மாமுகில் (கல்லாடம்)

3) சிவபெருமான் வில்லுடையவர்
'கணையமா சிலையர்' (அப்பர்)
'வில்லைப்பூண்டானை' (,,)
'வில் அங்கையேந்தியகோனை' (சுந்தரர்)
'வில்லியை' (,,)

(4) கார் சிலை விலகிக்காட்டுதல்
'திருவில் விலங்கூன்றி' (கார்நாற்பது)

(5) சிவபெருமான் ஐவாயழலரவம் பூண்டான்
ஐவாய் அரவனை (அப்பர்)

3. ஆலமர் கண்டத் தரன்றன் பணிமிடறுங்
கோலக் குழற்சடையுங் கொல்லேறும்—போல
இருண்டொன்று மின்றோன்றி யம்பொனவ் வானங்
கருண்டொன்று கூறுதலிற் கார்.

உரை :—கார்—மேகம், இருண்டு—கறுத்து, மின்—மின்னல், தோன்றி—உண்டாகி, அம்—அழகிய, பொன்—பொன் போன்ற, அ—அந்த, வானம்—ஆகாயமும், கருண்டு—இருளடைய, ஒன்று — தனியாயுலவி, கூறுதலின் — ஒலித்தலால், ஆல்—ஆலம், அமர் — பொருந்திய, கண்டத்து — மிடற்று, அரன்தன்—சிவபிரானது, மணி—நீலநிறத்து, மிடறும்—கண்டத்தையும், கோலம்—அழகிய, குழல்—மயிர், சடையும்—சடிலக்கற்றையையும், கொல்—கொல்லும் (தன்மைத்தான சினத்தையுடைய) ஏறும்—விடையையும், போல—ஒப்பாக, ஒன்றும்-பொருந்தும்.

கருண்டு—கருள எச்சத்திரிபு

கார் இருண்டு மின்றோன்றிக் கூறுதலின் மிடறும் சடையும் ஏறும் போல ஒன்றும் எனமுடிக்க.

ஆலமர் கண்டத் தரனென்றது பெயர் மாத்திரையாய் நின்றது.

கருத்து கார் இருண்டு மின்னி ஒலிக்கிறது

(1) அரன் ஆலமர் கண்டத்தன்

'ஆலாலம் மிடற்றணியா அடக்கினானை' (அப்பர்)

(2) மணிமிடறு

'மணியார்ந் திலங்கு மிடறு' (அப்பர்)

'மணிப்படு கண்டன்' (சுந்தரர்)

(3) கோல்லேறு

'கொல்லேறுடை யண்ணல்' (சம்பந்தர்)

'கொல்லேற் றண்ணல்' ,,

'கொல்லேறுடை நம்பன்' ,,

(4) கார்இடி விடை ஒலிபோன்றது

'இடியார்குரல் ஏறு' (சம்பந்தர்)

'இடிக்குரல் ஆனேறு' (கல்லாடம்)

'இடிகுரல் வெள்ளெருது' (அப்பர்)

4\. இருள்கொண்ட கண்டத் திறைவன்றன் சென்னிக்
குருள்கொண்ட செஞ்சடைபோன் மின்னிச்—சுருள்கொண்டு
பாம்பினங்க ளஞ்சிப் படமொடுங்க வார்த்ததே
காம்பினங்க டோளீஇயக் கார்.

உரை:—காம்பு—மூங்கில், இனம்—(தனக்கு) இனமாதலை, கள்—நீளுகின்ற, தோளீஇ—தோளினையுடையாய், அ—அந்த, கார்—மேகம், பாம்பு—சர்ப்பத்தின், இனங்கள்—கூட்டங்கள், அஞ்சி—பயந்து, சுருள்கொண்டு—சுருண்டு, படம்—பை, ஒடுங்க—அடங்க, இருள்கொண்ட—இருண்ட, கண்டத்து—மிடற்று, இறைவன்தன்—சிவபெருமானது, சென்னி—சிரத்தில், குருள்கொண்ட—குருளாகக் கட்டப்பட்ட, செஞ்சடை போல்—சிவந்த சடாமகுடம்போல, மின்னி—மின்னல்செய்து, ஆர்த்தது—ஒலித்தது.

ஏ அசை. கள் தோளீஇ வினைத்தொகை. காம்பினங்கள் தோளீஇ என்பது உவமைத் தொகையுமாம்.

கார், ஒடுங்க மின்னி ஆர்த்தது என முடிக்க.

கருத்து:—கார் மின்னி இடித்தது

(1) இருள் கொண்ட கண்டம்

'நஞ்சிருள் மணிகொள் கண்டர்' (அப்பர்)

(2) குருள்கொண்ட செஞ்சடை

'குருண்ட வார்குழல் சடை' (சம்பந்தர்)

'குருள் குஞ்சி' ,,

குருள் முன்கொண்டை (சென்னியிற் குருளாகக் கட்டப் பட்டுள்ள சடை) அது சுருள் வடிவாயது போலும்.

'சுருள்கொள் செஞ்சடை' (அப்பர்)

'சுருண்ட செஞ்சடையாய்' (சுந்தரர்)

(3) காம்பினங்கள் தோளீஇ

'காம்பலைக்கும் பணைத்தோளி' (அப்பர்)

5. கோடரவங் கோட லரும்பக் குருமணிகான்
றூடரவ மெல்லா மளையடைய—நீடரவம்
பொற்பகலம் பூண்டான் புரிசடைபோல் மின்னிற்றே
கற்பகலங் காண்புற்ற கார்.

உரை:—கற்பு—முல்லையின், அகலம்—விரிவை, காண்புற்ற—கண்ட, கார்—மேகம், கோடுஅரவம்—வளைந்தூர்கின்ற நாகத்தின் படம்போல, கோடல்—வெண்காந்தள், அரும்ப—தோன்றவும், ஆடு—(படமெடுத்து)ஆடும், அரவம் எல்லாம்—பாம்புகள் அனைத்தும், குரு—ஒளியுள்ள, மணி—மாணிக்கத்தை, கான்று-கக்கி, அளை—புற்றை, அடைய—சேரவும், நீடு—நீண்ட, அரவம்—நாகத்தை; பொற்பு—பொலிவுள்ள, அகலம்—மார்பில், பூண்டான்—அணிந்த சிவபெருமானது, புரிசடைபோல்—கற்றைச்சடிலம்போல, மின்னிற்று—மின்னல் செய்தது.

ஏ அசை; கோடரவம் வினைத்தொகை; அரவம் ஆகுபெயர்; அரவம் அரும்ப உவமைத் தொகை.

கோடல் அரவம் அரும்ப என்க
கற்பகலம்—முல்லை மலர்ப் பரப்பு

கார், அரும்ப, அடைய மின்னிற்று என முடிக்க.

'கற்பகலம் காண்புற்றகார்' என்றார் கார்காலத்தில் முல்லை மலர்தலின்.

நீடரவப்பொற்பு என்பதும் பாடம்; ஆயின் நாகத்தாலாகும் பொலிவை என்க.

கருத்து:—கார் மின்னியது.

(1) கோடல் அரவம் அரும்பல்

'அரவின் பையணந்தன்ன தண்கமழ்
கோடல்' (அகம்)
'அணர்த்தெழு பாம்பின்றலைபோற்புணர்
கோடல்' (கார்நாற்பது)
பா. 11
'கோடல் அரவீனும்' (சம்பந்தர்)
'பைவாய்நாகம் கோடல் ஈனும்' (,,)

(2) கோடல் அரும்ப கார் மின்னல்

'கோடல் ஈன்று கொழுமுனைகூம்ப
எழுந்தகார்' (கல்லாடம்)
'கோடல் குவிமுகை அங்கையவிழ
................பொழியும்' (பத்து.—
முல்லை)

(3) இறைவன் நீடரவம் அகலம் பூணுதல்

'மார்பில் பட அரவு...........அணிந்தவர்' (சம்பந்தர்)
'மார்பில் நுண்பொறிபரவஞ்சேர்த்தி' (அப்பர்)
'ஆரமாவது நாகம்' (சுந்தரர்)
'பாந்தள் பூணாரம்' (கருவூர்த்தேவர்)

(4) புரிசடை

'புரிசடைமுடி' (அப்பர்)
'புரிசடையாய்' (சம்பந்தர்)

(5) கார்காலத்தில் முல்லையலர்தல்

'வண்பெயற்கவிழ்ந்த பைங்கொடிமுல்லை' (அகம்)
'தண்கார்க்கீன்ற பைங்கொடிமுல்லை' (அகம்)
'கனைபெயல் பொழிதலின்முல்லை...........
தோன்ற' (அகம்)
'முல்லையெயிறுறழ வெழுந்தகார்' (கல்லாடம்)
'முல்லையிலங்கெயிறீன........கார்
........நகும்' (கார்நாற்பது)
பா. 14

(தொடரும்)

தமிழிலக்கிய மகவு

ஆசிரியர்
திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள், M. A.

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 4. பக்கம் 152.)

இனி, அழுங் குழந்தைக்கே யன்றியும் அழாத குழந்தைக்கும் பாலூட்டுவள் தாய் என்னுங் கருத்தினை மணிவாசகரும், அவர் வாசகத்தே ஈடுபட்ட வள்ளலாரும் தத்தம் தோத்திரங்களில் தந்துள்ளார்கள். உறங்கிக் கொண்டிருக்கும், சேய் நாவற்றிப்போமோ என ஐயுற்றுத் தாயானவள் பாலூட்டுகின்றாள் அதனை யெடுத்தணைத்து என்பது கண்கூடு. அதனைத் தான் மணிவாசகர் "பால்நினைந்து ஊட்டுந் தாய்" என ஓரிடத்து ஓதினர். அதனையே விரித்துரைத்தார் வள்ளலார்:—
" அழுத பிள்ளைக்கே பாலுணவளிப்பள் அன்னை என்பார்கள் அழ வலியில்லாக் கொழுதுநேர் சிறுகுழவிக்குங் கொடுப்பள்; குற்றமன்றது மற்றவள் செயலே" மற்றுமோர் அருமையை அடிகள் கண்டு அளித்துள்ளார்கள், அதாவது, தாய்க்குப் பால் மாறிவிட்டாலும் சேய் கேட்காது பல்விட்டுச் சுவைத்துப் பார்க்கும் என்பது. அதனை, அவ்வடிகளின்
.... நின் கருணை யென்மேல்தான் மாறினும் விட்டு நான் மாறிடேன் பெற்ற தாய்க்கு முலைப்பால் மாறினும் பிள்ளை பால்மாறுமோ? அதிற் பல்விடுமே" என்ற அடிகளான் அறிக. உண்மையிலும், இங்ஙனம் தாய்க்குப்பால் வற்றியிருந்த காலத்தும், கேளாது பல்விட்டுச் சுவைத்துச் சுவைத்துத் துளியளவும் பால்காணாது அழுத குழவியும் உண்டு என்பது புறநானூற்று 164-ஆம் செய்யுளால் வெளியாகிறது. பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவரின் மனைவி பசியால் உழந்து வாடி வதங்கி யிருந்தனரென்றும், அவள் வறுமுலைச் சுவைத்தொறும் சுவைத்தொறும் அவளது மகவு அழுதது என்றும், அஃதழுவதைக் கண்டு அவள் அழுதழுது வருந்தினள்

என்றும் அப்பாட்டினுல் அறிகின்ரும். இதற்கெதிராக' பாலோடு விம்மிப்பெருக்த நகிலைப் பெற்றிருந்த பெண்டிரும் உண்டு என்பதற்குச் சான்று கலித்தொகை 81,82,83,84-ஆம் செய்யுள்களிற் கிடைக்கின்றது. இவற்றையெல்லாம் ஒருபுறம் வைத்து, மற்ருெருபுறமாக நாமெல்லாம் மகார் என்றும், நமக்கெல்லாம் தாயாவான் இறைவனென்றும், அவனருளே தாய்ப் பாலென்றும், அருளை நாடி அழ வல்லரல்லா நம்முட் சிலர்க்கும் அவனருள் கிட்டுமென்றும், அவன் அருளோடு விம்மி விம்மிக் கொள்ளும் மகாரிலரே என வருந்தி நிற்பது உண்டென்றும் அவனருள் ஒருகால் மறைந்து கடுமையே தோன்றுவதாயினும் அவனையே "அம்மையேயப்பா" என அழைத்தல் முறையென்றும் கண்டு கோடல் கற்றறிந்த மாந்தர் கடன்.

"சேறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச் சிறுவரைப் பயந்த செம்மலோர்" இம்மையின்பமும் மறுமையின்பமும் எய்துவர் என்று பல நூல்கள் தமிழ் மொழியிற் கூறக் காண்கின்ரும். மறுமையுலகத்தைப் பொறுத்தது எவ்வாருயினும், இம்மையில் மகாரால் வரும் பயன் பெரிதாக உளது என்பதில் ஐயமில்லை. அவரால் "இவர்தந்தை என்னோற்ருர் கொல்" எனும் இசைமொழி யுண்டாகிறது பற்பலவேளைகளில். அஃதன்றியும், வேறுசில பயன்களும் உள எனக்காட்டுவன போலுள சில இலக்கியப் பகுதிகள். தாயின் ஊடலைத் தீர்க்க வல்ல மருந்தினுள் ஒன்று புதல்வனோடு தலைவன் புகுதால் என்று தொல்காப்பியம்; இறையனர் களவியல் முதலிய இலக்கணங்களால் உணர்கிருேம். "கண்ணுடை மணியானொடு நீவர ஊடற் சிவப்பொழிந்து மலர்ந்தனவே" எனத் தோழி தலைவற்குக் கூறிய கூற்ருக வரும் கோவையடிகளைக்காண்க.

ஒரு தலைவன் பரத்தையிடஞ் சென்று திரும்பி வருகின்ருன். அவன் வந்து நிற்பது தெரியாமல் குழவியுடன் விளையாடுகிருள் தலைவி. "ஞாயர்பால் நீ கற்ற சொல் சிலசொல்லு, பெரும்; அவை எனக்கு அமிழ்தொக்கும்" எனக்கூறுகிருள் தன் குழவியைநோக்கி அத்தலைவி. அப்படி அவள் பாராட்டப்

பாராட்ட அம்மகவு 'அத்தா அத்தா' என்கிறது. குழந்தை தனது அப்பரைக்கண்டு அங்ஙனங் கூறுவதை வேறு பக்கம் நோக்கி யிருக்கும் அவள் அறியாள், அதனால், "இவனையும் என்னையும் மறந்துவிட்டுப் போயிருக்கும் அவர் இவன் வாயினின்றும் போகின்றாரில்லை. "அத்தா, அத்தா என்றுதான் இவன் அழைக் கிறான்" என்று சொல்லிக்கொள்கிறாள். சற்றுப் பொறுத்துத் தலைவனை அவள் கண்டு நாணுகிறாள். "நான் செய்யாதவற்றை நீ சொல்லிச் சினவுதலாகாது" என்கிறான் அவன். "பரத்தை யால் மாசுண்ட நீ என் முன் நில்லாதே, செல்" எனக் கவல் கிறாள் அவள். "யான் குற்றஞ் செய்யவில்லையே எனக்கூறியும் தேறாயாயின் இவனை யான் கொள்வேன்" எனக்கூறி அவன் தன் மகவினை எடுத்துக்கொண்டு உள்ளே செல்கிறான். கன்று எங்கிருக்கின்றதோ அங்குச்செல்லும் பசுவைப்போல், அவள் தன் மகவு சென்ற இடத்தைச் சார்ந்துவிடுகிறாள். இம்மகவு அவள் ஊடலைத் தீர்க்க உதவியவாறு என்னே!

இன்றொரு நாள் தலையணை மந்திரம் நிகழ்கிறது. தலைவி தன் மகவுக்கு அறிவுரை கூறிக்கொண்டிருக்கிறாள், தலைவன் பரத்தைவயின் பிரிந்து சென்று வந்தவன் ஒருபால் கேட்டுக் கொண்டிருக்கிறான். "என் செம்மால், வனப்பாலும் நடுவு நிலைமையாலும் ஈகையாலும் உன் தந்தையை நீ ஒத்திரு. ஆனால், பிரியின் வாழேன் என்றுரைத்துப் பின் தன்னொடு ஒன்றி னாரைப் பிரியவிட்டு வதைப்பதில் மாத்திரம் உன் தந்தையைப் போல் இருக்காதே" என்பது அவள் அறிவுரை. அதனைக் கேட்டுக் கொண்டிருக்கும் மகன் நகைக்கிறான் தன்னெதிரே தந்தையைக் கண்டு. அவளறியாள் அதனை. பின், அறிந்த வுடன் நாணுகிறாள். "தவறு செய்திலாத என்பால் ஏதுதவறு? நீ கேளாயாயின், புதல்வனைக்கொடு" என்கிறான் தலைவன். கொடுக்க மனமில்லாதவளாய் அவள் உள்ளாள். புதல்வனோ சரேலெனத் தந்தை மார்பிற் பாய்ந்து விடுகிறான். "நான் எப்படி வளர்த்தாலும் அன்பிலாத் தந்தைபால் இவனுக்குஉள்ள அன்பைப் பார்த்தாயா" என்று கூறிக்கொண்டே அவளும் அவர்கள் சென்றவிடமே செல்கின்றாள். இக்குழந்தை

தந்தைக்கு நல்லுரை புகட்டவும் உதவியாயிருந்தவாறு என்னே! இவற்றை யொத்தவை கலித்தொகையில் பலவுள.

இன்னொரு மகவு தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடிக்கொண்டிருக்கிறது. யாரோ ஒருத்தி அப்பக்கஞ் சென்றவள் சுற்றுமுற்றும் பார்த்து அவனை எடுத்தணைத்து உச்சி முகர்ந்து 'என்னுயிரே வருக' என்கிறாள். ஒரு குரல் அவளைத் திடுக்கிடச்செய்கிறது. "ஏன் மயங்குகிறாய்? நீயுந் தாயே இவற்கு" என்பது அது. திரும்பிப் பார்க்கிறாள். வீட்டு வாசலண்டை ஒளிந்திருந்தே பார்த்துவந்த அம்மகவின் தாயினது குரல் அது என்பதைக் கண்டு களவொடு பட்ட கள்வனைப் போல நாணி நிற்கிறாள். பின் எப்படியோ சென்றாள். தலைவன் வந்தான் தன் வீட்டிற்கு, தலைவி குற்றஞ் சாட்டினாள். அவன் "உன்னை யொழியப் பிறரை அறியேன்" என்றான் "ஆமாம், இவளும் நல்லவள்தான். உம்மையொழியப்பிறரை அறியாள்" என்றாள் தலைவி. "அவளா? எவள்?" என வினவினான் அவன். அவள் "தெரியாது போலவா கேட்கிறீர்" எனச்சினந்து முன் நிகழ்ந்ததை உரைத்தாள். தலைவனோ ஓர் அசட்டுச்சிரிப்புச்சிரித்துத் தலையைத் தொங்கப்போட்டான். இன்னணம், தந்தையின் திருட்டு வெளியாவதற்குக் காரணமாயிருப்பவும் மகவினாற் பயனில்லையென யாரே பகர வல்லார்?

இன்னொரு பெரியவர் ஒருநாள் வெளியே புறப்பட்டார். அவர் குறித்திருந்தது ஒரு பரத்தை வீடு என்பது அவர் மனைவிக்குத்தெரியும். அவர் தேரில் ஏறி உட்கார்ந்தார். உள்ளிருந்து குழந்தை தளர்ந்து தளர்ந்தோடி வந்து "அப்பா நானும்" என்றது. அதற்குள், தேர் சிறிது தொலை சென்றிருக்கும். குழந்தை மொழியைக்கேட்டவுடன் தந்தையார் தேரை வீட்டுக்குத் திருப்பச்சொன்னார். இறங்கி வந்து, குழந்தையை யெடுத்துப் புல்லி "செல் அப்பா உள்ளே" எனச்சொல்லிப் பார்க்கிறார். மகன் கேட்கிறானில்லை. என்

செய்வார் பெரியவர் பாவம்! அவனைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு உள்ளே வருகிறார். உள்ளே உள்ள அம்மையார் தான் குழவியைக் கிள்ளிவிட்டது தந்தை வெளியே செல்கிறாரென்று, எங்கே தனது வேலை தெரிந்துவிடுமோ என்று சட்டென ஒரு கோலோடு இப்பொழுது வருகிறாள். "என்னடா, பயலே, இப்படியா போய் தடுக்கிறது அவரை? வெளியிலே என்ன வேலையோ. என்ன அவசரமோ, போகிற அவரைப்போய்த்தடுக்கவும் ஆயிற்று" என்று அடிக்க வருபவள் போற் கூறுகிறாள். தந்தையார் குழவியாருக்கு வருந் துன்பத்தைக்கண்டு, போவதை ஒத்திவைக்கிறார். பின்னர்ப்போகவுமில்லை. ஆ! இக்குழந்தை தாய்தந்தைக்குச் செய்த உதவியை நினைத்து உருகாமல் இருக்க முடியவில்லை. குழந்தைபாற் பயனென் என்பார் பார்க்கட்டும் இத்தகைய விளையாட்டுகளை! அதற்காகத்தானே, இவ்விரண்டையும் அகநானூற்றுப்பாடல்களிலே வைத்தளித்துள்ளார்கள்! மற்ற தமிழ் நூல்களையும் காணின், இவரனைய மகாரைக்காணுதிருக்க முடியாதென்பது திண்ணம். அவர் தம்மை அன்பர்களே கண்டறிந்து மகிழ்வார்களாக!

மலையுங் கடலும்

—திருவாளர்—

க. ப. சந்தோஷம் அவர்கள் B. A., L. T.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 4, பக்கம் 135.)

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களுக்குந் தொடர்புண்டாக்குவன ஆறுகளாம். இவை மலைகளிற் றோன்றிக் காடுகளூடேயோடி, மருதத்தை மருவிக் கடலிற் கலக்கின்றன. இவ்வகையில் சில விடங்களில் மூவாயிரம் நான்காயிரம் மைல்களுக்கப்பாலிருக்கும் மலையுங்கடலும் ஒன்று படுகின்றன. மலையிலிருந்து தோன்றியோடுகின்ற ஆற்றின்நீர், மண், கல், மரம், மடிந்த விலங்கு, பறவை முதலியவற்றை நாடோறுங் கடலிற் கொண்டுபோய்ச் சேர்த்தவண்ணமாயிருக்கிறது. பல நூற்றாண்டுகளாய் நிலங்கரைந்து கடலிற்போய்ச் சேருமாயின், ஆறுகள் பாய்கின்ற விடத்திற்கருகிலுள்ள கடற்பரப்பு ஆழத்திற் குறைந்து கொண்டே வருமென்பது சொல்லாமலே விளங்கும். ஆழங்குறையக் குறைய அதற்கீடாகக் கடலின் மேற்பரப்பு விரியும். கடற்கோள் நேருவதற்கிஃதொரு காரணமாகும். பன்னூறாயிரமாண்டுகள் இங்ஙனம் ஆற்றின் வழியாகக் கல்லும் மண்ணும் போய்க் கடலில் விழுந்தால், மலை போன்ற பெரிய நிலத்திரள்கள் கடலில் உண்டாவது வியப்பாமோ? இந்நிலையில் நிலவதிர்ச்சிகள் தோன்றுமாயின் கடலிலிருந்து மலைகள் கிளம்பும். இத்தகைய மலைகளிற்றான் பன்னூறாயிரமாண்டுகளுக்கு முன்னிருந்து அழிந்துபோன விலங்கு பறவைகளின் எற்புச் சட்டங்கள் காணப்படுகின்றன. இங்கிலாந்திற் கரும்பலகைகள் எடுக்கப்படும் மலைகள் பல இவ்வகையிற்றோன்றியனவே. ஆறு வாய்க்கால் முதலியவை நிகழ்த்திடு

மித்தொழிலைக் கூறவந்த மனோன்மணீய ஆசிரியர் பின்வருமாறு நயம்பட உரைக்கின்றார்:—

தமக்கு ஊண் நல்கும் வயற்கு உபயோகம்
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்
செய்தொழில் எத்தனை விசித்திரம். ஐயோ!
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட அன்றோ நடப்பது இச்சிறுகால்!
பார் இதோ! பாறைகளை நெறுநெறு என்றுரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன்வலிக்கு அடங்கிய மண்கல் புல்புழு
இன்ன தென்றில்லை; யாவையும் ஈர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுட்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகும் இவையெனஓர்ந்து உருட்டிக்
கொண்டுசென்று இட்டுமற்று "ஐயா!
அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குன்றுவீழ் அருவியாய்த் தூங்கியும், குகைமுகம்
இழிந்தும், பூமியின் குடர்பல நுழைந்தும்,
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந்து ஓடியும்,
ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்,
ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்,
மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்
பற்பல பாடு யான்பட்டு அங்கூட்டியது
அற்பமே யாயினும் ஆதரவாய்க் கொள்;
இன்னமும் ஈதோ ஏகுவன்," எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழிலியாய்
வந்து இவண் அடைந்து, மற்றுஇராப் பகல்மறந்து
நிரந்தரம் உழைக்கும் இந்நிலைமையர் யாவர்?

(மனோன்மணீயம்) மூன்றும் அங்கம், இரண்டாங்களம் வரி 33-59.

கடலிலுள்ள நீர் கதிரவனின் வெப்பமாகிய ஆற்றலால் ஆவியாக மாற்றப்பட்டு, விண்ணிலெழுந்து, மலைகளிற்றவழ்ந்து,

மாரியாகப் பெய்வதனாலன்றோ ஆறுகளோடுகின்றன. மழை பெய்வதென்பது, கடல் நீரை விண்ணிற்குக் கொண்டுபோய், மலையிலுங் காட்டிலும் வெளியிலு மூற்றுவதாகுமென்றியம்புவது பொருந்தும். நீர் கீழ் நிலையிலிருக்குந் தன்மையது. அதை மேலே கொண்டுபோக மிகுந்த செலவும் முயற்சியும்வேண்டும். காவிரியை மைசூர் நாட்டிற் கண்ணம்பாடியிலும், சென்னை மாகாணத்தில் மேட்டூரிலும் அணைபோட்டுத் தடுத்து நீர் மட்டத்தை யுயர்த்திப் பயிர்த்தொழிலுக் குதவிபுரிகின்றனர். பழைய சோழ மன்னர்களும் தம் குடிகளின் பொருட்டிதைச் செய்தனர். கண்ணம்பாடி. மேட்டூராகிய இரு அணைகளுக்கும் செலவாகிய தொகையைக் கருதுவோமாயின் நீரின் மட்டத்தை ஐம்பது, நூறு, இருநூறுஅடி உயர்த்துவதற்கெவ்வளவு முயற்சி வேண்டுமென்பதை யறிந்துகொள்ளலாம். மழை பெய்து ஆற்றில் வெள்ளம் வராவிடின், இவ்வணைகள் தாம் எங்ஙனம் பயன்படும். மழை பெய்ய வேண்டுமாயின் கடல் மட்டத்திலிருக்கும் நீரை ஆவியாகமாற்றி அதை ஆயிரம், இரண்டாயிரம், பத்தாயிரம், இருபதாயிரம், முப்பதாயிரம் அடியுயரம் வரையிலும் அதற்கப்பாலுங் கொண்டுபோய்க் குளிரச் செய்ய வேண்டும். பொருள் கொடுத்திதை நிகழ்த்தலாங்கொல்! உலகிலுள்ள உயிர்கள் இனிதுவாழற்பொருட்டு கடலிலிருந்துமலைக்குச் சென்றுவரும் நீரோட்டமாகிய மழைபெய்யுங் காட்சி பார்ப்பவருள்ளத்தை இளக்குந் தன்மையது. இதுகண்டு நாம் வியக்கின்றோமில்லை. அழகிய இவ்வமைப்பு யாண்டிருந்து வந்ததென்று கேட்கின்றோமில்லை. பழக்கத்தின் பயனாக இதனருமை நமக்கு விளங்குவதில்லை. கடவுள் வாழ்த்தையடுத்து வான்சிறப்புக்கூறிய வள்ளுவர்போல் மழையின் பேருதவியை எவருணர்ந்தார்?

உலகம் செவ்வனே நடைபெறுதற்பொருட்டுக் கடலிலும், நிலத்திலும், விண்ணிலும் நீர் தங்க வேண்டியதாகின்றது. கடலின் நீரில்லாவிட்டால் வையகங் கரிந்துபோம்; நிலத்தில் நீரில்லாவிட்டால், வள்ளுவர் பகர்ந்த வண்ணம், பசும்புல் தலை தானுங் காண்பரிதாகிவிடும்; விண்ணில் முகில் வடிவாய் நீரில்

லாவிடின், கதிரவன் வெப்பந் தாங்குதற்கரிய வாற்றலொடு நிலத்தைத் தாக்குமென்பர். இம்மூன்றிடங்களிலும் வேண்டிய அளவு நீர் தங்கும்பொருட்டு இயற்கை கையாளுகின்ற சிக்கன முறை வியத்தற்குரியது. முந்நீர் ஆவியாக மாறுவதும், கொண்மூ மலைகளிற்றவழ்வதும், நன்னீராய் வீழ்வதும், ஆறாய் ஓடுவதும், மீண்டுங் கடலிற் புகுவதும், பெயர்த்தும் எழிலியாய் எழுவதும், ஆகிய ஓர் எளிய, இனிய சுற்றுமுறையை இயற்கையிற்காண்கின்றோம். இச்சுற்றுமுறை ஈண்டு மாத்திரமன்றிக் கங்குல் பகலென்றவற்றிலும், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் என்ற பெரும்பொழுதுகளிலும் வெளிப்பட்டு நிற்கின்றது. காற்றையும் கடலையும் இயற்கை இவ்வாறே இயக்குகின்றது. விலங்கு பறவைகள் உள்ளிழுத்து விடுவதால் நச்சுத் தன்மை யடைகின்ற காற்று, மரஞ், செடி, கொடிகளால் உட்கொள்ளப்பட்டுத் தூய்மைபெற்று வெளிவருகின்றது. கடலிலிருந்து நீர்மேலே ஏறுவதற்குக் காற்று உதவி புரிகின்றது. விண்ணிலிருந்து விழும் நீரைக் கடலிற் செலுத்துவதற்கு மலை உதவுகின்றது. ஆதலின், மேற்குறித்த சுற்றுமுறை நடைபெறுவதற்கு மலை இன்றியமையாததென்பதைக் கண்டுகொள்க.

மலைமேல் மழைபெய்வதால் மலைச்சாரல்களிலுங் காடுகளிலும் மலையையடுத்திருக்கின்ற ஊர்களிலும் நகரங்களிலுமுள்ள அழுக்குகளனைத்துங் கழுவப்பட்டு, ஆறுகளின் வழியாய்க் கடலிற்கொண்டு போய்ச் சேர்க்கப்படுகின்றது. மற்றும், மக்களுடம்பிலு முடையிலுமுள்ள அழுக்கும், வீட்டுக் கூளம், சாக்கடை முதலியவற்றினழுக்கும், சிறு வாய்க்கால்கள் வழியாய் ஆற்றிற்குப் போய்க் கடலையடைகின்றது. இம்முறையில் வையகத்தி னழுக்கெல்லாங் கடலிற்போய்ச் சேர்ந்தும் கடல் நாற்றமெடுப்பதில்லை. இடையறாதியங்கிக் கொண்டிருப்பதால் கடல்நீர் கறைப்படுவதில்லை.

உயரத்தோன்றிக் கீழே பாய்ந்து, மரஞ், செடி கொடிகளை மகிழ்வித்தும், விலங்கு பறவைகளுக்கு ஊண் விளைவித்தும், மக்களுக்குப் பலவாறு பயன்பட்டும், அவர்களழுக்கை ஏற்றுக்

கொண்டும், வீடுசேர விரைந்து செல்லுமொரு மகளைப்போல், கடலிற்போய்ப் புகும் ஆற்றின் தன்மை அழகிது, அழகிது!

பேரன்பும் பேரிரக்கமுமுடைய மேன் மக்கள், தாம் உயரத் தோன்றுகின்றவராயினும், அறிவிலும் ஆற்றலிலுந் தம்மைவிடத் தாழ்ந்த வேறு மக்களை வெறுத்தொதுக்கிடாது, அவர்கள் பாலன்பு கொண்டு, அவர்களோடு பயின்று, அவர் களது பசியையகற்றி, வெப்பந் தீர்த்து, அவர்தம் வினைகளையுந் தாமே ஏற்றுக்கொண்டு, அழுக்கைத் தாங்கித் தமக்குப் பிறப் பிடமாகிய கடவுளடி சேர்வர்.

இரும்புதல் என்னும் வைப்புத்தலம்

ஆசிரியர் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள்,
திருவையாறு.

சைவ சமய குரவர்களாகிய நால்வராலும் அல்லது அவர்தனிலொவ்வொருவராலும் தனிப்பதிகம் (பத்துப்பாடல் களையுடையது) பெற்றுள்ள சிவதலங்கள் பாடல் பெற்ற தலங்களென்றும், அவ்வாறு தனிப்பதிக மின்றிப் பொதுப் பதிகங்களிலேனும் வேறொரு தலப்பதிகங்களினிடையிலேனும் வைத்துக் கூறியிருப்பவை, வைப்புத் தலங்களென்றும் கூறப் படும்.

இத்தகைய வைப்புத்தலங்களிற் பல இக்காலத்தில் பண்டைப்பெயர் சிதைந்தும் அவை யாண்டுள என அறிதற்கும் இயலாதிருக்கின்றன. அவற்றை அறிந்து கொள்வதற்குக் கல்வெட்டுக்கள் உதவி செய்கின்றன.

திருநாவுக்கரசரது திருவீழிமிழலைக்குரிய திருத்தாண்டகத்தால்* இரும்புதல் என்னும் ஒரு வைப்புத்தலம் உளது என்று பெறப்படுகின்றது.

அது யாண்டையதென ஆராய்வுழி, தஞ்சாவூர் ஜில்லா பாபநாசந் தாலூகாவில் பாபநாசத்திலிருந்து சாலியமங்கலத்திற்குப் போகும் பெருவழியில் (Road) உள்ள இரும்புதலை என்ற ஊரே அத்தலம் என்பதை ஒரு கல்வெட்டு புலப்படுத்துகின்றது. இரும்புதல் என்ற ஊரே, இக்காலம் ஐகாரச் சாரியைப் பெற்று இரும்புதலை என்று வழங்குகின்றது. அக்கல்வெட்டைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

சுவஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநி[லமடந்]தையும்போற்சயப்பா[வை]வயுஞ் சீர்த்தனிச் செல்வியுந்தன் பெருந்தேவியராகியின்பு[றநெ]டுதி யலூழியுள் இடைதுறைநாடுந் தொடர்வனவேலிப் படர்வன வாசியுஞ் சுள்ளிச்சூழ் மதிள் கொள்ளிப் பாக்கையும் நண்ணற்கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத் தரைசர்த முடியும் ஆங்கவர்தேவி ரோங்கெழில் முடியும்

---

* பெரும்புலியூர் விரும்பினார் பெரும்பா ழிய்யார் பெரும்பற்றப்
[புலியூர் மூலட் டானத்தார்

இரும்புதலார் இரும்பூளை யுள்ளார் ஏரார் இன்னம்ப ரார்ஈங்கோய்
[மலையார் இன்சொற்

கரும்பனையாள் உமையோடுங் கருகா வூரார் கருப்பறிய லூரார்
[கரவீ ரத்தார்

விரும்பமரர் இரவுபகல் பரவி யேத்த வீழி மிழலையே மேவி னாரே.

(திருநாவுக்கரசர் தேவாரம். சமாஜப்பதிப்பு. பக்கம் 412. செய்யுள் 6.)

இரும்புதலார்—இரும்புதல் என்ற ஊரில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானார்.

குறிப்பு:—வயிணவர் தலங்களைத் திவ்யதேசமென்றும், பாடல் பெற்றவற்றை மங்களாசாசனம் பெற்றவை யென்றும், வைப்புத்தலம் போன்றவற்றை (பாடல் பெறாத சிறந்த தலங்களை) அபிமான க்ஷேத்திரம் என்றும் கூறுவார்.

முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமுந் தெண்டிரை ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கேரளர்மு[றைமையி]ற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர்மாலை[யு]ஞ் சங்கதிர்வேலைத் தொல் பெருங்காவல் பல பழந் தீவுஞ் செருவிற்[சி]னவி யிருபத்தொரு காலரைசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திம[த்தீவர]ண் கருதி யிருத்திய செம்பொற் றிருத்தகு [முடி]யும் பயங்கொடு பழி[மிக] முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்[க]ன் அளப்பெரும் புகழொடு பீடியல் இரட்டப்பாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெருமலைகளும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீராஜேந்திரதேவர்க்கு யாண்டு பத்தாவது அதிகாரிகள் காஞ்சி வாயிலுடையார் உதை[ய] திவாகரன் தில்லையாளியாரான ராஜராஜ மூவேந்த வேளார் எழுந்தருளிவித்த கிரதார்ஜுன தேவர்[க்]குத் திருவமுது உள்ளிட்டு வேண்டுந்நிவந்தங்களு[க்]குஞ் சிறுதனத்துப் பணிமக்கள் உடையார் ஸ்ரீஇராஜராஜதேவர் எழுந்த[ருளுவி]த்த மஹாமேரு விடங்கா[க்]கும் நம்பிராட்டியார்க்குந் திருவமுது உள்ளிட்டு வேண்டுந் நி[வ]ந்தங்களுக்கும் உடையார் ராஜேந்திர தேவர்க்கு யாண்டு பத்தாவது வரை இவர்கள் வைத்த காசில் ஸ்ரீராஜராஜீஸ்வரத்தினி தெழுந்தருளி இருந்த பரமசுவாமிக்கு மூலப்பிரத்தியனாகிய சண்டேஸ்வரதேவர் பக்கல் பொலிசை ஊட்டுக்குக் கொண்ட ஊருங்கல்லில் வெட்டின நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து பிர்மதேயம் இரும்புதலாகிய மனுகுலச் சூளாமணி சதுர்ப்பேதிமங்கலத்துச் சபையார் அதிகாரிகள் காஞ்சி வாயிலுடையார் உதைய திவாகரன் தில்லையாளியார[ான] ராஜராஜ மூவேந்தவேளார் எழுந்தருளுவித்த கிரதார்ஜுன தேவர்க்குத் திருவமுது உள்ளிட்டு வேண்டுந் நிவந்தங்களுக்கு வைத்த க[ாசில் கொ]ண்ட காசு தொண்ணூற்று நாலும் உடையா[ர்] ஸ்ரீர[ாஜராஜதேவர் எழு]ந்தருளுவித்த மஹாமேருவிடங்கர்க்கும் நம்பிராட்டியார்க்குந் திருவமுது உள்ளிட்டு வேண்டுந் நிவந்தங்களுக்குச் சிறுதனத்துப் பணிமக்கள்வைத்த காசில்கொண்ட காசு ஐஞ்ஞூற்றுறும் ஆக யாண்டு பத்தாவது பசான் முதல்

கொண்ட காசு அறு நூறினல் காசு ஒன்றுக்கு ஆட்டைவட்டன் பலிசைநெல்லு முக்குறுணியாக சந்திராதித்தவல் ஆட்டாண்டு தோறும் ராஜகேசரியோடொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் தஞ்சாவூர் உடையார் பெரும்பண்டாரத்தே அளக்கக் கடவநெல்லு நூற்றைம்பதின் கலம்.

Taken from the [South Indian Inscription Vol. 2. Inscription No. 10 page 93 & 94.]

சில குறிப்புகள்,

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள கோப்பரகேசரி வன்மரான இராசேந்திரதெவன் தஞ்சைப் பெரியகோயிலை எடுப்பித்த முதலாம் இராச ராச சோழனது மகன், கி. பி. 1012 முதல் 1042 வரையில் சோழமண்டலத்தைச் சிறப்புடன் ஆண்ட பெருந்தகையாளன். இவனைக் கங்கைகொண்ட சோழனென்றும் வழங்குவர். அவ்வேந்தன் அரியணை ஏறிய பத்தாம் ஆண்டில் இக்கல்வெட்டு பொறிக்கப் பெற்றதாகும்.

இக்கல்வெட்டினல் நித்த விநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து இரும்புதலாகிய மனுகுலச்சூளாமணி சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார் இராராஜேச்சுரத்து இனிது எழுந்தருளியிருந்த பரபசுவாமிக்கு மூலப்பிரத்தியஞகிய சண்டேசுவரர் பக்கல் அறுநூறுகாசை வட்டிக்குக்கொண்டுள்ள செய்தி குறிக்கப்பெற்றுள்ளது.

நித்தவிநோத வளநாடென்பது, தஞ்சைசில்லாவில் அரிசிலாற்றின் தெற்குப்பகுதியும், மன்னார்குடி தாலூகாவின் வடக்குப்பகுதியும், கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலத்திற்குப்போகும் பெருவழியின் மேற்குப்பகுதியும், தஞ்சாவூர் தாலூகாவின் கீழ்ப்பகுதியும், அடங்கிய நிலப்பரப்பாகும். ஆவூர்க்கூற்றம், கிழார்க்கூற்றம், பாம்புணிக்கூற்றம் முதலியன இவ்வளநாட்டின் உட்பகுதிகளாகவுள்ள சில பகுதிகளாகும்.

ஆவூர்க் கூற்றமென்பது

தஞ்சை சில்லாவில் பாபநாசந்தாலூகாவில், தேவாரம் பெற்ற தலமாகிய ஆவூரைத் தலை நகராகக்கொண்டுள்ள ஒரு சிறு நாடாகும். இரும்புதலை, அமுதரவல்லி, முன்னியூர், விளத்தூர், செம்மங்குடி, பட்டம் என்னும் ஊர்கள் இக்கூற்றத்திலிருந்தன என்று கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

[ஈண்டுக் குறிக்கப்பெற்ற இவ்வூர்கள் ஆவூரைச்சுற்றி இன்றும் நிலைபெற்றுள்ளன.]

ஜைனசமயத்தவரால் செய்யப்பட்ட

யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

இந்நூல், ஜைனசமயத்தின் பாலதும், "சித்திரத்தில் உருவம் சிதைத்தல் ஆகாது" என்ற பழமொழிக்கு இலக்கியம் ஆயதும் சிறுபஞ்ச காவியங்களுள் ஒன்றெேன உரைக்கப்படுவதும் ஆகிய சிறப்பினை உடையது. முன்னூற்று இருபது பாக்களால் ஆக்கப் பட்டு, ஐந்து சருக்கங்களாகப் பகுக்கப் பட்டது. முன் எவரும் உரை எழுதவில்லை. முன் மூலம்மட்டும் பதிப்பிக்கப்பட்டது. அது இன்று விலைக்குங் கிடைக்காது. இதனை ஆக்கியோன் பெயர், ஊர் முதலியன தெரிந்தில. தெரிந்த அறிஞர் எவரே னும் பத்திரிகை வாயிலாகத் தெரிவிப்பர்ஆயின், அவர்தம் நன்றி மிகவும் பாராட்டற்பாலதாம். இச்சிற்றுரை, குற்றங்கட்குக் கொள்கலனாக விருப்பினும், இதனைக் காணும் நல்ல அறிஞர்கள், நம் தமிழ்மொழி கல்லார்க்கண் பட்டுக் கெடுகின்றதே என்ற பரிவினால், தங்களிடத்துள்ள நல்ல பாடல்களோடு, தாம் ஒரு குற்றம் அற்ற பொருள் செறிந்த உரையினை எழுதி வெளியிட்டு அருளுவார்கள் என்ற எண்ணத்தினால், யான், இவ்வுரையினை எழுத விரும்பினேன். சிலவிடங்களில், மற்றொன்று விரித்த லாக இருப்பினும், மிகைபடக் கூறலாக விருப்பினும், "பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற, சில சொல்லல் தேற்றாத வர்" என்ற திருமொழியை உன்னி, அதனால் உண்டாம் பரிவி னால், அறிஞர்கள், ஏற்றுக் கொள்ளுவார்கள் என யான் நம்பு கின்றேன்.

நூல்—பாயிரம்.

அருக தீர்த்தகரர் வணக்கம்.

1. உலக மூன்று மொருங்குணர் கேவலத்
தலகி லாத *வநந்த குணக்கடல்
விலகி வெவ்வினை வீடு விளைப்பதற்
கில்கு மாமலர்ச் சேவடி யேத்துவாம்.

முன்பாடம்:—*வனந்த.

பொருள் கோள்:—மூன்று உலகம் ஒருங்கு உணர் கேவலத்து அலகு இலாத கடல் அநந்த குணம் வெவ்வினை விலகி மாமலர் இலகும் சேவடி வீடு விளைப்பதற்கு ஏத்துவாம்.

பொழிப்புரை:—மூன்று உலகங்களின் பொருள்கள் யாவையும், அவைகளின் முக்கால நிகழ்ச்சிகளையும், தன்னோடு, ஒரே காலத்தில் அறியும், கேவல ஞானத்தை உடையவரும், அளவில்லாது பரந்த கடல்போலும் அநந்த ஞானாதி குணங்களை உடையவரும், ஞானாவரணாதி தீவினைகளின் நீங்கியவரும் ஆகிய, ஸ்ரீஅருக தீர்த்தகரர் உடைய, ஆயிரத்து எட்டு இதழ்கள் பொருந்திய பெரிய தாமரை மலரின் மீது ஒளிரும், செவ்விய திருவடிகளை, வீடு அடைதற்கு ஏதுவான புண்ணியம் பெருகுதற்பொருட்டு, யாம் துதிப்பாம்.

குறிப்புரை:—மூன்று உலகங்கள்—நாகலோகம், பூலோகம், சுவர்க்கலோகம் என்பன. (சீவகசிந்—2813—உரை.) அலகு இலாத—அளவு இல்லாது பரந்த குணக்கடல்—அருகர். வெவ்வினை விலகி—அருகர். மாமலர்—பெரிய மலர். இலகும்—ஒளிரும். சேவடி—(செம்மை + அடி, விகாரம்) செவ்விய திருவடி. வீடு விளைப்பதற்கு—புண்ணியம் பெருகுதற் பொருட்டு. ஏத்துவாம்—துதிப்பாம்.

சிறப்புரை:—ஒருங்கு உணர்—"மண்ணார் கதிர்மணி மலரார் செங்கையில் வைத்துக் கண்டவர் ஒத்து என்றும், எண்ணாது அகிலமும் உடனே கண்டு அருள்கின்றாய்" (திருக்க—10)

அநந்த ஞானுதி குணங்கள்—அநந்த ஞானம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம் என்பன. (சீவக சிந். 3092 உரை) (வெவ்வினைகள் ஞானுவரணுதிகள்—ஞானுவரணம், தரிசனுவரணம், மோஹநீயம், அந்தராயம் என்பன. (மேருமந்—807—உரை) இவற்றின் தமிழ் மொழிப் பொருள்களையும், அவற்றின் பண்புகளையும், சீவக சிந். 3081-ன் உரையில் காண்க.

வெவ்வினை விலகி—"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" (நன்னூல் பாயிரம் 6.) என்ற திருமொழிக்கு முன்னோர்மொழிக்கு ஏற்ப "வினையின் நீங்கியவர்" என்பது பொருள். வீடு விளைப்பதற்கு—"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன், பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்ற திருமொழிக்கு ஏற்ப இறைவனை வணங்கும் நல்வினையே வீடு விளைப்பது ஆதலின், வீடு அடைதற்கு உரிய புண்ணியம் பெருகுதற் பொருட்டு என்றபடி. "இருள் சேர் இருவினை"—(இருள்-நரகம். சேர்-சேர்க்கும். இருவினை-கரியவினை; தீவினை.) "ஆன்மாவை நரகத்தில் சேர்க்கும் தீவினை" என்பது பொருள். இவ்வகையன்றி, "இருவினை"—நல்வினை தீவினையாகிய இரண்டு வினைகள் என எண்ணுப்பொருளால் கழறுதல் கூழறுவார் கருத்தன்றிக் கவிக்கருத்தன்று. என்னெனின், நல்வினையும் சேராதாயின், கடவுளை வணங்குதல் பயனில் செயலாம். ஒரு வாணிபத்தைச்சுட்டி இவ்வாணிபம், ஆக்கமும் அழிவுந் தாராதது. இதனைச் செய்க எனின், எவரேனும், அவ், வாக்கந்தரா வாணிபத்தினைச் செய்குவரோ? எவரும் செய்யார். செய்யின், அச்செயல் பயனில் செயலாம். அதுபோன்றதேயாம், நல்வினைச் சேருதற்கு ஏதுவல்லாத கடவுளை வணங்குதலும். நிற்க, இருவினை—கருவினை—தீவினையாமோ எனின், ஆம். "கரந்தன கடியவாய கருவினைக் குழாங்கள் ஆங்கே" (மேருமந்-1045) "நீல் நிற வினையின் நீங்கி" (சீவகசிந்—947.) "கருவினைக் கழுவப்பட்டு" (சீவகசிந்—951.) கருமால் வினை அரசு கால்தளர" (சூளாமணி—முத்தி 55.) "காரேர் கருமக்கடல் கடந்த கைவலத்தாய்" (திருக்க—80) இந்நூலுள் "காந்து

உயிர் உண்டு கன்றிக் கருவினைப் பெருகச் செய்தாய்'' (4-வது சரு-22-செய்) ''இருள்புரி வினைகள் சேராது இறைவனது அறத்தை எய்தின் '' (5-வது சரு—46 செய்) இவற்றாலறிக. அன்றி, ''வெவ்வினை விலகி வீடு விளைப்பதற்கு'' தீய வினைகள் எம்மைச் சேராமல் நீங்குதற் பொருட்டும், வீடு அடைதற்கு ஏதுவான புண்ணியம் சேருதல் பொருட்டும், எனலும் ஆம்.

(தொடரும்.)

உ
சிவமயம்.

செந்தமிழ்ப் புரவலர்கட்கு வாழ்த்தும் ‘இந்தி’ மொழிக்கு ஓய்வும்

வெண்பா.

மால்நய உபருமா மாகேசு ரன்பெரியோன்
பால்சோம சுந்தர பாரதியும்—ஞாலமிசை
என்றும் நிலைத்தே இனிதாக நீடூழி
நன்றாக வாழ்க நனி.

செந்தமிழ்த் தாயவளின் செல்வர் தமிலிருவீர்
முந்திவரு சிங்கங்காள் முன்னின்று—சந்ததமும்
வெற்றி பெறுவீர் வியக்கும் பசுந்தமிழைக்
கொற்றமுடன் காப்பீர் குளிர்ந்து.

இந்தி யொழிக இனிய தமிழ்வளர்க
வந்தவுபா யம்ஒழிந்து மண்ணுகச்—சந்ததமும்
வெற்றி பெறுக! விறலோங்கி யேமகிழ்க!!
நற்றவத்தைச் செய்திடுவேம் யாம்.

இந்திமொழி வேண்டுமென்போர் எற்குந் தமிழரா
பிந்து பனவர்க்குப் பிறந்தவராம்—இந்த
நிலையே ஒருவர் நிலைத்துவளர்ந் தோங்கித்
தலையே பெறுஞ்செந் தமிழ்.

ஏதுக்கு மஞ்சோம் எதற்குமே முன்னிற்போம்
மாதூற்ற பாகன் வலியுண்டு—தீதுற்ற
இந்தி யொழியும் எடுத்தோருந் தாமொழிவர்
சந்ததமும் வாழ்வோந் தழைத்து.

எல்லாந் துறந்தாலும் இன்பத் தமிழினையும்
நல்லசைவத் தினையும் நாந்துறக்கேம்—டில்லன்மிகு
பீடுபெற நந்தமிழும் பெம்மானருள் புரிக
நாடித் தவம்புரிவோம் நாம்.

ஊழூழி தோறுமுள வுன்றமிழை ஓய்கவெனப்
பாழான இந்தி பரவாமல்—கேழில்லாய்
அம்மொழியை நீக்கி யகற்றி யொழித்திடுவாய்
செம்மேனி நாதா சிவா.

இங்ஙனம் கல்லல்
குகமணிவாசக சரணாலயன்

ஈசுவர ஆவணி ௨௪.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்

இந்திமொழி மறுப்புக் கூட்டம்

தலைமையிருந்தோர்

திருவாளர். M. M. வேங்கடாசலம்பிள்ளை அவர்கள் B.A., B.L.

முடிபுகள் :—

முதல் மூன்று பாரங்களில் அதாவது 6, 7, 8 வகுப்புகளில் இந்திமொழியைக் கட்டாய பாடமாக்குவதெனவும், அவற்றினும் மேல்வகுப்புகளில் சரிதநூலை, இந்திமொழியில் கற்பிப்பதெனவும், அரசியலார் செய்திருக்கும் முடிவைக், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் குழுமியுள்ள, தஞ்சைப் பொதுமக்கள் வன்மையுடன் கண்டித்து கீழ்க்காணும் முடிபுகளை நிறைவேற்றுகின்றனர்.

(1) இளம்பிராயத்தினராயுள்ள மாணவர்கள் கற்கவேண்டியிருக்கும் தாங்கவொண்ணாதசுமையாகும் பாடதிட்டத்தில், இந்த அயல் மொழியையும் சேர்ப்பதால், மாணவச் சிறார்களின் உடல் நலமும், கல்வி முன்னேற்றமும் கேடுற்றுப் பாழ்படுமென்பது.

(2) ஆங்கிலம், தாய்மொழி இவற்றிற்குரிய பயிற்சிக்குஒதுக்கப்பட்டிருக்கும் நேரங்களிலிருந்து காலத்தை இந்திமொழி பறிகொள்ளுவதால், அம்மொழிகளில் மாணவர் தேர்ச்சி குன்றி மொழி வளம் பாழ்படுமென்பது.

(3) வடமொழி பயிலும் மாணவர்க்கு மிக்க உதவியாகவும், கல்வித்துறையில் பின்னிலையில் நிற்கும் வகுப்பினரின் கல்வி முன்னேற்றம் தடைப்பட்டுக்கேடுறுமெனவும் கருதுவம்என்பது.

(4) மக்களிடையே தொடக்கக் கல்வியை பரவச் செய்தற்கு வேண்டியஅளவு பணமில்லாதிருப்பதுவும், பயனற்றதாகியஇந்தி வளர்ச்சியில், உள்ள முதலை செலவிடத்துணிவதும், இந்திமொழி ஆசிரியர்கள் மாகாணத்தின் தேவைக்கும் போதாது மிகமிகக் குறைந்திருப்பதும் காணமாட்டாது இதனைத் தொடங்குவது மதியீனமும், பயனற்றதும் என்பது.

(5) இந்த மாகாணத்து மக்களுக்கு எவ்வித நற்பயனும் விளக்கமாட்டாத இந்திமொழியைப் பரப்புவேமென ஆராயாது விரைவதும், பொது மக்கள் தமக்கு இன்றியமையாது வேண்டுமெனப் பரிந்து கேட்கும் கல்விச் சீர்திருத்தங்களைக் கருதாதுநெகிழவிட்டிருப்பதும் அரசியலார்இபற்றும்தவறென்பது.

(6) பொதுமக்களின் மனப்பான்மையை அறிந்துகொள்ளும் பொருட்டு இதனை வெளியிடாதும், இதனால் விளையவிருக்கும் கேடுகளைக் கருதாமலும், இத்தகைய முக்கியமான கருமத்தை மிகமிகச் சடுதியில் தொடங்கத் துணிந்தது இழுக்கென்பது.

(7) விரும்பவும், வேண்டவும்படாத தொருமொழியை, முன்னெச்சரிக்கையில்லாத மக்களின்மீது, தமது அதிகாரக்கொடுமையால் சுமத்துவேமென வன்கண்மை புரிவது, மக்களாட்சியின் தத்துவங்களையும், தாமே தற்பெருமை பேசிக்கொள்ளும் அகிம்சா தருமத்தையும் வலிந்து தாக்குமென்பது.

இம்முடிபுகளை,

திரு. இராவ்சாகேப். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., முன்மொழிந்தனர்

திரு. T. R. மதுரமுத்துமூப்பனார் அவர்கள் B.A., வழிமொழிந்தனர்

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., முதலாய பலரும் துணைமொழிந்தனர்

மறுப்பார் இன்றி ஒரு மனதாய் நிறைவேற்றப்பட்டன.

II. சென்னை அரசியலார், முதன் மந்திரியார், கல்வி மந்திரியார், கல்வித் துறைத்தலைவர், தமிழ்நாட்டு காங்கிரஸ் கழகத்தின்தலைவர், இம்மாகாணத்துத் தமிழ், அங்கிலத்தினத்தாள்கள் அக்கரையுள்ள பிறர் ஆதியவர்களுக்கு திரு. T. V. உமாமகேசுவரம் பிள்ளை இம்முடிபுகளை அனுப்ப வேண்டுமென முடிவு செய்யப்பெற்றது.

இம்முடிபை

திரு. T. இராதாகிருஷ்ண நாயுடு அவர்கள் B.A., B.L., முதன்மொழிந்தனர்

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B.A., B.L., வழிமொழிந்தனர்

ஒரு மனதாய் நிறைவேறியது.

தமிழ்ச் செய்திகள்.

திருவாளர், இராவ்சாகேப். V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் 80-வது ஆண்டை முதலியார் அவர்களின் அரிய தமிழ்த்தொண்டுகளைப் பாராட்டுதற்பொருட்டு 1—8—37தேதியன்று திருநெல்வேலி இந்து கல்லூரியின் பெருமன்றத்தில் புலமைமிக்கோர் மிகப் பலர் குழுமியிருந்து சிறப்பித்தனர். அதுபோது மகாமகோபாத்தியாயர், Dr. உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் தலைமையிருந்தனர். தலைவர்முதல் ஆண்டிருந்த பெருமக்கள் பலரும் முதலியார் அவர்களின் தமிழ்ப்பணிகளையும், அவற்றின் சிறப்புகளையும் பல்லாற்றாலும் புகழ்ந்தனர். திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் பேசிய புகழுரையில் முதலியார் அவர்களின் ஒப்பரும் சிறப்பினை சென்னைப் பல்கலைக் கழகத்தினர் காணமுடியாதிருப்பதுபற்றிக் குறிப்பிட்டனர்.

கருக்கொண்ட மேகமானது பாலைவனங்களிலும், கடலிலும் மழை பெய்வதைக் காண்பதுபோலவே அறிவுலகத்தின் நன்மதிப்பைப் பெறமாட்டாதவர் பலருக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் பட்டமளித்து சிறப்புச் செய்வதே பெருவழக்காயிருக்கின்றது. தமிழ்ப்பணியே தமது அருங்கடனெனக்கொண்டு தம்மை ஒப்பாரும் மிக்காருமின்றித் தமிழ் கூறு நல்லுலகத்தில் புகழொளிபரப்பி மிளிரும் திருவாளர்களாய சுவாமி விபுலானந்த அடிகள், கா. சுப்பிரமணிய பிள்ளை M.A.M.L., S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L., மறைமலை அடிகள், பண்டிதமணி. கதிரேசன்செட்டியார் ஆதிய பெருமக்களை புறக்கணித்திருப்பதைக் காணாத தமிழ் மகன் உளனோ?

மதிப்புரை

கதிர்காமப் பிள்ளைத் தமிழ்:—கொழும்பு விவேகானந்தசபையின் இயற்றமிழாசிரியர், திருவாளர், சிவ. கருணாலய பாண்டியப்புலவர் அவர்கள் இயற்றிய இந்நூல் எமது பார்வைக்கு வந்தது.

காப்பு, செங்கீரையாடல், மொழிபயிலல், உணவூட்டல், தாலாட்டல், சப்பாணிகொட்டல், முத்தந்தருதல், வருகை, நிலா வழைத்தல், சிறுபறை முழக்கல், சிற்றில் சிதைத்தல், சிறுதேருருட்டல், பூணணிதல், உடைவாள் செறித்தல், எனப் பதினான்கு பருவங்கள் வகுத்ததும், பருவமொன்றிற்கு மும்மூன்று பாடல்களாகப் பாடலின் எண்ணைக் குறைத்தும் யாத்தது புதுமுறையாகும். சொல்லழகு, பொருளழகுபடப் பாடியதும் புலவர்கள் குறிக்கத் தக்கது. நூலாசிரியரே அகலமான குறிப்புரை தந்ததும் போற்றத்தக்கதொன்று. இத்தகைய நூலை யாத்தற்கும், வெளிப்படுத்தற்கு மாய பணிகளைப் புரிந்த புலவராதிய பெருமக்கட்கு தமிழகத்தின் நன்றி உரியதாகும்.

இதன் விலை ரூபாய் ஒன்று.

வேண்டுவோர் நூலாசிரியர் அவர்களிடமிருந்து பெறலாகும்:—

இன்று மனிதனும் இனிவரும் மனிதனும்

திரு. சுவாமி. சுத்தானந்த பாரதியார் அவர்கள், திரு. அ. பழ. பழனியப்பசெட்டியார் அவர்கட்கு எழுதிய கடிதமானது உலகோர் அனைவருக்கும் பயன்படுமாறு நூலாக வெளிவந்ததுபோற்றத்தகும் செயலாகும். மேனாட்டு மூதறிஞர் கடிதவாயிலாய் நிலைத்த பயன்களை அளிக்கும் ஆய்வுரைகளைத் தெள்ளிதின் விளக்கி அறிவுச் சுடர்கொளுத்துவது பெருவழக்கு. அத்தகைய நன்னெறியைக் கடைப்பிடித்து எழுதிய இந்நூல் தமிழ்மக்கட்கு ஓர் நல்விருந்தாகும். மனிதராவார் முக்கரணங்களின் ஆசுகளைக்கடிந்து, அன்பு கனிந்த வாழ்க்கையினராய் இன்பநிலை எய்தவேண்டுமெனும் சீரிய கொள்கைகளை தீந்தமிழ்ச் சுவை ததும்ப இயற்றி உதவப் பெற்றிருக்கின்றது. தமிழன்பர்கள் இந்நூலைக் கற்றுத் தெளிந்து உறுபயன் எய்துவாராக.

ஆவினிப்பட்டி, விவேகானந்தர் கல்விக் கழகத்தே அணா இரண்டிற்குக் கிடைக்கும்.

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

அன்பர்கள் உதவிய நன்கொடை விவரம்

(தாது தை முதல் ஈசுவர ஆவணி முடிய)

திரு L. S. மாணிக்கம்பிள்ளை அவர்கள் தஞ்சை: (மண்ணெண்ணெய் தந்த வகையில்)	19	4	0
ஷெயார் தனித்த நன்கொடை	4	8	0
,, இராம. பஞ்சநதம் பிள்ளை அவர்கள் மகர்நோம்புச்சாவடி (தமது மகன் திருமணம்)	2	0	0
,, கோபாலசாமித்தேவர் அவர்கள் அருந்தவபுரம் (தமது மகள் திருமணம்)	5	0	0
,, G. சிங்கப்பெருமாள்நாட்டார் அவர்கள் வடகால் (தமது மகன் திருமணம்)	5	0	0
,, சாமியப்பா பிள்ளை அவர்கள் குளமங்கலம் (தமது அண்ணர் பேரன் திருமணம்)	7	0	0
,, S. A. சாம்பசிவம் பிள்ளை அவர்கள் கரந்தை (தமது மகள் திருமணம்)	5	0	0
,, சிவசாமி பிள்ளை அவர்கள் தஞ்சை (தமது மகளுக்கும் மகனுக்கும் திருமணங்கள்)	5	0	0
,, ரெங்கசாமி பிள்ளை அவர்கள் ஆற்றூர் (தமது பேரன் திருமணம்)	15	0	0
,, T. A. வாசுதேவபிள்ளை அவர்கள் B.A., கரந்தை (தமது பௌத்திரர், பௌத்திரிகளுக்குக் காதணி விழா)	5	0	0
ஷெயார் நன்கொடை	8	12	0
,, T. A. பாலகிருஷ்ணபிள்ளையவர்கள் B.A., கரந்தை	12	0	0
,, சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் கோயமுத்தூர்	4	0	0
,, K. விசுவநாத பிள்ளை அவர்கள் தஞ்சை	1	8	0
,, மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள் சென்னை	1	0	0

ஈசுவர வைகாசி, ஆனி, ஆடியில்
வெள்ளி விழாவிற்கு உதவிய அன்பர்கள்

திரு. தி. கி. நாராயணசாமி நாயடு அவர்கள் வசூல்:—		20	0
,, T. P. K. அழகிரிசாமிபிள்ளை அவர்கள் வழி:—			
,, சாமி. வேலாயுதம் பிள்ளை B.A., L.T., அவர்கள்		10	0
,, T. S. சபாபதி பிள்ளை B.A.,	,,	10	0
,, V. அழகிரிசாமி நாயடு B.A., B.L.,	,,	1	0
,, அ. வடிவேலர் அவர்கள் வழி:—			
,, பா. துரைசாமிபிள்ளை அவர்கள் திருக்காட்டுப்பள்ளி		3	0
,, கோ. கலியபெருமாள் நாயடு அவர்கள்	,,	1	0
,, மு. வடிவேற் பிள்ளை அவர்கள்		1	0
,, பிச்சையா மங்கலார் ,,		1	0
,, M. கோவிந்தராச நாட்டார் ,, B.A., L.T.,	பாபனாசம்	5	0
,, R. ஏகாம்பரநாதன் ,,	,,	1	0
,, P. வேலாயுதம் பிள்ளை ,,	,,	0	8
,, N. கிருஷ்ணமூர்த்தி சர்மா ,,	,,	0	4
,, கந்தசாமி நாட்டார் ,,	ஓம்பத்துவேலி	1	0
,, A. சண்முகம் பிள்ளை ,,	தஞ்சை	1	0
,, ஜீவேந்திர முதலியார் ,,	மாரியம்மன்கோயில்	0	4
,, S. பஞ்சநதம்பிள்ளை M.A., L.T., ,,	ஐயம்பேட்டை	5	0
,, மு. இரத்தனவேற் பிள்ளை ,,	,,	3	0
,, A. G. சுந்தரராசரெட்டியார் ,,	,,	1	0
,, K. விசுவநாதையர் ,,	,,	1	0
,, A. N. அஜீஸ்சாயபு ,,	,,	1	0
,, A. விசுவநாதையர் ,,	,,	0	8
,, T. R. அப்துல்சத்தார் ,,	,,	0	8
,, J. M. சோமசுந்தரம்பிள்ளை B.A., B.L., அவர்கள்வழி:—			
,, P. சாமிநாதபிள்ளை அவர்கள் B.A., L.T.,		5	0

திருவையாறு போர்டு ஆண்பாடசாலை 7, 8, 9-வது
மாணவர்களின் நன்கொடை 1—2—3

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௩	ஈசுவர புரட்டாசி	மலர் ௬

பழந்தமிழர்

திருவாளர், இராவ்சாகேப்,
கோவை, ம. இராமச்சந்திர செட்டியார் B. A., B. L., அவர்கள்.

தற்போது எம்மொழியைத் தென்னாட்டில் கட்டாயமாகப் போதிக்க வேண்டும் என்ற வாக்குவாதம் மும்முரமாக நடக்கும் போது, பழந் தமிழரைப்பற்றி நாம் ஏன் விசாரப்படவேண்டும் என்று கேட்கலாம். இக்கேள்வி புதிதல்ல; நாம் இப்போது நமக்குள் வாதிப்பது போல பழந்தமிழரும் வாதித்தார்கள்; நடுத்தமிழரும் வாதித்தார்கள்; நிகழ்காலத்தமிழராகிய நாமும் வாதிக்கின்றோம். வெளிநாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கும் வெள்ளங்களுக்குப் பயந்து புறங்காட்டி ஒதுங்கும் ஒவ்வொரு மொழியாளரும் இவ்வித வாது புரிந்துகொண்டே இருப்பார்கள். நாமும் அவ்வித வகுப்பார்களில் ஒருவரல்லவா? அதனால் தான் இவ்வித வாது புரிகின்றோம். நம்மவரிலேயே சிலர் வெள்ளத்தைத் தடுக்க வேண்டும் என்பார்; வேறு சிலர் வெள்ளத்தில் மூழ்கியோ புரண்டோ போக வேண்டும் என்பார்.

இவ்வாதத்தைச் செவ்வையாக அறிந்து கொள்வதற்காக முன் நாளில் நமது முன்னோரான பழந்தமிழர் அக்காலத்து வெள்ளத்தை எவ்வாறு சந்தித்தார்கள் என்று சிறிது பார்ப்போம்.

பன்மொழி யாராய்ச்சியாளர்களான பண்டித கிரீர்சன், கால்ட்வெல் முதலியவர்கள் பழந்தமிழர்களின் முன்னைய சரிதத்தை வெகு தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் கண்டுபிடித்த சித்தாந்தங்களை உயர்திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் வெகு தெளிவாக,

"சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமோ."

என்று எடுத்துரைத்திருக்கிறார்கள். இவர்கள் இச் சித்தாந்தத்தை மொழி ஆராய்ச்சியால் கண்டுபிடித்து நிரூபித்திருக்கிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி இந்து தேசம் முழுமையிலும் பழந்தமிழர்களே (திராவிடர்கள்) குடியிருந்தார்கள். பிறகு வடமேற்கு மூலையிலிருந்து ஆரியர்கள் படையெடுத்து வந்தார்கள். பழந்தமிழர்கள் மொழி வளர்ச்சியிலும் நாகரிகத்திலும் முதிர்ச்சி பெற்றிருந்தார்கள். ஆனால் படையெடுத்துவந்த ஆரியர்களோ இளநாகரிகம் படைத்தவர்கள். மாடு மேய்த்தல், படையெடுத்தல், இவைகளில் தேர்ந்தவர்கள். மேலும் குளிர்நாட்டிலிருந்து வந்தபடியால் தேக வலிவு பெற்றிருந்தார்கள். ஆகவே புதிதாக வந்த ஆரியர்கள் சுலபத்தில் பழந்தமிழரை வெருட்டித் தெற்கே துரத்திவிட்டார்கள். செழிப்பான பிரதேசங்களான கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா முதலிய நதித்தீரங்களில் குடியேறினார்கள். அது முதல் தென்னாட்டிற்குத் தமிழர்கள் மாத்திரம் சிறு சிறு வகுப்புகளாக்கூடித் தஞ்சம் அடைந்தார்கள். ஆகவே இக்காலத்திலும் வடநாட்டு உட்பிரதேசங்களோடு தென்னாடு முழுமையிலுமே பழந்தமிழரின் சந்ததியாரைக் காண்கிறோம். மொழி ஒற்றுமை, எண்ண ஒற்றுமை, நாட்டுக்கதை, பழமொழி, பழக்க வழக்கம் இவைகளில் ஒற்றுமை, உடலில் அங்க அமைப்பில் ஒற்றுமை இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து மேலே சொல்லிய நிபுணர்கள் இவ்விதச் சித்தாந்தத்தைக் கண்டுபிடித்தார்கள். பிறகு ஆரியர்கள் வடநாட்டில் வெற்றி பெற்ற பிறகு தென்னாட்டையும் நோக்கினார்கள். ஆனால் தென்னாட்டிலிருந்து தமிழர்களை நிர்மூலப் படுத்தமுடியவில்லை. தம்மினும் நாகரிகத்தில் முதிர்ச்சி பெற்றவர்களை ஒரேமுயற்சியில் நிர்மூலப்படுத்த முடியாது. ஆனால் சிறிது சிறிதாக தங்கள்

நாகரிகத்தைப் புகுத்த முயன்றனர். பல பண்டிதர்களும், சமயாசாரிகளும் தெற்கே வந்து, தத்துவ சாத்திரம், சமயம் முதலியவைகளைப் போதித்தார்கள். அமைதியாகச் செய்யும் இவ்விதமுயற்சி நாளாவட்டத்தில் வெற்றியடையும் அன்றோ? ஆகையால் தான் தமிழ் நூல்களிலும் பழக்கவழக்கங்களிலும் ஆரியர் கூற்றுகள் அதிகமாகப் பரவிவந்தன. மிகப்பண்டைய நூலான தொல்காப்பியத்திலேயே வடமொழிக் கலப்பும் நடப்புக் கலப்பும் காணும்போது வேறு ஆதாரம் கூறவேண்டுவ தில்லை. ஆகவே 5000 ஆண்டுகளுக்கு முன்னமே இவ்வித வெள்ளம் ஒன்று வந்து தமிழ் நாட்டின் இயற்கை வளத்தினை ஒருவாறு மாற்றத் தலைப்பட்டது எனச்சொல்லவேண்டும்.

மேலே சொல்லிய பண்டிதர்கள் நம் நாட்டுச் சரித்திரத்தை நாம் இதுவரை எடுத்துக் காட்டியபடி சித்தாந்தப் படுத்திய பிறகு அதைச் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சரியான கொள்கை என்று எடுத்துக்கொண்டு கலாசாலைகளில் அதனைப்போதித்து வருகிறார்கள். ஆனால் சமீபத்தில் நம் உள்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சிலர் தோன்றி அச் சித்தாந்தத்தை ஒருவாறு மறுக்க முயல்கின்றனர். தமிழ் வேறு, வடமொழி வேறு என்றதையும் மறுத்து வடமொழியிலிருந்து தமிழ் வந்தது எனத் தைரியமாக எழுதவும் பேசவும் முயல்கின்றனர். தமிழுக்கு ஒப்பற்ற செல்வமாக இருக்கும் அகம், புறம் என்ற இலக்கணச் சிறப்புகளையும் தமிழர் ஏற்படுத்தியதல்ல, வடமொழியிலிருந்தே எடுத்தாளப்பட்டன என்றும் வாய் கூசாமல் சொல்ல வருபவர்களும் தோன்றியிருக்கிறார்கள். ஆகவே பல்லாயிரம் ஆண்டுகளாகச் சம்பாதித்துச் சேமித்து வைத்திருக்கும் கைப்பொருள்களைத் துறக்கும் காலமும் வந்ததோ என்ற ஏக்கம் ஒரு புறம் நேரிடுமல்லவா?

ஆனால், சமீபத்தில் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் சர் ஜான் மார்ஷல் என்ற ஆராய்ச்சியாளர் செய்து வெளியிட்ட ஆராய்ச்சியினால் அவ்வித ஏக்கம் இனிமேல் படவேண்டிய தில்லை என்பது திண்ணம். மஹேஞ்சோடேரோ, ஹரப்பா என்ற இரண்டு இடங்களில் அகழ்புணர் சோதனை செய்து கண்டு பிடித்தவைகளை வெளியிட்டிருக்கின்றார். அந்த வெளியீட்டினால் பல அற்புதமான செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன. அவைகளைப்பற்றி சிறிது விவரமாக எழுதுவோம்.

சிந்துநதி தீரத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக மிகவும் நாகரிகம் பெற்றவர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்கள் காலத்தையும் நாகரிகத்தையும் சல் கோலித்திக் (Chalcolithic) என்ற பெயரினுல் குறிக்கப்பட்டுள்ளது. அக்காலத்து மக்கள் நகரங்களில் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் வாழ்ந்த சில நகரங்கள் மிகப் பெரியவைகளாக இருந்தன. நகரங்கள் ஒழுங்காய் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் தகுதியான இடங்களில் பொதுக் கிணறுகளும், பொது ஸ்நான கட்டடங்களும் இருந்தன ; வீடுகள் விலாசமாகவும் நன்றாகவும் கட்டப்பட்டன. வீடுகளில் கிணறுகள், குளிக்கும் அறைகள், சலதாரைகள் முதலிய சுகாதார ஏற்பாடுகள் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகள் கட்டுவதற்குச் சுட்ட செங்கல்லும் காய்ந்த செங்கல்லும் உபயோகிக்கப்பட்டன. அக்காலத்தில் ஏனைய பூபாகங்களில் இருந்த ஒழுங்கு, நடவடிக்கை, இவைகளைக் காட்டிலும் சிந்துப் பிரதேசத்தில் மக்கள் வெகு சுகமாகவும், சௌகரியமாகவும் வாழ்ந்து வந்தார்கள் எனப்படுகிறது.

உழவுத்தொழில் ஏராளமாகக் கொள்ளப்பட்டது. அங்கங்கே கால்வாய்கள் தோண்டி மதகுகள் கட்டி அவற்றின் மூலமாக நிலத்திற்கு நீர் பாய்ச்சப்பட்டது. உணவிற்குக் கோதுமை, பார்லி முதலிய தானியங்கள் உபயோகிக்கப்பட்டன. இவைகளைத் தவிர மாமிசமும் பாலும் காய் கறிகளும் உட்கொள்ளப்பட்டன. வீடுகளில் பல பிராணிகளை வளர்த்து வந்தார்கள். அவ்விதப் பிராணிகளில் ஆடு கோழிகளை அன்றி மான் முதலிய காட்டு மிருகங்களையும் கொன்று தின்றார்கள். நிலத்தில் கனிகள் வெட்டி அவைகளிலிருந்து பொன், வெள்ளி, செம்பு, வெள்ளீயம், காரீயம், என்ற உலோகங்களை எடுத்தார்கள். பொன்னும் வெள்ளியும் ஏராளமாக மகஞ்சோடோராவில் கிடைத்தன. அவைகளில் வெள்ளி அதிகம்.பொன்,நகைகளுக்காக உபயோகிக்கப்பட்டது. வெள்ளியோ நகைகளுக்கேயன்றி பாத்திரங்களுக்கும்உபயோகிக்கப்பட்டது. அவைகளின் வேலைப்பாடு மிகச் சிறந்தது. செம்பு முற்காலத்திலிருந்த கற்சாமான்களுக்குப் பதிலாக எடுத்தாளப்பட்டது. போர்க்கருவி, வீட்டுக்கருவி, பாத்திரம் முதலியவைகள் செம்பினுல் செய்யப்பட்டன. ஏழைகள் செம்பு நகைகளையும் உபயோகித்து வந்தார்கள், வெள்ளீயத்தையும் செம்பையும்கலந்து உருக்கி வெங்கல மாக்கினார்கள். மகஞ்சோடோராவில் அநேக வெங்கல சாமான்கள் கிடைத்தன. வீட்டுச் சாமான்கள்,

ஆயுதங்கள், பொம்மைகள், நகைகள் இவைகளெல்லாம் வெங்கலமே. கத்திகளும் வெங்கலத்தில் செய்யப்பட்டன. தாம்பிரத்தைக் கடினமாக்குவதற்காக ஆர்சனிக் என்ற உலோகத்தைச் சேர்த்துக் கொண்டார்கள். ஆனால் இரும்பு மாத்திரம் அக்காலத்தில் உபயோகத்திற்கு வரவில்லை.

வெகு தூரத்திலிருந்து கற்களைப் பெயர்த்துக்கொண்டு வந்து கட்டிடம் கட்டினார்கள். உருவச் சிலைகளுக்கும் கல் உபயோகப் படுத்தப்பட்டது. வீடுகளுக்குக் காறை பூசப் பட்டது. கற்களைச் செதுக்கி குண்டுமணி முதலிய நகைகளைச் செய்தார்கள். அக்காலத்தில் நகைகளுக்காக வைடூரியம் (lapis lazuli), டாக்விஸ் (Turquois) அமஜன்(Amason) பளிங்கு (Rock Crystal) ஸ்டிட்ஸ்ட் (Steatitu) செவ்வந்திக்கல் (Ametyst) ஒருவகை வைடூரியம் (Agata) கார்னீலியன் (Carnelian) கோமேதகம் (Onys) ரவாக்கல் (Jasper) உதிரக்கல் (Blood Stone) ஜேடைட் (Jadaite) முதலிய விலை உயர்ந்த கற்களை உபயோகித்தார்கள். இவைகளைத் தவிர சிலாசத்து (Bitumen) காவிக்கல் (Red Ochre) பச்சைமண் (Green earth) டாலிங்கைட் (tallinggite) முதலிய கனிவர்க்கங்களும் இருந்தன. மேலும் எலும்பு, தந்தம், சிப்பி, பளபளப்புப்பசை (vetrified paste) முதலியவைகளை விளையாட்டுப் பொருள்களாகவும் அலங்காரப் பொருள்களாகவும் உபயோகித்து வந்தார்கள்.

அக்காலத்தில் பணக்காரர், ஏழைகள் எல்லாரும் நூல் நூற்பது வழக்கம். நூற்கதிர் விலையுயர்ந்ததும் மலிவானதும் ஆக இருவிதம் உண்டு. நாடெங்கும் நெசவுத் தொழில் கையாடப் பெற்றது. பருத்தியும் கம்பிளி மயிரும் நெய்வதற்கு உபயோகிக்கப்பட்டன. துணிகளுக்குப் பலவித சாயமிட்டார்கள். மனிதர்கள் உடுத்திக்கொண்ட ஆடையும் பலவிதமாய் இருந்தது. தனவந்தர்கள் நீண்ட சால்வைகளை உடுத்தி வந்தார்கள். எல்லா வகுப்பார்களும் நகைகள் அணிவது வழக்கம். மாலை, காப்பு, மோதிரம், ஒட்டியாணம், கடுக்கண், கால் காப்பு முதலிய நகைகள் சாதாரணமாக அணிந்திருந்தார்கள். தனவந்தர்கள் பொன், வெள்ளி, தந்தம், இரத்தனங்கள் இவைகளாலும் ஏழைகள் சிப்பி, எலும்பு, தாம்பிரம், மண் இவைகளாலும் நகை செய்து அணிவார்கள். இவைகளின் வேலைத் திறமும் வண்ணமும் மெச்சத் தகுந்தவை.

போர்களிலும் வேட்டைகளிலும் பலவிதமான ஆயுதங்களைக் கையாண்டு வந்தார்கள். கோடரி, ஈட்டி, கட்டாரி, வில்,

அம்பு, கவண் முதலியவைகள் இருந்தன. ஆனால் கவசம் முதலிய பாதுகாப்பு ஆயுதங்களை அவ்விடத்தில் காணோம். பிரயாணங்களில் சக்கரம் பூட்டிய வண்டிகளில் ஏறிச் செல்வார்கள். வீட்டுச் சாமான்கள் மண்ணினால் செய்யப்பட்டன. மண் பாத்திரங்கள் அநேக விதம் உண்டு. குயவன் சக்கரத்தினால் பாண்டங்களை வனைந்து சூளையில் இட்டுச் சுட்டுப் பலவித வர்ணங்களைக் கொடுப்பது உண்டு. பொம்மைச் சாமான்களும் மண்ணால் செய்யப்பட்டன. முத்திரை, யந்திரம், முதலியவைகளும் காண்கிறோம். உள்நாட்டு வியாபாரமேயன்றி வெளிநாடுகளோடும் வியாபாரம் இருந்தது. ஆகவே அக்காலத்தில் கைத்தொழிலும் வர்த்தகமும் நல்ல நிலைமை அடைந்திருந்தது.

மேல் சொன்ன நாகரிகமானது சிந்து நதி தீரத்தில் மாத்திரமே யன்றி கிழக்கிலும் தெற்கிலும் பரந்திருந்த மற்ற நதி தீரங்களிலும் எட்டியிருந்தது. மகஞ்சோடேரோவில் கிடைத்த பொருள்கள் கி. மு. 3250 ஆண்டிற்கு முந்தியவை அல்ல. ஆனால் அக்காலத்தில் இவ்வித நாகரீக முதிர்ச்சி ஏற்படுவதற்குமுன் வெகுகாலமாக அச்சனங்கள் முன்னேற்றம் அடைந்திருக்க வேண்டுமல்லவா? சிந்துநதிப் பள்ளத்தாக்கில் கண்ட நாகரிகமானது ஆரியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு முந்தியிருந்ததாகும். அதாவது அது திராவிடர்களுடைய நாகரிகம் என்கிறார்கள். ஆரியர்கள் திராவிடர்களைத் தென்னாட்டிற்குத் துரத்துவதற்கு முந்தியே இத்தனை மேன்மையான நாகரிகத்தை அம்மக்கள் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்க ஒரு செய்தியாகும். இனி, அதற்குப் பின்னால் வந்த ஆரியர்கள் எவ்விதமான நாகரிகத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை ஆராய்வோம்.

பழந்தமிழர்கள் இந்தியாவின் பூர்வ குடிகள் என்றும் பின்னால் ஆரியர்கள் வந்தார்கள் என்றும் முன்னமே சொல்லியிருக்கின்றோம். அவ்விதம் வந்த ஆரியர்களின் நாகரிக நிலைமையை அறிய வேண்டுமாயின் அவர்கள் தினந்தோறும் ஓதிக்கொண்டு வந்த வேதங்களின் மூலமாகத்தான் அறிய முடியும். வேதங்களின் ஆராய்ச்சியினால் ஆரியர்களைப்பற்றி அடியில் கண்ட விஷயங்களை அறியலாம். இந்தியாவிற்குவந்த ஆரியர்கள் பசுவோம்பல், நிரைகாத்தல் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு இருந்த செல்வமெல்லாம் பசுக்கள்

எருமைகள், குதிரைகள், ஆடுகள் இவைகளே. ஆனால் அவர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு இங்கிருந்த தமிழர்களைப் பார்த்து உழவுத்தொழிலையும் கற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய போர்க் கருவிகள் வில், அம்பு, ஈட்டி, கோடரி இவைகளே. ஆனால் கேடயம் முதலிய பாதுகாப்புக் கருவிகளையும் வைத்திருந்தார்கள். போரில் தேர்களையும் உபயோகித்து வந்தார்கள். அவர்கள் கைத்தொழில், வீட்டிற்கு வேண்டிய சாமான்களையும் பசுக்காத்தல் முதலியவைகளுக்கு வேண்டிய சாமான்களையும் செய்வதேயாகும். வரவர மற்ற தொழில்களையும் கைக்கொண்டார்கள். உதாரணமாக நெசவு, சட்டி வனைதல், மரவேலை, கயிறு திரித்தல், சாயமிடுதல், தோல் பதனிடுதல், உலோகவேலை முதலியன. அவர்களுக்குத் தெரிந்திருந்த உலோகங்கள் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெள்ளீயம், காரீயம் இவைகளே. தச்சன் வீட்டுச்சாமான்களோடு வண்டி, படகு, தேர் இவைகளையும் செய்வான். கொல்லன் வீட்டிற்கு வேண்டிய ஆயுதங்களுடன் போர்க்கருவிகளையும் செய்வான். தட்டான் பொன், வெள்ளி நகைகளைச் செய்வான். வேத காலத்து ஆரியர்கள் பெரும்பாலும் கிராமங்களில் வாழ்ந்து வந்தார்கள். அக்கிராம வாழ்வே போதுமான சௌகரியத்தைக் கொடுத்துக்கொண்டுவந்தது. ஆனால் ஒவ்வொரு கிராமத்திற்கும் போக்கு வரத்து இருந்ததாகவும் தெரிகிறது. பெரிய பட்டணங்கள் அக்காலத்தில் இல்லை.

ஆகவே, இந்தியாவுக்கு வந்த ஆரியர்களுடைய நாகரிக நிலைமை பழந்தமிழர்களுடைய நாகரிகத்தைக் காட்டிலும் குறைந்திருந்தது என்பதில் சந்தேகமில்லை. அக்காலத்தில் ஆரியர்கள் முல்லை நில வாசிகளாகவே இருந்தார்கள். ஆனால் பழந்தமிழர்களோ ஒருபடி முன்னேற்றமடைந்து மருத நில வாசிகளாக இருந்தார்கள். உலகத்தின் பண்டைக்காலச் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் முல்லை நில வாசிகளாக இருந்தவர்கள் நாகரிகம் உயர்ந்தால் மருதநில வாசிகள் ஆவார்கள் என்று அறிவோம். ஆகவே, பழந் தமிழர்களைக் காட்டிலும் பின்னால் வந்த ஆரியர்கள் ஒருபடி குறைந்தவர்களாக இருந்தார்கள் என்பதை அறியவேண்டும். இதை அறிவதற்கு கால்டுவெல் முதலிய அறிஞர்கள் மொழி ஆராய்ச்சி, பழக்க வழக்க ஆராய்ச்சி, முதலியவைகளைக்கொண்டு நிரூபித்திருந்தார்கள். தற்போது மார்ஷல் என்னும் பெரியார் நிலத்தைத் தோண்டி பண்டையப் பொருள்களை எடுத்து சோதனை செய்து அதன் மூலமாக அச்சித்தாந்தத்தையே நிரூபித்திருக்கிறார்கள்.

ஆனால் ஒரு சந்தேகம் தோன்றலாம். உயர்ந்த நாகரீகம் கொண்ட பழந் தமிழர்களை நாகரீகத்தில் தாழ்ந்த ஆரியர்கள் எவ்விதத்தில் வெற்றி அடைந்து துரத்த முடியும் என்பதே. இதற்கும் சரித்திர அத்தாட்சி உண்டு. ரோமானியர்கள் நான்காவது நூற்றாண்டில் மிகுந்த நாகரிகம் பெற்றிருந்தார்கள். ஆனால் செல்வச் செருக்கினால் பலவீனர்கள் ஆய்விட்டார்கள். அப்போது வடக்கேயிருந்து அநாகரீகர்களான காத்கள், ஹூணர்கள் முதலியவர்கள் ரோம்மீது படையெடுத்து வந்து ரோமானியரை வதைசெய்து அரசைப் பிடுங்கிக்கொண்டார்கள். ஏனெனில் ஜெயித்த ஜாதியாருக்கு வல்லமை அதிகமாகயிருந்தது. ஆகையால்தான் தம்மைவிடச் சிறந்தவர்களை ஜெயித்தார்கள். அதைப் போலவே நமது நாட்டிலும் பழந்தமிழர்கள் நாகரீகத்தில் சிறந்திருந்த போதிலும் நகர வாழ்க்கையில் ஈடுபட்டுப் பலம் குறைந்திருந்தார்கள். ஆனால் வடக்கே குளிர் தேசத்திலிருந்து வந்த ஆரியர்கள் மாடு மேய்ப்பதிலும் வேட்டையாடுவதிலும் போர் புரிவதிலும் வல்லவர்களாயிருந்தபடியால் சுலபத்தில் பழந்தமிழர்களைவென்று தென்னாட்டிற்கும் மலைப்பிரதேசங்களுக்கும் துரத்திவிட்டார்கள். இது தான் சரித்திர உண்மை.

ஐயாயிரமாண்டுகளுக்கு முந்தி பழந்தமிழர்கள் ஆரிய வெள்ளத்தைத் தடுக்கமுடியவில்லை. தென்னாட்டிற்கு அவர்கள் துரத்தப்பட்டபிறகும் அகத்தியர் போன்ற அறிஞர்களால் ஆரிய சித்தாந்தம் தமிழில் நுழைக்கப்பட்டது. அந்த இரண்டாவது வெள்ளத்தையும் தடுக்க முடியவில்லை. பிறகு சமண பௌத்த சமயிகள் கொண்டுவந்து புகுத்தின வடமொழிக்கலா வெள்ளத்தையும் தடுக்க முடியவில்லை. பின்னால் வைணவர்கள் புகுத்தின மணிப்பிரவாளத்தையும் தடுக்கமுடியவில்லை. இருந்தாலும், தமிழ்த்தெளிநீர் இன்னும் அதிகக் கலக்கமில்லாமல் தேர்ந்திருக்கிறது. இப்போது இந்தி வெள்ளம் வந்தால் அந்தத்தெளிவு கலங்கி விடுமோ என்று சிலர் அஞ்சுகிறார்கள். சிலர் கலங்காது என்கிறார்கள். சிலர் கலங்கிவிடும் என்கிறார்கள். தமிழ் அறிஞர்கள் முந்திய சரித்திர உண்மையை ஆராய்ந்து தெரிந்து அணை கோலிக் கொள்வார்களாக!

ஜைன சமயத்தவரால் செய்யப்பட்ட
யசோதர காவியம்—புத்துரை

திரு. வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் அவர்கள்
காஞ்சீபுரம்

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 5, பக்கம் 193)

மாமலர் இலகும் சேவடி—பூமியின் ஐபாயிரம் வில் உயரத்தின் மேலே பன்னிரண்டு யோசனை சுற்றளவின் நடுவில் சௌதரும இந்திராதி தேவர்களால், நிருமிக்கப்பட்ட சமவசரணம் என்னும் விமானத்தின்(கோயிலின்) இடையே, ஆயிரத்து எட்டு இதழ்கள் பொருந்திய பெரிய தாமரை மலர்மீது, (அம் மலரினில் தம் பாதம் படாமல்) நான்கு அங்குல உயரத்தில், ஸ்ரீ அருக தீர்த்தகரர் நடப்பார் என்ற புராணக் கதையினைக் குறித்தபடியாம். "திருவமர் தாமரைச் செம்பொனுயிதழ் மருவிய திருவடி" (சூளாமணி—அரசி—424) "தண்டாமரையின் மேல் நடந்தாய்" (சூளா—துறவு—71) மற்றும் சூளாமணி இரத நூபுரச் சருக்கம், 69, 70, 71, 96-ம் பாக்களைப் பார்க்க. "செந்தாமரை மேல் நடந்தான்" (சீவகசிந்—2564) "தங்கு செந் தாமரை அடி என்தலையவே" (சீவகசிந்—2812) கமல மீதுலவு முனைக் காதலிப்பார் அரியரே" (மேருமந்—66) "கமல மிசை யுலவி ஒரு காவதம் அடைந்தான்" (மேருமந்—1025.) மலர் மிசை நடந்த மலரடி" (சிலப்ப-நாடுகாண்—204) "பண்ணார் வண்டிறை கொள்ளக் கள்ளவிழ் பனிமாமலர் மிசைவருமாலே" (திருக்க—10) "தாமரையே யெத்தவங்கள் செய்தாய் சகமூன்றினுக்கும், தாமரைசே என்று சாற்றுவ போது முச்சத்திரத்துத், தாமரைசேர் திருவைத் திருமார் பிற்றரித்தவர் செந்தாமரை யேய் சரணந் தலைமேற்கொண்டே தாங்குதற்கே" (திருநூற்—செ 7.) இவையன்றி, "மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந் தார், நிலமிசை நீடு வாழ்வார்" என்றார்; தமிழுலகே யன்றி,

மொழியுலகுகள் பலவானும் போற்றப்படும் சமண் சமயத்தவர் ஆகிய ஆசிரியர், திருவள்ளுவனார்.

அவர், சமண் சமயத்தவர் ஆவரோ எனின், ஆவர். திருக்குறளுள்ளே சமண் சமயத்தின் நுண் பொருள்கள், பலவிடங்களில் செறிந்து கிடத்தல் அன்றி, இம் "மலர் மிசை ஏகினான்" என்ற திருமொழி, கடவுள் வாழ்த்திலேயே நிற்கின்றது. இத் திருமொழியின் பொருள், பொதுவகையாலும் எம்மதத்தினர் பாலும் சாராமல், சிறப்புவகையால் ஜைனசமயக் கடவுளாகிய ஸ்ரீ அருக தீர்த்தகரரின் பெருமையையே சுட்டி நிற்கின்றது. அன்றி, பூமிசை நடந்தான் என்ற பெயர், நிகண்டுகளில் அருகருக்கும், புத்தருக்கும், பொதுவாக இருப்பினும், அப்பெயர், அருகபரமேட்டிகட்கு ஆகுங்கால், பூ என்னும் மொழி தாமரையின் மலரைச் சுட்டும். அப்பெயர், புத்தபகவானுக்கு ஆகுங்கால், பூ என்னும் மொழி பூமி என்ற வடசொல்லின் திரிபாய், தரையைச் சுட்டும். இவ்வேற்றுமைகளை, நிகண்டுகளில் தெய்வப் பெயர்த் தொகுதியுள் அருகபரமேட்டிகளைக் குறிக்கப்படும் இடங்களில் "பூ மிசை நடந்தான்—கமலவூர்தி" என்றும், புத்த பகவானைக் குறிக்கப்படும் இடங்களில் "பூமிசை நடந்தான்—தரைமிசை நடந்தான்" என்றும், கூறப்பட்ட பெயர்களாலும், அவர்களின் புராணங்களாலும் அறிக. அவர்கட்கு அப்பெயர்கள் பிறந்த பகுதிகளின் வேற்றுமைகளை மறந்தமையால், பூமிசை நடந்தான் என்ற பெயர் புத்தருக்கும் இருப்பதால், திருக்குறள் என்ற நூல், சமண் சமயத்தவருக்கு அன்றி, பௌத்த சமயத்தவருக்கும், ஆசிரியர் பரிமேலழகர் உரையின்படிச் சைவ வைணவர்கட்கும் பொதுவாகும். ஆதலால், அந்நூல் எல்லா மதத்தினருக்கும் பொதுவென்பர் சிலர். (ஜைனசமயத்தவர் அல்லாதவராலும் அந்நூல் ஆக்கப்பட்டிருக்கும் என்பது அவர்கள் கருத்துப்போலும்) அவர்கள், தன்னது அல்லாத அயலான் பொருளை யாவருக்கும் பொதுவெனப் புகலும் பொற்பினர் ஒப்பர். நிற்க, இத்திருமொழியைப்போலவே "கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான், தாளை வணங்காத் தலை" என்ற திருமொழியில் உள்ள, "எண்குணத்

தான் " என்ற பெயரும், அருகபரமேட்டிகளை அன்றி, பிறரைச் சாராவாகும். அதனை "வாரம் பட்டுழித்தீயவு நல்லவாம், தீரக் காய்ந்துழி நல்லவுந்தீயவாம், ஒரும் வையத்து இயற்கை" (சீவக சிந்—888.) என்ற திரு மொழிக்கு இலக்கியராகாமல் நடு நின்று ஆய்ந்து அறிக.

இதழ் ஆயிரத்து எட்டு இதழ் பொருந்திய மலர் :—"மலர்தலை மணிவிசும்பின், வண்டார்ப்பப் பூத்திலங்கும், இதழ் ஆயிரத்து எட்டின் எழில் கொண்ட மலரின் மிசை" (திருக்க—69) என்றதனால் அறிக. (க)

இந்நூல் ஆக்கியதன் ஏதுகவியின் விருப்பம்.

2. நாத னம்முனி சுவ்வத னல்கிய
தீது தீர்திகழ் [1]தீர்த்தஞ்சேல் கின்றநா
ளேத மஃகி யசோதர னெய்திய
தோத வுள்ள மொருப்படு கின்றதே

முன்பாடம்:—[1]தீர்த்தன்சேல்.

பொருள் :—நம் நாதன், எனவும், யசோதரன் ஏதம் அஃகி எய்திய, எனவும், மொழி மாற்றுக.

பொழிப்புரை :—நம் இறைவராகிய முனிசுவிரத தீர்த்தகரரால் அருளப்பட்டதும், குற்றம் அற்றுத் திகழ்கின்றதும், ஆகிய, ஸ்ரீஜினதருமம் நிகழ்கின்ற காலத்திலே, யசோதரன் என்பான், தன் தீவினைத் தேயப்பட்டு, அதனால், அவன் அடைந்ததாகிய சிறப்பினைச் சொல்ல, என் மனம் விரும்புகின்றது.

குறிப்புரை :—முனிசுவ்வதன்—முனிசுவ்ரதர்; வடமொழித் திரிபு. அவர், தீர்த்தகரர் இருபத்து நால்வருள்ளும் இருபதாவது தீர்த்தகரர். தீர்த்தம்—ஸ்ரீஜினதருமம். செல்கின்ற நாள்—ஸ்ரீஜினதருமத்தினை மக்கள், மேற்கொண்டு ஒழுகும்நாள். ஏதம்—தீவினை. அஃகி—தேய்ந்து. எய்திய—அடைந்த. ஒருப்படுகின்றது—விரும்புகின்றது. ஏ—அசை.

சிறப்புரை :—ஸ்ரீஜினதருமம் நிகழ்கின்றகாலம் என்றது—முனிசுவிரத தீர்த்தகரர், அருகப் பதவியைப் (சமவசரணம்)

பெற்ற நாள் முதல் (அவர், பரிநிர்வாணம் அடைந்தபின்) இருபத்தோராவது தீர்த்தகரராகிய நிமிதீர்த்தகரர் அருகத் பதவியைப் (சமவசரணம்) பெற்றநாள் ஈறாக இடையே நிகழ்ந்த காலத்தைக் குறித்தபடியாம். முதல் தீர்த்தகரருக்குப் பின்னும், இரண்டாந் தீர்த்தகரருக்கு முன்னும், நிகழ்காலத்தினை முதல் தீர்த்தகரர் காலம் என்பது ஜைனர்கள் வழக்கு. தற்காலம் ஸ்ரீவர்த்தமான தீர்த்தகரர் அல்லது மஹாவீர தீர்த்தகரர் காலம் என்பர்.

தீர்த்தம்—ஸ்ரீஜினதருமம்; ஆகுபெயர். அது ஆகமங்கட்கு ஆகுபெயராய்ப், பின் அவ்வாகமங்களில் சொல்லப்பட்ட ஸ்ரீ ஜின தருமத்துக்கு ஆகுபெயர் ஆயிற்று. தீர்த்தம்—ஆகமம். என்றதனை—"தீரா வினை தீர்த்துத் தீர்த்தந் தெரிந்துய்த்து" (சீவக சிந்-1247) "தீர்த்தங்கள் திறந்தவர்க்கு" (சூளா-துறவு-215)என்பவற்றால் அறிக. (உ)

அவையடக்கம்.

3. உள்விரிந்தபு கைக்கொடி யுண்டென
வெள்ளு கின்றன ரில்லைவி ளக்கினை
யுள்ளு கின்றபொ ருட்டிற மோர்பவர்
கொள்வ ரெம்முரை கூறுதற் பாலதே

பொருள் :—உள்விரிந்த கொடி புகை உண்டு என விளக்கின எள்ளுகின்றனர் இல்லை உள்ளுகின்ற பொருள் திறம் ஓர்பவர் எம் உரை கொள்வர் கூறுதல் பாலதுஏ.

பொழிப்புரை :—விளக்கின் பயனை விரும்புபவருள், அவ்விளக்கின்கண் மிகுந்த கொடி போன்ற புகைகள் எழுகின்றன என்று, அவ்விளக்கினை இகழ்பவர் ஒருவரும் இலர். அதுபோல, எம் உரையிடையே பல குற்றங்கள் செறிந்து இருப்பினும், ஸ்ரீஜினதருமம் ஆகிய பொருளின் பண்பினை அறிய விரும்புபவர் யாவரும், என் உரையையும் கொள்ளுவர். ஆதலால், இந்நூல் என்னாலும் கூறப்படுதற்கு உரியது ஆம் என யான் எண்ணுகின்றேன்.

குறிப்புரை :—விரிதல்—மிகுதல். உள்ளுதல்—நினைத்தல். ஓர்தல்—ஆய்தல்; விசாரித்தல்; அறிதல். ஏ—அசை (௩)

இந்நூலுள் கூறப்படும் பொருள்கள்.

4. மருவு எவ்வினை வாயின் மறுத்துடன்
பொருவில் புண்ணிய போகம் புணர்ப்பதும்
வெருவு செய்யும் வினைப்பய னிற்றெனத்
தெரிவு றுப்பதுஞ் செப்புத லுற்றதே

பொழிப்புரை :—உயிரினைப் பற்றும் தீய வினையின் பயனாகிய பாபத்தின் வாயிலை அடைத்து, உடனே உயிரினுக்கு இன்பத்தைத் தருதலால் ஒப்பு இல்லாத புண்ணியம் ஆகிய செல்வத்தினைச் சேர்ப்பதுவும், அச்சத்தினைச் செய்யும் பாபத்தினுக்கு ஏதுவான தீயவினையின் பயன் இன்ன பண்பினை உடையது என்று அறிவிப்பதுவும் ஆகிய பொருள்கள், இந்நூலுள் கூறப்படுவனவாம்.

குறிப்புரை :—மருவும்—பற்றும். மறுத்து—அடைத்து. போகம்—செல்வம். வெருவு செய்யும்—அச்சத்தினைச் செய்யும். தெரிவுறுப்பதும்—அறிவிப்பதும். ஏ—அசை. (௪)

முதற் சருக்கம்.

நாட்டின் பெயர்.

5. பைம்பொன் னாவற் பொழிற்பரதத்திடை
நம்பு நீரணி நாடுள தூடுபோய்
வம்பு வார்பொழில் மாமுகில்சூடுவ
விம்ப நீடில தௌதய மென்பதே

பொருள் :—நம்பு நீர் அணி நாடு உளது வம்பு வார்பொழில் மாமுகில் ஊடு போய்சூடுவ, என இடை இரண்டு அடிகளைக் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை :—பசிய பொன்னைத் தன் அகத்தே கொண்ட நாவலின் பெயரிய தீவின் இடையே பரத கண்டம் என்னும் பகுதியிலே, நல்ல நீர் செறிந்த நாடு ஒன்று உளது. அந்நாட்டில் அழகியவாய் நீண்டு வளர்ந்த சோலைகள், கரிய மேகங்கள் இடத்தே சென்று அம்மேகங்களைத் தம் தலையில் சூடிக் கொள்ளா நிற்கும். அத்தகைய பண்பினாலே அந்நாடு இவ்

வுலகத்தில் தனக்கு ஒப்புச் சொல்லுதற்கு பிறிது ஓர் நாட்டினை இல்லாதது. அந்நாட்டின் பெயர் ஔதயம் என்பது.

குறிப்புரை :—நாவல் பொழில்—ஜம்புத்தீவு. நம்புதல்—விரும்புதல்; நன்மைப்பொருள். அணிநாடு—வினைத்தொகைத் தொடர். அணி—செறிந்த. ஊடு—இடம். வம்பு—அழகு. வார்—பெருமை; நெடுமைப்பொருள். பொழில்—சோலை. மா—கருமை. முகில்—மேகம். இம்பர்—இவ்வுலகு. ஈடு—ஒப்பு. ஏ—அசை. (க)

நகரின் பெயர்.

6. திசையு லாமிசை யுந்திரு [1]வும்நிலாய்
வசையி லாநகர் வானவர் போகமஃ
தசையி லாவள காபுரி தானலா
விசையி லாத விராச புரமதே.

முன்பாடம் :—[1]வுன்னிலாய். (இப்பா பெரிதும் பிழை யுற்றது போலும்.)

பொழிப்புரை :—அந்த ஔதய நாட்டில், திசை எல்லாம் பரந்தபுகழையும், அழிவு இல்லாத செல்வத்தையும், அழகினையும் உடைய, நகர் ஒன்று உளது. அந்நகரில் வாழும் மக்கள் துய்ப்பது தேவர்கள் துய்க்கும் இன்பம் போன்றது. அது, அழிதல் இல்லாத அளகா புரியை அன்றித் தனக்கு ஒப்புச் சொல்லுதற்குப் பிறிது ஓர் நகரை இல்லாதது. அதன் பெயர், இராச புரம் என்பது.

குறிப்புரை :—நிலாய்—நிலைத்த; அழிவில்லாத, நகர்—மக்கள்; ஆகுபெயர். போகம்—இன்பம், அசைதல்—பெயர்தல்; அழிதல், தான், ஏ—அசைகள். (உ)

நகரின் சிறப்பு.

7. இஞ்சி மஞ்சினை யெய்தி நிமிர்ந்தது
மஞ்சு லாமதி சூடின மாளிகை
யஞ்சொ லாரவர் பாடலொ டாடலால்
விஞ்சை [1]யாருல கத்தினை வெல்லுமே.

முன்பாடம் :—[1]யருல.

பொழிப்புரை :—அவ் விராசபுரத்தினைச் சூழ்ந்த மதில்கள், மேகங்கள், வரையில் உயர்ந்து நிமிர்ந்து நிற்றலை உடையன. அந் நகரத்தின் மாளிகைகள், மேகங்கள் இடையே செல்லும் சந்திரனைத் தம் தலையில் சூடிக் கொள்ளுவன. அம்மாளிகைகளில் வாழும் மெல்லிய சொல்லை உடைய மகளிர்கள், தம் பாடல்களாலும், ஆடல்களாலும் வித்தியாதர உலகத்து மகளிரை வெல்லும் பண்பினர் ஆவர்.

குறிப்புரை :—விஞ்சையாருலகு—வித்தியாதரமகளிர் ; ஆகுபெயர். ஏ—அசை.

சிறப்புரை :—விஞ்சையார்—வித்தியாதரர் ; சூளாமணி—இரதநூ—21, சுயம்வர-I "பாடலொ டாடலால்" என்ற தொழிற் குறிப்பால் "அஞ்சொலார் என்ற பெயர், ஆண்களை ஒழித்துப் பெண்களைச் சுட்டிற்று. "பாடலா நரம்பின் தெய்வம் படிவங் கொண்டனைய நீரார், ஆடலால் அரம்பை ஒப்பார்." (சூளாமணி—சீயவ—104) மகளிர்க்கு மெல்லிய சொல்லைச் சொல்லுதலே அழகு ; ஆதலால், அம் மகளிர்தம் சொல்லை அடுத்து நின்ற அழகு என்னும் பொருள் சுட்டும் "அம்" என்னும் மொழி அந்த மகளிர் தம் சொற்களின் மேன்மையைச் சுட்டிற்று. (௭)

அந்நகரில் வாழும் அரசன் பெயர்.

8. பாரி [1]தத்தினன் பண்டையின் மும்மடி
பூரி தத்தொளிர் மாலைவெண் பொற்குடை
வாரி தத்தின் மலர்ந்த கொடைக்கரன்
மாரி தத்தனென் பானுளன் மன்னவன்.

முன்பாடம் :—[1]தத்தினை.

பொழிப்புரை :—அவ்விராசபுரத்தில், மாரிதத்தன் என்னும் பெயரை உடையான் ஒருவன் இருந்தான். அவன், அந்த ஔதய நாட்டினுக்கு அரசன். அந்நாட்டினைத் தன்முன்னோரின் மூன்று மடங்கு செவ்விதாகப் பாதுகாப்பவன். மிக்க ஒளியினை உடைய இரத்தின மாலைகளையும், வெள்ளியதும், பொலிவினை உடையதும்

ஆகிய குடையினையும், மேகம் போலும் வரையாது மிகுதியாகக் கொடுக்கும் கைகளையும் உடையவன்.

குறிப்புரை :—பாரிதம்—பாரிசுதம் என்ற வடமொழித் திரிபு; பாதுகாப்பு என்பது பொருள். பண்டையின்—முன்னோரின் ஆகுபெயர். மும்மடி—மூன்றுமடங்கு. பூரிதம்—நிறைவு; மிகுதிப்பொருள். கொடைக்கரன்—கொடுக்கும் கைகளை உடையவன்.

சிறப்புரை:—பாரிதத்தினை எனப் பாடங்கொள்ளின் அப்பாடத்தினுக்கு ஏற்ப ஒரு பயனிலைச் சொல் இன்மையால் அப்பாடம் கவிக் கருத்தன்று. மாலை வெண் பொற்குடை— "மாலை குடை மன்னவரை" (மேருமங்—957.) "மாலை வெண் குடை மன்னர் கண்டாய்" (சீவக சிந்—2908) (௪)

அந் நகரின் செல்வச் சிறப்பு.

9. அரசன் [1]மற்றவர் தம்மோடு மந்நகர்
மருவு மானுயர் வானவர் போகமும்
பொருவில் வீடுபு ணர்திற முமிவை
தெரிவ தொன்றிலர் செல்வம யக்கினல்

முன்பாடம் :—[1]மற்றவன் றன்னொடு மன்னகர்.

பொருள் :—மானுயர் செல்வ மயக்கினல், எனவும், இவை ஒன்று தெரிவது இலர், எனவும் கொண்டு கூட்டுக.

பொழிப்புரை :—பாரிதத்தனாகிய அரசனும், அவனுடைய சுற்றத்தினரும், அந்நகரில் செறிந்து வாழும் ஏனைய மக்களும், தத்தம் செல்வத்தினல் ஆகிய மயக்கத்தினல், தேவ பிறப்பால் நுகரப்படும் இன்பமும், இன்பந் தருதலால் ஒப்பில்லாத வீட்டினைச் சேர்க்கும் வழியும் ஸ்ரீஜின தருமமும் ஆகிய இவற்றைச் சிறிதும் அறியாதவர்களாய் வாழ்ந்தார்கள்.

குறிப்புரை :—மானுயர்—மனுஷியர் என்ற வடமொழித் திரிபு; மக்கள் என்பது பொருள். வானவர்—தேவர். போகம்—இன்பம். புணர்திறம்—வினைத்தொகைத் தொடர்; சேர்க்கும் வழி. ஒடு—எண்ணுப் பொருள். ஒன்று—சிறிது. (ரு)

இளவேனிற் காலத் தோடக்கம்.

10. நெரிந்த நுண்குழல் நேரிழை யாருழை
சரிந்த காத றடையில தாகவே
[1] வரிந்த வெஞ்சிலை மன்னவன் வைகுநாள்,
விரிந்த தின்னிள வேனிற் பருவமே.

முன்பாடம்:— [1] விரிந்த.

பொருள்:—வரிந்த வெஞ்சிலை மன்னவன் நெரிந்த நுண் குழல் நேரிழையார் உழை சரிந்த காதல் தடையிலது ஆக ஏ வைகும் நாள் இன் இளவேனில் பருவம் ஏ. விரிந்தது.

பொழிப்புரை :—வரிந்துகட்டிய கட்டுக்களை உடையதும், உயிருக்கு ஊறு செய்வதால் வெவ்வியதும் ஆகிய வில்லை உடைய மாரிதத்தன் என்ற அரசன், செறிந்தனவும் மெல்லியனவும் ஆகிய கூந்தல்களை உடைய மகளிர் இடத்தே சென்ற அன்பு எல்லை இல்லாது பெருக, வாழ்கின்ற காலத்தில், இனிய இளவேனிற்காலம் தோன்றியது.

குறிப்புரை:—நெரிந்த — செறிந்த. நேரிழையார்—மகளிர் உழை—ஏழனுருபு; இடம். சரிந்த—சென்ற. காதல்—அன்பு தடைஇலது—எல்லையில்லாது. ஆக—பெருக. ஏ—தேற்றப் பொருள். வைகுதல்—தங்குதல்; வாழ்தல். விரிந்தது—தோன்றியது. ஏ—அசை. (௰)

இளவேனிற் காலச் சிறப்பு.

11. கோங்கு பொற்குடை கொண்டுகவித்தன
வாங்கு வாகை வளைத்தன சாய்மரை
கூங்கு யிற்குல மின்னியங் கொண்டொலி
பாங்கு வண்டொடு பாடின தேனினம்.

பொழிப்புரை:—அக்காலத்தில், கோங்குமரங்கள், பொலிவினை உடைய குடைகள் போன்று பூக்களைக் கவிழ்த்தன. வளைந்த கோடுகளை உடைய வாகைமரங்கள், சாமரை போலும் பூக்களைச் சாய்த்தன. கூவுங் குயிற் கூட்டங்கள், இன்னியம் போல ஒலி செய்தன. அக்குயிற் கூட்டங்களின் பக்கங்களில்,

வண்டுக் கூட்டங்களும், தேன் கூட்டங்களும், பாணர்களைப் போல பாடின.

குறிப்புரை:— கூங்குயில்—கூவும்குயில்; கூவும் என்றது முதலுக்கு ஏற்றஅடை. கோங்கு—இலவு இனத்து ஒருவகை மரம். இன்னியம்—வாச்சியம்; முழவமும் ஆம். கொண்டு—உவம உருபு; போல. ஒலிபாங்கு—வினைத்தொகைத் தொடர்; ஒலி—ஒலி செய்தன. பாங்கு—பக்கம். இனம்—கூட்டம்.

சிறப்புரை:—சாய்மரை—" பொங்கு சாய்மரை " (மேருமந்—636) கூங்குயில்— வாவும்புரவி—வாம்புரவி ஆனல் போல கூங்குயில் என விகாரப்பட்டது. " கூங்குயில் விழாக் கோள " (சீவகசிந் 3012) " தண்குயில் முழவமா " (சீவகசிந் 65) களிவாய்க் குயில்கள் முழவாக " (சீவகசிந் 2691) வண்டோடு பாடின தேனினம்—" பொறி வண்டும் ஞிமிறும்பாட " (மேருமந் 892) " இளி வாய்ப் பிரசம் யாழாக இருங்கண் தும்பி குழலாக " (சீவகசிந் 2691) வண்டு என்பது ஒரு இனம், தேன் என்பது மற்று ஒரு இனம். அவ்விரு இனங்களிலும், ஆண் பெண் என்ற இருவகையும் உண்டு. தேன் இனத்தில் வண்டினை ஆண் அல்லது பெண் என்றாயினும், வண்டு இனத்தில் தேனினை ஆண் அல்லது பெண் என்றாயினுங் கூறுதல் பொருத்தம் அன்று. அப்பொருத்தம் இன்மையைப் பரிபாடல் எட்டாம் பாட்டின் இருபத்துமூன்றாம் அடியில் "காழ்தும்பி வண்டோடு மிஞிறார்ப்ப" என்ற குறிப்பாலும் சீவகசிந்தாமணியுள் (891) " காவில் வாழ்பவர் நால்வர் உளர், கரி போவர் " என்ற குறிப்பாலும், (892 ல்) " சுரும்புகாள், வண்டுகாள் மகிழ் தேனினங்காள், மதுவுண்டு தேக்கிடும் ஒண் ஞிமிறீட்டங்காள் " என்ற குறிப்பாலும் அறிக. வண்டு, தேன், மிஞிறு, சுரும்பு என்பன தனித்தனி இனத்தவாம். அந்நான்கினையும், ஒரு இனத்தவாகக்கொண்டு ஆண்பெண் என்ற வேறு பாட்டால் பிரித்து ஒன்றனொடு ஒன்றனைக் கூட்டிக் கூறுதல் தொல்லாசிரியர்தம் வழக்கன்று. (எ)

12\. மலர்ந்த பூஞ்சிகை வார்கொடி மங்கையர்
தலந்த லந்தொறு மாடினர் தாழ்ந்தனர்

கலந்த காதன்மை காட்டுநர் போலவே
[1] மலர்ந்த வண்டளிர் மாவின மேயெலாம்.

முன்பாடம்:—[1]யலர்ந்த.

பொருள்:—மூன்று, நான்கு, அடிகளை முறையே ஒன்று, இரண்டாக வைத்து எலாம் மலர்ந்த, என, மொழிமாற்றுக.

பொழிப்புரை:—மக்கள் தம்மில் கலந்தார் இடத்தே தத்தம் அன்பின் தன்மையினைக் காட்டுவார் போன்று, வள்ளிய தளிர்களை உடைய பலவகைப்பட்ட மரங்கள் யாவும், அவைநின்ற இடங்கள்தோறும் பூத்து நின்றன. மலர்ந்த பூவைத்தலையிலே உடைய நீண்ட கொடிகளாகிய மகளிர், தத்தம் இடங்கள் தோறும் கூத்தியர்போல ஆடியும் வணங்கியும் நின்றனர்.

குறிப்பு:—வார்கொடி மங்கையர்—உருவகம். தலம்—இடம் வடசொற்றிரிபு. தொறும்—எஞ்சாப்பொருள் இடைச்சொல். தாழ்ந்தனர்—வணங்கினர். காதல்—அன்பு. (சிலப்ப. கானல்—36) மாஇனம்—மரங்கள் கூட்டம். எலாம்—யாவும். ஏ—அசை.

சிறப்புரை:—எலாம்—சில பூவாது ஒழியும் ஆயினும், மிகுதி பற்றி எலாம் எனக்கூறினர் போலும். காதன்மை காட்டுநர் போல—மரங்களின் ஒன்றன்கோடு மற்றொன்றன் கோட்டின் அருகில் பூத்து நிற்கும் நிலை, அன்புடையார் இருவர், முகமலர்ச்சியுடன் ஒருவரை ஒருவர் அணுகி நிற்கும் நிலை போன்று இருந்தபடியாம். (அ)

13\. உயர்ந்த சோலைக[1]ளுழ்த்திண ரீன்றிட
வயந்த மன்னவன் வந்தன னென்றனு
நயந்த [2]மன்னனு மங்நகர் மாந்தரும்
வயந்த [3]மாடிடு மாண்பின ராயினர்.

முன்பாடம்:—[1]ளுடேதிர் கொண்டிட [2]மன்னரு மன்னகர் [3]மாடு வகையின.

பொழிப்புரை :—நீண்ட சோலைகள், இடங்கள்தோறும் பழயவாகிய இலைகளை உதிர்த்துப் புதியவாகிய தளிர்களையும், பூங்கொத்துக்களையும் பெற்று நிற்க, அவைகளைக் கண்ட

மக்கள், வயந்த காலமாகிய மன்னவன், வந்தனன் என்று, தம்முள் கூறிக்கொள்ள, பெருமைபொருந்திய மாரிதத்தனுகிய அரசனும் அந்நகரில் வாழும் ஏனைய மக்களும், வயந்த காலத்தில் ஆடும் விளையாட்டினை விரும்பிய பண்பினராயினர்.

குறிப்புரை :—ஊழ்த்து—உதிர்த்து. இணர்—தளிர்; பூங்கொத்து. ஈன்றிட—ஒருசொல்; பெற்று. நயந்த—பெருமை பொருந்திய. மாண்பு—பெருமை; விருப்பப்பொருள்.

சிறப்புரை :—ஊழ்த்து இணர் ஈன்றிட—"மரங்கள் இலையூழ்த்து இணர் ஈன்று அலர்ந்தனவே" (சீவக சிந்—2690) இளவேனில் விளையாட்டு வகையினைச் சீவகசிந்தாமணியின் 2690 முதல் 2700 வரை உள்ள பாக்களால் அறிக. (கூ)

மக்கள் அரசனிடம் தேவிக்கு விழாச் செய்ய வேண்டல்

14. கானும் வாவியுங் காவுமடுத்துடன்
வேனி [1]லாடவி ரும்பிய போழ்தினில்
மான யானைய மன்னவன் றன்னுழை
யேனை மாந்த ரிறைஞ்சுபு கூறினர்.

முன்பாடம் :—லாடல்வி.

பொருள் :—மானயானைய மன்னவன் கானும் வாவியும் காவும் அடுத்து உடன் வேனில் ஆட விரும்பிய போழ்தினில் தன்னுழை ஏனை மாந்தர் இறைஞ்சுபு கூறினர்.

பொழிப்புரை :—வலிய யானைகளை உடைய அரசன், தாமரை அல்லி முதலியன பூத்தலால் மணக்கும் நீர் நிலைகள் இடத்தும், சோலைகள் இடத்தும் சென்று சேர்ந்து, இளவேனில் காலத்துக்குரிய விளையாட்டினைச் செய்ய விரும்பி இருந்த காலத்தில், அந்நகரில் வாழும் பிறமக்கள், அவ்வரசன் முன் சென்று நின்று வணங்கி மேல் வருமாறு கூறினர்கள்.

குறிப்புரை :—கான்—மணம்; கானும்—மணக்கும். மானம்—வலிமை. தன்—அரசன். உழை—முன்; ஏழனுருபு. (௰)

சிறப்புரை :—மானயானையமன்னவன்—"மானயானைய மன்னர் கோன்" (சூளாமணி—இரதநூ—19) "மல்லலங்களிற்று மாலை வெண்குடை மன்னர் கண்டாய்" (சீவக சிந்—2908.)

தேவிக்கு விழாச் செய்யாவிடில் நேரும் துன்பங்கள்.

15. என்றுமிப் பருவத்திநெ டைப்பசி
சென்று தேவி சிறப்பது செய்துமஃ
தொன்று மோரல மாயின [1]மொன்றலா
நன்ற லாதன நங்களை வந்துறும்.

முன்பாடம் :—[1]வோன்றலா.

பொழிப்புரை :—சென்ற ஆண்டுகள்தோறும் இவ்விள வேனிற் காலம்முதல் ஐப்பசி மாதம்வரையில் நாம் சண்டமாரி தேவியின் கோயிலுக்குச் சென்று அத்தேவிக்கு விழாச் செய்யும் வழக்கத்தினை உடையம். இவ்வாண்டில் அவ்விழாச் செய்தலைப்பற்றி யாம், சிறிதும் சிந்தியாதவர் ஆயினம். அதனால் பல தீமைகள் நம்மைச் சேர்ந்து வருத்தும் எனக் கூறினார்கள் மக்கள்.

குறிப்புரை :—என்றும்—சென்ற ஆண்டுகள்தோறும். பருவம்—காலம். ஓரலம் ஆயினம்—சிந்தியாதவர் ஆயினம். ஒன்றலா—பல. நன்று அலாதன—தீமைகள். வந்து—சேர்ந்து. உறும்—பொருந்தும்; வருத்தும். (௧௫)

16. நோவு செய்திடு நோய்பல வாக்கிடு
மாவி கொள்ளு மலாதன வுஞ்செயுந்
தேவி சிந்தை சிதைந்தனள் சீறுமேல்
காவல் மன்ன கடிதெழு கென்றனர்

பொருள் :—மூன்றாவது அடியை முதலாக வைத்துப் பொருள் கொள்ளுக.

பொழிப்புரை :—சண்டமாரிதேவி, மனம் மாறுபட்டுக் கோவிப்பாளேயானால், நமக்குத் துன்பஞ் செய்கின்ற நோய்களைப் பலவாகச் செய்திடுவாள். நம்மின் உயிர்களையும் நீக்கிவிடுவாள். இவையன்றி, பலவகையால் பொருள் நட்டங்களையும் செய்வாள். ஆதலால், எங்களைப்பாதுகாக்கும்அரசனே!

தேவிக்கு விழாச் செய்தற் பொருட்டு விரைந்து எழுந்தருள வேண்டும் என்று கூறினார்கள் மக்கள்.

குறிப்புரை :—ஆவி—உயிர். சிதைந்தனள்—சிதைந்து; மாறுபட்டு, முற்று எச்சம். எழுகென்றனர்—எழுக என்றனர்; விகாரம். (௰௨)

அரசன் தேவிக்கு விழாச் செய்யச் செல்லல்.

17. என்று கூறலு மேதமி தென்றலன்
சென்று நல்லறத் திற்றெளி வின்மையா
னன்றி தென்று நன்னக [1]ரின்புறத்
தென்றி சைக்கட் சிறப்பொடு சென்றனன்

முன்பாடம் :—[1]ரப்புறத்

பொருள் :—என்று கூறலும் நல் அறத்தின்சென்று தெளிவு இன்மையால், ஏதம் இது என்றலன்; இது நன்று என்று நல் நகரின்புறப் தென்திசைக்கண் சிறப்பொடு சென்றனன்.

பொழிப்புரை :—அம்மக்களால் கூறப்பட்டவற்றைக்கேட்ட மாரி தத்தனாகிய அரசன், ஸ்ரீஜினதருமத்தின் பயின்று தெளிவைப் பெறுமையால், அம்மக்கள் கூறியபடித் தேவிக்கு விழாச் செய்தல் குற்றம் என்று கூறாதவனாய், அச்செயல் நன்று என்று, அழகிய அந்நகரின் பக்கத்தே சண்டமாரி தேவியின் கோயில் உள்ள தென்திசையை நோக்கித் தேவிக்கு விழாச் செய்தற்கு உரிய பொருள்களோடும் சென்றனன்.

குறிப்புரை :—நல்அறம்—ஸ்ரீஜினதருமம். (ஸ்ரீஜின தருமத்தினை நல்லறம் என்றும், திருவறம் என்றும் கூறுதல் ஜைனாசிரியர்கள் வழக்கு). சென்று—ஒழுகி; பயின்று. தெளிவு—நற்காட்சி; நம்பிக்கை. ஏதம்—குற்றம். நல்நகர்—அழகிய நகர், சிறப்பு—விழாச் செய்தற்கு உரியபொருள்கள்; ஆகுபெயர். (௰௩)

நக்கீரதேவ நாயனர் அருளிச்செய்த காரெட்டு மூலமும் உரையும்

திருவாளர். அ. நடேச பிள்ளை அவர்கள்
உயர்தாக் கல்லூரி, பொன்னேரி.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 5, பக்கம் 176.)

6. பாரும் பனிவிசும்பும் பாசுபதன் பல்சடையு
மாரு மிருள்கீண்டு மின்விலகி—யூரு
மரவஞ் செலவஞ்சு மஞ்சொலார் காண்பார்
கரவிந்த மென்பாரக் கார்.

உரை :—பாரும்—பூமியும், பனி—குளிர்ந்த, விசும்பும்—வானும், பாசுபதன்—சிவபிரானது, பல்சடையும்—பலசடைக் கற்றையும், ஆரும்—போலும், இருள்—இருளை, கீண்டு—கிழித்து (விலக்கி), மின்—மின்னலை, விலகி—வீசி, ஊரும்—நகரும், அரவம்—பாம்பு, செலவு—செல்லற்கு, அஞ்சும்—அஞ்சத் தக்க, அ—அந்த, கார்—மேகத்தை, காண்பார்—காண்கின்றவர்களாகிய, அம்—அழகிய, சொலார்—சொல்லையுடைய பெண்கள், கரவிந்தம்—களங்கனி, என்பர்—என்றுரைப்பார்கள்.

இருள்கீண்டு, மின்விலகி, செலவஞ்சுங்கார் காண்பார் கரவிந்தம் என்பர் எனமுடிக்க.

பார் பொன்னிற மாதலானும் விசும்பு பொன்னுலகாதலானும் பாசுபதன் பல்சடை (பொன் போல்) ஒளிவீசலானுமிம் மூன்றும் போலும் கார் மின்விலகி என்றார்.

பாரும், விசும்பும், சடையும், போலும் மின்விலகி, அரவஞ் செலவு அஞ்சுமாறு செய்கின்ற அக்கார் என்க.

'அங்ஙனமாகவும் பெண்டிர் அதனைக் காண்டற்கினிமை பொருந்திய களங்கனி எனபர்' எனத்தலைவி ஆற்றாமை மிக்குக் கூறினாள்.

காரைக் களங்கனி என்பாரது சொல் மிக அழகிது என 'அஞ்சொலார்' எனப் புகன்றதுமாம்.

கருத்து:—கார் களங்கனி போன்றுளது என்பர்.

(1) பாசுபதன் சடை பொன்னிறம்
பொன்னைவென்றதோர் புரிசடை (மணிவாசகர்)
பொன்னிறமிக்க சடையவன் (அப்பர்)

7. செழுந்தழல் வண்ணன் செழுஞ்சடைபோன் மின்னி
யழுந்தி யலர்போ லுயர—வெழுந்தெங்கு
மாவிசோர் நெஞ்சினரை யன்பளக்க வுற்றதே
காவிசேர் கண்ணாய்க் கார்.

உரை:—காவி—கருங்குவளை, சேர்—போலும், கண்ணாய்-கண்ணையுடையவளே, அ—அந்த, கார்—மேகம், செழுந்தழல்—ஓங்கியெரியும் தீப்போலும், வண்ணன்—நிறத்துச் சிவபெருமானது, செழுஞ்சடைபோல்—நீண்டு வளர்ந்த சடிலத்தைப் போல, மின்னி—மின்னல் செய்து, அழுந்தியலர்போல்—அழிஞ்சிற் பூப்போல, உயர—மேலே, எழுந்து—கிளம்பி, ஆவிசோர்—(பிரிவினால்) உயிர்தளரும், நெஞ்சினரை—மனதுடையவர்களது, அன்பு—அன்பினை, அளக்க—கணக்கிட, உற்றது—எய்திற்று.

ஏ—அசை நெஞ்சினரை—உருபு மயக்கம் கண்ணாய், கார்—மின்னி, எழுந்து அன்பு அளக்கவுற்றது என முடிக்க.

அழிஞ்சில்—மர விசேடம். அஃது அழுந்தி எனத் திரிந்து நின்றது.

*(அழிஞ்சிற்பூ நீர் கொண்டெழுந்த வெண்முகிலுக்குவமிக்கப்படும். 'மாசில் வெண்டுகிலை நீர் தோய்த்து மேற் போர்த்த வண்ணமே போற் காசின் மட்டொழுகப் பூத்தவழிஞ்சில்' என்றார் பிறரும்.)

---

* இருநகவளைவுக்குள் உள்ளதை சிந்து பூந்துறை ஸ்ரீசிதம்பரராமலிங்கம் பிள்ளையவர்கள் தயவுடன் எழுதியனுப்பி யுதவினார்கள்.

கருத்து :—கார், மின்னி, எழுந்து அளக்க எய்திற்று.

(1) சிவபெருமான் தழல் வண்ணன்.

'தழல் சேர்தரு திருமேனியர்' (சம்பந்தர்)
'செந்தழல் புரை திருமேனி' (மணிவாசகர்)
'தீவணன்' (கருவூர்த்தேவர்)
'எரிபோல் மேனிப் பிரான்' (அப்பர்)
'அழலார் வண்ணத் தம்மானை' ,,
'நெருப் புருவு திருமேனி' ,,
'தழலு மேனியன்' (சுந்தரர்)

8. காந்தண் மலரக் கமழ்கொன்றை பொன்சொரியப்
பூந்தளவு மாரப் புகுந்தின்றே—யேந்தொளிசேர்
அண்டம்போல் மீதிருண்ட வாதியா னுய்மணிசேர்
கண்டம்போல் மீதிருண்ட கார்.

உரை :—மீது—மேலே, இருண்ட—கறுத்த, அண்டம்—உலகம், போல்—போலும், ஏந்து—மிகுந்த, ஒளி—விளக்கம், சேர்—பொருந்திய, ஆதியான்—சிவபெருமானது, ஆய்—ஆராய்ந்தெடுக்கப்பட்ட, மணி—நீலமணி, சேர்—ஒத்த, கண்டம் போல்—மிடற்றினைப்போல, மீது—வானில், இருண்ட—கறுத்த, கார்—மேகம், காந்தள்—காந்தட்பூ, மலர—பூக்கவும், கமழ்—(மணம்) வீசுகின்ற, கொன்றை—கடுக்கைமலர், பொன்-பொன் போல, சொரிய—சிந்தவும், பூ—பொலிவுள்ள, தளவம்-முல்லைமலர், ஆர—(பூத்து) நிறைபவும், புகுந்தின்று—வந்தது. ஏ—அசை.

ஆதியான் கண்டம்போல் இருண்ட கார் மலர, சொரிய, ஆரப் புகுந்தின்று என முடிக்க.

அண்டம் ஈண்டுப் பூலோகம்; அது பொன்னிற மென்பது நூற் றுணிபாகலானும் அதன்மீது கவிந்தவானம் கறுப்பு நிறத்ததாகலானும் அதனோடு பொன்போலொளிரும் மேனிமீது கருமான்றோல் போர்த்த நாதனை ஒப்பிட்டுக்கூறினர்.

ஏந்தொளிசேர் ஆதியான் என்றார்; சிவபெருமானது தோஜோமயம் ஒளிப்பிழம்பாகலின். மீதிருண்ட அண்டம் போல் ஆதியான் என்றார்; யானைபதட் போர்வையனாகலின். ஆய்மணி என்றார் மிக்க நீல நிறமாகலின்; மீதிருண்டகார் என்றார் நீருண்ட மேகம் வானத்தையடைந்து குளிர்ச்சியடைந்த பின்னரே கருமையாகு மாகலின்.

கருத்து:—ஆதியான் கண்டம் போல் இருண்டகார் வந்தது.

(1) கார்காலத்தில் காந்தள் மலர்தல்

'காந்தளும்...........அலர்ந்தன' (சிற்றம்பலக்கோவை)

'தோடார் தோன்றி குருதிபூப்ப........மழை' (முல்லை)

'கார்க்கு ஏற்று எரிவனப்புற்றன தோன்றி'
(கார் நாற்பது பாட் 9)

'விளக்கிற் பூத்தன தோன்றி வந்தமழை'
(கார் நாற்பது பாட் 26)

(2) கார்காலத்தில் காந்தளும் கொன்றையும் மலர்தல்

'காந்தளங் கடுக்கை கனல் தனம் மலர எழுந்தகார்'
(கல்லாடம்)

(3) கார்காலத்தில் காந்தளும் தளவும் மலர்தல்

'கனைபெயல் பொழிதலிற்...............வீமுல்லையொடு தோன்றி தோன்ற (அகம்)

(4) கொன்றை பொன் போன்றது.

'தாரார் கொன்றை பொன் தயங்க' (சம்பந்தர்)

'கொன்றை மலர் பொன் திகழும்' ,,

'கொன்றை நன் பொன்கால' (முல்லை)

'பொன்றிகழ் கொன்றைமாலை' (அப்பர்)

பருவங்கண்டு தலைவி ஆற்றாமைமிக்குக் கூறியதாகவேனும் பருவங்கண்டு தலைவியைத் தோழி ஆற்றுவித்ததாகவேனும் இக்காரெட்டுக்குந் துறைகொள்க.

தியாகராசர் பள்ளேசல்

தமிழ்ப்பேராசிரியர். திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 3. பக்கம் 112.)

கலித்துறை அகப்பொருட்டுறை

கழையேறு செஞ்சொ லுமைபாகர் வாழுங் கமலைவெற்பில்
மழையேறு தண்டலை யேபுனமே வண்டல்க ளாடிடமே
யுழையே வெறுங்கவ ணையித ணேமெய் யுறவன்றியே
பிழையேது செய்தன ரோவின்று மாதர் பிரிந்தனரே (17)

பாலை நிலம்

தேடிப்பாலை நிலத்திற்புகுந்து திரண்டுவெட்பாலை குராவுடன்
திரட்டிப்பிடுங்கி இலுப்பைக்குலங்கள் சேரச்சுழியில் வாரியே
ஓடிப்பறந்து பருந்தும்புறவும் கழுகுமுகந்து முழுகவே
உலகமெங்கும் நிலைகலங்கி உறுதிகொண்டு நிறுவியே
சூடித்திகழுங் கமலைத்தியாகர் துங்ககங்கைப் பெருமைபோல்
சூழத்திரியும் கேழற்றிரளைத் துரந்துஞாளி யடக்கவே
நாடிப்பரவு மயிடன்சிரத்தில் நடித்தகன்னியை வழுத்தியே
நல்லவளமை முல்லைநிலத்தில் நடுங்கவேகரை புரண்டதே (18)

வெண்பா

தெண்ணீர் புனைகமலை சிற்பரமர் வெற்பதனில்
வெண்ணீறு தந்தும் விடைதந்தும்—வண்ணக்
கரங்குவித்தா ரந்தோகைக் கார்மயிலன் னாரின்
றிரங்குவித்தா ரென்னோ வெமை (19)

வாடுகின்றாள் நின்மாலை வாங்கக் கிளியொன்று
தேடுகின்றா ளாரூர்த் தியாகரே—நாடி
அனங்கனம்பு சொரியவந்து அனலைமொண்டு வீசவெம்பி
மனது நொந்து கலையிழந்த மான் (20)

வேறு

முல்லை நிலம்

புரண்டுமுல்லை நிலத்திற்புகுந்து பொதுவர் மனையில் கதுவியே
புதியநெய்யும் பழையதயிரும் பொருந்துபாலு மருந்தியே
கார்க்கையணியும் பார்ந்தசடையர் கமலைத்தியாகர் விடையைப்போல்
கள்ளமேகொடு வெள்ளமேவிய கானவாரண மோடவே
தூரந்துபயிலும் உழையும் முயலுமொழிந்து திரையிலமுந்தவே
தோன்றிக் குருந்துந்தான்றி யடகுஞ்சுழியிலிடையிலுழலவே
பருந்திராசன் பொருந்துமுபய பதங்கள் கருதி வணங்கியே
பரிந்ததுளவும் செருந்திமீதினில் பரந்து மருதங் கலந்ததே

கலிப்பா

ஆர்வமிகுந் தன்பெடையை யணிசிறகா லருங்குளிர்க்குப்
போர்வைசெய்து குடம்பைதனிற் புள்ளுறங்குங் கார்காலம்
சேர்வைதரும் புகழாரூர் தியாகர்வள நாட்டிலன்பர்
கார்வரவில் வரவுபொய்க்க கலிகால மானதே (22)

வேறு

மருதநிலம்

கலந்துமருத நிலத்திற்புகுந்து கமுகச் சமுகங்குலையவே
கருதியேபல சுருதிமேவிய கரும்புள் கரும்பிற் றிரும்பவே
அலர்ந்தகமலத் தடங்களுழக்கு மணிவரால்கள் பணியவே
அடுத்தவாழையி னெடுத்ததாறுக ளாறுநேரமது வீறவே
பலந்தரும்பல வருக்கை நெருக்கிப் பற்றிமாங்கனி யெற்றியே
பயிலுமாதுளை தழைவிடாமலே பவளக் கொம்பெனத் துவளவே
இலங்கு குலிசப்புரந்தரனையு மிணங்கு தாளை வணங்கியே
இஞ்சிமஞ்சள் வஞ்சியஞ்சிட இடங்கொள் நெய்த லடைந்ததே ()

கலிப்பா

செங்கைக் குறிமறைத்த செஞ்சந்த னத்தையெங்கள்
கொங்கைக் குறியைக் குறியாது செய்தனரோ
மங்கைக் கொருபாகம் வாழ்வாக வேயளித்த
கங்கைச் சடையர் கமலைவள நாடரே (24)

வேறு

நெய்தல் நிலம் மணிமுத்தாறு

அடைந்துநெய்த விடங்களோடி யளவர்மனையை யளவியே
அலையில்வாரி வலையின்மீனை நிலையில்வாரிக் குலவியே
உடைந்துதிரையி லடைந்தபணிலம் உதறும்மணிகள் சிதறவே
உயர்ந்ததாழையும் விரிந்தஞாழலும் ஒருமுகம்படப் படியவே
படிந்ததிமிலும் பலசம்பானும் பாரச்சோங்கு மிதக்கவே
பாய்ந்துமகரம் வாய்ந்துமாயாப் படகைக்குழிய முடுக்கியே
வடிந்ததரளப் பவளத்தாலும் வருணன்பதத்தில் சாத்தியே
மணிமுத்தாறு பெருகிவார வளமைபாரடி பள்ளீரே (25)

மீன் வகை

வாளைதிருக்கை சுறவுதொழுத்தை வஞ்சனம் சிறுமஞ்சனம்
மடவையுல்ல மயிரைகெளிறு மகரம்குறவை மலங்குமீன்
தேளியுழுவை மய்றுசன்னை திமிதிமிங்கிலம்பல புரவிமீன்
சீலிகைத்தலை யானைமீனொடு தெள்ளிறால்வாளை வெள்ளிறால்
நாளும்புதிய கடலின்மீனும் நாட்டுமீனுங் கூட்டமாய்
நளிகொள்தாலக் கனியைமோதி நறியதாழை முறியவே
ஆளைவிலக்கிக் கலக்கிக்களித்திட் டலையைக்குலைய முடுகியே
அழுந்துதடத்தி லெழுந்துபாயும் அதிசயம்பாரும் பள்ளீரே(26)

வெண்பா

பெருங்கடல்நஞ் சுண்ட பிரான்கமலை சூழும்
கருங்கடலே நெய்தற் கழியே—நெருங்குநிழற்
புன்னைக மேதிரையே போனவர் மீண்டக்கால்
என்னைக மேகரை யேனே (27)

ஊரூர்கள்தோறுஞ் செவ்விமழை பொழிந்தே ஒருகோடி தேரைவாய்கள்
[ஒலிவீறவே
சீரூரு மணிமுத்தாறு நீர்பரந்தே திரைதாவியே எழுந்து கரைமோதியே
வேரூரும் கோரைகொண்ட கழனியெல்லாம் வெண்கார்கள் பாய்ந்துபுனல்
[மீளாமலே
ஆரூரர் பண்ணைதொறும் ஆண்டவர்தன்னை அணைகோல நாமழைக்க
வாரும்பள்ளீரே (28)

சிந்து

குயிற்கூக்கேட்டல்

புவிமீதிலே திங்கள் மும்மாரியும்பெய்து பொங்குகலிதீரவே கூவாய்குயிலே
சிவகாரியந்தனக்ககி தங்கள்செய்யுமவர் தீநரகில்வீழவே கூவாய்குயிலே
தவமெழுதானமும் பரிகலமும் ஆரூரர் சன்னிதியுந் தழைக்கவே கூவாய்
[குயிலே
நவமாகத் தென்னூலைப் பூமியான் மகபூசை நடத்துநெறி தழைக்கவே
[கூவாய்குயிலே (29)

ஒற்றமுள்ள முனியென முன்னுன் வகுத்தவயன் உள்ளதலையும்போகக்
[கூவாய்குயிலே
நேற்றியற மடவாரைக் கூட்டுறவுசெய்யுமவர் நீடுழிவாழவே கூவாய்குயிலே
காற்றுள்ளபொழுதிலே தூற்றியவருக்குதவ கைப்பொரு ளுண்டாகவே
[கூவாய்குயிலே
சாற்றுமடலூரவே ஆரூரர் வளநாட்டில் தடம்பணைகள் விளங்கவே கூவாய்
[குயிலே (30)

வேறு

பண்ணைத்தலைவன் வரவு

வீக்கிய வெறும்பழுதை வாகுபுரியழகும் வெந்தவீட்டில் கரிக்கட்டை
[மேனியழகும்
தூக்கணங் குருவிக்கூட்டில் தொப்பாரக் கட்டழகும் தூக்கிவைத்த
[வளைதடிக் காலினழகும்
ஈக்கடியுண் டிழையுண்ட கண்ணினழகும் போட்ட ஈத்தாப்பு மிறுமாப்பு
[மேற்றவழகும்
பாக்கிலைதின் றறியாத வாயினழகும் ஆரூரர் பண்ணைக்கார ருரும்வந்து
[தோன்றினரே (31)

வெண்பா

இரவு தனையோ இகல்வேள் தனையோ
சருவுகுயி லோசை தனையோ—மருவாமல்
போனரை யோபரமர் பூங்கமலை நன்னாட்டில்
யானுரை யோநோவ தின்று (32)

வேறு

பண்ணைத்தலைவனைப் பள்ளிகள் கண்டுதொழுதல்

பொற்கடக முன்கையேந்திக் கடயமேந்திப் பொன்னெழுத்துச்
[சேலைகட்டிப் பூங்குழல்கட்டி
தற்கமான நெற்றிவிழிக் கஞ்சனமிட்டுச் சந்தனத்தைத் தனத்திலிட்டுத்
[தளப்பமிட்டு
நற்கமலை ஆடாவைக் கிண்கிணிக் காலன்நங்கை பங்கன் தென்கமலை
[நாடுதன்னிலே
வற்கமான பண்ணைபார்க்கும் ஆண்டவர்தம்மை மகிழ்வுடன் கண்டுதொழ
[வாரும்பள்ளீரே (33)

கறுத்த மெய்யழகரே கும்பிடுகிறேன் கொழுக்கட்டை மூக்கரே கும்பிடு
[கிறேன்
சொறித்தலை யழகரே கும்பிடுகிறேன் கூனும்சோணி வயிற்றரே கும்பிடு
[கிறேன்
பறித்தகண் ணழகரே கும்பிடுகிறேன் ஊசிப் பாசிப்பல் லழகரே கும்பிடு
[கிறேன்
அறுத்தகா தழகரே கும்பிடுகிறேன் பண்ணை யாண்டவரே யாண்டவரே
[கும்பிடுகிறேன் (34)

வெண்பா

கமலைபு மென்மனமுங் காதலித்து வாழும்
அமலர் திரு முன்போ யனங்காள்—சமரமதன்
தான் றமிருந் தேன்பகழி தூற்றுமெனு மாருயிர்கொண்
டென்று மிருந்தே னெனும் (35)

வேறு

பண்ணைச்செயல் விளம்ப வினவல்

கோட்டைக்கட்டும் பல்விதை வர்க்கமும் கொண்டகொட்டிக் கொழுவின்
[வகையும்
பூட்டுநெட்டை நுகமுங் கயிறும் பொன்னின்மேழிக் கலப்பை வகையும்
நீட்டுமெய்ப்புகழ் வீதிவிடங்கர் தியாகர் பண்ணை வயலில் உழுத
மாட்டு வர்க்கமும் உள்ளபடிதன்னை வந்து சொல்லடா வன்மீகப் பள்ளா ()

வேறு

பள்ளன் பண்ணைச்செயல் கூறல்

இளவிதைகார் பாசானவிதையி லெலியருந்தியது தொள்ளூறுகோட்டை
வளவிலே யிட்டபட்டடையிற்பட்டி மாடுதின்ற தெழுநூறுகோட்டை
அளவுவாசி யறுநூறு கோட்டை யந்துதின்றதோரைஞ்ஞூறு கோட்டை
களவுபோனது நானூறு கோட்டை கண்டகோட்டையு முந்நூறேயாண்டே

பலவகை நின்ற மாட்டி லுருத்திரன் பத்துமாடு பதினொருமாடு
கலகமாகிய காலனைச் சாடக் கடுகி யோடுங் கடாவொன்றுங் காணேன்
உலகமெங்கு முழுதவிடத்தி லுறங்குகின்ற தொரு பெருங்காளை
நிலவணிந்தவர் ஆரூர்த்தியாகர்க்கு நின்றகுண்டை யொருகுண்டையாண்டே

புகழ்படைத்த தியாகர்க்குத் தென்னுலைப்பூமியான்செய் திருப்பணிதன்னில்
முகவனைக் கல்லு பூட்டுமிடத்தில் முறிந்துபோன நுகமொரு கோடி
அகலிடத்தை முழுது முழுத அருங்கலப்பை யனந்த மதுதன்னில்
இகல்படைத்த பலபத்திர னிடத்தில் இருக்குங் கலப்பை யொன்றுண்
[டாண்டே (39)

சந்தத் தாழிசை

நாரி பங்கர் கமலையஞ் சாரலில் நயந்து நண்பு வியந்துறவாகியே
காரிலங்கிய சந்தனச் சோலையில் கலவி நீங்குங் கயல்விழி மாதரீர்
சோருமாடை தலைமாறிச் சூழ்ந்ததுந்தலைந்த நாணம்நினைந்தே நகைத்ததும்
வாரியே கையில் கூந்தல்முடித்தது மனத்திலென்று மறக்கவொண்ணுதே

கொடுமையேன் கண்டமுகைக்கே குறைகள்செய்து சிறையிலிருந்தாய்
தொடரவந்துசெய் வன்மீகப் பள்ளத்தி சொன்னவாறு சூளுமுடித்தாள்
அடிமைதன்னை யறியாமலே பண்ணையாண்டை தானுமவள் வார்த்தை
[கேட்டார்
விடவரவிற் றுயிலரங்கேசா விதியை யாரும் விலக்க வொண்ணுதே (41)

ஆலில்நின்றிடு வீரன்தனக்கிட்ட ஆட்டிறைச்சியு மாக்கியசுள்ளும்
மூலியென்பதுங் கொண்டுவடித்தபின் மொந்தையிற்கொடு வந்தமதுவும்
பாலில்வெந்து படைத்தவடிசிலும் பானைதன்னுடும் பாலிக்கவேண்டிக்
காலிரண்டுந் தொழுவி லிருக்கவே கையிரண்டுந் தொழும் பள்ளனுரே (42)

தொழுதபோதி லிழுக்குள்ள தாகுமோ சொன்ன வார்த்தையி லென்ன
[மறுத்தேன்
பழுதுதாஞெரு கோடிசெய்தாலும் பாரியானவள் பாராட்டலாகுமோ
உழுதவரும் கலப்பை வகையும் உள்ளவாறெல்லா முத்தாரஞ் சொல்லுவேன்
அழுதிடாமல் வன்மீகப்பள்ளத்தி யாண்டைக்கே சொலிமீண்டு கொள்
[வாயே (43)

வேறு

வெய்யசிரங்கப் பள்ளியிடத்தில்வெறுப்பினுலன்றுவிண்ணப்பஞ்செய்தேன்
ஆயிரம்பிழை செய்யினுமெங்களை ஆண்டையன்றி யாரே பொறுப்பார்
பாயுமாடும் விதைவகையுந் தந்துபண்ணை சேரப்பயிர் செய்து தாரோம்
நாயடியேன் பிழையாக வன்மீகப் பள்ளனை விட்டுவிடும் ஆண்டே (44)

சந்தத் தாழிசை

உரையடுத்த சதுர்வேதநாதனுர் ஓவியந்தனை மேவியபாகனுர்
கரையடுத்த வளமுத்தி சந்திடுங் கழனிசூழுங் கமலைநன் னுட்டிலே
திரையெடுத்த திருப்பாற் கடலுளே செய்யபத்மத் திருக்கோயில் வாழுவீர்
வரையடுத்த புதுமணச் சோலையில்வந்து நீர்நின்ற மாயமென் மாயமே(45)

பண்ணை மாடுகள்

முட்டிக்காலன் வெட்டுக்கிடா முட்டைக் கறுப்பன்
மோழைக்காளை வீணைக்கொம்பன் ஆனைச் சொறியன்
மட்டைக்கொம்பன் நெட்டைக்காலன் வட்டச் குறியன்
மணிகட்டி வெள்ளைக்காலன் குள்ளச் சிவப்பன்
வெட்டுக்காலன் பொட்டைக் கண்ணன் மேகநிறத்தான்
வெடிவாலன் தறிகொம்பன் வெள்ளைக் குளம்பன்
கொட்டைப் பாக்கன் கூழைவாலன் கூடுகொம்பன்
கொண்டபண்ணை மாட்டின்வகை கூறினேன் ஆண்டே

மேழி கொழு ஏர்க்கால் கலப்பை முதலியவை

வச்சிரமாணிக்கத் தாலேபடை வாளும் வன்பவளக் கொம்பினாலே
[மேழிநுகமும்
உச்சிததங்கத்தி ஞலேவைத்த கொழுவும் ஒள்ளியவெண்பட்டு நூலாலிட்ட
[கயிறும்
பச்சைவெட்டுச் சந்தனத்தாலேற்கும் ஏர்க்காலும் பத்மராகத்தா லிழைத்த
[உழக்கோலும்
கச்சணிந்த கொங்கைபங்கர் தென்கமலைக்கே கலப்பையாயிரங்கொண்டு
[கட்டினேனாண்டே (47)

நெல் வர்க்கம்

அரியநாயகன் குறுவை பொற்காலி யருச்சுனன் தியாதா னுணங்கு
திருவரங்கன் அழகிய வாணன் தில்லைநாயகன் சீரகச் சம்பா
இரணவாரி கற்பூரப் பொற்பாளை இறங்கமாட்டான் குறுவைக் கிளையான
கருணைவாலன் கருவாலன் செவ்வாலன் சொரிகுரும்பை விதைவகை
[யாண்டே (48)

விருத்தம்

மாயர்பாகனார் மாதுபங்கனார் மத்தமாடரா வைத்த வேணியார்
காயுமாரவேள் கணையை வென்றுளார் கமலைதன்னில்வாழ் கனகவல்லியார்
சேயகூர்விழிக் கொப்புவாளியே செவியணிந்ததுங் கொப்பு வாளியே
சாயலானதுங் கமலைபோலுமே தாங்கு கொங்கையுங் கமலைபோலுமே (49)

பள்ளனைப் பண்ணைக்காரன் விதை தெளிக்கச் சொல்லல்

வேறு

இன்னேரம் பூசமென்றார் பஞ்சமியென்றார் ஏற்றசோமவாரமென்றார்
[சோபனமென்றார்
நன்னேர மாகுமிந்த முகூர்த்தந்தன்னில் நரையானும் வலமாக விரையச்
[சென்று

பொன்னேரைப்பூட்டிவயல்சேறுசெய்தபின் போதவெருத் தழைபோட்டுப்
[பரம்படித்து
தென்னேர் மொழிச்சிபங்கன் தென்கமலைக்கே சென்னல்விதை தெளித்
[திடச் செல்லடாபள்ளா (50)

தெளிசெந்தமிழ் சுந்தரர்க்காகத் தெருவிற் றூது பரவைக்குச் சென்றோன்
களிதருஞ் சிறைவண்டிசை கொண்ட கடுக்கை யண்ணல் கமலைவயலில்
மிளிர்தரும் பனிநீரை விடுத்து விளைவயல் தனில்வெண் காரைப்பாய்ச்சி
ஒளிதரும் பொற் கலப்பையைப்பூட்டி யுழுகைக்கே கொழுதச்சுதேயாண்டே

புலம்பல்

இன்றுனையே கண்டழுகைக்கே பண்ணைக்காரன் எங்களைத்தான் சிங்கி
[கொள்ளுகிறான்
சென்றபோது சேரிப்பள்ளிகள் உன்னழகு சேரவே கண்ணீர்கொண்டதோ
அன்றிளையா ளிட்டமருந்தோ அவளிடத்தாசைமோகந் தலைக்கொண்டதோ
மன்றில்நின்ற வீரன் குற்றமோ மயங்கினாய் வன்மீகநாதப் பள்ளனே (52)

தன்குழவி தன்னையும் பாராய் என்னுடையதாதை வர்க்கந் தன்னையுங்
[காணாய்
என்கொடிய முன்னை வினையோ கைப்பிடித்து என்னைக்கொண்ட நேர
[வாசியோ
உன்கை பார்க்குமெங்களுக்கு வேறொருதஞ்ச முன்னையன்றிப் பின்னையு
[முண்டோ
வன்கமலை நாத னருளால் வன்மீக நாதப் பள்ளரே (53)

தெளித்தேன் விதையும் நீரும் வடியப்போட்டேன் சேரமுளைத்த பின்பு
[நீருங்கட்டினேன்
அளித்தேன் அளிக்குலஞ்சூழ் தென்கமலையோர் அறிவுபோலக் கிளைத்துச்
[செறிவாகியே
தளித்தேறு செந்தமிழைக் கொண்டவரசர் தக்க புகழ்ப்போல நாற்றுஞ்
[சமைந்ததிப்போ
களித்தேபறித்துமுடி நடவெதெல்லாங் காணவரவேணும் பண்ணைக்காரனா
[ராண்டே (54)

வெண்பா

சேலை யழகா திருமார்பிற் செவ்வந்தி
மாலை யழகாதே வரகண்டா—வேலையந்திக்
காப்பழகா வென்று கனிந்துகனிந் தோதுதற்கு
நாப்பழகா தென்செய்வே னான் (55)

(தொடரும்.

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 12. மலர் 10. பக்கம் 385.)

இயல் க—காட்சி ரு.

உறுப்பினர் :—அம்பலவாணர், பிறைசூடியார், கருணாகரத் தேவர், பொதுமக்கள், அதியமான், பணியாளன்.

இடம் :—தகடூர் அரசர் மன்றம்

பொழுது :—காலைப்பொழுது

[அஞ்சி, தகடூரைத் தன் வயமாக்கி அதியமான் நெடுமானஞ்சியென்ற பெயருடன் ஆட்சிபுரிதல்.]

அம்பலவாணர் :—(முன்னே இருப்பவர்களை நோக்கி) தாய் நாட்டுத் தனிப் பெருமக்களே! எனது அன்புமிக்க தோழர்களே!! நமது நாடு ஒரு சிறுகாலவெல்லைக்குள், நம் பகைஞர்களின் கொடுமைகளாலும், நம்நாட்டவரின் ஊழ்வலிப்பயனாலும் அடைந்துள்ள அல்லல்களை அறியாதார் எவரும் இங்கு இல்லை எனலாம். நாம்பெரிதும் துன்பத்தால் துவண்டு வாடி துயருற்ற நாளில், 'வழுக்கு நிலத்தின் ஊன்று கோல்போல' நமக்குப் பெருந் துணையா யமைந்தவர்கட்கு நாம் எவ்வாறு கடமைப் பட்டுள்ளோம் என்பதை இவண் விரித்துக் கூற வேண்டியதன்று. 'இடியொலி கேட்ட அரவென' கணையொலியால் நம் மாற்றலர்கள் அஞ்சுமாறு, தன் திறனைக் காட்டிய திருமிகு. கருணாகரத்தேவர் இன்றேல் நம் நிலை யாதாயிருக்கும்? ஆதலால், அன்பர்களே! நம் நன்றியைக் காட்டு முகத்தால், நாம் அனைவரும் ஒன்று கூடி இவ்வீரரின் வெற்றி, நாளும் ஓங்க, வாழ்த்துவோமாக.

பிறை சூடியார் :—வாழ்க, நம் கருணாகரர்! (யாவரும் :—வாழ்க, வாழ்கவே!)

அம்பலவாணர் :—பெரியோர்களே ! இதுபோது, நம் நாட்டுக்குற்ற நன்மைகள் நம் கருணாகரத் தேவரால் வந்தனவாயினும், அன்னவர் இங்கு வருதற்கு ஆணை தந்தவர் ஆர், என்பதை நாம் நினைக்கவேண்டாமா? நம் நாட்டின் அன்பரும், கருணாகரத்தேவரின் தலைவரும், அதிகைப் பெரும்பதியின் அண்ணலுமாய, மாண்புமிக்க, அஞ்சி மன்னரை, நாம் என்னென்று கூறுவது? நம் தகடூர் நாயகரின் பிரிவினால், நாம் உற்ற துன்பத்தை அறிந்தவுடனேயே, 'மெய்தாக்கும் வியன்கோலடியைக் கை, கடிது சென்று தாங்குவ'தொப்பவும் சேய் படுந்துயருணர்ந்த தாய்போலவும் வேண்டுவனபுரிந்து, நம்நாடும், நகரும், பீடும் பெருமையுங் கொள்ளுமாறு நம்மைப் புரந்த அப்பெருமானை நம் அன்னை என்பதா, அப்பன் என்பதா, ஆசிரியன் என்பதா, அரசன் என்பதா அல்லது நம் ஆண்டவன் என்றுதான் சொல்வதா ?

பிறை சூடியார் :—பெரும! தாங்கள் கூறிய ஐவரது பண்பும் இங்கு நமது அஞ்சி மன்னரின் ஒருருவிலேயேத் தோன்றுவதால் அவரை நம் 'ஐம்பெருங் குரவராய அண்ணல்'' என்றழைப்போமே ?

அம்பலவாணர்:—நன்குமொழிந்தார், பிறைசூடியார். ஆதரவில்லாத நமக்கு, இந்நாளில் அஞ்சிப்பெருமான், நம் ஐம்பெருங் குரவராகவே அமைந்துள்ளார். எனது நாட்டுப் பெருமக்களே! அஞ்சிப்பெருமான் நமது தகடூர்நாயகற்கு உற்ற நண்பராகுவர்: உறவினருமாவர்: இன்னும் சேரர் தொல்குடித் தொடர்பும் உற்றவர். வீரருள் வீரராகவும், தொன்மை மரபில் செம்மையராகவும், கற்றல் கேட்டலிற் சிறந்தவராகவும். நெறிமுறை வழுவா நியதியராகவும் உள்ள அஞ்சி மன்னரைப் போலத் தகுதி பெற்றோரொருவரை நாம் எவ்வளவு முயன்றாலும் பெற இயலாது. ஆதலால், நாம் அனைவரும் ஒரே உளத்துடன் மிகுந்த மகிழ்ச்சியோடு நம் நகருக்கு அவர்களைத் தக்க சிறப்புக்களுடன் வரவேற்று, அவர்களையே நமது நாட்டிற்கும் என்றும் உற்ற தலைவராக ஏன் கொள்ளுதல் கூடாது ?

பிறைசூடியார் :—அம்பலவாணப் பெருமான் கருத்தின் படியே ஆகுக.

போதுமக்கள் :—ஆம்! ஆம்!! அதுவே நன்று! அதுவே நன்று!!

கருணகரர் :—தகடூர்ப் பெருமக்களே! உங்களது ஒற்றுமை மிகுந்த உளத்துக்கும், உங்கள் தலைவரின் கருத்துக்கு மாறு கொள்ளாத் தகுதிக்கும் ஏற்பவே நீங்கள் இதுபோது உங்கள் தலைவரைத் தேர்ந்துள்ளீர்கள். நீங்கள் விரும்பிய தலைவர், அதிகையின் அண்ணல் நெடுமான் அஞ்சி, கிடைத்தற்கரிய பெருந்தகையாளர் ஆவர். எனவே அவரது ஆட்சியினல் இத் தகடூர்ப் பெருமக்களனைவரும் நடுவூர் மரம் பழுத்தாலன்னப் பெரும் பயனெய்துவர். தகைமைசால் பெரியீர்! மன்னன் இவண் வருதற்குற்ற பொழுதும் நெருங்குகின்றது. யாம் அனைவரும் அவரது வருகைமேல் மனங்கொண்டு அதற்கு ஆவன புரிவோமாக.

அம்பலவாணர் :—நன்று கருணகர! அஞ்சிவேந்தர் எமது நாட்டுரிமையை பெறுதற்குற்ற மணிமுடி, வாட்படை, பூந்தார், நெடுங்கோல் ஆய யாவும் இதோவுள்ளன. மன்னர் வருகைதான் வேண்டும்.

ஓர் இளைஞன் :—பெரும! நமது அஞ்சி யண்ணல்!! அதோ காண்மின், காவலர் முன்வர அன்பர் புடைசூழ வருகின்ற காட்சியை!

அம்பலவாணர் :—மகிழ்ந்தேம்! மகிழ்ந்தேம்!! எமது பெருமான் அஞ்சியின் வருகையால் எமக்கு எக்குறையும் வாரா திருக்குமாக. அன்பரீர், நாம் யாவரும் அஞ்சி மன்னர் இவண் அணுகியதும் நமது வாழ்த்தொலியால் அவரது உள்ளம் களிகூர வரவேற்போமாக. (அஞ்சி அவையுட் புகுதல்: அம்பலவாணர் முன் சென்று வணங்க யாவரும் பணிதல்) அதிகை நகர் அண்ணல், 'அஞ்சி மன்னர் வாழ்க!

பொதுமக்கள்:—*வாழ்கவே !!* (அஞ்சி மகிழ்ச்சியுடன் அரசு கட்டிலில் அமர்தல்)

அம்பலவாணர் :—*வாழ்க ! எம்பெரும ! வாழ்க நின் சுற்றம் !! தங்கள் வருகை எமக்கு நல் வரவாகுக. எம் அண்ணல் ! யாங்கள் விண்ணப்பித்த எளிய சிறு மொழியைப் பெரிதெனக்கொண்டு, தங்கள் படைமுதல்வர் கருணாகரரால் எமது துன்பத்தைத்துடைத்தும், இன்னும் தாங்களே நேரிற் போந்து எமது நாட்டின் ஆட்சியை உளநிறைவுடன் ஏற்றும் எம்மைப்புரக்க வந்த தங்களது அருட் செயலை யாங்கள் என்னென்பேம் ! எமது மகிழ்ச்சியை விரித்துரைக்கும் நெறி எங்கட்குப் புலப்பட்டிலது. யாங்கள் தங்களுக்கு என்றும் அமைதியும், பணிவும் நிறைந்த குடிமக்களாகி, தங்கட்கு எல்லா நலனும் பெருகத் துணை நிற்பதோடு, தாங்கள் நீடிய வாணாளும் நிறைந்த புகழும், செல்வமும் பெற்றுவாழ எங்களது வழிபடு கடவுள் முருகவேளை வழுத்துவது தவிர வேறொன்றறியேம். பெரும ! தாங்கள் எங்களைப் புரப்பதற்குற்ற அறிகுறியாக இதோ இவண் உள்ளனவாய இம்மணிமுடி, செங்கோல், வாட் படை, நெடுந்தார், ஆயவற்றை இத்தகடூர் மக்களின் வேண்டு கோட்கிணங்கி மறுக்காமல் இனிதே ஏற்றருள்வீர்களாக.* (யாவையும் மன்னன்பால் வழங்கியதும்) *பொது மக்களே ! நாம் இனி கவலை கொள்ளவேண்டுவதில்லை. நமக்கு ஏற்படும் நன்மை தீமை என்பன யாவையும் கண்காணிக்க நமது வேந்தர் இதோ வீற்றிருக்கின்றார். நமது கடமை அவர் கருத்தின்வழி நின்று, அவரது ஆணைக்கு அடங்குவதேயாகும். நமது கடன் அவற் குப்பணி செய்து கிடந்தால், அவரது கடன் நம்மைத் தாங்கு தலால் அமையும். ஆதலால் மன்னுயிர் ஓம்பதலே தன்னுயிர்க் கடனாக் கொண்ட எமது வேந்தர்—தகடூர்ப் புரக்கவந்த அஞ்சிப் பெருமான், இறைவனருளால் நல்வாழ்வு பெற்று, சீரும் சிறப்பு மிக, நம்மிடை நெடுநாள் வாழ்வாராக !* (மலர்மாலை சூடுதல்.)

அதியமான் அஞ்சி :—*தகடூர்ப் பெருங்குடிகளே ! தாங்கள் என்னை உங்கள் தலைவனாகப்பணிவுடன் ஏற்றுக்கொண்டமைக்கு*

யான் மிகவும் பெருமை கொள்ளுகின்றேன். உங்களது வரவேற்பு, எனக்கு என்றும் என் உள்ளத்தினின்றும் நீங்கவியலாத ஓர் இன்பத்தையும் மகிழ்ச்சியையும், என் கடமையைக் குறிக்கும் உணர்ச்சியையும் தருகின்றது. எனது வாழ்வு சிறக்கவும் எனது குடிகளாகிய உங்களது நலங்கள் பெருகவும், நம் இருவரது உறையுள்ளாகும் இந்நாடு செழிக்கவும், எல்லாம் வல்ல இறையருளால் எனது ஆட்சி பல்வகையானும் நன்றே அமைவதாகுக.

கருஞ்கரர் :—வாழ்க! எம்தகடூர் நாயகர் அஞ்சி அண்ணல்! (யாவரும்—வாழ்கவே!!) அன்பர்களே! ஆன்றோர்களே! நமது வேந்தர் பெருமான் நல்வாழ்வு அடைய நாம் அனைவரும் ஒத்தவுளத்தராய் இந்நன்னாளின் இற்றைய நற்பொழுதில் நம் இறையருளை வேண்டுவோமாக. (யாவரும் நின்று வணங்குதல்.)

இயல்—க ; காட்சி—ங. முற்றும்.

தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பாராய்ச்சி பிழை திருத்தம்.

திரு. K. கோவிந்தன், தமிழ்மாணவன் ஔவைத்தமிழகம் திருவத்திபுரம்

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
162	28	நனம்பார்ப்	நாம்பார்ப்
,,	32	ஞதுக்காண்	னுதுக்காண்
163	4	மாணரம்	மாணலம்
,,	13	வைந்துனை	வைந்நுனை
,,	19	நானும்	நாறும்
,,	20	புறக்கொடுப்ப	புறங்கொடுப்ப
,,	,,	சிதற	சிதறி
,,	,,	பால்படு	பரல்படு
164	11	வளைந்தவாய்வார்;	வளைந்தவாய்வார்,
,,	15	ஒத்தலின்,	ஒத்தலின்.
,,	17-18	நாம்	நரம்
,,	21	போல மா, கருமை இரு	போல. மா, கருமை. இரு,
,,	23	கதழ்விரைந்த மழைத்துளி,	கதழ்உரை, விரைந்தமழைத்துளி;
,,	24	பொருள்	பொருள
,,	25	குரங்குவளைப்	குரங்குளைப்
,,	26	“ யென்பது	யென்பது
,,	32	உனரநடையில்	உரைநடையில்
165	16-17	நானும்	நாறும்
,,	20	ளிற்காக	ளிற்கு
,,	23	பொருட்டு	பொருட்டுக்
,,	26	வதியும்.	வதியும்
,,	28	தோன்	தேரன்
167	31-32	முண்ணப்படுமெனவே,	முன்னப்படுமென
168	12	ரூத்திரததின்	ரூத்திரத்தின் [வே,
,,	16	வோனே.”	வோளே.”
,,	26	பிறன்குண	பிறள்குண
,,	31	குறிப்பிளை	குறிப்பினை
169	18	கூறும்	கூறப்
,,	21	றுப்யடி.	றுப்படி
170	2	தலைமகள்	தலைமகன்
,,	19	அவைகளில்	அவைகளுள்

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௩	ஈசுவர ஐப்பசி	மலர் ௭

இந்திமொழி எதற்காக?

செல்லூர் திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை அவர்கள்.

தொல்காப்பியர் காலத்தில் வடக்கே வேங்கட மலையையும், தெற்கே கன்னியாகுமரியையும் நிலவெல்லையாகக்கொண்டு உயரியநிலை யெய்தியிருந்தது நமது தமிழ்மொழி. இது பண்டைய இலக்கியங்களால் காணக்கிடக்கின்றது. இத்தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் சேர, சோழ, பாண்டியர்கள். இவர்கள் காலத்து தமிழ் மொழி உலக மொழியாகப் பரவியிருந்தது. அக்காலத்தில் மதுரையில் முதல், இடை, கடை என மூன்று சங்கங்கள் திகழ்ந்திருந்தன. அச்சங்கங்களில் தமிழ் மொழியை இயல், இசை, நாடகமென முப்பிரிவாகப் பிரிக்கப்பட்டு வளர்த்துவந்தனர். சங்கம் இரீஇய புலவர்கள்

பல நூல்கள் இயற்றியிருந்தனர். பிற்காலத்து நிகழ்ந்த கடற் பெருக்கால் அச்சங்கங்களும், அவைகளிற் றோன்றிய நூல்களும் அழிந்தொழிந்தன. இதனைச் சிலப்பதிகாரம் வேனிற் காதைக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையானும், இறையனாரகப்பொருட்கு கணக்காயனார் மகனார் நக்கீரனார் வரைந்த உரையானும், பிறவாற்றானும் அறியலாம். பிற்காலத்து ஏற்பட்ட முகம்மதிய ஆட்சி, ஆங்கில ஆட்சிகளால் தமிழ்மொழி பிறமொழிக் கலப்பால் தனது இயற்கை குன்றிவருகின்றது. இது அறிஞர் யாவர்க்கும் ஒப்ப முடிந்த உண்மை.

தற்கால அரசியலார்களின் சூழ்ச்சியால் இந்திமொழி கட்டாய பாடமாகப் புகுத்தப்பட்டு, அதற்காக ஆங்காங்கே பள்ளிகளும், சங்கங்களும் திறக்கப்பெற்றுப் புற்றீசல்போல் வருகின்றன. கட்டாய பாடமாக இந்திமொழி வருமாயின் இப்போதுள்ள நிலையினும் மிகத்தாழ்ந்த நிலைக்குத் தமிழ் மொழி வந்துவிடும்.

ஆங்கில ஆட்சியின் பயனால் உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் ஆங்கில மொழி கலந்து, இது தமிழ், இது ஆங்கிலம் என்னும் பாகுபாடின்றி வழங்கி வருகின்றது. உதாரணமாக விளக்கை 'லைட்டு' என்றும், தண்ணீரை 'வாட்டர்' என்றும், குழாயை 'பைப்பு' என்றும், மருத்துவரை 'டாக்டர்' என்றும், மருந்தை 'மெடிஷன்' என்றும் இன்னும் பலவாறாகத் தமிழ் மொழி கொள்ளை கொள்ளப்பட்டு, ஆங்கில மொழி மேலோங்கி நின்றது. இதுதான் மொழிவளரும் இயற்கை யென்றும், யாவர்க்கும் தெரியும் சொற்கள் என்றும் சிலர் வாய் கூசாது கூறுகின்றனர். நிற்க, இச்சொற்களை நாளடைவிற் களையாது விட்டு விடுவோமானால் மேலும், மேலும் கலந்து தமிழுருமாறி வேறொரு புதுமொழி யாகிவிடும். இவ்வாறு தமிழ் திரிந்த மொழிகளே மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலியன. " கன்னடமுங் களிதெலுங்கும் கவின் மலையாளமுந் துளுவும்— உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும், ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்,

சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்னும் ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் மொழியும் இதனை வலியுறுத்தும்.

நான் சில ஆண்டுகளுக்கு முன்னர்ப் பர்மாவில் இருந்த பொழுது மலையாள நண்பரொருவர் இருந்தார். அவர் அம் மொழியிற் புலமை வாய்ந்தவர். அவருக்கும் எனக்கும் நெருங் கிய தொடர்பு உண்டாயிற்று. அவர் அம்மொழியில் சில நூல்கள் இயற்றியிருந்தார். அவைகளிலுள்ள பாட்டுகளையும், பழம் பாட்டுக்களையும் என்னிடம் சொல்லுவார். நானும் தமிழ்ப் பாட்டுக்களைச் சொல்லுவேன். நாங்கள் இருவர்களும் ஒருவருக் கொருவர் பொருள் சொல்லாமலே பெரும்பாலும் தெரிந்து கொள்வோம். காரணம் மலையாள மொழியில் முக்காற்பாகம் தூய தமிழ்ச் சொற்கள் இருப்பதுதான். முன்னர் நந்தமிழ் நாடாண்ட சேரமன்னனும் மலையாளியே. அக்காலைத் தமிழ் மொழியே அங்குத் தாய்மொழியாக இருந்தது. சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் ஒரு மலையாளியே யென்பதும் உன்னற்பாலது. இதுகாலை நந்தமிழ்மொழி எந்நிலையிலிருக் கிறது? இரங்கும் நிலையிலிருக்கிறது; காலத்தின் கோலம்!

ஆகவே இந்திமொழி கட்டாய பாடமாக வருமானால் வழக் கச் சொற்களெல்லாம் இந்தியாகவே மாறி, தமிழ் வளங் குன்றும். இப்போது இந்திமொழி வருமுன்னரே நாட்டுவிடுதலை விரும்பும் நண்பர்கள், திரு என்ற தூய, அரிய தமிழ்ச்சொல் வழக்காற்றி விருப்ப அதற்குநேர்மாறாக ஸ்ரீயுத, ஸ்ரீஜத் முதலிய சொற்களை வழங்குகின்றனர். வடநாட்டார் இவ்வாறு மொழி யிரவலா வாங்குகின்றனர்? நாளாக நாளாகத் தமிழில் அருவருப்பும் இந்தியில் மயக்கமும் உண்டாகி தமிழ் சீர் குலைந்துவிடும். இப் பொழுதே இந்தியையெதிர்த்துத் தடுக்காவிட்டால் ஒண்டவந்த பிடாரிக்கு ஊர்ப்பிடாரி இடங்கொடுத்த கதையாக முடியும்.

இந்தி கட்டாயமானால் தமிழ் மொழியிலுள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு, சிந்தாமணி, கம்ப ராமாயணம் முதலிய நுணுக்கம்வாய்ந்த அரும்பெரும் இலக்கிய

நூல்களையும், தொல்காப்பியம், இறையனாரகப் பொருள் முதலிய இலக்கண நூல்களையும் கற்பா ரற்றுப்போம். இறுதியில் தமிழர் பிற செல்வங்களை இழந்ததுபோல் கலைச்செல்வத்தையும் இழக்க நேரும். பார்மின்கள்.

தேச விடுதலை விரும்பும் அன்பர்களே! நீங்கள் பால்மணமாறாப் பச்சிளங் குழந்தைப் பருவத்தில் சீராட்டிப் பாராட்டி அம்மே, அப்பா, என்னும் இயற்கைமொழியில் உங்களுக்குச் சொற் பழக்கம் உண்டாகுமாறு செய்த தாய்மொழியை மறக்கலாமோ? அயல்மொழிப்பித்து உங்களைவிட்டு அகன்ற பாடில்லை. இந்தி, இந்தியென்பதுவே உங்கள் ஏக்கமாயிற்று.

" யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ஒரு சொற்கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் "

என்னும் நம் பாரதியாரின் தெய்வமொழியையேனும் நினைந்தீர்களா? வள்ளுவன் வாய்மொழி கற்றீர்களா? கம்பன் கவிநயம் கண்டீர்களா? இளங்கோ இன்னுரை யேற்றீர்களா?


பாரதி விழாக் கொண்டாடுகிறீர்கள். போட்டிப் பந்தயம் காட்டுகிறீர்கள். பாரதி படத்துக்குப் பூமாலை சூட்டுகிறீர்கள். ஊர்வலம் காட்டுகிறீர்கள். என்னென்னவோ ஆரவாரம் செய்கின்றீர்கள். பாரதி சொல்லைமட்டும் காற்றிற் பறக்க விடுகின்றீர்கள். நீங்கள் தமிழ்த்தாயின் உண்மை மக்கள் ஆனால் தமிழ்ச் செந்நீர் (இரத்தம்) உங்கள் உடலில் ஓடுமானால் "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்னும் இவ்வொரு சொல்லை மறப்பீர்களா? தெருவெல்லாம் இந்தி மொழி பரப்ப முந்தி வந்தீர்களோ? வெட்கம்! வெட்கம்!!

காட்டில் முன்பின் அறியாத இராமனோடு நட்புரிமை பூண்ட குகனென்னும் வேடனொருவன் "தோழமையென்றவர் சொல்லிய சொல்லொருசொல்லன்றோ!" என எண்ணி யெண்ணிச் செயலினும் நட்புரிமை காத்து நின்றானென்று காண்கின்றோம். நீங்கள் நாட்டுக்கு விழிப்பூட்டிய புலவன் சொல்லைப் பாட்டில் பாடிவிட்டு நீட்டிவிடுகிறீர்கள் கம்பி. என்னே உங்கள் அறிவுடைமை! நன்று!! நன்று!!!

இந்திமொழி கட்டாயபாடமாக வைக்கப்பட்டு மூலை முடுக்குகளெல்லாம் இந்திப் பள்ளிக்கூடம் வரப்போகின்றது. அதுகாலை அப்பள்ளிக்கூடங்களைப் புறக்கணித்து ஒதுக்க வேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் உண்மைத் தமிழ் மக்களாவீர்கள். உங்கள் பண்டைய தாய், முதல்நாள் போருக்குச்சென்று போராற்றிய தன் கணவன் மறுநாட் போரில் இறந்து பட்டனன். எனும் செய்தி அறிந்து, தனது ஒரே மகனை அழைத்து, "அப்பா; கண்மணி, உன் தந்தை போருக்குச்சென்று இறந்தார்; அவர் கான்முளையாகிய நீ இன்று போருக்குப் போ," என்று கூறி கையில் வேலெடுத்துக் கொடுத்து வெள்ளிய வேட்டியெடுத்து உடுத்தி தலையை வாரிச் சடைப்பின்னி மகிழ்ச்சியுடன் அனுப்பினள். மற்றொருதாய் தன் மகன் போருக்குச் சென்று புறமுதுகிட்டோடி இறந்தானென்று சிலர் கூற, ஆற்றாளாய், தன் மகன் புறமுதுகிட்டோடி மாண்டிருந்தானானால் அவனுக்குப் பால்கொடுத்த மார்பை அறுத்தெறிவேன் என்று வஞ்சினங்கூறி, மனங்கொதித் தெழுந்து, ஓடிப் போர்க்களம் புக்கு வாளொன் றெடுத்துப் பிணக்குவியல்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து இறுதியில் தன்மகன் உடலையும், தலையையும் கண்டெடுத்து, நேரில் போர்செய்து மார்பில் அம்பு தைத்து மாண்டு கிடந்ததைக் கண்டு, பெற்ற காலத்தினும் பெரிதுவந்தனள். இது கதையன்று. முற்காலத்தில் நிகழ்ந்த வரலாறு. புறநானூற்றில் இவ்வாறு காணப்படுகின்றது. அங்கே காண்க. அத்தாய் வழியில் வந்தவர்கள் நீங்களானால் இந்தி விருப்பப் பாடமாகின் யாருக்கும் கவலை

யில்லை; அது கட்டாயபாடமாகி மாணவர்கட்குப் பெருஞ்சுமையாக வருமானல், இந்தியெதிர்ப்புச் சங்கங்கள் நிறுவி, அச்சங்கங்கள் வாயிலாகத் தொண்டர் படை சேர்த்து எதிர்த்து விரட்டுங்கள்; சிறைச்சாலைக்குப் போகவும் அஞ்சாதீர்கள், தாய்மொழியை உங்கள் உயிரைக் கொடுத்தும் காக்க முந்தி நில்லுங்கள்! முந்தி நில்லுங்கள்!

"பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்."



உறுப்பியலும் உள்ள நிலையும்

திரு. K. கோவிந்தன், தமிழ்மாணவன், ஔவைத்தமிழகம்,
திருவத்திபுரம்

"மக்கள் தாமே ஆறறி வுயிரே" எனச் சிறப்பித்துக் கூறப்பட்ட மக்கள் அனைவரும் தங்கள் உருவங்களில் சில பல வேற்றுமை யுடையராகக் காணப்படுகின்றனர். அத்தகைய உருவ வேறுபாடுகளைக்கொண்டு, அவர் தம் இயற்கைக் குணங்களை அறியலாம். இதை நம் தமிழ்ப் பெரியார்கள் நன்கு ஆராய்ந்து ரேகை சாத்திரம், அங்க சாத்திரம் எனப் பலநூல்களை எழுதி வைத்துள்ளனர்.* ஒருவன் முகமே, அவன் உள்ள நிலையையும் வெளியாக்கும் என்பதை "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்—கடுத்தது காட்டும் முகம்", "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற கூற்றுக்களே வலியுறுத்தும். இனி, கை, விரல் முதலியவற்றின் நிலைகளைக் கொண்டும் ஒருவன் தன் குணங்களை அறியலாம் என நம் நாட்டார் கூறுவது போன்றே, மேனாட்டறிஞரும் கூறுவர். அன்னார் அதுபற்றிக் கூறுவனவற்றுள் சிலவற்றினை யீண்டுக் கூறுதும்.

பருமையும், அழுத்தமும், பலமும் உடைய கைகளை யுடையான் வினைசெய்தற்கண் சோர்வடையாத ஊக்கமுடைய

---

* பொன்செய் கொல்லன்தன் சொல்கேட்டு, கோவலனைக் கொன்று வருமாறு பணித்த அரசன் பணியைமேற்கொண்டு வந்த ஊர்காப்பாளர், கோவலன்தன் மாசற்ற முகப்பொலிவினையும், இலக்கண முறையே அமைந்த உறுப்பு நிலையினையும் நோக்கியவராய், பொற்கொல்லனைப் பார்த்து, "இலக்கண முறைமையின் இருந்தோ னீங்கிவன், கொலைப்படு மகனலன்" என்று கூறிய கூற்றினாலும் இதனை அறியலாம். (சிலப். 16: 162—163)

னையும், அங்ஙனமின்றி மெலிந்து அழுத்தமற்ற கைகளையுடை யான், ஊக்கங்குறைந்தவனும், தனக்கென வாழும் இயல்பின னையும் இருப்பள்.

நீண்டு அகன்ற கைகள், விரிந்த நோக்கம் (Broad view), பொருள்களைக் கடிதிற் காண்டலும், மறவாமையு முடைய நுண்மாண் நுழைபுலம், வினைசெய்தற்கண் மனவெழுச்சி, பல பொருளுள் நல்லன எண்ணித் துணிதல், தொடங்கிய தொழிலை விரைந்து செய்தல் என இவையுடைமையினை வெளியாக்கும். மற்று நீண்டு குறுகிய கைகள், பல காரியங்களைத் தொடங்கி, சிலவற்றில் வெற்றி பெறும் இயல்பு, தனக்கென வாழ்தல் என இவையுடைமையினை வெளியாக்கும்.

இனி, நீண்ட விரலுடையார், ஆழ்ந்து எண்ணும் இயல்பின ராவர். கணக்குப் பரிசோதகர், வழக்கறிஞர், மருத்துவர் முதலாயினர், இத்தகைய விரலுடையராய் இருப்பர். குறுகிய விரலுடையார், பொருள்களின்மேல் கண்ணோக்கமுடையராயும், நூற்பொருளைக் கடிதிற்கொண்டு, மறவாது, கற்றாங்கு நிற்ப வராயும், காரியங்களைக் கடிதிற் செய்யும் இயல்பினராயும் இருப்பர். உயர்ந்தோர் எனப்படுவார், இத்தகைய விரலு டையாரே யாவர்.

நீண்ட கணுக்கள் பொருந்திய விரல்களையுடையார், காரி யங்களில் விரைந்து செல்லாது, செல்லுதற்கு முன்னர், நன்கு ஆராய்ந்து, காலம் தாழ்ந்தே தொடங்குவர்; எனினும், தொடங் கிய வினைகளில் வெற்றியே பெறுவர். ஆயினும், சிற்சில காலங் களில், அளவிறந்து எண்ணிப் பார்ப்பதனால், அவ்வினை கைவரப் பெறுதும்போம். சில விரல்கள் வழவழப்பாகவும், அடிதடித்து நுனி சிறுத்தும் இருக்கும். அத்தகைய விரலுடையார், இயற் கையறிவு மிகவும் உடையராய், ஒரு பொருளாராய்ச்சியின் முடிந்த முடிபினை, எளிதில் பற்றக் கூடியவராயும், தக்க தின்ன தகாதன இன்னவென்றும், வெறுப்பன, விழைவன இன்ன என்றும், அறியும் ஆற்றலுடையவராயும் இருப்பர். அவர்கள் தொடக்கத்தே கூறும் பொருள், மிகத் தெளிவுடையதாகவும், பொருட் செறிவுடையதாகவும் இருக்கும்.

விரல்கள் நீண்டு, மென்மைத் தன்மையுடையவாகவும், பருத்தும் இருப்பின், அது தருக்கமுறையே பொருள்களை, ஆராயும் நெறிக்கண் விரைவுடைமையினைக் காட்டும். இத் தகைய விரலுடையார், உடனுக்குடன் தங்கள் ஆராய்ச்சிநெறிக் கண், ஆராய்ந்து பட்டபொருள், இயற்கையறிவின் பயனாக முதன் முதலிற் உண்டாய பொருள் (Calculative and Intuitive Assessments) ஆகிய இரண்டனுள் கோடதற்குரியபொருள் எது என்பதைத் துணிய மாட்டாராய் அல்லற்படுவர்.

பொதுவாக, பருத்த அடிப்பாகம் இயற்கை யறிவுடைமை யினையே காட்டும். அஃது அதிகமாகப் பருத்திருக்கும் விரலு டையார், ஆராயும் அறிவுடையராயும், பிறர்க்கென வாழாது, தனக்கென வாழும் இயல்புடையராயும்,இவை வன்மைய, இவை மென்மைய என்றுணரும் மெய்யுணர்வு (பரிச உணர்வு) மிக வுடையராயும் இருப்பர்.

நீளமும், சிறுமையும், நீண்ட கணுக்களும் பொருந்திய விரல்களுடையார், வியக்கத்தக்க ஆராய்ச்சி நிறைந்த அறிவும், பிறர் செய்கைகளில் கண்ணோக்கமும்,பிறர்பால் ஐயங்கொளலும் உடையராவர். அன்னார், "தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்—தீரா இடும்பை தரும்" என்பதற்கிணங்க இடுக்கண் அடைவர்.

இதுகாறும் விரல்களைப் பொதுவாக ஆராய்ந்தாம்; இனி அவைகளைத் தனித்தனி எடுத்தோதி ஆராய்வல்.

ஆள்காட்டும் விரல், தன்னளவில் மிக்கு, அஃதாவது நடு விரலையொப்ப வளர்ந்திருப்பின், அது, வீரமும், அறிவும் இல்லா திருப்பவும், அவையுடையான்போல நடந்துகொள்ளும் இயல் புடைமையினைக் காட்டும். இத்தகைய விரலுடையார், தங்க ளுக்குப் பலர் குற்றேவல் செய்ய விரும்புவதுடன், அத்தகைய குற்றினையோர்பால் எஞ்ஞான்றும் சினந்து கொண்டேயிருப்பர்.

மற்று அவ்விரல் நடுவிரலின் குறைந்து இருப்பின், அது, தன்னைத்தானே மதிக்கும் மதிப்புடைமையினைக் காட்டும்.

நடுவிரல், கனமுடையதாக இருப்பின், அஃது அதனையுடையான், ஆழ்ந்து ஆலோசிக்கும் இயல்பு, கூரிய அறிவு என இவைகளையுடையான் என்பதை வெளிப்படுக்கும்.

சிறு விரலை யடுத்த, மோதிர விரல், தன்னிலையின் மிக்கு, நடுவிரலிற்குத் தக வளர்ந்திருப்பின், அஃது எப்பொருட்கும் அஞ்சா முரட்டுத் தன்மையினை உணர்த்தும். அத்தகையார், வட்டாடும் தொழிலினை ஒழித்தல் வேண்டும். அங்ஙனமின்றி அது நடுவிரலைக் காட்டிலும் குறைந்து இருப்பின், அதனையுடையார், அழகிய ஓவியம் தீட்டும் ஆற்றலுடையராயும், புகழ், பொருள் விரும்பும் உள்ள முடையராயும் இருப்பர்.

இயற்கை நிலையில் உள்ள சிறுவிரலுடையான், தந்திர முடையனுயும், கூறும் பொருள் அரியவாயினும், கேட்பார்க்கு எளிய முறையில், அப்பொருள் பசுமரத்தறைந்த ஆணிபோல் அவர்தம் உள்ளத்தில் பதியுமாறு கூறும் ஆற்றலுடையனும் இருப்பன். அது மிக நீண்டு இருப்பின், நூற்பயிர்ச்சி மிகுதியினைக்காட்டும். மிகக் குறுகி இருப்பின், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாது கபடமற்று, தங்கள் கொள்கைகளைக் கூறுவதும், அதன்படி நடப்பதும் ஆய இக்குணத்தை வெளியாக்கும்.

ஒழுங்காகவும், பலமாகவும் இருந்து மேல் இணைப்புப்பின் புறம் வளையாமல் இருக்கும் பெருவிரலுடையார், பிடிவாதகுண முடையோர் ஆவர். இத்தகையார், சினந்துழி எதையும் செய்வர். அடிக்கடி மறுப்புக்களில் தலையிட்டு, எண்ணிப் பார்த்தலையும் விட்டு, தமக்கு நேர்ந்த இன்னல்களைப்போக்க மாட்டாராய் இருப்பதுடன், சிற்சில சமயங்களில் மிக நெருக்கடியான நிலைகளை அடைந்து தவிப்பதும் உண்டு.

மற்று, ஒழுங்காகவும், பலமாகவும் இருந்து சிறிது பின்புறமாக வளையும் விரலுடையார், பிடிவாத குணம் இலராய் இருப்பர். அது அதிகமாக வளையின், ஆராயும் இயல்பின்மையினைக் காட்டும். மேல் இணைப்பு மிகச் சிறியதாய் இருப்பின், அது இச்சாசக்தியின் மிகுதியினைக் காட்டும்.

சிறுத்து, நீண்டு, மெலிந்து, கூரியதாய் உள்ள விரல்களுடன், பின்புறம் வில்போல் வளையும் பெருவிரலுடையான் புனல் வழிப்படும் புணைபோல், மனம் சென்றாங்கு செல்பவனும், தடுமாறு முள்ளத்தனும் இருப்பன்.

சென்ற நூற்றாண்டினிறுதியில், இத்தாலிய நாட்டில் வதிந்த “லம்புரோஸோ” (Lumburoso) என்னும் பெரியார், குற்றவாளிகளென சிறைச்சாலையில் அடைபட்டவர்களை, அவர்களுடைய உறுப்பு நிலைகளைக்கொண்டு, அவர்கள் குற்றமுடையாரா அல்லரா என்பதை, ஆராயத் தொடங்கினர் என்பதும் ஈண்டு நோக்கற்பாலது.

இடைக்குளம் என்னும் வைப்புத்தலம்

ஆசிரியர் திரு. வை. சுந்தரேசவாண்டையார் அவர்கள்,

திருவையாறு.

சோழநாட்டு வைப்புத் தலங்களுள் இடைக்குளம் என்பதும் ஒன்றாகும். இது திருநாவுக்கரசரது அடைவு திருத்தாண்டகம் பத்தாம் திருப்பாட்டில்* வைத்து பாடப் பெற்றுள்ளது. இது யாண்டையதெனை ஆராய்வுழி, தஞ்சாவூர் சில்லா கும்பகோணந் தாலூகாவில் தென்குரங்காடு துறையாகிய ஆடுதுறை இரயில்வே நிலையத்திற்கு அண்மையில், இதுபொழுது மருத்துவக்குடி என்று வழங்கும் ஊரே, இத்தலம் என்பதை, அவ்வூரில் இன்றும் நிலைபேறுடைய ஒரு பழைய சிவன்கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ள பல கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. இக்கல்வெட்டுக்களில் இவ்வூர்ச் சிவபெருமானார் 'உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிடைக் குளமுடையார்' என்றே குறிக்கப் பெற்றுள்ளனர். எனவே, மேற்கூறிய மருத்துவக்குடி என்னும் ஊரே இவ்விடைக்குளம் என்னும் வைப்புத்தலம் என்பது வெள்ளிடை மலைபோல் விளங்குவதாகும்.

---

* நள்ளாறும் பழையாறுங் கோட்டாற் றேடு
 நலந்திகழும் நாலாறுந் திருவை யாறுந்
தெள்ளாறும் வளைகுளமுந் தளிக்கு ளமுநல்
 லிடைக்குளமுந் திருக்குளத்தோ டஞ்சைக் களம்
விள்ளாத நெடுங்களம் வேட்களம் நெல்லிக்கா
 கோலக்கா ஆனைக்கா வியன்கோ டிகா
கள்ளார்ந்த கொன்றையான் நின்ற ஆறுங்
 குளம்களங்கா எனஅனைத்துங் கூறு வோமே

சைவசித்தாந்த சமாசப்பதிப்பு. திருநாவுக்கரசர் தேவாரம், பக்கம் 451. செய்யுள் 10.

சில குறிப்புக்கள்.

உய்யக்கொண்டார் வளநாடு.

நம் சோழமண்டலத்தைக் கி. பி. 985 முதல் கி. பி. 1012 வரையில் ஈடும் எடுப்புமின்றி ஆண்ட பெருந்தகையாளனாகிய முதலாம் இராசராச மன்னன், இம்மண்டலத்தை ஒன்பது வள நாடுகளாகப் பிரித்து, அவைகளுக்குத் தனது இயற்பெயர்களை யும், விருதுப் பெயர்களையும், பெயர்களாக இட்டு வழங்கினன். அவ்வாறு பிரிக்கப்பட்ட வளநாடுகளுள் உய்யக் கொண்டார் வளநாடு என்பது ஒன்றாகும். இது காவிரிக்கும், அரிசிலாற் றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பாகும்.*

திரைமூர் நாடு.

மேற்குறித்த இவ்வள நாட்டின் உட்பிரிவுகளாகப் பல நாடுகள் இருந்தன. அவைகளுள் திரைமூர்நாடு என்பது ஒன்றாகும். இத்திரைமூர்நாடு, தென்கரைத் திரைமூர்நாடு என்றும் கல்வெட்டில் வழங்கி வருவது உண்டு. அதற்குக் காவிரிக்குத் தென்பாலுள்ள திரைமூர் நாடு என்பது பொருளாகும். நெற் குப்பை, சாத்தனூர், நடார், நல்லூர்ச்சேரி, திருக்குரங்காடு துறை, மகேந்திரமங்கலம், (மகேந்திரப்பள்ளி) ஆகிய இவைகள் இத்திரைமூர் நாட்டிலுள்ள சில ஊர்களென்று கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இவைகளுள் இன்றும் பல ஊர்கள் இப் பெயர்களோடு இத்திரைமூர் நாட்டில் நிலைபெற்று வருகின்றன.

இஃது இங்ஙனமாக, தஞ்சாவூர் சில்லா, பாபநாசந் தாலூகா விலுள்ள மருத்துவக்குடியே இவ்விடைக் குளமாகுமென்று ஆராய்ச்சியாளர் ஒருவர் 'கலைமகள்' என்னும் திங்கள் இதழில் (தொகுதி, 11—பகுதி—65, பக்கம் 416-இல்) குறித்துள் ளார். அவர் கொள்கைப்படி அம்மருத்துவக்குடி இன்னம்பர் நாட்டு மருத்துவக்குடியாகும்.

---

* S. I. Inscription Vol. II, Inscription No. 4.

இராசேந்திர சிங்கவளநாடு

முதலாம் இராச ராச மன்னன் காலத்தில் சோழமண்டலம் ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று முன்னர்க் குறித்தோம். அவைகளுள் இராசேந்திர சிங்கவளநாடு என்பது மற்றொன்றாகும். இது காவிரிக்கும், வெள்ளாற்றிற்கும் (நிவா) இடையிலுள்ள நிலப்பரப்பாகும். இம்மன்னன் காலம் முதல் அதிராசேந்திரன் காலம் முடிய இதற்கு இப் பெயரே வழங்கி வந்துள்ளது.

இன்னம்பர்நாடு

இவ்விராசேந்திர சிங்கவளநாட்டின் உட்பகுதிகளாக, மண்ணிநாடு, இன்னம்பர்நாடு, பொய்கைநாடு, என்பனவாகப் பலநாடுகள் இருந்தன. அவைகளுள் இன்னம்பர்நாடு என்பது ஒன்றாகும். ஆதனூர், அசூர், ஏர் (அ) மும்முடிச் சோழமங்கலம், கொட்டையூர், பழையவானவன்மாதேவி சதுர்ப்பேதி மங்கலம், ஸ்ரீபராந்தகச்சதுர்வேதி மங்கலம், கருப்பூர், மருத்துவக்குடி, ஆகிய இவைகள் இவ்வின்னம்பர் நாட்டிலுள்ள சில ஊர்களென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

ஆராய்ச்சியாளர் கொள்கைப்படி, இன்னம்பர்நாட்டு மருத்துவக்குடியில் இதுபொழுது கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்ற எக்கோயிலும் இல்லை. கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்ற அத்தகைய கோயில் அழிந்தொழிந்தது என்று கூறுவதற்கு யாதொரு சான்றும் இல்லை. உய்யக் கொண்டார் வளநாட்டிலுள்ள திரைமூர் நாட்டில் இடைக்குளம் என்னும் வைப்புத்தலம் உளது என்பது ஆராச்சியாளர்க்கும் ஒப்ப முடிந்ததாகும். ஆயினும் முதலாம் இராசராசன் காலத்திலிருந்த வளநாடுகளின் பாகுபாடுகளை நன்கு உணராக் குறையே ஆராய்ச்சியாளரின் திரிபுக்குக் காரணமாகும். அஃதனால் அவருடைய கொள்கையும் வலி உடைத்தாயில்லை.

திருக்குறளுதலிய நெறிமுறை

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13 மலர் 3 பக்கம் 97)

இவ்வாறெல்லாம் நல்லொழுக்கம்வாய்ந்து அரசியலில் நல்லறம் புரிவிக்கும் மாண்பினையுடைய அமைச்சருக்குத் துணைமையுடையவனே வினையாள் தூதன். இத்தூதுவர்களால் அரசனுக்குப் பெரிதும் பலநன்மை விளைவதால் இவர்களும் அரசனுக்கு ஓரங்கமாகக் கருதப்படுவர். இவர்கள் அன்பும், ஆன்ற குடிப்பிறப்பும், வேந்தவாம் பண்பு முடையராயிருத்தல் வேண்டும். இவர்களுக்கு அறிவும், பரவுநூலுணர்வும், தூய்மையும், வாய்மையும் இன்றியமையாதன. மாற்றரசரிடம் தாம் மேற்கொண்ட பொருளைப்பற்றிக் கூறுங்கால், தூதுவர் காலமும் களமும் தேர்ந்து வினைதெரிந்து சொல்லில் வழுவமையாது உரைக்கும் வன்மையராயும், மாற்றரசரவையில் அஞ்சாத்திண்மையும் துணிவுமுடையவர்களாயிருத்தல் வேண்டும். இத்தகைய வொழுக்கமுள்ள தூதுவர் அரசனுக்கு என்றும் தோன்றாத் துணையாகுவரென்பர் செந்நாப்போதர்.

போர் செய்து பொருளீட்டுதற்கு வெல்படை வேந்தனுக்குரியதென முன்னர்க் கூறிப் போந்தோம். இனி அப்படை அவ்வரசனுக்கு எவ்வாறு சிறப்பு தருத்தக்கதெனவும் அமர்க்களத்தே நின்று போர்செய்யும் படைவீரர்களது ஒழுக்கமும் யாதெனவும் நோக்குவாம். அஞ்சாது போரினில் நின்று வெல்லும் படை, அரசன் செல்வம் யாவற்றிலும் தலைசிறந்ததெதன, 'உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன், வெறுக்கையுளெல்லாந் தலை' எனும் குறட்பாவால் நன்கு தெரிகின்றது. இப்படை, போர்த் தொழிலைக் குறித்து ஆராய்வதற்குத் தகுந்த தலைவரை தலைமையாகக்கொண்டு, கொடுங் கூற்றம் கனன்று மேல்வரினும்

அஃதுடன் மனமொத்து எதிர் நிற்கும் ஆற்றலுடையதாய் இருத்தல் வேண்டும். அவ்வாறு படையினில் தலைவரில்லாது, பகைவருக்குப் பணிகிலா வுரனும் துணிவுறு வுளனுமொருங்கு சேர்ந்த வீரர்கள் அப்படை சாலவுடைத்தெனினும், அப்படை இல்லாததாகுமென நாயனர், 'நிலைமக்கள் சாலவுடைத்தெனினுந் தானை, தலைமக்களில் வழியில்' என்ற செந்தமிழ்க் குறளில் குறித்தது கருதற்பாற்று. எனவே இணையிலாச் சேனைக்கு தலைவ ரின்றியமையாததே. இச்சேனைத் தலைவர் படைக்குரிய 'மறமான மாண்ட வழிச்செலவு தேற்றமென' நால் வகை அரண்கள் அழிவுராதபடி காத்து, அவ்வரண்களாலே, பகை மன்னர்களால் - வகுக்கப்பட்டுத் தன்மேல் வந்த படையின் போரைத் தாங்கும் தன்மையினையுடையவரே யாவர். படையி லுள்ள வீரர்கள் தானைத்தலைவரது தோழமை பூண்டு நாட்டிற்கு நல்லூழியமியற்றும் மனத்தினராய் வீரமும், தீரமும், திறமு மொருங்கே வாய்ந்தவர்களாயிருத்தல் வேண்டும். அறப்போர் செய்யுங்காலை இவ்வீரர்கள் மாற்றரசர்களது படைவீரர்கள் வலியிழந்து நிற்குங்கால் அவரைத் தாக்கி வெல்லுதல் தகா தெனக் கருதி அவர்மேற் செல்லாது தங்கள் நல்லாண்மையும் அமர்க்களத்திலே காட்டி பெரும் புகழுடைவர். மற்றும் இவர்கள் போர்க்களத்திலும் தம்மறங்காட்டி போர்க்குறியின் காயமே புகழின் காயமென இகழுடம்பை நீத்து புகழுடம்பு பெற முயலுவர். இத்தகைய அமராபரணமணிந்து வீரர், தாம் போர்செய்யப்படாத நாளை வீணுளென எண்ணுவரென்பதை 'விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள், வைக்குந் தன்னளை யெடுத்து' என்ற குறள் விளக்கியதையுங் காண்க. அறப்போரியற்றும் வீரன், போர் தொடங்குமுன் மாற்றரசரது படைவீரர்களுக்குக் கூறும் சொல் இதுவென திருவள்ளுவர், 'பகைவர்காள்! என்னுடைய தலைவனெதிற் போரேற்றுநின்று, அவன்வேல்பட்டு வீழ்ந்ததினல் கன்னின்றவர் பலராவர் ஆகவே உடலோடு உயிரினையும் நீங்கள் விரும்புவீராகில் என்தலைவ னெதிர் போரேற்று நில்லன்மின்' என்ற கருத்துபட 'என்னை முன்னில்லன் மின்றெவ்வார் பலரென்னை, முன்னின்று கன்

னின்றவர் ' என்ற குறளை அருளியிருப்பதால், போர்செய்யும் பெரு வீரர்கள் அறப்போரிலக்கணம் நன்கு கற்று அதன்படி யொழுகும் மேதையராயும், நற்குணமும் கொள்கையும் நலமும் நிரம்பிய நெஞ்சுடையராயிருத்தல் வேண்டும் என்பது அப் படைவீரர்களது ஒழுக்கமெனப் பெற்றும்.

இதுகாறும் பகைவர் படையெடுப்புக் கிடமின்றி தன் நாட்டைக் காத்தாளும் அரசருக்குப் படைத்துணை இன்றி யமையாததென அறியப்பெற்றும். இனி அரசர்கள், பகை வர்கள் பயமின்றி நாட்டினில் வாழும் நற்குடிகள் நன்கு வாழு மாறு எத்தகைய ஒழுக்கமுறையான் நாட்டைச் சீர்திருத்தி ஆள வேண்டுமெனக் காண்குவம். 'நெல்லுமுயிரன்றே நீருமுயி ரன்றே, மன்னனுயிர்த்தே மலர்தலையுலகமென' மோசிகீரனர் கூறுதலான் நாடாளுகின்ற மன்னன் நாட்டிற்கு நால்வகை யரண் களமைத்து, நீர்வளம் நிலவளமாகிய இருவகை வளத்தினை, தன் னிடம் பொருந்திவாழும் குடிகளுக்கும் மற்றும் பிறநாடுகளி லிருந்தும் தன்னிடம் வந்து தங்கும் குடிகளுக்கும் பொருள் அளிக்கும் தன்மையாய் வளர்த்து, குடிவளம் பெருக்கிப் பசியும் பிணியும் பகையுமின்றி, வசியும் வளமும் சுரக்க அரும்பாடு பட்டொழுகல்வேண்டும்.

இதுகாறும் ஆயிழையாருடன்கூடி இன்புறும் இல்லறத்தின் மாண்பினையும், பின்னர் இல்லறத்தில் வழிப்படுவனவாய பொரு ளின்பங்களுள் இருப்பதாய பொருளின் சிறப்பினையும் அப் பொருளீட்டத்திற்குத் துணைக்காரணமாகிய அரச நீதியின் பெருமையினையும் எடுத்துக் காட்டினம். இனி இல்லறத்தே வழுவாது நற்குணமமைந்த கற்புடை மனைவியொடு இல்லறம் நடாத்தப் புக்கு யார் மாட்டும் அன்புகொண்டு விருந்தோம்பி நற்குண நற்செய்கையுடையராய் விலக்கியவற்றை விடுத்து ஒழுகி வருங்கால், கல்வி கேள்விகளால் அறிவுடையராகி பிறப் பினை யஞ்சி வீடுபேற்றினை விரும்பி, யானெனும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையும் அவற்றின் நிலையாமையும் நோக்கி நீத்தார்க்குரித்தாய அறத்தினை ஓர் சிறிது விளக்குவாம்.

'மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கி
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப'

என்பது நாற்கவிராச நம்பியாரது சூத்திரம். மற்றும் திருவள்ளுவ தேவரது ஒப்புயர்வற்ற நூலின் உரையாசிரியர் பரிமேலழகர் இவ்வறத்தினைப்பற்றிப் போற்றிக்கூறும் கருத்தினைக்கண்டு ஈண்டே தெளிக. 'தம்தம்............நிலைக்குமுரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும்; அறம் வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும், அறியாமை நீங்க நித்த அனித்தங்களது வேறுபாட்டுணர்வும் அழிதன் மாலையவாய இம்மை, மறுமை இன்பங்களினுவர்ப்பும் பிறவித் துன்பங்களுந் தோன்றும்; அவை தோன்ற, வீட்டின்கணாசையுண்டாம்; அஃதுண்டாகப் பிறவிக்குக் காரணமாகிய யோகமுயற்சி யுண்டாம்; அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றுகிய யானென்பதும் விடும்; ஆதலால், இவ்விரண்டு பற்றையும் முறையேயுவர்த்து விடுதலெனக் கொள்க.'

இனி, இல்லறத்தின் இன்ப வாழ்க்கை நீத்து துறவறமேற்றுக் கொள்ளுதற்குரிய காரணம் யாதென சற்று விசாரிப்போம். இவ்வுலகிலே ஆறறிவு பெற்று மக்களாய்ப் பிறந்த யாவரும் பன்னாளாகப் பொருள்களின்மேல் ஆசைகொண்டு அவைகளைத் தேடுங்காலத்தும் அவற்றினைப் பாதுகாக்குங் காலத்தும் அதன்பின்னர் இழக்க நேரிடுங்காலத்தும் அவைகளை விட்டுப் பிரிய மனமில்லாமல் வருத்தமடைகின்றனர். மற்றும் மனைவி மக்களாதியரால் பெறற்பாலதாகிய இன்பம் தினைத்துணை அளவேயாகித் துன்பம் பனைத்துணை யளவாகியும் அவர்களையும் விட்டுப்பிரிய மனமில்லாது வருந்துகின்றனர். தாய், தந்தை, உறவினர், நண்பர் முதலியோரிடத்துச் செலுத்தும் பாசஅன்பினால் பிணியப்பட்டு அவர்களிடமிருந்தும் பிரிய வருந்துகின்றனர். ஆகவே மக்களுக்கு அடைந்தாரைப் பிரிதலினாலும், அடைந்த பொருளை இழக்க நேரிடுதலினாலும் ஏனைய பிறவாற்றாலும் துன்பமுண்டாதல் இயல்பெனத் துணிந்

தோம். இத்தகைய துன்பத்தைத் தருகின்ற பொருள்களுக்கும் மக்களுக்கும் யாது தொடர்பெனத் துருவி நோக்குங்கால் அழிவில்லாத பொருளாகிய ஆன்மாவினை உறைவிடமாகக் கொண்ட உடம்பும், அவ்வுடம்பின் சம்பந்தத்தால் வந்த பொருள்களும் மெய்ப்பொருள்களல்ல எனவும், அறியாமையென்ற மயக்கங்கொண்டு அத்தகைய அழிவுடைப் பொருள்களின்மீது வைத்த பற்றுக்கோடில்லாத பற்றே துன்பத்திற்கு வித்தாகத் தோன்றி பல துன்பத்தை விளைவிக்குமெனவும் புலனாகும். இவ்வுண்மை புலனாகவே புறமாகிய பொருட் செல்வத்தின்கண்ணும் அகமாகிய உடம்பின்கண்ணும் உண்டான பற்று அறவே நீங்கத் தலைப்படும். 'பற்று அற்ற கண்ணே பிறப்பறுக்கும்' எனத் திருவள்ளுவர் கூறினமையான், உலகப் பற்றற்றபின் துன்பத்திற் குறைவிடமாகிய பிறப்பும் ஒழியும் என்பதும் பெற்றோம்.

'பிறப்பென்னும் பேதைமை நீங்கி சிறப்பென்னுஞ் செம்பொருள்' காணும் அவாவினையுடையார் பொருள்களிடத்தே வைக்கப்பெற்ற மனப்பற்றை அடியோடறுத்துப் பற்றுடன் பற்றிவரும் துன்பத்தையும் தம்மிடமே அணுகாதபடி தங்களைப் பேணிக்கொளல் வேண்டும். இவ்வாறு உலகப்பொருள்களின் மேலுண்டான ஒவ்வொரு பற்றையுமொழித்து வரவே, 'யாதேனின் நீங்கியாதனின் யானுதல், அதனின் அதனின் இலன்' என்றவாறு ஒவ்வொரு பொருள்பற்றித் தொடர்ந்துவந்த துன்ப நீக்கத்தால் அறிவு படிப்படியாய் முதிர்ச்சியடைந்து உரனுற்று விளங்கும். இங்ஙனம் அறிவமைதியான் பொருள்களின் மேலுற்ற பற்று நீக்கப்பெறின் உடலது பற்றையும் விட்டொழிக்கவேண்டுதல் விதியாகும். இதனை 'மற்றுந்தொடர்ப்பாடெவன்கொல் பிறப்பறுக்க, லுற்றார்க் குடம்பு மிகை' என்ற குறள் தெள்ளிதில் விளங்கவைக்கும். இவ்வாறே பொருளையும் உடலையும்பற்றிய பற்றுக்களை அறவே யொழித்து அறநெறியில் நிற்போர் மெய்யறிவு வாய்க்கப்பெறுவர். இத்தகையார் உலகப்பொருள்களினிடத்துள்ள பற்று முற்று மற்றுப் போகவே, என்றும் அழியாத பேரின்பம் தரத்தக்க பொருளை

பற்றுதற்கவாவுடையராய் 'பற்றுக பற்றற்றான் பற்றினைப் பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்றது போன்ற மெய்ம் மொழிகளை மெய்யுணர்ச்சி யானறியப் பெற்று, முழுமுதற் பொருளாய இறைவனுடன் இரண்டறக் கலந்து பிறவாபேரின்ப நிலையினை யடைய எய்துவர். இவ்வாறே முற்றத்துறந்தாரது பெருமையினை அளவிட்டுக் கூறலியலாததெனத் திருவள்ளுவர் 'துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத் திறந்தாரை யெண்ணிக் கொண்டற்று' எனக் கூறிப்போந்தது அறிக.

துறவற நெறியில் நிற்கும் பெரியார், ஐம்புலனடக்கல், அறிவுருவாய் நிற்றல் முதலிய செந்நெறியில் பயின்று, தொடர்பு பற்றாது மன்னுயிரோம்பி, அவ்வுயிர்களின்பால் அருளுடைய வராயு மிருப்பர். அருளாவது என்னையெனின், 'அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு' என்று தெய்வப் புலவர் கூறியவண்ணம், அஃது அன்பெனும் நற்றாயால் ஈன்றெடுக்கப்பட்டு, பொருள் என்னும் செவிலித் தாயால் வளர்க்கப்படும் ஓர் குழவி. யாதானும் ஓர் தொடர்பு பற்றிப் பிறரிடத்துச் செல்லும் செயல் அன்பாதலான், அச் செயல் முற்றுப்பெற்று முதிர்ந்து யாதொரு தொடர்பும் பற்றாதே பிறரிடத்துச் செல்வதாகிய செயல் அருளாதலால் அன்பீன் குழவி அருளென்றும், வறுமையுடையார் மேற் செல்வதாகிய அருளென்னுமன்பீன் குழவி அவ்வறுமையைக் களைதற்கேது வாகிய பொருளில்வழி வளராதுபற்றி, அத்தகைய வறுமை யைக் களையவல்லதாகிய அப்பொருளை செவிலித்தாயெனக் கூறிய நுணுக்கம் கூர்ந்து நோக்கற்பாலது. அன்பென்ற தாயை அறிந்தாலன்றி அருள் என்னும் குழவியை அறிதற் கூடாதாயின் அன்பைப்பற்றி இங்கு ஒரு சிறிது கூறுவாம். 'அன்பு' என்பது உள்ளத்திலெழும் ஓர்வகை யுணர்ச்சி. அஃது தன்னால் விரும்பப்பட்டதோர் பொருளிடத்தில் அதி தீவிரமாய்ச் செல்லும் உள்ள நெகிழ்ச்சி. இஃது உற்றார், பெற்றார், உறவினர், மக்கள் முதலிய தொடர்புடையார்மாட்டு செல்வதாகும். இத்தகைய அன்பே இல்லறத்தில் நின்றார்க்கு இம்மையிலடைய வேண்டிய இன்ப ஆக்கத்தையும் நற்புகழை யும் தந்துதவக் கூடியது. இத்தகைய அன்பின் குழவியாகிய அருளினைப்பற்றி, பெருநாவலர்,'அருளில்லார்க் கவ்வுலகமில்லை,' 'அல்லலருள்வார்க்கில்லை', 'அருளற்றாரற்றார்' என இலக்கண நெறி தழீஇய மிக எளிய சொற்களால் அழகுபெறக் கூறியது பாராட்டற்பாலது. (தொடரும்)

மணக்குடவரும் பரிமேலழகரும்

திரு. K. கோவிந்தன், தமிழ்மாணவன், ஔவைத்தமிழகம்,
திருவத்திபுரம்

உலகிடை வாழும் மக்கள் பலராலும் வழங்கப்பெற்று வரும் மொழிகள் பலவற்றுள்ளும் உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவது தமிழ்மொழி யொன்றேயாம் என்பதும், "திறமான புலமையெனில், வெளி நாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" எனக்கூறிய, அநுபவஞானியும், கவிவாணரும் ஆகிய பாரதியாரின் கூற்றுக்கிணங்க எந்நாட்டினரும், எம்மதத்தினரும், எம்மொழியினரும் "எல்லாப்பொருளும் இதன்பால் உள; இல்லாத எப்பொருளும் இல்லை" எனக்கூறி, போற்றும் பண்புடையதும், அமிழ்தினுமினிய நம் தெய்வச் செந்தமிழ் நூலில் தலைசிறந்து என்றும் நின்று நிலவுவதும், அகப்பொருள், புறப்பொருள் எனத் தமிழ்ச் சான்றோரால் தொகுத்துக் கூறப் படும் அறமுதற் பொருள்களைத் திறம்பெற உணர்த்துவதும் ஆயநூல் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறள் என்னும் பெருநூல் ஒன்றேயாம் என்பதும் பன் மொழிப் புலவர் பலர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும்.

ஒப்புயர்வற்ற இவ்வுயர்தனிச் செந்தமிழ் நூலினை இயற்றிய ஆசிரியர் வள்ளுவப் பெருந்தகையார், வடவேங்கடம் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழங்கிய உலக வழக்கு களையும், நூல் வழக்குகளையும் ஆராய்ந்த பின்னரே இந்நூலினை இயற்றினாராவர். அதற்கு, "நல்லாற்றாள் நாடியருள் ஆள்க; பல்லாற்றாற்றேரினும் அஃதே துணை" (குறள் 242) "யாமெய் யாக்கண்டவற்றுள் இல்லை, யெனைத்தொன்றும் வாய்மையின் அல்லபிற" (குறள் 300) "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந்தலை" (குறள் 322) என்ற ஆசிரியர் கூற்றுக்களே போதிய சான்றாதல் அறிக.

இனி, இச்செந்தமிழ் நூலிற்கு உரைகண்டார் பதின்மர் என்ப. அப்பதின்மர் பெயரையும்,

"தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர்,
பரிமேலழகர், பருதி,—திருமலையர்,
மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர், வள்ளுவனூற்
கெல்லையுரை யெழுதினோர்" —பழைய வெண்பா.

என்ற செய்யுளால் அறிக. அவ்வுரைகளுள், தமிழ்நாடு செய்த தவக்குறைவால், ஒழிந்தனபோக, எஞ்சிநின்றன, மணக்குடவர் பரிமேலழகர் என்பார் இயற்றிய உரைகள் இரண்டேயாம். இவ்விரண்டினுள், இச்செய்யுள் முறையே நோக்கின், மணக்குடவர் உரை இரண்டாவதாகவும், அழகர் உரை ஐந்தாவதாகவும் விளங்குகின்றன. இவற்றுள், ஒப்புயர்வற்று, ஆயுந்தோறும் இன்பம் தந்து ஆசிரியர் கருத்தைத் தெள்ளிதிற் விள்ளூரச் செய்வது தெள்ளு பரிமேலழகன் செய்த உரை ஒன்றுமேயாம். அழகர், தான் உரை கூறுதற்கு முன்னர், தமக்கு முன்னிருந்த உரைகளைப் பன்முறையும் ஊன்றிப் படித்து உண்மைப் பொருள் கண்டு உரை கூறியிருப்பது போன்றேயன்றோ? அவர்பின் வதிந்த ஆசிரியர்களும் உரை வகுத்திருப்பர்? அவ்வழி வகுத்த அவர்தம் உரைகள், அழகர் உரையினும் சிறந்து விளங்கும் என்பதில் எட்டுணையும் ஐயமின்றன்றே? எனினும், நாம் செய்த தவக்குறைவால், நம்மொழி செய்த தவக் குறைவால், நம் நாடு செய்த தவக் குறைவால், அவைகள் கிட்டாவாயின. கழிந்தன உள்ளி கருத்தழிவதால் யாது பயன். "Let the dead past bury its dead" என்பர் ஆங்கிலப் புலவரும் யாம் செய்தது எற்றென்று இரங்குவ செய்யாது, மற்றன்ன செய்யாமையன்றோ நாம் செயற்பாலன ஆதலின், இறையருளாற் கிட்டிய இவ்விரு உரைகளையேனும் போற்றுமுகத்தால் அவற்றைச் சிறிது ஆராய்வல் :

பாயிரம், பொதுவும் சிறப்பும் என இரண்டாம். நூல், நூலாசிரியன், நுவலும்திறன், மாணவன், கொள்ளுந்திறன்

என்ற ஐந்தினையும் தெரிவிப்பது பொதுப்பாயிரமாம். ஆக்கி யோன், அதன் முதனூல், நூல்வழங்கும் எல்லை, இவை கேட்டற் பின்னர் இதுகேட்கற் பாற்று என்னும் யாப்பு, கேட்போர், நுதலிய பொருள், அந்நூல் கேட்டலால் உண்டாம் பயன் என்ற எட்டினையும் உணர்த்துவது சிறப்புப் பாயிரமாம்.

கூறப்பட்ட இவை இரண்டனுள், ஒன்றையேனும், பாயி ரம் எனத் தலைப்பெயர்பெற்ற, கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கனுள் ஒன்றேனும் கூறிற்றில்லை ஆதலானும், பரிமேலழகரும், தாம் கூறிய உரைப்பாயிர இறுதியில், 'இல்லறத்தின் இலக்கணங்கூறி, அதனை (இல்லறத்தை) முதற்கண் கூறுவான் தொடங்கி, எடுத் துக்கொண்ட இலக்கிய மினிது முடிதற்பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார். என்று கடவுள் வாழ்த்து அன்றே கூறினர் ஆதலானும், மணக்குடவரும் பாயிரம் என்பதுபற்றி ஒன்றும் கூறினரில்லை யாதலானும், திருக்குறளுக்குப் பாயிரம் இப்பொழுது கூறப்படும் கடவுள் வாழ்த்து முதலியன பாயிரம் அன்று எனஎன்பதும் "ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங் குறளும் பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்" என்று கூறியதினால் பாயிரம் என ஒன்று இருந்தது என்பதும், ஆயிரத்து முன் னூற்று முப்பதில் கடவுள் வாழ்த்து முதலியனவும் அடங்கி விட்டமையின், "குறளோடு பாயிரமும்" என ஒடுகொடுத்துக் கூறினமையின் பாயிரம் என்பது குறளின் வேறு என்பதும் அது இப்பொழுது மறைந்துவிட்டது என்பதும் பெறப்பட்டது. இனி, இச்செய்யுளைப் பாடினார் அழகர் காலத்திற்குப் பிறபட்ட வர் எனக் கொள்ளின், அழகர் கூறிய உரைப்பாயிரத்தையே அவர் பாயிரம் எனக் கொண்டார் எனக் கொள்ளினும் இழுக் கில்லை யென்க.

பாயிரம் இல்லா நூலுக்கும், உரையெழுதுவார் பாயிரம் எழுதி உரையெழுதுதல் வேண்டுமாதலின், அழகர் உரைப் பாயிரம் வரைவாராயினர். சிறப்பு வகையால், கடவுளெனக் கருதப்படும் முனிவரும், பிறரும் பார்ப்பாரும், ஆனிரையும்,

மழையும், வேந்தரும், உலகும் என்ற இவரை வாழ்த்துதலும் கடவுள் வாழ்த்தாமாதலின், நீத்தார் பெருமையும், வான் சிறப்பும், அறன் வலியுறுத்தலும் கடவுள் வாழ்த்தாயிற்று என்க.

கடவுள் வாழ்த்து.

கடவுள் வாழ்த்து என்பதற்கு மணக்குடவர், "கடவுளை வாழ்த்துதல்" என்று சாதாரணமாகப் பொருள் கூறினர். அழகியார், சத்துவ முதலிய மூன்று குணங்களுக்கும் அதிகாரிகள் மால் முதலிய மூவராதலானும், அம்மூன்று குணங்கள் ஏதுவாக அறமுதற் பொருள்கள் உளவாமாதலானும், அம் மூன்று பொருளுக்கும், அம்மூவரும் உரிமையுடையராதலானும், அம்மூன்று பொருளையும் கூறுவார். அம்மூவரையும் வணங்குதல் முறையாகலின், இஃது ஏற்புடைக் கடவுளை வாழ்த்துதல் என்று விளக்க உரை வகுத்தார்.

இனி, முதற்கடவுளது உண்மை கூறும் "அகரமுதல்" என்று தொடங்கும் குறளை முதலிலும், நூலறிவான் கடவுளுண்மை கண்டான் அவனைத் தொழுதல் வேண்டுமாதலின் அதனைக் கூறும், "கற்றதனு லாயபயன்" என்னும் குறளை அதன் பின்னும், அவ்வாறு தொழுதான் வீடடைவான் ஆதலின், அதனைக் கூறும் "மலர்மிசை யேகினன்" என்னும் குறளை அதன் பின்னும், அவ்வாறு வீடடைதலாவது, "அவலக் கவலைக் கையாற்றினீங்கிப் புண்ணிய பாவமென்னும் இரண்டினையும் சாராமல், சாதலும் பிறத்தலுமில்லாததொரு தன்மையெய்துதலாகலான், மனத்துக்கண் மாசிலனுதல் அறம் என்பதற்கேற்ப, முதற்கண் மனக்கவலையறின், வருத்தம் ஒன்றும் இல்லையாதலின் அது கெடுதலைக் கூறும், "தனக்குவமை யில்லாதான்" என்னும் குறளை அதன் பின்னும், மனக் கவலையறின், அறத்தின் பிறவாய, காமமும், பொருளும் பற்றிவரும் அவலம் கெடுமாதலின், அது கெடுதலைக் கூறும் "அறவாழி அந்தணன்" என்னும் குறளை அதன்பின்னும், புண்ணியத்திடத்து விருப்பும், பாவத்திடத்து வெறுப்பும் நீங்கினலன்றி அவற்றை விடமுடியாதாகலான், அது செய்தலைக்கூறும், "வேண்டுதல், வேண்டாமை"

யென்னும் குறளை அதன் பின்னும், அப்புண்ணிய பாவங்கள் காரணமாக வரும் நல்வினை, தீவினைகளுள் நல்வினையும் பிறத்தற் கேதுவாமாகலின், அவ்விரண்டினையும் நீக்க வேண்டுமாகலின், அவை கெடுதலைக் கூறும் "இருள்சேர் இருவினையும்" என்னும் குறளை அதன் பின்னும், இம்முறை இவையனைத்தினையும் கெடுத்தான், புலனடக்கி வீடுபெறுவான் ஆதலின் அதனைக் கூறும் "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்னும் குறளை அதன் பின்னும் மேற் கூறியதனையே வற்புறுத்து முகத்தால் அவ்வாறு செய்தார் வீடடைவர் என்றும், செய்யாதார், பிறந்துபிறந்து உழல்வர் என்றும் கூறும் "பிறவிப் பெருங்கடல்" என்னும் குறளை அதன் பின்னும், இத்தகைய பேற்றினைத்தரும் இறைவனால் கொடுத்த இவ்வுடலால் அவனுக்குத் தொண்டு செய்தல் வேண்டுமாதலின் அதனைக் கூறும் "கோளில் பொறி" என்னும் குறளை அதன் பின்னும் வைத்து மணக்குடவர் உரை கூறியுள்ள முறையும், முதல் இரண்டு குறள்களையும் இக்காரணம்பற்றி இம்முறையே வைத்து, இறைவனை மனத்தால் நினைத்தும், வாக்கால் அவன் புகழைக் கூறியும், மெய்யால் அவன் கூறிய நெறி வழிநின்றும் வழிபடுவார் வீடடைவர் ஆதலின் அவைகளை முறையே கூறும், "மலர்மிசை யேகினான்," "வேண்டுதல் வேண்டாமை," "இருள்சேர் இருவினை," "பொறிவாயில் ஐந்து" என்னும் குறள்களை முறையே ஒன்றன்பின் ஒன்று வைத்தும், அவ்வாறு செய்யார் படும் இன்னல்களை முறையே கூறும், "தனக்குவமை யில்லாதான்," "அறவாழி யந்தணன்," "கோளில் பொறி" என்னும் குறள்களை அவைகளின் பின் முறையே வைத்தும், அவ்விருவரடையும் பயன்களையும் வற்புறுத்துமுகத்தால் ஒருங்கே தொகுத்துக் கூறும் "பிறவிப் பெருங்கடல்" என்னும் குறளை இறுதியாகவும் வைத்துப் பரிமேலழகர் உரை கூறியுள்ள முறையும், மிகவும் போற்றத் தக்கதேயாம்.

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு

மணக்குடவர் உரை:—எழுத்துக்களெல்லாம் அகரமாகிய

எழுத்தைத் தமக்கு முலாக உடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகி பகவனைத் தனக்கு முதலாகவுடைத்து என்றவாறு.

பரிமேலழகர் உரை:—எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலையுடையன; அதுபோல உலகம் ஆதிபகவனாகிய முதலையுடைத்து என்றவாறு.

ஈண்டு மணக்குடவர், "அகர முதல", "பகவன் முதற்று" என்ற இரண்டினையும் வேற்றுமைத் தொகையாகக்கொண்டு பொருள் கூறியுள்ளார். பரிமேழகர் பண்புத்தொகை யெனக் கொண்டு பொருள் கூறியுள்ளார். அழகர் கருத்துப்படி அகரமும், பகவனும், விசேடணமாகவும், முதல் என்பது விசேடியமாகவும் பெறப்படுகின்றன. விசேடணம் விசேடியத்தை விசேடியத்தாலாவது, அவ்விசேடகுணமில்லாத இனப்பொருளினீக்கி அவ் விசேடகுணமுடையதனை வரைந்து சுட்டுதலாம். வெண்டாமரை யென்பதில், வெண்மை விசேடனம், தாமரை விசேடியம்; வெண்மை தாமரையை விசேடியத்தாலாவது, பல நிறத்தாமரையினின்றும் வெண்மை பண்புடையதனை வேறு பிரித்துக்காட்டலாம். அதேபோன்று, அகரமாகிய முதல் எனவும், ஆதி பகவனாகிய முதலெனவும் பொருள் கூறின் பல முதலினின்றும், அகரமாகிய முதலையும், ஆதிபகவனாகிய முதலையும் வேறு பிரித்துக் காட்டுதல் பெறப்பட்டது. படவே பலமுதலுண்மை பெறப்பட்டு, இறைவன் தன் முதல்வனும் தன்மைக்கு, அகரம் தன்மைக்கும் மாசுண்டான் ஆதலானுல் அவ்வாறு கூறுதல் ஆசிரியர் வள்ளுவனார்க்கும் கருத்தன்றுமாதலானும் முதலாம் தன்மைக்கும் மாசுண்டார் ஆதலாலும், அழகர் உரை பொருத்த முடைத்தன்றும் என்று கூறுவாறும் உளராலோ எனின்; அவர் அறியார் என்னை, அவ் விசேடனங்களைச் செந்தாமரை போன்ற பிறிதின் இயைபுநீக்கிய விசேடணங்களாகக் கோடாது, செஞ்ஞாயிறு, வெண்திங்கள், போன்ற இயைபின்மை நீக்கிய விசேடணங்களாகக் கொள்ளின்பொருத்தமின்றுதல் யாண்டையதென்க†.

† இக்குறிப்பு கூறினார் திரு. R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள், தமிழாசிரியர், அரசர்கல்லூரி, ஐயாறு.]

இனி, காணப்பட்ட பொருளைக் கொண்டு, காணப்படாத பொருளின் உண்மையை விளக்கவேண்டுதல் மரபாதலின் காணப்பட்ட உலகைக்கொண்டு, காணப்படாத கடவுளின் உண்மையைக் கூறுவார், "பகவன் முதற்றே உலகு" என உலகின் மேலேற்றிக் கூறினாராயினும் அவ்வாறு கூறின், உலகம் பகவனை முதல்வனாகக் கொண்டமையான் அவற்கு முதன்மை உண்டாயிற்று, இன்றேல் இன்றும் என்றும் பொருள்படுதல் நோக்கி, "அவ்வாறு கூறினாராயினும், உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக்கொள்க" என்று பரிமேலழகர் கூறிய உரைத்திட்பம் யாவராலும் போற்றற்குரிய ஒன்றேயாம்.

2. "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"

இக்குறளின் விசேட வுரையில்,

எழுத்திறியத் தீருமிழி தகைமை; தீர்ந்தான்
மொழித் திறத்தில் முட்டறுப்பானாகும்—மொழித்திறத்தில்,
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்ற செய்யுளை உட்கொண்டவராய் "சொல்லினானே பொருள் அறியப்படு மாதலான், அதனைக்கற்கவே மெய்யுணர்ந்து வீடு பெறலாகும்; மீண்டும் வணக்கம் கூறியது எற்றுக்கென்றாற்கு, இஃது அதனாற் பயனிது என்பதூஉம் வேறு வேறு பயனில்லை யென்பதூஉம் கூறிற்று" என்று மணக்குடவர் கூறியதனை, பரிமேலழகர், "ஆகம அறிவிற்குப்பயன், அவன்தாளைத் தொழுது பிறவியறுத்தலென்பது இதனாற் கூறப்பட்டது" எனச் சுருங்கிய வாய்பாட்டாற் கூறினார்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்"

இக்குறளில் மலர் என்பதற்கு, மலர் எனப் பொதுப்படக் கூறிய அதனான், மலர் எல்லாவற்றினும் சிறந்ததாகிய, உள்ளக் கமலம் என்றும், நிலம் என்பதற்கும் அவ்வாறே பொதுப்படக் கூறிய அதனான் எல்லாநிலத்தினும் சிறந்ததாகிய வீட்டுலகம்

என்றும் பரிமேலழகர் பொருள் கூறியது எல்லாரானும் போற்றற்குரியதேயாம். திருக்கோவையாரின் முதல் செய்யுளில், கோங்கம் என்பதற்கு அடை கொடாதது கொண்டு பேராசியர் கூறிய உரையும் ஈண்டு நோக்கற்பாலது. பரிமேலழகர், இவ்வாறு பொருள் கொண்டதை அறியமாட்டாது, "அவர்மிசைநிலம் எனமாற்றி மேலுலகம் எனப்பொருள்கொண்டார்" என்று பின் வந்த தண்டபாணி தேசிகர் மயங்குவாராயினர். உள்ளத்தை மலர் எனக்கூறுதலை, "தாளென்னும் புண்டரீகம் அகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினுன்" (பெரி. பெருமிழலை, 3) என்று வருதலானும் அறிக. இனி, இதற்கு மணக்குடவர், நிலம் எனப் பொதுப்படக்கூறிய அதனுன் இவ் உலகின்கண்ணும் மேலுலகின்கண்ணும் என்று கொள்ளப்படும் என்று பொருள்கொள்வர். "ஏகினுன்" என்று இறந்தகால வாய்பாட்டாற் கூறியது கொண்டு "அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தில் அவர்நினைந்த வடிவொடு விரைந்து சேரலின், ஏகினுன் என இறந்த காலத்தாற் கூறினுர்" என்று உரைவகுத்த திட்பம் அறிஞர் அனைவரானும் போற்றற்குரியதேயாம்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்
யாண்டும் இடும்பை யிலர்"

என்பது மணக்குடவர் கொண்ட பாடம்.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

என்பது பரிமேலழகர் கொண்ட பாடம். இப்பாட பேதத்தால் பொருட் சிதைவு ஒன்றுமில்லை யெனினும், "சேர்ந்தார் ....நீடுவாழ்வார்" (குறள், 3), "நெறிநின்ருர் நீடுவாழ்வார்" (குறள், 6) "அடிசேர்ந்தார்நீந்துவர் அடிசேராதார் நீந்தார்" (10) "வணங்காத்தலை குணமிலவே" (9) என்று அவ்வத் தொடராகவே, நான்கு குறள்களைக் கூறியுள்ளாராதலானும், "தாள் சேர்ந்தார்க் கல்லால்........மாற்றலரிது" (குறள் 7) "தாள் சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தலரிது" (8) என, நான்காம் வேற்றுமை உருபு விரியக்கூறும் இரண்டிடங்களிலும், "சேர்ந்தார்க் கல்லால்" "சேர்ந்தார்க் கல்லால்" என வற்

புறத்துதற் பொருட்டு " அல்லால் " என்றதை யுடன் சேர்த்துக் கூறியவர் ஈண்டு அவ்வாறு கூறாமையானும், மணக்குடவர் கொண்டபாடமே கொள்ளத்தக்க பாடம் என்று கருதுகின்றேன்; ஆன்றோர்கள் ஆராய்ந்து உண்மை துணிவார்களாக.

இனி, "வேண்டுதல் வேண்டாமை" என்பதற்கு "இன்பமும், வெகுளியும் இல்லாதான்" என்று பொருள்கூறி, விளக்க உரையில், பொருளும் காமமும் ஆகாவென்றதற்கு "வேண்டுதல் வேண்டாமையிலான் "என்று பெயரிட்டார்" என்று கூறினார் மணக்குடவர். உரையிற்கூறிய இன்பமும்" விசேடவுரையிற் கூறிய பொருளும், காமமும் ஒருவனால் விழையப்படுதலின் வேண்டுதல் என்பதற்கு இன்பம் எனக்கூறியதாற் குற்றமில்லை. இன்பத்திற்கு மறுதலை துன்பம் ஆதலானும், துன்பம் ஒருவனால் இயற்கையாகவே வெறுக்கப்படுகின்றதாதலானும், யாவராலும் வெறுக்கத் தக்கதேயாயினும், இயல்பாக வெகுளியை வெறுப்பார் யாவரும் இன்மையானும், வேண்டாமை யென்பதற் " வெகுளி " யெனப்பொருள் கூறியது குற்ற முடைத்தாம் என்க. இது நோக்கியே பரிமேலழகர் " ஒரு பொருளையும் விழைதலும் வெறுத்தலும் இல்லாதவன்" என்று ஒருபொருளையும் குறிக்காது செல்வராயினர்.

5. "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர்·புகழ்புரிந்தார் மாட்டு"

இதற்கு இருவர் கூறும் உரையும் ஒன்றேயாம். மணக்குடவர் உரையில் "........தலைவனது ஆகிய மெய்ப்பொருள் சேர்ந்த புகழ்ச்சிச் சொற்களைப் பொருந்தினார் மாட்டு" என்று ஒரு தொடர் உள்ளது. அதில் ஆகிய என்ற சொல் ஏடெழுதினோரால் தவராகச் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(தொடரும்)

உ

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. துப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 6. பக்கம் 239.)

இயல் உ.—காட்சி க.

உறுப்பினர் :—ஆதன் ; ஔவையார்.

இடம் :—தகடூர் நெடுவழி.

பொழுது :—நடுப்பகல்.

[ஆதன் துணையால் ஔவையார் தகடூரை அறிந்து செல்லுதல்.]

ஆதன் :—(நெடுவழியின் ஒருபுறத்திலிருந்துகொண்டு) அடடா ! என்ன அருள் !! கொடையாளிகள் என்று பெயர் தாங்கி இவ்வுலகில் எத்துணையோ செல்வர்கள் உள்ளார்கள். பாரதம் நடந்த நாளில்கூட 'கன்னன்' என ஒரு வள்ளல் இருந்தானும் அவன் என்னென்னவோவெல்லாம் தாராளமாகத் தந்தானும். அவற்றை நாம் நேரிலாகண்டோம்: ஏதோ நூல்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு நம் கண்களுக்கு முன்னே, என்ன அன்பு ; என்ன மகிழ்ச்சியோடு கூறுகின்றசொல் ; அடடா ! என்னைக் கண்டதும் எவ்வளவோ விருப்பத்தோடு என் பெயரைச் சொல்லி அழைத்து, எங்களூர்ச் செய்திகளையெல்லாம் கேட்டுக் கொண்டார். என்னமோ, இப்படிப்பட்ட இடத்தில் எனக்கும் ஒரு நட்பு ஏற்பட்டது ; ஏழைகளிடம் அவருக்கு

என்ன கருணை தெரியுமா? சில நாள், நான் அவர் அடிகளில் தொண்டுபுரிந்து கொண்டிருப்பதற்குள், காலையில் ஒருவன் வருவான்: என்னென்னவோவெல்லாம் சொல்லி அழுகாகப் படுவான்: தூக்கமுடியாதபடி காசும், பொருளும், ஆடையும் பெற்றுச்செல்வான். அதே ஆள் சில நாட்களுக்குள் இன்னும் எவனையோ அழைத்துவந்து எதெதையோச் சொல்லி இன்னும் ஏதாவது பெற்றுப் போவான் ஐயா! முன்னர் வந்தவன் தானே என்ற கேள்வி கேட்கலாமா? அவன்தான் வரக்கூடாது என்ற நியதிதான் உண்டா? (ஔவையார் நெருங்க—உற்றுப் பார்த்தல்.)

ஔவையார் :—என் அப்பா! நீ எந்தவூர்? தகடூர் உனக்குத் தெரியுமா?

ஆதன் :—என்ன கிழவி? நான் எந்தவூராக இருந்தால்தான் உனக்கென்ன? தகடூரைப் பற்றிய கேள்வி உனக்கு எதற்கு? தகடூர் செல்லும்வழி தெரியாமலா இவ்வழியே வந்தாய்?

ஔவையார் :—இல்லையப்பா? நான் கேட்டவற்றில் என்ன பிழைகள் உள்ளன? தகடூர்க்குப் போகவேண்டும் என்று நெடுந்தொலைவில்இருந்து வருகிறேன். மிகவும் அலுத்துப் போயிருக்கிறேன். ஊர் கிட்டமானால், தட்டித் தடவி எப்படியாவது போய்ச்சேர்ந்து அதியமானைக் காணுவேன். அதியமான்—கற்றவன்—பெரிய வீரன்—செல்வமுள்ளவன் — அண்டினவரைக் காப்பவன்—சிறந்த கொடை வள்ளல் என்றெல்லாம் கேள்விப்பட்டுள்ளேன். இதற்காகத்தான் உன்னைக் கேட்டேன்.

ஆதன் :—ஓஃஓ! எனக்குத் தெரியுமே கிழவி நீ தகடூர் போகவேண்டும் என்ற போதே. எங்கள் மன்னர் அதியமான் பெருமானை அடைந்து ஏதாவது காசு பறிக்க நீ போகிறாய்.

ஔவையார் :—அடா மகனே, அப்படிச் சொல்லாதே. நீ நன்கு கல்லாதவனாகக் காணப்படுகிறாய். உனது வேந்தனின் சிறப்பை உள்ளவாறு நீ உணராதவன் ஆகிறாய். உன் மன்னன், சிறந்த வள்ளன்மை உடையவனாதலால், கற்றவர்கள் அவனைக் கருதி நாளும் வருவார்கள். அவ்வாறு அவர்கள் அவனையடைந்து பொருள் முதலியனபெற்றுச் செல்வதால் அவன் செல்வம்

குறைந்து வறுமையாளனாக ஒருநாளும் மாறமாட்டான். இன்னும், உனது அதியமான், புலவர்களிடம் மிகுந்த அன்புள்ளவன் ஆவன். அதற்குச் சான்றாக வேறு எதுவும் தேவையில்லை. 'நான் இங்கு இருக்கிறேன்' என்ற செய்தி அவன் காதுகளுக்கு எட்டினாலே போதும்: என்னை முன்னே பார்த்தறியாதவனாக இருப்பினும், நேரே இடையீடின்றி இங்கு வருவான் என்பது திண்ணம்.

ஆதன் :—அப்படியானால், ஏன் கிழவி, உனக்கு அறிமுக மில்லாதவர்களையும் நேரே அழைக்கக் கூடிய திறமையுள்ள நீ, ஏன் இவ்வாறெல்லாம் கால் கடுக்க, கண் இருள, மெய் சோர நடந்து வரவேண்டும்?

ஔவையார் :—உலகியல் உணராதவன் நீ. பொது வாழ்வின் நன்மைக்குப் பாடுபடுபவர்களை ஒருவர் தம் நலத்துக்காகத் தொந்தரவு தருதல் முறையாகாது. இன்னும் எம்போன்ற புலவர்கள் 'இன்று இங்கும், நாளை அங்கும்' என ஓரிடத்தும் நிலைத்திராது பல நாடுகட்குச் சென்று ஆங்காங்குள்ள மக்கள் அறிவும், நலனும் பெற்று மகிழப் பாடுபடுபவர்களாதலால், மன்னர்க்கு ஆட்போக்கி அவர்கள் வரும் வரையில் காத்துக் கொண்டு ஓரிடத்திலேயே தங்கி இருக்கவும் இயலாது.

ஆதன் :—(சற்று அச்சம் கொண்டவனாய்) ஆமாம்! தாங்கள் 'எம்—போன்ற புலவர்கள்' என்றீர்களே, தாங்கள் யாராக இருக்கலாம்.

ஔவையார் :—உனக்கு என் பெயர் தெரியவேண்டுமா? என்னை 'ஔவை' என்பார்கள்.

ஆதன் :—அம்மையே, என்னைக் காப்பாற்றவேண்டும் (அடிகளில் வணங்குதல்) நான் யாரோ, வழிப்போக்குக் கிழவி, என அறியாமல் பலவாறு கூறிவிட்டேனே! என்னசெய்வேன், என் தாயே! என்னைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்.

ஔவையார் :—அப்பா! அஞ்சாதே, எழுந்திரு. நீ யாவன்?

ஆதன் :—அருள்மிக்க தாயே! நான் அதியமான் வேந்தரின் அடிமை; அவர்தம் ஊழியன்; ஏழை. அம்மே! எமது இறைவர் தங்களது பெயரையும், புகழையும் அடிக்கடிச் சொல்லிக்கொண்டே இருப்பார். என் குற்றத்தை நீக்கி, என்னைக் காப்பாற்றவேண்டும்.

ஔவையார் :—மகனே! அச்சம் தவிர்க: ஒருவர் அறியாமற் செய்த பிழையைச் சிறிதும் பொருட் படுத்தார் எம் போன்றவர். எத்தனையோ செல்வர்களும், கற்றவர்களும், தாம் செய்வன தீமை யென்பதை நன்கு உணரினும் அவற்றைத் தவிராது செய்துத் தாம் தீப்பழியைச் தேடிக் கொள்ளுகின்றனரே, அவை தாம் பொறுத்தற்கு இயலாதனவே யன்றி நீ கூறியன பிழைபின்பாற் படாதனவாகும். இப்பொழுது விரைவில் எனக்குக் களைப்பு மேலிடும் போலிருக்கிறது. அதற்குள் தகடூரை நான் அடைந்தால் நலமெனக் கருதுகின்றேன். அஃது இன்னும் எவ்வளவு தொலைவில் உள்ளது?

ஆதன் :—தாயே! என்னை மன்னித்தருள்க. தாங்கள் இப்படி நிழலில் இருக்கவேண்டும். களைப்புடன் செல்லுதல் ஆகாது. தகடூர் சற்றுத்தொலைவில் இருக்கிறது. இன்னும் இரண்டு நாழிகை நடக்கவேண்டும். எளியன் அன்புடன் தருகின்ற இச்சிறியவுணவை மனமுவக்க ஏற்றுத்தங்களது களைப்பைச் சிறிது தணித்துக் கொள்ள இறைஞ்சுகின்றேன். இதோ நீரும் உள்ளது. இவற்றை ஏற்றுக் கொள்க (அவலும் நீரும் ஔவை, ஆதனிடம் பெற்றுண்டல்)

ஔவையார் :—மகனே! நீ நெடிது வாழ்க! அதியனின் ஊழியன் என்பதை இச்சிறு செயலே எனக்கு நன்கு உணர்த்திற்று. தலைவனைப் போலவே நீயும் உன் அளவுக்குத் தக்கவாறு கொடைத்திறன் கொண்டுள்ளமையை நான் மிகவும் போற்றுகிறேன். வாழ்க நீ பல்லாண்டு. தகடூர்ச்செல்லும் நெறியை உணர்த்தி, நீ சென்று வருக.

ஆதன் :—அன்னையே! இவ்வழியில் இன்னும் இரண்டு நாழிகைத் தொலைவுக்குப் பிறகு, வலது புறம் ஓர் இடைவழி

பிரியும். அதில் திரும்பினால் தகடூர் மன்னர் கோயிலின் 'முதல் வளைவு' நன்கு தோன்றும்.

ஔவையார் :—நல்லது மகனே! சென்று வருகிறேன் நான். நீ நன்கு வாழ்க.

ஆதன் :—வணக்கம்தாயே, வணக்கம்! (ஔவை பிரிதல்)— அப்பா! நல்லவேளை! என் பெயரை அந்தக் கிழவிக்கு நான் சொல்லவில்லை. ஏதோ, இன்றைக்குக் கண்விழித்த பொழுது, நல்ல பொழுதாக இருக்கும் போலிருக்கிறது. என்னமோ, தலைக்கு வந்தது, தவறி தலைப்பாகையோடு ஒழிந்தது. பொது வாக எனக்குப் புலவர்கள் என்றாலே மிகுந்த நடுக்கம்: அதிலும் ஔவையாம்! அடே அம்மா!! நல்ல கிழவி: அன்பாகத் தான் பேசினார்கள்: என்னைப்போலவா? கல்வி என்றால் அதற்குத்தனித்தகுதிதான் இருக்கிறது. அடே! பொழுது போயிற்றே. விரைந்து வீட்டுக்குப் போகிறேன். (பாடிக் கொண்டே போகிறான்)

* * * * *

கற்றவரைப் பாராட்டிக், கைதொழுது வணங்கவேண்டும்
மற்றவரின் சிற்றுறவை, ஏ! வள்ளிநாதா,
மறந்திருந்து வாழவேண்டும், ஏ! வள்ளிநாதா.

அற்றவர்தம் சுற்றமவன் அதியைநகர் அஞ்சிமன்னன்
செற்றவரைச் சினந்தழிக்கும் ஏ! வள்ளிநாதா,
செருக்களத்தின் செல்வன் அவன் ஏ! வள்ளிநாதா.

இயல் உ—காட்சி க முடிவு.

இந்திமொழி எதிர்ப்பு.

'மக்களின் விருப்பம் யாதாயினும் பள்ளிகள்தோறும் இந்தி மொழியைக் கட்டாயபாடமாக்குவது திண்ணம்; அதனை எதிர்ப்பவர்கள் அறிவிலிகள்' என முதன் மந்திரியார் கூறுகின்றனர். மற்றுமுள்ள ஒன்பது மந்திரிகளும், பத்து அமைச்சர்களும், இவ்வரசியல் கட்சியினராகிய சட்டசபை உறுப்பினர்களும் தமது உளம்பற்றிய கருத்தை வெளியிடுதற்கு அஞ்சி, தத்தம் பதவிகளைக் காத்துக்கொள்ளுவதே கருமமெனக் நினைத்துத் தலைவரைப் பின்பற்றியே பேசுகின்றனர்.

இந்திமொழி கட்டாயமாய் பள்ளிகளில் பயிற்றப்படவேண்டுமென்பதற்கு மந்திரியார்கூறும் காரணங்கள் அறிவுடையோர் ஏற்பனவல்ல. அரசியற் பிந்தேறிய வடமொழியாளர், தாம் வாழவும், பிறர் தாழவும் கருதி மேற்கொண்ட முயற்சியாகும். இந்திமொழி இன்றியமையாது வேண்டும் என வாது புரிவோர் கூறுங் காரணமும், அதற்கு மறுப்பும் வருமாறு:—

1. இந்தியாவின் அரசியல் வளர்ச்சிக்குப் பொதுமொழி வேண்டும்; இந்திமொழி நாடெங்கும் பயிலும் பெருவழக்கிற்று; அதுவே சிறந்தது, என்கின்றனர். அரசியல் வளர்ச்சிக்குப் பொதுமொழி இன்றியமையாதது என்பதே தவறு. இந்தியநாடு இந்நிலைக்கு வருதற்கு இந்திமொழி சிறிதும் துணைசெய்ததில்லை. நாட்டில் வழங்கிவரும் பன்மொழிகளும் துணைசெய்து மக்கட்கு அரசியல் உணர்ச்சியை அளித்தன. காந்தி அடிகள் ஆதிய தலைவர்கள் தென்னாட்டிற்கு வந்தகாலை நாட்டுமொழி அறியாது இடர்ப்பட்டாரில்லை. அவர்கள் கருத்துக்களை அறியுமாறில்லாது தென்னாட்டினர் தடுமாறினதுமில்லை. இந்திமொழி இந்திய நாடெங்கும் பெருவழக்கில் உள்ளது எனுங் கூற்றும் ஒப்பத்தக்கதன்று. இம்மொழி தென்னாட்டில் வழக்கில்லாதது; வடநாட்டிலும் சிற்சில பகுதிகளில்மட்டும் பல்வேறு உருவங்களில் ஒன்று பேசுவோர் மற்றொன்றை அறியமாட்டாது வழக்கில் இருப்பது. பெருவழக்கில் இருப்பதென்பதும் பொய்க் கூற்று.

2. மொழிவேற்றுமையால் மனவேற்றுமை விளையும்; மொழி ஒன்றுபட்டால் மக்களின் உளமும் ஒன்றுபடும் என்பது மற்றுமொரு காரணம்.

இதுவும் அனுபவத்திற்கு முரண்பட்ட பொய்யுரை. சாதி பற்றியும், சமயம் பற்றியும் போராட்டங்கள் நிகழ்வது உண்மை. சாதி சமயப்பிணக்கங்களால் கொலை, பழி, பாதகங்களும் பகைமையும் ஒருமொழி பயில்வோருள்ளவே நாடெங்கும் மலிந்துகிடக்கின்றன. மக்களுள் வேற்றுமை உணர்ச்சிகளை வளர்த்து இன்னல்களை விளைக்கும் தீயசெயல்களும், கொள்கைகளும் பலவாயிருக்க, அவற்றை அகற்றி ஒற்றுமையை வளர்க்கக் கருதாது, மொழிபற்றிய வாதங்களால் கலாம் விளையுமெனக் கதையாலெனினும் கேட்டறியாத மந்திரி இந்திமொழியை ஆட்சியில் கொணர்ந்து ஒற்றுமை வளர்ப்போம் என்பது மதியின்மையும் ஏமாற்றமும் ஆகும்.

3. ஆங்கில ஆட்சியின் தொடர்பு முழுதும் விடுபட்டு இந்தியநாடு தன்னரசு கொள்ளும் நாளில் இந்திமொழியே அரசியல் மொழியாகத் திகழும்; அதுகாலை தென்னாட்டினர் எக்கற்று நிற்காது முதன்மையிடம் பெறுதற்பொருட்டு இந்தியில் புலமையும் பயிற்சியும் பெறவேண்டுமென்பது மற்றுமொரு காரணம். அரசியற்றுறைகளில் மேலோங்கி, கொற்றமும் வெற்றியும் உடையராய்த் திகழும்அயல்நாட்டினரின்கலைத்திறம், போர்த்திறம், தொழில் ஆக்கம் இவற்றையும், இந்தியநாட்டின் முதறிஞராய் அரசியற் கிளர்ச்சியின் முன்னணியில் நின்று பணி ஆற்றிவரும் பெருமக்களதுகொள்கைகளில் அடிப்பட்டுஅகிம்சா தருமத்தையும், கைராட்டினத்தையும் எளிய வாழ்க்கையையும் துணைகொண்டு அடிமை வாழ்வை அகற்றி தன்னரசு பெறுவோமென்பாரது போக்கையும் ஒப்புநோக்க, நாட்டுமொழிகள் யாவற்றையும் வென்று கீழ்ப்படுத்தி இந்திமொழியானது மொழியரசு புரியவிருக்குங்காலம் பல்லூழிகள் கடந்தும் நிகழுமோவென ஐயுறவேண்டியிருக்கின்றது. குடிமக்கள் அறியாமை என்னும் அளற்றில் மூழ்கி விடுதலைக்கு வழிகாணாது

தடுமாற்றமடைந்திருப்போரை, தாய்மொழியாம் தெள்ளமுதால் தெருட்சிபெறச்செய்து கரையேற்றுவது இன்னே தொடங்கவேண்டுங் கருமமென்றறியாது, வழியிருக்கக் குழியில் விழுவார் போலவும் 'கருந்தனங் கைத்தலத்த உய்த்துச்சொரிந்திட்டு அரிப்பரிந்தாங்கெய்த்துப் பொருள்' செய்வார் போலவும் ஏலாததோர் கருமத்தின்பாற் படுவது பேதைமையாகும்.

4. இந்திமொழியில் தேர்ச்சியடைந்தவர் அரசியல் துறைகளில் பதவியும் ஊதியமும் பெறலாம்; இம்மொழிப் பயிற்சி இல்லாதவர் அவற்றைப் பெறலாகாது, என்பது மற்றொரு காரணம்.

வடநாடு சென்று வேலை தேடுவோர்க்கன்றி இது பொருந்தாது. இந்தியநாட்டின் அரசியல்சட்டமானது (The Government of India Act) நாட்டுமொழியும், அங்கிலமும் அரசியற்றுறைகளில் வழங்கத்தக்கவனவென்று விதித்திருக்கின்றது. அரசியல் அலுவல்கட்குரிய தகுதிகளைப் பெற்றும் வேலைகிடைக்காது அலமருவோர் வடநாட்டிலும் மிகுந்திருக்கின்றனர். வடநாட்டில் வேலைகிடைக்குமெனும் ஆசையால் தென்னாட்டினன் இந்திமொழியைக் கற்கப்புகுவது பயனிலுழவாகும். அரசியலில் பதவிபெறுவோர் மிகமிகச் சிறுதொகுதியினரேயாவர். பெரும் பகுதியினரும் இந்திபயின்றே தீரவேண்டுமென வலியுறுத்துவது எற்றுக்கு? இந்திமொழிப் படிப்பு வயிறுவளர்ப்பதற்குத் துணைபுரியுமென்பது கல்வியின் சிறந்த நோக்கமென அறிவுடையோர் கருதுவரா? அரசியல் ஊழியங் தேடுதல் உத்தியோக வேட்டை, என எள்ளி நகையாடிய கொள்கையினர் இந்தி பயில்வதின் சிறந்த நோக்க அரசியல் ஊழியமெனக் கூறுதல் நகைக்கிடனாகின்றது.

5. இந்திமொழியால் தாய்மொழி வளம்பெறுமேயன்றிப் பாழ்படமாட்டாது என்பது மற்றொரு காரணம். வடமொழிச் சார்புடையாரும், அன்னார் நன்மதிப்பை எவ்வாற்றானும்பெற்று வாழவேண்டுமெனுங் குறிக்கோளில் அடிப்பட்டவர்களும் இக் காரணத்தை ஏதுவும் எடுத்துக்காட்டுமின்றி கூறித்திரிகின்றனர்.

யவனர், உரோமர், துருக்கர், ஆரியர் ஆதிய பல்வேறு திறத்தினராய அயல் நாட்டினருடன் பண்டுதொட்டுப் பயின்றுவரும் தமிழர், தமது மொழியின் தூய்மையை இதுகாறும் மரபுவழாத வண்ணம் காத்து வந்தனர். தமிழ் வழக்கில் வடசொல் திசைச் சொற்களாதிய அயன்மொழிகள் விரவி வருங்காலை, தமிழ் மரபிற்கேற்றவாறு அவைகள் உருத்திரிந்து வழங்குதல் வேண்டுமெனும் இலக்கண வரம்பிற்குட்பட்டு மறுகையும் வீறுங் குன்றாது தமிழ்மொழி திகழ்கின்றது. இதனோடு நெருங்கிய தொடர்புடைய கன்னடம், தெலுங்கு, துளுவு, மலையாள மொழிகள், வடமொழிப் படையெடுப்பை விழிப்புடனிருந்து தடுக்காது வாளாவிருந்தமையால், அப்புதுவெள்ளத்தில் மூழ்கி, தமக்குரிய இயற்கை எழில் குலைந்து, உருமாறி புத்தம் புது மொழிகளாய் மாறிவிட்டன.

தமிழ்மொழி அவ்வாறு பிறமொழிகளால் ஏதம்படாது, நல்லிசைப் புலவர்களாலும், சைவ வைணவ ஆசாரியன்மார் களாகிய திருமுறைச் செல்வர்களாலும், தென்கலை வடகலை களாகிய இருமொழிக் கடலையும் நிலைகண்டுணர்ந்த நச்சினார்க் கினியர், பரிமேலழகர், சிவஞான முனிவராதிய ஒப்புயர்வற்ற உரையாசிரியர்களாலும் தமிழ் மரபு காக்கப்பட்டு, என்றுமுள தென்றமிழ் எனவும், கன்னித்தமிழ் எனவும் புலமை மிக்கோரின் புகழுரைக்கிலக்காய் விளங்குகின்றது. வடமொழிச் சார்புடைய சிலர் மணிப்பவளமெனும் புதுவதொரு உரை நடையை முன்னொருகால் எழுதினர். இற்றைநாளில் வட வெழுத்துக்களையும், வடசொற்களையும் பயிலவிரும்பும் ஒருசிலர் எழுத்தியல், சொல்லியல்களில் வகுத்திருக்கும் சொல்லாக்க விதிகளைக் கடந்து அயன்மொழிகளுக் குரித்தாய எழுத்துகளைப் பெய்தும், மரபிற்கு முரண்பட சொற்களை எழுதியும் செந் திறத்த தமிழோசையைக் கெடுத்து தமிழ்மொழியின் எழில் மேனியை மாசுபடுத்துகின்றனர். அங்கிலமொழிப்பற்றும், மேனாட்டு நாகரிகத்தில் விழைவுங்கொண்ட சிலர் அங்கிலம், ஆரியமாதிய அயன்மொழிகளை இடையிடையே முடைந்து கொச்சையானதொருமொழியைக் குளறிப் பேசவும் எழுதவும்

தலைப்படுகின்றனர். இதுமட்டோ! தமிழ்ப்புலமையால் வயிறு வளர்த்து, புகழும் பூசனையும்பெறுகின்ற புலவர்களில் ஒருசாரார் தமக்கு இயல்பேயுள்ள வடமொழிச் சார்பினால், தமிழ்மொழியை இழித்துக் கூறியும், வடசொற்களை ஆட்சியிற் கொணர்ந்தும் தீங்கு விளைக்கின்றனர். செய்நன்றி கொன்று ஏதம் விளைக்கும் உய்தியில் செயலைப் புரிந்துவரும் இன்னார் ஏழை மதி கண்டு மிக மிக இரங்குகின்றேம்! இனி இந்திமொழியும் வழக்காற்றில் வரின் விளையுங் கேடுகள் பலவாகும். அயன்மொழிகள் பயிலுவதால் தமிழ்மொழி வளம்பெறுமென்கின்றனர். இது பொய்யுரை; ஒரு கருத்தை வெளியிடுதற்குத் தமிழில் சொல்லில்லாத போது புதுவதொன்றாக சொற்களை ஆக்கவோ, பிறிதொரு மொழியினின்றும் கடன் கொள்ளவோ வேண்டியிருக்கின்றது. அக்கருத்திற்கிசைந்த தமிழ்ச் சொல்லிருக்க, அதனை விடுத்து, அயன்மொழிச்சொல்லை வழங்குவது மதியுடைமையா? வேண்டப்படாத காலத்தும் பிறசொற்களைக் கடன்வாங்கி வழங்குவதால் தமிழ்ச் சொற்கள் வழக்கு வீழ்ந்து மாயுமன்றோ? தமிழில் மேனாட்டுக் கலைச்சொற்கள் மிகுதியும் இல்லை என்பது உண்மை. அவை வடமொழியிலாதல் இந்திமொழியிலாதல் உண்டா? இல்லையே! இக்கலைச் சொற்களின் கருத்துக்கிசைய புதுவதாக சொற்களை ஆக்கிக் கொள்ளுவது கலைச்செல்வரின் கடமையும் உரிமையும் ஆகும்.

திருவாளர்கள். ப. வே. மாணிக்கம் நாயக்கர், A. சீனிவாசாச்சாரியார், மறைமலை அடிகள், பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார் ஆதிய அறிஞர்கள் காட்டியிருக்கும் நல்வழியே தமிழறிஞர் கைக்கொளத்தகும் சிறந்தநெறி. இதனை விடுத்து, தத்துவநூல், அளவைநூல், உளநூல், உயிர்நூல், உடல்நூல், இயைபுநூல், பௌதிகநூல், பொருள்நூல், கணிதநூல், நிலநூல், வானநூல் முதலிய நூல்களின் பொருள்பற்றி எழுதப் புகுவோர் மொழி வளமில்லாது பேதுற்று குன்று முட்டிய குரீஇப்போலத் தடுமாற்றமடைந்து வடமொழியிலும் நேர்பதம் காணுமாட்டாராய் இடர்ப்பட்டு ஆராவாரம் மிகுந்த வேற்றுச் சொற்களைமுடைந்து வழங்கத் தலைப்படுகின்றனர். இச்

சொற்களை ஆராய்வுழி ஆக்கியோரது வெள்ளறிவு வெளியாகின்ற தல்லது பொருள் விளங்குவதில்லை. இப்பெற்றியினர் இபற்றி வரும் முயற்சியால் தமிழ்நாட்டில் கலையறிவின் வளர்ச்சி தடைப் படுவதன்றி வளம்பெறவில்லை. இந்திமொழியால் இக்குறை நீங்குமா? இல்லவே இல்லை! முக்காலுமில்லை! மகமதியராட்சி யில் அடிப்பட்ட வடநாட்டினரின் ஊழியத்தொடர்பால் துலுக்கு மொழிகளும், ஆரியச் சிதைவுமொழிகளும் கலந்த குளறுபடை மொழியே இந்தி எனப்படுவது. சிறந்த நூல்வழக்கோ, இலக் கியமோ இல்லாதது. கலைச் செல்வத்தைக் கண்டறியாதது. இதுபோது வடநாட்டினரிற் சிலர் அரசியற்குழப்பமாகிய பெரு வெள்ளத்தால் எற்றப்பட்டு தென்னாட்டை அடிமை கொண்ட தால், தமது கொற்றம் பிற்றைநாளில் பேசப்படவேண்டுமெனும் சிறுவேட்கையால் தமது மொழியை நாடெங்கும் பரப்பவும், பேணவும் கருதுகின்றவர். தென்னாட்டுத் தலைவர்களோ, வட நாட்டுத் தலைவர்களின் நன்மதிப்பைப் பெறுவதாலன்றி தமது வாழ்வு உயராதென நினைந்து, அன்னார் அடியிணையைத் தந்தலைக் கணியாக்கி நீர்வழிச் செல்லும் புணைபோலச் சென்று, வடநாட் டினரின் விருப்பை நிறைவேற்றத் துணிந்து விட்டனர். இக் கொள்கையினர் இந்தியை வளர்ப்பதால் தமிழ்மொழி வளரும் என நாடெங்கும் கூறி வருவது வெற்றுரை. 'கேழ்வரகில் நெய் வடிகிறது' 'விதையொன்று போடச் சுரையொன்று முளைக்கிறது' என்ற கதைகளை இப்பொய்யுரை நினைவிற்குக் கொணர்கின்றது.

அயன்மொழிகளை இரவல் வாங்குவோர் இழைக்கும் தீமை மற்றொன்று. தமிழ் இயல், மரபு இவற்றிற்கு இயையாமலும், இலக்கண வரம்பைக் கடந்தும் அயன்மொழிகளின் உருவமும் ஓசையும் மாறாத வண்ணம் சொற்களையும் சொற்றொடர்களையும் தமிழில் நுழைவிப்பதால் தமிழ்மொழியின் தேனொழுக்குப் போன்ற இன்னோசையானது, எடுத்தும் படுத்தும், உரப்பியும் பேசப்படும் வல்லோசையால் கேடுறுகின்றது. இவ்வாறெல் லாம் செய்யத் துணியும் வன்கண்ணர்கள் வடமொழியிலாதல், அங்கிலமொழியிலாதல், இந்திமொழியிலாதல், தமிழ்மொழிக்கே

சிறப்பானதும், அம்மொழிகளில் இல்லாததும் ஆன தமிழ் எழுத்துக்களையும், தமிழ்ச் சொற்களையும் தமிழுருவத்திலே எழுதலாமெனக் கூற முற்படுவரா? தமிழ் நெடுங்கணக்கில் காணமாட்டாத வடவெழுத்து பலவற்றை புதுவதாகவரும் பாட புத்தகங்களில் தமிழ் எழுத்தாகவே எழுதத் தலைப்பட்டிருக்கின்றனர். அங்கிலத்தொடர்பால் ƒ போன்ற எழுத்துக்களையும், யப்பானியர் தொடர்பால் மூக்கெழுத்துகளையும், பிறமொழியாளரின் தொடர்பால் பிறபிற எழுத்துக்களையும் நாளடைவில் தமிழில் புகுத்திப்புகுத்தி நெடுங்கணக்கை நீளநீட்டிக்கொண்டே போகவேண்டுவதுபோலும் !! நாகரிக உலகத்தில் உள்ள மொழியாளர் எவரேனும் இந்தக் கொள்கைக்கு உடன்படுவரோ?

இந்தியை வளர்ப்பதால், தமிழை வளர்ப்போம் எனும் அழிவழக்குத் தொடர்பவர் இதனோடு நின்றார்களில்லை. காலப் போக்கிலே தமிழ்மொழியை இந்தி எழுத்தில் எழுதுவது தமது கருமம் என்கின்றனர். இந்தியப் பொதுமொழி எத்துணை இன்றியமையாததோ இந்தியப் பொதுவெழுத்தும் அத்துணை வேண்டப்படுவதென்கின்றனர். நமது கோயில்களையும், தெய்வவுருவங்களையும் உடைத்துத் தகர்த்து நமது நாட்டில் குடியேறிய பெருமக்கள் கூட நமது மொழியையும், நாகரிகத்தையும் அழிக்காது விட்டனர். தமிழரின் நாகரிகம் தனிச் சிறப்புடையது; ஆரிய நாகரிகத்தினும் மிகமிக வேறுபட்டது; சிறந்த குறிக்கோளும், பரந்த நோக்கமும் உடையது; பிறப்பொக்கும் எல்லா உயிரும், எனவும், ஒழுக்கம் உயர்குடி உய்க்குமெனவும் பறைசாற்றுவது; சாதி இரண்டொழிய வேறில்லை, இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் எனக்கழறுவது. தமிழர் நாகரிகம் ஒரு குலத்திற்கொருநீதி வகுப்பதன்று. ஆற்றலுடையுமென்றந்தணர்களுன்மறையை போற்றியுரைத்தேட்டில் புறத்தெழுதாது பாதுகாவல் செய்ததுபோலன்றிக், காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் சேரவாருஞ் சகத்தீரே சிவபோகமெனும் வெள்ளத்தை உண்டு திளைக்கலாமென அறை கூவி யழைப்பது. நாகரிகம் என்பது கண்ணோட்டமென அறுதியிட்டுக் கூறியது. இன்ன பல தனிச்சிறப்புகளால் மாண்புற்ற தமிழர் நாகரிகத்தை

வென்று அடிப்படுத்த முடியாத வடமொழியாளர், உலகர் அரசியல் வேட்கையில் மதிமாழ்கியிருப்பதை அறிந்துவைத்து, அரசியல் வேடத்தில் மறைந்து நின்று, தமிழ் மக்களைவென்று அடிப்படுத்தி வடவாரியரின் அறநெறி பிழைத்த கொள்கைகளை நிலை நிறுத்த விரைகின்றனர். இதனை அறிந்து அரண்செய்து கொள்ளத் துணியாது, மயக்குரைகளால் வஞ்சிக்கப்பட்ட தமிழ் நாட்டுத் தலைவர்களின் ஏழைமைக்கு இரங்குகின்றோம்.

தங்கருத்தை நிறைவேற்றுதற்கு 1, 2, 3-வது Formகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்குவதே நேரிது என்பதும் பொய்யுரை. பள்ளிச்சிறுர்கள் கல்வித் துறைகளில் பயிலுங்காலை, கலைப்பயிற்சியில் என்னனம் கடமையை ஆற்றுகின்றார்கள், வாழ்க்கையை எவ்வாறு நடத்துகின்றார்கள் என்றாவது, கல்வி சீர்திருத்தம்பற்றி பலஆண்டுகளாய் நிகழ்ந்துவரும் வாதங்களில் தக்க வின்ன தகாதன வின்ன எனக் காண்போமென்றாவது கருதுகின்ற பெற்றோர்களைக் காண்பது அரிதாயிருக்கின்றது. கல்வியில் முதுக்குறைவெய்திய மூதறிஞர்கள் ஆய்ந்து முடித்த சீர்திருத்தங்கள், நிலைபேறடைவதில்லை; தாம் செய்த திருத்தங்கள் தவறுடைத்தெனக் காண்பதும் மீட்டுமொரு திருத்தம் செய்வதுமே இவர்கள் வேலையாய் விட்டது. அறிதோறறியாமைகண்டற்று என்னும் சொற்களுக்குப் பொருளாய் அமைந்திருக்கின்றனர். பள்ளிச்சிறுர் என்செய்வர்? பாவம்! குரங்கின் கை மாலை என அலைக்கப்படுகின்றனர். இவ்வாறான அலங்கோலங்களைப் பரிகரிப்பது தமது வேலையெனப் பெற்றோர்கள் கருதினாரில்லை. இராமனாண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன என எண்ணியிருத்தலைப்போல் தமிழ்வாழ்ந்தாலென்ன தாழ்ந்தாலென்ன தம்மக்கள் கல்வி நிரம்பினாலென்ன, நிரம்பாதொழிந்தாலென்ன என்போராய் நம்மவர் வாளா யிருக்கின்றனர்.

பத்து வயது கூட நிரம்பா முன்னரே, உடலும் மூளையும் வன்மைபெறாத காலத்தே பச்சிளங் குழவிகள் எத்தனை அயன் மொழிகளைப் பயில்வது. இதுபோதுள்ள பாடதிட்டத்தின்படி பெரும்பகுதியான நேரம் அங்கிலம், கணக்கு, அறிவுநூல்கள்

ஆதியவற்றிற்கு ஒதுக்கப்பெற்று, சிறுபோதுதான் தாய்மொழிப் பயிற்சியாகிய தமிழ்ப்பயிற்சிக்கு தரப்பெற்றுள்ளது. இவை ஒவ்வொன்றும் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாயிருந் தும், ஒவ்வொன்றிற்குமே போதிய அளவு நேரமில்லையெனக் கருதப்படுகின்றது. இவற்றிற்குரியனவாகிய நேரங்களைக் குறைப்பதால் பயிற்சி குன்றி கல்வி நிரம்பாது இடர்ப்படு மென்பது தேற்றம். பருவம் நிறையாத இளைஞர்கள் இந்தி யெனும் அயன்மொழியையும் கற்கவேண்டிய முயற்சியால் உட லிளைத்தும் நெஞ்சுலர்ந்தும் ஏதம்படுவர். மூன்றாண்டுகளில் கற்கப்படும் சிற்றளவினதாகிய இந்தியறிவும் தொடர்ந்தபயிற்சி பள்ளியிலோ, வெளியிலோ இல்லாமையால்பாழ்பட்டும் ஒழியும். இந்திப் பயிற்சிக்குரியகாலம் மாணவரின் சின்னஞ்சிறு வயதுதா னென்றும், அவர்கள் ஏற்க முடியாதசுமை ஆக இருக்கமாட்டா தென்றும், கல்வி முன்னேற்றத்திற்கு எவ்வாற்றானும் கேடு விளையாதென்றும் முதன் மந்திரியாரும், அவர் சார்பினராய தொகுதியினரும் கூறிவரும் பிதற்றுமொழிகள் செருக்கு மிகுதி யால் விளைந்த பெருமிதமும், வன்கண்மையுமாகும்.

மக்களின் ஆணையே தமக்குத் துணையாயிருப்பதெனவும் அன்னார் குறிவழி நின்று தொண்டுபுரிதலே தமது கருமம் எனவும் பறைசாற்றி வருகின்ற மந்திரி வகையினர், மக்கள் வேண்டாததொன்றை வலிந்து செலுத்துவேமென்பது நீதி முறையா? இக்கொள்கை தவறுபட்டது எனத் தமிழ் நாடெங் கும் கண்டிக்கப்படுவதைத் தெரிந்துவைத்தும் 'பேதையுங் கொடிறுங் கொண்டதுவிடா' எனும் முதுமொழிக்கு இலக்கா யிருந்து, வையத்தலகையாய்த் திரிந்து விதண்டைபேசுதல் குடி யரசின் பண்பாகுமா? தென்னாட்டிலுள்ள மக்கள் இந்திமொழி தமக்கு இன்றியமையாது வேண்டுமெனக் கூறினரா? வறுமை, பசி, பிணி, அறியாமை ஆதிய இன்னல்களை உடனே தவிர்ப்பே மெனக் கூறிய உறுதிகளை நம்பி அரசியலாட்சியை ஒப்புவித் திருக்க, அவற்றையெல்லாம் செய்யாதொழிந்து, மக்கள் வேண் டாததும், விரும்பாததுமாகிய இந்தியை மாணவர்கள்கற்குமாறு வலியப்புகுத்துவேமென்பது கொடுங்கோன்மையன்றோ? நூற்று

வரில் தொண்ணூறின் மேற்பட்டார் கல்லாமாக்களாய் இருப்பது தெரிந்தும் அறியாமையை நீக்கத் தாய்மொழியைக் கட்டாயப் படுத்தி கற்பிக்கும் முயற்சியைதாழ்க்காது தொடங்கவும், கட்டாயக்கல்வியைக் (Compulsory Education) கையாள முற்படாததும் எதன் பொருட்டு ?

இந்திமொழி வடநூலோருக்கு நெருங்கிய தொடர்புடையது. இந்தியில் வழங்கும் சொற்களில் பெரும்பாலன வட சொற்கள். அதன்எழுத்தும் வடமொழிக்குரிய நாகரவெழுத்து, ஆதலால் வடமொழியை தமது மொழிப்பாடமாகக் கொண்டிருக்கும் மாணவர்கட்கு இந்தி பயில்வது மிகமிக எளிதாகும். தமிழ் மாணவர்க்கோ மிகமிகப் பளுவாகும். ஒரு சாரர்க்கு கல்விப்பயிற்சியை எளிதாக்கி பிறிதொருவர்க்குச் சுமையாக்குவதன் நேர்மையும் பொருட்டும் என்னே ? தமிழராவார் கல்வித்துறையில் தடுமாற்றமுற்று இடைமுறிந்து நிற்கவும், வடமொழிச்சார்பினரை எளிதே கல்வியில் முன்னேற்றவும் கருதிய அரசியல் சூழ்ச்சியா ? என்றவாறெல்லாம் தமிழறிஞர் தனித்தும், ஒருங்குகூடியும் ஆராயவும், கண்டிக்கவும் துணிந்து விட்டனர். நாடு, நகரங்களிலெல்லாம் கிளர்ச்சியும், பரபரப்பும் மலிந்திருக்கின்றன. தமிழ்ப் பாதுகாப்புக் கழகங்கள் ஒன்று பலவாகத் தோன்றுகின்றன. மாநாடுகள் கூட ஏற்பாடுகள் நடக்கின்றன. தமிழ்த்தாயின் தவப்புதல்வராம் அண்ணமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராசிரியர் திருவாளர். S. சோமசுந்தர பாரதியார் அவர்கள் M. A., B. L., தமிழரது உரிமைப்போரில் கருமத்தலைவராயிருந்து உலைவிலா ஊக்கத்துடன் பாரந்துசென்று வீரமுழக்கம் புரிந்து வருகின்றனர்.

அரசியற் றலைமையிலிருக்கும் ஒரு சிலர் விரும்பும் இத்தீய செயல் நிறைவேறுதற்கு, பிறர் கருவிகளாய் இருப்பது இழிந்த செயலாகும். தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிகொண்டு பதவிகளில் அமர்ந்திருக்கும் தலைவர்கள், உடுக்கை யிழந்தவன்கை போல வந்து, இடுக்கண் களைய முற்படவேண்டும். தமிழ் மக்களாவார் ஊமர்களாய், செவிடர்களாய் இருந்தொழியாது, அடிமை வாழ்வை உதறி எறிந்து தமிழ்ப்போரில் முனைந்துநின்று வாகை சூடவேண்டும்.

த. வே. உ.

தமிழ்ச் செய்திகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் :— சிறந்த புலவர்களின் துணை கொண்டு, மாதமொரு விரிவுரைக்கூட்டம் நடத்திவரும் ஏற்பாடு செய்திருக்கின்றனர். 19—9—37 தேதி திருவையாறு அரசர் கல்லூரி ஆசிரியர் திரு. B. R. புருடோத்தம நாயுடு அவர்கள் 'திருவாய்மொழி' எனும் பொருள்பற்றியும் 24—10—37தேதி அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் திரு. A. பூவராகம்பிள்ளை அவர்கள் 'புறநானூறு' எனும் பொருள்பற்றியும், சாத்தூர் வழக்கறிஞர் திரு. T. S. கந்தசாமி முதலியார் அவர்கள் 'திருக்குறள் அறநெறி' எனும் பொருள்பற்றியும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

கம்பர் செந்தமிழ்ச் சங்கம் குளித்தலை :—செப்டம்பர் 25, 26 தேதிகளில் அமைச்சர். திரு. லா. கோ. சுந்தரராசலு அவர்களின் நன்முயற்சியால் திரு. Dr. உ. வே. சாமிநாதையர் அவர்களின் தலைமையில் சங்கத்தின் 13ம் ஆண்டுவிழா இனிது நடைபெற்றது. அதுபோது தலைவர் அவர்கள் முடிவுரையில் இந்திமொழியை கட்டாய பாடமாய்ப் பள்ளிகளில் வைத்து நடத்த அரசியலார் செய்திருக்கும் முடிபு அடாத தொன்றெனவும், முதன் மந்தியாரிடம் சென்று பாட திட்டத்தில் இந்தியை வலிந்து நுழைக்கலாகாதெனத் தாம் முறையீடு செய்வேன் எனவும் கூறினார்கள்.

ஆண்டுவிழா நிகழுங்காலை, ஈழத்து சிவானந்த அடிகள் தலைமையில் தமழர்மாநாடும், செந்தமிழ்ப்புரவலர். இராவ் சாகேப். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை. அவர்கள் தலைமையில் தமிழ்ப்புலவர் மாநாடும் நடைபெற்றன. இந்திமொழியைக் கட்டாய பாடமாக வைப்பதை வன்மையுடன் கண்டித்தும், தமிழ்மொழியைக் கட்டாய பாடமாக வைக்க வேண்டுமெனவும் முடிபுகள் செய்யப்பட்டன.

திரு. T. B. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் M. A., B. L., பேராசிரியராகவும், சில்லாகல்வித்தலைவராகவும், அனந்தபுரி உயர்தரக் கல்லூரியின் தலைமை ஆசிரியராகவுமிருந்து திறமையுடன் பணிகளை ஆற்றி பெரும் புகழ்படைத்த பேரறிஞர் அண்மையில் இவ்வுலக வாழ்வை நீத்தனர். இவர் ஆங்கிலநூற் புலமையிற் சிறந்தவர். நல்லாசிரியர்களின் துணையை நாடி செந்தீந்தமிழின் துறைவாய் நுழைந்து திளைக்கும் பெற்றிபினர். தமிழ்ச்சுவையைப் பிறமொழியினரும் துய்க்க வேண்டுமெனுங் கருத்தால் புறநானூறு, தேவாரம், நீதி நூல் முதலியவற்றின் பகுதிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து செய்யுளுருவில் வெளியிட்டிருக்கின்றனர். The Tamil Ethics, Tamil Blooms என்பன சிறந்தவை. இவ்வறிஞரை இழந்து தமிழுலகு வருந்துகின்றது.

மதிப்புரை

அவிநாசித் திருத்தலச்சிறப்பும், சுந்தரமூர்த்திகள் அருளிய அற்புதமும்:— திரு அவிநாசித்தலச் சிறப்புகளனைத்தையும் செவ்விதின் ஆய்ந்து, மூர்த்தி, தலம், தீர்த்தமாதியவற்றின் அமைப்பும் சிறப்பும் விளங்குமாறு செந்தமிழில் இயற்றப் பெற்றது. சரிதக்குறிப்புகளும் கல்வெட்டுகளும் விவரிக்கப் பட்டுள்ளன. திருக்கோயிலின் சிறந்த பகுதிகளின் படங்கள் ஆங்காங்கு மிளிர்கின்றன. இத்தலத்திற்குரிய திருப்பாடல்களும், புராணக்குறிப்புகளும் வழிபடுவோர்க்குப் பேருதவியாவன. நூலாசிரியர் விருப்பின்படி கொங்குநாட்டுத் திருப்பதிகளின் வரலாறுகளும் விரைவில் வெளிவரச் செய்வது தமிழன்பர்கள் போற்றத்தகும் அறச் செயலாகும். நூலாசிரியராகிய வித்துவான் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்களின் தொண்டு சிறக்க இறைவன் திருவருள் புரிவாராக.

இதன் விலை அணா 6.

திருக்குறள் பற்றி அறிஞர் ஆராய்ந்து கண்ட அருமலர்க் கோத்து:— கோயமுத்தூர் வித்துவான். திருவாளர். சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள், தமிழறிஞர்கள் 'திருக்குறளையும், திருவள்ளுவரை'யும் பற்றி ஆராய்ந்து கண்ட முடிபுகளைத் தொகுத்து இந்நூலின் வாயிலாய் நமக்கு உதவியுள்ளார்கள். இது தமிழறிஞர் போற்றுதற்குரிய தமிழ்த்தொண்டாகும். இதன் விலை அணு ஆறு.

திருவாசகமணிகள்:— கொழும்பு, 'விவேகாநந்தர் புத்தக சாலை' யின் உரிமையாளர் இந்நூலை எமக்கு அனுப்பினமை பற்றி நன்றி பாராட்டுகின்றேம். திருவாச்கமென்னுந் தேன் எனப் போற்றப்பெறும் நூலின் சுவையை யாவரும் உணர்ந்து பல்காலும் பயிலுதற்கு ஏதுவாக ஒவ்வொருபதிகத்திலிருந்தும் திருப்பாடல்கள் சிற்சிலவற்றை உரையுடன் எழுதி வெளி வந்திருக்கின்றது. நூலாசிரியர்., திருவாளர். புலோலி. சு. சிவபாத சுந்தரம் அவர்கள் B. A. சைவநூல் பல இயற்றி கைவந்த பேரறிஞர். அவையிற்றைப் போற்றி சைவ நன்மக்கள் பெரும் பயன் எய்துவாராக.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு உதவிய அன்பர்கள்.

திரு. துரைசாமி பிள்ளை அவர்கள் (கண்டிராக்டர்)	8—12—0
,, L. S. மாணிக்கம் பிள்ளை அவர்கள்	5— 8—0
,, T. G. சாமிநாத பிள்ளை அவர்கள்	0—12—0
,, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை ,, B.A.,B.L.	1— 0—0

கரந்தைத் தமிழ்ச் சங்க இலவச மருத்துவசாலைக்கு உதவிய நன்கோடை.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி வரவு	20—0—0

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்கு அன்பர்கள் உதவிய நன்கொடை.

(ஈசுவர—ஐப்பசி முடிய)

திரு.	L. K. பிரணதார்த்தி அரன் பிள்ளை	அவர்கள்	3—12—0
,,	A. சோதிபாண்டியன்	,,	20— 0—0
,,	K. நடராசன் B.A.,B.L.	,,	15— 0—0
,,	அ. ப. அருணசலம் பிள்ளை	,,	25— 0—0
,,	அ. ப. பக்கிரிசாமி பிள்ளை	,,	6— 0—0
,,	அ. ப. கோவிந்தசாமி பிள்ளை	,,	12— 0—0
,;	நா. லெ. வேங்கடசாமி நாயடு	,,	35— 0—9
,,	நா. லெ. வரதராசலு நாயடு	,,	30— 0—0
,,	கே. அ. அனந்தவிசய முதலியார்	,,	12— 0—0
,,	சந்திரகாச நாடார்	,,	12— 0—0
,,	T. S. சபாபதி பிள்ளை B. A.,	,,	2— 0—0
,,	P. V. இராம ஐயர்	,,	1— 0—0
,,	T. A. வாசுதேவ பிள்ளை	,,	1— 0—0
,,	சிவஞானகோவிந்தசாமி பிள்ளை	,,	1— 0—0

கரந்தைத் தமிழ்ச் சங்க வெள்ளி விழா நன்கொடை.

திரு. T. P. K. அழகிரிசாமி பிள்ளை அவர்கள் வழி :—

,,	V. அழகிரிசாமி நாயடு அவர்கள் B.A., B.L.,	1—0—0
,,	நா. கந்தசாமி பிள்ளையவர்கள் (Retd. Engineer)	5—0—0
,,	பண்டிதர். L. உலகநாதபிள்ளையவர்கள் தஞ்சை	1—0—0
,,	D. இராஜராஜேஸ்வரன் B.A.,B.L.	1—0—0
,,	C. வேதாசலம் பிள்ளை அவர்கள் B.A.,B.L.	25—0—0
,,	பண்டிதர், மறை. திருநாவுக்கரசு சென்னை	2—0—0

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫	ஈசுவர கார்த்திகை	மலர் ௮

முச்சங்க காலம்

வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள் B. O. L.
(தமிழ்ப் புலவர்,) முத்தியாலுப்பேட்டை உயர்கலைக் கழகம், சென்னை

செந்தமிழ் நிலவும் சீரிய இத்தமிழகத்தே, மண்ணைக் கொண்டும், மணலைக் கொண்டும், கல்லைக் கொண்டும், எலும்புக் கூடுகளைக் கொண்டும், புதையுண்டு கிடக்கும்—‘வீணானவை’— என அறிவீனத்தால் நாம் மதியாமற் கிடக்கும் பல திறப்பட்ட சிறிய பொருள்களைக் கொண்டும், அயல் நாட்டுச் சரித்திர நிபுணர் நம் முந்தையோர் தொன்மையையும் தமிழகத்துத் தனி நாகரிக நிலையையும் இலட்சக் கணக்கான பொருட் செலவில் அறிந்து நமக்குப் புத்துணர்ச்சி உண்டாக்கிவரும் இந்நாளிலும், நம் கண்ணெதிரே (சிதைந்தனபோக) இருக்கின்ற பழைய பனுவல்களையேனும் ஆழ்ந்து படித்து, ‘அவற்றில் உள்ள தமிழகத்துச் செய்திகள் எம்மட்டும் நமது தொன்மையை யுணர்த்துகின்றன—அவற்றினின்றும் நாம் எத்துணை யளவு

நமது தொன்மை நிலையைக் கணிக்கலாம்' என ஆராய்ச்சித் துறையில் அறிவினைச் செலுத்துந் தமிழர் சிலரேனும் இப்போது உளரா எனத்துணிதல் அரிதாகவுள்ளது. ஆங்கில அறிவும் தமிழறிவும் ஒருங்கே பெற்று விளங்குந் தமிழர்கூட இத்துறையில் துணிச்சலோடு முன் வருதல் இல்லை எனின், இத்தமிழகத்தின் எதிர்கால நிலை யாதாகும்? அவரவர் தத்தம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்றபடி பலவற்றையும் ஆராய்தல் தமிழ் வளர்ச்சிக்கு அடிகோலியவாறு ஆகுமன்றோ?

ஆங்கிலப் பட்டம் பெற்றுக் கல்லூரிகளில் சரித்திர ஆசிரியராயுள்ளார் சிலர், தமிழ் நூற் புலமை முற்றப் பெறாமலோ—தாம் தாம் கண்ட அளவிலும், கேட்ட அளவிலும் உள்ள ஆதாரங்களைக் கொண்டு வரையும் நல்லெண்ணத் தாலோ—தீய எண்ணத்தாலோ கடைச் சங்கம் 6-ம் நூற்றாண் டென்றும், 8-ம் நூற்றாண்டென்றும் மனம் போனவாறு ஆங்கிலத்தில் நூல்கள் வரைந்து வெளியிடுகின்றனர்; சிலர் 'சங்கங்கள் என்பதே பொய்' எனச் சிறிதும் கூசாது தமது ஆங்கிலப் பெருநூல்களில் எழுதி வருகின்றனர். அந்நூல்களைப் படிக்கும் ஆங்கிலேயர்கள் தமிழகத்தைப் பற்றியோ தமிழைப் பற்றியோ என்னதான் மதிப்பார்கள் என்பதை நினைக்குங் கால் உள்ளம் ஊசலாடுகின்றது. ஆங்கில அறிஞர் சிறு துரும்பையுங் கொண்டு சரித்திரம் கட்டுங்கால், நம் நாட்டுச் சரித்திர ஆசிரியர்கள் தமிழ் நூற் செய்திகளையும் பழமொழி களையும் காதளவில் வரும் தொன்று தொட்ட செய்திகளையும் சிறிதும் மதியாமல் அவற்றை ஒதுக்குதல், எவர்பால் கற்ற சரித்திர அறிவுப் பயிற்சியோ! அறியோம். இது நிற்க.

முச்சங்கங்களைப் பற்றி நமக்குக் கூறும் நூல்கள் இறைய னார் களவியல் உரை, சிலப்பதிகார உரை ஆகிய இரண்டே. கடல் கோள் இருமுறை நிகழ்ந்ததாகக் களவியலும், ஒரு கடல் கோளைப் பற்றிக் கலித்தொகையும்,* சிலப்பதிகாரமும்† சான் றாக வுள்ளன. இவற்றோடு நமது நாட்டை யடுத்த இலங்கைச் சரிதங்கள், இழந்த லெமூரியாக் கண்டத்துச் செய்திகள் முதலியனவும், ஆராய்ச்சியாளரால் கிடைக்கப் பெற்ற மண்—மணல்—புதைபொருள்கள்—இவற்றைப்பற்றிய அவர் தம் கருத்துக்கள் முதலியன நமது தொன்மையை ஒருவாறு

---

* கலித்தொகை—104

† சிலப்—11-ம் காதை—வரி: 18—20

உண்மையாகவே எடுத்துக் காட்டக் கூடும் என்பது அறிஞர் பலர் நாட்பட்ட கருத்தாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயுமுன், காய்தல் உவத்தல் இன்றிச் சங்க காலத்தை நினைத்துப் பார்ப்பின், இப்போதுள்ள கடைச் சங்க நூல்கள் என்பனவோ, முதல்—இடைச் சங்கங்களில் அழிந்து பட்டனவாக் கூறப்படும் நூல்களோ ஒரு காலத்தில் பலபுலவர் ஓரிடத்திற் கூடிச் செய்யப்பட்டன அல்ல என்பது அக்கால நிலைகளை ஆராய்வோர் நன்கறியக் கூடும். பல புலவர் முதன் முதலில் தங்கள் கருத்துக்களை ஒருவாறு வெளிப்படுத்திப் பல நூல்கள் அவர்களின் பரந்துபட்ட காலங்களில் ஆங்காங்குப் போகட்டுமறைந்தனர்; அவற்றைத் தொகுக்க முதலில் முற்பட்டவர் அகத்தியர்; அவரது துணையைக்கொண்டு அக்காலத்திய புலவர் அக்காலப் பாண்டியன் துணைக் கொண்டு தாம் தொகுத்தவற்றைச் சீர் செய்து, அவ்விலக்கியங்கட்கு ஏற்றதோர் இலக்கணத்தை (இலக்கியங்கொண்டு இலக்கணம் செய்தலே முறையாதலின்) அகத்தியரைக் கொண்டு செய்வித்தனர்; அங்ஙனமே அவர்க்குப்பின் பல நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றிய தொல்காப்பியர் அகத்தியரைப் போலவே அரசன் துணையும் புலவர் துணையும் பெற்று அகத்தியற்குப் பிற்பட்ட—சிதறிக்கிடந்த பாக்களையும் நூல்களையும் சேர்த்தனர்; அவர்க்குமுன் பல நூற்றாண்டுகளாகக் கிடந்த பாக்கட்கும் அவற்றுக்கு முந்திய அகத்தியத்துக்கும் கால வேறுபாட்டால் உண்டான பல்வகை மாறுதல்களை உளங்கொண்டு, அவற்றுக் கேற்பத் 'தொல் காப்பியம்' செய்தனர்; அவர்க்குப் பின் பல நூற்றாண்டுகள் கழிந்தன; முன்போலவே ஒரு பெரியார் தோன்றி மூன்றும் கூட்டத்தைக் கூட்டி அக்காலத்தில் கிடைத்தவற்றைக் கடைச் சங்க நூல்களாகத் தொகுத்தனர்; என்றிவ்வாறு ஊகிக்க இடமுண்டாதல் காண்க†

எனவே, களவியல் கூற்றில் முச்சங்கங்கள் இருந்தன என்ற அளவில் உண்மையாக இருந்திருக்கக்கூடும்; இன்றேல்,

---

† இங்ஙனம் ஊகித்தற்கும் இடமில்லை எனத் தமிழறிஞர் திரு. K. N. சிவராஜப் பிள்ளை யவர்கள் "பண்டைத் தமிழர் காலமுறை" என்னும் தமது அரிய ஆராய்ச்சி நூலில் விரிவாகக் காரணங்கள் (தமக்குப் புலப்பட்டவரை) காட்டி 18-ம் பக்கமுதல் 26-ம் பக்கம்வரை விளக்கியுள்ளார்கள் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தகும். இறையனார் களவியல் உரையில் மிகச்சிறிய அளவேனும் உண்மையிருக்கக் கூடும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

'செந்தமிழ்' (செப்பஞ் செய்யப்பட்ட தமிழ்) என்ற சொல்லுக்குத்தான் பொருள் என்னை? அதனைச் செம்மைப் படுத்தவாவது ஒரு கூட்டம் கூடி இராதா? ஆனால் களவியல் கூறுமாப் போல ஒரு சங்கம் (சிலமாதங்கள் நடந்திருக்கலாமேயன்றி) ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நடந்திராது—ஒரு போதும் நடந்திராது!! இத்தகைய பொருந்தாவுரைகள் சில இருப்பதாலேயே அவ்வுரையை முற்றும் மறுத்தலும் இயலாது.

அகத்தியரும் முதற் சங்கமும்

"அகஸ்தியர்' என வடநாட்டினின்றும் ஒருவர் தமிழகத்தே குடி புகுந்து, தமிழைக் கற்றுப் பெரும் புலவராகி, 'அகத்தியம்' என்ற நூலைச் செய்தார்" எனக் கூறும் கதையை எப்பக்கம் திருப்பிப் பார்ப்பினும் 'பொய்' என்பதை மும்மொழிப் புலவராய மறைமலையடிகள் அரிதின் ஆராய்ந்து பல்வேறுபட்ட சான்றுகள்காட்டி ஆங்கிலக் கட்டுரைகள் வெளியிட்டு வருகின்றார்கள். 'அகஸ்தியர்—வெறுங் கட்டுக் கதை' எனத் தமிழ்ப் பெரும் புலவர் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் இன்றும் எம் செவியண்டை ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவர் அதுபற்றி அரியதோர் நூலையும் வெளிப்படுத்தியுள்ளனர். பொருள் அறிய அவாவுவோர் 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்'—'அகத்தியர்' என்னும் அவர் இருவர்தம் நூல்களைக் காண்க. 'தமிழகத்தில் அகத்தியர்' என்னும் சிவராஜப் பிள்ளையவர்கள் நூலை யாம் இதுகாறும் காணப் பேறு பெற்றோமில்லை. "அகத்தியர் எனத் தமிழகத்திலே பிறந்து வளர்ந்து சிறந்த புலமை பெற்ற ஒருவர் தொல்காப்பியத்துக்கு மிக மிக முற்பட்ட இலக்கணப் பேராசிரியராக இருந்திருக்கலாகாதோ?" எனின், ஆம். இருந்திருக்கலாம் எனக் கூறுவோம். என்னை? உலகில் ஒவ்வொரு மொழியும் ஒரு காலத்தில் ஒவ்வொருவரால்தான் உயர்வடைந்ததென்பது உலகச் சரிதம் படித்தவர் உணர்ந்ததே. அதுபோன்றே தமிழில் வளர்ச்சியுண்டாக்க விரும்பிய பெரியார் ஒருவர், தம் காலத்திய பாக்களையும் இலக்கணங்களையும் செவ்வழிப் படுத்த விழைந்து, தமிழகத்துப் புலவரை ஒன்று கூட்டி, அக்காலப் பாண்டியன் துணைக்கொண்டு, களவியல் கூறுமாப் போலக் கடல் கொள்ளப் பட்ட '**உத்தர** (தென்) மதுரை'யில் சங்கம் கூட்டியிருக்கலாம். அப்பெரியாரது பெரு முயற்சியால் தமிழ் வளர்ச்சி உண்டானதை நோக்கி அக்காலப் புலவர் 'இவன்

தமிழுக்கு அகத்தியன்' (தேவையானவன்) என அவரது உழைப்பு நோக்கிப் பாராட்டியிருக்கலாம். அங்ஙனம் பாராட்டப்பெற்ற பெயரே அவர் பெயராகப் பிற்காலத்தும் வழங்கப் பட்டதெனக் கோடல் தமிழ் முறைக்குப் பெரிதும் பொருந்தியதே. இவ்வுண்மை நாளடைவில் மறைபட்டுப் புதைபட்டு வடநாட்டு அகஸ்தியக் கதையோடு தொடர்பு படுத்தப்பட்டுப் புராணங்களிலும் பிற்கால நூல்களிலும் ஆபாசமாகப் பொய்யாக வேற்றுருவ அகஸ்தியராக நம் தமிழ்ப் புலவர் பெருமான் மாற்றப் பெற்றார். இம்மடத்தன மாறுதலுக்கு நாம் எவரை நோவது ?

அகத்தியம் என்பது ' அவசரம், தேவை' என்னும் பொருள்களில் வழங்குதலை இன்றும் உலக வழக்கில் காணலாம் பழங்காலப் புலவர் பெயர் ஒன்றும் இக்காலப் பெயர்கள் போல இடுகுறிப் பெயராகப் பெரும்பான்மை இல்லை என்பது, ' இளங்கோ, கோவூர்கிழார், இரும்பிடர்த் தலையார், நப்பசலையார்' போன்ற பெயர்களைக் கொண்டு தெளியலாம். ' பாழி' என்ற ஊரில் செருச் செய்து அதனை எறிந்த (வென்ற) காரணம் பற்றிச் சோழன் ஒருவன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி' எனப் பட்டான். இத்தகையன பல. எனவே, ஒரு பெரும் புலவர் (இறையனர் களவியல் கூறுகிறபடி) முதற் சங்கத்தைக் கூட்டித் தமிழ்ப்பாக்களை வகைபடுத்தி அவற்றுக்குப் பெரியதோர் இலக்கணம் செய்திருக்கக்கூடும்; அவரது இன்றியமையாமையை (அகத்தியத்தை) உணர்ந்து, அக்காலப் பெரியோர் அவரை அகத்தியர் எனப் புகழ்ந்து அழைப்பாராயினர்; இவருக்கும் வட நாட்டு அகஸ்தியருக்கும் ஒருவாற்றானும் தொடர்பில்லை எனக் கோடலே நுண்ணறிவினுக்கும் நூலறிவினுக்கும் பொருத்தமுடைத்து.

இனி, அகத்தியர் காலத்தை விளக்கமுற ஆராய்வோம்* கடலால் கொள்ளப்பட்ட தென் மதுரையில் முதற்சங்கம் நடைபெற்ற தென்ற களவியல் கூற்றில் உண்மையுள்ளது என்பதே எமது நம்பிக்கை ' ஸ்காட் எலியட் ' என்பார் வரைந்துள்ள ' இழந்த லெமூரியா ' என்ற ஆங்கில நூலில் படமொன்றுள்ளது.

---

* எமது ஆராய்ச்சி 'முடிவானது' எனக் கூறும் 'மடமை' எம்பால் இல்லை என்பதை வணக்கத்தோடு அறிவிக்க அவாவுகின்றேம். அறிஞர் இத்துறையில் மேலும் உழைத்து ''முச்சங்கங்கள் இருந்ததெனல் முற்றும் உண்மையே'' என உலகினுக்கு நிரூபணம் செய்தல் வேண்டும் என்பதே நமது பேரவா.

அதனைப் பார்வையிடின், இப்போதுள்ள குமரி முனைக்குத் தெற்கே இமயம்போன்ற பெருமலைத்தொடர்ச்சி ஒன்று தெற்கு வடக்காக நெடுந்தூரம் செல்வதைக் காணலாம். இப்போதைய குமரிமுனைக்கும் இம்மலைக்கும் இடையே ஒருமலையும் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே, கடலால் கொள்ளப்பட்ட 'பன்மலை யடுக்கத்துக் குமரிக் கோடு'[1] இதன் ஒருபகுதியெனத் துணியலாம். அதற்கு வடக்கே இப்போதைய குமரிக்குத் தெற்கே 'நெடியோன் நன்னீர்ப் பஃறுளியாறு'[2] இருந்திருக்கக் கூடும். இவ்விரண்டிற்குமிடையே 49 நாடுகள் இருந்ததாக அடியார்க்கு நல்லார்கூறுதலிலும் பொய்யில்லை என்றே தோற்றுகிறது. 'நாடு' என்பது தமிழகத்தில் சிறிய நிலப்பரப்புடையதே என்பதைச் சாசன அறிவுள்ளார் அறிவர். மேற்கூறப்பெற்ற பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடு இப்போதைய குமரிக்குத் தெற்கேயிருந்த நிலப்பகுதி வழியாகச் சென்று, பின் தென்மேற்காகத் திரும்பி மடகாஸ்கர்வரை சென்றதாகத் தெரிகிறது. லெமூரியாக் கண்டம் கடலால் கொள்ளப்பட்டதற்குக் கால எல்லை பெரிதாகப் போகிறது. அங்ஙனம் அப்பேரழிவு உண்டானபோது சிலப்பதிகாரம் கூறும் குமரிக்கோடு (தொடர் மலையின் ஒரு பகுதி) எஞ்சியதாதல் வேண்டும். அதுவே தமிழகத்தின் பழைய எல்லை. இம்மலைப்பகுதியின் பேரளவையையே முதல் கடல் கோள், பஃறுளியாற்றுடனும் இடைப்பட்ட நாடுகளுடனும் அழித்திருக்கவேண்டும். இக்குமரிமலைப் பகுதியே 'பொதியிற்குத்தென்பால் மஹேந்திரம்; அதனடியில் பொன்மயமான இலங்கை யுண்டு'[3] எனச் சிவதருமோத்திரம் கூறுகிற தெனக் கோடல் பொருந்தும்.

இனி, 'இலங்கைச் சரிதம்' எழுதிய டேன்னேன்ட் என்பார், "இலங்கை, முதற் கடல் கோளில் இந்தியாவினின்றும் பிரிந்தது; அக்கடல் கோள் உண்டான காலம் சுமார் கி. மு. 2387" என்பர். இந்தியாவினின்றும் இலங்கை பிரிந்து நிற்கத்தக்க நிலையுண்டாக்கிய கடல் கோளால் இப்போதைய குமரிக்குத் தெற்கே இருந்த குமரிமலையும் பஃறுளியாறும், அவற்றின் இடைப்பட்ட 49 நாடுகளும் அழிந்ததில் வியப்பென்னை? அங்ஙனம் அழிந்த 49 நாடுகளில் ஒரு நாட்டில் பாண்டியன் தலைநகர்

---

1 சிலப்பதிகாரம்—காதை 11, வரி-19, 20

2 புறம்—9

3 தொல்-எழுத்—கா. சு. பிள்ளையவர்கள் முகவுரை.

'தென்மதுரை' † இருந்ததென்றும், அஃதும் அகத்தியர் காலத்தில் அழிந்துபட்டதென்றும், இப்பெருங் கடற் கோளாற் றுன் பண்டைத் தமிழ் நூல்கள் அழிந்தன என்றும் கொள்வதில் ஐயமுண்டாதல் யாங்ஙனம்? 'ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழர் சிறந்த நாகரிக நிலையில் இருந்தனர்' என மேனாட்டுச் சரித்திர நிபுணர் பலரும் மண்ணூற் புலவரும் ஒத்துக்கொண்ட செய்தியிலிருந்து தமிழர்க்கு மொழியுண்டு, நூல்கள் உண்டு என்ற உண்மை இருப்ப "தாஸ்யுக்கள் (ஆரியர் அல்லார்) பட்டணங்களிலும் கோட்டைகளிலும் பொன் அணிகளோடு பொலிவுறுகின்றனர்" என வேதகால ஆரியரே அழுது புலம்பிய வேதச் சுலோகங்கள் சான்று இருப்ப கி. மு. 2000-க்குச் சிறிது முன் அல்லது கி. மு. 2000-ல் ஆரியர் வடஇந்தியாவிற் புகுந்தனர் என்ற முடிபு இருப்ப அகத்தியர் காலத்தில் கடல்கோள் ஏற்பட்டு 49 நாடுகளை அழித்தது எனச் சிலப்பதிகாரமும் இறையனார் களவியலும் தமிழ் இலக்கிய இலக்கணச் சான்றாக இருப்ப இவற்றின் துணைக்கொண்டு "அகத்தியர் காலம் இலங்கைச் சரிதம் கூறிய முதற்கடல்கோள் காலம், அஃதாவது கி. மு. 2387" எனக் கொள்வதில் இருக்கும் ஐயப்பாடென்னை?*

---

† முதற் சங்கம் கூட்டப்பெற்ற நகரத்தின் பண்டைப்பெயர் வேறு இருந்திருத்தல் வேண்டும் எனச்சிலர் எண்ணுகின்றனர். ஆனால் மிகப் பழைய காலத்திய நகரமாதலினாலும், மேலும் அப்பண்டைக்காலத்திலேயே அது கடல் கொள்ளப்பட்டதாலும், காளடைவில் அப்பெயர் மறைந்திருக்கக் கூடும். களவியல் உரையாளர் அதன் பெயர் 'தென் மதுரை' எனக் கேள்வியுற்றதைக் கொண்டு வரைந்திருக்கலாம். இத்தகைய தவறுகள் மனிதர் சரித்திரத்திலேயே இயல்பு. நமது வாழ்க்கையிலேயே முற்பட்ட செய்திகளைப் பிற்பட்ட நாட்களில் நாமே மறந்து விடுகிறோமெனின் கி. மு. 2300-க்கு முற்பட்ட செய்தியைக் கி. பி. 8-ம் நூற்றாண்டினர் இத்துணையேனும் உளங்கொண்டு எழுதிச் சென்றதற்கு அவரைப் பாராட்டத்தான் வேண்டும். கலித்தொகை 104-ம் செய்யுளில் வரும் கடல்கோள் எக் கடல்கோளைக் குறிப்பதென்றே அறியக்கூடவில்லை யெனின், களவியல் உரையாசிரியரிடம் குற்றம் காணல் எங்ஙனம் பொருந்தும்?

* உலகத்தில் நலநடுக்கோட்டுக்கு அருகேயுள்ள நாடுகளே பண்டைய என்பதும், அவை பண்டையவாயிருந்தபோது இப்போதைய இமயமும் கங்கை சிந்துச் சமவெளியும் இல்லை என்பதும், ஆஸ்ட்ரேலியா கடலில் விழுந்த ஞான்றே, பெருங்கடல் கோளால் (இதுவரை யாம் கூறிவந்த முதல் கடல் கோள் அன்று) பண்டைத்தமிழகமாகிய லெமூரியாக் கண்டம் அழிந்து பட்ட தென்றும் கூறிய இற்றைத் தமிழகத்தே ஆராய்ச்சிப்

நமது தமிழகத்துக்கும் இலங்கைக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டென்பதை நாம் உளங்கொண்டாற்றான், களவியல் கூறும் கடல்கோள் இரண்டிற்கும் 'டென்னென்ட்' கூறும் இலங்கைக் கடல் கோள்கட்கும் மிக நெருங்கிய உறவு உண்டெனக் காட்டலாகும். கி. மு. 2387-ல் நடந்த கடல் கோளுக்குப் பின் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையே கடல் தோன்றிற்று என மேற் கூறினேமல்லவா? இராமாயண காலத்தில் இச்செய்தி (இரண்டிற்கும் இடையில் கடல் இருந்தமை) உண்மை எனவே புலனாதல் வான்மீகி இராமாயணத்தால் அறியலாம். இராமாயண—பாரத நிகழ்ச்சிகள் சரித்திராசிரியர் பலர் கூற்றுப்படி கி. மு. 1400—750 எனக் கொள்ளினும் அக்காலத்தே, இன்று போலக் கடல் இலங்கையைப் பிரித்து நின்றதென்ற வுண்மை மறுத்தல் இயலாது. அக்காலத்தே தான் ஆரியர் தமிழகத்தில் நுழைந்திருக்கக் கூடும், எனச் சரித்திராசிரியரே கூறுகின்றனர் †

இனி 'டென்னென்ட்' என்பார், "இலங்கையில் இரண்டாம் கடல்கோள் நிகழ்ந்தது கி. மு. 504-ல்; அதனால் இலங்கைக்குப் பெருஞ் சேதம் உண்டாயிற்று" என்பர். இந்நிகழ்ச்சி உண்டானது இராமாயணத்திற்குப் பின்னரே என்பது மேற் கூறப் பெற்ற காலத்திலிருந்து நன்கு புலனாகும். நமது சைவாகம நூலாகிய சிவதருமோத்திரம், "பொன் மயமான இலங்கையின் பெரும்பகுதி கடலுள் ஆழ்ந்தது"‡ எனக் கூறுதல் 'டென்னென்ட்' கூற்றை அரண் செய்தல் காண்க.*

பேரறிஞராக விளங்கிய திரு- பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் கூற்று ஈண்டு நினைவில் இருத்தத் தக்கது. செந்தமிழ்ச் செல்வி—முதற் பகுதி, பக். 5, 39, 74-ல் விரிவாக இவ்வுண்மைகளைக் காணலாம். இதனை உளங் கொள்ளின், கடல்கோள் உண்டாதல் முதலிய பற்றிய செய்திகள் ஒருவாறு புலனாகும். "வடபாகம் தாழத் தென்பாகம் உயர்ந்தது" என்னும் காஞ்சிப் புராணச் செய்தி யுள் உள்ள உண்மை இதனுள் காணலாம்.

† V. A. Smith's Oxford History of India, P. 5.

‡ இராமாயணத்தில் 'இலங்கைக்குச் செல்ல அநுமன் மகேந்திரமலையினின்றும் கடல் தாண்டினான்' என்பதும், 'மகேந்திரமும் இலங்கையின் பெரும் பகுதியும் கடலுள் ஆழ்ந்தன' என்னும் சிவதருமோத்திரக் கூற்றும், முதற் கடல்கோளுக்குப் பின்னும், குமரியின் மிக உயர்ந்த மலைப்பகுதி இலங்கைக்கு எதிரே இருந்ததெனக் கொள்ள இடந்தருகிறது.

* "இராவணன் அழிந்தான், இலங்கையும் அழிந்தது" என்னும் பழமொழி சரித்திரத் தொடர்புடைமை அறிதற் பாலது.

இங்ஙனம் இலங்கைக்குப் பேரழிவு உண்டாக்கிய கடல்கோளே தொல்காப்பியர் வீற்றிருந்து தமிழாராய்ந்த பாண்டியன் தலைநகரான கபாடபுரத்தையும் அழித்தது எனக்கோடல் எவ்வாற்றானும் தவறாகாதன்றோ? கபாடபுரத்தையும் அதனையடுத்த கடல் சார்ந்த நிலப்பகுதியையும் குமரியாற்றையும் இரண்டாம் கடல் கோள் கொள்ளை கொண்டது.**

இவ்விரண்டாம் கடல்கோள் ஏற்படுதற்குச் சிறிது முன்னரே தொல்காப்பியர் கபாடபுரத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றி இருத்தல் வேண்டும். இன்றேல் "வடவேங்கடம் தென்குமரி" எனப் பனம்பாரனார், தமிழகத்தின் தெற்கெல்லையாகக் குமரியாற்றைக் கூறியிரார் என்க. கடல்கோளுக்குப் பின் தொல்காப்பியம் இயற்றப்பட்டதென்பது சிலர் கொள்கை. ஏனெனில், 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' கடல் (கோளுக்குப் பின் குடிகட்கு வேற்று நிலங்களைக் கொடுத்தவன்) எனப் பாயிரத்தில் அரசன் கூறப்படுதலின் என்பர். அது பொருந்தாது. என்னை? 'பிற நாட்டுப் பகுதியை வென்று தன் நாட்டுக் குடிகட்குத் தரும் போர்த் திருவினையுடையவன்,[1] என அவனது பெருமையைக் கூறவந்த தொடரேயன்றி, அஃது, அவன் கடல்கோளுக்குப் பின் தொல்காப்பியம் செய்யப்பட்டதாயின், அது செய்தற்கு உறு கருவியாக இருந்த இலக்கண இலக்கியங்கள் எங்கே? தொல்காப்பியம் மட்டுமே இருப்ப, அவை எங்கொளித்தன?' என்பன போன்ற கடாக்கட்கு விடையின்மை யறிக.

ஆயின், 'தொல்காப்பியம் — கடல்கோளுக்கு முற்படச் செய்ததாயின், அதுமட்டும் உயிர் பெற்றிருத்தல் எங்ஙனம்?' எனிலோ, தொல்காப்பியர் அப்போது உயிரோடிருந்ததால் அது பிழைத்ததென்க. கடல் வெள்ளம் திடீரென வருமாயின், அவரவர் தம் உயிரையே சிறப்பாகக் கருதுவர். அம்முறையில் தொல்காப்பியர் தம்மையும் தம்முயிர் போன்ற தொல்காப்பியத்தையும் காத்துப் பிழைத்தார் என்க. அவரோடிருந்த ஏனைப்

** இந்த நாட்டை ஈடுசெய்யப் பாண்டியன் சோழனுக்கும் சேரனுக்கும் உரித்தான 'குண்டூர்—முத்தூர்' என்னும் இரு சிறிய நிலப்பகுதிகளைக் கைப்பற்றினான் எனக் கூறுவதால், இக்கடல்கோள் இலங்கைக்குப் பேரழிவைத் தந்தது என்பதும், தமிழகத்தைப் பெரிதும் பாதிக்காமல் இருந்தது என்பதும் நன்கு புலனாம்.

1. இளம்பூரணர் உரை.

புலவர் தாம் செய்திருந்தன எவையேனுமிருந்திருப்பின் அவற்றோடு மீண்டிருப்பர். அங்ஙனம் அவர்களால் காப்பாற்றப் பெற்றவையே இப்போதுள்ள நூல்களில் ஆங்காங்குக் காட்டப் பட்டுள்ள அடி—நுனி அற்ற மேற்கோள்கள் என்க.

எனவே, இதுகாறுங் கூறியவற்றால், கி. மு. 504-ல் 'இரண்டாம் கடல்கோள் இடையிட்ட காலத்தே நிலந்தரு திருவிற் பாண்டியன் முன் கபாடபுரத்தில்[1] தொல்காப்பியர் தம் நூலை அரங்கேற்றினார்; அதுபோது இருந்த அகத்தியம், பூதபுராணம் மாபுராணம், இசை நுணுக்கம் இன்னோரன்ன நூல்களும், அகத்தியர்க்குப் பிற்பட்டு தொல்காப்பியர் கால அளவு வரை இருந்த எண்ணற்ற இலக்கியங்களும் இருந்த அலைவாய், அலைவாய்ப்பட்டது; எனவே, தொல்காப்பியமும் பிற நூல்களில் எஞ்சிச் சிதறுண்ட சில பகுதிகளுமே இதுகாறும் நின்று நிலவலாயின' என்பன நன்கறியலாம்.

"கி. மு. மூன்றும் நூற்றுண்டில்தான் புத்தமதமும் சமண மதமும் தமிழகத்தே நுழைந்தன. தொல்காப்பியம் முழுவதிலும்—ஓரிடத்திலேனும் புத்தமதம்—சமணமதம் என்பவற்றின் கொள்கைகளோ பிறவோ பேசப்படவில்லை. எனவே, தொல்காப்பியம் கி. பி. 4-ம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டது என எக்காரணம் கொண்டும் கூற இயலாது."[2]

[கி. மு. 306-ல் மூன்றும் கடல்கோள் இலங்கையில் உண்டாயிற்றென்றும், ஆனால் குறிப்பிடத்தக்க பெரு விபத்தில்லை என்றும் 'டென்னெண்ட்' கூறுவதால், யாமும் அதைக் கவனிக்கத் தேவையில்லை.]

ஆசிரியர் அகத்தியனார் கி. மு. 2000 ஆண்டுகட்கு முற் பட்டவராதலாலும், தொல்காப்பியர் கி.மு. 6-ம் நூற்றுண்டினர் ஆதலாலும், தொல்காப்பியர் அகத்தியத்தோடு பல்வேறு இலக்கண நூல்களை[3] நன்குகற்று, இலக்கிய நூல்களையும் பிழை யறக் கற்று இருந்த பான்மையாலும் அகத்தியரையோ

---

1. இதனையே தமிழர் 'அலைவாய்' என்பர்; இராமாயணம் 'கபாட புரம்' என்னும். சரித்திராசிரியர் கொண்டுள்ள கருத்துப்படி இராமாயணத்தில் உள்ள முதற்பகுதி எழுதப்பட்ட காலம் கி. மு. 6-ம் நூற்றுண்டாகக் கொள்ளினும், இஃது உண்மை எனப் பெறப்படுதல் காண்க.

2. T. R. Sesha Iyangar's 'Ancient Dravidians', P. 109.

3. Ref. இளம்பூரணர் 'பாயிரவுரை'.

வேறொருவரையோ குறிப்பாகக் கூறாது, தம் சூத்திரங்களில் "என்மனார் புலவர்", "என்ப", "என்றிசினோர்" எனப் பலபடத் தம் முன்னோரைக் குறிப்பாராயினர்.

ஆரியர் தமிழ் நாட்டிற் குடி புகுந்தது கி. மு. 1000 எனச் சரித்திராசிரியர் கூறுதலால், தொல்காப்பியர் காலத்தில் ஆரியர் தமிழகத்தே நிலைத்திருந்தனர் என்பதும், அவர்தம் வேத—இதிகாசப் பழக்க வழக்கங்கள் வேரூன்றத் தொடங்கின என்பதும் உணரலாம். 'அவர்கள் இனித் தமிழகத்தை விட்டுப் பெயரார்' என்பதைத் தொல்காப்பியர் நன்குணர்ந்தார்; அவர்கள் பாணினிக்கு முன்[1] தமிழகம் போந்தவராதலின், அவர்கள் தம்மோடு கொண்டுவந்திருந்த வேத காலத்திய 'ஐந்திரம்' என்ற இலக்கணத்தையும் தொல்காப்பியர் வடமொழிப் பயிற்சி பெற்று ஐயந்திரிபறக் கற்று, ஆரியர் மொழி அமைப்பையும் நன்கறிந்தார்; அக்காலத்தே ஆரியர் மொழிகள் சில தமிழரோடு ஆரியர்க்கேற்பட்ட நெருங்கிய தொடர்பால் சிதைந்து தமிழில் வழங்கிவருதலையும் கண்டார்; தமது தமிழ் மொழியில் முன்னோர் இயற்றிய இலக்கண—இலக்கிய நூற் சாரத்தையும் 'ஐந்திரம்' என்ற வடமொழி இலக்கணப் போக்கையும், தம்காலத் தமிழக நாகரிகத்தையும் ஆரியர் பழக்க வழக்கங்களையும் நன்றாக மனத்தமைத்துச் சுருக்கமாக 1600-க்கு மேற்பட்ட சூத்திரங் கொண்ட நூலாகச் செய்தனர்.

இரண்டாம் கடல் கோளுக்குப்பின் இஃதொன்றே நிலைத்ததாதலினாலும், இந்நூல் தொல் (பழைய) காப்பிய (ங்களின் அகம்-புறம் பற்றிய) பொருள்களைப் 'பொருள் அதிகாரம்' எனத் தன் அகத்தே பேரளவில் (சூ. 666-ஆகக்) கொண்டும், ஏனைய எழுத்து (சூ-483), சொல் (சூ. 464) எனத் தனித்தனியே சிறிய அளவில் கொண்டும் விளங்கிய பான்மையாலும், 'பொருள் இன்றேல், எழுத்தும் சொல்லும் பெற்றும் பெற்றிலேம்' என்னும் பேருண்மையை உளங்கொண்டு ஈற்றதிகாரம் செய்யப் பெற்றதாகத் தோற்றிய பெருமையாலும்—இப்பெரு நூலை இலக்கணமாகக் கருதாது 'தோல்—காப்பியம்' ஆகவே பனம் பாரனார் கொண்டதாற்போலும், அப்பெரியார்,

'தோல்—காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி'

எனத் தம் பாயிரத்துள் பாராட்டுவாராயினர்!

---

1. பாணினிகாலம் கி.மு. 7-ம் நூற்றாண்டு என்பது சரித்திரமுடிபு.

எல்லா நூல்களும் அழிந்தொழிய, 'இஃதொன்றைச் செய் தவனே பல் (புலவர்—2-ம் கடல்கோளுக்குமுன் இருந்தழிந்த புலவர்தம்) புகழ் (நூற்புகழை) நிறுத்தித் தம்நூலில் காட்டிய தன்மையன் என்னும் 'முழுமுதல் உண்மை'யை உணர்ந்தே போலும் பனம்பாரனர்,

"பல் புகழ் நிறுத்த படிமையோன்" எனவும், 'தொல்-காப்பியம்' அளித்த புலவரைத் 'தொல்-காப்பியன்' எனவும், பலபடப் பாராட்டுவாராயினர்!

முற்றிய தமிழ்ப் புலமையோடு வடமொழிப் புலமையும் (ஐந்திரம் என்ற இலக்கணத்தால்) பெற்ற வாய்மையன் என்பதைச் சிறப்பாக விளங்கக் கருதியேபோலும் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனப்பனம்பாரனர் பாயிரம் பறையடிப்பது. பாயிரத்துப் பன்னிரண்டடிகள் சிறப்பாகவும், பாயிரம் முழுவதும் பொதுவாகவும் படித்துப் படித்துச் சுவைத்தற்குரியன.

"அகத்தியர்க்குச் சுமார் 2000 ஆண்டுகள் பிற்பட்ட தொல்காப்பியர், தமக்கு மிக-மிக முற்பட்ட அகத்தியத்தைக் கற்றிருக்கவும் கூடுமோ? அத்துணைக்காலம் அந்நூல் தமிழகத்தில் இருந்திருக்க இயலுமோ?" எனத் தமிழுக்குத் தொன்மை தரலாகாதென்பதையே தம் உயிர்வாழ் நோக்கமாகக் கொண்டிருப்போர் சிலர் கடாவலாம். அவர்க்கு யாம் அறைவதாவது: "ஐயன்மீர், சுமார் கி. மு. 2000-க்குச் சிறிது பின்னுகச் செய்யப்பட்டதாகக்கூறப்படும் வேதங்கள் இன்றும் (4000 ஆண்டுகளாக) நிலைத்திருக்கின்றன அல்லவா? அவற்றை ஆரியர் எங்ஙனம் தம் உயிரினும் மேலாகக் கருதியிருந்தனரோ—கருதிப் பாதுகாத்தனரோ, அதுபோன்றே தமிழரும் தம்முயிரினும் சிறந்த அகத்தியத்தைக் கி. மு. 6-ம் நூற்றுண்டுவரை பாதுகாத்தனர். வடநாட்டில் வேதங்களை கொள்ளைகொள்ளக் கடல்கோள் இல்லை. எம் தீவினை—தமிழகத்தில் கடல் கோளாகப் புகுந்து அகத்தியத்துக்கு உறு கருவியாக இருந்த முதற்சங்க நூல்களையும், தொல்காப்பியத்திற்கு உறுகருவியாக இருந்த இடைச் சங்க நூல்களையும் இருமுறை கொள்ளை கொண்டது! அம்மட்டோ! தமிழகத்தின் தொன்மை நாகரிகமே சிதைந்தது; சிலர் 'தமிழுக்குரியது ஒன்றுமில்லை, யாவும் ஆரியத்தினின்றே வந்தது' எனக் கூறும் நிலைக்கும் வந்தது" என்பதே.

(தொடரும்.)

தியாகராசர் பள்ளேசல்

தமிழ்ப்பேராசிரியர். திரு. L. உலகநாத பிள்ளையவர்கள்

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 6. பக்கம் 234.)

நடவு செய்தற்குப் பள்ளத்திகளை அழைத்தல்

மங்கையாடக் குடிலச் சடிலமருவுதாளமாடவே
மார்பிற் செங்கழுநீரிற் பைந்தொடை மணிப்போற்றோடுமாடவே
கங்கையாடத் திங்களாடக் கனக தண்டினிலாடுவோர்
கமலை வாழு மமலர்மேவு கயலுலாவும் வயலுளே
செங்கையாட வளைகளாடத் திரளுந் தாளமாடவே
சேலையாட மாலையாடச் சேலை நேர்விழியாடவே
கொங்கையாடக் குழைகளாடக் கொடியிடை துவண்டாடவே
கொந்தளாடவி யாடவே கூடி நடவா பள்ளீரே (56)

வேறு

பள்ளத்திகளின் பெயர்

தீத்தாளுடன் காத்தாளுலகாள் திருவாளுட னிருவாளிளையாள்
சிவந்தா ளுடன் துகந்தா ளரியாள் சின்னாள் பெரியாள்
கூத்தாளுடனெழுவாள் வழியாள் குழைஞ்சாளுடன் குளுந்தாள்
[தொடர்ந்தாள்
குயிலாளுடன் மயிலாள் தையலாள் குரவைகளிடவே
பூத்தாரணி சடைமுடி யசையப் பூங்கமலத் தாளிணை வருந்த
புண்டரீகத் திருமுகம் வேர்வெழப் பொற் குழை யசைய
நாத்தான் புகழ் நாவல னேவலின் நள்ளிருளிற் றூதென வீதியில்
நடந்தான் கமலாலயக் கழனியில் நடவா பள்ளீரே (57)

வேறு

படித்த செந்தமிழ்க்கவிதை சுந்தரன் பரவைக் கிரவில் விடுக்கவே
பாதஞ் சிவக்கத் தூதுநடந்த பரமர் கமலை வயலுளே
முடித்த குழலுஞ் சரியக் குரவை முழக்கிவயலி லுழக்கியே
மொண்டு மதுவை யுண்டு முடியை முடுகிக் கடுகி நடுகைக்கே
வெடித்த கமல மடுத்த குவளை விரவுக் குமுத மொருவியே
மேவியே யெதிர் தாவியே நகை விரும்பிச் சுரும்பு திரும்பவே
அடித்தபோது மகன்றிடாம லகன்ற பூங்குழற் காட்டிலே
அளிகுலம்பல களித்தடர்ந்திடும் அதிசயம் பாரும் பள்ளீரே (58)

வேறு

ஆல கந்தரர் கமலை நாயகர் ஆடல் வேள்தனை யெரித்தவர்
சூல கங்கணர் பாணி சங்கரர் துலங்கு பண்ணை வயலுளே
நீல கொந்தள மேக பந்திகள் நெடுகச் சரிய நடுகைக்கே
கோலக் கொண்டையை பார்வைக் கெண்டைகள் கூடிப்பாய்வது
[பாரும் பள்ளீரே (59)

வேறு

கந்த மருவுங் கடுக்கைச் சடையர் கமலைசூழும் பயிரெல்லாம்
தந்தை யனைய தாதைபோல் தளர்ச்சியேயன்றி வளர்ச்சியாய்
உந்து கருணை முனிவர் நினைவு உருவம் போலக் கருவதாய்
விந்தை பயிலு மாலைப்பூமியான் விளங்கு புகழ்போல்
விளைந்ததே (60)

வேறு

தெண்டிரை நஞ்சுண்ட கண்டன் தேவாகண்டன்
தென்கமலை வாவிசூழும் நன்கமலைக்கே
கொண்டகதிர்ச் செந்நெலா ளிட்டறுத் தேற்றினேன்
கூலிபண்ணை மரக்காலாற் கோலியளந்தேன்
அண்டமுக டளவாக மேருகிரிப்போ
லாயிரம் போர் விதைப்போராய் வேறுகட்டினேன்
கண்டபொலி தூற்றி முதல் கண்டளக்கவே
கண்காணிக்க வேணும்பண்ணைக் காரனு ராண்டே (61)

வேறு

வளவினுஞ் சற்று மிராள் சுற்றித்திரிவாள் வன்மீகப் பள்ளத்தியென்
[வார்த்தையுங் கேளாள்
தளராமற் சோறுமிடாள் கறியுமிடாள் தாய்க்கொளித்த சூலுண்டோ
[தஞ்சம் வேறுண்டோ
அளவாய களியாட்டமாய்ப் பண்டமும் பாராள் ஆருடன் முறையிடுவே
[னுண்டவர்க்கல்லால்
இளையாளைக் கொண்டவன்றே வெம்பகையானுள் இத்தைநாளும்
[சொல்லக்கூசியிருந்தேனுண்டே (62)

வேறு

மாயக்கள்ளி குள்ளியவள் சீரங்கப்பள்ளி வந்தவன்றே பள்ளன்மிகச்
[சிந்தைவேருனன்
காயப்போட்ட வயலுக்குத் தண்ணீரும் பாச்சான் கட்டுச்சூடும்
[களப்பேற்றில் விட்டதுந்தாரான்
பாயில் கிடைபோலக் களவாகிக் கிடப்பான் படிகேட்டாலவளுக்கே
[பாச்சியளப்பான்
தாயத்தாரை வெல்வதும் உபாயத்தாலேபோல் தாருமாருய் என்கொடுமை
[சாற்றினேன் ஆண்டே (63)

ஏசல்

என்னையென்னையாண்டைமுன்னே சொன்னதென்னடி
உன்னையேசியதோர் பள்ளனோடே பேசொணுதோடி
பேசினுலு மேசினுலும் சீரங்கப்பள்ளி யுன்றன்பேரில் மருந்தாசை
[யிந்தப்பாரிலுள்ளதோ
பாரிலுள்ள மருந்தினுல் வன்மீகப்பள்ளி பள்ளனையும் வசமாக்கிக்
[கொள்ளொணுதடி
வசமாக வுன்னைப்போல் மருந்தார் வல்லார் மருந்திட்டான் ஐவருக்குன்
[மாயனல்லோடி
மருந்திட்டான் மாயனென்ருய் உங்களாண்டைபோல் வஞ்சகரிபரியாக
[மாயஞ்செய்தானே
குற்றிடை யிடைச்சியர்கள் கூறைகவர்ந்தே குருந்தேறினுனுங்கள்
[கொண்டலல்லோடி
நற்றவர்தம் மங்கையரை தாருவனத்தில் நாணழிவு செய்தானுங்கள்
[நாதனல்லோடி
மாதினுருவாகிவந்த சீதைதன்னையு மாமியையுங் கொண்டானுங்கள்
[மாயனல்லோடி
காதலுமை பங்கிருக்கக்கங்கை சடைமேல் காணவந்தானுங்கள்
[கறைக்கண்டனல்லோடி
தாடகைதன் பெண்பழியைச் சற்றுமெண்ணுமல் தாண்டியாடல்
[செய்தானுங்களாண்டையல்லோடி
வாடிமுகம் நாணவரு காளியுடனே வாதுசெய்தா னுங்களுடை
[நாதனல்லோடி
பாவலவ ஞெருவனுக்கங் கேவலாளாகிப் பாய் சுமந்தானுங்களுடை
[மாயனல்லோடி
தாவு புகழ் புலவர்க்கு மண்ணுமன்றியே சாணகம் சுமந்தானுங்கள்
[தாணுவல்லோடி
அந்தமுடனன்றரசரைவரேவவே யன்று தூது சென்ருனுங்க
[ளாண்டையல்லோடி

சுந்தரன் விடுத்தபோது அந்த இரவில் தூதுசென்றானுங்களுடைச்சோதி
[யல்லோடீ
கூச்சமற பேய்ச்சி முலைப் பாலு முயிருங் கொண்டவனு முங்கள்
[கருங்கொண்டலல்லோடீ
எச்சென்னாமல் வாச்சுதென்று வேடனுதவும் எச்சில்தின்றானுங்களுடை
[யீசனல்லோடீ
மட்டுப்படாத் துட்டத்தனம் செய்தசோதைதன் மத்தடி யுண்டானுங்கள்
[கத்தனல்லோடீ
பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியன்கையாற் பிரம்படி பட்டானுங்கள்
[பிரானல்லோடீ
ஆட்டுக்காலுக் காசையாகிக் கோட்டுப்பன்றியாய் அன்று தேடிச்சென்றா
[னுங்களாண்டையல்லோடீ
மோட்டுப்பன்றி யாயன்று குட்டிதனக்கு முலையுங் கொடுத்தா னுங்கள்
[முத்தனல்லோடீ
ஆனிரையைக் காத்தளிக்கக் கோலுங் கையுமாய் ஆயனானா னுங்களுடை
[மாயனல்லோடீ
மானிலத்தில் வேடனாகு மீனமன்றியே வலையனு மானானுங்கள்
[மத்தனல்லோடீ
வீடுதோறு மாச்சியர்கள் காச்சியபாலும் வெண்ணெயுந் திருடினானுங்கள்
[கண்ணனல்லோடீ
கூடுபுக ழமர்நீதி வீடதனிலே கோவணந் திருடினானுன் தேவனல்லோடீ
வரமான மாவலிபால் வாமனாகியே மண்ணிரந்தா னுங்களுடை
[கண்ணனல்லோடீ
பிரமன்றன் சிரந்தன்னைக் கரமேந்தியே பிச்சை யிரந்தானு முங்கள்
[பித்தனல்லோடீ
ஏறுபுகழ்தேர் விசையன் ஏறு தேரின்மே லீண்டுபரி தூண்டினானுன்
[னாண்டையல்லோடீ
மாறிலாத மாறனுக்குக் குதிரை யாளாய் மதுரையிற் சென்றா னுங்கள்
[மத்த னல்லோடீ
வண்மையான ஒருமுனி மங்கை தனக்கே மாலுமானானுங்களுடை
[மாயனல்லோடீ
பெண்மைவீறு மியற்பகை மங்கைதனக்கே பித்தனானானுங்களுடைப்
[பித்தனல்லோடீ
படுக்க வோர் பாயுமின்றிப் பாம்பு தன்னிலே பள்ளிகொண்டானுங்க
[ளுடை வள்ளலல்லோடீ
உடுக்க வோர் துகிலின்றியன்று புலியி னுரிதன்னை யுடுத்தானுன்
[னரனல்லோடீ

சற்றவரை வெற்றி செய்யுங் காமஞர் தம்மை காற்றிலேற வைத்தவனுன்
[கண்ணனல்லோடீ
பெற்றகரி முகவனுக் குற்ற பரியாய்ப் பெருச்சாளியளித்தானுன்
[பித்தனல்லோடீ
வாவிதன்னில் மேவுமொரு வன்கழுவின்மேல் வண்டுருவா யிருந்தானுன்
[விண்டுவல்லோடீ
பூவிரியுந் தென்கமலைப் புற்றினிடத்தே செல்லாப் புக்கிருந்தா
[னுங்களுடை நக்கனல்லோடீ
வைக்குமன்று தஞசமான கஞ்சனுகிய மாமனையுங் கொன்றவனுன்
[மாயனல்லோடீ
தக்கனெனும் மாமனை மிக்கவேள்வியில் தலையறுத் தானுமுங்கள்
[தாணுவல்லோடீ
கறுத்தன்று கறைக்கண்டன் காமனைக்கொல்லக் கண்டிருந்தானுங்களுடைக்
[கண்ணனல்லோடீ
சிறுத்தொண்டன் மகன்றன்னையறுத்திடவே சிந்தை மகிழ்ந்திருந்தானுன்
[சிவனல்லோடீ
கொட்டமே செய்யுங் குரக்குத் துட்டசேனையைக் குறைவறப் படைத்
தானுன்னிறைவனல்லோடீ
நெட்டலகைப் படைசூழச் சுட்ட சுடலை நின்று நடஞ் செய்தானுங்கள்
[நித்தனல்லோடீ
ஒருக்காலே யுமைபாக னருக்கன் பல்லை யுதிர்த்தாற் போனுன் பல்லை
[யுதிர்ப்பேனேடீ
தருக்காலே திருக்கேள்வன் தந்தியின் பல்லைத் தகர்த்தாற்போ
[லுன்பல்லைத் தகர்ப்பேனேடீ
பாசமெறி காலனை யீசன் காலாலெற்றினுற் போலுனைமார்பிலெற்றுவே
[னேடி
ஓசை கொள்ளச் சகடுதன்னைக் கேசவன் முன்னம் உதைத்தாற்போலுனை
[மார்பிலுதைப்பேனேடீ
கிள்ளைமொழி பாகனன்று வொண்புலி வாயைக்கிழித்தாற் போலுன்
[வாயைக் கிழிப்பேனேடீ
பிள்ளையுரு வாகி மாயன் புள்ளின்வாய் தன்னைப் பிளந்தாற் போலுன்
[வாயைப் பிளப்பேனேடீ
பேசரிய வீசனன்று தக்கன் வயிற்றைப் பீறினுற் போலுன் வயிற்றைப்
[பீறுவேனேடீ
கேசவ னிரணியனைக் கூச வுகிராற் கீறினுற்போலுன்வயிற்றைக்
[கீறுவேனேடீ

தோற்ப தன்றி வென்றியான் வாக்கி மூக்கினைத் துணித்தாற்போ
[லுன்மூக்கைத்துணிப்பேனடீ
ஆற்பரவ மான மாயன் சூர்ப்பணகை மூக் கரிந்தாற்போ லுன்மூக்கை
[யரியேனடீ
பாழ்படவே பார்க்கரன் கண்ணை வேள்வியி லெங்கோன் பறித்தாற்போ
[லுன்கண்ணைப் பறிப்பேனடீ
சேழ்பரவு கேசவன்முன் சுக்கிரன் கண்ணைக் கெடுத்தாற் போலுன்
[கண்ணைக் கெடுப்பேனடீ
அன்று முயலகன்மீது நின்று பரமன் அடர்த்தாற்போ லுன்மீதில்
[நடப்பேனடீ
துன்றுமுடி கன்ற மாயனன்றுரகனைத் துகைத்தாற்போலுன்றனையான்
[துகைப்பேனடீ

வெண்பா

ஆதார மானதிரு வாரூர ரேநீதி
வேதா கமங்கள் விரும்பியே—காதல்
விருந்து காமனையும் வென்றநீர் மாதர்க்
கொருந்து செல்லலா மோ.

வேறு

கைத்தலங்கொள் திகிரியெறிந்து கதிர் மறைத்தவன் கண்ண னல்லோடீ
பத்தர் சூழ் கமலைப்பிரான் கைப் பணியின் வாய்க்கது பத்துமோடீ
வழியில் நின்றிடு கல்லைப்பெண்ணாக வகுத்தவ னெங்கள் மாயனல்லோடீ
அழிதரும் மங்கத் தைப்பூம் பாவை யாக்கினன் ஞானசம்பந்தனல்லோடீ
மாறுகொண்டொரு மீனெனக் கடல் வந்தடைந்தவனெங்கள் மாயனல்
[லோடீ
கூறுமந்த வருங்கடல் தானும் எங்கள் குறுமுனிவன் குடித்ததல்லோடீ
செங்கண் மாயவனன்று வேழ மளித்த திருவருளைத் தெளிந்திலையோடீ
வெங்கரா வுண்டமாயனைச் சுந்தரன் மீட்டமேன்மையும் கேட்டிலையோடீ
எங்கும் மானிரை காக்க வரையை எடுத்து மாரி தடுத்தா னெங்களாண்டை
[யல்லோடீ

யோங்கு மேரு நெடுங்கிரியைப் புண்டரீக ஒருகரத்திற் கொண்டானென்
[னுண்டையல்லோடீ
இறுகு வச்சிர நொச்சுகொள்வேலேயிடத்தில் இலங்கையையழித்தா
[னென்னுண்டையல்லோடீ
முறுவ லற்ப மரும்பி விரும்பலர்தம் முப்புரங்க ளெரித்தானெங்க
[ளாண்டையல்லோடீ
ஈண்டுவெம்பாரதஞ் செய்து மைவர்க்குயிரீந்தா னென்னுடை யாண்டை
[யல்லோடீ
தாண்டவஞ் செய்து சூலமேந்தி சர்வ சங்காரஞ் செய்தானென்னுண்டை
[யல்லோடீ
முடிகவித்து விபீடணர்க் கன்றரசாள மூதிலங்கை கொடுத்தா னெங்க
[ளாண்டையல்லோடீ
முடிவிலா மறைவனந் தன்னிலெலிக்குமூவுல கீந்தானென் னுண்டை
[யல்லோடீ
பாடகம்புனே யுத்தரதற் கரி பாவை ... ... யல்லோடீ
ஆடல்மேவு கல் லானே யருந்தக் கொழுங்கரும்பு கொடுத்தா னென்
[னுண்டையல்லோடீ
கேசவனே யேசுவதிங் கேது சொல்லடி கிட்டிப்பார்க்கிலவர்க்கவரிட்ட
[மல்லோடீ
யீசனே யேசுவதிங் கேது சொல்லடி யிருவர்க்கு முறவன்றிப் பகையு
[முண்டோ
அன்று எங்கள் கண்ணனுங்கள் சங்கரனுக்கே அடுத்ததங்கையை யன்று
[கொடுத்தானல்லோடீ
மன்றல் கமழ்தென் கமலேத்தேவரகண்டன் மாலுக்கன்று செந்திருவைப்
[பாலித்தானடி
வைய முண்ட எங்களையன் வையம்பாகியே மாதேவன் பற்றலரை
[வதைத்தாண்டி
ஐயமின்றி யெங்களண்ண னுங்கள்மாலுக்கே அக்காலத்திற் சக்கரமொன்
[றளித்தானடி
ஓசைமணித் தேரின்மிசையீசனூர் தம்மை யோடிவிடையாகிமாயன்
[தாங்கினனடி
கேசவன்றன்னே ... ... மற்றொருபாகந்தன்னி
[லேற்றினனடி
மறந்திடா யென்பிழையை யன்புகூரவே வன்மமாக எண்ணுதே நீ
[வன்மீகப்பள்ளி
சிறந்து நாமிருவருங்கூடியாடியே சேர்ந்துவாழவேணுங்காணுஞ்
[சிரங்கப்பள்ளி

வேறு

நற்கவிதை கொண்டு பள்ளுவர்க்க முரைத்த ஞானப்பிரகாசன் வாழி
[நற்புவிவாழி
விற்குலவு மாறன்மிசை மானேறுங்கையான் வித்தியாதிபதிமுதலி
[மெய்ப்புகழ் வாழி
சற்கமலை நகர்வாழி சாமந்தன் வாழி தானமும் பரிகலமுந் தழைத்துவாழி
மற்குலவு திண்புயத்தான் மல்லைய பூபன் வாழி பூமியான் எந்நாளும்
[வாழி வாழியே

வெண்பா

ஆண்ட புகழ்க்கமலை யத்தரே போர்விசையன்
பூண்டசிலை தாக்கப் பொறுத்தீர்—ஈண்டு
வெறுப்பதுவே யானாலு மெய்யடியேன் புன்சொல்
பொறுப்பதுமக் கன்றோ புகழ்.

தியாகராசர் பள்ளேசல் முற்றிற்று.

உ

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 7. பக்கம் 274.)

இயல் உ—காட்சி உ.

உறுப்பினர் :—தகடூர்த்தேவி; அதியமான்; காவலன்; பெரியார்.

இடம் :—அதியனின் இருக்கை.

காலம் :—பகற்பொழுது.

[அதியமான், நெல்லிக்கனி பெறும் நெறியை அறிதல்]

(தகடூர்த்தேவியும் அதியனும் இனிதிருத்தல்)

தகடூர்த்தேவி:—நாதா! மலர்ந்த தாமரைபோன்ற தங்களது வதனம் இன்று என்றுமில்லாதவாறு பொலிவு குன்றியுளதே? அடியாளிடம் பலதடவைகளில் ' கவலையே மக்களது வாணுட்கு உலைவைக்கும் காலன் ' எனக் கூறக்கேட்டுளேனே. அவ்வாறு கூறும் தங்களை இப்போது கவலையினுட்படுத்தியது யாது என, அடியவள் அறியலாகுமா?

அதியமான் :—தேவி! நன்று நின்கேள்வி. யான் இதுகாறும் நின்பால் ஒளித்தமை யாதேனும் உண்டோ? பெறுதற்கரிய இம்மக்கட் பிறவியில் நாம் வல்லுடம்பும், நல்லிசையும், செந்நிலையும், பல்நலனும் ஒருங்கேப் பெற்றோம்: இன்னும் கல்வி நலனும் செல்வமுயர்வும் உற்றோம். எனினும் சின்னாட்களாக இவையனைத்தையும் இல்பொருளாக்கி, என் உளத்தை ஏதோ ஒன்று கலக்குகின்றது.

தகடூர்த்தேவி :—என்பெரும! தங்கள் கருத்து எனக்குப் புலனாகவில்லை. கல்வி, செல்வம், நல்லுடல் நற்புகழ், இவற்றோடு நன்னிலையுற்ற தங்கட்குக் கருத்தழியுமாறு உளது பின்னர் எதுவாகுமோ ?

அதியமான் :—கற்பின் கொழுந்தே! அன்று நம் இல்லம் மேவிய ஒளவைப்பிராட்டியின் இன்பம்நிறைந்த பொன்மொழிப் பாக்களை பருகித் திளைத்துப் பொழுதினைக்கழித்த என்மனம், என்றும் அத்தகைய அமுதமொழிகளையேப் பெறுதற்குரிய நெறியைநாடி நலிவுறுவதால், என்முகம் இதுபோது இவ்வாறு வாட்டமுறுகின்றது.

தகடூர்த்தேவி :—என்உயிரே! தங்கள் உரை எனக்குமிகுந்த வியப்பைத் தருகின்றதேயன்றி எளியவளின் ஐயத்தை அகற்றிற்றில்லை. பரிசில் பலபெறும் அரிசில்கிழார், நன்மொழி பயிலும் பொன்முடியார், பாவலர் பரவும் பரணர்; அருஞ்சிறப்பு மிகு பெருஞ்சித்திரனார் என்னும் பல நல்லிசைப் புலவர்களின் நடுவே நாளும்வாழும், தங்கட்கு அக்குறை இருப்பதாக யான் அறிந்திலேனே.

அதியமான் :—நாணின்பாவாய்! நீ குறித்த குறை இல்லையென்பது உண்மையே. எனினும் அப்புலவர் பெருமக்கள் கூறும் பொன்மொழிகளை, நாளும்கேட்டு, அளவிலா இன்பமுற்று வாழுதற்கு ஏற்றவாறு, நீண்ட வாணாளைப்பெறும்நெறி, எதுஎன ஆயும் கருத்தே, என்நெஞ்சை வருத்துகின்றது. எந்நிலமொழியும் தன்அடி தொழுதெழ, மன்னுயிர் யாவும் பன்னலம் மேவ, தண்ணளிசுரக்கும் தண்தமிழ்மொழியின், இன்சுவைத் தேனை ஏக்கமற அருந்தி, இன்பம் பலபெறும் இப்பிறவியின் நீங்கி, அந்தமில் இன்புடை அமரர்கோன் நிலைவரினும் என் உள்ளம் ஏற்காது. என்தேவி! 'இன்பத் தமிழ்மொழித்தேறலை இறவாது என்றும்உண்டு இறுமாந்துஇருக்கும் நாள் எந்நாளோ? அஃது எவ்வாறுகிட்டும்' என்ற ஏக்கமே என்நெஞ்சை அல்லும் பகலும் இடைவிடாது அலைக்கின்றது.

தகடூர்த்தேவி :—நாத ! பேதையேன் யாதுமொழியக்கூடும்? உலகினில் 'பிறப்பு' என்று கூறும்பொழுதே 'இறப்பு' என்ற மொழியும் பின் தொடருகின்றது. எவரும் வினைவழியன்றி எதனையும் பெறுதற்கில்லை என்பது தாங்கள் அறியாததன்று. எனினும் முயற்சி திருவினையாக்கும் என்பது நமது மறை மொழி. பண்டு, மார்க்கண்டன் என்றும் பதினாறுட்டைப் பிராயம்கொண்ட வரலாறும் நாம் அறிந்ததேயன்றோ. ஆதலால், என்காதல! தாங்கள் வாணாள் நீடிப்பின் பொருட்டு வாலறிவன் நற்றாள் தொழுது, நன்னோம்பு புரிவதை மேற்கொண்டால் தங்கள் கருத்து நிறைவேறலாகும். அஃதன்றி நெடிது நினைந்து நெஞ்சம் புண்பட, உடல் நிலைகெட, கவலை கொள்ளுதல் ஏற்புடைத்தன்று.

காவலன் :—மாண்புறு மன்னர் பெரும! தங்கள் திருவடி என் முடிமிசை அமைக. (காவலன் உள்நுழைந்து வணங்குதல்) எவரோ ஒரு பெரியார்; இறைவனருள் பெற்றவர்போல் காணப்பெறுகின்றார்; நமது தலைவாயிலில் நின்று; தங்கள் திருமுன் வர விழைகின்றார்.

அதியமான் :—காவல! அவரை இவண்விரைவில் வரவிடுக. (காவலன் வணங்கி அவண் நீங்க) நங்காய்! பின்னர் பேசுவாமிது பற்றி: நின்இருக்கை செல்க. (பெரியார் உள்வர, அதியமான் வணக்கமாக) வரவேண்டும், வரவேண்டும்! இங்கு அமர்க. (ஆன்றவர் அருட்கை காட்டி அமர்தல்) தாங்கள் என்பால் எழுந்தருள என் நல்வினை இருந்தவாறு என்னே? பெருந்தகைமை சால் பெரும! என்னை நோக்கி இங்கு வந்தருளியதன் பொருளை அடியனேன் அறியலாகுமா?

பெரியவர் :—எளியவர்க்கு இரங்கும் எழினி! நீ இசைபட வாழ்க!! நினது கொடைமிக்க ஆட்சியில் எம்போன்றார்க்கு என்ன குறைவரப்போகிறது. நீ நெடிதுவாழ்க! நின்னைக்கண்டு மகிழ்ந்து உரையாடவேண்டும் என்ற ஓர்அவா நெடுநாளாக என் உளத்தை உந்த, அது நீங்கும்பொருட்டே இன்று வந்தோம், மற்றொன்றும் இன்று. நினது சுற்றமும் நட்பும் நலந்தானே? ஏன் உன்மேனி ஒருவாறு பொலிவு குறைந்து தோன்றுகின்றது?

அதியமான் :—புலனழுக்கற்ற புனித! எம்பால் யாவரும் நலனே. எனினும் என்மேனியின் பொலிவுகுன்ற என்னை வாட்டும் ஒருகுறைமட்டும் உளது. அதனைப்போக்கும் நெறியறியாது என்நெஞ்சம் நைகின்றது.

பெரியார்: —அன்ப! அக்குறையினை எம்பால் அறிவிப்பாய்: இயன்றவரையில் யாம் அதனை நீக்கக்கருதுவோம்.

அதியமான் :— ஐம்புலனடக்கி, நால்வகை யுறுதிப்பொருள்களும் விளங்க, மூன்றுபொழுதினும் இருவினையோர்ந்து ஒருவனை வழிபடூஉம் உரவோய்! அடியேன் தங்கள்போன்ற ஆன்றோர்களின் அருளினால், செல்வமும், கல்வியும், கொடையும், குடிப்பிறப்பும் ஒருவாறு கொண்டவன்: நாளும் புலவர்பெருமக்கள் சூழ்தர இனிய செந்தமிழ்த் தென்றலின் நறுமணத்தை நுகர்பவன்: நல்லிசைப் புலவர்களின் தேனினும் சுவைமலிந்த உயிரினுக்கு இன்பந்தரும் மணிமொழிப் பாக்களின் சொல், பொருள் நலன்களை என்றும் பெறுதற்கு விழைபவன். எனக்கு, நீரிற்றோன்றிய குமிழியைப் போன்றதும், நாளையோ, இன்றோ, இப்பொழுதோ, இரவிலோ, பகலிலோ, இங்கேயோ, மற்று எங்கோ அழிவுறும் என அறுதியிட்டுக் கூறமுடியாததும் ஆய இம்மக்கள் வாழ்க்கையை நீடித்துக் கொள்வதற்கான நெறியை அறிய, காதல் மிகுகின்றது. ஆதலால், எம்பெரும, எளியனேன் இந்நிலமிசை நீண்ட நாள் நல்லுடல்பெற்று நலம் பல கொண்டு இன்பமுற்று வாழ, வழியொன்று அருளல்வேண்டும். இதுவே என் குறையாகும்.

பெரியார் :—(சற்று அமைதியுடனிருந்து) எழில் நலமிக்க எழினி! அதன் பொருட்டு கவலற்க. நின் விருப்பத்துக்கும் ஒருதவியுளது: கேட்பாயாக. உனக்குரிய குதிரைமலையின் மேல்முகட்டில் இருபெரும் பாறைகள் உள. ஆண்டுச் சென்றால் அதன்நடுவில் ஓர்உயரிய பருத்த கருநெல்லிமரமொன்று உளது. அதனில் ஆண்டொன்றுக்கு ஒருபழம் தோன்றும். அப்பழத்தை நீ உண்டால் நெடுநாள் நீ விழைந்தவாறு இவ்வுலகில் வலிமையோடு வாழலாம். அப் பழத்தைத் தின்று பன்னா

றாண்டுகளாக இவ்வுலகினில் உயிருடன் வாழ்பவர்கள்பலரையும் யான் அறிவேன். எனவே, யான் கூறியவாறு நீ அக்கரு நெல்லிப்பழத்தைப் பெற்று உண்டால் நின்குறை நீங்கும்.

அதியமான் :—(தொழுத கையுடன்) அருள்முறை வழுவாது என்னை ஆதரவு செய்த அண்ணலே ! தங்கள் அன்பிற்கு எல்லையுண்டோ? தங்களது பேருதவிக்கு யான் யாதுகைம்மாறு புரிய வல்லேன். தங்களது மலர்அடிகளில் அடியனின் மணிமுடியைச் செலுத்தி அழகுசெய்வதைத் தவிர்த்து, வேறொன்றுமறியேன். பெருமை சால் பெரும! தாங்கள் இன்று என்னுடன் இங்கு இருந்து எம்மரபு ஓங்க வாழ்த்துமாறு வேண்டுகின்றேன்.

பேரியார் :— அன்பு மிகு அதிய ! நின் விருப்பின்படியே ஆகுக. வாழ்க நின் மரபு ; வாழ்க நின் நல்லிசை !!

இயல் உ—காட்சி உ முடிவு.

இயல் ௨—காட்சி ௫.

உறுப்பினர் :—அதியமான் ; அவ்வையார் ; காவலன்.

இடம் :—தகடூர்ப் புறம்.

பொழுது :—நடுப்பகல்.

[அதியமான் ஔவைக்கு நெல்லிப்பழம் தருதல்]

(காவலன் பின் தொடரவரும் எழினி, களைப்புற்ற ஔவையைக் காணுதல்)

அதியமான் :—அம்மையே வருக! வருக!! தங்களைப் பிரிந்திருந்த இந்நாட்கள் எனக்குப் பலஆண்டுகளாகத் தோன்றின. ஆமாம், தாங்கள் ஏன் நான் இவ்வாறு வெளிச்சென்று வருவதற்குள் என் இல்லத்தில் இருக்காது தனியே இப்படி வருகின்றீர்கள்? அங்கு ஏதாவது தங்கள் நெஞ்சம் வருந்துமாறு நிகழ்ந்தனவோ?

ஔவையார் :—அன்புடை அதிக! அவ்வாறு எனக்கு யாதொரு குறைவும் ஏற்படவில்லை. நான் சற்றுமுன் தான் இங்கு வந்தேன். நின்னைக் காணவேண்டுமெனும் பேரவா என்னைப் பிடர்ப்பிடித்து உந்த நின் மாளிகையினுட் சென்றேன். நினது தேவியும் மற்றைய தோழியர்களும் என்னைக் கண்டதும் பணிந்து, முகமன் கூறி வேண்டுவன யாவும் திட்டம் செய்தனர். ஆயினும் நீயில்லாது அவற்றைப்பெற என் நெஞ்சம் விழையவில்லை. எனக்குற்ற களைப்பையும் பொருட்படுத்தாது, நீ வரும் வரையில் இருக்க உளங்கொண்டேன் எனினும் என் நெஞ்சு அமைதியுறவே இல்லை. ஆதலால், சற்று பொழுது கழியும் பொருட்டு நீ வரும் வழிநோக்கி வந்தேனேயன்றி வேறெதுவுங் கருதியன்று.

அதியமான் :—தங்கள் முகத்தை நோக்கின் தாங்கள் மிகவும் களைப்புற்றிருப்பது தெரியவருகின்றது. இதோ இப் பழத்தை முதலில் உண்ணுங்கள். களைப்பை இஃது உடனே மாற்றும். (நெல்லிப் பழத்தை ஔவை பெறுதல்)

ஔவையார் :—இஃதென்ன நெல்லிக்கனியா? நாவறட்சி யைப் போக்குதற்கு இஃதோர் நல்ல பொருளே (சுவைத்து உண்ணல்) ஆ! என்ன சுவை! இத்தகைய நெல்லிப் பழத்தை நான் என்றும்உண்டதில்லையே. தெவிட்டாத அமுதம் போலக் குறைவுபடாத இனிய சுவையுடனிருக்கிறதே. இஃது எங்குளது?

அதியமான் :—அன்னையே! நான், நற்கருப்பஞ்சாற்றினில் தேன்கலந்து, பால்கலந்து, தெவிட்டாமல் இனிப்பதாகவுள்ள, தங்களது பெறுதற்கரிய இனிய பாக்களின் சுவையாகும் அமுதினைவுண்ட நாள்முதல், தங்களைப்போன்ற புலவர் பெரு மக்களின் இடைவிடாக் கூட்டுறவுபெற்று, நெடுநாள் உலகத் தில் வாழ்ந்து செந்தமிழ்க்கடலில் நாளும் திளைக்கப் பெரிதும் விரும்பியிருந்தேன். சிலநாளின்முன்னர் எனது வாழ்க்கைத் துணைவியுடன் இதுபற்றி யான் உரையாடிக்கொண்டிருந்தபோது, ஒரு புலனழுக்கற்ற சான்றோர் என்பால் எழுந்தருளினார்கள். அப்பெரியார் எனது உளக் கருத்தை அறிந்து, என்னிடம் கொண்ட பெருவிருப்பத்தினால், இப்பழம் தோன்றும் இடத் தைக் கூறி, அதனை உண்ணுமாறு பணித்தார்கள். இஃது உண் டவர்களை உலகில் நெடுநாள் வாழ்விக்கும் வலிமையுடையதாகும் ஆதலால், தங்களைக்கண்டவுடன் எனக்கு, என்னினும் "தாங் களே இவ்வுலகத்துக்கு பயன் உள்ளவர்கள்" என்ற எண்ணமும் விரைந்து தோன்றிற்று. தாங்கள் இந்நிலவுலகில் நெடுநாள்உயிர் பெற்று வாழ்வதால் இந்நாட்டின் பலபகுதிகளும், தங்களது திறமைமிக்க மொழிநலத்தைப்பருகி, நன்னிலை பெற்றுய்ய வாய்ப்புண்டு, அதற்குமாறாக எம்மனோர் தம் வாழ்நாளைப் பெருக்குவதால் ஏற்படும்பயன், தன்னலத்துடனேயே ஆகும். இவை கருதியே உலகுஅவாவும் உயரிய புலமைபெற்ற தங்கட்கு, யான் அரிதிற்பெற்ற இப்பழத்தை மனமுவக்க நல்கினேன்.

ஔவையார் :—(வியப்புமேலிட) என் அருமருந்தாய அன்ப! நின்பால் ஊற்றெடுத்துத்தோன்றும் கொடைத் திறத்தால்உற்ற அன்பின்போக்கை அளவிட்டுக்கூற எவராலாகும்? நீ என்னிடம் கொண்டுள்ள எல்லையில் பேரன்பிற்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன் ?

அதியமான் :—தமிழ்த்தாயே ! வருக ! நம் இல்லம் செல்லலாம். உணவுகொண்ட பின் நாம் யாவும் பேசலாம். (அதியமானும் ஔவையும் செல்லுதல்.)

காவலன் :—(தனித்து நின்று நெட்டுயிர்ப்புவிட்டு) என்ன நட்பு ! ஔவை என்ற சொல்லை முடிப்பதற்கு முன்னேயே, எங்கள் வேந்தர்—'எங்கே' என்றுகூடக் கேட்பதில்லை. 'வருக! வருக!! தாயே, வருக!!!' என்றன்றோ அழைக்கின்றார். முப்பது நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அவரைக்காணாது ஏங்கி, ஏதோ ஓர்ஆண்டு பெரும் பிணியால் துயருற்றவரைப் போலவே இருந்தார்—அது தொலையட்டும்—இரண்டு நாட்களாக 'கல்லென்றுமில்லை முள்ளென்றுங் கிடையாது; முழங்காலைப் பிடித்துக்கொண்டும் என்னால் ஏறமுடியவில்லை; நடையாய் நடந்தோம்: நுழையாத இடமெல்லாம் நுழைந்தோம்: அப்பப்பா, நானும், எங்கள் ஐயாவும் பட்ட துன்பம் இருக்கிறதே, அடடா, சொல்லிமுடியாது. எங்கள் குதிரைமலை உச்சியிலே—ஏ! அப்பா, கீழே விழுந்தான்: கருமத்துக்குக்கூட ஓர் எலும்புக் கிடைக்காது—என்ன செங்குத்தான நெடும் பாதை ! அங்கிருந்து மெதுவாக ஒரு குகைக்குள் நுழைந்துக் கடைசியில் ஒருவாறு கண்டுபிடித்தோம் அந்த மரத்தை. மரத்தைக்கண்டதும் ஆகிவிட்டதா: அதைச்சுற்றிலும் தேள்கொடுக்குப்போன்ற முள்களுடன் எத்தனையோ வகையான புதர்கள், கிட்ட அணுகமுடியாதவாறு சூழ்ந்துகிடந்தன. எங்களுக்கு மேலெல்லாம் காயம் — எப்படியோ துன்பத்தை யெல்லாம் பொறுத்துக்கொண்டு தத்தித்தடுமாறு மரத்தின்மேல்ஏறினோம். ஏறினால்! அங்கே என்ன இருந்தது. அந்தமரம் ஒருதடவையில் ஒருபழம் தான் பழுக்குமாம். அதுவும் எத்தனையோ ஆண்டுக்கு

ஒருதடவைதானும். என்ன துன்பம் ஐயா—கிளை கிளையாய்த் தேடினோம், இலை, இலையாய்ப் பார்த்தோம். கடைசியில் எங்கள் தலைவர்தான் பழத்தைக்கண்டார்—பொறுக்கமுடியாத மகிழ்ச்சி —உணவைக்கூடப் பிறகு விரும்பவே இல்லை—கொண்டு சென்றவைஎல்லாம் நானே சாப்பிடுமாறு முடிந்தது. இப்படியெல்லாம்—பகீரதன் கெட்டானே—எத்தனையோ பாடுபட்டுத்தேடிக் கொணர்ந்த பழத்தை—கைக்குக்கிட்டியது வாய்க்கு எட்டாதது போல, இல்லத்துக்கு வருவதற்குள்ளாகவா இந்தக்கிழவி எதிர்ப்படுவாள். அட, போகட்டும், மிகுந்த அன்புள்ளவளாக இருக்கலாம். அவளாவது ஒருபாதி பழத்தை 'நீங்கள் உண்ணுங்கள்' என்று எங்கள் மன்னர்க்குச் சிறிதும் எனக்குச் சிறிதுமாகத் தந்திருக்கலாமா? கொடுத்தவுடன் அப்படியேயாத் தின்று விழுங்கி விடுவாள்?........என்னமோ, பேசி இனி என்ன ஆகும்! கொடுத்து வைத்தவள் கொட்டையோடே சாப்பிட்டாள். ஏமாந்த பேதை நான் இப்படியேப் போகிறேன். (வருத்தமாகச் செல்லுதல்.)

இயல் ௨—காட்சி ௩ முடிவு.

சிந்தாமணியின் செந்தமிழ் நலம்

திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள், திருவத்திபுரம்.

செந்தமிழ் நலம் பரவிவரும் இக்காலத்தில், பொழிலன்பர்களுக்குச் சிந்தாமணியைப்பற்றி முன்னுரை யாதேனும் கூறல், வேண்டா கூறலாகும். ஆயினும் கற்பனைக் களஞ்சியமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாசர் முதலிய சைவ நன்மக்களும், புலவர் பெருமக்களும், இதற்குச் "சீவக சிந்தாமணி" யென்ற பெயர் இருக்கவும், சிந்தாமணி யென்று சிறப்பக்கூறும் சிறப்புடையதாகலின், இக்கட்டுரைக்கேற்பவேனும் சிறிது கூறுவது வேண்டுவதொன்றேயாம்.

சீவகசிந்தாமணி என்பது நம் செந்தமிழ் மொழியின் நந்தாச் செல்வமாய் விளங்கும் காவியங்களுள் ஒன்று. இதன் தலைமகன் சீவகன் என்பவன். இவன் பலமகளிரை மணந்து, முடிவில் துறவு பூண்ட அரசகுமாரன். இச் செந்தமிழ் நூல் திருத்தக்கதேவர் என்ற சமண முனிவர் ஒருவரால் இயற்றப் பெற்றது. இதனை அச்சேற்றித் தமிழுலகிற்கு உதவிய பெருமை டாக்டர். உயர்திரு. உ. வே. சுவாமிநாதய்யர் என்னும் செந்தமிழ்ச் சிறப்புடை அந்தமில் வரலாறு, பலவும் நிலவும் நிலையமாய், நுண்மாண் நுழைபுலத் தமிழ்மாண் புலமையொடு, இன்மொழி வழங்கும் செம்மலாய் வயங்கும் பெருமகனாராவர். அவர்கட்கு, இவ்வுதவிபற்றித் தண்டமிழ் உலகு என்றும் நன்றி செலுத்தும் கடப்பாட்டினால் இவர் நெறிக்கண் அடித் தொண்டு புரியும் அறம் உடைத்து.

இந்நூற்கண், கற்பார்மனத்தில் செந்தமிழின் தீவிய நலத்தைத் தேர்ந்து நுகர்தற்குரிய பகுதிகள் மிகப்பலவாகும். அவற்றைத் தேர்ந்து நுகரும் நெறிகளும் பலவாகும். ஆசிரியர்

உயர்திரு. அ. வரதநஞ்சையப்பிள்ளை முதலிய அருந்தமிழ்ச் சான்றோர் தம்பால் ஆரச் சிறந்து நிற்கும் மதிநுட்பத்தால் ஒவ்வொரு கவியினையும் ஆராய்ந்து காட்டும் உரிமையுடையோரா யுளர். உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் உதவிய நல்லுரையின்றேல், இதன் செந்தமிழ் நலம் இனிது விளங்கி யிராது என்று பலரும் கருதுவர்.

இதனை ஆராய்தற்கு விரும்பிய மாணவர் சிலர்க்கு இதனை உரைத்துவருகையில், அவர் சீவகனால் மணக்கப்பெறும் மக ளிருள், குணமாலை, சுரமஞ்சரி என்ற இருவருடைய குணநலம் பற்றித் தம்முட் சொல்லாடிப் பிணங்குவாராயினர். அவர் பொருட்டு இவ்வாராய்ச்சி செய்யப் பெற்றமையின், இக் கட்டுரைக்கண் இவ்விருவருடைய வரலாற்றினை ஆராயுங்கால் தோன்றும் செந்தமிழ்த் தீஞ்சுவை நலத்தை நம்தமிழ்ப்பொழில் அன்பராகிய "தேனூற நின்று தெருண்டார்" திருமுன் செப்பலுறுகின்றேன்.

சீவக சிந்தாமணி யென்னும் இக்காவியத்துக் கதை நிகழ்ச் சிக்கு நிலைக்களம் ஏமாங்கதம் என்னும் இசையால் திசைபோகிய நாடாகும். இதற்கு இராசமாபுரம் என்பது தலைநகரம். இந் நகரத்தே கந்துக்கடன் என்னும் சீரியோன் செல்வமனையில் சீவகன், கல்வி கேள்விகளில் ஒன்மையும், படையாண்மையில் வன்மையும் பெற்றுச் சிறந்து வாழ்ந்துவருகின்றான். அங்கே குபேரமித்திரன் என்னும் செல்வன் தன் மனைவி வினயமாலை யொடுகூடி இல்வாழ்பவன் குணமாலையென்னும் நங்கையைப் பயந்து வளர்த்துவருகின்றான். அவளும் திருமணத்துக்குரிய பருவமுடையளாய், நற்குண நற்செய்கையிற் சிறந்த நங்கை யாய் வாழ்ந்துவருகின்றாள். அந்நகரத்தே குபேரதத்தன் என்னும் திருமிக்கோன் இருக்கின்றான். அவன் மனைவிபெயர் சுமதி என்பது. அவ்விருவரும் கூடிப்பெற்ற காதலின்பப் பயனே சுரமஞ்சரியென்னும் பெண்ணணங்கு. குணமாலையும் சுரமஞ்சரி யும் ஒத்த உருவும், திருவும், உயர்நிலைக்கல்வியும் வாய்க்கப் பெற்ற ஒண்டொடியர்.

பண்டைக்காலத்தில் நம் நாட்டுச்செல்வர் வேனிற்காலத்து, நகரின்நீங்கி, யாறும், குளமும், காவும் புக்கு நீராடியும், பொழில் விளையாடியும் போகநுகர்தல் மரபன்றோ? "யாறும் குளனும் காவும் ஆடிப்பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப" என ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறுகின்றாரன்றோ? அம்முறையே, ஏமாங் கத நாட்டிலும் நிகழ்வது மரபு. அந்நகர மாந்தரும், வேனிற் காலத்துப் பொழிலாடலும் நீராடலும் புரிந்து போகநுகர்தலை மேவுகின்றனர். அக்காலத்தில் இளமகளிர் தாம் பெற்ற கல்விப் பயனால், 'சுண்ணப்பொடி செய்தல் இயல்பு. அம்முறையே வேனிற்காலத்தில், பொழில் விளையாடலும் நீர் விளையாடலும் நயந்த நகரமாந்தருடன், குணமாலையும் சுரமஞ்சரியும் தாம் செய்த சுண்ணத்தோடு பொழிலின்கண் சென்று தங்கியிருக் கின்றனர்.

இருவரும் இன்பமாக உரையாடியிருந்த காலத்தில், குண மாலையின் தோழி, மாலை யென்பவள், குணமாலை செய்த சுண்ணத்தை, அவள் குறிப்பின்படி, சுரமஞ்சரிக்குக் காட்டு கின்றனள். அவள் தன் சுண்ணத்தினும் சிறந்ததன்று என்று குறித்து நகையாடுகின்றனள். அது கேட்ட குணமாலை, " தன் சுண்ணத்தின் மிக்க சுண்ணம் பெறலரிது ; ஒப்பனவுளவாயின் அவை சிலவேயாம்; அச்சிலவற்றுள் ஒன்றாக வேண்டுமாயின், நீ கூறிக்கொள்க என்கின்றாள். இதனால் இவ்விருவர்க்கும் மன வேறுபாடு உண்டாகிறது. முடிவில், இருவர் சுண்ணத்தையும் அறிந்தார்பால் காட்டி, மிக்கது துணிதல் நன்றென்று துணிந்து, இருவரும் தத்தம் சுண்ணங்களைத் தோழியர்பால் தந்து அனுப்புகின்றனர். தோழியர் இருவரும், தக்கோர் சிலரையணுகித் தம் கருத்தை அறிவிக்கின்றனர். அவர்கள், " இத்துறையினும் பிறவற்றினும் வல்லுநன் சீவகனே ; அவன் பாற் காட்டித் தெளிந்துகொண்மின்," என்கின்றனர். என்ற லும், அவர்கள், அப்பொழிலகத்தே ஒருபால் தன் தோழர் சூழ வீற்றிருந்த சீவகனை யடைந்து தம் கருத்தைத் தெரிவிக்கின்ற னர். சீவகன், இருவர் சுண்ணங்களையும் பார்த்து, "குணமாலை செய்த சுண்ணமே சிரிது" எனக்கூறி, அதனைத் துணிவதற்

காக வண்டுகளை யழைத்து, அவற்றின்முன் இருவர் சுண்ணங் களையும் அள்ளித் தூவுகிறான். அவை, குணமாலை சுண்ணத்தை உண்டொழிகின்றன; சுரமஞ்சரியின் சுண்ணம் தரையில் விழுகின்றது. இதனால் குணமாலை வெற்றியுறுகின்றாள்; சுரமஞ்சரி தோல்வியுறுகின்றாள்.

சுண்ணத்தால் தோல்வியுற்று ஆற்றாளாகிய சுரமஞ்சரி, தான் செய்த சூளுறவின்படி நீராடலாகிய விளையாட்டினை விரும்பாமல், நீங்கிச்சென்று, தன் மனையகம் புகுந்து தன் சுண் ணத்தைத் தீதென்று கூறித் தன்னை அவலம் உறுவித்த அந்தச் சீவகன் தானாகவே வலியவந்து தன் சிலம்படி கைதொழுமாறு நோற்பேன் என்று உட்கொண்டு கன்னிமாடம் சமைப்பித்து, ஆடவர் குறுகா அருங்கடி அமைத்து, ஆண்டே வதிதலை மேற் கொள்ளுகின்றாள்.

இப்பால், சுரமஞ்சரியின் பிரிவால் வருந்தி அரிதுதேறிச் செய்வனசெய்து தெளிந்த குணமாலை, நகரமாந்தரோடு கூடித் தானும் நீர்விளையாட்டினை இனிது அயர்கின்றாள். சீவகனும் தோழரும் நகரமாந்தர் விளையாடும் காட்சியினைப் பார்த்துக் கொண்டு வருகின்றனர். பின்பு, விளையாட்டு முடிந்ததும், மக்கள் அனைவரும் நகர்க்குத் திரும்புகின்றனர். அதுபோது, அசனி வேகம் என்னும் பட்டத்து யானை மதங்கொண்டு பிளிறி வரு கிறது. யாவரும் தலைத்தலை மயங்கிச் சிதறி ஓடுகின்றனர். குண மாலை மதிமருண்டு நின்று தவிக்கின்றாள். அசனிவேகமும் அவளைக் கொல்வது குறித்து அணுகுகின்றது. அதுகண்டு பேரச்சங்கொண்ட அவள்தோழி, மாலை யென்பவள், அவட்கு முன்னே நின்று, "ஆடவர் இல்லையோ?" என்று அலறி அரற்று கின்றாள். அஃது அங்கு வந்துகொண்டிருந்த சீவகன் செவியுற் புகுதலும், அவன் விரைந்து பாய்ந்து, அவ் யானையைத் தகைந்து பிறிதொருபக்கம் புகுவிப்பான், அவளை உயிர்தப்புவிக்கின்றான்.

தப்பித்தேறிய குணமாலை, தன்னை உய்வித்த வள்ளலின் மேனிநலமும் குணநலமும் கண்களாற் கண்டு, அவனையே மணக்கவேண்டும் என்னும் குறிப்பினளாய், மனையகம் சென்று,

அவன்பொருட்டு மெலிகின்ருள். தான் பேணிவளர்த்த கிளியின்பால் தன்காதலை ஒருமுடங்கலில் வரைந்துதந்து, சீவகனிடம் போக்குகின்ருள். இவளைப்போலவே, இவள்பால் எழுந்த காதலால் வெய்துற்று வருந்தும் சீவகன், அம்முடங்கலைப் பெற்றுத், தன் உடன்பாட்டினையும் தெரிவிக்கின்ருன். இதற்கிடையே, குணமாலையை அவள் மைத்துனன் ஒருவற்கு மணம் பேசுகின்றனர். அவள் அதற்கு உடன்படுகின்றிலள். குணமாலையின் மனக்குறிப்புச் சீவகன்பால் உளதெனத் தெரிந்து, பெற்றோர், பின்பு மணம்பேசி, முறைப்படிச் சீவகனுக்குத் திருமணம் புரிவிக்கின்றனர். மணம் புணர்ந்த இருவரும் பெருகிய இன்பம் துய்த்து இனிதிருக்கின்றனர்.

இஃது இவ்வாருக, சீவகனல் தகைப்புண்ட அசனிவேகம் என்னும் அரசுவா, கவளமுதலியன கொள்ளாது மெலிந்து வருகிறது. அதுகண்ட கட்டியங்காரன் என்னும் அந்நகர வேந்தன், காரணம் வினவ, பாகர்கள் பொழில் விளையாட்டில் நிகழ்ந்தது கூறுகின்றனர். அவன், சினம் மிகுந்து, தன் வீரரை யேவி, "அச்சீவகனைக் கொணர்க," என்று கட்டளையிடுகிருன். வீரர்கள் சீவகன் குணமாலையோடு இருந்த இல்லத்தைச் சூழ்ந்துகொள்கின்றனர். சீவகன் போர்க் கோலங்கொண்டு வெளிவருகிருன். அக்காலை, அவன் பெற்ருேர் வந்து "அரசனுக்கு அடங்கியொழுகுதல் அறம்" என்று கூறி அவனை அடங்கிச் செல்லுமாறு வேண்டுகின்றனர். இச்செய்தி காந்தருவதத்தை என்னும் சீவகனுடைய முதல் மனைவிக்கு எட்டுகிறது. அவள் தன் கணவனைக் காத்தற்பொருட்டுந் தெய்வங்களை வேண்டுகின்ருள். அவைதாமும் வந்து அவனைச்சூழ்ந்து நிற்கின்றன. இதனைச் சீவகன் அறிந்து சுதஞ்சணன் என்னும் தன் நண்பன் ஒருவனை நினைக்கின்ருன். அவன் விரைந்து மழையோடும் மின்னலொடும் போந்து, சீவகனை வானுருகத் தான்வாழும் பதிக்குக் கொண்டுசெல்கின்ருன். வீரர்கள் சீவகனைக் காணுமல், வேருெருவனைக் கொன்று விட்டதாகப் பொய்கூறி ஒழிகின்றனர். கட்டியங்காரனும் அதுகேட்டு மகிழ்ந்துபோகிருன்.

இக்கூறிய செய்தி முற்றும் சீவகசிந்தாமணியில், குண மாலையார் இலம்பகம் என்னும் பகுதியில் விரியக் கூறப்பெற்று ளது. சீவகன் சுரமஞ்சரியை மணந்தகதை சுரமஞ்சரியார் இலம்பகம் என்னும் பகுதிக்கண் விரிக்கப்பெற்றுளது. அதன் சுருக்கம் வருமாறு :—

சுதஞ்சணன் என்னும் தேவனால் கொண்டுசெல்லப்பட்ட சீவகன், அவன்பால் சிலநாள் தங்கிப் பின் விடைபெற்று, பல்லவதேயம் முதலிய பலதேயங்கட்குச் சென்று, ஆங்காங்கு, முறையே, பதுமை முதலிய மகளிரை மணந்து, அவர்களை அவரவர் நகரத்தே தமித்திருப்பவிடுத்து, மறுபடியும் இராசமா புரம் வந்து சேருகின்றான். அப்போது, அவன் மகளிர் விரும்பு தற்குரிய வேற்றுருவம் கொண்டே வருகின்றான். அவ்வூரில் சாகரதத்தன் என்னும் வணிகன் மகள் விமலை யென்பவளை மணம்புரிகின்றான். அவள்பால் இரண்டுநாள் தங்கியிருந்து, பின்னர்த் தன்தோழரை அடைகின்றான்.

அவன் மணக்கோலத்தோடு வருவது கண்ட தோழர், அவன் மணந்த தையலின் பெயர் கேட்டு வியந்து, "இவனே காமன்" என்று பாராட்டுகின்றனர். அவருள் புத்திசேனன் என்பவன், சீவகன்பால் சுரமஞ்சரியின் விரதநெறியைக்கூறி, "அவளை மயக்கி மணந்துவரின், நின்னைக் காமதிலகன் என் பேன்," என்கின்றான். அதுகேட்கும் சீவகன், "யான் அதனைச் செய்து வருகிறேன்; நீ நாளையே காமன் கோட்டம் புகுந்து மறைந்திரு," என்று கூறிவிட்டு, இறப்பமுதிர்ந்த வேதியன்போல வடிவுகொண்டு, சுரமஞ்சரியிருக்கும் கன்னி மாடத்துக்குச் செல்கின்றான். வாயிலில் காவலிருக்கும் மகளிர் அவனைக் கண்டு, அவன் பசியையும் உணர்ந்து சுரமஞ்சரிக்குத் தெரிவிக்கின்றனர்.

சுரமஞ்சரி அவனைக் காண்டலால் தன் விரதம் கெடாதென நினைந்து, அவன் முன்வந்து, அவனோடு சொல்லும் ஆடுகின்றாள். அவன் கவர்பொருள் எய்தப் பேசுகின்றான். அதனை உணராத அப்பேதை; அவனைப் பித்தன் என்றெண்ணியும்,

அவனது பசியினைப் போக்குதல் பேரறம் என்று கருதியும், தன் மாடத்தே அழைத்துச் சென்று, அமுதூட்டி, இனிய பஞ்சணையிற்கண் படுவிக்கின்றாள். அவனும் அதன்கண், சிறிது நேரம் உறங்கினவன்போற் கிடந்துவிட்டு, எழுந்து, இனிய பாட்டுப் பாடத் தொடங்குகின்றான். அதனைக் கேட்ட மகளிர் பரவசமாகின்றனர்; சுரமஞ்சரியும் மகிழ்வுறுகின்றாள்.

பின்பு, அம்மகளிர், "இப்பாட்டுச் சீவகன் பாட்டை ஒத்துளது," என்று கூறிச் சுரமஞ்சரிக்குச் சீவகனைப்பற்றி நினைப்பூட்டவும், அவள், மறுநாளே, காமன் கோட்டம் நோக்கி, ஆடவர் எவரும் காணாதபடி, வேதியனும் தோழியரும் உடன்வர சகடமூர்ந்து சென்று சேர்கின்றாள். அங்கே, சீவக வேதியனை ஓர் அரையுள் விடுத்து, காமம்படிவத்தின் முன்நின்று, சீவகனை விரையத் தருமாறு வேண்டுகின்றாள். அங்கே, மறைந்திருக்கும் புத்திசேனன், "நீ சீவகனைப் பெற்றாய்" என்று மொழிகின்றான். அஃது அத்தெய்வத்தின் திருமொழி எனப் பிறழக்கொண்ட சுரமஞ்சரி, மகிழ்ந்து, வேதியன் இருந்த அறைக்கு வருகின்றாள். அங்கே சீவகன் தன் உண்மை வடிவோடு நிற்கின்றான். அது கண்டு, அவள், காதல் கைம்மிக்கு மெய்ம்மறந்து நின்றொழிகின்றாள். சீவகன், அவளைத் தழுவி, "நின்னை நாளைவந்து மணப்பேன்" என்று தேற்றி அனுப்புகின்றான்.

புத்திசேனன், தோழர்பால் நடந்தது கூறுகின்றான். அவர்களும் முன்பு செய்துகொண்ட முடிபின்படி, அவனைக் காமதிலகன் என்று பாராட்டுகின்றனர். இப்பால், சுரமஞ்சரியின் பெற்றோர் இதனைக் கேள்வியுற்று, மகிழ்வுமிக்குக் குறித்தவாறே திருமணம்செய்கின்றனர்.

(தொடரும்.)

அவிமாரகம்

திரு. T. S. நடராசன் B. A., எலத்தூர், சீர்காழித்தாலூகா.

[வடமொழியில் சொற்சுவை பொருட்சுவை நிறைந்த நாடகங்கள் பல உள்ளன. அவற்றுள் 'அவிமாரகம்' என்பது பாசகவி எழுதிய பதின்மூன்று நாடகங்களுள் ஒன்றாகும். தமிழ்ப் புலவர்களின் வரலாறுகளைப் போன்று வடமொழி நூலாசிரியர்களது வரலாறுகளும் நன்கு அறியப்படாமையோடு பொய்க் கதைகள் நிறைந்தனவாயும் உள்ளன. பாச கவியின் நாடகங்களில் புத்தமதத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுதலின் அவர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிற்குப் பிந்தியவரென்றும் அவரது 'பிரதிக்ஞ யௌகந்தராயணம்' என்னும் நாடகத்திலுள்ள செய்யுளொன்று கௌடில்ய ரது பொருள்நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டிருத்தலின் சந்திரகுப்த மௌரியன் (கி. மு. 321—கி. மு. 292) காலத்திற்கு முந்தியவரென்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். கீழே எழுதப் பெறுவது அவிமாரக நாடகத்தின் கதைச் சுருக்கமாகும்.]

முற்காலத்தில் வடஇந்தியாவில் சௌவீரம் என்று பெயருள்ள ஒரு இராச்சியம் இருந்தது. நீர்வளம் நிலவளம் முதலிய பல வளங்களும் நிறைந்த அந்நாட்டைச் சௌவீரராசன் என்னும் மன்னன் கோல்கோடாது புரந்துவந்தான். அம்மன்னனது புதல்வன் விண்டுசேனன் எனப்படுவான்; அழகு, அறிவு, வீரம் இவைகள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற அவன் இளமையிலேயே பலகலைகளையும் கற்றுத்தேர்ந்தான். அவனது வீரம், அஞ்சாமை இவைகளைக் கண்டு பெற்றோரும் மற்றோரும் வியந்தனர். அவன் மிக்க இளைஞனாயிருக்கும்போது, அந்நாட்டினையடுத்த ஒருகாட்டில் வசித்துவந்த ஓர் அரக்கன் அந்நாட்டு மக்களுக்குப் பல்வகையானும் தீங்கிழைத்து வந்தான்; மக்களையும் ஆடுமாடுகளையும் அடித்துஉண்டு தன்பசியைத்தணித்து வந்தான். சௌவீரராசன் அத்தூயோனது இன்னல்களினின்றும் தன்குடி மக்களைக் காப்பாற்ற இயலாது பெரிதும் வருந்தினான். இதனையறிந்த விண்டுசேனன் ஒருநாள் ஒருவரும் உணராதவாறு அரண்மனையை நீங்கிச்சென்று அவ்வரக்கன் வதிந்த காட்டினையடைந்தான். வலுவில்வந்த நல்லுணவைக் கண்டு அரக்கன் மகிழ்ந்தான். ஆனால், இளைஞனாகிய விண்டுசேனன் அவனோடு

மற்போருக்கெழுவே அவன் ஓர் ஆட்டின் உருவங்கொண்டு எதிர்த்தான். சின்னேரத்தில் இளவரசன் அரக்கனைக் கூற்றுவனுக்கு இரையாக்கி மகிழ்ச்சியுற்றான். ஆட்டுருவங்கொண்ட அரக்கனைக் கொன்றமையின் அவன் எல்லோராலும் 'அவிமாரகன்' என்று வழங்கப்பெற்றான். (அவி—ஆடு)

இங்ஙனம் அவிமாரகனது புகழ் நாள்தோறும் வளர்ந்துவர அவனும் வளர்ந்தான். சிலநாட் கழிந்தபின்னர் ஒருபகலில் சௌவீரமன்னன் தன் பரிவாரங்களுடன் வேட்டமேற் சென்று கானகம் புகுந்தான். அங்கு, புலிகொன்ற மாணவன்பால் வீழ்ந்து அரற்றும் முனிவரொருவரை அரசன் கண்ணுற்றான். அவன் முனிவரை நண்ணி அவரது துயரின் காரணத்தை உசாவினன். அரசனைக் கண்ட முனிவர் வெகுண்டு வனவிலங்குகளினின்றும் குடிகளைக் காப்பாற்ற இயலாத பேடியென்றும் கொடுங்கோலனென்றும் அவனை இழித்துப்பேசினர். அவரது வசைமாரி ஒழியவே இல்லை. அவரது மாணவனிறந்தமைக்குரிய ஏதுவை அறியாத அரசன் மீண்டுமீண்டும் முனிவரைப் பரிந்து வினவினன். அவர் வசைமொழிகளையே உரைத்தாரன்றி உரிய விடையைக் கூறினாரில்லை. இந்நிலையில், அந்தோ! அரசர்பெருமான் யாதுசெய்வான்? மாநிலம் புரக்கும் மன்னர்க்கு மழைவளங் கரப்பின் வான்பேரச்சம், பிழையுயிரெய்திற் பெரும் பேரச்சம் ஆதலின் மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தலானது துன்பத்திற்கு ஏதுவேயன்றிப் பிறராற் போற்றுதற்குரியதன்று. இறுதியில் அரசன் தன் பொறுமையை இழந்து கோபமிக்கு, முனிவரைநோக்கி, 'ஓரேதுவும் இன்றி என்மீது வெகுண்டு வசைமொழிகளைக் கூறும் நீ ஒரு முனிவனல்லன், புலையனே யாவாய்' என்று கூறினன். அவ்வளவில் முனிவர் ஊழித் தீயைப்போல் கனன்று, அரசனையும் அரசியையும் அன்னோரது புதல்வனையும் புலையர்களாகுமாறு சபித்தனர். அரசன் தன் நிலையை உணர்ந்தான்; ஆராயாமற் புரிந்த தனது செயலை எண்ணி எண்ணி மிக வருந்தினன்; பின்னர், முனிவரது அடியிணைகளை இறைஞ்சித் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு பன்முறை வேண்டினன். முனிவரோ கண்ணோட்டமும் தண்ணளியும் இல்லாத கன்னெஞ்சினர். அவரது சினம் நெடுநேரம் தணிந்திலது. இறுதியில், அரசனது இரங்கத்தக்க நிலையைக் கண்டோ அன்றி வெகுளாமையே முனிவர்க் கணிகலம் என்னும்உணர்ச்சி மீதூரப் பெற்றோ முனிவரது சினம் சிறிது தணிந்தது. அவர் அரசனை

நோக்கி, 'நீவிர் மூவரும் வேறு நாடடைந்து ஓராண்டு கரந்துறைவீர்களாயின் பழையநிலையை எய்துவீர்கள்' என்று கூறிச் சாபவிடை செய்தனர். பின்னர், அரசன் முனிவரை வணங்கித் தன் நகரை யடைந்தான்; முனிவரும் தவவலி யுடையராதலின் தம்மாணவனை உயிற்பித்து அழைத்துச் சென்றனர்.

அரண்மனையை அடைந்த அரசன் அரசியலை அமைச்சரிடம் ஒப்புவித்து அவிமாரகனையும் மனைவியையும் உடன் கொண்டு வைரந்தியம் என்னும் நகரத்தை யடைந்து அங்கே ஒருவரும் அறியாதவாறு வசித்துவந்தனன்.

வைரந்தியம் என்னும் நகரம் குந்திபோசன் என்னும் மன்னனொருவனால் ஆளப்பெற்று வந்தது. அவனது தங்கைமார் இருவருள் சுலோசனை என்பாள் சௌவீர நாட்டு அரசியாவாள். சுதர்சனை எனப் பெயரிய மற்றவள் வாரணசியின் அரசனை மணந்து செயவர்மன் என்னும் புதல்வனைப் பெற்றாள். குந்திபோசன் சௌவீரராசனது தங்கையின் கணவன் ஆவன். அவனுக்கு அழகெல்லாம் திரண்டு ஒருருவாயமைந்த குரங்கி * எனப் பெயரிய மகள் ஒருத்தி இருந்தாள். அவளது எழில் நலத்தைப்பற்றிக் கேள்வியுற்ற பல அரசிளங்குமரர் அவளை மணம்புரிய விழைந்தனர். அவர்களுள் சௌவீரநாட்டு இளவரசன் அவிமாரகனும் வாரணசியின் இளவரசன் செயவர்மனுமே சிறந்தோர் ஆவர். குரங்கியின் தாய் தனது அருமைச் செல்வியைத் தமையன் மகனாகிய அவிமாரகனையன்றி வேறெவர்க்கும் மணமுடிக்க விரும்பவில்லை. சௌவீர மன்னனும் தான் முனிவரது சாபத்திற்கு இலக்காவதற்கு ஓராண்டின் முன்னர் குரங்கியைத் தன் மகனுக்காக மணம்பேசினான். அதுபோது அவள் மணப்பருவமெய்திலாமையின் அம்முயற்சி நின்றுவிட்டது. முன்னாளில், மிக்கஇளமையில் மணம்புரிவிப்பதனால் நேரும் தீங்குகளை யுணர்ந்து அதனை வெறுத்தனர் போலும். அவிமாரகனும் அவனது பெற்றோரும் வைரந்தியத்தில் கரந்துறையுங் காலத்தில் குரங்கி மணப்பருவத்தையடைந்தனள். குந்திபோசனுக்கு இஃது ஒருபெரிய கவலையை உண்டுபண்ணிற்று.

(தொடரும்.)

---

* குரங்கம்—மான்

உ

தஞ்சை சில்லாத் தமிழ்ப் பண்டிதர் சங்கம்

வேண்டுகோள்

அன்புள்ள ஐயா,

இருபத்தெட்டாவது சென்னை மாகாணக் கல்விமகாநாடு, தஞ்சையில் சென்ற மே மாதம் 6, 7, 8-ம் நாட்கள் நடந்தபோது, அதன் சார்பில் நடந்த தென்னிந்திய பண்டிதர்கள் மகாநாட்டிற்குப் பல சில்லாக்களி லிருந்தும் பண்டிதர்கள் வந்திருந்தனர். அம்மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களுள், சில்லாக்கள்தோறும் நாட்டு மொழிகளின் நிலைமை யும், பண்டிதர்களின் நிலைமையும் ஆய்ந்து ஆவன செய்ய பண்டிதர் சங்கங்கள் சில்லாதோறும் நிறுவவேண்டுமென்பதும் ஒன்று. அதன்படி, இச்சில்லாவிலிருந்து வந்திருந்த தமிழ்ப்பண்டிதர்கள் ஒன்றுசேர்ந்து "தஞ்சைசில்லாத் தமிழ்ப்பண்டிதர் சங்கம்" என்னும் பெயருடன் இச் சங்கத்தினை நிறுவினார்கள்.

அக்கூட்டத்தில் (7—5—37) இச்சங்கத்திற்குத் தலைவராகவும், அமைச்சராகவும், நிறைவேற்றுக்கழக உறுப்பினராகவும் அடியிற் கண்ட வர்களைத் தேர்ந்தெடுத்தனர். தலைவர்: திரு. R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு. அமைச்சர்: திரு. அ. வடிவேலர், கலியாணசுந்தரம் உயர்தரக் கலாசாலை, தஞ்சை. நிறைவேற்றுக்கழக உறுப்பினர்கள்: திருவாளர்கள் R. நடராச சர்மா, தஞ்சை; T. R. சுப்பையா முதலியார், கூத்தாநல்லூர்; சிங்காரவேற்சேதி ராயர், பட்டுக்கோட்டை; R. ஏகாம்பரநாதர், பாபநாசம்; ஊ. சா. வேங்கட ராமையர், கும்பகோணம்.

மேலும், இச்சங்கத்திற்கு ஆண்டுச் சந்தா அணா நான்கு ஏற்படுத் தினர். வந்திருந்தோர்கள் உடனே நான்கணாக் கொடுத்து உறுப்பினராகச் சேர்ந்தனர்.

பின்னர், 24—10—37-ம் நாள் நடந்த நிறைவேற்றுக்கழகக் கூட் டத்தில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்த பொதுக்கூட்டம் கூடும் காலத்தை டிசம்பர் மாதத்தில் தீர்மானிப்பதென்றும், நிறைவேற்றுக்கழக உறுப்பினர்களாகத் திரு. இலக்குவன் (குடவாயில்) அவர்களையும், திரு. S. இராமலிங்கம் பிள்ளை (மாயவரம்) அவர்களையும் சேர்த்துக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, இதனைக் கண்ணுறும் தமிழாசிரியர்கள் அனைவரும் இச் சங்கத்தின் உறுப்பினராகச் சேர்ந்து, சந்தாத்தொகை அணா நான்கையும் மணிஆர்டர் வழியாகவோ, தபாற்றலையாகவோ அடியிற் கண்ட விலாசத் துக்கு அனுப்பிவைக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கலியாணசுந்தரம் உயர்தரக்
கலாசாலை, தஞ்சை
23—11—37

இங்ஙனம்,
வித்துவான் அ. வடிவேலன்,
அமைச்சர்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫	ஈசுவர மார்கழி	மலர் ௯

செப்ப முடையார்க்குச் செய்யும் விண்ணப்பம்

வித்துவான். திரு. வேங்கடராசலு அவர்கள்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

யான் எழுதிய 'கபிலர்' என்னும் ஆராய்ச்சி நூலைப் பற்றித் திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் 'தமிழ்ப்பொழி'லில் [13—2] எழுதியிருக்குங் கட்டுரையைப் பார்த்தேன். நாட்டாரவர்கள்,[1] எனது ஆராய்ச்சி தூய்மையுறுதற் பொருட்டும் தமிழ் வளர்தற்பொருட்டும் அந்நூலில் ('கபில'ரில்) தங்கட்கு அமைதியிலவாகத் தோன்றும் பொருள்களுட் சிலவற்றை வெளியிடுவதாகக் கூறி, முதற்கண், சில சொற்களைக் குறித்து அதில் எழுதியிருக்கின்றார்கள். நண்பனது மாசினைப் போக்கித் தூய்மைப் படுத்துவது நன்மக்கள் செயலேயன்றோ?

1. பக்கம் 42.

அது கருதி நாட்டாரவர்களின் பெருந்தகைமையைப் பாராட்டுதலோடு அவர்கள்பால் நன்றியறிதலும் உடையேன். அவர்கள் ஆராய்ந்திருக்கின்ற சொற்களாவன:

1. முகித்தல்
2. ஆங்கனம் அங்கனம், ஈங்கனம் இங்கனம், யாங்கனம் எங்கனம்
3. காண்கின்றது, காண்கின்றன
4. நற்கீரர்

என்பன. இவற்றுள், [1]முகித்தல் என்னுஞ் சொல்லைக் குறித்து அவர்கள் எழுதியிருப்பதன் சுருக்கம்:

1. முகித்தல் என்பது திசைச்சொல்.

2. அது தமிழிலக்கிய இலக்கணங்களில் (ஒரு தலபுராணத்தில் ஓரிடத்திலன்றி) வழங்கப்படவில்லை.

3. சங்கப் புலவரைப்பற்றிய ஆராய்ச்சி நூலில், பிற்காலத்து மிக அருகிவந்துள்ள சொல்லை வழங்குதல் நேர்மையன்று.

4. முகித்தல் என்னுஞ்சொல் அருவருப்பினை விளைப்பது. இஃது, அதனை நூல்முழுவதும் வழங்காமையானே அறியப்படும்.

இவற்றை முறையே ஆராய்தும்:

1. முகித்தல் என்னுஞ்சொல் திசைச்சொல் என்பது எதனாற் புலனாகின்றதோ, அறிகிலேன். அது தெலுங்கிலும் கன்னடத்திலும் வழங்குதலான் திசைச்சொல்லாகும் எனின், (அவ்வாறாயின்.) தமிழ்ச்சொற்களுட் பல்லாயிரஞ் சொற்கள் திசைச்சொற்களேயாகும். பழைய தமிழிலக்கியங்களில் வழங்காததனால், அது திசைச்சொல்லாகும் எனின், அவற்றில் வழங்காதனவெல்லாம் திசைச் சொற்களேயாகுமன்றோ? ஆயின், நான் நீங்கள், [2]அந்த, இந்த, எந்த, சரி, அனுப்பு, சிரி முதலியனவெல்லாம் பழைய தமிழிலக்கியங்களில் வழங்காதனவாகலின் திசைச்சொற்களேயாகும். அவ்வாறாயின் சொல்லாராய்ச்சித் திறனில்லாத புலவர், நான், நீங்கள்முதலிய சொற்களை வழங்கினும், அதனையுடைய நாட்டாரவர்கள் வழங்

1. பக்கம் 43.
2. அந்த என்பது மணிமேகலையில்மட்டும் ஓரிடத்தில் வந்துளது.

குதல் தகாதன்றே! அற்றன்று. நான் என்பது யான் என்பதன் மரூஉ; [1]நீங்கள் என்பது நீயிர் என்பதன் மரூஉ; அந்த, இந்த, எந்த என்பவை அ, இ, எ என்னும் எழுத்துக்களின் மரூஉ. ஆகலின், அவை தமிழ்ச் சொற்களே. சரி என்பது பண்டு இல்லாவிடினும் பின்னர்த் தமிழிற்றோன்றியதுவே என்று கூறுவார்கள்போலும். இனி, அனுப்பு என்பது விடுக்கு என்பதன் மரூஉ என்றும், சிரி என்பது நகை என்பதன் மரூஉ என்றுங் கூறிவிடலாம்போலும்.

முகித்தல் என்பது திசைச்சொல் என்றே கொள்ளினும், செய்யுளிலும் வழக்கிலும் வழங்குதலின், அதனை உரைநடையில் வழங்குதல் தவறுதல் யாங்கனம்? திசைச்சொல்லை வழங்கலாகாது என்று இலக்கணம் உளதோ? ஆயின் 'அனுப்பு' என்னுஞ் சொல்லை [2]நாட்டாரவர்கள் வழங்குதல் தகாதன்றே? அச்சொல் (அனுப்பு) பண்டைச் செய்யுட்களில் யாண்டும் வந்திலாமையானும், [3]தெலுங்கில் மட்டுமே உண்மையானும் அது தெலுங்கினின்று வந்ததாதல் கூடும்.

2. முகித்தல் என்னுஞ்சொல் தலபுராணம் ஒன்றில் ஓரிடத்துமட்டும் வந்துளது என்று நாட்டாரவர்கள் எழுதியிருக்கிறார்கள். அஃது அருணகிரிநாதர் திருப்புகழில் பலவிடத்தில் வந்துளது. தமிழ் லெக்ஸிகனில் இச்சொல்லை நோக்கிய நாட்டாரவர்கள் அதிற்குறித்திருக்குந் திருப்புகழடிகளைக் கண்டிருத்தல் கூடுமே. அங்கனமாகவும் அவர்கள், 'பிற்காலத்துத் தலபுராணம் ஒன்றில் ஓரிடத்துக் காணப்படுவது' என்று எழுதியிருப்பது வியப்பினை விளைக்கின்றது. அருணகிரிநாதர்காலம் 14-ஆம் நூற்றாண்டு என்று தெரிதலின் இற்றைக்கு 500 யாண்டுகட்கு முன்னரே இச்சொல் தமிழில் வழங்கி வந்துளது தெளிவாகும். பழைய ஓலைப்பேடுகளின் இறுதியில், முற்றிற்று என்றாதல், முகிந்தது என்றாதல் எழுதியிருத்தலை ஓலைச்சுவடி நோக்கினோர்

---

1. நீங்கள் என்பது நீம் என்பதனோடு கள் விகுதி சேர்ந்த சொல். நாட்டாரவர்களும் இவ்வாறு, ஒரு சொற்பொழிவிற் கூறியிருக்கின்றார்கள். நீம் என்பது பழங் கன்னடச்சொல். இது நச்சினார்க்கினியருரையால் (சீவக. 1932) அறியலாகும். நான் என்னுஞ் சொல்லை மேற்கொண்ட நன்னூலாரும் கொள்ளாத நீங்கள் என்னுஞ் சொல்லை வழங்குதல் நாட்டாரவர்கள் கருத்திற்கு அமையாததாகும்.

2. தமிழ்ப்பொழில் 12, பக்கம் 41, காண்க.

3. தெலுங்கில், பறுப்பு, பம்ப்பு என்றும் (அவற்றின் திரிபாகும்) அனுப்பு, அம்ப்பு என்றும் வழங்குதலின், அனுப்பு என்பது தெலுங்கினின்று வந்ததாதல் அறியப்படும்.

நன்கறிவர். ஆகலின், இச்சொல்வழக்குப் புதியதன்று என்பது அறியப்படுமன்றே? நிற்க, தமிழிலக்கிய இலக்கணங்களில் தமிழ்மொழிச்சொற்கள் எல்லாம் வந்துள்ளனவோ? வந்திலாத வற்றையும் வழங்கும்போழ்து, வந்துள்ளதனை வழங்குதல் கூடாது என்றல் அமையுமா றென்னையோ!

3. சங்கப்புலவரைப்பற்றி எழுதும் உரைநூலில், பிற் காலத்து வந்த சொல்லை வழங்குதல் தகாது என்றார்கள். அவ் வாறு சங்கச் செய்யுட்களில் வந்திலாத சொற்களை மேற்கோள் ளாதெழுதின் அஃது இக்காலத்து உரைநூலாதலே இல்லை. நிற்க. சங்கப்புலவர் செய்யுளுக்கு எழுதியிருக்கும் உரைகளில், அச்செய்யுட்களில் வந்திலாதனவாகிய உப்புக்கண்டம், கண்ட சருக்கரை, கிடாரம், குத்தலரிசி, சுமடு முதலிய சொற்களை உரையாளர் வழங்கியிருத்தல் நாட்டாரவர்கள் கருத்திற்குச் சிறிதும் அமையாதன்றே? சங்கப்புலவர்தஞ் செய்யுட்களின் உரையிலே இத்தகைய பிற்காலத்துச் சொற்கள் வந்திருக்க, அவரைக் குறித்து இக்காலத்தில் எழுதும் உரைநூலிற் பிற் காலத்துச் சொல்லை சங்ககாலத்து வழங்காத சொல்லை எழுதுதல் கூடாது என்று நாட்டாரவர்கள் சொல்லவில்லை. வழங்குதல் கூடாது என்பது அமைவுடையதாகுமோ?

4. முகிந்தல் என்னுஞ் சொல்லை நூன் முழுவதிலும் வழங்காததனால் அச்சொல் எழுதினோருக்கே அருவருப்பினை விளைத்திருக்கும் என்றார்கள். முகிந்தது என்பது முற்றிற்று —பூர்த்தியாயிற்று என்னும் பொருளது. இச்சொல்லை நூன் முழுவதிலும் எவ்வாறு வழங்குதல் கூடும்?

ஆங்கனம் முதலிய சொற்கள்

ஆங்கனம் முதலிய சொற்களைக் குறித்து நாட்டாரவர்கள் எழுதியிருப்பதன் கருத்துக்கள்:

1. நன்னூலார் அங்ஙனம் முதலிய சொற்களை விதிகூறி அமைத்துளார்.

2. அங்ஙனம் முதலியவற்றை அவ்வடிவில் வழங்க மறுப் பது வியப்பாகவுள்ளது.

3. 'புதியதொரு வாய்பாடு கொண்டு வழங்குவது மரபு நிலை திரித்துப் பொருளுணர்ச்சிக்கு ஊறு செய்வதே யாகும்'.

4. யாங்ஙனம் என்பதனை யாங்கனம் என எதுகைத் தொடையில் புலவர் திரித்தனர்.

5. அங்கனம் என்பது வழங்குதற்கு எளிமையுடையது; அங்ஙனம் என்பது அருமையுடையது. ஆகலின், அங்கனம் என்பது அங்ஙனம் எனத் திரியாது.

6. 'அங்ஙனம் முதலிய சொற்களை அ—ஙனம் என்றிங் ஙனம் பிரித்துப் புணர்த்துவது தொல்காப்பியனார் கருத்தன் றும். ஆகலின், ஙகரம் மொழிமுதற்கண் வரும் என அவர் விதித்திலர்'.

7. 'மெய்ந்நிலை சுட்டின்' என்னுஞ் சூத்திரத்தால் அங்ங னம் என்னுஞ் சொல்லையே தொல்காப்பியனார் குறித்தார்.

8. ஆங்கனம் இங்கனம் என்பது பிழையுள்ளதோர் முடிபு.

9. அங்ஙனம் என்னுஞ் சொல்வழக்குப் பழமையதே— என்பன.

இவற்றை முறையே நோக்குதும்:

1. நன்னூலார் அங்ஙனம் இங்ஙனம் யாங்ஙனம் முதலிய சொற்களுக்கு விதிகூறியிருத்தலான் அவை வழங்குதல் கூடும் என்பதுவே போதருதலன்றி, ஆங்கனம், ஈங்கனம், யாங்கனம் முதலிய சொற்களை வழங்குதல் கூடாது என்பது எவ்வாறு போதரும்? அவர் அங்ஙனம் முதலியவற்றை அமைத்தில ராயின், அவற்றை மேற்கொள்ளாது விடுத்தல் கூடும். அமைத் துள்ளாராகலின் அவற்றை வழங்குதல் தவறன்று. இதுவே யன்றி, ஆங்கனம் முதலியவற்றை வழங்குதல் தவறென்பது பெறப்படாது.

2. அங்ஙனம் முதலிய சொற்களை அவ்வடிவில் வழங்கு தலை யான் யாண்டும் மறுத்திலேன். யான் மறுப்பது வியப் பாகவுளது, என்று நாட்டாரவர்கள் எழுதியிருப்பதுவே வியப் பாகவுள்ளது. மாணவர்பொருட்டு யான் எழுதியிருக்கும் புஸ்த கங்களில் அங்ஙனம் இங்ஙனம் யாங்ஙனம் என்பவற்றையே வழங்கியுள்ளேன்.

3. அங்ஙனம், இங்ஙனம் முதலியவை புதியவாய்பாடா, ஆங்கனம்....யாங்கனம் முதலியவை புதிய வாய்பாடா? சங்கச் செய்யுட்களினும் தொல்காப்பியத்தினும் வழங்கப்பட்டுள்ள ஆங்கனம்........யாங்கனம் முதலியவை புதியவாய்பாடும் பிற் காலத்து நூல்களிலே வந்துள்ள அங்ஙனம்...........யாங்ஙனம் முதலியவை பழையவாய்பாடும் ஆகுமாயின், பின்னை யாதுதான் யாதாகாது?

சங்கச்செய்யுட்களில் ஆங்கனம்........யாங்கனம் என்னுஞ் சொற்களின் பொருளை அறிந்த அறிஞர்கட்கு, யான் எழுதியுள்ள 'கபில'ரில் வந்திருக்கும் ஆங்கனம்..........யாங்கனம் என்னுஞ் சொற்களின் பொருள் விளங்காதோ? அது பொருளுணர்ச்சிக்கு ஊறு செய்வதாதல் எப்படி? அங்ஙனம்........யாங்ஙனம் என்று வழங்குவதே மரபு என்றும் அவற்றை அங்கனம்........யாங்கனம் என்று வழங்குவது மரபன்று என்றும் கூறி, 'மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தையும், அதற்கு, 'மரபினை நிலை திரித்துச் சொல்லுப எனின், உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிது பிறிதாகும்' என்னும் பேராசிரியருரையையும் நாட்டாரவர்கள் ஆதாரமாகக் காட்டியிருக்கின்றார்கள். அச்சூத்திரவுரையினிறுதியில், 'செவிப்புலனாய ஓசைகேட்டுக் கட்புலனாயபொருள் உணர்வதெல்லாம் மரபுபற்றுக அல்லது மற்றில்லை என்றவாறு' என்று பேராசிரியரே எழுதியிருப்பதில் நாட்டாரவர்களின் நாட்டம் சென்றிலதுபோலும். இவ்வுரையினையும் மேலையிரண்டு சூத்திரங்களின் பொருளையும் நோக்குவோர்க்கு ஈண்டுக் கூறிய மரபு என்பது இன்னதெனத் தானே போதரும். 'இருதிணை ஐம்பாற் பொருள்களைத் திணையும் பாலும் வழுவாமல் தழுவுதல் வேண்டும்' என்று, 'நிலந்தீ நீர்வளி' என்னுஞ் சூத்திரத்திற்கூறி, அம் மரபு திரிதல் செய்யுட்களுக்கு இல்லை என்பதனை அடுத்த சூத்திரத்திற் கூறி, அம் மரபு திரியில் பொருள் பிறிதாகும் என்பதனை 'மரபு நிலைதிரியின்' என்னுஞ் சூத்திரத்தில் ஆசிரியர் கூறியுள்ளார். உரையாளரும் இவ்வாறே பொருள்கூறியுள்ளனர். இனி, நாட்டாரவர்கள் கூறுவதுவே இச்சூத்திரத்தின் பொருள்என்று கொள்ளினும், ஆங்கனம்........யாங்கனம் என்பனவே பழைய செய்யுட்களில் வந்திருத்தலின் அவற்றை ஆங்ஙனம், அங்ஙனம், ...யாங்ஙனம் என்று எழுதினோரன்றே மரபுநிலை திரித்தவராவர்? அவை (ஆங்ஙனம் முதலியவை) யன்றே பொருளுணர்ச்சிக்கு ஊறு விளைத்திருக்கும்?

4. யாங்ஙனம் என்பதனையே எதுகைத் தொடையில் யாங்கனம் என்று புலவர் திரித்தனர் என்று நாட்டாரவர்கள் எழுதியிருப்பது உண்மையாகுமா? பண்டைக் காலத்தில் ஆசிரியப்பாக்களில் எதுகை யிருந்தே தீரவேண்டும் என்னும் நியதி உண்டோ? பிற்காலத்திலும்—இக்காலத்திலும்—ஆசிரிய வடிகளை எதுகை யில்லாமல் அமைத்துப்பாடும் வழக்காறு

உளதே. தொல்காப்பியம் செந்தொடையைக் கூறியிருத்தலானன்றே பண்டைப்புலவர் தஞ்செய்யுளில் எதுகை மோனைகளை நியதியாகக் கொள்ளாது விடுத்தனர். பிற்காலத்துப் புலவரே போன்று எதுகைக்காகச் சொற்களைத் திரிக்கும் வழக்கம் பண்டைப் புலவர்பால் உண்டென்பது நாட்டாரவர்களால் யானறிந்த புதுச்செய்தியே.

'யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலன் மண்டிலம்' எனத் திரியாது கூறினும் எதுகையாதற்கு இழுக்கின்றும். அங்ஙனமாகவும் எதுகைமோனைகளின் நிர்ப்பந்தம் இல்லாத காலத்தில்—இல்லாத பாவில், புலவரொருவரல்லர்—[1] பலரும்—அச்சொல்லை வழங்கிய புலவரனைவருமே—ஙகரத்தைக் ககரமாகத் திரித்தே வழங்கினர் என்பது எத்துணை அமைவினது! ஙகரத்தோடு பிறப்பொற்றுமையும் ஒலியொற்றுமையும் உடையது ககரம் ஒன்றே என்று எழுதியிருக்கிறார்கள். ககரம் ஙகரத்தோடு ஒலியொற்றுமையுடையது என்பதும் எனக்குப் புதியதே. 'க'ஙக்கள் முயற்சியானும் மாத்திரையானும் குளக்கரை குளங்கரை என்னும் பொருளானும் ஒருபுடையொத்து இனமாயின' என்றே எழுதியுள்ளார் மயிலைநாதர். நாட்டாரவர்கள் ஒலியொற்றுமை யுடையது என்றது எப்படி என விளங்கவில்லை. ஙகரமும் அரைமாத்திரையது, ககரமும் அரைமாத்திரையது. ஆகலின் அவை ஒலியொற்றுமை யுடையவாகும் எனின், சகரமும் அரைமாத்திரையதே; ஏன் எல்லா மெய்யெழுத்துக்களும் அரைமாத்திரையவே. ஆகலின் எல்லா மெய்யெழுத்தும் ஙகரத்தோடு ஒலியொற்றுமையுடையவேயாகும். ஙகரமும் ககரமும் ஒலிவேற்றுமையுடையவாகலானன்றே வேறு வேறு இனங்களாயின. 'ஒழிந்த மெல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கித் தாம் வல்லென்றிசைத்தலானும் வல்லெனத் தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்தாயிற்று' என்றும், மேல்லேன்றிசைத்தலானும் மெல்லென்று மூக்கின்வளியாற் பிறத்தலானும் மெல்லெழுத்தாயிற்று' என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருத்தலின் ககர ஙகரங்கள் ஒலிவேற்றுமையுடையவாதல் அறியப்படுமே.

---

1. 'ஆங்கனந் தணிகுவதாயின்' நற். 322.
'ஈங்கனஞ் செலக தானென' புற. 208.
'ஈங்கனம் வருபவர்' குறு. 336.
'யாங்கனம்' புற, 8,49; அகம். 27, 90, 378.
சிந்தாமணியிலும் (1942) ஈங்கனம் என்பது வந்துளது.

இறையனார்களவியல் மூன்றாஞ் சூத்திரம் 'ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன்' என்றே படிக்கப் பட்டு வருகின்றது என்றார்கள். அச்சூத்திரம் முழுவதும் ஈண்டுத் தருகின்றேன்.

'ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்கி னோரிற் குறிதலைப் பெய்தலும்
பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலுமென்
றாங்க விரண்டே தலைப்பெயன் மரபே'

என்பது அச்சூத்திரம். சூத்திரத்தின் இரண்டு மூன்று நான்காம் அடிகளை நோக்கின், முதலடி, 'ஆங்கனம் புணர்ந்த கிழவோன் றன்வயின்' என்றே அமைந்திருந்திருக்கும் என்பது எளிதிற் புலனாகும். உண்மைப் பாடம் அதுவேயாதல் ஓலையேடுகளை நோக்கின் அறியலாகும். என்னெனின், பழைய பதிப்புக்களில்,

'ஆங்ஙனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை'

என்று பதிக்கப்பட்டிருந்த தொல்காப்பியச் சூத்திரம், இப்பொழுது திரு. வே. துரைசாமிஐயரவர்களைக் கொண்டு பரிசோதித்துத் திரு. கனகசபைப் பிள்ளையவர்கள் வெளியிட்ட பதிப்பில்,

'ஆங்கனம் விரிப்பின் அளவிறந் தனவே
பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை'

என்று பதிக்கப் பட்டுளது. துரைசாமிஐயரவர்கள் பாடத்தைத் திருத்திவிட்டார்கள் என்று நாட்டாரவர்கள் கூறிவிடுவார்கள்போலும்.

அகநானூற்றில், 'யாங்ஙனம்' என்று பதிப்பித்துள்ள மூன்று இடங்களிலும் (செய்யுள் 27, 90, 378) திரு. எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களிடமிருக்கும் பழைய ஓலையேட்டில் 'யாங்கனம்' என்றே இருக்கின்றது. இஃது ஏடெழுதினோர் தவறு என்று நாட்டாரவர்கள் கூறுவார்களாயின் என்செய்வது!

அச்சுப்புத்தகங்களில் ஆங்ஙனம் யாங்கனம் என்று பதித் திருத்தற்குக் காரணம் அவர்க்குள்ள நன்னூற்பயிற்சியே யாகும். மஹாமஹோபாத்யாய, டாக்டர் ஸ்ரீமத் ஐயரவர்களின் சங்கநூற்பதிப்புக்களில் இவ்வாறு வந்திலாமை நோக்கத் தக்கது.

(தொடரும்.)

சிந்தாமணியின் செந்தமிழ் நலம்

திரு. ஒளவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள், திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 8, பக்கம் 324.)

பின்பு, சீவகன், தன் தாய் தந்தையராகிய சுநந்தை, கந்துக்கடன் என்பவரையும், மனைவியாகிய காந்தருவதத்தை, குணமாலை என்பவரையும் கண்டு மகிழ்வித்துத் தேற்றி, குதிரை வாணிகன் உருக்கொண்டு, அந்நாட்டைவிட்டு நீங்கி, விதைய நாட்டை அடைகின்றான்.

இக்கூறிய நிகழ்ச்சிகளுள், படிப்போர் மனக்கண்ணின்முன் குணமாலை, சுரமஞ்சரி என்ற இருவரையும் கொணர்வதற்கு இந்நூலாசிரியர், திருத்தக்கதேவர் என்பார் ஒரு சூழ்ச்சி செய்கின்றார்.

மேலே கூறிய நிழ்ச்சிகளைக் கூறப்புகுந்த தேவர், குணமாலையும் சுரமஞ்சரியும் சுண்ணங் காரணமாக மாறுபடுவதும், அதன்கண் சீவகனது மதிநுட்பம் புலப்படுவதும் குறித்து முதற்கண், அந்நகரத்தே, பங்குனிப் பருவத்தின் வரவும் பிறவும் கூறலுறுகின்றார்.

வேனிற்காலம் வந்தது. பொழில்கள் பூவகையாலும் னிவகையாலும் காண்போர் மனத்தைக் கவர்ந்தன. வண்டினம் பூக்களில் ஊறும் தேனையுண்டு சிறந்தன. குரக்கினம் கனிவகையினையுண்டு களிப்புற்றன. தென்றற்காற்று, புதுமணம் விரவிப் பொழிலெங்கும் பரவி, மக்கள் மனத்தில் இன்பம் கிளர்வித்தது. இராசமாபுரத்து மக்கட்குப் பொழிலாட்டில் விருப்புண்டாயிற்று. அந்நகர் முற்றும் பொழில் நோக்கிச் சென்றது.

இங்ஙனம் போகம்நுகர்தற்கு இடனாகிய பொழில், நகர்க்குப் புறத்தேயும், யாற்றுக்கு அயலேயும் உளதாம் எனத் தேவர்

குறிக்கின்றார். மர வகையும் செடி வகையும் கொடி வகையும் விரவி, வண்டினத்தாலும், மயில் குயில் முதலிய புள்ளினத்தாலும் இசைத்திருக்கின்ற பூமரக்கா, தெளிந்த நீர் இடையறாத யாறு ஒன்றின் அயலே உளதாயின், இயற்கை, தன் ஒள்ளிய அழகினை, விழைந்து காண்பார்க்கு விழைவறாதவாறு பிணிப்புண்ணத் தோற்றுவித்தற்கு அதனையே இடமாகக் கொள்ளும். மேலும், இப்பொழில் நகரருகே உளதாயின், மக்களின் வரவு செலவாலும், மாவும் மாக்களும் வையமும் ஊர்தியும் பயில வழங்குவதாலும், தூய்மையும் புதுமையு மிழந்து, பொழில் எழில் சிறவாதென்பதை உட்கொண்டு, நகரத்தார் அவ்வாறு அமைத்துக்கொண்டது குறிக்கத் தக்கதாகும்.

வேனிற்பருவம், சூரியன் வடதிசை நோக்கிப் பெயரும் காலமாகிய உத்தராயணத்தில், பங்குனித்திங்களின் முடிவில் பிறக்கும் பருவம் ஆகும். சித்திரையும் வைகாசியும் இளவேனிற்குரிய திங்களாயினும், அது பங்குனியின் பிற்பகுதியிலேயே தோன்றத் தொடங்குகின்றபடியால், அதனைத் தெரிவிக்க, "பங்குனிப் பருவம்" என்கின்றார். "மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசையயண முன்னி, ஆசரநடக்கு நாளுள் ஐங்கணைக் கிழவன் வைகிப், பாசறைப் பரிவு தீர்க்கும் பங்குனிப்பருவம் செய்தான்" என்று தேவர் கூறுமாற்றால், மேலே சொன்ன உண்மை தெரிகிறது.

பண்டைக்காலத்தில், நாட்டுமக்களுள் ஆட்வர் பலரும் போர் வீரராய்ச் செய்வனசெய்து சிறப்புற்றிருந்தனர் என்பது "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என்று தொடங்கும் புறப்பாட்டால் புலனாகிறது. அவர் கூதிர்ப்பருவத்தே போர்க்குச்சென்று பாசறைக்கண் தங்கி, போர் செயல்வகைகளையும், தம் பிரிவால் வருந்தும் காதலர் திறங்களையும் நினைந்து நினைந்து பரிவுகூர்ந்து இருப்பர். வெயிலின் வெம்மைமிக்கு நிலவும் வேனிற்காலம், போர்க்கு நன்றாகாமையின், அதுபோது தம் மனையகம்போந்து, மனக்கினிய காதலரைக்கூடி இன்புறுதல் மரபு. போர்க்குரிய காலமாவது, "வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள் ஒத்து நோய்

செய்யாது, தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய், தானே, வருந்தாது செல்லும் இயல்பினதாம்'' என்று பரிமேலழகர் (குறளுரை: 481) கூறுவதனால் அறியப்படும். படவே, பாசறைக்கண் தங்கிப் பரிவுகூர்ந்திருந்த ஆடவர்க்கு, இளவேனிற்பருவம், காதலரைக் கூட்டி இன்பப்பயனை நல்கும் ஏற்றம் உடையதென்பது இனிது தோன்ற, தேவர், பாசறைப் பரிவுதீர்க்கும் பங்குனிப் பருவம்'' என்றார். என்றவர், அதனோடு நில்லாது, காதலரைக் கூடும் ஆடவர், அப்பரிவு தீரும் வகையினை, அக்கூட்டத்தின் மேல்வைத்துச் செய்யுள் செய்துள்ளார். அது,

"தோடணி மகளிர் போன்ற
துணர்மலர்க்கொம்பர்; கொம்பின்
ஆடவர் போல வண்டும்
அடைந்தன; அளியிற்கொல்கி
ஊடிய மகளிர் போல
ஒசிந்தன; ஊடல்தீர்க்கும்
சேடரிற் சென்று புல்லிச்
சிறுபுறம் தழீஇப தும்பி"

என்பது. "உயர்ந்ததன்மேற்றே உள்ளுங்காலை" (தொல்.பொரு.) என்பதனால், வண்டினும் மக்கள் உயர்வு தோன்ற, அவர்செயலை உவமையாக நிறுத்திக் கூறியுள்ளார். துணர்மலர்க் கொம்புகள் மகளிர் போல் நிற்கின்றன; அம்மகளிரை அடையும் ஆடவர் போல, அக்கொம்புகளை வண்டினம் அடைகின்றன. வண்டின் கனம் பொறாது கொம்புகள் தாழ்வது, அம்மகளிர் அவர் செய்யும் தலையளியால் புலந்து ஊடுவதுபோல் உளது. வண்டில் உயர்ந்த தும்பியினம் போந்து, தாழ்ந்த கொம்பின் உயர்ந்தபக்கத்துத் தங்குதலும், கொம்பு நிமிர்ந்து இருதலையும் ஒக்கநிற்கிறது. அது, ஊடிய மகளிர்பொருட்டு, தகுவன கூறித் தெருட்டிக் கூட்டுவிக்கும் அறிஞர்செயல் போல்கின்றது. இது வேனிற்காலநிகழ்ச்சி. இதனால் வண்டும், தும்பியும் மணங்கமழ் மலரின் தேனுண்டு சிறக்க, ஆடவர் பலரும் காதலரைக் கூடிக் களிப்புறுவதும்; அக்காலை, அறிஞர் போந்து, அவர்கட்கு அறிவு நெறி காட்டிச் செம்மை செய்வதும் கூறப்படுவது காண்க.

இனி, பங்குனிப்பருவம், ஆடவர்க்குள்ளதாகிய பாசறைப் பரிவினைத் தீர்க்குமாற்றைத் தொகுத்தும் வகுத்தும் கூறிச் செல்லும் தேவர், இராசமாபுரத்து மக்கள் வேனிலில் பொழிலாட்டும், நீர்விளையாட்டும் புரிவதனை விரிக்கத் தொடங்கி, முதற்கண், அவர்கள் பூம்பொழிற் சேகித் தாம்தாம் விரும்பிய இடங்களில் தங்கியிருப்பதைக் கூறுகின்றார்.

இந்நகரமாந்தர் தொலையாப் பெருஞ்செல்வராகலின், அவர் தத்தமக்குரிய வண்டியும், ஊர்தியும், வையமும், இவர்ந்து பொழிலுக்குச் செல்கின்றனர். சென்றவர் அன்னங்கள் அமர்ந்திருந்து விளையாட்டயரும் பொழிற்பகுதியில் தங்குகின்றனர். ஒருமருங்கு, தண்கயமும், ஒருசார் விரிந்த நீரோடையும் இருக்கின்றன. அயலே தெளிந்தநீர் பெருகியயாறு ஓடுகின்றது. செவ்வாழையும், மாவும், பலாவும் ஆகிய பலவகைப் பயன் மரங்கள், கனிதாங்கி நிற்கின்றன. இடையிடையே, பூவகை செறிந்த புதல்களும், செடிகளும் பொலிந்து, மக்கள் தங்கி, இன்பம் நுகர்வதற்கு ஏற்றவாறு, குளிர்ந்த நிழல் செய்து நிற்கின்றன. வேனில் வெம்மையால் வெய்துற்றார்க்குத் தண்ணிய நீழலிடம் அன்றோ இன்புறுத்துவது! அதனால், இவர்கள் தங்கிய இடங்கள், கொம்புத் தேன்கள் ஊறித் துளிப்பதனாலும், பூந்தேன் ஒழுகுவதாலும், அப்பூக்கள் உதிர்ந்து பரந்து கிடத்தலாலும், யாற்றயலாகலின் வெண்மணல் பரந்து குளிர்ச்சியும் நறுமணமும் பெற்றுத் தூயவாய் விளங்குகின்றன. அங்கே தங்கிய மக்களும் தண்ணிய குளத்தில் தங்கியதுபோல, வெப்பம் சிறிதுமின்றிக் குளிர்ச்சியே நுகர்ந்து இன்புறுகின்றனர். இதுபின்வரும்,

“கூறப்பட்ட அக்கொய்ம் மலர்க் காவகம்
ஊறித் தேன்துளித்து ஒண்மது வார்மணம்
நாறிநாண்மலர் வெண்மணல் தாய் நிழல்
தேறித்தெண்கயம் புக்கது போன்றதே”

என்ற இனிய பாட்டால் இனிது விளங்குதல் காண்க. இப்பெற்றித்தாயதோர் இடத்திற்றான், குணமாலையும் சுரமஞ்சரியும் தத்தம் தோழியர் சூழத் தங்கியிருக்கின்றனர். சீவகனும் பிறிதோரிடத்தில் தன் தோழர்சூழ வீற்றிருக்கின்றான்.

குணமாலையும் சுரமஞ்சரியும் ஓர் ஊரினர்; அன்றியும், உருவும், திருவும், பருவமும், கல்வியும் ஒப்ப உடையவர். தேவர் இவர்கள் உள்ளத்தே பெருகிய நட்பிருந்ததாகக் கூறுகின்றனரேயன்றி, அஃதுளதாதற்குரிய ஏதுக்களுள் சிறப்புடைய புணர்ச்சி, பயிற்சி, உணர்ச்சிகளுள் ஒன்றையுங் கூறிற்றிலர். அதனால் வேனிலாட்டில் பொழிற் கெய்தியவழி, இருவரும் ஒருமருங்கே தங்கி ஒருவரோடொருவர் அளவளாவி நட்புக்கொண்டவராதல் வேண்டும் என்று தெரிகிறது. இவர்களுள், குணமாலை தன்பெயருக்கேற்ப நற்குணமே நிறைந்த நங்கையாவள். அறன்கடை நில்லாத அறிவினள்; பழியஞ்சும் பண்புமிக்கவள்; இவற்றால் எய்திய மனத்தூய்மையோடு செய்வினைத்தூய்மையும் சிறக்க உடையவள். சுரமஞ்சரி யென்பவளும் நற்குணம் படைத்த நங்கைநாயகமாயினும் சிலகுறைபாடுகளும் உடையள்: பின்விளைவு கருதிச் செய்வன செய்யும் திறப்பாடு குறைந்தவள்; கணிகமாய் நிகழும் துன்பத்தின் பொருட்டுப் பிறப்புத்தோறும் தொடரும் சிறப்புடைநட்பிணையும் துறக்கும் சிறுமையள்; தன் செயலே தலைசிறந்தது என்று கருதும் தருக்குடையவள். சீவகனும் தான் காமதிலகன் எனத் தோழரால் சிறப்பிக்கப்படுவது குறித்து அவள்பால் அன்புகொண்டு மணம்புரிகின்றானேயன்றி, பிறிதொன்றால் அன்று என அவள் வரலாறு கூறுகின்றது.

குணமாலைக்கு மாலையென்னும் பெயருடைய தோழி ஒருத்தி உளள். அவள், குணமாலையும் சுரமஞ்சரியும் ஒருங்கே இருந்தபோது, தன் தலைவி செய்த சுண்ணத்தை, அவள் குறிப்பின்படி, சுரமஞ்சரிக்குக் காட்டுகின்றாள். அதனைக் காணும் அவள், தனதே உயர்ந்ததென்னும் தருக்கினால்,

“ சுண்ணம் என்பதோர் பேர்கொடு, சோர்குழல்
வண்ணமாலை! நுசுப்புவருத்துவான்
எண்ணிவந்தன; கூறு இவையோ ? என
நண்ணிமாலையை நக்கனள் ” (சீவக. 876)

இதன்கண், குணமாலை சுண்ணத்தின் நன்மை சிறிதும் கூறாமல், “ இவை நின் நுசுப்பை வருத்துவதற்காகச் சுண்ணம் என்பதோர் பெயர் கொண்டுவந்தனவேயன்றி, உண்மைச் சுண்ணமாதல் இல்லை ” என்கின்றாள். அவள் மனத்தில் தன் சுண்ணத்தின்

உயர்வே முன்னேறிநிற்றலால், என் சுண்ணத்திற்கு இவை எவ்வாற்றானும் நிகராகா," என்பாள், "கூறு இவையோ?" என்கின்றாள். ஆனால், இருவர் சுண்ணங்களையும் ஒப்பக்காணும் சீவகன், எவ்வாறு கூறுகின்றான் எனின்,

"நல்ல சுண்ணம்; இவை இவற்றிற் சிறி(து)
அல்ல சுண்ணம்; அதற்(கு)என்னை? என்றிரேல்,
புல்லு கோடைய பொற்புடைப் பூஞ்சுண்ணம்;
அல்ல சீதம் செய்காலத்தின் ஆயவே"

என்று கூறுகின்றான். அஃதாவது, குணமாலை சுண்ணம் நல்ல சுரமஞ்சரி சுண்ணம் சிறிது நல்லவல்ல. நல்லவை நல்லவாதற்குக் காரணம், கோடைகாலத்தே செய்யப்பட்டன என்பது; மற்றவை அல்லவாதற்குக் காரணம், மாரிக்காத்து இடிக்கப்பட்டன என்பது. இதனால், இருவர் சுண்ணங்களும் ஒப்ப நல்லவையாயினும், காலவேறுபாட்டால், சுரமஞ்சரியின் சுண்ணம் சிறிதே அல்லவாயின என்றானும். ஆகவே, குணமாலை சுண்ணத்தே நன்மை விளங்கவுரைதாதல் தெரிகிறது. அதனைச் சுரமஞ்சரி கண்டு வைத்தும், தனதே உயர்ந்ததெனும் செருக்குணர்வால் மறைப்புண்டு உறழ்ந்து கூறுகின்றாள்.

மேலும், அவள்கூறும் கூற்றும் குணமாலை நெஞ்சில் வருத்தம் விளைவிக்குமாறு அமைந்துளது: அவள், "சோர்குழல் வண்ணமாலாய்! இவை, சுண்ணம் என்பதோர் பேர்கொண்டு, நின் நுகப்புவருத்துவான் வந்தன, காண்" என்று கூறி நகுகின்றாள். இவள் கூற்றில்நிற்கும் முன்னிலையும், கூற்றும், நகையுமாகிய மூன்றும் குணமாலைக்கு அவலத்தை உண்டுபண்ணுவனவாகும். முன்னிலைக்கண், குணமாலையை, "சோர்குழல்வண்ணமாலை" என்று விளிக்கிறாள். சோர்குழல் எனக்குழலைப் பிரித்து விசேடித்து விட்டமையால், வண்ணம் என்பது மாலையைப் பிறிது பொருள்பட விசேடிப்பதாயிற்று. சோர்தல் குழற்கு இயல்பாயினும், இதுபோது, தாயாரால் இனிது கை செய்யப்பட்டுக் கவினுற்று விளங்குவதால், அக்கவின் சிறப்புத் தோன்ற முன்னிலைப்படுத்தல் நட்பாயின அச்சுரமஞ்சரிக்கு நேரிது. அவள் மனத்தே குணமாலைபால் யாதொரு வெறுப்பும்

இல்லை என்பதைத் தேவரே, "மௌவலங்குழலாள் சுரமஞ்சரி, கொவ்வைச்கனிவாய்க் குணமாலையொடு, எவ்வந்தீர்த்திருந் தாள்" (சீவக. 874) என்பதனால் விளக்கியுள்ளார். அன்றியும் இருவரும் மல்லிகைமாலைசூடிய மணக்கமழும் கூந்தலையுடையர் என்பது, "மல்லிகைமாலை மணங்கமழ்வார் குழற், கொல்லியல் வேல்நெடுங் கண்ணியர்" (சீவக. 879) எனவரும் பாட்டாலும் அறியக்கிடக்கிறது. தன் சுண்ணத்தினும், குணமாலையின் சுண்ணம் சோர்வுடையதென்னும் குறிப்பை அவள் குழல் மேலேற்றி, "சோர் குழல்" என்றும் பயனில் செயலால் வருந்திய மெய்யினை என்றற்கு "வண்ணமாலை" என்றும் குறிப்பித்தாள். இவ்வாறு, "சோர்குழல்வண்ணமாலை" என்று முன்னிலைப்படுத்தி, இச்சுண்ணம் செய்தற்கண் உளதாய உழைப்புப் பயனற்றதே என்பதை நேரிற்கூற மாட்டாமையால், "சுண்ணமென்பதோர் பேர்கொண்டு நகைப்பு வருத்துவான் வந்தவை" என்கின்றாள். நகை, எள்ளல்பற்றிவந்தது. இதனால், சுண்ணத்தைக் காட்டிய குணமாலைக்குச் சுரமஞ்சரி கூறியது வருத்தம் விளைவிப்பதொன்றென்பது கூறியவாறும்.

குணமாலை, சீரியகுணமாலையாகையால், அவள் கூறியது பற்றி, மனநோய் கொள்ளாது தக்கவிடைகூறுவாள், "செம்பொற்பாவையன்னாய், தேவருலகின்றி, இவ்வுலகில், இவ்விடத்து என் சுண்ணத்துக்கு ஒப்பாக வேறும் சிலஉள என்று அறிஞர் கூறவுறுவாராயின், நின் சுண்ணமும் என் சுண்ணத் தோடு நிகர்க்கும் என்று நீ கூறிக்கோள்ளலாம்" என்கின்றார்கள். இது,

> 'பைம்பொன் நீணில கன்றியிப்பார் மிசை
> இம்பர் என் சுண்ணம் எய்ப்ப உள எனின்
> செம்பொற் பாவையன்னாய்! செப்பு நீ" என

வருதலால் அறியப்படும். இதன்கண் தன்னையியத்தலாற் பிறக்கும் செயற்கை ஒளியோடு இயற்கை ஒளியும் உடன் விளங்கத் திகழும் மேனியுடையளாய்ச் சுரமஞ்சரி எதிரில் இருப்பதைக் காணும் குணமாலை அவளை நன்கு மதித்து, "செம் பொற்பாவையன்னாய்!" என்று முன்னிலைப் படுத்துகின்றாள்.

பொற்பாவையன்னாய் என்றலே நிரம்புமாயினும் செம்பொற் பாவையன்னாய் என விதந்து மொழிகின்றதனால், அவள் மேனி வனப்பும் ஒளியும் சிறந்து, இளவெயிலால் மிகு கவின்பெறும் நன்பொற்பாவைபோல, கவின் மிக்கு நிற்பதைப் புகழ்கின்றாளாம். "தாவில் நன் பொன்தைஇய பாவை, விண்டவழ் இளவெயில் கொண்டு நின்றன்ன, மிருகவின்" (அகம் 212) எனக் கவின் மிகுதியின் கண், செம்பொற்பாவை உவமமாதல் காண்க. கூற்றினும், "என் சுண்ணம் ஒப்பும் உயர்வும் இல்லாதது; நின் சுண்ணத்தை நிகர்க்கும் என்று கூறிக்கொள்க. யான் அதுபற்றி ஒன்றும் கூறேன்" என்று கூறக்கருதுமவள், "இப்பார்மிசை, இங்கே, என் சுண்ணம் நிகர்ப்பன இல்லை; உள்ளவெல்லாம் தாழ்ந்தனவே; நிகர்ப்பன உள என அறிஞர் கூறின், அன்னாய், நீசெப்புக" என வணங்கிய மொழியால் இணங்கவுரைக்கின்றாள். உள்ளவாறே நோக்கின், இவர் தம் சுண்ணங்களுள் சுரமஞ்சரிசுண்ணம் நன்றன்று. அதன் இயல் பினைக் குணமாலை அறிந்திருந்தும், அவள் கூறியவாறே தானும் அவள் மனம் புண்படுமாறு கூறாமல், "ஒக்கும் என்று கூறிக் கொள்க" என்றது, அவளுடைய விரிந்த மனப் பான்மையும், பொறைமருவிய நிறை குணமும் நாமறிய விளக்குகின்றது.

தருக்கினால், தம் குறையினைத் தாமே காணமாட்டாதார்க்கு அதனைக் காண்பார் கண்டுகூறினும், அத்தருக்கு அவர்பால் வெகுளியைக் கிளப்பி வருந்துவிப்பது நாம் நாடொறும் காணும் காட்சி. இவ்வியல்பினால், தருக்கிநின்ற சுரமஞ்சரிக்கு, குணமாலை கூறிய சொற்கள் "செவிசுட்டாணியில் நெஞ்சுழல்" பொத்தின. அதனால், அவள், மனம் கொதித்து "இவற்றை அறிஞர்பால் அனுப்பி நல்லது தெளிவோம்; அதனால், தோல்வியுறுபவர் நீர் விளையாடலைச் செய்தல்கூடாது; அன்றியும், வெல்பவர்க்குக் கோடியளவான பொன்னைத் தருதல் வேண்டும்," என்று நெடுமொழி நிகழ்த்துகின்றாள். இவள்பால், பின்விளைவு எண்ணிக் கூறும் இயல்பில்லாமை இனிது விளங்குவது காண்க. இதனாலன்றோ, பின்னர்ச் சீவகன், வேதியன் ஒருவனது உருக்கொண்டு போந்து, கவர்பொருள் எய்தப்பேசிய காலத்து, உண்மை யுணரமாட்டாமையை இவட்கு எய்துவித்து, அவனது காம வலையிற் படுவித்தது! அதனைப் பின்பு கூறுதும்.

(தொடரும்.)

அவிமாரகம்

திரு. T. S. நடராசன் B. A., எலத்தூர், சீர்காழித்தாலூகா.

(முற்றொடர்ச்சி துணர் 13 மலர் 8 பக்கம் 327)

நம் நாட்டினர் பெண் பெற்றபோதே துயரத்தையும் உடன்பெற்றதாக நினைப்பது வழக்கமாயுள்ளது. மணமக்கள் ஒத்தகல்வியும், ஒத்தகுலமும், ஒத்தகுணமும், ஒத்தசெல்வமும், ஒத்தஅழகும் ஒத்தஅன்பும் உடையோராயிருத்தல் வேண்டுமன்றோ? இன்றேல், அவர்களது வாழ்க்கை இன்பந்தரத்தக்கதாயிராது. மேனாட்டினர் மணம்போல நம்நாட்டு மணவாழ்க்கை சில ஆண்டுகளிலோ சில மாதங்களிலோ சில நாட்களிலோ முறிந்துபோவதன்று. மணவினையானது மணமக்களது பிற்கால வாழ்வின் இன்பதுன்பங்களுக்கு ஒருவகையில் ஏதுவாயிருக்கின்றது. ஆதலின், தாய் தந்தையர் தம்பெண்ணுக்கு எல்லா வகையிலும் ஒத்த கணவனைத் தேடுங் கடப்பாடுடையராயுள்ளனர். கல்வி அறிவிற் சிறந்த ஒருபெண் எழுத்து வாசனையே இல்லாத ஒருவனுக்கு வாழ்க்கைப்படின், அவன் எத்துணைச் செல்வமுடையனாயினும் அவன்பால் சிறிதும் அந் நங்கைக்கு மதிப்பு உண்டாகாது. அவ்வாறே, செல்வமக்கள் ஒருத்தி வறியன் ஒருவனையடைந்தால் அவள் எய்தும் துன்பம் அளவற்றதாகும். இங்ஙனம் ஒற்றுமையில்லாத கணவன் மனைவியரது இல்வாழ்க்கை துன்பமயமாகவேயிருக்கும். ஓர் அந்தணன் சிவபெருமானிடத்துப் பேரன்புவாய்ந்த கௌரிஎன்னும் தன் புதல்வியைப் பிச்சையேற்றுவந்த வைணவப் பிரமசாரியொருவனுக்கு நீர்வார்த்துக் கொடுத்தது போல் முன்பின் யோசியாமல் மணவினையை முடிவுசெய்தல் தீராத்தீங்கு பயப்பதாகும். குந்திபோசன் முன்னரே முடிவுசெய்திருந்தபடி அவியாரகன், செயவர்மன் ஆகிய இருவரில் ஒருவற்குத் தன் புதல்வியை மணம்

புரிவிக்க எண்ணினான். முன்பு தன்மகளை மணம்பேசிப்போன சௌவீரமன்னன் மறுபடியும் வாராதது பற்றி வியப்புற்றான். இதற்கிடையில், வாரணாசி மன்னன் தன்மகன் செயவர்மனுக்குக் குரங்கியைக் கொடுத்தல்வேண்டுமென வற்புறுத்திப் பன்முறை செய்தியனுப்பினான். குந்திபோசன், தன் மைத்துனனான சௌவீரமன்னன் மகளோடும் மனைவியோடும் நாட்டைத் துறந்து கரந்துறைதலை யறிந்தபின், தன் புதல்வியைச் செயவர்மனுக்கே மணம்புரிவிக்க உறுதிசெய்தான். அவிமாரகனையே மருகனாக அடையவிரும்பியிருந்த அரசியும் இவ்வேற்பாட்டிற்கு இணங்க வேண்டியதாயிற்று. குந்திபோசன், மகளின் திருமணத்தை விரைவில் முடிக்க எண்ணி மணமகனையும் மற்றையோரையும் அழைத்துவருமாறு தன் அமைச்சன் புதீகனது தலைமையில் சிலரை வாரணாசிக்கு அனுப்பினான்.

இஃது இங்ஙனமாக, ஒருநாட்காலையில் இளவரசியாகிய குரங்கி தன்தோழியரோடு பூங்காவில் விளையாடியபின் தன் பல்லக்கில் அரண்மனைக்குத் திரும்பிவந்து கொண்டிருந்தாள். அப்போது அரசனது பட்டத்துயானை மதங்கொண்டு பாகனைக் கொன்று தெருவழியே ஓடிவந்தது. வழியில் சிலரைக்கொன்று தன் கட்புலனாபவற்றையெல்லாம் அழித்து வரும் கருமேகம் போன்ற களிற்றைக் கண்ட எல்லோரும் அஞ்சி உயிர்தப்புமாறு நாற்றிசையிலும் ஓடுவாராயினர். அக்களிறு இளவரசிஇவர்ந்து சென்ற பல்லக்கைநோக்கித் திரும்பியது. அந்நங்கையும் மதயானையைக்கண்டு நடுக்குற்றாள்; அச்சத்தால் அவள் முகம் வேறுபட்டது; இமைப்பொழுதில் அவ்யானை அவளது உயிரைப் போக்கிவிடுமோ என்று எல்லோரும் அச்சமுற்றனர். இந்நிலையில் ஒரு வீரன் தோன்றினான். அவன் மதயானைமீது பாய்ந்து தன் வலிய கைகளால் அதனைக் குத்தினான். அவ்வளவில் அஃது அரசிளங்குமரியை விடுத்து வீரன்மீது திரும்பியது. வீரன் அதன் மத்தகத்தின்மீது பாய்ந்து ஏறி அதனை அடக்கினான். யானை அவனது பெருவலிக்கு நாணியதுபோன்று தலைகுனிந்து சென்றது. பின்னர், பாகர்கள் சங்கிலிகளால் பிணித்து அதனை நடத்திச்சென்றனர். இவ்வாறு இளவரசியைக்

காத்த அப்பெருவீரன் யாவனோவென ஐயுறவுகொண்டு மக்கள் அவனைப்பற்றிப் பலவாறு உரையாடுவாராயினர். 'அழகிய முகமும் அருளொழுகு கண்ணும் பரந்கிடந்த தோளுமுடைய இந்தண்ணளியன் செவ்வேளோ' என்றனர் சிலர். 'உடல் மெலிந்தும் வலிமிகுந்தும் உள்ள இவ்வீரன் பிறவுயிரைக் காப்பாற்றத் தன் உயிரை மதியாதவனாயிருக்கின்றான்; இவன்பால் தற்புகழ்ச்சியின்மை வியக்கற்பாலது' என்றனர் சிலர். மற்றும் சிலர், 'இவன் உரையாடுஞ் சொற்களால் அந்தணனை யொத்திருக்கிறான்; வீரச்செயலால் அரசகுலத்தானைப்போல் காணப்படுகிறான்; ஆனால் தோற்றத்தில் ஒரு புலையனைப்போன்றிருக்கின்றானே! ஈதென்ன விந்தை!' என்றனர். அப்பெருந்தகை யாவனெனின், வைரந்திய நகரத்தில் மறைந்துவாழும் சௌவீரநாட்டு இளவரசன் அவிமாரகனே. தனது அருமைப் புதல்வியைக் காப்பாற்றிய வீரனது அருஞ்செயலைக் குந்திபோசன் கேள்வியுற்றான்; அவன் யாவனென்று தன் அமைச்சரை வினவினான். அவர்கள் அவிமாரகனது இயல்புகளை விளக்கியதோடு அவனும் அவன்தந்தையும் புலையர்களைப்போல் காணப்படுகின்றனரென்றுங் கூறினர். அரசன் அவர்களைப் பற்றி ஆராய்ந்துணர்த்துமாறு மந்திரிகளைப் பணித்தனன். ஆனால், நாளடைவில் எல்லோரும் இச்செய்தியை மறந்துபோயினர்.

இது நிற்க, அவிமாரகன் இளவரசியைக் காப்பாற்றியவன்று இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர்; காதல்கொண்டனர். 'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள், என்னபயனுமில' என்பது பொய்யாமொழியன்றோ? அவிமாரகனும் தனது இல்லத்தையடைந்தான். அவன் மனக்கண் முன்னர் இளவரசியின் உருவம் இடையீடின்றித் தோன்றுவதாயிற்று. அவன் அவளையே நினைந்து நினைந்து வாட்டமுற்றான்; ஊண் உறக்கம் இழந்தான். ஆதலின் அவனது உடல்மெலிவுற்றது. கூற்று உடன்றுவரினும் அஞ்சாது எதிர்க்கவல்ல அவனது ஆற்றல் காமவேட்கணைகளால் நாளுங்குன்றி இறுதியில் மறைந்தொழிந்தது. அவன் தனிமையாக இருந்து குரங்கியின்

பெருவனப்பை உன்னி உன்னி நெஞ்சம் புண்ணுனன். அரண்மனையில் அந்தப்புரத்திலிருந்த இளவரசியின் மனநிலையும் இவ்வாறே இருந்தது. அவள் காதல் நோயினுல் மிகவருந்தினுள். தன்னைக்காத்த ஒப்பற்ற வீரனை மற்றொருமுறை காண்பதுவே தான் பெறற்கரிய பேறு என்று கருதினுள்; சிறந்த ஆடை அணிகலன்களை வெறுத்தாள். எஞ்ஞான்றும் அவிமாரகனது திருவுருவைத் தன் மனக்கோயிலில் வைத்து வழிபடுவதே தன் கடனெனக்கொண்டாள். தன்தோழியர் கேட்பனவற்றிற்குப் பொருத்தமில்லா விடைகளே யிறுப்பாள். மதியும் இரவுமே அவளுக்கு வெல்லுதற்கரிய பகைஞராயினுர். நாட் செல்லச்செல்ல அவளது செம்மலர் போன்ற மேனி இளைத்துப் பொலிவிழந்தது. ஆயினும், அவள் தனது உள்ளக்கிடக்கையினைத் தோழியரிடத்திற்கூட வெளியிடவில்லை.

இங்ஙனம் இளவரசி அடைந்த மாறுதலின் காரணத்தைச் செவிலியுணர்ந்தாள். காமன் கணைகள் சுடுதலினுல் அவள் அடைந்த துன்பங்களைக் காணச்சகியாத செவிலி ஒருநாள் தன் மகள் நளினிகையுடன் அவிமாரகனிருக்குமிடம் சென்ருள். அவர்களிருவரும் செல்லும்போது அவிமாரகனது பிறப்பு இழிந்ததாயிருப்பின் தம் எண்ணமும் முயற்சியும் எத்தகைய தீங்கை விளைவிக்குமோ என்னும் அச்சம் அவர்கட்கு உண்டாயிற்று; அவ்வேளையில் வானத்தில் அசரீரிகூறியமொழிகள் அவர்களது ஐயுறவைப் போக்கியமையின் அவ்விருவரும் மனமகிழ்வோடு சென்றனர்.

'அச்சத்தினுல் நடுக்கமுற்றிருந்தபோதே உன் முகப் பொலிவு அங்ஙனமிருக்குமாயின், உன்காதலனது கைகளால் தழுவப்பெற்றிருக்கும்போது நீ எத்தகைய பேரழகுடன் விளங்குவாய்!' என்று தானே மெல்லிய குரலில் வியந்து கூறிக் கொண்டு ஆழ்ந்த எண்ணத்தில் அமிழ்ந்திருந்த அவிமாரகனை இருவரும் கண்டனர். அவன் கூறியதைக்கேட்ட செவிலி தனது எண்ணம் நிறைவேறுமென்பதையுணர்ந்து மகிழ்ச்சியுற்று அவனைநோக்கி, 'ஐய, உன் உள்ளக்கிடக்கை யாது?' என்றனள். எனலும், அவிமாரகன் துணுக்குற்று வெட்கமுற்ற

வனைப் உண்மையை மறைத்துத் தான் யோகசாத்திரத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்ததாக விடையிறுத்தான். இதனைச்செவியுற்ற செவிலி பெரிதும் நகைத்து 'உன்னினும் தீவிரதர யோகத்திலுள்ள ஒருவர் அரண்மனையிலுள்ளனர்; நீ அங்குவரின் இருவரும் நன்மை எய்தலாம்' என்றனள். அவிமாரகன் உண்மையுணர்ந்து களிப்புற்றான்; அந்தப்புரத்தில் இளவரசியின் மாளிகை யாண்டுளதென்பதைச் செவிலியிடம் நன்குணர்ந்து, தான் அன்றிரவு அங்கு வருவதாக உறுதிகூறியதோடு அவள்பால் தனது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொண்டான்.

இங்ஙனம் புத்துணர்ச்சி பெற்ற அவிமாரகன் இரவின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நள்ளிரவில் அவன் ஒரு கள்வன் வேடம்பூண்டு வாளேந்தியவனாய் வலியகயிறு ஒன்று கையிற்கொண்டு அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான். நகரம் முழுதும் இருளில் மூழ்கி அமைதியுற்றிருந்தது. எப்போதாவது நிகழும் ஒருபறவையின் குரலும் எங்கேயாவது ஒரு வீட்டினின்றும் கேட்கும் ஒலியும் அவ்வமைதிக்கடலில் உண்டாகும் சிறிய அலைகளைப் போன்றிருந்தன. ஒரு வீட்டின் உப்பரிகையில் ஒருபெண் வீணையை ஏந்தி இன்னிசை எழுப்பிப் பாடிக்கொண்டிருந்தாள். அதனைத் தாண்டி நெடுந்தூரம் சென்றான் நம் அவிமாரகன். பின்னர், பிணக்குற்ற தன் மனைவியின் புலவியைத் தீர்த்தற் பொருட்டுக் கணவன் ஒருவன் கூறும் வணக்கமான இனிய மொழிகளும் அவனது செவியில் அரைகுறையாய் விழுந்தன. 'காதல்மிக்க தன் உள்ளத்துவகையைத் தெள்ளிதிற் புலப்படுத்தாது கரந்து ஒழுகுதல் நாணுடைய மகளிர் நல்லியல்பன்றோ' என்று அவன் கூறிக்கொண்டே சென்றான். அப்பாற் செல்லும்போது ஒரு கள்வனும் பின்னர் ஒரு நகர்க்காவலனும் வழியில் எதிர்ப்பட்டனர். அவிமாரகனும் அவர்கள் கண்ணிற்படாது ஒதுங்கிச் சென்றனன்; பன்முறை திரும்பிப்போய்த் தன்காதலியிடம் பிரியாவிடைபெறும் ஒரு காதலனைக் கண்டு, அவர்களையும் தாண்டிச்சென்று இறுதியில் அரண்மனை முன்பாக வந்து

சேர்ந்தான்; தான் கொண்டுவந்த கயிற்றின் ஒரு நுனியில் சுருக்கிட்டு மதிலின் உச்சியில் மழைநீர் வருவதற்காக அமைக்கப் பெற்றிருந்த மதிலுறுப்பின்மீது அதனை எறிந்தான். முதற்றடவையிலேயே சுருக்கு அவ்வுறுப்பினைப் பற்றிக்கொள்ளவே, அவிமாரகன் கயிற்றை உறுதியாகப் பற்றிக்கொண்டு மேலேறிச் சென்றான்; விளக்குகளால் இரவென்பதே தோன்றாது ஒளி பெற்றுவிளங்கும் அரண்மனையைக்கண்டு, தான் அங்கிருந்து உள்ளே இறங்கினால் இளவரசியின் இருப்பிடமடைவதற்குள் பல இடுக்கண்கள் நேரிடும் என்பதை உணர்ந்து திரும்பினான். பின்னர், அக்கயிற்றை எடுத்துக்கொண்டு வேறிடம் சென்று, செவிலிகூறியவாறு இளவரசியின் மாளிகையை நேராக அடையக்கூடிய இடத்தில் தன் கயிற்றின் உதவியால் மதிலேறி உட்சென்றான்; ஒரு பலகணியைத்திறந்து உட்செல்லவே, தான் இளவரசியின் அறையில் இருப்பதாக உணர்ந்தான்; அக்கணமே தன் வேடத்தைக் களைந்தெறிந்தான்.

அன்று பிற்பகலில், தன்னைச் செயவர்மனுக்கு மணம்புரிவிப்பதற்காக மணமகளை அழைத்தற்குப் புதிகன் என்னும் அமைச்சன் சென்றுள்ளான் என்னும் செய்தியை அறிந்த இளவரசி உள்ளம் நொந்து, பின்னர் ஒருவாறு தேறி, 'என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவரையன்றி வேறு எவரையும் மணந்துகொள்ளேன்; அஃது இயலாதாயின் கன்னிகையாகவே இருந்து என் வாழ்நாளைக் கழிப்பேன்; இது திண்ணம்' என்று உறுதிசெய்துகொண்டாள். பின்னர், செவிலியால் அவிமாரகனது வருகையை உணர்ந்த குரங்கி மகிழ்ச்சியுற்று அன்றிரவு சற்றே உறங்கினாள். அச்சமயத்தில்தான் அவிமாரகன் அங்குச் சென்றான். அவன் வருவதைக்கண்ட நளினிகை அவனை வரவேற்றாள். உறங்கும் தன்காதலியை எழுப்பவேண்டாமென்று கூறி அவளது பேரழகைக் கண்டு வியந்து மனமகிழ்ந்தான். அந்நிலையில், இளவரசியும் விழித்தெழுந்து தன் காதலனைக் கண்ணுற்றாள்; சற்று நாணித் தலைகுனிந்தாள்; சிறிது அச்சமுற்றாள்; ஆசைமீதூர அச்சமும் நாணமும் ஒருங்கே அகன்றன; இமைப்பொழுதில் தான் காதலனைத் தழுவியிருப்

பதை யுணர்ந்தாள். பின்னர், சிறிதும் அவனைப்பிரிய அவள் விரும்பவில்லை. ஆதலின், அவளது அந்தப்புரத்திலுள்ள தோழியர் முதலானோர் தம் தலைவியின்மீதுள்ள பேரன்பினால் அவிமாரகன் அவளுடன் உறைதற்குத் தக்க ஏற்பாடுசெய்து அதனை அரசனும் அரசியும் பணிமக்களும் அறியாதவாறு காத்து வந்தனர்.

இவ்வாறு அன்னோர் ஒரு திங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். இந்த உண்மை அந்தப்புர மகளிர் இளவரசியபால் கொண்டிருந்த அன்பின் பெருக்கினாலேயே இத்துணைக்காலம் வெளிவராமற் காப்பாற்றப்பட்டு வந்தது. மகளிர்பால் இரகசியச் செய்திகள் நிலைபெற்றிரா என்பர் பெரியோர். அன்றியும் காதலைப்பற்றிய நிகழ்ச்சி அம்பலும் அலருமாதல் யாண்டும் என்றும் நிகழ்ந்து வருவதொன்றாம். நாட்கள் செல்லச் செல்ல இளவரசியின் செய்கை அங்குமிங்கும் அரைகுறையாக உரையாடப்பட்டு இறுதியில் அரசனது செவிக்கும் எட்டியது. அரசனும் இதனை ஆராய்ந்து உணர்த்துமாறு அதிகாரிகளுக்கு உத்திரவிட்டான். இச்செய்தியையறிந்த அவிமாரகன் தான் அவமானமடைவதோடு தன் காதலியின் கற்புக்கும் இழுக்கு நேருமே என்று பெரிதும் அஞ்சியவனாய் ஒருவருமுணராதவாறு அரண்மனையினின்றும் நீங்கிச் சென்றான். அது முதல் இளவரசியின் அந்தப்புரமாளிகை மிகவும் கண்காணிக்கப்பட்டு வந்தது.

தன் காதலியைப் பிரிந்த அவிமாரகனுக்கு இவ்வுலக வாழ்வில் வெறுப்புத் தோன்றியது. தன் இன்னுயிரினுஞ் சிறந்த இளங்காதலிக்குத் தன் பிரிவு எத்துணைத் துன்பம் விளைக்குமோ என்று எண்ணியெண்ணி அவனது நெஞ்சம் புண்ணாயிற்று. பித்தனைப்போலச் செல்லுமிடமறியாது அவன் பன்னாள் அலைந்து ஒரு காட்டையடைந்தான். அங்குக் கதிரவனது வெப்பம் தாங்கொணாத் துன்பம் தருவதாயிருந்தது; மரங்கள் தீப்பற்றி எரிந்தன. அவன் மனம் வேறிடத்திற் சென்றிருந்தமையால் வெயிலின் கொடுமையையும் அவன் உணர்ந்தானில்லை. ஆதலின், அவ்வனத்தில் ஊடே நெடுந்தூரம் சென்றான். சுழற்காற்று ஒன்று வீசத்தொடங்கி, நெருப்பனைய மணலை நாலா

பக்கங்களிலும் வாரி வீசியது. தன்னைச் சுற்றியுள்ள துன்பங்களினின்றும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் எண்ணமில்லாதவனும், இளவரசியின் அன்பையே கருத்திற்கொண்டவனும் சென்ற அவன் வெப்பத்தைத் தாங்க இயலாதவனும் மயங்கிக் கீழேவிழுந்தான். சிறிது நேரஞ்சென்ற பின்னர், கதிரவன் கரிய மேகங்களினால் மறைப்புண்டபோது அவன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். வெப்பமும் சிறிது தணிந்திருந்தது. ஆயினும், மனத்தின்கண் துன்புறுத்திக் கொண்டிருந்த பிரிவென்னும் வெப்பம் மாத்திரம் தணிந்திலது. அவன் காதல் நோயினால் உண்டான அகக்கனலைப் போக்க அறியாதவனும் ஆங்கு எரிந்துகொண்டிருந்த காட்டுத் தீயிற் புகுந்து உயிரையும் அதனையும் ஒருங்கே ஒழிக்கக்கருதி அதனுட்பாய்ந்தான். ஆனால் அவனுக்கு எத்தகைய ஊறும் நேராமை பெரு வியப்பிற்குரியதாகும்; தண்ணீரில் மூழ்கி எழுபவன்போல எழுந்தான். 'ஆதரவற்ற என் நிலையைக்கண்டு மிகவும் இரங்கி, அங்கியங்கடவுள் அரும்பெறல் தாதைபோல் அன்புமீதூர என்னைத் தழுவினன் போலும்,' என்றுகூறி இறும்பூதுற்றான். ஆயினும், உயிர் துறக்க வேண்டுமென்ற எண்ணம் சிறிதும் நீங்கிற்றிலது; ஆதலின், அண்மையில் காணப்பட்ட ஒரு குன்றின்மீதேறி விழுந்து, தன் உயிரையும் துன்பத்தையும் போக்க எண்ணி அதன்மீது ஏறிச் சென்றான்; அங்குப் பளிங்கை உருக்கிச் சொரிந்து வைத்தாலன்ன நீர் நிரம்பிய ஒரு சுனையைக் கண்ணுற்றான்; உயிர் துறக்குமுன், அச்சுனையில் மூழ்கிக் கடவுளை வணங்குவதற்குக் கரையில் உட்கார்ந்தான்.

(தொடரும்.)

தமிழ்ச் செய்திகள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்:— 21—11—1937 தேதியன்று திருவாளர், பண்டிதமணி, மு. கதிரேசன்செட்டியார் அவர்களின் சீரிய தலைமையில் விரிவுரைக் கூட்டம் நிகழ்ந்தது. பண்டிதமணி அவர்கள் "மங்கையர்க்கரசியார்" எனும் பொருள்பற்றியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் விரிவுரையாளர், திருவாளர். அருணாசலம் பிள்ளை அவர்கள் 'மணிமேகலை' யெனும் பொருள்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர். பொருள் செறிந்த விரிவுரைகள் செய்து தமிழன்பர்களின் இதயத்தைப் பிணித்து தமிழார்வம் தழைக்குமாறு பணியாற்றிவரும் தமிழ்ப் புலவர்களின் உதவி ஞாலத்தின் மாணப்பெரிது.

சைவசித்தாந்த சங்கம், திருச்சிராப்பள்ளி:— 5—12—37ல் மாலை மலைக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் திருவாளர். பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார் அவர்களின் தலைமையில் பேரவைகூடிற்று. திருத்தவத்துறை(லால்குடி) உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர் திரு. அ. மு. சரவணமுதலியார் அவர்கள் சைவசித் தாந்த சபையில் இரண்டாண்டுகளாகப் பெரிய புராண முற்றும் விரிவுரை ஆற்றி முற்றுவித்தமை கருதி அவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு இக்கூட்டம் கூடியது. புலவர் அவர்களின் புலமைத் திறனும், கைம்மாறு வேண்டாத தொண்டின் சிறப்பும், சைவப் பற்றும், சொல்லின் வளமும், ஆகிய பலசிறப்பட்ட குணநலங் களையும் தலைவர் அவர்களும், சபையின் உரிமையாளர்களாகிய திருவாளர்கள் பெரியசாமி பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட் டார் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. S. சோமசுந்தர பாரதியார் M.A., B.L., அவர்

களும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவர். செந்தமிழ்ப்புரவலர், இராவ்சாகேப். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B. A., B. L., அவர்களும், யோசேப் கல்லூரி தலைமைத் தமிழாசிரியர். திரு. நடேசமுதலியார் அவர்களும் மற்றும் பல புலவர்களும் புரவலர் களும் பாராட்டிப் புகழ்ந்தனர். முதலியார் அவர்களின் அரிய தொண்டின் நலங்களை மிகுதியும் பெற்ற சபையினர் 'பெருஞ் சொல்விளக்கனர்' என்ற பட்டத்தாலும், பொற்பதக்கத் தாலும் முதலியார் அவர்களை அணிசெய்தனர்.

எவ்வகையிலும் தகுதியில்லாத மக்கள் அரசியலாரிடத்தும், பல்கலைக் கழகத்திடத்தும், ஆரவாரம் மிகுந்த அரசியல் கட்சி யினரிடத்தும், குறுகிய மனப்பான்மையுடைய வெள்ளறிவின ரிடத்தும் பட்டம் பெறுவது பெருவழக்கிற்றாகிய இந்நாளில், தகுதியொன்றையே கருதிப்புகழும் பொருளும் பொலிவுற்றுத் திகழும் இவ்வரிய பட்டத்தை அறிவுடை நன்மக்கள் குழுமிய இச்சபையினர் வழங்கியது யாமனைவரும் நன்றியுடன் போற்று தற்குரிய அருஞ்செயலாகும்.

சைவத்தேர்வு:—சைவசித்தாந்த மகாசமாசத்தினர் (சென்னை) சில ஆண்டுகளாக நடத்திவரும், இளஞ்சைவப்புலவர் தேர்வும் சைவப்புலவர் தேர்வும் 21—11—1937ல் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பெருமன்றில் நடைபெற்றது. இது போலவே வேறுபலவூர்களிலும் இத்தேர்வு நடைபெற் றிருக்கும்.

தஞ்சையில் இளஞ்சைவப் புலவர்தேற்விற்கு ஒருவரும், சைவப்புலவர் தேர்விற்கு இருவரும் வந்து விடை எழுதினர்.

சைவ இலக்கியங்களிலிருந்து ஒரு வினாத்தாளும், சைவ சாத்திரங்களிலிருந்து ஒரு வினாத்தாளும் தேர்வுக்கு நியமிக்கப் பட்டிருந்தன. சைவப்பனுவல்களை மாணவர்கள் கற்றறிந்து

சைவசமயத்தின் உண்மை இயல்களைத் தெரிந்து மெய்யுணர்வு பெறுதற்கு இத்தகைய தேர்வுகள் மிகவும் இன்றியமையாதவை. சைவசமய வளர்ச்சியில் கருத்துடைய அன்பர்கள் இந்நன் முயற்சியில் சமாசத்தினரையும் மாணவர்களையும் ஊக்குதற் பொருட்டு பெருந்தொகைகளை ஈட்டி வைப்புநிதியாக வைத்தும், பெரும் பரிசுகள் வழங்கியும் இவ்வரிய தொண்டினை வளர்க்க வேண்டும்.

சைவத்திறத்தை அறிந்து நலம் பெறுதலே கருமமென எண்ணிப் பிறிதொரு ஊதியத்தை விரும்பாது தேர்வுக்கு வந்த மாணவர்களின் மதியுடைமையைப் போற்றி வாழ்த்துகின்றோம்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்:— 4—12—37ல் காலையில் துணைவேந்தர் உயர்திருவாளர். இராசா. சர். அண்ணாமலை செட்டியார் அவர்களின் சீரியதலைமையில் பல்கலைக் கழகத் தேர்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்கட்குப்பட்டங்கள் அளிக்கப்பெற்றன.

அன்றுமாலை, கழகத்தின் பேரவை (Senate) கூடி கருமங்கள் நடைபெற்றன. கீழ்க்கண்ட முடிபுகள் தமிழ்ப்பேராசிரியர், S. S. பாரதியார் அவர்களால் முன்மொழியப்பெற்றன.

(1) தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழரின் வாழ்க்கைப்பண்பு ஆகியவற்றைக் கருத்துடனும் அக்கரையுடனும் சிறந்தமுறையில் பேணி வளர்த்து தமிழ்க்கல்விக்கும் சிறப்பிடம் தரவேண்டுவது இப்பல்கலைக் கழகத்தின் முதன்மையான குறிக்கோள்களுள் ஒன்றென இப்பேரவை முடிபு செய்கின்றது.

(2) இப்பல்கலைக் கழகத்தில் பயிலப்படும் கலைகள் அனைத்தினையும் தமிழ்மொழியின் வாயிலாய்க் கற்பிக்கப்படவேண்டுமெனும் முடிந்தநோக்கம் நிறைவேறுதற்பொருட்டு, ஒவ்வொரு கலையிலும் கைதேர்ந்த கலைவாணர்களைக்கொண்டு தமிழ் மொழியில் பாடபுத்தகங்கள் இயற்றுதற்கான வழிதுறைகளை நாட வேண்டுமென இப்பேரவை முடிபு செய்கின்றது.

இம்முடிபுகள் 1930-ம் ஆண்டுமுதல் செய்யப்பட்டிருந்தும் 8—9—37ல் நிகழ்ந்த கல்விக் கழகத்தினரால் எதிர்ப்புகளை மறுத்து நிறைவேற்றப்பட்டன.

முடிபுகளை ஆதரித்த பெரியோர்கள் கூறிய காரணங்கள்:—

1. தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழரின் வாழ்க்கைப்பண்பு இவற்றை வளர்ப்பது இப்பல்கலைக் கழகத்தின் சிறந்த நோக்கமெனக் கருதுவது தவறென திருவாளர் T. R. வேங்கடராம சாத்திரியார் அவர்கள் பேசத்துணிந்ததே இம் முடிபுகளை ஈண்டுக் கொணரச் செய்தது.

2. செட்டி நாட்டரசர் அவர்களும், அதுபோது மறு வேந்தராயிருந்த திவான்பகதூர் S. E. அரங்கநாதம் அவர்களும் குறித்த காரணங்கள் 2-வது ஆண்டின் அறிக்கையில் காணப்படுகின்றன. அவைவருமாறு: சில ஆண்டுகட்குமுன் சென்னைப் பல்கலைக்கழகத்தினர் தமிழ்ப் பல்கலைகழகம் நிறுவுவதன் இன்றியமையாமையைத் தெரிவித்தனர். ஆந்திரர்களின் நன் முயற்சி ஆந்திரக்கலைக் கழகத்தை 1926ல் தோற்றுவித்தது. இம்மாகாணத்தே தமிழ் பயிலும் 18 கோடி மக்களும் தமது தாய்மொழிக் கல்வியை வளர்ப்பதற்கான கலைக்கழகம் தேவையென வேண்டினர். அரசியலார் நியமித்த கலைக்கழகக் குழுவினரும் தமிழ்ப்பல்கலைக் கழகம் வேண்டியதன் இன்றியமையாமையை விளக்கி அறிக்கை எழுதினர். மீனாட்சிக் கல்லூரி தோன்றியகாலம் முதல் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தோற்றம் அதனை நிறுவி வளர்த்தவர்களின் நெஞ்சில் உறைந்திருந்தது. இன்ன பலகாரணங்களால் தோற்றுவிக்கப்பெற்ற

இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியும், தமிழ்க்கலையும், தமிழர் நாகரிகமும் முதலிடம் பெற்றுத் திகழவேண்டுமென்பதில் ஐயமே இல்லை.

3. ஒவ்வொரு மொழியினரும் தத்தம் மொழியில் பற்றுடையராய் மொழிச்சார்புடைய பல்கலைக்கழகங்களை நிறுவிக்கொண்டு பணியாற்றி வருவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். உசுமேனியா பல்கலைக் கழகத்தினர் உருதுமொழியை வளர்க்கின்றனர். ஆந்திரப் பல்கலைக் கழகத்தினர் தெலுங்குமொழியை வளர்க்கின்றனர். மைசூர் பல்கலைக் கழகத்தினர் கன்னடமொழியை வளர்க்கின்றனர். மலையாள நாட்டில் தோன்றிவரும் பல்கலைக்கழகம் அந்தமொழியை வளர்க்கத் தலைப்படுகின்றது. தமிழ் நாட்டின் இருதயம் போன்ற இடத்தில் நிறுவப்பெற்றதும், தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமென எழுந்த கிளர்ச்சியின் பயனாய் உருவெடுத்ததும், தமிழ் மொழியும் தமிழர் நாகரிகமும் வளர்த்தற்கெனவே இக்கழகம் தோற்றுவிக்கப் பெற்றதென துணைவேந்தரும், மறுவேந்தரும், பிறதலைவர்களும் அமயம் வாய்த்தபோதெல்லாம் உறுதிகூறிவரவும், பல்கலைக் கழகச்சட்டத்தில் தமிழை வளர்க்க வேண்டுமெனக் காணுமாறில்லையே எனவாதிப்பது மதியுடைமையன்றே? சட்டத்தில் எந்தமொழியை அல்லது எந்தக்கலையைப் பேணவேண்டுவதென யாண்டும் எழுதவில்லையே? இந்தப்பல்கலைக் கழகத்தில் தமிழ் வளர்க்கப்படாவிடில் உலகத்திலுள்ள எந்தக் கழகத்தில் வளர்க்கப்படுமென சிறிதேனும் சிந்திக்க வேண்டாமா? வேறெந்தப் பல்கலைக் கழகத்தும் தமிழைக் கருதுபவரில்லை; தமிழ் வளர்க்க வாய்ப்புமில்லை எனத்தெரிந்திருந்தும், இக்கழகம் அதனை வளர்க்கும் கடமையும், வாய்ப்பும் பெற்றிருக்க, யாங்கள் பொது நோக்குடையவர்கள், எல்லாக்கலைகளையும், எல்லா மொழிகளையும் ஒருபடித்தாகவே கருதுவோம் தமிழ்மொழிக்குச் சிறப்பிடம் ஏன் தரவேண்டும் என்றவாறெல்லாம் அழிவழக்குத் தொடர்வது நேரிதா?

4. இப்பல்கலைக் கழகத்தின் தொடக்கத்தில் உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு ரூ 5000 தமிழ் மாணவர்கட்கும்,

ரூ. 3000 வடமொழி மாணவர்கட்கும், ரூ. 2000 இசைமாணவர் கட்கும் வைக்கப்பட்டுவந்தது. பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்களில் இரண்டு அல்லது மூன்றுபங்கு மாணவர்கள் தமிழர். சிலர் வடமொழி, சிலர் தெலுங்கு, சிலர் மலையாளம் இவ்வாறாகப் பிரிவுபட்டு சின்னஞ்சிறுதொகையினர்களே அயன் மொழிகள் பயில்கின்றனர். வடமொழி மாணவர்களின் பொருட்டு வைக்கப்பட்டிருக்கும் தொகையினைப் பெறுதற்குப் போதியமாணவர்கள்கூட இல்லாதிருந்தும், தமிழ் மாணவர் உதவிபெறுதற்குரியார் மிகப்பலராயிருந்தும், தமிழ்ப்பிரிவிற்கு வைக்கப்பட்டு வந்த ரூ. 5000-த்தைக் குறைக்கவும், வட மொழிக்கு வைக்கப்படும் தொகையினும் அதிகமாகத் தமிழ் மொழிக்கு வைக்கலாகாதெனவும், வடமொழி மாணவர்க்கு வைக்கப்பட்டதொகை மிஞ்சியிருந்தாலும், அதனைத் தமிழ் மாணவர் தேவைக்கு எடுக்கலாகாதெனவும் வழக்குத் தொடர்ந்து எதம்புரிகின்றனர். வித்துவான் பிரிவுமட்டுமே யன்றி, பலவகைப்பட்ட சிரோமணிப் பிரிவுகளை வடமொழி யாளர் ஏற்படுத்திக்கொண்டு சிறுதொகையினராகிய மாணவர் கட்குப் பெரும்பொருட் செலவில் கல்வி பயிற்றுகின்றனர். இலக்கணம், இலக்கியம், தருக்கம், வேதாந்தம், சித்தாந்தம், மருத்துவம், சோதிடம் ஆதியபிரிவுகளைத் தமிழிலும் ஏற்படுத் தக்கூடிய கடமையை உணர்ந்தாரில்லை.

தமிழ்மொழிக்குத் தனிசிறப்பு அளித்து பேணுதற்குரிய பல்கலைக்கழகத்தில் வடமொழியாளர் மேற்கண்டவாறு கேடுகள் இழைத்தும், இடையூறு செய்தும் வருகின்ற செய்திகளை நன்கு விளக்கி இம்முடிபுகள் ஆதரிக்கப்பட்டன.

இவற்றை மறுக்கத் துணிந்த பெருமக்கள் திருவாளர்கள் T. R. வேங்கடராமசாத்திரியார், M. R. இராமசாமி சிவன், M. S. சுந்தரம், K. S. வேங்கடரமணி, A. நரசிங்கராவ், S. குப்புசாமி சாத்திரியார் முதலியோர் ஆவர்.

மதிப்புரை

உமர்கையாம் பாடல்:—உமர்கையாம் என்பவர் பாரசீக மொழியில் புகழ்சிறந்த கவி. அவர் இயற்றிய கவியின் நலங்களைத் தமிழ் மக்களும் படித்து இன்புறுமாறு பிட்சரல்டு எனும் அங்கிலப் புலவரின் மொழி பெயர்ப்பைத் தழுவி திருவாளர். மின்னூருத்தின் அவர்கள் எழுபத்தைந்து பாடல்களை செவ்விய தமிழ்ப் பாவில் இயற்றி உதவியுள்ளார்கள். இன்னார் தமிழ்த் தொண்டு போற்றுதற்குரியது. இதன் விலை அணு 6. P. வரதாச்சாரி கம்பேனி, 8, லிங்கசெட்டி தெரு, சென்னை, என்ற இடத்தில் கிடைக்கும்.

***Words and their Significance*:**—சென்னைப் பல்கலைக் கழகத்தின், தமிழ் விரிவுரையாளர் திருவாளர் R. P. சேதுப்பிள்ளை அவர்கள் B.A., B.L., இயற்றி, பல்கலைக் கழகத்தினரால் வெளியிடப் பெற்றிருக்கும் அரிய மொழிநூல். சொற்களின் பொருளை நுணுகி ஆராய்ந்து மக்களின் பழமையான, வாழ்க்கைப் பண்புகளை நிர்ணயித்தும், சொற்கள் காலப் போக்கில், பொருள் குறுகியும், விரிந்தும், இழிந்தும், உயர்ந்தும் மாறியும் வரும் இயல்புகளை விளக்கியும் எழுதியுள்ளது இத்தகைய சொல்லாராய்ச்சி நூல் தமிழ் மொழிக்குப் புதுமையானது. விரிவுரையாளர் அவர்கள் தமது மதி நுட்பத்தால் ஆய்ந்துகண்ட இவ்வரியநூல் தமிழரசியின் எழிலினை வளர்க்குமென்பதில் ஐயமில்லை.

பர்மாவில் சோழர் ஜயஸ்தம்பம்:—பெகு (Pegu) என்ற ஊரின் வெளிப்புறத்தில் அரசியலார் 19)8-ம் ஆண்டில் கண்டு எடுத்த இரண்டு கற்கம்பங்களும் அரசியலாரால் பாதுகாக்கப் பட்டு வந்தது. சிலாசாசன அதிகாரியாயிருந்த சீனர்டோ சேயின்கோ என்பார் கி. பி. 1025-1027-ல் இராசேந்திர சோழன் கடாரங்கொண்ட வெற்றிச்சின்னமெனச் செப்பேட்டில் எழுதிச் சேமித்திருந்தனர். பர்மா இந்தியாவிலிருந்து பிரிவினை ஆன 12 நாட்களில் இக்கம்பங்கள் பாதுகாப்பிலிருந்து அகற் றப்பட்டிருக்கின்றன.

இக்கம்பங்கள் இராசேந்திரனது கடாரங் கொண்ட செய் தியைக் குறிப்பனவா என்பது பற்றிப் பர்மியரில் ஒருசாரர் நிகழ்த்திவரும் ஆசங்கைகளையும், சென்னைப் பல்கலைக் கழகத் தின் பேராசிரியர் திருவாளர் K.A. நீலகண்டசாத்திரியார் M.A. அவர்களின் கருத்துக்களையும் தொகுத்து இந்நூல் வெளியிடு கின்றது.

சரிதநூல் உண்மையைக் காணும் விருப்புடையார் அனை வரும், தமிழ் மக்களின் நாகரிகச் சிறப்புகளில் கருத்துடைய தமிழர்களும் ஆராய்ந்து முடிவு காண்பதற்கு இது சிறந்ததொரு கருவி நூலாகும்.

இதனைத் தொகுத்துதவிய அம்சாவதி திரு. சி. நாகையா அவர்கட்குத் தமிழுலகின் நன்றி உரியதாகும்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫	ஈசுவர தை	மலர் ௰

ஐயரும் பிள்ளையும்

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A.,
அண்ணாமலைநகர்.

இக்கட்டுரையில் "ஐயர்", "பிள்ளை" முதலான சில சொற்களின் வரலாறு ஆராயப்படும். உரியியலில் (சூத். 89) "ஐ வியப்பாகும்" என்றார் தொல்காப்பியர். பெருமை அல்லது தலைமை காரணமாக வியப்புத்தோன்றும் என்பது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் "மருட்கைபற்றிய சூத்திரத்தால் (7) பெறப்படும். ஆகலின் வியப்பினை யுணர்த்திய "ஐ" எனுஞ்சொல் தலைமையையும் உணர்த்தும் ஆற்றல் பெறுவதாயிற்று. "என்னை முன் நில்லன்மின் தெவ்விர்" எனத் திருக்குறளினும், "என்னை புற்கையுண்டும் பெருந்தோளன்னே" எனப் புறநானூற்றினும் வருகின்ற இடங்களில் "ஐ" என்பது

தலைவன் என்னும் பொருட்டு. ஒரு குடும்பத்தின் தலைவன் தந்தையாக இருந்த காரணத்தால் தந்தையும் ஐயனெனப்பட்டனன். ஐயன் என்பதில் அன் என்பது ஆண்பால் உணர்த்தும் விகுதியென்பது நாம் அறிந்தது. எனவே இச்சொல்லில் தாது "ஐ" என்பதாகும். அத்தாதின் அடியாகவே "ஐயை" என்னும் பெண்பாற் சொல்லையும் "ஐயர்" என்னும் பலர்பாற் சொல்லையும் நாம் தமிழிற் காண்கிறோம். ஐயன் என்னும் சொல்லை வடமொழி "ஆர்ய" என்னும் சொல்லின் திரிபு என்பார் கூற்று அடாது. ஆரியச் சொல்லில் ஐ என்னும் பகுதியைக் காண்கின்றேமல்லேம். அச்சொல்லின் தாதுவாகக் கருதப்படுவது 'போ' அல்லது 'ஓடு' என்னும் பொருள்படும் "ரு" என்பதாகும். "யத்" என்பது அதன் சாரியை. எனவே "ரு+யத்" "ஆர்ய" ஆனதற்கு விதி பாணினீயத்திற்சொல்லப்பட்டுள்ளது. அங்ஙனமிருப்பவும் தாதுப் பொருளால் ஒவ்வாதிருக்கின்ற இச்சொல்லைத் தமிழின் மூலகாரணம் என்று சொல்லுதல் ஒலி ஒப்புமையால் மொழியிலக்கண முடிபுகாட்ட முற்படுவோரது அறிவு பழுது பட்டுள்ளமையைக் காட்டும்.

இனி இதற்குவேண்டிய சான்றுகளைத் தமிழ் இலக்கியத்திற்காண்போம். ஐயர் என்பது அந்தணரின் வேறாய சிலரைக் குறித்தது என்பதற்குச் சான்று :—(தொல்—கற்பு—5) "அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்...........ஐயர் பாங்கினும் அமரர்ச்சுட்டியும்" எனவருவது. ஈண்டு அந்தணரின் வேறாகவே ஐயர் எண்ணப்படுகின்றனர். மேலும் ஐயர் என்னும் சொல் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பார்ப்பனரல்லாத சிலருக்கு வழங்கப்பட்டிருத்தல் காண்கிறோம். குறிஞ்சிக்கலியில் "குறவர் மடமகளிர் தாம் பிழையார் கேள்வர்த் தொழுதெழலால்........... தம் ஐயரும் தாம் பிழையார் தாங்தொடுத்தகோல்" என்றும், சிலப்பதிகாரக் கானல்வரியில் "கடல்புக்கு உயிர்கொன்று வாழ்வர் நின்ஐயர்," ஓடும் திமில்கொண்டு உயிர்கொல்வர் நின்ஐயர்" என்றும், வேட்டுவவரியில் "இளமாஎயிற்றி இவைகாண் நின் ஐயர்," "முறுங்தேர் இளநகை காணாய் நின்னையர்," "கயமலர் உண் கண்ணாய் காணாய் நின்னையர்" என்றும் வருமிடங்களிலெல்

லாம் குறவரும், பரதவரும், வேட்டுவரும் முறை முறையே ஐயர் எனப்பட்டமை அறிக. ஈண்டெல்லாம் "ஐயர்" என்பது தலைமையுடையாரையே குறித்து நின்றதன்றி ஜாதிப்பிரிவை உணர்த்தவில்லை என்பது தேற்றம்.

இத்தலைமைப் பொருளே கொள்ளத்தக்கது என்பதன் உண்மை இறையனாரகப்பொருள் சூத்திரத்தில்வழங்கும் "ஐயர்" என்னும் சொல்லால் வலியுறுகிறது. "வெளிப்படை தானே விரிக்குங்காலைத் தந்தை தாயே தன்னையர் என்றாங்கு அன்னவ ரறியப் பண்பாகும்மே" (சூத்திரம்—26) என்னுமிடத்தில் ஐயர் என்பது தந்தையல்லாத தலைமையுடைய பிறரைச் சுட்டுதல் காண்க. அதன் கருத்து தலைவனாகிய தந்தைக்கு அடுத்துத் தலைமைபூனும் உரிமையுடைய தமையனாருக்கு இச்சொல் இங்கு வழங்கப்பட்டிருப்பதான் உணரப்படும். "தமையன்" என்பது தானும் தம் ஐயன் என்னும் சொற்களால்ஆகி, முன்பிறந்த தலைமையுடைய ஒருவரை யுணர்த்தியவாறு அறிக. கம்பர் "ஐயனும் அன்னையும் சொன்ன செய்யத் துணிந்தது தூயவே" எனக் கூறியவிடத்தில் ஐயன் என்பது தந்தையையே உணர்த்துதல் தேற்றம். இங்ஙனமே சீத்தலைச் சாத்தனாரும் மணிமேகலை மணிபல்லவத் தீவிலே தாழ்துயருற்றகாலைத் தந்தையை யுள்ளி "ஐயாவோ" என்று அழுதாள் என்று கூறுகிறார். (மணி-காதை-8—வரி-43.) இன்னும் சிலப்பதிகாரத்தில் ஐயன் என்னுஞ் சொல் பெருங்குடிவாணிக மரபில் தோன்றிய கோவலனுக்கும் வழங்கப்பட்டுளது. "வையை என்ற பொய்க்குலக் கொடியை..................அனநடைமாதரும் ஐயனும் தொழுது" எனவருமிடத்தில் ஐயன் கோவலன் என்பது உணர்க. தலைமை என்னும் பொருளே ஐயன் என்னும் சொல்லின் பகுதிப் பொருள் என்பது இற்றைநாள் நாம்வழங்கும் கடிதத்தலைப்புகளில் உள்ள "ஐயர்" என்பதாலும் பெறப்படும். ஆனால் நாளடைவில் பிராமணர்களே இச் சொல்லுக்குரியவராகக் கருதப்பட்டதன் காரணம் பொருள்சுருங்கும் நியதியேயாம். ஒருகாலத்தில் தலைமையுடையார் எவராயினும் அவருக்குவழங்கி வந்த ஐயர் என்னும் சொல் நாளடைவில் பொருளில் சுருங்கி

நம்மில்லங்களில் செய்யவேண்டிய வைதீக காரியங்களில் தலைமை பெற்ற காரணத்தால் இக்காலை ஒரு சாரார்க்கே உரியது போன்று நினைக்கப்பட்டுவருகிறது. "ஐயர் வரும்வரை அமாவாசை காத்திராது" என்பது இதனை வலியுறுத்தும்.

இப்படியே "பிள்ளை" யென்னும் சொல்லின் வரலாறும் சிந்திக்கத்தக்கது. பிள்ளையென்னும் சொல்லைப் "பில்ல" எனத் தெலுங்கிலும், "பிள்ளெ" எனக் கன்னடத்திலும் காண்கின்றோம். இச்சொற்களின் தாதுவாகப் "பிள்" என்பதையே கூறவேண்டும். பிள்ளப்படுவது பிள்ளையெனப்பட்டது. பிள் + து = பிட்டுஆதல் காண்கிறோம். எனவே ஒருகாலத்தில் பிள்ளைச்சொல் இளையபொருள்களைக் குறித்ததாதல் வேண்டும். "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்று இளமை," "தவழ்பவை தாமும் அவற்றோரன்ன" என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களால் பறவைகளுக்கும் ஊர்வனவற்றுக்கும் பிள்ளையென்னுஞ் சொல் அக்காலத்து வழங்கப்பட்டதறியப் படுகின்றது. மரபியல் 8, 9, 10-ஆம் சூத்திரங்களால் பன்றிக்குருளை, புலிக்குருளை, முயற்குருளை, நரிக்குருளை, என்றவாறேபோலப் பன்றிப்பிள்ளை, புலிப்பிள்ளை, முயற்பிள்ளை, நரிப்பிள்ளை என்ற வழக்குத் தொல்காப்பியர் காலத்து இருந்தமை அறிகிறோம். ஓரறிவுயிர்களையும் "பிள்ளை" என்னும் சொல் உணர்த்தி வந்தது, என்பது "பிள்ளைகுழவி கன்றேபோத்தெனக் கொள்ளவும் அமையும் ஓரறிவுயிர்க்கே" எனும் சூத்திரத்தால் தெரிய வருகிறது. அதனுல்தான் "தென்னம்பிள்ளை" 'கமுகம்பிள்ளை" என்ற வழக்குகளும் தோன்றின. "பெண்ணும் ஆணும் பிள்ளையுமவையே" என்னும் மரபியல் சூத்திரத்தால் "பிள்ளை எனும்சொல் தனியே சொல்லப்பட்டவழி உயர்திணையையே குறிக்குமென்பது அறிகிறோம். உதாரணமாக, பிள்ளைபிறந்தது என்னுமிடத்து உயர்திணைக்குழவியே குறிக்கப்படும். கம்பரும் "உருவறியாப்பிள்ளையழுத பெரியோரை யென் சொல்ல" என்றார். இவ்விடத்தில் இச்சொல் உயர்திணையையே குறித்த தாதல் வேண்டும். (தொடரும்)

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 8. பக்கம் 317.)

இயல் ௩.—காட்சி க.

உறுப்பினர் :—ஔவையார் ; அதியமான்.

இடம் :—அதியமான் மாளிகை.

பொழுது :—மாலைப்போது.

[அதியமான், ஔவையாரைத் தொண்டமான்பால்தூதுபோகவேண்டுதல்]

ஔவையார் :—வெற்றிமிகும் தப்பாத வாளினை ஏந்திய வனே ! போரில் பகைஞர் மடியுமாறு அழித்த வீரவாளை மிளிரும் கைகளையுடையவனே ! மிக்க மகிழ்ச்சிக்குரிய மதுவினை யுடைய அதியர் தலைவ ! எதிர்த்தவரைப் போர்முனையிற் கொல்லும் வீரவாழ்வும் பொன் மாலையும் அணிந்த அஞ்சி வேந்தே ! நீ, பழைய பெரிய மலையினில் எவரும் அடைய முடி யாத உயரத்து இரு பிளவுகளின் இடையே தோன்றிய சிறு இலைகளைப்பெற்ற நெல்லியின் பழத்தை, அஃதுண்டவரடையும் பெருவாழ்வை உணர்த்தாது, பால் போன்ற பிறைநிலா நெற்றி மீது விளங்கும் திருமுடியையும் நீலமான அழகிய கழுத்தை யுடைய, ஒப்பற்ற முதல்வனும் சிவபெருமானைப்போல, நான் சாகாமலிருக்குமாறு எனக்குத்தந்து மகிழ்ந்தனையே !

அதியமான்:— அம்மையே, ஒன்றுக்கும் பற்றாத யான், உண்டு உலகுக்குச் சுமையாவதினும், உலகு அவாவும் விழுமிய கல்விச் செல்வம் படைத்த தாங்கள் வாழுதல் சிறப்பன்றோ?

ஔவையார்:—காவல் மதில்சூழும் பல அரண்களைவென்ற நெடுமான்மன்ன ! யாழ்போல இனிய ஓசையும் பெறாது; இசைக்குரிய கால அளவும் கூடியிராது; பொருளும் உணர இயலாது; ஆயினும், பிள்ளையின் மழலை மொழிகள் தந்தைக்கு அன்புநிலை ஆகின்றன. அதுபோல, நீ அருள்புரிதலால் எனது வாய்ச்சொற்களும் அவ்வாறே அமைகின்றன. மேலும் என்னையொத்த புலவர்கள், தமது நெஞ்சை நோக்கி ' உண்ணவிரும்பும் நெஞ்சமே ! நீ பரிசுக்காக வருந்தாதே; யாம் ஒருநாள்மட்டும் செல்லாது, இரண்டுநாள்மட்டும் போகாது எத்தனையோ முறை, பல நண்பர்களோடு சென்று பழகினாலும், முதன்முறையாகப் பெற்ற அன்பைப்போலவே, அணிகள் பூணப்பெற்ற ஆனையையும், இயலும் தேரையும் உடைய அதியமான், எப்போதும் பெற்றுளான். பரிசுபெறுகின்ற நாள் கூடினாலும் குறைந்தாலும், யானை தனது பெரிய கொம்புகளின் நடுவேவைத்துள்ள ஒருவாய் உணவுபோல அப்பரிசு நமது கையிலிருப்பதேயாகும், அதுபொய் அல்ல. அவன் திருவடி 'வாழ்க' என நாளும் வாழ்த்திவருவது பொய்க்குமா?

அதியமான் :—அன்னாய் ! 'எட்டுத் தேர்களை ஒரேநாளில் செய்யும் தச்சன் ஒரு திங்கள் முயன்று முடித்த ஒருதேரின் கால்போன்ற வலிமையுள்ளவன் ' எனவும் 'அணி வகுக்கப் பெற்றனவும் முன்னதாக செல்வனவும் ஆய படைகளால் அவனுடன் போர்புரிவேம் என மொழியும் சொற்களை....சிறந்த வலிமையால் மேன்மைபெற்று விளங்கும் நீண்ட வேலினைப் பெற்ற மழவர்களின் பெருந்தலைவனும் ஒளிமிக்க, தொழில் நுட்பமுள்ள, அணிகள் அழகு செய்யும் மார்பனும் போர்க்கள வேள்வியால் நல்ல சிறந்த போரினைப்புரியும் முழவம்போன்ற வலிமையான தோளைப்பெற்றவனும் ஆய, என் தலைவனைக் காண்பதற்கு முன்னதாகவே, எத்தகையவராக இருப்பினும் காப்பாற்றிக் கொள்ளுங்கள் ' எனவும் பலவாறு என்னைத் தாங்கள் புகழ்ந்துரையாடினும் என் உள்ளம் அவற்றைக் கேட்டும் அமைதியுறவில்லை. மலையன் ஒருதிசையினும், மூவேந்தர் மற்றொருபுறமும், இன்னொரு பக்கமும் திரியன்,

பொருநன், எருமை யூரன், இருங்கோவேள்மர் என்பவர்களும் என் மீது நாளும் அழுக்காறும் வஞ்சமும் கொண்டவர்களாக வுள்ளனர். போதாக் குறைக்குக் காஞ்சித்தொண்டனும் என்னை வெறுக்கின்றனனும்.

ஔவையார் :—'பெரும! ஊர்ச்சிறுவர்கள் தனது வெண்மையான கொம்புகளைக் கழுவுமாறு நீர்த்துறையினில் அடங்கியிருக்கும் பெரிய யானைபோல, புலவர்களாகும் எங்கட்கு இனியவனாகின்றாய்; பின்னர் அவ்யானை பிறர் அணுக முடியாதவாறு பெற்ற மதங்கொண்ட நிலைமையைப்போல, உனது பகைவர்களுக்கு நீ கொடியவனாகின்றாய்.' என்ற செய்தி உலகமறிந்திருக்க, ஏனோ இம்மன்னர்பொருட்டு நீ கவலையுறவேண்டும்?

அதியமான் :—அம்மே! தாங்கள் என்சொலினும் என் திடங்கொண்ட நெஞ்சம் இதுபோது விடங்கொண்ட மீனைப்போலக் கலங்குகின்றது. எனக்குற்ற உழுவலன்பன் எனக் கருதப் பெற்ற, காஞ்சித்தொண்டமானும் மாற்றலர் தம் கூட்டுறவால், சார்ந்ததன் வண்ணமாகி எமது முன்னைய நட்புமேன்மையையும் எவ்வாறோ மறந்தனன். அவன் செயலே என்னைப் பெரிதும் வருத்துகின்றது.

ஔவையார் :—"எழுமரம்போன்ற, முளந்தாளினைத்தொடுகின்ற பெரிய கைகளோடுற்றவனே; தவறாத வலிய கைகளையுடைய மழவர்களின் தலைவனே! முறிந்த வளைபோன்ற மலர்ந்த காந்தட்பூ, இலைமிக்க மல்லிகையோடு மணம் வீசும் மலைச் சாரிவினிலுள்ள கடும்புலி சீறினால், அதனை எதிர்க்கும் மான் கூட்டங்களுமுண்டோ? ஞாயிறு வெப்பமுற்றுத்தோன்றும்போது மருண்டவானத்தும் திசைகளினும் செறிந்த இருள் நிறையுமோ? அச்சு உறசிப் பார்மீது படிய நகர்ந்த, பண்டம் நிறைந்த வண்டியுருளையின் அழுந்திய நிலையைப் பொருட்படுத்தாது மணல்வரிகள் சிதறவும் கற்கள் பொடிபடவும் நடக்கும் பெருமிதங்கொண்ட வலிமைமிக்க எருதுகளுக்குச் செல்ல முடியாத வழிகளுமுண்டோ? அதுபோலநீ, போர்க்களம்புகுந்தால், பெரிய உலகமாகிய நிலத்தைப்பெற்று ஆரவாரஞ்செய்யும் வீரர்

களும் உளரோ?'' எனவே மன்ன, நீ எதன்பொருட்டும் கவலற்க: உன் நெஞ்சம் விழைவதை என்பால் கூறின் யான் இயன்றன ஆற்றுவன்.

அதியமான் :—எம்மனோர்க்கு உற்ற துணையாய தாயே! என்பொருட்டுத் தாங்கள், காஞ்சிவேந்தன் தொண்டமான்பாற் சென்று அவனது நட்பு எனக்கு என்றும் இருக்குமாறு செய்ய வேண்டும். எனது கருத்துக்கு இயைந்த அவனது கூட்டுறவு என்னை இன்னும் மிகுந்த வலிமைபெற்றவனுக்கும். இதுவே எனது உள்ம்நிறைந்த விருப்பமாம்.

ஔவையார் :—அன்புடையாரொடு உண்டு உறவுபெற வல்லவனே; போர் முனையிலும் கொடைத்திறன் கெடாதவனே; அறிவிலாதாரும் மகிழ்வோடு நின்னையேத் துணையாகக் கருதும் பெருநிலை படைத்த நெடுமான் அஞ்சியே! நீ வீட்டின் இறவானத்தில் செருகப்பெற்ற தீக்கடைக்கோல்போல, நினது வலிமை வெளிப்பட வேண்டாத நாளில் அடங்கி வாழவல்லவனுகின்றாய். இன்னும், அத்தீக்கடைக்கோலால் கக்கப்பட்டு வெளியாகும் காட்டுத்தீயையொப்ப, நீ விரும்பியபோது மிகவும் வலிமைபொருந்திய வீரனுகவும் விளங்குகின்றாய். ஆதலால் எம் நண்ப! நீ வளமையிற் குறைந்தாயெனக் கருதி அஞ்சற்க. நின்னை வெல்வார் எவரும் ஈண்டில்லை: இஃதுறுதியே. யானும் இன்றே தொண்டமான்பாற் சென்று, அவனும் நீயும் நேர்மையுற்ற நேசராக நெடிதுவாழ முயலுவேன். கவலற்க: வாழ்க மன்ன! வாழ்க நின்கொற்றம். செல்கின்றேன். விடைதருக.

அதியமான் :—தாயே! வணக்கம். அவ்வாறே ஆகுக. எனது என்றும் நீங்கா நன்றியையும் அன்பினையும் ஏற்றருள்க. (நின்று கூப்பி வணங்குதல்.)

இயல் ந—காட்சி க முடிவு.

அவிமாரகம்

திரு. T. S. நடராசன் B. A., எலத்தூர், சீர்காழிதாலூகா.

(முற்றொடர்ச்சி துணர் 13 மலர் 9 பக்கம் 352)

இஃது இவ்வாறாக, இயக்கன் மலயமலையிலுள்ள தன் ஆசிரியராகிய அகத்தியமுனிவரை வழிபடுவதற்காகத் தன் மனைவியுடன் வானவூர்தியிற் சென்றான். மிக உயரத்திலிருந்து இம்மண்ணுலகத்தின் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்தான்; பெரிய மலைகள் களிறுகளைப் போலவும், மரங்கள் புற்களைப் போல்வும், மண்ணுலகின் மேற்பரப்பு மேடுபள்ளமின்றிச் சமமாயிருப்பது போலவும், ஆறுகள் வெண்மையான கொடிகளைப்போலவும், மிகப்பெரிய மாளிகைகள் சிறு புள்ளிகளைப் போலவும் காணப் பட்டன. இயற்கையழகில் ஈடுபட்டுச் சென்ற அவ்வியக்கன் அவிமாரகனிருந்த குன்றுக்கு மேலே வருங்கால், அவனது துணைவி சிறிது இளைப்பாறிச் செல்ல வேண்டுமென்றனள். ஆதலின், அவன் அக்குன்றின்மீது இறங்கினான். பின்னர், அவர்களிருவரும் பொழுது போக்குக்காக மலர் கொய்யத்தொடங்கி, அவிமாரகனிருந்த இடத்தை அணுகினர். இதற்கிடையில், அவிமாரகன் கடவுள் வணக்கத்தை முடித்துவிட்டுக் குன்றின் உச்சியிலிருந்து கீழே விழுவதற்காக அங்குமிங்கும் நோக்கினான்; தன்னெதிரே நின்ற இயக்கனைக்கண்ணுற்று, அவன், எவரும் இறப்பதற்குமுன் அவர்முன் தோன்றும் தேவனோ என்று நினைத்து அவனைநோக்கி, 'நீயார்' என்றான். இயக்கன், தான் மேகநாதன் எனப்பெயரிய இயக்கனென்றும், அகத்திய முனிவரைக் காணுதற்கு மலயமலைக்குச்செல்லும் வழியில் அங்கு இறங்கநேர்ந்ததென்றும் கூறினான். பின்னர், மேகநாதன் அவிமாரகனைநோக்கி, 'நீ இங்குத்தனியே வந்ததன் காரணம்யாது? நீ என் வாட்டமுற்றிருக்கின்றனை?' என்று வினவினான். அவிமாரகன் தன் பெயரைமாத்திரங்கூறித் தன் நிலைமையையும்

எண்ணத்தையும் வெளியிட வெட்கமுற்று வாளா இருந்தான். இயக்கன் தன் மந்திரவன்மையால் அவிமாரகனது காதல் வரலாறு முதலியவற்றை யுணர்ந்து, அவனது நிலைமைக்கு இரங்கி, மந்திர மோதிரமொன்றை அவனிடம் தந்து, 'அவி மாரக, இக்கணையாழியை நீ இடது கைவிரலில் அணிந்து கொண்டனையாயின் பிறர் கட்புலனுக்குப் புலப்படாத தன்மையை அடைவாய்; அப்போது நீ எதைத்தொடநேரிடினும் அப்பொருளும் பிறர் கண்களிலிருந்து மறைந்துபோகும்; பின்னர் நீ அதனை வலதுகையில் அணிந்தால் எல்லோருக்கும் கட்புலனாதற்குரிய நிலையை அடைவாய்; இஃது உனக்கு மிகவும் பயன்படும்' என்றனன். அவிமாரகன் அளவற்ற மகிழ்ச்சி யோடு அதனைவாங்கி அதன் தன்மையைப் பரிசோதித்து அறிந்தான். இடதுகையில் அணிந்தபோது, தான்மறைந்து போயினமையையும் தன் நிழல் கூடத்தோன்றாமையையும் உணர்ந்தான். தனது நன்றியை முழுமனதுடன் மேகநாதனுக் குத்தெரிவித்து அவனது உறுதியான நட்பை விரும்பினன். இயக்கன் அதற்கு இணங்கியதோடு, இன்றியமையாமை நேர்ந்துழித் தன்னை நினைக்கின், உடன்வந்து உதவிபுரிவதாக உறுதிகூறி விடைபெற்று மனைவியோடு மலயமலைக்குச் சென்றான். நம் அவிமாரகனோ சிறிதும் காலந்தாழ்க்காது அரண்மனையை விரைவில் அடைந்து கணையாழியின் உதவியால் தன்னை மறைத்துக்கொண்டு, இளவரசியின் அந்தப்புரத்தை நண்ணி அங்கு நடைபெறுவனவற்றைக் கவனித்துக் கொண் டிருந்தான்.

அவிமாரகன் பிரிந்ததிலிருந்து இளவரசி தன் மகிழ்ச்சியை இழந்தாள்; துன்பக்கடலுள் மூழ்கினள்; கொள்கொம்பை இழந்த பூங்கொடிபோல வாடினள்; பிறரோடு உரையாடுவது அவளுக்குத் துன்பத்தை விளைத்தமையின் தனித்திருக்க விரும் பினள். அவளது நிலையைக்கண்ட தோழியர் வருந்தி அவளை எப்போதும் சூழ்ந்தவண்ணமாயிருந்தனர். நாட்செல்லச்செல்ல இளவரசி, காதலனைப்பிரிந்து உயிர்நீங்கிய உடலைப்போன் றிருப்பதைவிட இறந்துபடுதல் நன்மையெனக் கருதினள்;

அவ்வெண்ணம் முதிர்ந்து வந்தது. அவிமாரகன் அங்குச் சென்றபோது, தன் காதலியைத்தான் நெருங்கமுடியாதவாறு அவள் தோழியரால் சூழப்பட்டிருப்பதைக்கண்டு அண்மையில் பிறர் காணாதவாறு நின்றான். அப்போது, இளவரசி எங்ஙனமாயினும் அன்று தன் உயிரை நீக்கக் கருதியவளாய்த் தனக்குத் தலைநோய் என்றுகூறி அந்தப்புரத்தின் உப்பரிகைமேற் சென்றாள். அவளது எண்ணத்தைச் சில குறிப்புக்களால் உய்த்துணர்ந்த நளினிகை அவளைப் பின்தொடர்ந்தாள். யாவரும் காணுதற்கரிய அவிமாரகனும் பின்சென்றான். இளவரசியின் தலைநோயைப்பற்றிக் கேள்வியுற்று அரசி யனுப்பிய ஒரு பணிப்பெண்ணும் அங்கு வந்துசேர்ந்தனள். இதனை நன்மையாகக் கருதிய இளவரசி, நளினிகையைத் தான் நீராடற்குரியவைகளை அமைக்குமாறு கூறி அனுப்பிவிட்டாள்; அவள் சென்றபின் தலைநோய் நீங்கிய செய்தியைத் தன் அன்னைக்கு உணர்த்துமாறு அப்பணிப்பெண்ணையும் அனுப்பிவிட்டுக் கதவைத்தாழிட்டாள். பிறகு அவள் தன் ஆருயிரைப் போக்கிக்கொள்ள யத்தனித்தாள். இவற்றையெல்லாம் அண்மையிலிருந்த அவிமாரகனும் பொறுமையுடன் கவனித்துவந்தான். அப்போது எதிர்பாராதவாறு வானங்கறுத்து இடியும் மின்னலும் உண்டாயின. இடியோசை கேட்ட இளவரசி நடுக்கமுற்றாள்; வெய்துயிர்த்தாள்; அலறித் தன்னைக்காப்பாற்றுமாறு ஆருயிர்த்தோழரை அழைத்தாள். அந்நிலையில் அவிமாரகனும் கணையாழியை வலதுகையிலணிந்து அவளது கண்களிக்கத் தோன்றினன். பிரிந்தவர் கூடினால் அன்னோரது மகிழ்ச்சி அளவிட்டுரைக்கற்பாலதோ! காதலர் ஒருவரையொருவர் தழுவி மகிழ்ந்தனர். நீராடற்குச்சித்தஞ் செய்யச்சென்றிருந்த நளினிகை திரும்பிவந்து கதவு தாழிடப் பட்டிருப்பதைக் கண்டு ஐயமுற்றுக் கலங்கியிருக்கையில் கதவு திறக்கப்பட்டது. நளினிகையும் நிகழ்ந்தவற்றை யுணர்ந்து உவகையுற்றாள். பின்னர், காதலர்கள் முன்போல் இனிது வதிந்தனர். கணையாழியின் வன்மையினால் சிறிதும் அச்சமின்றி இருந்தான் அவிமாரகன்.

சின்னாட்கள் சென்றபின்னர், வாரணாசிக்குச் சென்ற புதிகன் மணமகனாகிய செயவர்மனையும் அவனது தந்தையையும்

தாய் சுதர்சனையையும் மற்றையோரையும் அழைத்து வந்தான். இளவரசியின் மணவினையும் விரைவில் நடைபெறும் நிலையில் இருந்தது. ஆனால் மணமகளின் தாய் தனது தமையன் சௌவீர மன்னனது செய்திகளையறியாமல் திருமணத்தை உறுதிசெய்தல் கூடாதென்று தடுத்தனள். ஆதலின் குந்திபோசன் அரசியின் விருப்பப்படி சில நாட்களாவது காலந் தாழ்த்த வேண்டுவதாயிற்று. இச்சமயத்தில், சௌவீரநாட்டு அமைச்சர்கள் தமது அரசன் வைரந்திய நகரத்திலேயே மறைந்து வாழ்ந்து வருகின்றனன் என்று குந்திபோசற்குச் செய்தியனுப்பினர். உடனே குந்திபோசன் விரைந்துசென்று தன் தன் மைத்துனனையும் தங்கையையும் அழைத்துவந்தான். தன்னை வினவிய குந்திபோசனுக்குத்தான் மறைந்து வாழ்ந் தமைக்குரிய காரணங்களையும் முனிவரது சாபம் நீங்கியமை யையும் சௌவீரமன்னன் அறிவித்தனனன்; பின்னர்த் தன் மகன் அவிமாரகன் தன்னை நீங்கிச்சென்று சில திங்களாகியும் அவனைப்பற்றிய செய்தியொன்றும் தெரியவில்லை யென்றும் கூறி வருந்தினன். இதனைக்கேட்ட குந்திபோசனும் மற்றை யோரும் பெரிதும் வருத்தமுற்றனர்.

முக்காலமும் அறிய வல்ல முனிவராகிய நாரதர் இச்சம யத்தில் குந்திபோசனது அவைக்கு எழுந்தருளினர். குந்தி போசனும் சௌவீரமன்னனும் அவரை எதிர்கொண்டு சென்று வணங்கி வழிபாடுசெய்தனர். பின்னர் அவர் வாயிலாக அவி மாரகன் உயிரோடு வாழ்வதை யறிந்து எல்லோரும் பெருமகிழ் வுற்றனர். அவனுடைய செய்தியை விரிவாக அறிய எல் லோரும் விரும்பியமையின், முனிவர்பெருமான் குந்திபோசனது தங்கையாகிய சுதர்சனையை அழைத்துவரச்செய்து அவள் முன்னிலையில், குந்திபோசனது வினாக்களுக்கு விடை யளிக்கு முகமாக, அவிமாரகன் குந்திபோசனது புதல் வியை மணந்து வைரந்திய நகரத்திலேயே வாழ்வதாகத் தெரி வித்தனர். குந்திபோசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை; சிறிது நேரம் மயங்கி, முனிவர் தன்னைப் பரிகசிக்கின்றனரோ என்று ஐயுற்றான். முனிவர் புன்னகைபுரிந்து அவிமாரகன் இளவரசி

யைக்காப்பாற்றியது முதலாக அன்றையவரை நிகழ்ந்த செய்திகளை விரித்துக்கூறியதோடு அரசர்க்குரிய கந்தர்வ மணமுறையில் அவிமாரகன் இளவரசியை மணந்தனன் எனக்கூறி முடித்தனர். இவற்றால் குந்திபோசன் மட்டிலா மகிழ்ச்சியடைந்தனனேனும் தன் தங்கைசுதர்சனைக்குச் செய்துள்ள உறுதிமொழியை நிறைவேற்ற முடியாமைக்கு வருந்தினான். நாரதர் குந்திபோசனது வருத்தத்தையும் நீக்கிவிட்டார். அவர் சுதர்சனையை விளித்து அவிமாரகன் அவளது மூத்த புதல்வனென்றும் தீக்கடவுளை வழிபட்டு அவள் அவனைப் பயந்தாளென்றும் அதனாற்றான் அவன் இளமையிலிருந்தே பேரழகுடன் மாந்தர்க்கில்லாத வலிமையும் வீரமும் பெற்று விளங்குகின்றானென்றும் தனது செல்வனுனைமையின் அவன் தீயிற்பாய்ந்தபோது அங்கியங்கடவுள் அவனை எரிக்கவில்லையென்றும் கூறினார். மேலும், முனிவர் சுலோசனையும் சுதர்சனையும் ஒரேகாலத்தில் குழந்தைகளை ஈன்றனரென்றும் சுலோசனையின் மகவு உடனே இறந்து போயினமையால் சுதர்சனை தனது குழந்தையைத் தனது தமக்கையிடம் பிறரறியாமல் கொடுத்தனளென்றும் அவனே அவிமாரகனென்றும் கூறி அவ்விருவரும் பழையசெய்திகளை நினைவுகூரும்படி செய்தனர். பின்னர், அவர் குந்திபோசனது இரண்டாம் புதல்வியாகிய சுமதி என்பாளைச் செயவர்மனுக்கு மணமுடிக்குமாறு அறிவுறுத்தினர். இதற்கிடையில், அவிமாரகனும் இளவரசியும் மணமக்கள்போல ஒப்பனை செய்யப்பெற்று அவைக்கு அழைத்து வரப்பட்டனர்; அவையோர் மலர்மாரிபொழிந்தனர். பின்னர், ஒருநன்னாளில் முனிவர்பிரானது திருமுன்னர், திருமணங்கள் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றன.

மணமக்கள் சின்னாள் குந்தி போசனது அரண்மனையில் அவனால் நன்கு உபசரிக்கப்பெற்றுத் தங்கியிருந்து பின்னர் தத்தம் நகரங்களுக்கு ஏகினர். நாடுதுறந்து சென்று ஓராண்டின் பின்னர்த்திரும்பிய தம் மன்னனையும் அரசியையும் வாழ்க்கைத்துணையோடு கூடிய இளவரசனையும் சௌவீரநாட்டு மக்கள் எதிர்கொண்டு பெருமகிழ்ச்சியோடு விழாவாற்றினர்.

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற்றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்.

செப்ப முடையார்க்குச் செய்யும் விண்ணப்பம்

வித்துவான். திரு. வேங்கடராசலு அவர்கள்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 9, பக்கம் 336.)

5. வழங்குதற்கு எளிதாகிய அங்கனம் என்னுஞ் சொல், வழங்குதற்கு அரிதாகிய அங்ஙனம் எனத் திரியாது என்றார்கள். இதனை அறியின், மெல்லொற்றுத் தன் இனவல்லெழுத்தோடு கூடி வருஞ்சொல் வழங்குதற்கு எளியது என்பதும், மெல்லெழுத்து இரட்டித்து வருஞ்சொல் வழங்குதற்கு அரியது என்பதும் அவர்கள் கருத்தாதல் நன்குபுலனாகும். ஆகவே, வழங்குதற்கு எளிதாகிய ஒன்று என்பது வழங்குதற் கரிதாகிய

,,		,,	,,	ஒன்னு	என்றும்,
,,	அன்று	,,	,,	அன்னு	,,
,,	கன்று	,,	,,	கன்னு	,,
,,	என்று	,,	,,	என்னு	,,

வழங்குதல் என்னை? அன்று முதலியவை மலையாளத்தில் அன்னு முதலியவாயே வழங்குகின்றன. அன்றியும, மங்கலம் கஞ்சி சந்தனம் என்னுஞ் சொற்கள் அம்மொழியில் முறையே மங்ஙலம் கஞ்ஞி சந்நனம் என்று இருவழக்கிலும் வழங்குகின்றன. ஒன்னு அன்னு கன்னு என்னு என்பவையே வழங்குதற்கரியவாகலின் ஒன்று அன்று கன்று என்று எனத் திரிந்தன என்பதும், அவ்வாறே, மங்ஙலம் கஞ்ஞி சந்நனம் என்பவையே வழங்குதற்கு எளியவாகிய மங்கலம் கஞ்சி சந்தனம் என்று திரிந்தன என்பதும் நாட்டாரவர்கள் கருத்தாதல் வேண்டும். வழங்குதற்கு அரிதாகிய அங்ஙனம் என்பதுவே வழங்குதற்கு எளிதாகிய அங்கனம் எனத் திரிந்தது என்றவர்கட்கு, வழங்குதற்கு அரியவாகிய மங்ஙலம் சந்நனம் என்பவையே வழங்கு

தற்கு எளியவாகிய மங்கலம் சந்தனம் என்றாயின என்பதன்றோ அமைதியாகும். இனி, மாங்கா தேங்கா என்று மலையாளத்தில் வழங்குதல் போன்று தமிழிலும் மிகப்பழைய காலத்தில் வழங்கின என்றும் அவை வழங்குதற்கு அரியவாகலின், மாங்காய் தேங்காய் என்று திரியலாயின என்றும் நாட்டாரவர்கள் கூறுவார்கள். என்னையெனின், ஙா ஒலி வழங்குதற்கு அரியதும் ங்க ஒலி வழங்குதற்கு எளியதும் ஆகும் என்பது அவர்கள் கொள்கையாகலின் என்க.

6. அங்ஙனம் முதலிய சொற்களை அ—ஙனம் என்றிங்ஙனம் பிரித்துப் புணர்ப்பது தொல்காப்பியர்க்குக் கருத்தன்றாகலின், அவர், ஙகரம் மொழிமுதல் வரும் என்று கூறிற்றிலர் என்றார்கள். ஆயின், அங்ஙனம் என்பதற்குத் தொல்காப்பியனார் கொண்ட பொருள் இது என்று நாட்டாரவர்கள் கூறவில்லை. அத்தன்மை, அப்படி என்பது அவர் கொண்ட பொருள் என்பார்களாயின், ஆண்டு, அகரம் சுட்டுப்பொருள் தருதலின் ஙகரம் மொழிமுதல் வந்ததாகும். ஆகவே, அஞ்ஞான்று அந்நாள் அம்மணி என்னுஞ் சொற்களைப் பிரித்து,

'சுட்டின் முன்னர் ஞ ந மத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்'

என்று விதிகூறிய ஆசிரியர்,

சுட்டின் முன்னர் ங ஞ ந மத் தோன்றின்

என்று விதிகூறி அங்ஙனம் என்பதனையும் அமைத்திருப்பாரல்லவோ? அச்சம் அஞ்ஞை அன்னான் என்னுஞ் சொற்களினுள்ள அகரத்தைப் போலவே அங்ஙனம் என்பதிலும் அகரஞ் சொல்லுறுப்பாய் அமைந்துளது என்றாலன்றி, அங்ஙனம் என்பதில் ஙகரம் மொழிமுதல் வந்ததாகக் கருதப்படாமை அமையாது. அவ்வாறு கொள்ளின், அங்ஙனம் என்பதன் பொருள் யாது?

வினைத்தொகை பண்புத்தொகைகளைப் பிரித்துப் புணர்க்கலாகாது என்னுங் கருத்தால் அதற்குப் புணர்ச்சிவிதி கூறாதது போன்று அங்ஙனம் என்பதற்கும் புணர்ச்சிவிதி கூறிற்றிலர் என்றார்கள். கொல்யானை அடுகளிறு ஓடுகால் என்னும் வினைத்

தொகைகளில் உள்ள யானை களிறு கால் என்பனவும், கருங் குதிரை கரும்பார்ப்பான் செந்தாமரை வெண்குடை என்னும் பண்புத்தொகைகளில் குதிரை பார்ப்பான் தாமரை குடை என்பனவும் தனித்தும் வழங்குதல்போன்று, அங்ஙனம் என்பதிலும் ஙனம் என்பது தனித்து வழங்குதல் வேண்டுமே. தனித்து வழங்கின், ஙகரம் மொழிமுதலில் வருமென்று கூற வேண்டுமே. வினைத்தொகை பண்புத்தொகைகட்கு ஆசிரியர் புணர்ச்சிவிதி கூறுததன் காரணம்—'கோல் எனத் தொழின்மை உணர நின்றது கொல்யானை எனத் தொகையாயவழி' கொன்ற எனக் காலங் காட்டி நின்றமையின் புணர்க்கப்படாதாயிற்று.' 'கரும் எனப் பண்புணர நின்றது கருஞ்சான்றான் எனத் தொகை யாய வழி, கரும் என்பது கரியான் எனப் பால்காட்டி நிற்றலிற் புணர்க்கப்படாதாயிற்று' என்று உரையாசிரியரும், 'ஆடரங்கு ....என நிலம் முதலாகிய பெயரெச்சந் தொக்க வினைத் தொகைகளை விரிக்குங்கால் ஆடினவரங்கு எனச் செய்த என்னும் பெயரெச்சத்து ஈறுவிரிந்த அகரஈறு இறப்புணர்த்தியும், ஆடாநின்ற வரங்கு, ஆடுமரங்கு எனச் செய்யும் என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த உம்மீறு நிகழ்வும் எதிர்வும் உணர்த்தியும் அவற்றுனைய புடைபெயர்ச்சியைத் தோற்றுவித்து இரண்டு பெயரெச்சமும் ஒரு சொற்கண் ஒருங்கு தொக்குநிற்றலின் அதனை ஒரு பெயரெச்சத் தின்கண் அடக்கிப் புணர்க்கலாகாமையின், புணர்க்கலாகாது என்றார்.' 'கரும்பார்ப்பான் கரும்பார்ப்பனி கரும்பார்ப்பார் கருங்குதிரை கருங்குதிரைகள் என வரும் இவற்றுட் கரியனாகிய பார்ப்பான் கரியளாகிய பார்ப்பனி கரியராகிய பார்ப்பார் கரியதாகிய குதிரை கரியனவாகிய குதிரைகள் என ஐம்பாலினையும் உணர்த்தும் பண்புகொள் பெயர் தொக்கவாறு காண்க. இவற்றுட் கருமை என்னும் பண்புப்பெயர் தொக்கதேல் கருமை யாகிய பார்ப்பான் என விரித்தல் வேண்டும். அங்ஙனம் விரியாமையிற் பண்புகொள் பெயர் தொக்கதென்று உணர்க..... இங்ஙனம் ஐம்பாலுந் தொகுத்தற்கு உரிய முதனிலையாதலிற் புணர்த்தலாகாமை கூறினர்' என்று நச்சினார்க்கினியரும் கூறியிருப்பவற்றான் நன்கறியப்படும். இன்னதோரிடர்ப்பாடு அங்

ஙனம் என்னுஞ் சொல்லிலுள்ள அகரச் சுட்டின்கண் இன்மை யின், அதற்கு விதிகூறுதல் எளிதினியலுமன்றே.' இவற்றால், வினைத்தொகை பண்புத்தொகைகளுக்கு விதிகூற இயலாமல் விடுத்ததுபோல அங்ஙனம் என்பதனையும் விதிகூறாது விடுத்தார் என்று நாட்டாரவர்கள் கூறியது சிறிதும் பொருந்தாமை நன் கறியப்படும்.

7. 'மெய்நிலை சுட்டின்' என்னுஞ் சூத்திரத்தால், அங் ஙனம் இங்ஙனம் முதலிய சொற்களைத் தொல்காப்பியனார் அமைத்துள்ளார் என்றார்கள். 'ர ழ ஒழிந்த மற்றைய மெய் யெழுத்துக்கள் தம்மொடு தாம் மயங்கும்' என்பதுவே சூத்திரத் தின் பொருள். இதனால், ஙகரத்தொடு ஙகரம் மயங்குதற்கு அங்ஙனம் இங்ஙனம் என்னுஞ் சொற்களையே ஆசிரியர் கருதினார் என்று துணிதல் அமையாது. ஆயின், உரை யாசிரியர், எங்ஙனம் என்னுஞ் சொல்லையே உதாரணமாகக் காட்டினாரால் எனின், அதனை நோக்குதும்;

'ய ர ழ என்னும் புள்ளி முன்னர்
முதலா யெழுத்து ஙகரமொடு தோன்றும்'

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், ய ர ழக்களுக்கு முன் ஙக ரம் வருதற்கு உதாரணமாக அவர் (உரையாசிரியர்,)

வேய்ஙனம்
வேர்ஙனம்
வீழ்ஙனம்

என்பவற்றைக் காட்டியுள்ளார். இவ் வுதாரணங்களில், வேய், வேர், வீழ் என்பவை நிலைமொழிகளாகலின், ஙனம் என்பது வருமொழி என நன்கறியப்படும். ஆகவே, ஙகரம் மொழி முதல் வந்ததாகுமன்றே? இவ்வுதாரணமே ஆசிரியர் கருதினு ராயின், 'முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்' என்று ஙகரத்தைப் பிரித்துக் கூறுதலின்றி, 'முதலாகெழுத்துத் தோன்றும் என்ப' என்பது போலன்றே சூத்திரஞ் செய் திருப்பார்? ஙகரம் மொழிமுதல் வாராததனானன்றே அதனை முதலாகெழுத்தோடு சேர்க்காது பிரித்துக் கூறினார்? இச் சூத்திரத்திற்கு உரையாசிரியர் காட்டிய 'வேய்ஙனம்' முதலி

யவை உதாரணமாகுமோ? இதுபோன்றே, 'மெய்நிலை சுட்டின்' என்னுஞ் சூத்திரத்தின் உரையில் அவர் காட்டிய 'எங்ஙனம்' என்னும் உதாரணமும் அமைவுடையதன்று. அங்ஙனம் முதலிய சொற்கள் தொல்காப்பியனார் காலத்தில் வழங்கி யிருக்குமேல் தொல்காப்பியத்திலும் சங்கநூல்களிலும் ஆங்ஙனம் ஈங்ஙனம் யாங்ஙனம் என்பனவன்றே காணப்படல் வேண்டும். அவ்வாறின்றி, ஆங்கனம் ஈங்கனம் யாங்கனம் என்பனவே காணப்படுதற்கு நியாயம் யாது? ஆயின், ஙகரத்தின்முன் ஙகாம் வருதற்கு உதாரணம் யாதோ எனின், 'பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே' என்னும் அடியில் ஙகரம் இரண்டு வந்திருத்தல்போல்வது உதாரணமாகும். அங்ஙனம் என்பது போலத் தனிமெய் முன்னர் உயிர்மெய் வந்ததுவே அமையும்; இஃது அமையாது எனின், தனிமெய்யோடு தனிமெய்மயங்குதலை இச்சூத்திரத் தாற் கொள்ளாக்கால், 'கண்ண் கருவிளை,' 'பொன்ன் பொறி சுணங்கு' என்பனபோல வருபவற்றிலெல்லாம் மெய்கள் மயங்கி நிற்றற்கு இலக்கணமின்றாகும். அன்றியும், தனிமெய் யோடு உயிர்மெய் மயங்கிய சொற்களை உதாரணங்காட்டினும் ஆண்டு மெய்யோடு மெய்மயங்கிய துணையே உதாரணமாகக் கொள்ளப்படுதல் கருதத்தகும். மெய்மயக்கம் என்பது மெய் யொடு மெய்மயங்குதலேயாகும். இனி, ஙகரமெய்யோடு ஙகர உயிர்மெய் மயங்கிய சொல் இருந்திருப்பின் அஃது உதாரண மாதற்குத் தட்டில்லை.

8. ஆங்கனம்..............யாங்கனம் என்பவற்றைப் பிழை யுள்ளதோர் முடிபு என்றூர்கள். ஆசிரியர் தொல்காப்பியனாரும் சங்கப்புலவர் பலரும் வழங்கியிருக்குஞ் சொல்லே பிழையுள்ள தாயின், பிழையில்லாத சொல் யாதோ, அறியேன்.

9. அங்ஙனம் முதலிய சொற்களின் வழக்குப் பழமை யதே என்றூர்கள். பழமையதாயின் சங்கச் செய்யுட்களில் வந்திருக்குமே. ஆங்கனம் ஈங்கனம் யாங்கனம் என்னும் வடிவச் சொற்களே சங்கச் செய்யுட்களில் காண்கின்றன. ஓரிடத் திலாதல் ஆங்ஙனம் அங்ஙனம் என்னுஞ் சொற்கள் காண்

கின்றில. சங்கச் செய்யுட்களில் ஆட்சியுடைய சொற்கள் புதிய வாய்பாட்டுச் சொற்களாதலும், அவற்றில் வந்திலாத சொற்கள் பழமையவாதலும் காலத்தின் கோலமே.

முகிந்தல் என்னுஞ் சொல் பண்டையிலக்கண இலககியங்களில் வந்திலாததனால் அதனை வழங்கியது தவறு என்றார்கள். ஆங்கனம்....யாங்கனம் என்னுஞ் சொற்கள் பண்டையிலக்கண இலக்கியங்களில் வந்துள்ளனவாகலின் அவற்றை வழங்கியதும் தவறாயிற்று, நாட்டாரவர்கள் கூறுமங்கியாயம் நியாயமே!

III. காண்கின்றது என்னுஞ் சொல்லைக் குறித்து நாட்டாரவர்கள் எழுதியிருப்பதன் சுருக்கம்:—

1. காண்டல்வினை செயப்படுபொருள் குன்றாததாகலின், காண் என்பதன் அடியிற் பிறக்குஞ் சொற்களைக் காணப்படுகின்றது, காணப்படுகின்றன என்றிங்ஙனம் வழங்குதலே முறை.

2. வேற்றுமொழிப் பயிற்சி ஒன்றே கொண்டு தமிழின் இடல்வினை விளக்கலுறுவார் சிலர்.......... தமிழின்கண் செயப்பாட்டுவினை இன்று எனவும் கூறுநிற்பர்.

3. காண்கின்றது என்பதனையே அவர் ('கபிலர்' ஆசிரியர்) நினைவுகூர்ந்து வழங்கியுள்ளார்; காணப்படுகின்றது என்பது பயிற்சிவயத்தால் அவரறியாமலே போந்தது.

4. இது (காண்கின்றது என்பது போன்று செய்வினையாக எழுதுவது), இழி வழக்கு.

5. எத்துணையர் இவ் விழிவழக்கினை விழுமிய வழக்காகக் கொண்டனரோ என உள்ள அச்சம் உண்டாகின்றது.

இவற்றை முறையே ஆராய்தும்:—

1. காண் என்பதன் அடியிற் பிறக்கும் வினைச் சொற்களைச் செயப்பாட்டுவினையாகவே வழங்குதல் வேண்டும் என்பதற்கு,

'வினையே செய்வது செயப்படு பொருளே
... .
ஆயெட் டென்ப தொழின்முத னிலையே'

என்னும் சூத்திரத்தை விதியாகக் குறித்தார்கள். ஒரு தொழிற்கு முதனிலை (காரணம்) எட்டு என்பதும் அவை இவை யென்பதும் இச்சூத்தாற் போதருதலன்றிச் செயப்படு பொருள் உள்ளவினையைச் செயப்பாட்டுவினை வடிவில் வழங்குதல் வேண்டுமென்பது போதருதல் இல்லை. செயப்படு பொருளுள்ள வினைக்கு உதாரணங்காட்டிய உரையாளரெல்லாரும் வனைந்தான் என்று செய்வினையாகக் காட்டினரேயன்றி, வனையப்பட்டது என்று செயப்பாட்டுவினையாகக் காட்டினரில்லை. செயப்படுபொருள் குன்றுவினையைச் செயப்பாட்டு வினையாக வழங்குதல்வேண்டும் என்பது இச்சூத்திரத்தில் எவ்வாறு புலனாகின்றதோ, அறிகிலேன். நாட்டாரவர்கள் அறிவிப்பார்களாயின் அவர்கள்பால் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேனுவேன்.

'வினையே' என்னும் இச்சூத்திரத்தில் வந்துள்ள 'செயப்படு பொருள்' என்னுஞ் சொல்லால் அறியப்படும் எனின், அது, [1] கருத்தாவின் செயலை அடைந்த பொருள் என்று கருமத்தினை விளக்கியதித்தனை. அச்சொல்லால், தமிழில் செயப்பாட்டு வினை வழங்குதல் உண்டு என்பது அறியப்படும். அத்துணையே யன்றி, செயப்படுபொருள் குன்றுத வினையையெல்லாம் செயப்பாட்டு வினைவடிவில் வழங்குதல் வேண்டும் என்பது பெறப்படாதே. செயப்படுபொருளையே நன்னூலார் செய்பொருள் என்று வழங்கியுள்ளார் 'செய்பொருளாறுந் தருவது வினையே' என்றது காண்க. நாட்டாரவர்களும், தமிழிற் செயப்பாட்டு வினை வழக்கு உண்டு என்பதைக் கூறுமிடத்தே, 'செயப்படு பொருள் என்னும் பெயரிலிருந்தே செயப்பாட்டுவினை யுண்மை பெறப்படுவதனையும்' என்று எழுதியிருத்தலின், அச்சொல்லால், செயப்பாட்டுவினை வழக்கு உண்டு என்பதுமட்டுமே அறியப்படும்.

2. வேற்றுமொழிப் பயிற்சி ஒன்றே கொண்டு, தமிழில் செயப்பாட்டுவினை இல்லை என்றூர் இவர் என யான் அறிகிலேன்.

---

1. கருத்தா செய்யும் செயலின் பயனுக்குச் சார்பாயிருப்பது கருமம் என்பர் வடநூலார்.

ஆயின், செயப்பாட்டு வினைவழக்குத் திராவிட மொழிக்கு இயல்பாயதன்று; வடமொழியினின்று வந்தது என்பாரை யான் அறிவேன்.

1. 'கர்மணிப்ரயோகம் பாஷாசைலிக்குச் சேர்ந்ததன்று'

2. 'பாஷைக்குச் சொந்தமாகக் கர்மணிப்ரயோகம் இல்லை. இப்பொழுது வழங்கிவருவது வடமொழியின் சரியான மொழி பெயர்ப்பிற்கு வேண்டி இடைக்காலத்தில் கிருத்திரிமமாக ஏற்படுத்தியதொரு ஸம்ப்ரதாயமாகும். இதற்கு லக்ஷ்யம்—முதலாவது, வடமொழி அறியாதவர் கர்மணிப்ரயோகத்தை ஒருகாலும் ஆதரித்தல் இல்லை. பேச்சுமொழியில் செய்வினை வழக்கே கேட்குமாறுளது. பழைய நூல்களில்மட்டுமன்று. எழுத்தச்சன் முதலியோருடைய நூல்களிலும் வடமொழித் தொடர்பு இல்லாதவிடத்துக் கர்மணிப்ரயோகம் இல்லை என்பது என் அனுபவம். "ரகுவம்ஸம் காளிதாசனால் உண்டாக்கப்பட்டது" என்பதற்கு ஈடாக, ரகுவம்ஸம் காளிதாஸன் உண்டாக்கியது" என்றால், சிறிதும் அமையாமையில்லை என்பதன்று இம்முறைமையே மொழிக்கு இயல்பாயது என்றும் தோன்றுகின்றது...............'

[1]'கர்மணி ப்ரயோகத்தைச் சுத்த திராவிடங்களாய வினைச் சொற்களில் அதிகம் ஒழித்தல் வேண்டும்.'

ஈஸ்வரன் செய்யுன்ன தெல்லாம் (செய்கின்றதெல்லாம்) ஸஹிக்கயே (பொறுத்துக் கொள்ளுதலே) உள்ளு (உளது) என்று கூறாமல், ஈஸ்வரனால் செய்யப்பெடுன்னதெல்லாம் ஸஹிக்கப்பெடுகையே உள்ளு 'என்று பிரயோகித்தால், அது மலையாளம் அன்று என்றே கூறுதல் நேரும்'

என்று, கேரளபாணிணி, மஹாமஹிமை, ஸ்ரீராஜராஜ வர்ம கோயிற்றம்பிரானவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

---

1. கேரளபாணினீயம். சூ. 119. உரை.
2. ,, ,, 81. உரை.
1. ஸாஹித்யஸாஹ்யம். பக்கம். 215.

[2]'கன்னடத்தில் கர்மணி ப்ரயோகம் விசேஷரூடமாக வில்லை. வீடுகேட்டப்பட்டது என்பதற்குப் பதில் வீடுகேட்டிற்று மனெ கட்டிது) என்னும் ப்ரயோகம் ஏராளமாயிருக்கின்றது'.

[3]'மணிமயதாலயங்களு சமேது வைகாவுதத அளதெயலி' என்னும் அடியில், சமைக்கப்பட்டன என்னும் பொருளில் சமைந்தன (சமெதுவு) என்று வந்திருத்தல் காண்க.

இக்காட்டியவற்றால், செயப்பாட்டுவினை வழக்குத்திரா விடமொழிகளுக்கு இயல்பாயதன்று என்பதும், செயப்பாட்டு வினையை வழங்க வேண்டியவிடத்துச் செய்வினையை வழங்கும் வழக்கே பெரும்பாலும் உளது என்பதும் போதரும். புகழுடம்போடு விளங்கும் கா. நமச்சிவாய முதலியாரவர்கள் கருத்தும் இதுவே.

3. காணப்படுகின்றது என்று செயப்பாட்டு வினையில் யான் எழுதியிருப்பது பயிற்சிமிகுதியால் என்னை அறியாமலே நேர்ந்தது என்று நாட்டாரவர்கள் கூறியிருக்கின்றார்கள். அவ்வாறாயின், அங்ஙனம் இங்ஙனம் யாங்ஙனம் என்பனவும் என்னை யறியாமற் சிலவிடங்களில் போந்திருத்தல் வேண்டுமே. எனது 'கபில'ரில் ஓரிடத்தாதல் அவ்வாறு வந்திலதே. அங்ஙனம் முதலியவை எனக்குப் பயிற்சியில்லாதன என்பார்கள் போலும். ஆயின், கலாசாலை மாணவர்க்காக யான் எழுதியிருக்கும் புஸ்தகங்களில் ஓரிடத்திலாதல் அங்கனம்............ யாங்கனம் என்னுஞ்சொல் வந்தில; அங்ஙனம் முதலிய சொற்களே வந்துள்ளன. இவற்றால், அறியாமல் எழுதும் வழக்கம் என்பால் இல்லை என்பதை நாட்டாரவர்கள் அறிந்துகொள்வார்களாக.

(தொடரும்.)

---

2. கன்னடலேகனலக்ஷணம். பக். 26.
3. தொறவெ ராமாயணம், பாலகாண்டம்.

சிந்தாமணியின் செந்தமிழ் நலம்

திரு. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளையவர்கள், திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 9, பக்கம் 344.)

"குணமாலையின் சுண்ணமே நல்லது," எனச் சீவகனால் யாவரும் தெளிய விளக்கப்பட்டது தெரிந்ததும், சுரமஞ்சரி, குணமாலைபால் கண்ணற்று நீங்கி விடுகின்றாள். அதனால் குணமாலை பெருந்துயர் அடைந்து, சுரமஞ்சரிக்கும் தனக்கும் பிறந்திருந்த நட்பு இவ்வாறு கெடுதற்குக் காரணம் யாதென ஆராய்ந்து, அது பண்டைத் தீவினை யாமென நினைந்து, அது மேலும் உருத்து வந்து வருத்தாமைவேண்டி, அருக தேவனது அருட்கோயிலுக்குச்சென்று, அவனது திருவடியில் மலரிட்டு வணங்கி, அந்தணர்பலர்க்குப் பொருட்கொடைசெய்து நீராடத் தொடங்குகின்றாள். சுரமஞ்சரியின் பிரிவாற்றாத குணமாலை, அப்பிரிவு நிகழ்தற்குரிய காரணத்தை நெஞ்சில் நினைந்தவழி, ஒருவர் செய்த தீவினை, இன்பக் காரணமாகிய விளையாட்டினுள்ளும் நுழைந்து, துன்பத்துக்குக் காரணமாய், அவ் இன்பத்தைத் துறப்பிக்கும் என்ற எண்ணம் தோன்றுகிறது. உடனே, தீவினையின் தீமைப்பயனை உணர்ந்து பிரிந்தேகும் சுரமஞ்சரிபால் தோன்றியிருந்த அன்பினால் குணமாலை மனம் உளைந்து அழுகின்றாள். இஃது,

"இன்பக் காரணமாம் விளையாட் டினுள்
துன்பக் காரணமாய்த் துறப்பித் திடும்
என்பதே நினைந்(து) ஈர்மலர் மாலைதன்
அன்பினால் அவலித்(து) அழுதிட்டாள்"

எனத் தெளியக்கூறப்பட்டுளது. இதற்கு, "இன்பதுக்குக் காரணமாம் கடுநட்புத்தானே பகைக்கும் காரணமாய் ஒரு விளையாட்டினால் நட்பினைத் துறப்பிக்கும் என்கின்ற பழவார்த்

தையையே நினைந்து வருந்தி அழுதாள்" என்றும் கூறுவர். யாது கூறினும், குணமாலை சுரமஞ்சரியின் பிரிவாற்றாது, அன்பினால் வருந்திப் புலம்பினாள் என்பது தேற்றம். உரைவிகற்பத்தின் நலந்தீமையினை உரையாராய்ச்சியில் கூறுவோம். இதனாலும், குணமாலையும் சுரமஞ்சரியும் பழகிய நண்பரல்லர் நட்புப்பெறுவாராயின்,அவர்பால் பொறையாகிய பேரறம்தானாகவே அமைந்துவிடும். " இனத்தியல்பதாகும் அறிவு." குணமாலையின்பால்பொறையும், சுரமஞ்சரிபால் பொறாமையும் வேறுவேறு விளங்கிநிற்றலால், அவர்கள் பொழிலிடையே புதுநட்புப் பெற்றாராதல்வேண்டும் என்பது தெளியப்படும். சுண்ண மாறுபாட்டின்கண், வெற்றி எய்தினமையால் பேருவகை கோள்ளற்பாலளாய குணமாலை, தோல்வியுற்ற சுரமஞ்சரிபால் கழிபேரிரக்கம் கொண்டு, அன்பினால் அவலித்தழுவாளாக, புல்லிய சுண்ணத்தின் பொருட்டு, பொறையறத்தின் உருவாய குணமாலையின் நட்பினைத் துறந்து செல்லும் சுரமஞ்சரி, உருவும், திருவும், பிறவும் ஒப்பவுடையளாயினும், குணநலத்தால் ஒவ்வாள் என்பதே துணிபாம்.

மேலும், சுரமஞ்சரி போயினபின், நீராடற்பாலளாய குணமாலை, சினந்தேகிய சுரமஞ்சரிபால் வெறுப்புற்றாளா? அன்றி, அவள் நட்பினையாவது மறந்தாளா? அப்பிரிவுக்குக் காரணமாகிய சுண்ணங்களையாவது முனிந்தாளா? அன்றி, தன் சுண்ணத்தைப்புகழ்ந்து வென்றிகூறிய சீவகனையாவது நினைந்து மகிழ்ந்தாளா? ஒன்றுமில்லை. இந்நிகழ்ச்சியால், இன்பம் எய்துதற்குரிய தான், அதனை எய்தாது துன்பம் எய்துதற்குரிய காரணம் யாதென நினைந்து, அது தன் தீவினையெனத்தெரிந்து, அதனைக்கழுவும் பொருட்டு அருகன்கோயிலை அடைந்து அவன் அடிபணிந்து அறம்பலபுரிகின்றாள்.

குணமாலையின் அன்புடைமை பிறிதொரு செயலாலும் இனிது துணியப்படும். சீவகன் கூறிய தெளிப்புரையைக் கேட்ட மாத்திரத்தே சுரமஞ்சரி இடிப்புண்ட நாகம்போலத் திடுக்கிட்டுச் சொல்லாடல் இன்றி மயங்கிநிற்கின்றாள். அது போது, குணமாலை மகிழ்ச்சி சிறிதுமின்றி, அவளது மனத்தின்

மென்மைகண்டு இரங்கி, "பாவாய், நங்காய், என்னோடு பேசாயாயினை; என்னோ? விரைந்து பேசுக" என்று வேண்டுவாள்,

> "திங்களங்கதிர் செற்றுழுங்கப்பட்ட
> பங்கயப்படு வொத்துளைபாவாய்
> நங்கை என்னொ(டு) உரையாய் நனிஇல்லே,
> இங்கண் என்(று) அடிவீழ்ந்(து) இரந்திட்டாள்."

இதன்கண், சுரமஞ்சரியின் முகம் வாடிக்கூம்பிய தாமரை போன்றதாயினும், மேனி பண்டேபோல் ஒளிகுன்றாது திகழ்தலின், குணமாலை, முன்பு "செம்பொற்பாவையன்னாய்" என்றதுபோலவே, "பாவாய்" என்கின்றாள். முன்பு அவளால் இகழப்பட்ட காலையும், சுண்ணத்தின் ஒண்மையால் புகழப்பட்ட இக்காலையும் குணமாலை, சுரமஞ்சரியை ஒரேவகையாக முன்னிலைப்படுத்துவதால், அவட்கு அச்சுரமஞ்சரிபால் இருந்த நன்குமதிப்பும், வியப்பும் வேறுபட்டில என்பதும், அவள் அடிவீழ்ந்து இரந்து வேண்டுதலால் அவள்பால் பெருகிய அன்புடையளாதலும் விளங்குகின்றன. பகலவன் கதிரால் தகவுறமலர்ந்து அளிமொய்ப்ப ஒளிசிறந்து நிற்கும் தாமரை போலும் கண்ணும் வாயும் உடைய பாவையை ஒத்த நீ, வெண்கதிரின் தண்கதிரால், அளியின்றி ஒளிமழுங்கித் தான்றும் பங்கயம்போல், கண்ணொளி மழுங்கி, வாய்மூடி உரையாடாதிருக்க வேண்டா என்றற்கு, "திங்களங்கதிரால்செற்று உழக்கப்பட்ட பங்கயப்படு ஒத்துளை" என்றும், புல்லிய சுண்ணம் காரணமாக வேறுபடுதல் நங்கைமார்க்கு நலமன்று என்றற்கு, "நங்கை" என்றும் மொழிகின்றாள். நங்கை என்பது பெண்களிற் சிறந்தவளையன்றோ! இதைக்கேட்கும் சுரமஞ்சரி, முதற்கண் மாற்றம் ஒன்றும் உரைக்கின்றிலள். பின்பு, ஒருவாறு தேறி,

> " .... மழைவள்ளல் என்
> ஏற்ற சுண்ணத்தை ஏற்பில என்றசொல்
> தோற்றுவந்(து) என்சிலப்படி கைதொழ
> நோற்பன்; நோற்றனை நீ" ....

என்கின்றாள். எனவே, காய்தல் உவத்தலின்றி, உள்ளதன் உண்மை துணிந்து கூறிய சீவகனது மனநிலையை ஓராது, அவன்

தானும் வலிபவந்து தன் சிலம்படி தொழுமாறு நோற்பேன் என்று சுரமஞ்சரி தன் தருக்குத் தோன்றக் கூறியவாறும், நின் சுண்ணம் ஏற்பிலதாயினும், நின் நோன்பினால் ஏற்றது எனக் கூறப்பட்டது என்றற்கு "நீ நோற்றனை" என்று கூறியவாறும் பெறப்படுகின்றன. அன்றி, தன் சுண்ணத்தின் குறையினை நுண்ணிதின் ஆராய்ந்து கூறிய சீவகனது மதிநுட்பத்தை யோர்ந்து, அவன்பால் விருப்புற்று, அவனை மணக்கும் குறிப்பால், "மழை வள்ளல்" என்றும், "என் சிலம்படி கைதொழ நோற்பன்" என்று கூறுகின்றாள் என்று கூறுதலும் உண்டு. அத்துணையமைதி சுரமஞ்சரிபால் உண்டோ என்று, மேலே கூறிய செய்திகளால் ஐயப்படநின்றது. மேலும், "கட்டவிழ் கண்ணி நம்பி சீவகன் திறத்திற் காய்ந்தாள்" (சீவக 904) எனப்பிறாண்டும் சுரமஞ்சரியின் தாயாகிய சுமதி கூறுவதும் காண்க.

குணமாலை, பின்பு, சீவகனால் அசனி வேகத்தின் முன்னின்று உயிர்காக்கப்பட்டபின், அவன்பால் காதல் கொண்டு அவனையே நினைந்து மெலிகின்றாள். அவள் காமவேட்கை மயத்தளாய் வெருவிக்கூறுவன, பொருளிலக்கண வரம்பினை இறக்கும் நிலையில் இருக்கின்றன. அதுபோது, தன் பெண்மையின் நிலையினையுணர்ந்து, "எண்ணில் காமம் எரிப்பினும் மேற்செலாப், பெண்ணின் மிக்கது பெண்ணல தில்லையே" என்று தன்னையே நொந்துகொள்ளுகிறாள். பின்பு, "கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப், பெண்ணிற் பெருந்தக்கதில்" (குறள் 1137) என்பவாயினும், அத்தகுதியிழந்து, "ஓலைதாழ் பெண்ணைமாமடலூர்தலைக், காலைவேற்றடங்கண்ணி" யாகிய அவள் கருதுகின்றாள். இக்கருத்துக்கு அமைதி கூறுவார்போல தேவர்,

"வேலைமாக்கடல் வேட்கை மிக்கூர்தர
ஓலைதாழ் பெண்ணை மாமடலூர்தலைக்
காலைவேற்றடங் கண்ணி கருதினாள்" (சீவக. 999)

என்கின்றார். அம்மட்டோ, அவள்

"தெளிகயம்மலர் மேலுறை தேவியின்
ஒளியும் சாயலும் ஒப்புமையில்லவள்
களிகொள் காமத்திற் கையற வெய்தித்தன்
கிளியைத் தூதுவிட்டாள் கிளந்தென்பவே"
(சீவக. 1001)

என்றும் கூறுகின்றார்.

குணமாலையின் வேண்டுகோட்கு இணங்கி அவள் வளர்த்த கிள்ளை சீவகன்பால் சென்று மீள்வதற்குள், அவளது நெஞ்சில் அதன்செயல்பற்றிப் பலவேறு எண்ணங்கள் தோன்றுகின்றன. அவை,

“ தன்துணைவி கோட்டியினின் நீங்கித் தவிசிடம் பார்த்(து)
இன்துணைவற் சேர்வான் இருந்ததுகொல்! போந்ததுகொல்!
சென்றதுகொல்! சேர்ந்ததுகொல்! செவ்வியறிந்(து), உறுகும்
என்துணைவி மாற்றம் இஃது என்றதுகொல்! பாவம்!! ”

என்றபாட்டின்கண் காணப்படுகின்றன. தன்துணைவி என்றது சீவகன் மனைவியாகிய காந்தருவதத்தையை, துணைவன் சீவகன், என் துணைவியென்றது, கிளிக்குத் துணைவியாகிய தன்னையே. இவ்வெண்ணங்களால் அலைப்புண்ட நெஞ்சினள், கிளியை நினைந்தவழி, அதன்பால் இவ்வலைப்பு உளது போலத் தோன்றுகிறது. அதனால், “அலைப்புண்டல் வினையேனாகிய எனக்கு அமையும்; என்னாற் பேணப்படுவதொன்று தவிரப் பிறிதொன்றுமில்லாத இக்கிளி இவ்வாறு அலைதல்கூடாதே! இஃதென்ன பாவம்” என்பவள், “பாவம்” என இறுதியில் கூறிமொழிகின்றாள். அதன்பால் யாதோர் பாவமும் இன்மை தோன்ற, அதனைப் பின்னரும், “செந்தார்ப் பசுங்கிளியார்” என்று உயர்த்துக் கூறுகின்றாள். பின்பு கிளி சீவகன் தந்த ஓலையைக் கொணர்தலும் மகிழ்ந்து, அவனது வரவினை எதிர்நோக்கியிருக்கின்றாள். அவளது காமநிலை பின்னர் ஆராயப்படும்.

இங்ஙனம், சீவகன் வரையுங் காலத்தையே நினைந்துகொண்டிருக்கும் குணமாலைபால், செவிலித்தாய் போந்து, “நின்னை நின்மாமன் மகனுக்கு வரைவுடன்பட்டான்போல் நின்தந்தை விருந்து செய்தான்” என்கின்றாள். மேலும், “அவன் நினக்குப் பரியமாப் பண்டிபண்டியாகச் செம்பொன் கொண்டு வந்து தந்து, நினக்கே என்றும் அடிமையாய்ப் பணிசெய்து நிற்பன்; நின்உருவைக் கிழிமிசைத்தீட்டி, நாடோறும் அதனையே வழிபடுகின்றான்; அவன் நினக்கு மைத்துனன்; வனப்பினும் மிக்கான்; வளர்நிதிக்கிழவன்; காளை; உத்தமன்; நின் திருப்பெயரல்லது பிறிதொன்றையும் கூறுவதிலன்; ஆதலால் அவற்கு நின்னைக் கொடுக்க எண்ணினர் நின் பெற்றோர்” என்கின்றாள். என்றலும், அது கேட்கப் பொறாளாய், குணமாலை தன் செவிகளைக் கைகளாற் புதைத்து,

“ மணிமதக்களிறுவென்றான் வருத்தச்சொற் கூலியாக
அணிமதக்களிறனானுக்(கு) அடிப்பணி செய்வதல்லால்,
துணிவதென் ? சுடுசொல் வாளால் செவிமுதல் ஈரல் ”

என்று கூறுகின்றாள். எனவே, என்னைக்காத்தற் பொருட்டு, அசனி வேகத்தை வென்ற சிவகன் மேற்கண்ட வருத்தத்துக்குக் கூலியாக அவனுக்கு யான் அடித்தொண்டேனும் செய்து வழிபடல் வேண்டுமேயல்லது, பிறனொருவனால் வழிபடப்படுதல் அறமாகாது; அதனை நினைந்து அவற்கு என்னை அடிப்படுத்தல் என்பெற்றோர்க்கும் நன்றியறிதலாய பேரறமாம். அதனைநினையாது, பிறனொருவனுக்குக் கொடுக்கத் துணியுமுகத்தால் உளதாகும் தீமையினை நினையாதது என்னே? என்றும், அவர் மறப்பினார். அவனது உதவியினை நேர்நின்று பெற்று யான்மறந்து பிறிது நினைத்தல் எனக்கும் அறமாகாதென்றும் கூறுவாள், "களிறனுக்கு அடிப்பணி செய்வதல்லால், துணிவதென்?" என்கின்றாள். செவிலி, அவள் மைத்துனற்கு உடன்படு முகத்தால் பெற்றோர் நகைமுக விருந்து செய்தமை கூறிவிட்டதனால், அவர் உடன்பட்டவாறே நடக்கும் என்றெண்ணியஞ்சி, "என்னைச் சிவகற்குக் கொடுக்க என்பெற்றோர் நேராராயின், யான் இறத்தல் வேண்டும்; இன்றேல், சிந்தனை பிறிதொன்றாகிச் செய்தவர் முயறல் வேண்டும். இவ்விரண்டனுள் ஒன்று நாளையே நிகழவந்தது" என்கின்றாள். இது கற்புடைய மகளிர்க்குப் பொது விலக்கணமாகலின், குணமாலையாகிய குணமாலைக்கு இத்துணிபு பிறத்தல் வியப்பன்று. இதைக்கேட்ட அவள்பெற்றோர், அவள் கருத்துக்கு மாறுபடாது அவள் விரும்பிய கணவற்கே மணம்புணர்க்கத் துணிவது நம்மனோர்க்கு வியப்பைத்தருவதாம். இதனை நூற்புணர்ப்பு என்னும் பகுதிக்கண் ஆராய்வாம். இக்காலத்து நூற்புணர்ப்பு முறையின் பெற்றியினை ஆங்கிலப்பேராசிரியரான, டாக்டர். சாமுவேல் ஜான்சன் (Dr. Samuel Johnson) என்பார், "To bring a lover, a lady and rival into the fable; to entangle them in contradictory obligation, perplex them with oppositions of interest and harass them with violence of desires inconsistent with each other; to make them meet in rapture and part in agony; to fill their mouths with hyperbolical joy and outrageous sorrow; to distress them as nothing human ever was delivered; is the business of a modern dramatist," * என மிக நுண்ணிதாக ஆராய்ந்து தெளிய உரைத்திருத்தலைக் காண்க. (தொடரும்)

* Dr. Johnson's Preface to Shakespeare.

திருவாய்மொழி

திருவாளர். R. புருஷோத்தம நாயுடு அவர்கள்,
தமிழ் வித்துவான் அரசர் கல்லூரி, திருவையாறு.

"சித்தர்க்கும் வேதச்சிரந் தெரிந்தோர்கட்கும் செய்தவர்க்கும்
சுத்தர்க்கு மற்றைத்துறை துறந்தோர்கட்குந் தொண்டுசெய்யும்
பத்தர்க்கும் ஞானப் பகவர்க்குமேயன்றிப் பண்டுசென்ற
முத்தர்க்கு மின்னமுதம் சடகோபன் மொழித்தொகையே"

என்பது ஆன்றோர் அருமைத் திருவாக்கு.

திருவாய்மொழியென்பது, சேமங்குருகையோ செய்ய திருப்பாற் கடலோ, நாமம்பராங்குசமோ நாரணமோ, தாமம் துளவோ வகுளமோ, தோளிரண்டோ நான்கோ என்றறுதியிடமுடியாத பெருமையையுடைய காரிமாறப்பிரானால் அருளிச் செய்யப்பட்ட திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கில் நான்காவதாகும்; இது, எழுத்தும் அசையும் சீரும் முடிவு முதலாகத் தொடுக்கப்பட்டு மண்டலவந்தாதியாக அமைந்த ஆயிரம் பாசுரங்களையுடையதாகும். திருவாய்மொழி யென்பதில், திரு அடைமொழி; வாய்மொழி என்பது வேதம்; "மாயாவாய் மொழி வலந்தர வலந்து" என்பது பரிபாடல். இதனை, ஆகுபெயர் எனவும் அன்மொழித்தொகை எனவும் கூறுப. இனி, திரு என்பது, கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கம்; கண்டாரால் விரும்பப்படுந்தன்மை ஒரு பொருளுக்கு இருக்க வேண்டுமாயின், அது ஒப்புயர்வற்ற பற்பல சிறப்புக்களோடு கூடியிருத்தல் வேண்டும் என்பது ஒருதலை. அங்ஙனமாயின், இது, திரு என்ற சொல்லால் புணர்க்கப் பட்டிருத்தலின், இதனுடைய ஒப்புயர்வற்ற சிறப்புக்கள் தாம் எவையெனின்; அவை, சிறியேனால் அளவிட்டுரைத்தல் அரியவாம், ஆயினும், யான் பெரியோர்கள் மூலம் அறிந்த சிலவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன். அவையாவன :—

1. இறைவனாலே மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாருடைய அருமைத் திருவாக்கினின்றும் அவதரித்தல்.

2. ஒருகாலோதினும் கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள் தொடுமணற்கேணியிற் சுரந்து நீர்பாய மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்துவித்து அன்பராக்குதல்.

3. தன்னை ஓதினார்க்கு உள்ளிருள் நீக்கி ஞானச்சுடர் கொளீஇ இறைவனது இணைத்தாமரை யடியிற் சேர்த்தல்.

4. உண்மைப் பொருளை ஐயந்திரிபற உணர்த்திச் சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகோடும் கூடியிருத்தல்.

5. பிரம சூத்திரமும் திருவாய்மொழி முதலிரண்டு பத்தும் ஏகார்த்தப் பிரதிபாதகம் என்று சப்தங்களைக் கொண்டே ஐக்ய கண்டப் படுத்தியிருத்தல்.

6. சூரியமண்டலத்தில் வீற்றிருக்கின்ற இறைவனுடைய திருப்பெயரில் அமைந்துள்ள இரண்டெழுத்துக்கள் (அதாவது உத்) இதன் ஆதியிலும் அந்தத்திலும் அமைந்திருத்தல்.

7. ஆரிய வேதங்களைக் கற்பார்க்கு வரும் ஐயங்களை அகற்றித் தெளிவுபடுத்தல்.

8. இறைவன் திருவீதிகளில் எழுந்தருளுங் காலத்து, இறைவனுக்குப் பின்னர் ஆரியவேதமும், முன்னர் இத்தமிழ் மறையும் ஓதப்படுதல்.

9. ஆரிய வேதத்தினும் இது பற்பல பெருமைகளை யுடைத்தா யிருத்தல்.

10. சத்தியமாய் நித்தியமாய் நிர்த்தோஷமாய் இருத்தல். இன்னோரன்ன பிறவுமாம்.

இவை ஒவ்வொன்றையும் கீழ்வரும் எடுத்துக் காட்டுக்களைக் கொண்டு தெளிக.

1 " இப்படி, பகவத்ஸ்வ ரூப ரூப குணவிபூதிகளை விசத விசததர விசததமாக அநுபவித்து அது உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்பிரபந்தங்கள்"

" ஸேஸ்வர விபூதியோக்கியமான பாலோடமுதன்ன மென்மொழிமுகம் செய்தது, நீர் பால் நெய் அமுதாய் நிரம்பின ஏரி நெளிக்குமாபோலே, பரபக்தியாதிமய ஞான அம்ருதாப்தி நிமிக்கிறவாய் கரைமிடைந்து மொழிபட்டு அவாவில் அந்தாதி யென்று பேர் பெற்றது "

(ஆசார்யஹ்ருதயம்)

2 " உயிர்த்தாரை யிற்புக்குறு குறும்பாமொரு மூன்றனையும் செயிர்த்தார்க்கு ருகைவந்தார் திருவாய்மொழி செப்ப [ஆற்றல் மயிர்த்தாரைகள் பொடிக்கும் கண்கணீர் மல்கும்" (கம்பர்)

"தென்குருகூர்ச் சடகோபன் சொல்லாயிரத்துள் இவை,
ஒன்பதோடொன்றுக்கு மூவுலகு முருகுமே."
(திருவாய்மொழி. 9-5-11)

3 "ஒலிபுகழாயிரத்திப் பத்து உள்ளத்தை மாசறுக்குமே."
(திருவாய்மொழி 5-3-11)

ஆதித்ய ராமதிவாகர அச்சுதபானுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி வற்றாத பிறவிக் கடல்வற்றி விகஸியாத போதிற் கமலம் மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்
[திலே" (ஆசார்யஹ்ருதயம்)

"சடரிரண்டே பண்டு மூன்றாயின தகடர்ந்துலகத்
திடரிரண்டாய் வருப்பேரிருள் சீப்பன வெம்பிறப்பை
அடரிரண்டாமலர்த் தாளுடையான் குருகைக் கரசன்
படரிருங்கீர்த்திப்பிரான் திருவாய்மொழிப் பாவொடுமே"
(கம்பர்)

"வண்குருகூர் வண்சடகோபன் சொன்ன ஆயிரத்துளிப் பத்தும், வானின் மீதேதற்றி அருள்செய்து முடிக்கும் பிறவி மாமாயக் கூத்தினையே" (திருவாய். 8. 5-11.)

4 "சாதிக்குமே பரதத்துவத்தைச் சமயத் திருக்கைச்
சேதிக்குமே யொன்று சிந்திக்குமே யதனைத்தெரியப்
போதிக்குமே யெங்குமோங்கிப் பொதுநிற்கு மெய்யைப்
பொய்யைச்
சோதிக்குமே யுங்கள் வேதமெங்கோன் தமிழ்ச் சொல்
[லெனவே"

"சொல்லென் கெனோ முழுவேதச் சுருக்கென்கெனோ"

5 "பாஷ்யகாரரிது கொண்டு சூத்ரவாக்யங்களை ஒருங்க விடுவர், அதுக்கு மூலம் "விதயஸ்ச" என்கிறபரமாசார்ய வாக்கியம்" [ஆசார்யஹ்ருதயம்]

6 திருவாய்மொழியின் முதற்பாசுரத்தின் முதலில் "உயர்வு" என்று தொடங்கி, ஈற்றில் "உயர்ந்து" என்று முடித்திருப்பதைக் காண்க. ஈண்டு, உயர்ந்து என்பது குற்று கரமாமாகையால் "குற்றியலுகரமு மற்றெனமொழிப" என்ற தொல்காப்பியத்தின் விதிப்படி, ஈற்றில் புள்ளி
[இடுக.

7 "பொய்கைமுனி பூதத்தார் பேயாழ்வார் தண்பொருநை வருங்குருகேசன் விண்டுசித்தன், தொய்யகுல சேகரனம் பாணநாதன் தொண்டரடிப் பொடிமழிசை வந்தசோதி, வையமெலாமறை விளங்க வாள்வேலேந்து மங்கையர் கோனென்றிவர்கள் மகிழ்ந்து பாடும், செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய வோதித்தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" (வேதாந்த தேசிகர்)

"மாமறையுள், அயிர்த்தார் அயிர்த்த பொருள் வெளியா மெங்களந் தணர்க்கே"

"தோன்றுவுபநிடதப்பொருள் தோன்றலுற்றார் தமக்கும், சான்றுமிவையென்ற போது மற்றென்" (கம்பர்)

ஸ்வாமி எம்பெருமானார், வேதாந்த சூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்தருளுங் காலத்து, "ஆத்மாவுக்கு சேஷத்வ விதரமான வாக்யம் பிரதிபாதித்து அருளிச்செய்ய, ஆழ்வான் திருவெழுத்துச் சாத்தாதிருக்க பின்னர் திருவாய்மொழியால் ஐயம் தீர்ந்ததை இங்கு நினைவிடுக.

8 "வேதத்தின் முன்செல்க மெய்யுணர்ந்தோர் விரிஞ்சன் முதலோர், கோதற்ற ஞானக்கொழுந்தின் முன்செல்க குணங்கடந்த, போதக் கடலெங்கள் தென்குருகூர்ப் புனிதன் கவியோர், பாதத்தின் முன் செல்லுமேதொல்லை மூலப் பரஞ்சுடரே" (கம்பர்)

9 "மண்குடம் போலன்றே பொற்குடம், பேச்சுப் பார்க்கில் கள்ளப் பொய்ந்நூல்களும் கிராவ்யங்கள், பிறவிபார்க்கில் ஐஞ்சாமோத்தும் ஆறு மூன்றுங்கழிப்பனும், கிருஷ்ண கிருஷ்ணத்வைபாயந உத்பத்திகள் போலன்றே கிருஷ்ண திருஷ்ணாதல்வஜன்மம்" (ஆசார்யஹ்ருதயம்)

"ஆழ்வாராயவதரித்த உன்முகமாய்த் திருவாய்மொழி வெளிப்பட்டதனாலன்றோ வேதங்களினும் முதலில் எண்ணத்தக்கதாயிற்று" (பாதுகாசகஸ்ரம் சமாக்யாபத்தி 26 ஸ்லோகம் மொழிபெயர்ப்பு)

10 "ஆணை ஆயிரம்" "பொய்யில்பாடல்" என்றும், "முந்தை ஆயிரம்" "அழிவில்லாவாயிரம்" என்றும், "ஏதமில் ஆயிரம்" என்றும் இத்திருவாய் மொழியிலே வந்திருப்பனவற்றையும் "ஆகஸ்தியமும் அநாதி" என ஆசார்யஹ்ருதயம் கூறுவதையும் நோக்குக.

ஆயின், ஆழ்வார் மூலம் அவதரித்ததென்னுமிது, நித்யமா மாறுயாங்ஙனமெனின், முன்னந்திசை முகனைத்தான் படைக்க மற்றவனும் முன்படைத்தான்மறை" என்ற தமிழ்க் கூற்றின் படி நித்தியமான வேதத்தை நான்முகன் படைத்தான் என்பது போல, இதனையும் ஆழ்வார் அருளிச்செய்தார் என்று மித்தனை. அன்றியும், ஆதியில், வேதத்தின் சப்த சந்தர்ப்பங்களை பகவத் கடாக்ஷத்தாலே முற்றுமுணர்ந்து கூறியமை கொண்டு நான் முகனுக்குக் கர்த்ருத்வம் கூறியதுபோல, இங்கும், பகவந்நிர் ஹேதுக்கடாக்ஷத்தாலே தமிழ் வேதத்தின் ஆநுபூர்வியைக் கடாக்ஷித்து ஆழ்வார்கள் அருளிச்செய்தவைகள் ஆகையாலே, ஆழ்வார்கள் அருளிச்செய்தார்கள் என்பதனாலே குற்றமின் றென்றென்க. மேலும், வேதசாகைகள் முதலில் அத்யயநம் செய்தவர்கள் பேராலே ஆதர்வணம், தைத்திரீயம், காண்வம் என்று வழங்கப்பட்டு அதர்வணர், தைத்திரீயர், கண்வர் என் பவர்கட்குக் கர்த்ருத்வம் உண்டாயிருப்பது போல, இங்கும், "சடகோபன் சொன்ன சொல்" "நாட்கமழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன் வேட்கையால் சொன்ன பாடல்" என்றும் "கலிகன்றி சொன்ன தமிழ்" "விட்டுசித்தன் விரித்தன" என்னும் வருபவைகளாலே தமிழ் மறையும் ஆழ்வார்கள் அருளிச்செயல்களாயிருக்குமென்றறிந்து கொள்க.

இனி, இத்திருவாய்மொழி ஆயிரம் திருப்பாட்டுக்களையும் "நூறே சொன்ன வோராயிரம்" (9-4. 11) "பத்து நூற்றுள் இப்பத்து" (6. 7-11) என்று, இவர் தாமே நூறு நூறு ஆகச் சொன்ன ஆயிரம் என்றும், பத்துநூறு என்றும் பிரித்து அருளிச்செய்வதனாலே பத்துப் பிரிவாகப் பகுத்துப் பகர்ந்தமை விளங்கும். எங்ஙனமெனில், பத்தாம்பத்தில், இரண்டாம் பதிகமாகிய, "கெடுமிடராயவெல்லாம் கேசவா என்ன" என்னு முதலையுடைய பத்துப் பாசுரங்களில், முதலைந்திற்கும் ஒரு கருத்தும் பின்னைந்திற்கும் ஒரு கருத்துமாக அமைந்திருப்ப தனால், "ஐந்தினோடைந்தும் வல்லார் அணைவர்போய் அமருலகில்" என்றுபிரித்தும், ஒன்பதாம்பத்தில், ஐந்தாம்பதிகமாகிய

"இன்னுயிர்ச் சேவலும் நீரும்" என்னும் முதலையுடைய பத்துத் திருப்பாட்டுக்களில் முதல் ஒன்பதும் ஒரு கருத்தும், பின்னொன்றும் ஒரு கருத்துமாக அமைந்திருப்பதனால் "ஆயிரத்துளிவை, ஒன்பதோடொன்றுச்கும் மூவுலகு முருகுமே எனப் பிரித்தும், பத்துப் பாசுரங்கட்கும் ஒரே கருத்தாக இருப்பின், "ஆயிரத்தின் இவைபத்தும்" (6. 6. 11) எனச் சேர்த்தும் செப்புதல் காண்க. ஆதலால், இங்ஙனம் பத்துப் பிரிவாகப் பிரித்துப் பகர்ந்தமைக்கும் ஆழ்வார் திருவுள்ளக் கருத்தொன்றிருக்க வேண்டுமென்பது தேற்றமேயன்றோ? அவ்வாறாயின், அத்திருவுள்ளக் கருத்துதான் யாதெனின், கூறுவன். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளான இறைவனது மன்பெருஞ் சிறப்பின் தாவாத விழுமிய பொருள்சேர் புகழ்களைப் பற்றிப் பேசப் புக்கது; இத்தமிழ்மறை என்பது தெளிவு. வாச்யத்திற்குள்ள குணங்கள் வாசகத்திற்கும் வேண்டாவோ? வேண்டுமன்றோ? ஆதலால், பத்துப் பிரிவாகப்பிரிந்து அவதரித்ததென்க. எங்ஙனமெனின்?

"உயிரளிப்பான், எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா" என்றும், "பல பிறப்பா, யொளிவரும் முழுநலம் முதலிய கேடிலவீடாம், தெளிதரும் நிலைமையதொழிவிலன் முழுவது மிறையோன்" என்றும், "புலப்படப் பின்னும் தன்னுலகத் திலகத்தனன் தானே" என்றும் "பிறவாப் பிறப்பிலை பிறப்பித் தோரிலையே" என்றும், "நல்லார் கடம்மை நலம் புரிந்து காத்தற்கும், பொல்லாரைப் பொன்று நெறி போக்கற்கும்—எல்லாம், முந்தையற நாட்டமுய்த்தற்கும் நான் பிறப்பன்" என்றும் தமிழ்மறையும், பிறசான்றோரும் அவன் தானும் அருளியவாறு, இவ்வுலகத்தில் பத்துப் பிறவிப்பிறந்து, அறச்செவி திறந்து மறச்செவியடைத்துப் பிறவிப்பிணி மருத்துவனாகி இருந்தறமுரைத்தும், மன்பதைகளை எல்லாவுலகிற்கு மேலாய வீட்டுலகின்கண் அடைவித்தும் அடிமைகொள் அறவாழி யந்தணனைப்போல, பாலைய் தமிழரிசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்பாலே பட்ட மாறன் பணித்த இத்தமிழ் மறையும், "நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த,

எண்ணாதனகளெண்ணும் நன்முனிவரின் பந்தலை சிறப்பப் பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடி, தென்னாவென்னு மென்னம்மான் திருமாலிருஞ் சோலையானே" என்றவாறேயாய் அவதரித்து, (ஈண்டு அசுரர் அமரர் ஆவார் மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தாரும் சேராதாரும்) "ஒலி புகழாயிரத்திப் பத்துள்ளத்தை மாசறுக்கும்" "தெருள் கொள்ளச் சொன்ன ஓராயிரம்" "தூய ஆயிரத்திப் பத்தால் பத்தர் ஆவர்," "உரிய தொண்டராக்கு முலக முண்டார்க்கே" "உடைந்து நோய்களை ஓடுவிக்கும்" "வானின் மீதேற்றி யருள் செய்து" "அருளியடிக் கீழிருத்தும்" "எங்ஙனே சொல்லினு மின்பம் பயக்கும்" இன்னோரன்ன தமிழ்மறையின்படி தன்னை யோதினார்களுக்கு, உள்ளத்துள்ள அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைக்கொடுத்து எண் குணத்தான்றாளிற்கு அடிமையாக் கிப் பிறவிப் பிணியைப் போக்கித் தாமரைக் கண்ணனுலகாகிய நிரதிசய பேரின்ப வீட்டுலகிற் செலுத்தி அடிக் கீழிருத்தி அடிமைபுகுத்தி இன்பத்தைப் பயத்தலால் என்க.

"சாம்யத்தாலே வாச்யன் பத்தனாய தோற்றம் போலே தோற்றங்களாயிரத்தின் பத்துப் பத்தான இதின் ஆவிர்ப் பாவம்" என்றஆன்றோர் அருமைத் திருவாக்கின் ஆழ்பொருளை ஆய்க.

(தொடரும்.)

தமிழ்ச் செய்திகள்

சென்னை மாகாண மூன்றுவது தமிழர் மாநாடு 26-12-37-ஆம் தேதியில் திருச்சிராப்பள்ளியில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தமிழ்ப் பேராசிரியர் திருவாளர் S. சோமசுந்தர பாரதியார் (M. A. B. L) அவர்களின் சீரிய தலைமையில் சிறப்புற நடந்தது. தாகூர் சட்டவிரிவுரையாளர் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை (M. A. M. L.) அவர்கள் பொருள் செறிந்த விரிவுரைகூறி மாநாட்டைத் திறந்தனர். செந்தமிழ்ப் புரவலர், இராவ்சாகேப். திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை (B.A.B.L.) அவர்கள் வரவேற்கும் முறையில் முன்னுரை கூறினர்.

தமிழ் நாட்டின் பல பகுதிகளினின்றும் வந்திருந்த தலைவர்கள் திரு. பாரதியார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டுகளைப் பாராட்டி தலைமையிருக்கச் செய்தனர். தலைவரவர்கள் பேருரை நிகழ்த்திய பின்னர், கீழ்க்கண்ட முடிபுகள் நிறைவேறின.

1. தமிழ் மக்களின் நாகரிகத்தையும், நலத்தையும் பேணி வளர்த்தற்கென 'தமிழர் சங்கம்' எனும் பேரவை ஒன்று நிறுவ வேண்டும். சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்காக ஒரு தலைவர், ஒரு அமைச்சர் அடங்கிய நிறைவேற்றுக் கழகம் அமைக்கப்பெறும்; மாநாட்டின் தலைவரே நிறைவேற்றுக் கழகம், தொழிற்கழகம், தமிழர் சங்கப் பேரவை இவற்றின் தலைவராவர்' நிறைவேற்றுக் கழக உறுப்பினரில் ஒருவரை அமைச்சராகத் தலைவர் தேர்ந்துகொள்ள வேண்டியது.

2. தமிழ்நாட்டின் எல்லைக்குட்பட்ட பள்ளிக்கூடங்களில் இந்திமொழிப் படிப்பைக் கட்டாய பாடமாக்குவதால், தமிழர் நாகரிகமும், தமிழ்மொழி வளர்ச்சியும், தமிழ்மக்களின் கல்வி முன்னேற்றமும் கேடுறுமெனத் தீர்மானித்து அதனை வன்மையுடன் கண்டிக்கிறது.

3. தமிழ்மொழி வழங்கும் நாடுகளனைத்தையும் ஒருங்கு சேர்த்து தமிழ்மாகாணம் அமைத்தற்கு ஆவன வெல்லாம் விரைவில் செய்துமுடிக்குமாறு உரிய அதிகாரிகளைத் தூண்டுகிறது.

4. தமிழ்மொழியையும் தமிழ்க் கலைகளையும் பல்கலைக் கழகங்கள் வளர்க்கவேண்டிய கடமையை மறந்து, புரியக்கூடிய

உதவிகளை உலோபஞ்செய்வதால் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது.

5. வார்தா கல்வித்திட்டமானது நடைமுறைக்கு உதவ மாட்டாதும், நாட்டின் கல்விவளர்ச்சியைக் கேடுறச் செய்வதும் ஆக உள்ளதெனக் கருதுகிறது.

6. உழவர்களின் கடன் பளுவைக் குறைப்பதற்கான வழிதுறைகளை உடனே தேடவேண்டியது அவசியமெனினும் இப்போது வெளிவந்திருக்கும் விவசாயக் கடன் விடுதலைச் சட்டத்தின் தத்துவங்கள் ஞாயவிரோதமானவை என்றும், கருதும் நலங்களைப் பயக்கமாட்டாததென்றும் தீர்மானிக்கிறது.

7. நிலவரியும், சமீன்களின் மேல்வாரமும் குடிகளை நசுக்கக் கூடிய சுமையாயிருக்கின்றனவென்றும், நிரந்தரமான நன்மை கருதி அவற்றின் பெரும்பகுதியை உடனே குறைக்க வேண்டுவது அவசியமென்றும், குடிகளின் செயலுக்குத் தக்கவாறு தரவாரியாகக் குறைக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

8. ஆட்சிப் பகுதியையும் நீதிப்பகுதியையும் வேறுபிரிக்க வேண்டுமெனும் மக்களின் கோரிக்கைப்படி அரசியலார் உடனே அவற்றைப் பிரிக்க வேண்டுமென முடிவு செய்கிறது.

9. முதலாளிகள், தொழிலாளிகளின் ஊதியத்தை உடனே உயர்த்தி தொழிலாளிகள் வளம்பெற வாழ்தற்கான வசதி அளிக்க வேண்டுமெனவும், இப்பொருளாதாரத் திருத்தத்தை அரசியலார் உடனே செய்து முடிக்க வேண்டுமெனவும் திர்மானிக்கிறது.

10. தமிழர் சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதற்கு ஒரு தமிழ் தினத்தாள் தொடங்குவதெனத் தீர்மானிக்கிறது.

11. பாடசாலைகளில் இந்திமொழிப் படிப்பை கட்டாயப் படுத்தச் செய்திருக்கும் முடிவினால் தமிழ்மொழிக்கும் தமிழர் நாகரிகத்திற்கும் கேடு விளைக்குமாதலாலும், மக்களின் கல்வி முன்னேற்றத்தைத் தடைசெய்யுமாதலாலும், அதனைத் தடுக்க வேண்டுமெனுஞ் செய்தியையும், மந்திரிமார் இம்முடிபு செய்தது மக்களாட்சி முறைக்கு முரண்பட்டதாகவும் கொடுங்கோன்மையாகவும் இருக்கும் விவரங்களையும் மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்களைப் பேட்டிகாணப் பன்னிருவர் அடங்கிய ஒரு கழகம் அமைக்கப்பெற்றது.

இந்நிகழ்ச்சிகளுடன் மாநாடு இனிதுமுடிந்தது. தமிழ் சில்லாக்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதிகள் திரள்திரளாக வந்து குழுமி இருந்தனர். மாநாடு நடந்த மன்றத்தில் 3000 பேர்களும், வெளியிடத்தில் 2000 பேர்களும் ஆர்வத்துடன் இருந்தனர். மணிக்கூண்டிலிருந்து அன்று காலையில் தலைவர் களை மாநாட்டிற்கு ஊர்வலமாய் அழைத்து வந்தது கண் கொள்ளாக் காட்சியாயிருந்தது. திருச்சிராப்பள்ளி திருவாளர் K. A. P. விசுவநாதம் அவர்களின் ஊக்கமும் முயற்சியும் மாநாட்டின் சிறப்பிற்குக் காரணமாயிருந்தன. அவர்களும் அவர்களின் துணைவர்களும் புரிந்த அருந்தொண்டை நன்றியுடன் போற்றுகின்றோம்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்:—

1938 சனவரி 1-தேதி யன்று புத்தாண்டைச் சிறப்பித் தற் பொருட்டு நமது சங்கத்தின்பால் பேரன்பு வைத்து ஆயுள் உறுப்பினராயமர்ந்து தமிழ்ப் பணி புரிந்துவரும் உயர் திருவாளர் இராவ்பகதூர் A. T. பன்னீர்செல்வம் Bar-at-Law அவர்களின் சிறந்த பொதுநலத் தொண்டுகளைக் கருதி மாட்சி மிக்க அரசர்பிரான் ஜார்ஜ் VI அவர்கள் Sir எனும் பட்டத்தை அளித்தனர். தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும், தமிழ் மொழிவளர்ச்சிக்கும் பொது நல மேம்பாட்டிற்கும் இப்பெரியார் புரிந்த தொண்டுகள் மிகப்பல. நகராண்மைக் கழகத்தலைவ ராகவும் நாட்டாண்மைக் கழகத்தலைவராகவும், கல்விக் கழகங் களின் தலைவராகவும் சென்னை அரசியலாரின் மந்திரிசபையின ராகவும் ‘ஓம்மெம்பராகவும்’ இருந்து கடமைகளைச் சீர்பெற நடத்தியதன்றி தமிழ் மக்களின் தகுதியறிந்து அவ்வவர்க்கேற்ற பதவிகள் அளித்து அவர்களை ஊக்கிவந்தனர். திருவையாறு, உரத்தநாடு, ராஜாமடம் என்ற ஊர்களில் நாட்டாண்மைக் கழகத்தினர் நடத்திவரும் கல்லூரிகளில் தமிழ் மாணவர்களும் இடம்பெறச் செய்து அவர்கள் மிகுதொகையினராய் உணவு, உறையுள், இலவசக் கல்வி முதலியன பெற்று நன்னிலை எய்தும் பொருட்டுப் பல்லாற்றானும் உதவிவந்தனர். திருவையாற்று அரசர் கல்லூரியில் மங்கிக்கிடந்த தமிழ்ப்பிரிவை வளம் பெறச் செய்தனர்; புலமைமிக்க தமிழாசிரியர்களைத்தேடி நியமித்தனர். ஒரு வகுப்பினர்க்கே உரியதுபோல் பாதுகாக்கப்பட்டுவந்த இக் கல்லூரியில் சாதி சமயவேற்றுமைகள் இன்றி எல்லோரும் பயில வழிதிறந்தனர். சில்லாவிலுள்ள உயர்தரப் பள்ளிகளில்

தமிழ்ப் புலமையுள்ள தமிழர்களையே தமிழாசிரியர்களாக நியமித்துவந்தனர். இன்னவாறெல்லாம் இடையறாது, இணையற்ற தமிழ்த்தொண்டு புரிந்துவரும் தலைவரின் மாட்சிக்கு இப்பட்டம் மிக மிகப் பொருத்தமானது. மன்னர்பிரான் தலைவரின் தகுதி அறிந்து இத்தகைய சிறப்பை அளித்ததுபற்றி தமிழ் கூறும் நல்லுலகம் அளப்பருங்களி சிறந்திருக்கின்றது.

2. விரிவுரைக்கூட்டம்:— 3—1—38வ யன்று "ஆழ்வாரும், திருவாய் மொழியும்" என்ற பொருள்பற்றி திருமாலடியார் திருப் பெருமன்றத் தலைவர், வேலூர் திரு. வே. ஆழ்வார் இராமாநுச நாயகி அம்மையார் அவர்கள் சிறந்த விரிவுரை ஆற்றினர். வைணவ நூல்வெள்ளத்தை நுணுகி ஆய்ந்து அவற்றின் சிறந்த கருத்துகள் யாவும் உளத்தே அமைந்து, ஊற்றெடுத்து, பெருவெள்ளமாய்ப் பெருகி சொற்சுவை பொருட்சுவை, செறிந்த அம்மையார் அவர்களின் பேருரை கேட்டார்ப் பிணிக்குந் தகையதாய்த் திகழ்ந்தது.

3. வெள்ளி விழா:— 1938 ஏப்ரல் 15, 16, 17வ களில் திருப்பாதிரிப்புலியூர், திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய தேசிகசுவாமி அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறுதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. அதுபோது "கரந்தைத் தமிழ்க் கல்லூரி" எனும் பல்கலைக் கழகம் தொடங்க எண்ணியிருக்கின்றனர். வித்துவான் தேர்விற்குரிய பாடங்களைப் பயிற்றுவதோடு மாணவர்களின் தகுதிக்கேற்றபடி கவின்கலை, தொழிற்கலைகளில் ஒன்றேனும் கற்பிக்கப்பெறும். ஏறத்தாழ பள்ளியிறுதி வகுப்புவரை கல்வி பயின்ற மாணவர்கள் கல்லூரியில் சேரும் தகுதியுடையவர்கள். இத்தகைய கல்லூரியின் இன்றியமையாமை, அமைப்பு முதலிய செய்திகளைக் கீழே விவரித்திருக்கிறது. மாணவர்க்கு உணவு, உறையுள், கல்வி முதலியவற்றைத் தந்து சிறந்த முறையில் கல்லூரியை நடத்த ரூ. 5000 ஆகிலும் ஆண்டுதோறும் வேண்டியிருக்கும். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தத்தமாலியன்றபடி பொருளுதவி செய்து சங்கத்தை ஊக்குதல் கடன். இந்த ஆண்டில் 30 மாணவர்கள்வரை சேர்த்துக் கல்லூரி தொடங்கப்பெறும். சேர விரும்பும் மாணவர்கள் தங்கள் தகுதிகளையும், வயது, இருப்பிடம் முதலிய விவரங்களைக் குறித்து 1938 மார்ச்சு 31வ க்குள் விண்ணப்பம் அனுப்பவேண்டும்.

மதிப்புரை

"பாரதிதாசன் கவிதைகள்" எனும் பெயரிய செய்யுள் நூலை வெளியிட்ட திரு. T. S. குஞ்சம் B. A. L. T. அவர்கள் எமது பார்வைக்கு அனுப்பியதை நன்றியுடன் பாராட்டுகின்றேன். புதுவதான கொள்கைகளை இசையுடன் பயிலவும், பொருளை எளிதே உணரவும், இயற்றிய செய்யுள் நூல் காவியம், இயற்கை, காதல், தமிழ், பெண்ணுலகு, புதிய உலகம், பன்மணித்திரள், என்ற எழுபகுதிகள் கொண்டது. இதன் விலை அணா 8.

வாகீச விஜயம்:— திரு. சுத்தானந்த பாரதியார் இயற்றிய நாடக நூல். அப்பர் சுவாமிகளின் திருநெறித் தொண்டின் திறனைத் தமிழ்மக்கள் அனைவரும் கண் கூடாகக் கண்டு தெருட்சியடையுங் கருத்துடன் எழுதியநூல்.

தமிழ் நாட்டின் நாடக அரங்குகள் சீர்குலைந்திருக்கும் இற்றைநாளில் தூய எண்ணங்களையும் உயரிய நோக்கங்களையும் விளக்கும் நூல்கள் மிகவும் வேண்டப்படுவன. இதனைப்போற்றி தமிழ்மக்கள் நலம் பெறுவாராக. கோலாலம்பூர் தபாற்பெட்டி 14-ல் உள்ள மாசி என்பார் பதிப்பாளர். விலை 50 சதம்.

இராமலிங்க விஜயம்:— இதுவும் திரு. சுத்தானந்தபாரதிகள் இயற்றியது. சுத்தசன்மார்க்க நெறியின் தன்மைகள், திருவருட்பா விளக்கம், இராமலிங்க அடிகளின் வரலாறு உபதேசம் ஆகிய பொருள்களை விளக்கி, செவ்விய தமிழில் எழுதியநூல். தமிழன்பர்கள் போற்றுதற்குரியது. சிங்கப்பூர் அன்பு நிலையத்தினர் இந்தகைய நூல்களை வெளியிட்டு வருவது சாலவும் சிறந்த தமிழ்ப்பணி. விலை அணா 10.

மருத்துவசாலைக்குதவிய நன்கொடை.

திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்		50	0	0
,, வ. க. தியாகராச பிள்ளை	,,	100	0	0
,, G. இலக்குமண பிள்ளை	,,	1	0	0
,, இராமசாமி ஐயர்	,,	0	8	0

கரந்தைத் தமிழ்க் கல்லூரி

கரந்தைத் தமிழ்ச் சங்க ஆதரவில் தோடங்கப்பெறுவது

இக்காலக் கல்வியின் பொதுநிலை

மக்களுக்குக் கல்வி இன்றியமையாதது என்ற கொள்கையில் அறிஞர் பலரும் ஒத்த எண்ணமுடையவர்களாக விருப்பினும், இக்காலத்து நம் நாட்டில் பரவியுள்ள கல்விமுறையில் வேறுபட்ட கருத்துடையவர்களாக விருக்கின்றனர். இக்கல்விமுறை ஒரு நூற்றாண்டுக்கு முன்பு அக்காலத்திய நிலைக்கு வேண்டிய நோக்கத்துடன் ஆங்கில அரசாங்கத்தினரால் ஏற்படுத்தப்பட்டதாகும். இது, தான் கொண்ட நோக்கத்தை எய்தியதோடமையாது, அறிவு வளர்ச்சிக்குப் பலவகையாலும் பயன்பட்டு, மக்கள் வாழ்க்கையில் ஒரு புதிய கிளர்ச்சியை உண்டுபண்ணியதெனினும், நம் நாட்டில் பண்டுதொட்டு நிலவிவந்த கல்வி முறையை அறவே ஒழித்துவிட்டது. பின்னும், இக்கல்விமுறை மேல்நாட்டுக் கலைமுறையையே பின்பற்றியதாலும், அரசாங்க அலுவல்களை எதிர்பார்த்தே பெரிதும் கற்கப்படுவதாலும், நம் நாட்டு நாகரீகத்தின் தனிப்பண்புகள் வளர்வதற்கும், கல்வியின் பயன் எல்லா மக்களிடத்தும் பரவுதற்கும் ஏற்றதுணைபுரிய இயலாதாயிற்று.

தமிழ்க் கல்வி

இந்நிலையில், நாட்டுப் பற்றுள்ள நன்மக்கள் சிலரால் தனித்தமிழ்க் கல்லூரி வாயிலாகவும், பல்கலைக் கழகங்கள் வாயிலாகவும் தமிழ்ப் பயிற்சிக்கென சிறிது வழி வகுக்கப்பட்டது. இவ்வழியால் எய்தும் பயன் இளைஞர் உள்ளத்தைக் கவர்தற் கேற்ற வளம் அமையப் பெறாததால் செல்வோர் மிகச் சிலராயினர். புதுவதாக வகுக்கப்பெற்ற தமிழ்க் கல்வி முறையும், இலக்கியப் பயிற்சி ஒன்றோடு நின்று, வேறு அறிவுத் துறைகளிலும், தொழிற் றுறைகளிலும் மாணவர்களைப் பயிற்ற மேற்கொள்ளாமையின், பயின்றோர் பலரும் பள்ளிக்கூடத் தமிழாசிரியராகவே அமர்ந்து காலங் கழிக்க வேண்டியவராயினர். இக்காலத்து, தமிழாசிரியர்களுக்குள்ள பொருள்வருவாயும், நாட்டின் நன்குமதிப்பும் அனைவரும் நன்குணர்ந்ததேயாகும். 'தமிழைப் பயின்றோமே' என மனமழுங்குவாரும் உளர். ஆங்கில முறையிற் பயின்றோர் பலரும், தமிழின் உயர்வு காணக் கிடைக்காமையின், மொழியிடத்து விருப்பில்லாததோடு ஒருவகையான வெறுப்புமுடையவராயிருப்பாராயினர். எனவே, உண்மைத் தமிழன்பும், பயிற்சியும் ஏதோ சிலசில இடங்களிற்றான் அருமையாகக் காணப்படுவதாகின்றது.

கற்றோர் நிலை

அரசாங்கப் பணியையும், ஆசிரியர் வேலையையும் நோக்கமாக வைத்துக் கற்ற ஆங்கிலக் கல்வியும், தமிழ்ப் பயிற்சியும், அவை கிடைக்கப் பெறாத காலத்துப் பெரிதும் முறுமுறுத்துக் 'கல்லாதார் அல்லலினும் கற்றோர் அல்லலே பெரிதாயிற்று' என்று கூறக்கூடிய நிலைக்கு வந்துவிட்டன. இவ்வல்லலுக்குக் காரணம், கல்வியின் இலக்கும், கற்ற முறையும், நாட்டு நிலைமைக்கும் காலநிலைமைக்கும் ஒவ்வா திருப்பதே என்பதை நம்மவர் இப்போது நன்குணர்ந்து வருகின்றனர். ஆங்கில முறையிற் கற்றோர், தமிழ்ப் பண்பு, நாகரீகம், உள்ளப்போக்கு முதலியவற்றையெல்லாம் உண்மையாக உணரமாட்டாது, தம்மோடு ஒரு நாட்டிலேயே பிறந்து உடனுறையும் மக்களிடையே வேற்றுநாட்டார்போல், நலம், தீங்கு ஒன்றிலும் ஈடுபடாது வாழ்ந்துவருகின்றனர். தமிழ்ப் பயிற்சி யொன்றையே மேற்கொண்டோர் காலப் போக்குக்கேற்ற பிற பயிற்சி பெறாமையின் 'கற்றோன்றி மண்தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்தகுடி' மக்களாக இன்றும் விளங்குகின்றனர்.

கல்வியின் கூட்டுறவும் நாகரீக வெள்ளமும்.

பெரிய நாகரீகங்களும், இலக்கியங்களும் ஒன்றோடொன்று நெருங்க நேருங் காலத்தில், ஒன்றின் நன்மையாய பண்புகளை மற்றொன்று பெறுவதும், இவற்றின் கூட்டத்தாலாய நன்மை உலகமுன்னேற்றம் என்னும் பொதுநிதியை வளம்பெறச் செய்வதும் விதியாகவிருக்க, நமது நாட்டிலேற்பட்ட மேல்நாட்டுத் தொடர்பால் நம் மக்களே ஒருவரினின்று ஒருவர் காலத்தாலும் இடத்தாலும் சேயராயினர்போல் பிரிந்துதோன்றுதல் வியப்பினும் வியப்பே. இனியாவது, இப் பரந்தவுலகில் நம் தொன்மொழியும், நாகரீகமும், தனித்திறமலும், தன் தனிநிலையை இழந்துவிடாமலும், விளங்க வேண்டுமாயின் பிறநாட்டு இலக்கியங்களையும், கலைகளையும் நம் மொழியிலாக்கியும், நம் இலக்கியங்களையும் கலைகளையும் உலகறியச் செய்தும், பரந்த உலகத்தோடு ஒட்ட ஒழுகிப் புதிய அறிவுநூல்களையும், கலைகளையும், இலக்கியங்களையும் நம் நாட்டுத் தனியறிவால் தோற்றுவித்தும், நம் நாடும் பேருலகமும் நலமடையச் செய்யவேண்டுவது நம் மக்களின் முதற்கடமையாகும்.

இம் முயற்சியில் நாம் சிறிது உறங்கினும் சேயதெல்லாம் நணியதாகச் சேர்த்துவரும் இக்காலைய நாகரீக வெள்ளம், நம் தனிநிலையை ஈர்த்துக் கண்காணாவண்ணம் காலக் கடலில் ஆழ்த்திவிடும் என்பதை அறிஞர் மனங்கொண்டு ஆவன புரிதல் வேண்டும்,

கல்வி வகை

பலவாக விரிந்து காணும் கல்விவகைகளைக் காண்போமாயின், அவை, மக்கள் உள்ளத்தைச் செம்மைப் படுத்துவனவான அகக்கல்வியும், புறம்பான உலகம், இயற்கை முதலியவற்றின் உண்மைகளைக் காணுதலும், கண்டவுண்மைகளை உலகத்திற்குப் பயன்படும் வகையில் தொழிற்படுத்துவதுமான புறக் கல்வியுமென இருபெரும் பிரிவுகளு ளடங்கும். உயிரும் உடலும்போல் இரண்டும் இன்றியமையாதனவே யாகும். எண்ணும் எழுத்துமாய அடிப்படையான கல்வி கற்ற பின்னர் அவரவர்கள் தகுதிக்கேற்ற துறையில் செல்வதே நலமாகும். கல்லூரிகளும் ஓரளவுக்குமேல் கல்விவகைக் கேற்பத் தனித்தனியமைந்திருத்தலே நலமாகும். சிறப்பாகப் பயிலுங்கால் எவ்வகைக் கல்வியையும் ஓரிடத்திலேயே பயிற்றல் என்பதும், ஒருவரே பயின்றுவிடுதலென்பதும் துறை போவனவல்ல. அகக்கல்வியே மக்கட் பண்பை வளம்படச் செய்வதாகும். இலக்கியம், தத்துவம், வரலாறு முதலியன இதன்பாற் படுவனவாகும். நம் சங்கம் இப்பொழுது தொடங்கவிருக்கும் கல்லூரியும் இப்பகுதியைச் சார்ந்ததேயாகும்.

நமது கல்லூரி

நமது சங்கம் நிறுவ எண்ணும் தமிழ்க் கல்லூரி தமிழின் தனிநிலையைக் காத்து, உலகத்தின் உயரிய நூல்களையும் கலைகளையும் தமிழ்மொழி வழியாகவே நம் நாட்டில் பரப்பி மக்கட்டன்மையை வளம்படுத்துவதற்கென அமைவதொன்றாகும். இக் கல்லூரியில் வித்துவான் வகுப்பு பாடதிட்டத்திற்கேற்பத் தமிழ் மொழியும், அடிப்படையான அறிவு நூல்களும், பயன்படுத்தக் கூடிய ஓரளவுக்குப் பிறமொழியும் கற்பிக்கப்படும். அறிவுநூல்களின் அடிப்படையான பகுதிகளைத் தமிழிலேயே கற்பிக்கப் படுவதோடு அந் நூல்களின் கருத்தை எளிதில் நம் மக்கள் அறிந்து கொள்வதற்கேற்ற முயற்சியும் செய்யப்பெறும். பிறநாட்டு மொழிகளிலுள்ள உயர்ந்த இலக்கியங்களெல்லாம் தமிழில் ஆக்கிக்கொள்ளும் வகை முயலுவதும் இதன் நோக்கமாகும். இதிற் பயிலும் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை இனிது நடத்தித் தாம்பெற்ற கல்வியின் பயனை நாட்டில் பரவச்செய்வதற்கு ஏற்றதாக மருத்துவம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகளில் ஒன்றும், உழவு, நெசவு முதலிய கைத்தொழில்களில் ஒன்றும் பயில்வார்கள்.

மாணவர் கடன்

இவ்வுயரிய நோக்கத்தோடு தோன்றும் கல்லூரியின் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையை நாட்டின் நலத்திற்காகவே உரிமையாக்க வேண்டியவர்களாகலின் கல்வி பயிலுங்கால் அவர்களுக்கான உண்டியும் உறையுளும் உதவல் கல்லூரியின் கடமையாகின்றது. இவர்கள் வித்துவான் வகுப்புப் பாடம் முடிந்தபின் இரண்டு ஆண்டுகளாவது கல்லூரி ஆசிரியர் ஒருவர் மேற்பார்வையில் ஆண்டுக்கு நாலு திங்களாவது நம் நாட்டின் பலபகுதி களி

லுள்ள சிற்றூருக்குச் சென்று தாங்கள் பயில்வதோடு பிறரிடையும் கல்வி பரவச்செய்யும் பணியில் பழகுவார்கள். மாணவர்நிலை முடிந்த பின்பு தாங்கள் பயின்ற தொழில் ஒன்றை மேற்கொண்டு சிற்றூர்களில் சென்று தங்கி தமிழ்மொழி, பொது அறிவு முதலிய வளங்களை நிரப்பி மக்கள் உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் தொண்டில் ஈடுபட்டு ஏனையோருக்கு எவ்வகையிலும் எடுத்துக்காட்டாகத் திகழ்வார்கள்.

வேண்டுகோள்

தமிழன்பர்கள் சிறிது சிந்திப்பார்களாயினும் நாம் குறிப்பிடும் கல்லூரியின் இன்றியமையாமையும் பயனும் புலப்படாமல் போகா. இத்தகைய கல்லூரி ஒன்றை நிறுவி நடத்துவதற்குத் தொடக்கத்தில் பதினாயிரம் ரூபாவும் முதல் ஐந்தாண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும் அதற்குமேல் ஆண்டு ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாவும் வேண்டியதாகும். இத்தொகையை யாம் எளிதில் பெறுமாறு தமிழ் மக்கள் அனைவரும் உதவ வேண்டுகின்றோம். தமிழன்பர்கள் உளங்கொள்வார்களாகின் இது மிகஎளிதில் கைகூடும். அன்போடு உதவும் எவ்வளவு சிறிய தொகையும் ஈவோரன்பினால் பெருகி முழுப் பயனையும் விளைவிக்கும் என்ற துணிபோடு உங்கள் ஒவ்வொருவரையும் இயன்றது உதவவேண்டுகின்றோம். தாங்கள் ஒவ்வொருவரும் இக்கல்லூரியை நிறுவலும், நிலைநிறுத்தலும் தங்கள் தனிக் கடமையாக எண்ணி முழுமனதோடும் முயன்றால் இது அண்மையில் கைகூடி நிலைத்துநின்று பயன்தரல் ஒருதலை என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முதற் கடன்

இவ்வுலகில் தோன்றும் ஒவ்வொருவரும் நம்முன்னோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக சேமித்து வைத்த பெருநிதிக் குவியல்களுக்கு உரியவர்களாகின்றோம். இந்நிதிக் குவியல்களைப் பாதுகாத்தும் பெருக்கியும் நம் பின் தோன்றுவாரிடம் சேர்ப்பிக்கும் கடமை பூண்டுள்ளோம். இக்கடமையில் சிறிது வழுவுவோமாயினும் நம் புகழ் கெடுவதோடு பழிக்கும் உரியவராவோம். வழிவழியாகப் பெருகிவரவேண்டிய ஒரு பொதுநிதி நம்பங்கிற்கு வந்த காலத்து அதைப் போற்றுதலும் பெருக்கலும் செய்யாவிடின் நாம் மக்கட் பகுதியிற் சார்ந்தவர், ஆவோமா? நம்மோடொத்த பிறமக்கள் செயலைக் கூர்ந்துபாருங்கள்! பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ந்துவந்ததும் எவ்வகையானும் தனக்கு ஒத்ததும் உயர்ந்ததுமில்லாததாகிய தமிழ்மொழியையும் பண்பையும் உடைமையாகப்பெற்ற நீங்கள் பழையது போற்றிப் புதுவது புனைந்து இனிவரும் பின்றோன்றல்களுக்கு உரிமையாக்குதல் முதற்கடன் என்பதை உளங்கொண்டு ஆவனசெய்ய முந்துங்கள்.

த. வே. உமாமகேசுவரன்,
சங்கத்தலைவர்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௩ | ஈசுவர மாசி | மலர் ௰௧

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

திரு. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள்,
தமிழாராய்ச்சித் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்.

தமிழுலகு வெகுகாலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த குறுந்தொகைப் பதிப்பு டாக்டர் சாமிநாதையரவர்களால் சில நாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே எட்டுத் தொகை என வழங்குவனவற்றுள் அனைத்து நூல்களும் ஒருவாறு பரிசோதிக்கப்பெற்று பெரும்பாலும் நல்லபதிப்புகளாக வெளிவந்துவிட்டன. இவற்றில் இனி நிகழவேண்டும் ஆராய்ச்சியாலும் பிரதிகளின் உதவியாலும் சிற்சில திருத்தங்கள் ஏற்படக்கூடும். மலைநாட்டிற் பல இல்லங்களிலும் சேமித்து வைக்கப்பெற்றிருக்கும் சுவடிகளில் தமிழ் நூல்கள் பலவுள்ளனவாகக் கேள்விப் படுகின்றோம். ஒருகால் அச்சுவடிகளில்

தொகைநூற் பிரதிகள் கிடைத்தலுங் கூடும். கிடைக்குமாயின் தமிழ் மக்கள்பேறு பெற்றவர்களென்றே துணிந்து சொல்லலாம்.

தொகை நூல்களின் நிலை யிவ்வாறிருக்க, அவற்றோடு உடனெண்ணப்படும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றிற்கு இதுவரை திருந்திய பதிப்புக்கள் வெளிவரவில்லையென்றே சொல்ல வேண்டும். இந்நூல்களில் ஒரு சில சில்லாண்டுகட்குமுன் வரை மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்தன. நூல்களின் பெருமையைத் தெரிந்து கொள்ளுவதற்கு இப்பாட நியமனம் ஒருவாறு உதவிற்றெனினும், வேறொரு வகையிற் கேடுவிளைப்பதாயிற்று. ஒரு சிலர் தாமாக நூதனவுரை இயற்றி அவற்றைப் பதிப்பித்தனர். பழைய வுரைகள் கிடைப்பனவாயிருப்பவும் அவ்வுரைகளை நோக்காது, மூல்பாடங்களையும் பிரதிகள் வைத்துப் பரிசோதியாது வெளியிடப் பட்டுள்ள இப்பதிப்புக்கள் ஒருவகையிலும் நன்மதிப்புக்குரியவல்ல. இனி, பழைய வுரைகளின் பெருமையை யுணர்ந்து அவற்றைப் பதிப்பித்துள்ளோரும் சுத்தமான ஏட்டுப்பிரதிகள் தமக்குக் கிடையாமையானே, மூலபாடத்தையும் உரையையும் பலவிடங்களில் திருத்தமின்றி அச்சிட்டுள்ளார்கள். ஒருதாரணங்காட்டுதல் நலமெனக் கருதுகின்றேன்.

பழமொழியென்பது கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றென்பதை யாவரும் அறிவர். இதன் துரதிருஷ்டம் சொல்லுந்தரத்ததன்று. வெகுகாலத்திற்கு முன்னரே 1874-ம் வருஷத்தில் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரவர்கள் இந்நூலைப் பதிப்பித்தார்கள். ஆனால் பிரதிகளிற் கண்டமுறையை விடுத்துத் தாமாக பாவியல்கள் வகுத்துச் செய்யுட்களை முன்பின்னாகக் கொண்டு அச்சிட்டார்கள்; புதிதாக ஒருரையும் இயற்றி அதனையும் சேர்த்து வெளியிட்டார்கள். இப்பதிப்பில் பப்பத்து வெண்பாக்களடங்கிய 39 அதிகாரங்கள் உண்டு. 10 வெண்பாக்கள் விடுபட்டுப்போயின! பின்னர் 1904-ம் வருஷத்தில் திருச்சிராப்பள்ளி நாஷனல் ஹைஸ்கூல் தமிழாசிரியரா

யிருந்த தி. ச. ஆறுமுக நயினாரவர்கள் மூலபாடத்தைமட்டும் செய்யுள்முறையை மாற்றாது பதிப்பித்து வெளியிட்டார்கள். 'இவ்விரண்டு பதிப்பிலும் பழையவுரையோடு ஒவ்வாத பாடங்கள்சில இடங்களிற் காணப்படுகின்றன' என்று தி. செல்வக்கேசவராய முதலியாரவர்கள் எழுதியுள்ளார்கள்.

திருவாளர் முதலியாரவர்கள் 1916-ம் வருஷம் டிஸம்பர் மாதத்திற் புதிதாக வொரு பதிப்பு வெளியிட்டார்கள். மிக்க ஆராய்ச்சித் திறத்தோடு இப்பதிப்பு அழகாகஅமைந்துள்ளது. ஆனால் இவர்களும் சுப்பராயச் செட்டியாரவர்களைப் பின்பற்றிச் செய்யுள் முறையை மாற்றிப் புதுவதாக வொரு முறையை மேற்கொண்டு பதிப்பித்திருக்கின்றார்கள். இக்குறை யிருந்த போதினும் நூல் முழுமையும் பழைய உரையுடன் வெளியிட்டது ஓர் பேருபகாரமாகும். இப்பதிப்பிற்குப் பின்னர் செந்தமிழ்ப் பத்திராதிபர் திரு. நாராயணையங்காரவர்கள் மூலத்தையும் பழையவுரையையும் அவற்றை விளக்குதற்குத் தாம் நூதனமாக வெழுதிய குறிப்புக்களுடன் பதிப்பிக்கவெண்ணி, முதல் நூறு செய்யுட்களை 1918-ம் வருஷத்திலும், இரண்டாவது நூறு செய்யுட்களை 1922-ம் வருஷத்திலும், வெளியிட்டார்கள்.

இப்பதிப்புக்களனைத்தினும் பலவிடங்களிற் பிழைகள் காணப்படுகின்றன. ஒரு சில எடுத்துக்காட்டுக்கள் தருகின்றேன்.

> 'ஓர்த்த கருத்து முணர்வும் உணராத
> மூர்க்கர்க்கு யாது மொழியற்க'

என்ற 168-வது பழமொழிச் செய்யுளுக்கு 'தான் ஓர்த்த கருத்தினையும் உலகொழுக்கத்தினையும் அறியாத மூர்க்கர்க்கு' என்று பழைய வுரை தரப்பட்டுள்ளது. உணர்வும் என்பதற்கு உலகொழுக்கத்தினையும் என்ற பொருள் கூறப்பட்ட தாகல்வேண்டும். இவ்வாறு பொருள்கொள்ளுதல் நேரிதாகுமா? சங்கப் பதிப்பிலும் இப்பாடமே கொண்டு 'உணர்வு உணர்வான் அறியப்படும் உலகியலுக் கானமையில் ஆகுபெயராயிற்று' எனக்

குறிப்பு வரையப் பெற்றுள்ளது. ஆருபெயர் உரைகாரர்களுக்குப் பாசுபதாஸ்திரம் போன்றதாகும். இதனைப் பிரயோகிப்பது அருகியே யாதல் வேண்டும். உண்மையான பாடம்:

'ஓர்த்த கருத்து முலகு முணராத
மூர்க்கர்க்கு'

என்பது இப்போது பிரதிகளான் அறியப்படுகின்றது. இஃது மிகவும் பொருத்தமாயுள்ள தென்பதை அறிஞர்கள் எளிதின் உணர்வார்கள்.

வேறொரு செய்யுளெடுத்துக் கொள்க:

'இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்' என்றது பழமொழியில் 208-வது செய்யுள். இதற்கு 'இல்லறத்தை யாயினும் துறவறத்தை யாயினும் தம்மிடத்துக் கொள்ளாராய்' என்று பழைய வுரையுள்ளது. இலதானும் என்பது துறவறத்தையாயினும் என்று பொருள் கொள்ளப் பட்டதாதல் வேண்டும். இங்ஙனம் பொருள்கூறுதல் பொருந்துவதாகாமை வெளிப்படை. உண்மையான பாடம்:

'இல்வாழ்க்கை யானு மிலிங்கானு மேற்கொள்ளார்' என்பதேயாகும். இப்பாடம் ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுகின்றது. இலிங்கிகளாவார் தவவொழுக்க மேற்கொண்டவர்களென்பது 'முனைவ ரிலிங்கிகள் படிவர் பண்ணவர்....அருந்தவர் பெயரே' என்ற திவாகரத்தான் அறியப்படும். இதனைப் பின்பற்றியே 'சொல் வென்றி வேண்டு மிலிங்கியும்' என்ற திரிகடுகச் செய்யுளின் (17) பழையவுரையினும் தவவேடத்தான்' என்று பொருள் கூறப்பட்டது, இதனால் இலிங்கம் என்பது தவவேடம் என்னும் பொருளதாதல் எளிதின் உணரலாம். இச்சொல்லே இறுதிகெட்டு 'இலிங்கு' எனப் பிரயோகிக்கப்பட்டது. துறவறம் என்ற பொருள் இங்ஙனம் எளிதிலே பெறப்படுவதாயுள்ளது. வேறொரு செய்யுள் எடுத்துக் காட்டாகத்தந்து இப்போது அமைகின்றேன்.

'மாடம் அழிந்தக்கால் மற்று மெடுப்பதோர்
கூட மரத்திற்குத் துப்பாகும்'

என்பது பழமொழியில் 96-வது செய்யுள். இதன் பழைய வுரையில் 'மாடம் செய்கையன்றி அழிந்தக்கால் அதன்கண் மாமுதலாயின உறுப்புக்கள் பின்னையும் எடுப்பதொரு கூடத்துக்கு உதவும்' என்று பொருள் காணப்படுகின்றது. திரு. செல்வக்கேசவராய முதலியாரவர்கள் 'மரத்திற்கு என்பதன் உருபைப்பிரித்துக் கூடம் என்பதனோடு கூட்டிக்கொள்ளல் வேண்டும்' என்று இலக்கணக் குறிப்பு எழுதியிருக்கிறார்கள். சங்கப் பதிப்பிலும் இங்ஙனமே பாடங்கொள்ளப்பட்டு இலக்கணக் குறிப்பும் பதிப்பாளரால் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு விகுதி பிரித்துக் கூட்டல் சிறப்பெனக் கொள்ளத்தகாது. பாடமே பிழையாதல் வேண்டும். உண்மையான பாடம்:

> 'மாடமழிந்தக்கால் மற்று மெடுப்பதோர்
> கூடகாரத்திற்குத் துப்பாகும்'

என்பதாகும். இதில் கூடகாரம் என்பது கூடம் எனப்பொருள் படும். 'மாமுதலாயின வுறுப்புக்கள்' என்பது வருவித்துரைக்கப்பட்டதாம். இப்பாடம் சிறந்து விளங்குதல் தெள்ளிதின் உணரலாம்.

மேலே குறித்த பாடத்திருத்தங்கள் அனைத்தும் புறத்திரட்டு என்னும் தொகைநூலால் தெரியவந்தன. இச்சிறந்த நூலில் ஏறத்தாழ முந்நூற்றிருபது செய்யுட்கள் பழமொழியினின்றுந் தொகுக்கப் பட்டுள்ளன. சிறந்த பாடபேதங்களும் காணப்படுகின்றன. பழமொழிப் பதிப்பொன்று மூலமும் உரையுமாகத் திருந்தியதாய் வெளிவர வேண்டுவது இன்றியமையாததாகும்.

இங்ஙனே பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்த பிற நூல்களும் பதிப்பிக்கப் பெறுதல் அவசியமாகும். இளமை தொட்டுக் கற்றுவருகின்ற இச்சிறந்த நூல்கள் இன்றுவரை திருத்தமாகப் பதிப்பிக்கப் பெறாமை தமிழ் மக்களுக்கோர் பெருங்குறையே. தமிழறிஞர்கள் முன் வந்து இப்பெருங் குறையை நீக்குவது தமிழன்னைக்குச்செய்யும் பெருந்தொண்டும் பெருங்கடமையுமாகும்.

ஐயரும் பிள்ளையும்

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள் M. A.,
அண்ணாமலைநகர்.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 10, பக்கம் 364.

இடைக்காலத்திலும் இச்சொல் பெண்பாற் குழவியையும் ஆண்பாற்குழவியையும் உணர்த்திற்று என்பதற்கு ஆதாரம் பிள்ளைத்தமிழ்நூல்களாலும், பிள்ளைப்பாட்டிலக்கணங்களாலும் பெறப்படும்.

இப்பொழுது இச்சொல் அடைபடாது கூறியவழிப் பெரும்பாலும் ஆண் குழவியையே உணர்த்துகின்றது. "பிறந்தது பெண்ணோ பிள்ளையா" என்னுமிடத்திலும், "பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு" என்னுமிடத்திலும், வரும் பிள்ளையென்னும் சொல் ஆண்பாலையே உணர்த்துதல் வெளிப்படை. கம்பராமாயணத்திலும "பெண்டிரிற் கூற்றமன்னாள் பிள்ளையைக் கொணர்கவென்றாள்" எனக் கைகேசி சூழ்வினைப்படலத்தில் வருகிறது. காளமேகப் புலவரும் மற்றொரு புலவரை இளைஞர் என்று சொல்லி இகழுவுறுவார் "பிள்ளாய்" எனக் கூறினர். "சும்மா—இருந்தால் இருப்பேன், எழுந்தேனேயானால் பெருந்தாரை மேகம் பிள்ளாய்" என அவர் அதிமதுர கவிராயரிடம் கூறியதாக ஒரு தனிச் செய்யுள் வழங்குகின்றது. இங்ஙனம் ஒரு காலத்தில் இளமைப் பொருள் எதுவாயிருந்தாலும் அதனையுணர்த்திவந்த "பிள்ளை" யென்னுஞ் சொல் நாளேற நாளேறப் பொருளிற் குறுகி உயர்திணை ஆண்பாற் குழவியையே குறிக்கலாயிற்று. இதன் காரணம் ஒருகால் இதுவாக இருக்கலாம்: தனித்தமிழர்கள் புத்தேள் உலகம் புதல்வர் பயப்பர் என்ற கொள்கையுடையரோ அல்லரோ அறியேம். பொத்தியார் என்னும் புலவர் பிள்ளைப் பேற்றின் பின்னரே வடக்கிருக்க அனுமதிக்கப் பெற்றார் எனும் செய்தி

(புறம் 222-223) ஒருபாலிருப்பவும், பிள்ளை பெறுதார் "புத்து" என்னும் நரகில் வீழ்வர் என்ற கொள்கை ஆரியருடையதே யாம். அக்கொள்கையாற் பேரும் தமிழரும் நாளடைவில் ஆண்மகவினைப் பெண்மகவினும் சிறந்ததொரு பொருளாகக் கருதினர் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதனுல்தான் பிள்ளையுட் சிறந்த ஆண்மகவுக்குப் "பிள்ளை" யென்னும் சொல் இக்காலத்து உரியதாகிவிட்டது போலும்!

ஆனல் ஒரு ஜாதியாரைக் குறிக்கும் "பிள்ளை" யென்னும் சொல்லது வரலாறு வேருக் இருத்தல்கூடும். புறம் 380-இன் ஆசிரியர், கருவூர்க்கதப் பிள்ளை எக்காரணத்தான் பிள்ளை எனப் பட்டனரோ?

உமாதேவியாரின் அருமைக் குழவிகளாக உதித்தவர் வேளாளர் என்று சில புராணங்கள் கூறுவதால், வேளாளர் பிற்றை நாளில் பிள்ளையர் எனப்பட்டனர் போலும். எல்லார்க்கும் தாய்தந்தையராயுள்ள சிவபெருமானுல் ஆளப்பட்டு, உமையம்மையாற் பொற்கிண்ணத்துப் பாலூட்டப்பட்ட காரணத்தால் (அந்தணர் தங்குடிக்கவுணியர்தம் கோத்திரத்துத்) திருஞான சம்பந்தர் "ஆளுடையபிள்ளையார்" எனப்படல் நாமறிந்ததே (திருஞானசம்பந்தர் புராணம் 69) "பெரும்புகலிப்பிள்ளையார்" (ஷை 49) என்ற வழக்கும் உண்டு அன்றே?

"பிள்ளையார்" என்னுஞ் சொல்லைச் சிவகுமாரருள் மூத்தவருக்கே உரியது போல இக்காலை வழங்கிவருகிறோம். கணபதி பிள்ளையாராயின், கந்தரும்பிள்ளையாரே. என்னை? இருவரும் சிவபெருமானுக்கு மகவு எனப்படுதலின் என்க. "பிள்ளையார்" எனும் வழக்கு முருகக்கடவுளுக்கும் இருந்தமை "பிணிமுகம்—பிள்ளையார் (—ஒண் செய்யோன்) ஏறும் (மயிலன்றி) யானை என்றும் சொல்லுப" என்ற புறப்பாட்டு (54-இன்) உரையாலும், "தேவி கோயிலிற் கூத்தாடுவன பிள்ளையாருடைய துவசவாகனம் ஆன தோகை மயில்களேயோ? என்ற தக்கயாகப் பரணி (செய்—114) உரைப்பகுதியானும்அறியப்படும். ஆயின்,

"பிள்ளையார்" என்னுஞ் சொல் பிள்ளைமையுடைய பலர்க்கும் வழங்கற் குரியதாயிருந்தது; நாளடைவில் நலிந்து இறைவனது மூத்த மகனுக்கே யுரிமைகுறித்து இந்நாள் நிற்கிறது.

இங்ஙனமே புடைவை யென்னுஞ் சொல்லும் விநோதப் பொருள் வளர்ச்சியையுடையதாயிருக்கிறது. அதன் தாதுப் பொருள் புடை அல்லது இடை மருங்கே வைக்கப்படுவது என்பதாகும். அது இப்பொழுது புடவை என வழங்குகிறது. இச்சொல் முதலில் அறுவை, துணி என்ற சொற்களைப்போல் பொதுவாக எந்த ஆடையையும் உணர்த்தி வந்தது. அக் காலத்தில் ஆடவரும் புடைவை கட்டிக்கொண்டிருந்தார்கள் என்பதற்கு இலக்கியச்சான்று கிடைக்குமேல், புடைவை ஆடவர்க்கும் மகளிர்க்கும் உரிய பொதுப் பொருளாதல் ஊகிக்கப்படும். திருநாவுக்கரசர் புராணத்தில் (பாட்டு 61) "வெண் புடைவை மெய்சூழ" திருநாவுக்கரசர் திருவதிகை சென்றடைந்ததாகச் சொல்லப்பட்டுளது. ஈண்டு திருநாவுக் கரசர் அணிந்திருந்தது ஆண் உடையேயாயினும் அது புடைவை யென்னுஞ் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இற்றை நாளிலோ புடைவை யென்னுஞ் சொல் பெண்பாலு டைக்கே யுரியதாகிவிட்டது. இது பொருள் சுருங்குதலென்னும் நியதியாலாகும். ஆங்கிலத்தில் ஷர்ட் (shirt) என்னுஞ் சொல் ஒரு காலத்தில் மகளிர் அணியும் மெய்ப் பையையே உணர்த்தி வந்ததாகத் தெரிகிறது. அப்போது அது ஸ்கர்ட் (Skirt) என்னும் வடிவுபற்றி வந்தது. ஆனால் இப்பொழுதோ "ஷர்ட்" (Shirt) ஆடவர்க்கே யுரியதாகிப் "பெட்டிகோட்" (petticoat) என்பது மகளிர் உடுப்புக்காகிவிட்டது. முல்லைப்பாட்டு 59ம் வரி உரையில் நச்சினார்க்கினியர் யவனரது ஆடைக்கும், அடியார்க்கு நல்லார் சிலப்பு 17-ம் காதை 207 ஆம் வரி உரையில் அறுவை, மடி எனற்பால ஆடைகளுக்கும் "புடைவை" யென் னுஞ் சொல்லை வழங்கியிருத்தல் காண்க,

"செய்யுள்" என்னுஞ் சொல்லின் வரலாறும் பொருள் சுருங்கும் நியதியால் மாறுபட்டிருப்பதை அறியலாம். செய்யப்

பட்டது செய்யுள். பேராசியரும் பாய்த்துள் என்றாற்போலச் செய்யுள் என்பது உள்விகுதி பெற்றதென்பார். செய்யுளியலில், பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகிய இவையெல்லாம் செய்யுள் எனச் சொல்லப் பட்டுள்ளன. "சிவஞான சுவாமிகள் உரைச்செய்யுள்" "பாச் செய்யுள்" என்று சொல்லும் போதெல்லாம் அன்னுருடைய வசன புத்தகங்களும், பாட்டுப் புத்தகங்களும் குறிக்கப்படுதல் நாமறிந்தது. "நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்றும், "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்றும் சிலப்பதிகாரத்தின் கண் வழங்கும் இடங்களிலெல்லாம் செய்யுள் என்பது பொதுப் பொருள் பெற்றிருத்தல் காண்கிறோம். இதனுல் "செய்யுள்" என்பது முற்காலத்திற் புலவராற் செய்யப்பட்டது எதையும் குறித்ததாதல் வேண்டும். தொல்காப்பியரும் "ஆ ஓ ஆதலும் உண்டு செய்யுளுள்ளே" என்று சொல்லுமிடத்துச் "செய்யுள்" என்பது பொதுப் பொருளுடைய காரணத்தானன்றே தாமே தமது நூற்பாவில் "கிழவோட்குவமமீரிடத்துரித்தே," "பல்லோர் படர்க்கை" என்றார். வீரசோழிய ஆசிரியராகிய புத்த மித்திரனுர் வாழ்ந்த இடைக் காலத்தே செய்யுள் என்னுஞ்சொல் பொதுப்பொருளிலும் பாட்டு என்னும் சிறப்புப்பொருளிலும் வழங்கலாயிற்று எனத் தெரிகிறது. (வீரசோ. யாப்பு-6) ஆனுல் 1730 முதல் அதாவது வீரமாமுனிவர் காலமுதல் செய்யுள் என்னுஞ்சொல் பாட்டு என்னும் பொருளிலேயே வழங்கத் தொடங்கி, இற்றை நாளிலும் அப்பொருளே கொண்டு நிற்கின்றது. சிவப்பிரகாச சுவாமிகளும் நால்வர் நான்மணிமாலையில் "நீ புகழ்ந்து உரைத்த பழுதில் செய்யுள் எழுதினன்" எனச் சொல்லியவிடத்துச் செய்யுளென்னுஞ்சொல் திருக்கோவையார் திருவாசகமாகிய பாட்டுக்களை யுணர்த்தியமை பலரறிந்தது.

"மா" என்னுஞ் சொல் முற்காலத்தில் விலங்குப் பொதுவை யுணர்த்திவந்தது. கருப்பொருட் கூறும் தொல்காப்பியச் சூத்திரத்தே "தெய்வம் உணாவே மாமரம்புட்பறை" (அகம் 18) என வருமிடத்தில் "மா" என்பது பொதுவாக

விலங்கினை உணர்த்துதலைக்காண்க. ஆவும் மாவும் சென்றுணக் கலங்கி" எனவரும் 204) புறநானூற்றுப் பகுதியில் "மா" என்பது ஆண்டுவிலக்கப்பட்ட "ஆ" ஒழியப் பிறவிலங்குகள் எல்லாவற்றையும் உணர்த்துதல் அறியத்தக்கது. "கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும் உண்பது நாழி" (புறம்-189) எனு மிடத்தும் இச்சொல் பொதுவாக விலங்கைபுணர்த்தல் அறியப் படும். மரபியல் 12-ஆம் சூத்திர உரையிற் பேராசிரியரும் "மா என்பது குதிரையும் யானையும் புலியும் சிங்கமும் முதலாய வற்றுக்கெல்லாம் பெயராகலின்" என உரைத்துள்ளார். புறம் 58-ஆம் பாட்டில் வரும் "கோண்மா" என்னுஞ் சொல் புலியைக் குறித்தல் காண்க. "மா வாராதே மா வாராதே" எனத் தொடங்கும் (273) புறப்பாட்டிலும் மா என்பது குதிரையை யுணர்த்துதல் அறியத்தக்கது. மா என்னுஞ் சொல்லே மான் என ஒருகாலத்து ஆயிற்று. ஆனதும் "மா" விலங்குப்பொதுவை யுணர்த்தியது போலவே அதுவும் உணர்த்தலாயிற்று. "மான்" என்பது "மா" என்னும் சொல்லடியாகப் பிறந்தது என்பது "ஆமாகோ னவ் வணையவும் பெறுமே" என்னும் நன்னூல் (248) விதியாலும் பெறப்படு கிறது. அச்சொல் நன்னூலார் காலத்திற்கு முன்னும் விலங்குப்பொதுப்பொருளையே உணர்த்தி வந்ததென்பது "கடுமான் மாற மறவாதீமே" எனும் புறம் 198-ஆம் பாட்டின் பகுதியில் வரும் (கடு) மான் எனுஞ்சொல் விரைந்த செலவை யுடைய குதிரையை யுணர்த்துவதாலும் "வரிகிளர் வயமான் உரிவைதைஇய" என அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பகுதியில்வரும் இச்சொல் புலியையுணர்த்து வதாலும் அறியப் படும். ஆனல் இந்நாளிலோ "மான்" என்னுஞ் சொல்லை அப் பொருளிலேயே வழங்குகின்றோமா? மாதருடைய மருண்ட பார் வைக்கு உவமையாகச் சொல்லத்தக்க தெனப்படும் ஒருதனி விலங்கை—நவ்வியை—உணர்த்த அன்றோ மான் என்னுஞ் சொல்லை இக்காலை வழங்குகின்றோம். இச்சொல் இப்பொருள் பெற்றது பொருள் சுருங்கும் நியதியாலாகும். அஃதாவது ஒருகாலத்தில் எல்லா விலங்குகளையும் உணர்த்திவந்த "மான்"

என்னுஞ் சொல் இப்பொழுது தன் பொருளில் சுருங்கி, ஒரு வகை விலங்கையே உணர்த்துகிறது என்பதாம். இங்ஙனமே, ஆங்கில "டியர்" (deer) என்பதும் சமஸ்கிருத "ம்ருக" (mrga) என்பதும் முன்னர் விலங்குப் பொதுவை உணர்த்தி இப்பொழுது நவ்வியினத்தை மாத்திரம் உணர்த்துகின்றன என அறிகிறோம்.

மேல் "நூல்" என்னும் தமிழ்ச் சொல்லை நோக்குவாம். தொல்காப்பியர் செய்யுளியல் (166-168ம் சூத்திரங்கள்) விதிப்படி நூல் என்பது சூத்திரம், ஓத்து, படலம், பிண்டம் இவற்றாலாயது எனத்தெரிகிறது. இதனால் அறியப்படுவது இலக்கணமென்பது. இறையனாரகப் பொருளுரையிலும் இச்சொல் இப்பொருளிலேயே ஆளப்பட்டிருப்பதுண்மை. "அவர்க்கு நூல் அகத்தியம்" "அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமு மென இவை யென்ப" "அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப" எனவருமிடங்களிலெல்லாம் குறிக்கப்படுவன இலக்கணமென்பது வெளிப்படை. ஆனால் "விலங்கொடுமக்களனையர் இலக்கு நூல் கற்றாரோ டேனையவர்," "நவில் தொறும் நூல் நயம்போலும்", "ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்." என்ற திருக்குறட் பகுதிகளிலெல்லாம் நூல் என்பது இலக்கியம் என்னும் பொதுப் பொருளில் வருதல் காண்க. அதுவே இடைக்காலத்திலும் பொருளாய் இருந்திருத்தல் வேண்டும் என்பது கலிங்கத்துப் பரணியில் "இறைஞ்சிடா அரசர் கால்களிற் றளையும், நூல்களிற் பதங்களின் றளையுமன்றி வேறிரு பதங்களிற்றளைகளில்லையே" (தாழிசை 261) என வருமிடத்தில் நூல்கள் என்பதற்குப் பொருள் செய்யுட்கள் என்பது தேற்றம்; தளை யென்பது பாட்டல்லாத பிற பனுவல்களுக்கு ஏலாமையின். அப்படியே இக்காலத்திலும் இச்சொல்லை விரிந்த பொருளில் வழங்கக் காண்கிறோம். மதன காம ராஜன் கதை, முப்பத்திரண்டு பதுமைக்கதை, மாரியம்மன் தாலாட்டு, பாலயோகினி பாட்டுப்புத்தகமெல்லாம் "நூல்கள்" என்று சொல்லப்படுகின்றன. இவற்றாலறியப்படுவது முற்காலத்தில் இலக்கணமொன்றையே குறித்து வந்த நூல் என்னும் சொல் பொருளில் விரிந்து, பொதுவாக எந்த இலக்கியத்தையும் எந்தப் புத்தகத்தையும் குறித்துவருகிறதென்பது. "எண்ணெய்" "தண்ணீர்" என்னுஞ் சொற்களும் பொருள் விரி நியதியால் வேறுபாடடைந்துள்ளமை முன்னரே (துணர்—12—மலர் 8, 9-இல்) காட்டப்பட்டது.

செப்ப முடையார்க்குச் செய்யும் விண்ணப்பம்

வித்துவான். திரு. வேங்கடாசலு அவர்கள்,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

(முற்றொடர்ச்சி துணர் 13, மலர் 10, பக்கம் 382.)

4. காணப் படுகின்றது என்று செயப்பாட்டுவினையாய் வழங்காமல், காண்கின்றது என்று செய்வினைவடிவில் வழங்கியது இழிவழக்கு என்றார்கள்.

'முனைவன் கண்டது முதனூ லாகும்' என்று வந்துளது. 'முனைவன் கண்டது' என்பதற்கு, 'முன்னோனாற் செய்யப் பட்டது' என்று பேராசிரியர் எழுதியிருக்கின்றார்.

'நோக்குவ வெல்லாம் அவையே போறல்' என்னுமிடத்தும், நோக்கப்படுவ என்று செயப்பாட்டு வினையில் வந்திலது. 'நோக்குவ' என்பதற்கு, 'தன்னாற் காணப் பட்டன' என்று உரையாசிரியர் எழுதியிருக்கின்றார். (நோக்கல்- என்பது செயப்படுபொருள் குன்றாவினை யாகலின், அதனை, செயப் பாட்டுவினையில் வழங்குதல் வேண்டும் என்பது நாட்டாரவர்கள் கருத்து. பக்கம் 48 பார்க்க.)

'கண்டது மொழிமோ' என்று குறுந்தொகையில் வந்துளது

'காண்கின்ற நிலமெல்லாம் யானே என்னும்
காண்கின்ற விசும்பெல்லாம் யானே என்னும்
காண்கின்ற வெந்தீயெலாம் யானே என்னும்
காண்கின்ற விக்காற்றெல்லாம் யானே என்னும்
காண்கின்ற கடலெல்லாம் யானே என்னும்'
(திருவாய் 5. 6. 3.)

என்று ஒரு செய்யுளில் பலமுறை வந்துளது. இவையெல்லாம்

இழிவழக்கேயோ? இவை செய்யளாகலின் அமையும்; உரைநடையில் அமையாது என்பார்களோ? அவ்வாறு செய்யுளுக்கும் உரைக்கும் தனித்தனியே இலக்கணங் கூறியிருத்தலை யான் அறிந்திலேன். உரையையுஞ் செய்யுள் என்னும் வழக்கு உளதன்றே? நிற்க. இக்காலத்துத் தமிழ்ப் புலவர்களுள் உரைநடை யெழுதுதலிற் சிறந்தவர் கா. நமச்சிவாயமுதலியாரவர்களென்பது தமிழ்நாடு அறிந்த செய்தியே. அவர்கள், தம் உரைநூல்களில், காண்கின்றது என்பதனையே பெரிதும் வழங்கியிருக்கிறார்கள்.

[1] 'அங்கே பலப்பல கணவாய்களும் கொடுமுடிகளும் காண்கின்றன.'

[2] 'இடையிடையே கணவாய்களும் நீரோடைகளும் காண்கின்றன.'

[3] 'காட்டுவிலங்குகளுட் சிறந்த யானை, புலி, கரடி முதலிய விலங்குகள் அடிவாரங்களில் மட்டும் காண்கின்றன.'

[4] 'ஒரு காலத்தில் அது சிறந்த நகரமாயிருந்தது என்பதற்கு அறிகுறிகள் ஆங்காங்கே இப்போதும் காண்கின்றன?' என்பனகாண்க. இவை பயின்று வந்துள்ளன. காணப்படுகின்றது என்பதுவும் சிலவிடங்களில் வந்துளது. யான் எழுதிய 'கபிலர்' என்னும் நூல் முழுவதும் முதலியாரவர்கள் கடைக்கணித்துத் திருத்தஞ் செய்ததே. இதனை யான் முன்னுரையில் குறித்திருக்கின்றேன். திரு. செல்வகேசவராய முதலியாரவர்களும் 'திருவள்ளுவர்' என்னும் நூலில் இவ்வாறு செய்வினையாக வழங்கியுள்ளார்கள்.

5. யான் எழுதிய கபிலர் என்னும் நூல், உயர்ந்த தாளிற் பரிய உருவினதாகப் பொலிவுற அச்சிடப்பட்டிருத்தலின்

---

1. தமிழ்க்கடல் வாசகம் மூன்றும் புத்தகம் பக்கம் 3
2. ,, ,, ,, 5
3. ,, ,, ,, 7
4. ,, ,, ,, 20

அதிற் காணும் இவ்வழிவழக்கினை விழுமிய வழக்கென்று கொண்டு பலர் கெட்டொழிவரே என்று நாட்டாரவர்கள் அஞ்சுகின்றார்கள். இது மேன்மக்களியல்பே. ஆயின், தொல்காப்பியம் குறுந்தொகை திருவாய்மொழி முதலியவற்றைக் கற்போர் சிலர் என்று கொண்டு அவரைக்குறித்து அஞ்சாதிருப்பினும், திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்களின் உரைநூல்களைப் பயிலும் மாணவர் பல்லாயிரவராகலின், இளமையிற் கற்றது சிலையிலெழுத்துப் போல் நிலைபெறுமாகலின் அவரனைவருங் கெட்டொழிவரே என்று நாட்டாரவர்கள் கருதுவார்களாயின், அவர்களுள்ளம் எவ்வாறு அஞ்சும்! அந்தோ !!

IV. நற்கீரர் என்னுஞ் சொல்லைக்குறித்து நாட்டாரவர்கள் எழுதியிருப்பதன் கருத்து.

1. நக்கீரர் என்பது பண்டு தொட்டு நிலைபெற்றுவருவது

2. நற்கீரர் என்பது அழிவழக்கு

3. நக்கீரர் என்பதை நற்கீரர் என்று மாற்றினது போல நக்கண்ணையார் நச்செள்ளையார் முதலிய பெயர்களையும் மாற்றி வழங்குவரேல், அது பிறிதொரு மொழியாதலன்றித் தமிழாகாது.

1. நக்கீரனார் நப்பாலத்தனார் முதலிய பெயர்களில் நல் என்பதுவே அடைமொழி என்றும், நற்கீரனார் என்பதுவே நக்கீரனார் என்று மருவிற்று என்றும் யான் எழுதியிருப்பது தங்கட்கும் உடன்பாடே என்று நாட்டாரவர்களே எழுதியிருக்கிறார்கள். இதனால் நற்கீரனார் என்பதுவே திரிபில்லாதது —இயல்பாயது என்பது அவர்கட்கும் உடன்பாடாகும். அங்கனமாகவும், நக்கீரர் என்பது பண்டுதோட்டு நிலைபெற்று வருவது என்றது வியப்பினைத் தருகின்றது. இவ்வாறாயின், மஞ்சன், அஞ்சி (ஐந்து), போச்சி, ஆச்சி என்பவையே பண்டு தொட்டு நிலைபெற்றுவருபவை என்றும் மைந்தன், ஐந்து, போயிற்று போய்த்து, ஆயிற்று ஆய்த்து என்பவை பிற்காலத்தில் (என்னைப்போன்றவர்களால்) வழங்கப்பட்டவை என்றும் கூறுதல் வேண்டுமே. திரிந்தசொல் பண்டையதாகுமா,

திரியாத சொல் பண்டையதாகுமா? இனி, பண்டு என்றது கடைச் சங்ககாலத்தைக் குறிப்பது எனின், நக்கீரர் என்னுஞ் சொல் சங்கச்செய்யுட்களில் வந்திருப்பதாகத் தெரியவில்லை. பண்டித இ. வை. அனந்தராமையரவர்கள், [1]சிலகாலத்திற்கு முன்வரை நற்கீரர் என்பதுவே வழங்கிவந்ததாக எழுதியிருக்கின்றார்கள். (அவர்கள் நக்கீரன் என்பதுவே இயல்பாய பெயர் என்று கொண்டவர்கள்; நாட்டாரவர்கள் அக்கொள்கையினரல்லர்' தமிழ்ப். 13 பக்கம். பார்க்க.) ஹாலாஸ்யமாஹாத்ம்யத்தில் நற்கீரன் என்று வழங்கியிருத்தலின், அப்புராணத்தை இயற்றினோர் காலத்தில் நற்கீரர் என்றே வழங்கிவந்தது என்பது தெளிவாகும். அக்காலத்தில் நக்கீரர் என்று வழங்கியிருக்குமாயின் அப்புராணத்தார் நற்கீரர் என்று (வடமொழியில்) பொருளில்லாததொரு சொல்லாக அதனைத் திரித்து வழங்குதற்கு நியாயமில்லை. சீவகசிந்தாமணி 482-ஆஞ் செய்யுளின் உரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் விசேட வுரையைப் படித்த புலவர்களானே நற்கீரர் என்னும் வழக்கு ஒழிந்திருக்கும். நச்சினார்க்கினியர் காலத்தில் நக்கீரர் என்று வழங்கியது என்பதில் ஐயமில்லை. அவ்வளவிறானே அது பண்டுதொட்டு நிலைபெற்று வருவது எனல் அமைவுறாது. [2]நற்சேந்தனார், [3]நற்றுமனார் என்னும் பெயர் அகநானூற்றிலும் நற்றிணையிலும் இன்னும் காண்கின்றன. [4]நற்றமனார் என்னும் பெயரொன்று நற்றிணையிற் காண்கின்றது. மேற்கூறியவற்றால், நக்கீரனார் என்னுந் தொடக்கத்தனவே பண்டுதொட்டு வழங்குவன என்பது உண்மையின்றாய், வரலாற்றோடு முரணுதல் காண்க.

2. நற்கீரர் என்னுஞ்சொல் அழிவழக்கு என்றார்கள். இயல்பாய பெயரை உண்மைவடிவில் வழங்குதல் அழிவழக்காயின், சிறந்த வழக்கு யாதோ? நற்கீரர் என்பது அழிவழக்

1. கலித்தொகை. முன்னுரை பக்கம்.
2. அகம் 232, நற். 128.
3. அகம் 92.
4. நற். 133.

காயின், நற்சேந்தனுர் நற்ருமனுர் என்பவை அழிவழக்கா காவோ ?

3. நற்கீரர் என்று எழுதியதுபோன்று நற்கண்ணையார் நற்செள்ளையார் என்றும் எழுதுவேணுயின் அவை தமிழ் மொழிச் சொற்களாகாமல், தெலுங்கு மலையாளம் போலப் பிறிதுமொழியாகும் என்ருர்கள். பெரும்புலவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்களும் மகாவித்துவான் ரா. இராக வையங்காரவர்களும் நற்சேந்தனுர் நற்ருமனுர் என்னும் பெயர் களை முன்னரே எழுதியிருத்தலின், அவர்களே தெலுங்கு மலையாளம் போலப் பிறிதொருமொழியைப் படைத்துவிட்டார் களாகலின், புதியதொருமொழியைப் படைக்கும் பெருமையும் அடியேனுக்குக் கிடைக்காமற் போயிற்று. நாட்டாரவர்கள் என்மாட்டுள்ள அன்பின் மிகுதியினுல் அப்பெருமையை எனக்கே கொடுக்க உடன்பட்டாலும் நற்றிணையையும் அக நானூற்றையும் கண்ட தமிழுலகம் அதற்கு உடன்படாதே.

'தெற்றென' என்பது தெள் என்றும் முதனிலையடியிலும் நாக்கு என்பது நால் என்னும் பகுதியடியிலும் பிறந்த சொற் கள் என்பது யானறிந்தது. இதனைத் தமிழ்ப் பொழிலிலும் எழுதியுள்ளேன். அதுகொண்டு, 'தெட்டென' என்றும், 'நாற்கு' என்றும் எழுதுதல் வேண்டும் என்பது என்கருத் தன்று. யான் அவ்வாறு எழுதிற்றுமிலேன். அறிஞர் வழங்கிய சொற்களை—திரிபில்லாதவற்றை—அவ்வாறே வழங்குதல் நலன் என்பது என்கருத்து. கன்னடமொழி—பழங்கன்னடம் என்றும் புதுக்கன்னடம் என்றும் இருபெருப்பிரிவினதாய் வழங்குதல் போலவும், மலையாளமொழி—பழையமலையாளம் அர்வாசீன மலையாளம் என்றும் வழங்குதல்போலவும், தமிழ் மொழியும் பண்டைத்தமிழ் பிற்காலத்தமிழ் என்றும் பிரிவுற்றி ருக்குமேல் ஆங்கனம்.......யாங்கனம் என்றும் நற்கீரர் என்றும் எழுதுதல்அமைதியாகாது. அவ்வாறு பிரிவின்றியிருத்தலானே, தமிழ்ப்புலவர்கள் நீயிர்யான் என்னுஞ் சொற்களையும் நும்மை நின்னை என்னுந் தொடக்கத்தவற்றையும் ஆடூஉ மகடூஉ

என்னுஞ் சொற்களையும் இவைபோன்ற பிறவற்றையும் வழங்கி வருகின்றனர். புகழுடம்போடு விளங்குஞ் சூரியநாராயண சாஸ்திரியார் தம் உரை நூலில் அளபெடைச் சொற்களையும் வழங்கினர். நீவிர் நீயிர் நும்மை என்பனபோன்ற சொற்களைத் திரு. நாட்டாரவர்களும் எழுதிவருகின்றார்கள். இவையெல்லாம் வழக்கிறந்தனவாயினும் பண்டைச் செய்யுட்களில் வந்திருத்தலான் வழங்கப்படுதலின், அடியேனும் ஆங்கனம் முதலிய வற்றை வழங்கலானேன். சமன்செய்து சீர்தூக்குங் கோல் போலமைந்து விளங்கும் பெரியோர்கள் எம்மிருவர் கூற்றுக் களையும் ஆராய்ந்து, அமைவில்லாதவற்றை அருள்கூர்ந்து தெரி விக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

'குணத்தைக் கொள்ளாராக. அதனால் என்? குற்றத் தைக் கொள்வாராக. அதனால் என்? குணத்தைக் கொண்டு குற்றத்தைக் கொள்ளாதுவிடுவாராக. அதனால்தான் என்? குணத்தைக் குற்றமாகக் கொள்ளுதல்தான் பொறுத்தற்கு அரிதாயுளது'.

என்று வடமொழி மஹாகவியொருவர் கூறியது நினைக்கத் தக்கதா யிருக்கின்றது.

———

திருவாய்மொழி

திருவாளர். R. புருஷோத்தம நாயுடு அவர்கள்,
தமிழ் வித்துவான் அரசர் கல்லூரி, திருவையாறு.

(முற்றொடர்ச்சி துணர் 13 மலர் 10 பக்கம் 395)

இனி, திருவாய்மொழியில் செப்பலுற்ற பொருளின் சீர்மையைச் சிறிது செப்பிடுவாம்.

அடையார் கமலத்தலர் மகள் கேள்வன் கையாழியென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்கவில்லும் புடையார் புரிசங்கமும் இப்பூதலங் காப்பதற்கென்று வந்தவதரித்து, வண்மையினாலும் தன் மாதகவாலும் மதிபுரையுந் தண்மையினாலும் இத்தாரணியோர்கட்குத் தான் சரணாய், உண்மைநல் ஞானமுரைத்து, ஓதிய வேதத்தினுட் பொருளாயதனுச்சி மிக்க சோதியை நாதனெனவறியா துழல்கின்ற தொண்டர்தம் பேதமைதீர்த்து, உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயுமுயர்குருவும் வெறிதருபூமகள் நாதனும் மாறன் விளங்கிய சீர்நெறிதரு செந்தமிழாரணமேயென்றிந் நீணிலத்தோர் அறிதர நின்ற இராமாநுஜமுனியை, அவருடைய வடியார்கள் அண்மி, தேவரீர் ஓதாதுணர்ந்த உத்தமமாது தமிழ் மறைக்கு ஓர் வியாக்கியானம் செய்தருளத் திருவுள்ளம் பற்றியருள வேண்டுமென்று தாழ்ந்துபணிந்து விண்ணப்பஞ்செய்ய, அதற்கு, வியாசமுனிவர் அருளிய பிரம சூத்திரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்து அதனால் ஸ்ரீபாஷ்யகாரர் என்று தலைமைப் பெயர் பூண்ட அப்பெரியார், அடியார்களை யருளி நோக்கி, அடியீர்! சர்வேஸ்வரனால் மயர்வற மதிநல மருளப்பெற்று, அதனால், பகவத் ஸ்வரூப ரூபகுண விபூதிகளை விஸ்தார விஸ்தாரதர விஸ்தாரதமமாக வுணர்ந்தநுபவித்து, அது உள்ளடங்காமை வழிந்து

புறப்பட்ட பிரபந்தமாகையாலே, அவரவருடைய ஞானபக்தி வைராக்கியங்களுக்குத் தக்கவாறு பொருள் சுரப்பதாம்; யாம் ஒரு வியாக்கியானம் செய்யின், ஸ்ரீபாஷ்யகாரரே வியாக்கியானம் செய்திருப்பதனால், இதன்பொருள் இத்துணையவே; இதன் மேலின்று; என உலகினர் நினைப்பர்; அவ்வாறவர்கள் நினைத்து அபசாரப்படுதற்கு யாம் காரணமாயிருத்தல் தகாது என்று அருளிச்செய்வாராயின், சொல்லிற் சுருங்கிப்பொருள்பெருகித் தொன் ஞானமெல்லாம் விளங்கி யிருளகற்று மாறன் பணித்த மறையின் பொருளனைத்தும் விரித்துரைக்க வல்லார் இம்மண்ணுலகில் யாவர்? ஏனை விண்ணுலகத்தும் அஃதே என்க.

> " உரிக்கின்ற கோடலினுந்து கந்தமென வொன்று மின்றி
> விரிக்குந்தொறும் வெறும்பாழாய் விடும் பிறர் புன்கவிமெய்
> தெரிக்கின்ற கோச்சடகோபன்றன் தெய்வக் கவிபுவியில்
> சுரக்கின்ற நுண்மணலூற்றொக்கும் தோண்டச் சுரக்கலினே "

என, கம்ப நாட்டாழ்வான் புகழும் பொன்னுரைகளின் பொலிபொருள்களைப் பொலிந்து நோக்குக.

வானிட்ட கீர்த்திவளர் கூரத்தாழ்வான் மகிழவந்த தேனிட்டதார் நம்பெருமாள் குமாரராக வவதரித்து, ஆசாரியவபிடேகம் செய்யப்பெற்ற ஸ்ரீபட்டர் என்னும் பெரியார், இத்திருவாய்மொழியின் சீரிய பொருள்கள் பலவற்றில் சிலவற்றை தொகுத்து ஒரு வெண்பாவில் அமைத்துப் பாடுகின்றார்; அதை நோக்குவோம்.

வெண்பா.

> மிக்கவிறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
> தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்
> ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்
> யாழினிசை வேதத்தியல்.

இறைநிலை என்பது இறைவனது தன்மை; உயிர்நிலை என்பது இறைவனை யடைதற்குரிய ஆன்மக்களின் தன்மை; தக்கநெறி என்றது ஆன்மாக்கள் இறைவனை அடைதற்கு ஏற்ற

வழியின்நிலே; ஊழ்வினை என்றது அவ்வாறு ஆன்மாக்கள் இறைவனது தன்மையை யறிந்து அவனை யடைவதற்குரிய வழியை யுணர்ந்து செல்லுங்கால் இடையில் வருகின்ற விரோதிகளின்நிலே; வாழ்வினை என்றது விரோதிகளைக் கழித்த பின்னர் எல்லா உலகிற்கு மேலாய வீட்டுலகிற் சென்று இறைவனடியை யடைந்தடிமை செய்தலாகிய நிரதிசயவின்பம்; ஆக இவ்வைந்தையும் குருகையர் கோன்யாழினிசை வேதத்தியல் ஓதும் என்றவாறு.

“சம்சாரியான சேதநனுக்கு தத்துவஞானம் பிறந்து உஜ்ஜீவிக்கும் போது அர்த்த பஞ்சகஞானம் வேண்டும்; அர்த்த பஞ்சக ஞானமாவது:—ஸ்வஸ்ரூப, பரஸ்வரூப, புருஷார்த்த ஸ்வரூப, உபாயஸ்வரூப, விரோதிஸ்வ ரூபங்களை உள்ளபடி யறிதல். இவற்றில், ஒரொரு விஷயந்தான் அஞ்சு படிப்பட்டிருக்கும்” என்று பெரியார் கூறுகின்றவாறு ஆன்மாக்கள் உய்வதற்கு ஐம் பொருளறிவுவேண்டும் என்பது வெள்ளிடைமலே. ஆன்மாக்கள் உய்யும் நெறியுணர்ந்து இறைவனடி சேர்ந்து பிறவிப் பெருங்கடல் நீந்தவேண்டுமென்ற பொருள் ஒன்றையேகொண்டு, தமக்கு இறைவனால் உண்டான நன்மை எங்குமுண்டான எல்லார்க்குமுண்டாக வேண்டுமென்ற பரம கிருபையால் பாடிய திருப் பாட்டுக்கள் ஆகையாலே, குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல் ஐம்பொருளையும் ஓதும் என்றறுதியிட்டு அறைந்தது எத்துணைச் சாலச் சிறந்ததாகும். இதனை, கீழ்வரும் எடுத்துக்காட்டுக்களால் தெற்றெனத்தெளிக.

“அருள் கொண்டாயிரம் இன்தமிழ்ப் பாடினன்
அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே” (மதுரகவிகள்)

“ஒ ஓ உலகினதியல்பே,” வாங்குநீர் மலருலகில் நிற்பனவும் திரிவனவும், ஆங்குயிர்கள் பிறப்பிறப்புப் பிணிமூப்பால் தகர்ப்புண்ணும், ஈங்கிதன்மேல் வெந்நரகம் இவையென்ன வுலகியற்கை,” கண்டாற்றேனுலகியற்கை,” “அறப்பொருளை யறிந்தோரார்” (திருவாய்மொழி)

"உண்டியே உடையே யெனவுகந் தோடுமிம்,
மண்டலந் தன்னொடுங் கூடுவதில்லையான்"
(பெரு-திருமொழி)

"பிறர்க்கு உபதேசிக்கிறபடி எங்ஙனே என்னில் ஆசாரியா பதம் நிர்வஹிக்கைக்காகவன்று; கியாதிலாப பூஜைகளுக்காக வன்று; "ப்ரப்ரூயாத்" என்று ஒரு விதி பரதந்திரராயன்று ஆனால், இது, பின்னை எத்தாலேயாவதென்னில்? ஸ்வாநுபவ பிரகர்ஷமிருக்கிறபடியால். தாம் அநுபவித்த விஷயம் தனியே அநுபவிக்குமதன்றிக்கேயிருந்தது; இனி நமக்கு போதயந்த: பரஸ்பரத்துக்கு ஆளாவார் ஆர் என்று சம்சாரிகள் பக்கலிலே கண்வைத்தார்; தாம் பகவத்விஷயத்தில் பிரவணராயிக்கிறுப் போலே அவர்கள் சப்தாதிவிஷயங்களிலே பிரவணராயிருந் தார்கள்; இவர்கள் அநர்த்தம் பரிஹரித்தல்லது நிற்கவொண்ணா தாயிருந்தது; ஒருவனுக்கு வைஷ்ணத்வம் உண்டு இல்லை யென்னு மிடம் தனக்கே தெரியுங்காண் என்று சீயர் பலகாலும் அருளிச் செய்வர்; பிறரநர்த்தம் கண்டால் ஐயோ! என்றிருந்தானாகில் நமக்கு பகவத் சம்பந்தம் உண்டு என்றிருக்க அடுக்கும்; இத் தனையும் பட்டிடுவானுக்கென்றிருந்தானாகில், நமக்கு பகவத் சம்பந்தமில்லை யென்றிருக்க அடுக்கும் என்று. இவர்களை, இவர், மீட்கப்பார்க்கின்ற வழிதான்என்? என்னில்? இவர்கள் சேதநராயிருந்தார்கள்; சப்தாதி விஷயங்களில் வாசியறிந்து, தீயவை கழித்து, நல்லவைபற்றிப் போருகிறதொன்றுண்டாய் இருந்தது; அவற்றினுடைய ஹேயதையையும் சர்வேஸ்வர னுடைய உபாதேயதையையும் இவர்களுக்கு அறிவித்தால், அவற்றை விட்டு இவனைப்பற்ற வடுக்குமென்று பார்த்து, சர்வேஸ்வரனுடைய நன்மையையும் இவர்கள் பற்றின விஷயங் களின் அல்பாஸ்திரத்வாதி தோஷ துஷ்டங்களென்னுமிடத் தையும், பற்றுமிடத்தில் இன்று புதிதாகச் செய்யவேண்டுவ தொன்றில்லை பழைய சம்பந்தத்தையுணர அமையுமென்னு மிடத்தையும் பற்றுவார்க்கு அநுசந்திக்கப்படும் மந்திரம் இன்னதென்னுமிடத்தையும் அவனுடைய பளு நீயதையையும் அருளிச்செய்யா நின்றுகொண்டு' இதரவிஷய வைராக்ய பூர்வக

மாக பகவத் பக்தியைப்பண்ணி ஆஸ்ரயிங்கோள் என்று பரோபதேசபிரவிருத்தர் ஆகிறார்." "இவை, புருஷார்த்தபிரகாசமான பிரபந்தங்களில் பிரதாந பிரபந்தங்கள்; பகவத் குணாநுபவஜநித ஹர்ஷ பிரஹர்ஷ பலாத்காரம் சொல்லுவிக்கப் பிறந்தன; பகவத் பிரசாதலப்தமான திவ்வியஸக்ஷுஷ மூலமாகப் பிறந்தன என்னுமிடம், ஸ்வரவசந வியக்திகளாலே அறியலாம்; சம்சாரத்திலே உத்வேகம் பிறந்தார்க்கு ஜ்ஞாதவ்யமான வேதார்த்தங்கள் இதிலே காணலாம். (வியாக்கியான வாக்கியங்கள்) என்பன காண்க.

முதற் பாட்டு

உயர்வற வுயர்நல முடையவன் யவன் யவன்
மயர்வற மதிநலமருளினன் யவன் யவன்
அயர்வறு மமரர்கள் அதிபதி யவன் யவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

திருவாய்மொழி ஆயிரத்தின் சுருக்கம் முதல் திருவாய்மொழி; முதல் திருவாய்மொழியின் சுருக்கம் முதல் மூன்று பாட்டு; முதல் மூன்று பாட்டின் சுருக்கம் முதற்பாட்டு; முதற் பாட்டின் சுருக்கம் முதலடி; என்போலென்னில்? சகலவேதச் சுருக்கம் பெரிய திருமந்திரம்; அதனுடைய சுருக்கம் பிரணவம்; அதனுடைய சுருக்கம் அகரம் ஆனாற்போல என்க.

இத்திருப்பாட்டின் பொருள்களனைத்தும் விரித்துரைக்கப் புகின் மிகப்பல்குமாகலின் சுருங்க ஈண்டுக் கூறுகின்றேன்.

உயர் என்ற சொல்லில் மங்கலமும் துயரறு சுடரடி தொழுது எழு என்ற இதிலே வருபொருளுரைத்தலும் வணக்கமும் வாழ்த்தும் காண்க. "அயர்வறுமமரர்களதிபதி" என்கையாலே மிக்க இறைநிலையும், "என்மனனே" என்கையாலே மெய்யாமுயிர் நிலையும், "மயர்வு" என்கையாலே தடையாக்கித் தொக்கியலும் ஊழ்வினையும், "மதிநலமருளினன்" என்கையாலே தக்க நெறியும், "தொழுதெழு" என்கையாலே

வாழ்வினையும் ஆகிய ஐம்பொருளையும் அமைத்திருத்தல் உய்த்துணர்ந்து கொள்க.

இன்னும் "அடியேன் அதிபதி" என்கையாலே சேஷ சேஷி சம்பந்தமும், மயர்வறமதிநலமருளினன் "என்கையாலே இறைவனுடைய காக்குமியல்வும், உயர்வற உயர்நலம் துயரறு சுடரடி, அயர்வறு மமரர்கள்" என்கையாலே குணவிக்ரஹ விபூதிகளும், இன்னோரன்ன அர்த்த விசேடங்கள் பலவும் இதில் அமைந்திருத்தலை ஞானமநுட்டானம் இவை நன்றாகவுடைய தேசிகர்பால் கேட்டுத் தெளிக.

இனி ஐம்பொருளும் இந்நூலில் அமைந்திருத்தலை இத் திருவாய்மொழியில் ஆங்காங்குள்ள திருப்பாட்டுக்களில் அமைத்துக் காட்டுவன்.

இறை நிலையை ஐந்து வகையாகப் பிரித்தல் வேண்டும். பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என. அவற்றில், பரத்வத்தைப் பற்றி, "உயர்வற உயர்நலமுடையவன்" என்பது முதலான பத்துத் திருப்பாட்டுக்காளல் சுவாநுபவமாக அருளிச் செய்கின்றார். அவதாரத்திலே பரத்வத்தைப்பற்றி, "திண்ணன் வீடு முதல் முழுதுமாய்" என்பது முதலாகத் தொடங்குகின்ற பத்துத் திருப்பாட்டுக்களால், பரோபதேசத்தால் விதிமுகத்தாலும் மறை முகத்தாலும் அருளிச்செய்கின்றார்.

அர்ச்சாவதாரத்திலே பரத்வத்தைப்பற்றி " ஒன்றுந்தேவு முலகுமுயிரும் மற்றும் யாதுவன்று என்று தொடங்குகின்ற பத்துத் திருப்பாட்டுக்களால் அருளிச்செய்கின்றார்.

மோக்ஷபரதத்வகதனத்தைப்பற்றி, "அணைவதரவணை மேல் என்று தொடங்கும் பதிகத்தால் அருளிச் செய்கின்றார்.

2. மெய்யா முயிர்நிலை. இறைவனுக்கு அடிமைப்பட்டிருத்தல், அவனடியார்க்கு அடிமைப்பட்டிருத்தல், பிறர்க்கு அடிமைப்படாதிருத்தல், ஞான ஆனந்தமயமாயிருத்தல் என்பனவாம். இவற்றில், இறைவனுக்கு அடிமை என்பதைப்

பற்றி, "ஏறாளுமிறையோனும் திசைமுகனும் திருமகளும்" என்று தொடங்கும் பத்துப் பாசுரங்களாலும், அவனடியார்க்கு அடிமை என்பதைப்பற்றி "பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக்கண்ணனை" என்று தொடங்கும் பதிகத்தாலும், பிறர்க் கடிமையன்று என்பதைப்பற்றி, "கருமாணிக்கமலை மேல் மணித்தடம் தாமரைக்காடுகள்போல்" என்று தொடங்கும் பதிகத்தாலும், ஞானனந்தமயமாயிருக்கும் என்பதுபற்றி "கண்கள் சிவந்து பெரியவாய் வாயும் சிவந்து கனிந்து" என்று தொடங்கும் பதிகத்தாலும் அருளிச் செய்கின்றார்.

தக்கநெறி. இதைப்பற்றி, "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று தொடங்கும் பதிகத்தாலும், "ஆராவமுதே அடியேனுடலம் நின்பால் அன்பாயே" என்று தொடங்கும் பதிகத்தாலும், "மானேய் நோக்கு நல்லீர் என்று தொடங்கும் பதிகத்தாலும், "பிறந்தவாறும் வளர்ந்தவாறும் என்று தொடங்கும் பதிகத்தாலும் அருளிச் செய்கின்றார்.

ஊழ்வினை. யானெனதென்னும் செருக்குக் கழிதல் வேண்டும் என்பதைப்பற்றி "வீடுமின் முற்றவும் வீடு செய்து" என்று தொடங்கும் பதிகத்தாலும் செல்வத்திலும் ஆத்ம அநுபவத்திலும் விருப்புறலாகாது என்பதைப்பற்றி "ஒரு நாயகமாயோடவுலகுடனாண்டவர்" என்று தொடங்கும் பதிகத்தாலும், சரீர சம்பந்தமான சுற்றங்கள் விலகவேண்டுமென்பது பற்றி "கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்" என்று தொடங்கும் பதிகத்தாலும் அசேவசேவை கூடாதென் பதைப்பற்றி, "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவன் கேண்மினோ" என்ற பதிகத்தாலும் அருளிச்செய்வர்.

வாழ்வினை. "எம்மாவீட்டுத்திறமும் செப்பம்" என்ற பதிகத்தாலும், "ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி என்ற பதிகத்தாலும், "நெடுமாற்கடிமை செய்வேன்போல்" என்ற பதிகத்தாலும், "வேய்மருதோளிணையும்" என்ற பதிகத்தாலும் அருளிச்செய்வர் என்க.

இதுகாறும் கூறியவாற்றான், மாறன்பணித்த மறையானது ஒரு ஊதியம் கிடைத்தல்வேண்டும் இசை நிலைபெறல்வேண்டும் எல்லாரும் கொண்டாடல் வேண்டும் என்பது கருதிப் பாடப் பட்டதன்றென்பதும், எல்லாம்வல்ல இறைவனால் மயர்வற மதிநலமருளப்பெற்று, முற்றுமுணர்ந்து, இறைவனோடு கலந்த ஆனந்த வெள்ளமானது வற்றாது முற்றாது உள்ளடங்காது வெளிப்போந்ததென்பதும், அதனால், அழிவற்றதும் ஆணை யுற்றதும் ஏதமற்றதென்பதும், ஆரியமறையுள் அயிர்த்தார் அயிர்த்தபொருள் வெளியாந்தெளிவுற்ற தென்பதும், கண்டு கேட்டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலன்வழியே அலைந்து திரியும் ஆன்மாக்களை, ஐம்பொருளுணர்வைத்தந்து தெருள்கொள்ளச் செய்து, பிறவிப் பெருங்கடலுக்குப் புணையாகி, அருளுடைய அறவாழி யந்தணன் தாளையடைவிக்கும் பெற்றியது என்பதும் நமக்கு விளங்குமாறறிக.

" மனையும் பெருஞ்செல்வமு மக்களுமற்றை வாழ்வுந் தன்னை
நினையும் பதமெனநின் றபிரான் குருகூர் நிமலன்
புனையுந்தமிழ்க் கவியாலிருணீங்கிப் பொருள்விளங்கி
வினையுந்திரிவுற்றன குற்றநீங்கின வேதங்களே '

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 10. பக்கம் 368.)

இயல் ரூ—காட்சி உ.

உறுப்பினர்:— காஞ்சிநகர் வேந்தன் தொண்டமான் இளந்திரையன்; ஔவையார்.

இடம்:— காஞ்சி மன்னன் மாளிகை

பொழுது:— மாலைப்போது

[ஔவையார், தொண்டமானை அஞ்சியின் நண்பனாக்குதல்]

தொண்டமான்:— மணிக்கோவையினால் அழகுபெறும் எடுப்பாகவுள்ள பக்கங்கள்பெற்ற அல்குலும், மடப்பமும், மையுண்கண்ணும், ஒளிமிகு நெற்றியும் பெற்ற விறலியர் தலைவீ! தங்களது பெரும்பரப்புடைய நாட்டில் என்னோடு போரில் வெற்றிகொளும் வீரர்கள் உளரோ?

ஔவையார்:— போர்ப்படைமிகுந்தவேந்தே! எமது நாடு, அடிக்கும் கோலுக்கும் அஞ்சாமற் சீறி எதிர்த்துவரும் பாம்பு போல, வலிமைபெற்ற இளமைமிக்க பல வீரர்களைப்பெற்றது ஆகும். இன்னும் பொதுமன்றத்தில் கொட்டுவாரற்றுத் தொங்கிக்கொண்டிருக்கும் முழவம், காற்றின் அசைவினால் சிறிதளவு ஓசையை எழுப்பினும் போர்ப்பறையின் முழக்கம் அஃது எனக்கருதும் எம்தலைவனும் உள்ளான்.

தொண்டமான்:— நன்று, என் அன்னையே! தாங்கள் எளியனின் போர்க்கலக் கூடத்தைக் கண்ணுற்றீர்களோ?

ஔவையார்:— அன்ப, நன்கு கண்டு மகிழ்ந்தேன். படைக்கலக்கொட்டிலில்உள்ள உனது படைக்கலன்கள் யாவும் மயிற்றோகையால் அலங்கரிக்கப்பெற்றுள்ளன: மாலைகள் சூட்டப்

பெற்றுமுள. அவற்றின் உடலிடந்திரண்டுள்ள வலியகாம்புகள் அழகுபெற அமைக்கப்பெற்றுள்ளன. இன்னும் நெய்தடவப் பெற்று, காவல்பெற்ற அகன்ற நகரத்தேயும் உள்ளன. ஆனால் செல்வம் வந்தபோது உணவு அளித்து, இல்லர்தநாளில் தாம் பெற்றதைப் பலரோடுங்கூடி உண்ணும் வறிஞர்களின் உற வினர்க்குத் தலைவனாய, எம் அதியமான்-அஞ்சி மன்னனின் கூர்மையான நுனியையுடையவேல், பகைவர்களைக் குத்துவதால் கங்குநுனிமுரிந்து கொல்லனது சிறிய உலைக்களத்தில் கிடக் கின்றன.

தொண்டமான்:— தமிழ்ப்பெருமாட்டியே, நும் அஞ்சி என்னினும் வலியன் ஆவனோ? நன்று கூறினீர்கள். பல்லாண்டு போர்ப்பயிற்சியும் முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற என்பால் அவனது திறமை என்ன ஆகும்?

ஔவையார்:— மறவீர், பாதுகாமின், யாம் கூறுகின்றேம். ஊர்ச்சிறுர்கள் ஆடுவதனால் கலங்கக்கூடிய காலினது அளவே யுள்ள குறைந்த நீரினில், இழுக்கும் வலிமைபெற்றமுதலை, யானை யைக் கொன்றுவீழ்த்தும். அஃதுஒத்தவன் எம் தலைவன் அஞ்சி. அவனது நுணுக்கமான பல செயல்களைக் கருதிப்பாராது 'இளைஞன் அவன்' என மதியாது பேசினால், நீவிர் வெல்வது அரிதாம்.

தொண்டமான்:—தமிழன்னாய்! அதியமான் நெடுமானஞ்சி, காஞ்சித் தொண்டமான் இளந்திரையனைவிடப் போர்ப்படை பெற்றவன் என்பதுதானே தங்கள் உள்ளக்கிடக்கை.

ஔவையார்:— அன்பு கெழுமிய வேந்தே! வேற்றுமை நாடாது யான் கூறுவதன் பொருளை செவிமடுப்பாய். அன்ப, உங்கள் இருவரையும் யான் நன்கு உணர்வேன். நீவிர் இருவீரும் ஒத்தநலனும் வலிமையும் கொண்டவர்கள் என்பது திண்ணம். ஆயினும், அஞ்சி, போராற்றல் படைத்தவன்; நீயோ, பெரும் படை கொண்டவன். ஆதலினால் நீவிர் இருவீரும் உம்முள் எவர் வலியவர் என நாட விழைவது நலனன்று. அதற்கு

மாறாக யான் விரும்புவது ஒன்றுண்டு. நீ தடைசெய்யாது, யாவர் நலனையுங்கருதி யுடன்படுவாயானால் அதனைக் கூற ஆணை தருக.

தொண்டமான்:— தமிழ்ச் செல்வி! உலகு இன்புறுதற்கு ஏதுவாய ஒன்றினை, யான் என்றும் தடைசெய்யேன். எனது இயல்புக்கு உரித்தாயின் யான் தங்களது ஆணையைமறுக்கேன். இஃதுறுதியே.

ஔவையார்:— கற்றவரைக்காக்கும் காஞ்சித்தலைவ! நீ நெடிது வாழ்க. ஒருநாள், யான் ஒரு சிறு சோலையையடைந்தேன். அஃது ஓர் அரிய பாலைவெளியிலிருந்தது. அவண் வாழ்ந்த ஒரு விறலி எளிய நிலையிலிருந்தாள்: அவளது கைகளில் சிலவளையல்களே காணப்பெற்றன. இன்னும், பதலை யென்ற ஒலிப்பறை ஒருபாலும், முழவம் என்ற அகத்துளை பெற்ற மற்றொரு கருவி மற்றோரிடத்திலும், கொட்டி ஒலி எழுப்புவாரற்றுத் தொங்கிக்கொண்டிருந்தன. கொடுப்போரின்மையால் அவளது 'திருவோடு' ஒன்றுமில்லாமற் கவிழ்ந்து கிடந்தது. 'என் பசிக்குரிய உணவால் இக்கடிஞையை நிரப்புவார் உண்டோ' என அவள் கூறியிருந்தாள். அஃதறிந்த யான் 'ஏ! விறலி! மிக்க அருகிலுள்ள ஓர் ஊரில் பல வேற்படைஞருடன் அஞ்சி என்ற மன்னன் உள்ளான்: போர்முனையில் பகைவரது ஊர்களைச்சுடுவதால் எழுகின்ற புகை, மலைகளைச் சுற்றிவரும் கரிய முகில் போல அவனது யானைகளைச் சூழ்ந்து வர பகைவரின் நாடுகளை வென்றவன் ஆவன். நீ, அவன் பாற் சென்று வழிபட்டால், என்றும் ஓயாமல் உண்ணுதற்குரிய கொழுப்புமிக்க உணவால் உனது திருவோடு தேனடைபோல பசையுற்றிருக்க, உலகம் வறண்டுபோகும் நாளினும் உன்னைப் புறக்கணியாது காப்பன். அவன்தன் திருவடி வாழ்க' என அவளை ஆற்றுப்படுத்தினேன். ஆதலால் பெரும! எம் போன்ற புலவர்கள் பாடுதற்குற்ற பெருமை பெற்றவனாய அவனது நற்றொடர்பு நினக்கு மிகவும் வேண்டற்பாலதெனவுணர்க.

தொண்டமான்:—தமிழ்த்தேவி! அதற்காக யான் என் செய்யவேண்டும்? மிக்க புகழ்பெற்றவனாக அவன் இருப்பின், யான் வலியச்சென்று புகவேண்டுமோ?

ஔவையார் :—அற்றன்று அரசே! அவன் சிறந்தவன் : வீரன்: புகழால் மிக்கவன்: இன்னும் நட்புக்கு மிகவும் உரியவன். அத்தகைய அஞ்சி இதுபோது, நின் நட்புப் பேற்றை நாடு கின்றான். நீ, ஏதேனும் அவன்பாற் சிறிது பிணக்கங்கொண் டிருப்பினும், இது போது அதனை அறவே நீக்கி, அவனுக் குற்ற உழுவலன்பினனாக ஆகவேண்டும். இஃதொன்றுதான் எனது உளங் கொண்ட வேண்டுகோளாகும்.

தொண்டமான்:—தமிழ்த்தாயே! தாய்சொல் தடுத்தல் தனயர்க்குத் தகுமோ? தங்கள் கருத்துப்படியே ஆகுக. எம் இருவரது நட்பும் நாளும் முற்பக்கத்துமதியம் போல முருகி வளரத் தாங்களே துணைபுரியவேண்டும். இனி எனக்கு என்ன குறை?

ஔவையார் :—இனிய நன் மொழிகளும் இன்பவாழ்வும் கொண்ட எம் வேந்தே! நினது இனிய தேன்போன்ற மொழிகள் எனது உளத்தை மிகவும் களிக்கச் செய்கின்றன. இன்று இவ்வுலகில் என்னினும் பேறுபெற்றார் எவரும் இல்லை யென்பேன். வாழிய மன்ன! நினது வாழ்வு ஓங்குக: நின் புகழ் நிலை பெறுக : நீயும் நெடுநாள் பன்னலமுஞ்சூழ வாழ்வா யாக!

இயல். ௩—காட்சி ௨. முடிவு.

இயல் ௩—காட்சி ௩.

உறுப்பினர் :— அம்பலவாணர் ; அணித்தலைவன்-கருணாகரத்தேவர் ; படை முதல்வன்-வீரப்பெருங்கோ ; தூதுவன்-பிறைமருடி.

[அதியமானிடம் திருக்கோவலூர் மலையமான் அடங்கி வாழத் தூதுபோக்குதல்.]

அம்பலவாணர் :—அதியர் வேந்தனின் ஆண்மை விளங்க கடுஞ் சமர்புரியும் வெற்றிமிகு தானைத் தலைவ! அதியனின் பெருமைக்கு ஆற்ருத மூவேந்தர்களும், முன்பு தமக்குத்துணைவர்களாக இருங்கோவேள்மான், எருமையூரன், திதியன், பொருநன் ஆயவரோடு போந்து, போர்க்களத்தே புறமுதுகிட்டுப் புண்ணடைந்து போயினமையை இத்'திருக்கோவலூர் மலையன்' ஏனோ உணராதொழிந்தனன். மூவர்க்கு முடிந்த முடிபே இம்மலையற்கும் ஆவது திண்ணம். வேளிர் மரபிற் றோன்றிய இவன், தம்மரபுக்கு அடுத்தவாறு ஆட்சிகொள்ளாது, அழுக்காறுற்று அதியர்கோவின் பெரும்புகழைப் பாழ்படுத்தக்கருதும் சிறுமதிபெற்ற அவ்வேந்தர்களின் நட்பிற்காக, எம்பெருமானுடன் வல்வழக்கிடுதல் ஏற்குமோ? என் செய்வது? மதிகெட்டகாளில் மாண்புறு நன்மொழி மறைவதியற்கையே. நன்று! கருணாகர! நம்படை வலி எவ்வாறுளது? நம்பகைவன் திருக்கோவன் மலையனுக்கு யாது செய்தியனுப்பலாம். இது பற்றிக் கூறுக.

கருணாகரர் :—பெருந்தகையே! நம் வீரர்கள் பகைவரின் காவலுற்ற அரணை யழித்தனர். பகைஞர் செருக்கழிய செருவாற்றியபோது நம்மவரது வாட்படைகள் மாற்றலர்தம் தசையிற் புண் தோன்றப்பதிந்து, உதிரம்தோயப் பெற்றும், என்புகளிற் பட்டமையால் முனை மழுங்கப்பெற்றும் உள்ளன. ஆதலால் அவை இப்பொழுது வடுக்கள் நிரம்பினமையால் வனப்பிழந்தன. நமது வேற்படைகளோவெனில், குறும்பர்கள் வாழும் அரண்களைக் கைப்பற்றிய நாளிற் பெரிதும் பயனுயின; அவை அக்குறும்பரின் மணந்தரு மதுமிக்க நாட்டைவென்று நமக்கு அளித்தன; ஆதலால் அவற்றின் சுரை பொருந்திய வலிய காம்புகள் ஆணிகள் இல்லாது ஆட்டங் கண்டுள்ளன.

வீரப்பெருங்கோ :—பெரும! நமது யானைகள் கணையமரத்தால் தாளிட்டுத் தடுக்கப்பெற்ற கதவுகளைத் தகர்த்து பகைவரது மிகுந்த யானைகளின் காவல்பெற்ற அரணையழித்தன : எனவே அவற்றின் கொம்புகளில் வலிமையாகஅமைக்கப்பெற்ற திண்மையான பூண்கள், கழன்று கிடக்கின்றன. மற்றும், நமக்குரிய குதிரைகளோ, போர் முனையில் எங்கணுஞ் சூழ்ந்துநின்று நம்முடன் தகுதியாகச் சமர்ஆற்றிய பகைவர்களது பசும்பொன் மாலைகள் அணியப்பெற்றஅவர்களது அகன்றமார்புகள் வனப்பு கெடுமாறு அவற்றை மிதித்துத் துவைத்து ஓடின. அப்போது நம் படைகளால் வருந்திய அப்பகைவர்களது உடல் உதிரம், நம் பரிகளது அழகுபொருந்திய குளம்புகளை மறுவாக்கின.

அம்பலவாணர் :—வீரத்தலைவர்களே! நமது வேந்தர்பெருமான் இப்பெரிய நிலவுலகத்தைத் தன்பாலடக்கி மேன்மையுறும் கடல்போன்ற நிரைந்த படைகளையுடையவனுவன். இன்னும் பொன்-தும்பை மாலை சூட்டப்பெற்ற, கழல், கிண்ணம்போன்ற வடிவமுற்ற அம்புகள்படுவதால் துளைக்கப்பெற்ற, கேடகத்தையுடையவன். எனவே, அத்தகைய ஆண்மைபெற்ற நம்மன்னனுல் வெகுளப்பட்டார் உய்தல் யாண்டுளது?

கருணாகரர்:—பெரும, யான் இன்றே நமது பிறைசூடியைப் போக்குவேன். பிறைசூடி! நீ இன்னே சென்று நம் பாடிப் புறத்துற்ற நம் பகைஞர் தலைவனை அணுகி, அவன்பால் யான் மொழிவதைக் கூறுக. அஃதாவது, "பெரிய தாள்களோடு நெருங்கிப் பின்னிக்கொண்டுள்ள நெற்கதிர்கள் மிகுந்த தலைமையான நும் பழைய வூரை நீவிர் அடைய விரும்பினுல் இன்னே எம் இறைவர்க்குத் திறை செலுத்தல் வேண்டும். மறுத்தால், வெற்றிச் சமர்புரியும் எம் அண்ணல் அதற்கு உடன்படார். என யான் கூறவும் கொள்ளீராயின், கழற்கனியால் வருக்கப்பெற்ற சுருண்ட இனமாகிய நெளிந்த மயிரினையும், குறிய வளையலையுமுடைய மெல்லியராகும் உமதுஅன்பிற்காகும் உரிமை மகளிரது அழகிய தோள்களைத் தழுவ இயலாது பிரிவீர்கள். இஃதோர் வியப்பன்று: நன்குணர்ந்து போருக்கு எழுக." எனவாகும். அறிந்தனையா?

பிறைசூடி :—பெரும, அவ்வாறே யாவும் கூறி வருவேன்; விடைபெறுகின்றேன். [தூதுவன் வணங்கிச் செல்லுதல்.]

இயல்—௩; காட்சி—௩ முடிவு.

கல்விச் செய்திகள்

காஞ்சிபுரம் இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திரு. C. R. இரட்டி அவர்கள் அனுப்பிய செய்தி:—

முதல் மூன்று பாரங்களில் இந்திமொழிப் படிப்பை கட்டாயப் படுத்த முயலும் அரசியலாரின் கொள்கையை மூன்று காரணங்களால் மறுக்கிறேன்.

பல்மொழிகளைக் கட்டாய பாடமாக்குவது தவறுபட்ட கொள்கை. அதனால் உண்மையான அறிவு வளர்ச்சி மழுங்கி விடும். தாய்மொழிப் பயிற்சி இன்றியமையாதது; அரசியல் மொழியாகவும் உலகப் பொதுமொழியாகவும் இருந்துவரும் ஆங்கிலமும் இன்றியமையாதது. இவற்றுடன் இந்தியையும் நுழைக்கத்தலைப்பட்டால், மாணவர்களைக் கிளிப்பிள்ளைகளாகச் செய்யலாம்; நல்லறிவுடைய குடிமக்களாக்க முடியாது.

ஆந்திரநாட்டிலில்லாத இடர் தமிழ்நாட்டில் ஒன்றுளது. தெலுங்கர் தென்னாட்டின் பரப்பெங்கும் குடியேறி இருக்கின்றனர். தமிழருடன் கருத்தொருமித்து இருந்தாலும், தமிழ் நாட்டில் குடியேறியிருக்கும் தெலுங்கர் தமது தாய்மொழியாகிய தெலுங்குமொழியைப் பேணிவளர்க்க விரும்புவதைத் தமிழர் மறுக்க வொண்ணாது. கல்கத்தாவிலுள்ள தெலுங்கப் பாடசாலை அரசியலாரின் பொருளுதவிக்கு உரித்தானதென்று அனுமதிக்கப் பெற்றிருக்கின்றது. அதுபோலவே தமிழ்நாட்டிலும் தெலுங்கப் பாடசாலைகளை அரசியலார் உதவியளித்து ஊக்குதல் வேண்டும்.

மூன்று பாரங்களில் கற்பிக்கப்படும் இந்தி வெகுவிரைவில் மறக்கப்படும். இந்திமொழியை இந்தியநாட்டு மொழி என இந்துக்கள் நினைக்கின்றனர்; மகமதியர் அதனை மறுக்கின்றனர். இந்திநாட்டுக் கூட்டங்கள், மாநாடுகள் முதலியன தலைவர்களின் காரியமாக இருக்கின்றன; அவை பொதுமக்களின் வேலை அல்ல. ஆதலால் நமது உயர்தரக் கல்லூரிப் படிப்பில் (College Courses) விருப்பபாடமாகவோ Part II-ல் உள்ள இற்றை இந்திய மொழிக்குழுவிலோ (Modern Indian Languages) வேண்டுமானால் இந்திமொழியைச் சேர்க்கலாமென்பது என்கருத்து.

இந்திமொழியைப் பயின்றால், வடநாட்டில் வேலைபெறலா மெனக் கூறப்படும் காரணம் எள்ளி நகைத்தற்கானது. மலேயா மொழிப்பயிற்சி இந்த நலத்தைத் தருவதாகும்! வங்காளி மொழி சிறந்த இலக்கியங்களை உடையது; புத்துயிருடன் ஊக்கம் ததும்புவது; சீரிய நோக்கங்களைக் கொண்டது. வங்காளிக்கு அடுத்தபடியாக சிறந்து விளங்குவது மராத்தி மொழி. இவற்றைக் கருதாது, கலைச்செல்வம் ஒன்றுமில்லா இந்தி மொழியை நாடுவதேனோ?

நடுத்தரக்கல்வி திட்டத்தில் இந்தியை வலிந்து நுழைப்பது தவறுபட்டகொள்கை; என்றாலும், இந்தியப்பொதுமொழியாகச்செய்யவேண்டும் என்ற ஆசையால் அது மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. உயர்தரக் கல்லூரிகளில் வேண்டுமானால் விருப்பபாடமாக அமைக்கட்டும்; College படிப்பில் Part II-ல் சேர்க்கப்படும் இற்றை இந்தியமொழிக்குழுவில் ஒன்றாக ஆக்கட்டும்; வேற்று மொழிபயில விரும்புவோர் குழுமிப்பயிலுதற்கு மாலை வகுப்புகள் வைத்து, அக்கரையுடையவர்கள் நடத்தட்டும்; நாளடைவில் இம்முயற்சிகள் நாடெங்கும் வளர்ந்துவரக்கூடும். தானே கனியாத கனியைத் தடிகொண்டு அடித்தால் என்ன பயன்!

அங்கிலமொழி அரசியல்மொழியல்ல வெனவும் இந்திமொழியே அரசியல்மொழி எனவும் செய்து, இந்திய ஆட்சியும், மாகாண ஆட்சிகளும், இந்திய அரசு எனவும் விதிக்கப்படும் காலம் வருமானால் அதுபோது இந்தியைக் கட்டாயபாடமாக்கலாம். முகமதியர்களும், நிறைந்த கலைச்செல்வங்களை உடைய திரவிட மக்களும் மும்முரமாக எதிர்க்கின்ற நிலையில் இந்திய அரசு வந்தாலும், இது நிறைவேறுமென நினைத்தற்கில்லை. அன்றியும் அக்காலம் கைக்கெட்டாத தொலைவில் இருக்கின்றது. கைக்குடத்து நீரை ஊற்றிவிட்டு வானத்து மேகம் பெய்யாதா வென அண்ணாந்திருப்பவன் கதைபோலிருக்கின்றது.

இந்தி—உருது விவாதத்தைத் தவிர்க்கும் கருத்துடையோர் இந்துத்தானி மொழியைக் கட்டாய பாடமாக்கலாமென்கின்றனர். இந்தியுமல்லாது, உருதுமல்லாத இந்துத்தானி மொழி, நூல் வழக்கில்லாதது. துளு மொழிபோல, நூலில்லாத மொழியே சிறந்ததெனுங் கொள்கை உரம் பெறுமானால், மாணவர் நூல் பயிலும் உழைப்பின்றியே இந்துத்தானியைப் பயிலலாகும்.

அங்கில எழுத்தும் தமிழ்மொழியும்:—கல்வி உலகத்தில் இந்தி—உருதுப்போரும் இந்தி—திரவிடப்போரும் நிகழ்ந்து கொண்டிருக்க இக்கூறிய மொழிகள் யாவும் (Romanscript) அங்கில எழுத்தில் எழுதப்படவேண்டுமெனும் கிளர்ச்சியும் தொடங்கியிருக்கின்றது. அரிபுரத்தில் அண்மையில் நடந்த காங்கிரஸ் தலைவர் திரு. சுபாசுசந்திரபோஸ் கூறுவது "இந்திய நாட்டில் வழங்கும் மொழிகள் அனைத்தையும் அங்கில எழுத்தில் எழுதவேண்டுமெனுங்கொள்கைமக்களுக்குத்திகிலைவிளைக்கலாம். கூர்ந்து நோக்கினுல் அதுவே அறிவுக்குப் பொருந்துவதாகும். அயன்மொழி எழுத்தை ஏற்பதும், நமது மொழிகளின் எழுத்தைப் புறக்கணிப்பதும் தேசிய மாகாதெனை யானே கருதியதுண்டு. 1934-ம் ஆண்டில் துருக்கி நாட்டிற்குப் போனபோது உலகெங்கும் வழங்கிவரும் மொழியின் எழுத்தையே கைக்கொள்ளுவதால் விளையும் நலங்கள் பலவெனக்கண்டு இப்புதிய கொள்கையே சிறந்ததெனை மாறினேன். இந்தியாவிலோ நூற்றிற்குத் தொண்ணூறு பேர்கள் படித்தறியாதவர். அவர்கள் எந்த எழுத்துப் பயின்றுலென்? அங்கில எழுத்துப் பயின்றுல் ஐரோப்பிய நாட்டுமொழிகள் யாவற்றையும் பயில வல்லுநராவோம்"

மதுரை Y. M. C. A. கழகத்தில் சொற்பொழிவாற்றிய Mrs. E. W. Wilder என்பார் "ரோமன் தமிழ்" எனும் பொருள்பற்றிப் பேசியது இக்கருத்தையே வலியுறுத்துகின்றது. தமிழ்நாட்டு மக்கள் கல்லா மாக்களாயிருப்பதன் காரணம் தமிழ் எழுத்துகள் சிக்கலானதும் 216 வடிவங்கள் கொண்டிருப்பதுமே என்கின்றனர். அங்கில எழுத்தை ஏற்றுல் 21, 28 எழுத்துருவங்கள் கற்பதேசாலும்; அஃது எளிதே கற்கலாகும். காந்தி அடிகளின் கருத்தும் இதுவே என மேற்கோளும் கூறுகின்றனர் "நமது நாட்டில் கற்றோர் 10-ம் கல்லாதார் 90-ம் இருக்கின்றனர். கற்றோராகிய பதின்மர் தாங்கள் அறிந்த மொழியின் எழுத்தையும், எழுத்தொலியையும் கல்லாதாராகிய தொண்ணூற்றுவரும் கற்கவேண்டும், பிறிதொரு மொழியையும் கல்லாதிருக்கவேண்டும் என்றெல்லாம் வலியுறுத்துவது ஞாயமா?".

இந்திக்கிளர்ச்சியே நாட்டில் பரபரப்பை உண்டுபண்ணி இருக்கின்றது; அதன் கட்டாயப் படிப்பால் மாணவர்களின் கல்வி முன்னேற்றம் தடைப்படும்; தாய்மொழிப் பயிற்சியும் கேடுறும்; என்றவாறெல்லாம் அறிஞர்கள் கண்டனம் செய்கின்றனர். இந்திக்கொள்கையினர் தமிழ், இந்தி முதலிய இந்திய நாட்டு மொழிகள் அனைத்தையும் அங்கில எழுத்தில் எழுதச்

செய்தல் நலமெனப் பேசத்துணிந்துவிட்டனர். இஃது என்ன மதியுடைமை?

அங்கில எழுத்துக்கள் 26-ம், அங்கில மொழியின் சொல்லாக்கத்திற்கும், ஒலிகளைக் கூறுவதற்கும் வகையின்றி தடுமாற்றத்தை விளைத்து மலைவிக்கின்றன. ஒரே எழுத்து பல ஒலிகளின் குறியீடாகஇருக்கின்றது; சில பலஎழுத்துகள் கூடுங்கால் அவ்வெழுத்துகள் குறிக்காத புதுவதான ஒலிகளின் குறியீடாகின்றது; சில சொற்களிற்காணும் எழுத்துகள் ஒலிகுறிக்காது வாளா இருந்தும் வருகின்றன. அங்கில மொழியின் எழுத்தியல், சொல்லியல்களின் குறைபாடுகள் எண்ணில.

தமிழ்மொழியின் எழுத்தியல், சொல்லியல்களின் சிறப்பு வேறெந்தமொழிக்கும் உரியதன்று. ஒலி இலக்கணம் (Phonetics) நன்குபயின்ற மொழிநூலார் இணையற்ற தமிழ் மாண்பை நன்கறிவர்.

"கல்லார் பிறர் இன்மை"யாலும், 'கல்விமுற்றவல்லார்' நிரம்பியதாலும், கலைமலிந்த தமிழ்நாடு, வேற்றரசின் வழிப்பட்ட காரணத்தால் மொழி வளர்ச்சியும் கலைப்பயிற்சியும் குன்றிவிட்டது. பண்டைத்தமிழ் நாகரிகத்தின் சீரியபண்புகளை உணரமாட்டாத வீணர்கள் இங்ஙனம் பிதற்றி வருகின்றனர்.

உசுமானியா பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா:— 1—3—38 நிகழ்ந்தது. பேருரை ஆற்றிய திருவாளர் Dr. C. R. ரெட்டியவர்கள் உசுமானியா பல்கலைக்கழகத்தினரின் உயர்ந்த நோக்கத்தையும், செய்வினையின் திறனையும் வியந்து பாராட்டினர். Sir.அக்பர் ஐதரி என்னும் பேரறிஞர், இப்பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு வேலைக்கென்றே (Translation Department)ஐ நிறுவினது ஒப்பற்ற செயல். மேனாட்டுக்கலை நூல்கள் யாவையும் உருது மொழியில் இயற்றப் பெற்று உயர்தரப்படிப்பிற்கு உதவிவருகின்றன. உருதுமொழியில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்பு வேலை இந்திய நாட்டுமொழிகளாகிய தமிழ், தெலுங்கு முதலியவற்றிற்கும் இயலுவதன்றோ! இக்கழகத்தில் பணி ஆற்றிவரும் ஆசிரியர்கள் நுண்ணிய அறிஞராய், ஊக்கமும், முயற்சியும் கொண்டு அறிவு நூற்றுறைகளில் புரிந்துவரும் ஆராய்ச்சிகள் (Researches) பேரறிஞர்கள் வியந்து பாராட்டுமாறு சிறந்த பயன்களை நல்கி வருகின்றன. விலங்கு நூல் (Zoology) பௌதிகநூல்(Physics) இயைபுநூல் (Chemistry) சிற்பம் (Engineering) இயந்திரம் (Mechanics) ஆதியகலைகளின் ஆராய்ச்சி மதிக்கத்தக்கன.

இக்கழகத்தினரின் அரிய செயல்கள் இந்நாட்டிலுள்ள ஏனைக் கழகங்கட்கு வழி காட்டியாக இருக்கின்றன.

மதிப்புரை

சீர்திருத்தப்பாடல்கள்.—I. சாமி. சிதம்பரனார் இயற்றிய சீர்திருத்தப் பாடல்களின் முதற்பகுதி, அறிவு, ஒற்றுமை, புரோகிதம், உழைப்பாளிகள், மாதர், மதம் என்னும் பொருள்கள் பற்றிய பாடல்கள் இதில் தொகுக்கப்பெற்றிருக்கின்றன. பொருள் விளங்குமாறு எளிய நடையில் இயற்றப் பெற்றிருக்கின்றது. தமிழ் மக்களின் சமயக்கொள்கைகளின் உண்மை நிலை காணமாட்டாதவர் அவற்றை இழித்துக் கூறுவது பெருவழக்காயிருக்கின்றது. சமயம், மனையறம், பெண்மைநலம் வாழ்க்கையின் நோக்கம் இவற்றின் உண்மையான பண்புகளைத் தமிழ்மக்கள் பண்டை நூல்களில் விவரித்திருக்கின்றனர். அவற்றோடு இந்த நூலில் வெளிவந்திருக்கும் சீர்திருத்தக் கொள்கைகளை ஒப்பு நோக்க, தமிழர் நாகரிகத்தின் சிறந்த பண்புகள் மறைந்து இற்றைநாளில் வாழ்க்கையின் நோக்கம் எத்துணை கீழ் நிலையை எய்தியிருக்கின்றதெனப் போதரும்.

கிராமச் சீர்திருத்தம்:—இந்திய நாட்டின் குடிமக்கள் கல்வி அறிவின்மையால், தத்தமக்கு ஆக்கந்தரும் தொழில்களில் ஊக்கமில்லாது குறிக்கோள் யாதுமின்றி வாழ்க்கையை நடத்தி அறியாமை, வறுமை, பிணி முதலியவற்றால் இன்னல்களில் ஆழ்ந்து, கிராமங்களை வறிதேவிட்டு நகரவாழ்க்கையில் மோகங்கொண்டு செய்வினை அறியாது குன்றுமுட்டிய குரீஇப் போல எதமுறுகின்றனர். இற்றைநாளின் தேவைக்கேற்ப கிராமச்சீரமைப்பு எனும் பொருளை 16 அங்கங்களாகப் பிரித்து, எளியநடையில், செவ்விய தமிழில் இயற்றி வெளியிடப்பட்டிருக்குமிந்நூல் அனைவர்க்கும் பயன்படுவதாகும். நூலாசிரியர் திரு. A. முத்தையா M. A., அவர்கள் பொருணூலின் நுண்மைகளை நன்கு ஆய்ந்து, தெளிவுற விளக்கியிருப்பது அவர் புலமையைத் தெரிவிக்கிறது. நல்ல தாளில் கண்கவர் வனப்புடன் சென்னை கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனியார் பதிப்பித்து மலிவான விலைக்குக் (ரூபா ஒன்று) கிடைக்குமாறு உதவியிருக்கின்றனர். இத்தகைய அறிவு நூல்களை கல்வித் துறையில் இருப்பவர்களேயன்றி பொதுமக்கள் அனைவரும் பேணிப் பாராட்டும் கடப்பாடுடையர்.

உ

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௰௫ | ஈசுவர பங்குனி | மலர் ௰௨

பாட்டின் பண்பு

திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், B.A., B.L.

பலவேறு வகைப்பட்ட எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் ஈர்ப்புகளுக்கும் தன் வாழ் நாளை ஒருவன் பங்கிட்டுக் கொடுக்கவேண்டியிருக்கின்ற இக்காலத்து, பாட்டின் இன்பத்தில் ஆழ்ந்து அதன் பயனைத் துய்க்கவல்லார் இவ்வுலகத்திலேயே ஒரு சிலராயினர். விரைந்து செல்லும் இக்காலத்தில் ஆரவமர்ந்து நீனிறமுகிலையும் பரந்த வானையும் கடலின் பரப்பையும் மலையின் மாண்பையும் கண்டு சிந்தித்துக்களிக்க வல்லார் யார்? தாமரை நாண்மலரின் தோற்றமும் நாற்றமும் எவர்கண்ணையுங் கருத்தையுங் கவர்கின்றது? தம்மை மறந்து ஆண்டவனையே யெண்ணிப் பாடுவன போன்று இன்னொலி பரப்பும் பறவைக் கூட்டங்களின் பண்ணும் நம்மைத்தம் வயமாக்கும் பெருமையை யிழந்தனவோ? இவ்வாறு பெருமையும் இனிமையு முடையனவெல்லாம் உள்ளத்தைக்

கவர்ந்து கொள்ளுதற்குத் தக்க வாய்ப்பு கொடாமல் செலுத்து கின்ற வாழ்க்கையே, நம்மவரைப் பாட்டின் பண்புகளுக்கு வேற்றாராகச் செய்துவிட்டது. இக்காலத்து, பாட்டின் நிலை இவ்வாறாயினும், மக்களை ஈடேற்றி இப்பொழுது உலகத்தி லடைந்துள்ள உயர்நிலையைப் பெறுவதற்குத் துணைபுரிந்தன வும் புரிவனவுமான பலவகைக் கருவிகளுள்ளும் பாட்டு முதன்மையாயது என்பதை எவரும் மறுக்க முடியாது. வானவூர்தியும், மின்பொறி விளக்கமும், முகர்ந்தோர்க்கோல்லியும் என இக்காலத்து மக்கள் அறிவு வளர்ச்சியால் இயற்றப் பெற்ற ஆக்குவனவும் அழிப்பனவுமான விளையாட்டுகளெல் லாம் தோன்றுதொழியினும் மக்கள் மக்களாகவே வாழ்ந்து வருதல் கூடும். பாட்டின் பயனொன்றை மக்கள் அறியாதிருப் பாராயின் மக்களுக்கும் விலங்குகளுக்கும் வேற்றுமையற்ற நிலையிலேயே உலகம் தங்கியிருந்திருக்கக்கூடும். எனவே, இவ்வாறு மக்களை மக்களாகச் செய்த பாட்டைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வது பழுதாகாதென்றெண்ணுகின்றேன்.

பாட்டு என்னுஞ் சொல்லால் நாம் தெரிந்துகொள்வது யாது என எவரேனும் வினவினாராயின் தக்கதோர் விடையை யளிப்பது எவருக்கும் எளிதெனக் கூற்முடியாது. என்றாலும் பாட்டென்பது எதுவென்று யாவரும் உணர்வர். பல பண்பு களையுந் தன்னிடத்தே அடக்கியுள்ள படியாலும் பரந்ததோர் நோக்கம் உடையதாதலாலும் அருகிய காலமும் குறுகிய வுணர்ச்சியுமுடைய மக்களால் அதன் பண்பும் பரப்பும் எத் துணையென்று வரையறுத்து முற்றவும் கூறவியலாது. பாட்டின் பண்புக்கு இலக்கணம் வகுக்கவந்த பல்லோரும் பாட்டின் ஒவ்வொரு பண்பையே சிறப்பாக எடுத்துக்கொள்வாராயினர். ஒருசாரார் இனிய ஓசையிலேயே யீடுபட்டுச் செய்யுளின் முதற் பண்பு செவிக்கினிமையே யெனக்கூறுவர். இத்தகைய கொள்கையுடையாரே பிற்காலத்து, பாட்டின் பண்புகளிலொன் றாய இசையைத் தனியாக வளர்த்து இசைக்கலையைப் போற்று வாராயினர். இவ்விசைப் பண்பையே பண்ணெனக் கூறுவர்.

ஆண்டவன் அடியிலேயே அன்பெலாம் வைத்த நம் அப்ப ரடிகள் இறைவனைக் கூறுமிடத்து 'பாட்டிற்பண்ணும்' என்றும் 'பண்ணிலோசை பழத்தினிலின்சுவை' என்றும்புகழ்வாராயினர். கம்பநாடரும் 'பண்ணிலாய பராவமுதம்' என்றார். இவ்வாறு உயர்ந்து சென்றார் ஒருபுறமிருப்ப, ஒலியின்பமே தலையெனக் கருதி, பொருட் செறிவை அறவே மறந்து இடர்ப்பட்டாரும் பலர். இக்காலத்திய இசைச் செய்யுட்கள் பலவும் இவ்விடர்ப் பாட்டிற்குட் பட்டனவாகும். இவற்றை யெல்லாம் பொருளி லொலி என மேனாட்டார் கூறுவர்.

"காடுமேவிய கண்டன முண்டன
வீடுமேவிய வீமன் விரும்பவே"

என ஓசை படச்சொற்களமைத்துப் பாட்டென மகிழ்வதெல் லாம் ஓசையிலீடுபட்டாரது தாழ்ந்த நிலைக்கு எடுத்துக் காட்டா கும். இசைப்பண்பு இவ்வாறாக, பாட்டின் பொருளைப்பற்றி ஆராய்வோமாயின் அதுவும் பலவகைப்பட்டதாகும். உலகத் திற் காணப்படும் இயற்கையெழிலையெல்லாம் ஒரு புலவன் தன் புலனாற்றுய்த்து இனியமொழிகளால் கேட்போருள்ளம் தான் கண்ட இன்பத்தையே கொள்ளுமாறு பாடுவது ஒன்று. இவ் வாறு பாடுவோரில் தான் கண்டதைக் கண்டவாறே பாடுவாரும், தான்கண்ட பொருள்களைத் தான் கொண்ட குறிப்பிலேற்றிப் பாடுவாருமாக இருதிறத்தாராவர். குரங்குகளை விளையாடும் போது கண்ட ஞானசம்பந்தப் பெருமான் தான் கண்டபடியே

'கைம்மக வேந்திக் கடுவனோடுடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி'

என்று கூறுவதும்; சங்கப்புலவருள் ஒருவர்

"கொடிச்சி காக்கு மடுக்கற் பைந்தினை
முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி
கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி
யங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன்
றிரையணற் கொடுங்கவு ணிறைய முக்கி
வான் பெயனனைந்த புறத்த" (நற்றிணை 22)

எனக் கூறுவதும் தாங்கள் கண்டதைக் கண்டவாறே கூறுவ

தற்கு எடுத்துக் காட்டாகும். பின்னர், இக்குரங்குகள் மரத்திலேறுகின்ற இயற்கையானசெயலொன்றைஞானசம்பந்தப்பெருமான் தன்னுள்ளத்திற்கொண்ட குறிப்போடு சேர்த்து, இறைவன் கோயிலை வலம்வரும் அடியவர்களது ஆடல்பாடல் ஒலிகளை இடியெனக்கருதி முகிலைப் பார்ப்பதற்காக மரமேறுகின்றன எனக் கூறும்

"வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தியலமந்து மரமேறி முகில்பார்க்குந்திருவையாறே"

என்ற பாடற்பகுதியும்; மேற்குறித்த சங்கப்பாட்டிலேயே அக்குரங்குகளின் தோற்றம் நோன்புடையார் தைத்திங்கட் பிறப்பிலே நீராடி நோன்பினை முடித்து உண்ணுவது போலிருக்கிறதெனக் கூறும்

"நோன்பியர்
தையூ ணிருக்கையிற் றோன்றும்"

செய்யுட்பகுதியும் தற்குறிப்பேற்றங்களாகும். சடற்கரையிலே தனித்து நின்று வெள்ளிய அலைகள் ஒன்றன்மேலொன்றாக வருகின்ற காட்சியைக் கண்ட புலவர்கள் தங்கள் தங்கள் உள்ளக் குறிப்பிற்கேற்பப் பாடுவதைப் பார்ப்போமானால் பொருளொன்றேயாயினும் காண்போர் காட்சிக்கும் கருத்திற்கு மேற்பப்பொலிவுபெற்றுப் பாடலுட் பயிலுமென்னும் உண்மையை நன்கு தெரியலாகும். மதுரை மருதனிள நாகனார் அலைகள் மணல் மேற்படுவது இளஞ்சிறார் கட்டும் சிற்றில்லை முதியோர் சிதைப்பது போலத் தோன்றுகிறதென்னும் கருத்துப்பட

'முத்தோ ரன்ன வெண்டலைப் புணரி
இளையோராடும் வரிமனை சிதைக்கும்'

எனக்கூறும் பகுதியில் மக்களியற்கையைக் கடலியற்கையிற் காணும் காட்சி நன்கு தெரிகிறது. கம்பநாடர் தன் கருத்தை இராமபிரானோடு சேர்த்து, கடலைக்கண்டபோது தன்னை மறந்தார்; காலமென்னும் பிரிவு தானாகவே மறைந்தது; தானும் இராமனும் கடலுமாகவே தனித்து நின்றார். பலகாலும் அலைந்து திரிந்து களைத்த திருமேனியோடு வருகின்ற இராமபிரான் அலையிலே துயில்கின்றவன் ஆகின்றமையின் அப்பெருங்

கடல் பாயலுதறிவிரிப்பது போற்றோன்றுகின்றதென அழகு படக்கூறும்

"சேயகாலம்பிரிந்தகலத் திரிந்தான் மீண்டுஞ்சேக்கையின்பால்
மாயன் வந்தானினி வளர்வானென்று கருதி வருந்தென்றல்
தூயமலர்போல் நுரைத்தொகையு முத்துஞ்சிந்திப் புடை
[சுருட்டிப்
பாய லுதறிப் படுப்பதே யொத்ததிரையின் ப்ரப்பம்மா"

என்னும் அரிய பாடலின் இனிமை, கம்பர் கண்ட கடலை நம் முள்ளத்திற் பதிவிக்கின்றது.

இம்மட்டோ, உலகவுண்மையையும் ஆண்டவனருளையும் அறிவதே நோக்கமாய் அலைந்த ஓர் பெரியார் கடலைக்கண்டார். "அந்தோ! யான் உண்மையறிய வாய்ப் பொன்று கிட்டியது. என் கண்கண்டமட்டும் கரைகாணாப் பெருங்கடல் எவ்வுண்மையையும் எனக்குரைக்க வல்லதாகும்" என மனவெழுச்சி பெற்றெழுந்து

"உரையிறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலேயிவ் வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னைவைத்தா ரியாரே பென்பேன்"

என வினவுகின்றார்.

மகளிர் கண்களைப் பார்த்த புலவர்கள் பலர் தங்கள் தங்கள் நிலைக்கேற்ப வாளெனவும் வேலெனவும் கூற்றெனவும் கடலெனவும் பலவாறு கண்ணின் அகலம் நீளம் முதலியவற்றைப்புனைந்து கூறுவதை யாவருமறிவர். இவ்வாறு இன்பத்தொடர்பான எண்ணங்களையே யெழுப்புகின்ற கண் சிந்தையைச் சிவன்பால் வைத்த வாதவூரடிகளது கடைக் கண்ணிற் கிலக்காயவழி எவ்வாறு மாறுகின்றதென்பதை யெண்ணும்போதெல்லாம் நாம் உயர்கின்றோம். அச்செய்யுள் பின்வருமாறு:—

ஈசற் கியான் வைத்த வன்பி னகன்றவன் வாங்கியவென்
பாசத்திற் காரென் றவன்றில்லை யின்னொளி போன்ற
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம் [வன்றோள்
பேசத் திருவார்த் தையிற்பெரு நீளம் பெருங்கண்களே.

இவ்வாறே இவ்வுலகத்திற்றோன்றும் பொருள்கள்கவிஞனது உள்ளத்திற்கேற்பப் பலவாறு விரிந்து காணப்பெறுகின்றன. இதனாலேயே பாட்டை நன்கு துய்த்துணர விரும்புவோர் ஆசிரியர்களது வரலாற்றை நன்கு தெரிய முயலுகின்றனர்.

ஓர் இசைக்கருவியின் பெயர்

திரு. S. இராமச்சந்திரன் B. A. தும்பகோணம்

" எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே." (தொல்-சொல்-கருடு) என்று முதலிற் கூறிப் போந்த தொல்லாசிரியர் பின்னர் "மொழிப்பொருட் காரணம் விழிப்பத்தோன்று" (தொல்-சொல்-நகூச) என்று கூறுவதற்கு, உலக வழக்கிலும் நூல் வழக்கிலும் சில சொற்கள் நாளடைவில் திரிந்தும், சிதைந்தும், போலிக்கருத்திலமைந்தும் வழங்கப்பெற்று வருவதும் ஒரு காரணமாகலாம். அங்ஙனம் உண்மைப் பொருள் காணலாகாமல் பிழைபட்ட கருத்திலமைந்த சில சொற்கள் இடையில் தோன்றி உண்மைப்பொருளுள்ள சொற்களுக்கு மாறாகப் பலராலும் வழங்கப்பெற்று உலவி வருகின்றன. இச்சொற்கள் உலவுவதால் எளிதிற் பொருளுணரலாகும் சில உண்மைப் பெயர்கள் வழக்கொழிந்து நாளடைவில் மறைந்தொழியும். ஆகையால் இச்சொற்களை மக்கள்வழக்கு நூல்வழக்கு என்னும் இரண்டினின்றும் விரைவில் நீக்குவதே சாலவும் நன்று. ஐரோப்பியர் உபயோகித்துவரும் இசைக்கருவியாகிய கிளாரனட் (clarionet) போன்ற நம் நாட்டு இசைக் கருவியின் பெயராக சென்ற சில ஆண்டுகளாக வழங்கிவரும் நாதசுவரம் என்னும் சொல்லும் மேற்கூறிய சொற்களில் ஒன்றே. இச்சொல்லின் பொருளற்ற தன்மையைக் காட்டுவதும் மற்றும் இவ்விசைக் கருவிக்கு உரிய சீரிய பெயர் யாது என்பதை ஆராய்ந்தறிவதும் இக்கட்டுரையின் நோக்கம்.

மேற்கூறிய இசைக்கருவி நம்நாட்டு துளைக் கருவிகளில் ஒன்று. இக்கருவிக்கு நாகசின்னம் என்றும் நாகசுவரம் என்றும் பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளது. சென்ற சில ஆண்டுகளாகவே நாதசுவரம் என்னும் பெயராலும் இக்கருவி வழங்கப்படுகிறது. ஸ்வயம்பு என்னும் சொல், சுயம்பு,

சொயம்பு, சயம்பு, எனவும், ஜ்வரம் என்னும் சொல், சொரம், சுரம் எனவும் உச்சரிக்கப்படுவது போல் நாகசுவரம் என்னும் சொல் நாகசுரம், நாக சொரம், நாகசரம் எனச் சிதைந்தும் உச்சரிக்கப்பட்டு வருகின்றது. நாகசின்னம் என்னும் சொல் நாசினம், நாயனம் என்னும் மரூஉச் சொற்களாகவும் வழங்கி வருகின்றது.

எடுத்துக்கொண்ட பொருள் மேற்செல்லுமுன் பொதுவாகச் சில செய்திகள் அறியவேண்டியுள்ளன.

இசைக்கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி என ஐந்துவகையாகப் பிரித்துள்ளார்கள். இவற்றுள் முதல் நான்கு வகைக்கும் பறை, குழல், யாழ், தாளம் முதலியன முறையே உதாரணங்களாம். இவை அவற்றின் கண் இயற்றப்படும் கொட்டல், ஊதல், தடவுதல் முதலிய தொழில் வேறுபாட்டிற்கேற்பச் செவ்விதின் அமைக்கப்படுவன. மிடறு என்பது தொண்டை.

முதல் நால்வகைக் கருவிகளின் வகையும், இனமும், அவற்றின் பெயர்களும், பரியாயப் பெயர்களும் இன்ன இன்னவென ஆராயுமிடத்து அவற்றிற்குரிய பெயர்களெல்லாம் பெரும்பாலும் அவ்வக்கருவியின் உருவம் பற்றியும், தொழில்பற்றியும், ஒலிக்குறிப்புப்பற்றியும் ஏற்பட்டுள்ளன என்பது தெரிகின்றது. கொம்பு, குழல், குடம், மொந்தை, திமிலை, வலம்புரி, சந்திர வளையம் முதலிய இசைக்கருவிகளுக்கு அவைகளின் உருவம் பற்றியும், தடாரி, கொட்டி, இடக்கை, விரலேறு முதலிய இசைக்கருவிகளுக்கு அவற்றின்கண் இயற்றப்படும் தொழில் பற்றியும், வீணை, உறுமி, கரடிகை, சல்லரி முதலிய இசைக் கருவிகளுக்கு அவற்றின்கண் உண்டாகும் ஒலிக்குறிப்புப் பற்றியும், பெயர்கள் இடப்பட்டுள்ளன தக்க எடுத்துக் காட்டாகும். இக்காரணங்களுள் ஒரு கருவியை நோக்கும் அளவிலேயே அஃது இன்ன கருவி என்று அறிதற் கியலுவது அதன் உருவமே யாகும். மற்றும் சில இசைக் கருவிகளின் பெயர்கள், அவைகள் எந்த முதற் கருவியினின்று ஏற்பட்டன என்ப

தையும் குறித்து நிற்கின்றன. எக்காளம், துத்தாரி, சந்திர மேளம், குடமுழவு, சிறுபறை முதலியன இதற்கு உதாரண மாகும்.

இனி, சென்ற சில ஆண்டுகளாக வழங்கிவரும் நாதசுவரம் என்னும் பெயரை நோக்குவோம். நாததத்துவம் ஆன்மாக் களுக்கு ஞானத்தைஎழுப்பும் ஓர்சுத்த மாயாகருவி, இதனினின் றும் கிரியைக்குக் காரணமாகிய விந்து சத்தியும், விந்து சத்தியி னின்று வன்னம், பதம், மந்திரம் ஆகிய மூன்று சப்தாத்து வாக்களும் அவையே கலை, தத்துவம், புவனம் ஆகிய மூன்று அர்த்தாத்து வாக்களும் ஆயின. இந் நாதத்திற்கும் சுவரத் திற்கும் நேரே எவ்வகைச் சம்பந்தமுமில்லை. நாதம் என் பதனை நாதன் என்பதனோடு பொருத்தி, தலைமையான சுவரம் எனப்பொருள் கொள்ளின் அப்போதும் சுரபேதங்களுக்காவது இக்கருவியின் சிறப்புக்காவது பொருத்தம் இலதாகிவிடுகின்றது. நாதம் என்பதற்கு ஒலி எனப் பொருள் கொண்டு ஒலிக்கும் சுவரத்திற்கும் ஒருவகைச் சம்பந்தம் உண்டு எனச் சொல்லப் புகின் அஃதும் ஏற்புடைத்தன்று. சிங்கநாதம், சங்கநாதம், என்பது போல் சுவரநாதம் என்று கூறுவது பொருளுடையதே யன்றி நாதசுவரம் என்று கூறுவது சரியன்று. மேலும் ஒரு கருவிக்கு இப்பெயரிடுவதும் சரியன்று. நாதசுவரம் என்னும் பெயரில் மேற் கூறியாங்கு இசைக்கருவிகளின் பெயர்களில காணப்பெறும் சிறப்புக்கள் ஒன்றும் காணப்படவில்லை. ஆன் றோர் எவரும் இச் சொல்லைக் கையாளவுமில்லை. சில இலக்கிய நூல்களிலும், கல்வெட்டுக்களிலும் இக்கருவி நாகசுவரம் என்று குறிக்கப்பட்டுள்ளதேயன்றி நாதசுவரம் என்று யாண் டும் எவரும் கூறவில்லை. எப்பழைய அகராதிகளிலும் இப் பெயர் காணப்படவில்லை. சென்னைப் பல்கலைக் கழக அகராதி யில் நாதசுவரம் என்னும் சொல் நாகசுரம் என்னும் சொல்லின் தற்கால வழக்குச் சொல்லாகக் காணப்படுகிறது. எனவே இக்கருவிக்கு நாதசுவரம் என்னும் பெயர் ஏற்புடைத்தன்று. முன்னர்க் கூறியபடி மக்கள் வழக்கு, நூல்வழக்கு இவ்விரண்டி

னின்றும் இச்சொல்லை விரைவில் விலக்குவதே நமது கடமையாகும்.

இனி நாக சுவரம் என்னும் சொல்லை எடுத்துக் சொல்லுவோம். பதினாறும் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இரத்தினகிரி உலாவிலும், பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கூளப்பநாயகன் காதலிலும் இவ்விசைக் கருவி நாகசுவரம் என்று குறிக்கப்பட்டுள்ளது. நாகப் பாம்பை மகிழ்விக்கும் சுவரங்களை ஒலிப்பிக்கும் கருவியாதல் பற்றி நாகசுவரம் என்று இக்கருவி பெயர் பெறுவதாயிற்று என்பர். இக்காரணம் போதியதல்ல. நாகப்பாம்பை மகிழ்விக்கும் மகிடி என்னும் துளைக்கருவியினின்று இக்கருவி ஏற்பட்டுள்ளது என்று சிலர் கூறுவர். மகிடியின் அமைப்புக்கும் இக்கருவியின் அமைப்பிற்கும் மிகவும் வேறுபாடுள்ளது. நாகம் என்னும் சொல்லுக்குத் தேவர் உலகம் என்று பொருள்கொண்டு தேவர் உலகத்து இசைக்கருவி என்று கூறலாமெனின் தேவர் உலகத்து இசைக் கருவிகளாகிய பஞ்ச வாத்தியங்களில் இஃது ஒன்றாகக் குறிக்கப் படவில்லை. மற்றும் நூல் வழக்கிலும் இதற்கு ஆதாரமின்று. முன்னர்க் கூறியாங்கு ஒரு கருவியின் பெயர் அதன் உருவத்தையோ, தொழிலையோ, ஒலியையோ பொறுத்திருக்கும் என்னும் கூற்றுக்கும் நாகசுவரம் என்னும் பெயர் மாறுபடுகின்றது. மற்றும் இதைப் பிற்காலத்துக் கருவியாகக் கொள்ளின் எப்பழங்கருவியினின்று இஃது ஏற்பட்டுள்ளது என்பதையும் நாகசுவரம் என்னும் பெயரைக்கொண்டு அறியக்கூடவில்லை. எனவே நாகசுவரம் என்னும் சொல்லை இக்கருவியின் சீரிய பெயராகக் கொள்ளப் போதிய காரணமில்லை என்பது அறியக் கிடக்கின்றது.

இனி எஞ்சி நிற்கும் நாகசின்னம் என்னும் சொல்லை நோக்கும் பொழுதே, இக்கருவி சின்னம் என்னும் இசைக்கருவியோடும் நாகப்பாம்பினோடும் ஏதோ தொடர்பு வாய்ந்துள்ளது போல் தெரிகின்றது. அதற்கேற்பவே, இக்கருவியை நோக்குங்கால், இக்கருவிக்கு முற்பட்ட குழல், சின்னம், என்னும்

இசைக்கருவி பேதங்களில் சின்னத்தின் இனமாய் ஊதுங் குழல் பொருத்தப்பெற்று, குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளை ஒலிப்பிக்கக்கூடிய துளைவகைகளை யுடையதாய் நாகப்பாம்பின் உருவத்தோடு அமைந்திருக்கின்றது. இக்கருவிக்கு முற்பட்டும், இதன் இனமாகவும் உள்ள சின்னம் என்னும் இசைக் கருவியினின்று இதை வேறுபடுத்திக் காட்டுவதற்கும், மற்றும் இது நாகப்பாம்பின் உருவத்தோடு அமைந்திருத்தலின் அதைக் குறித்து நிற்பதற்கும் நாகசின்னம் என்று இக்கருவி பெயர் பெறுவதாயிற்று என்று அறியக்கிடக்கின்றது.

இசைக்கருவிகளின் பெயர்கள் பெரும்பாலும் அவற்றின் உருவத்தைக் குறிப்பனவாக அமைந்திருக்கும் என்னும் கூற்றுக்கும், எந்த முற்பட்ட கருவியினின்று உண்டாயிற்றோ அதையும் குறித்து நிற்கும் என்னும் கூற்றுக்கும் இப்பெயர் பொருத்தமாக இருக்கின்றது. நாகப்பாம்பை மகிழ்விக்கும் சின்னம் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். எனவே நாகசுவரம் என்னும் பெயரைவிட நாகசின்னம் என்னும் பெயர் இக்கருவிக்குப் பல்வேறு வகையிலும் பொருத்தமும் ஏற்றமு முடையதாக இருக்கின்றது.

நாகசின்னம் என்னும் பெயரே இக்கருவியின் செம்மையான பெயர் என்றும் பெரியோர்கள் கூறக்கேட்டுள்ளேன். தமிழ்வழங்குந் தென் சில்லாக்களில் இக்கருவிக்கு நாகசின்னம என்றே பெயர் வழங்குகின்றது. இக்கருவியைச் செய்து கொடுக்கும் விசுவகர்மர்கள் இதை நாகசின்னம் என்றே கூறுகின்றார்கள். அவர்கள் தாங்கள் எழுதிவைத்திருக்கும், இக்கருவியை அமைக்கும் முறையை விரிக்கும் குறிப்புகளில் நாகசின்னம் என்றே குறிப்பிட்டுள்ளார்கள், பொதுமக்கள் இக்கருவியை நாயனம் அல்லது நாசினம் என்று வழங்குகின்றனர். இவ்விரண்டு சொற்களும் நாகசின்னம் என்னும் சொல்லின் மரூஉக்களே என்று முன்னர் கூறியுள்ளேன்.

நூல்கள் இயற்றுவதிலும் சிற்பக்கலைகளை ஆராய்வதிலும் அச்சிற்பக்கலைகளுக்கேற்ப கருவிகளை அமைப்பதிலும் திறமை வாய்ந்த மரபில் தோன்றிப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் "சம்பிரம வளம்பெருகு தென்பழனியம்பதி தழைக்கவரு சந்த்ரோதயம்" என மிகவும் புகழுடன் விளங்கிய பழனி மாம்பழக்கவிச்சிங்க நாவலர் அவர்கள் தம் நூல்களில் இக் கருவியை நாகசின்னம் என்றே குறிப்பிட்டுள்ளார். இந்நாக

சின்னத்தோடு மற்றும் பல இசைக் கருவிகளின் பெயர்களைக் கொண்டு நிற்கும் சில அடிகள் அவர் பிரபந்தத் திரட்டினின்று கீழே குறிக்கப்பட்டுள்ளன.

"தாளம் தவில்முரசு பூரி--நாகசின்ன மெக்
காளம் குழல்நகார்மல் லாரி—சல்லேரி சக்ர
வாளம் கிடுகிடெனும் பேரி—தடாரி சந்த்ர
மேளம் கானதாரைதுத் தாரி—சாரங்கி வீணை"
(முதல் பாகம்—பக்கம் 144)

கொம்புத வண்டைகு டம்பண வங்குழல்—நாக—சின்னம் சாரங்கி
தம்புரு வின்சுர மண்டலி ரஞ்சித—மோக—வீணைபிட்டில் வ
லம்புரி பம்பைத டங்கட லுண்டெழு—மேக—கர்ச்சனைபோல
பம்பிய திர்ந்துமு ழங்கவு டன்பல—மாகத்—தித்திகைத்தாளம்,
(இரண்டாம் பாகம்—பக்கம் 100)

"தார்கொண்ட டால்விரு தநேகஞ் சொலிப்பத் தடாரி தவில் நாக சின்னம்
தாரையெக் காளம் தவண்டைதுடி கொம்புதுத் தாரி சின்னங் களதிர"
(இரண்டாம் பாகம்—பக்கம் 101)

"மன்னுதவில் நாகசின்னமு மநேக மணமுரசமு மொலிமீற"
(இரண்டாம் பாகம்—பக்கம் 112)

பின் இரண்டு மேற்கோள்களிலும் நாகசின்னத்தையடுத்து அதனுடன் வாசிக்கப்படும் தவில் என்னும் தோற் கருவி வைக்கப்பட்டுள்ளது நோக்கற்பாலது.

இந்நாகசின்னம் என்னும் சொல்லின் செம்மைபற்றியே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுக்கப்பெற்ற சொல்லகராதியில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் இக்கருவியை நாகசின்னம் என்றே குறிப்பட்டனர். பிராகிருதமொழிகளில் யகரம் இடையில் வருதலுண்டு. ஆதலால் நாகசின்னம் என்னும் சொல் நாயகசின்னம் என்று யாழ்ப்பாண அகராதியில் காணப்படுகிறது.

எனவே முடிவாக நாதசுவரம் என்பது புதிதாகக் கற்பிக்கப்பட்ட பொருளற்ற சொல் என்பதும், நாகசுவரம் என்னும் சொல்லைவிட நாகசின்னம் என்னும் சொல்லே இக்கருவியின் சீரிய பெயர் என்பதும் அதுவே ஆன்றோர் வழக்கு என்பதும் பெற்றும்.

தமிழர் நாகரிகம்

(இளவழகனார்)

தமிழர் கல்விமுறை

ஒரு நாடு எவ்வாறு இருக்கவேண்டுமென்று திருவள்ளுவருக்கு நினைவு தோன்றுகின்றது. உலகம் போற்றும் பெரியாரான அவர் திருவுள்ளத்தில் அந் நினைவு தோன்றியது இம் மண்ணுலக நாடுகள் செய்த பெரும் புண்ணியமேயாகும். உடனே பெரியார் 'நாடு' என்று ஒரு தலைப்பிட்டு, ஈடும் எடுப்பும் இல்லாத தமது செந்தமிழ்த் தெய்வத் திருக்குறள் நூலிற் பத்துக் குறள்மணிகள் அருளிச் செய்கின்றார். அவற்றுள் முதற்குறள் ஒன்றுமே இதற்குப் போதும்.

"தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

என்பது அது. 'குறையாத விளையுளைச் செய்யும் உழவரும், சான்றோரும், தொலையாத பொருள்களைப் பெருக்கும் வாணிகரும் ஒருங்கு வாழ்வது நாடு' என்னுஞ் சிறந்த உண்மையை ஆசிரியர் இத்திருக்குறளில் இட்டு எழுதியிருக்கின்றார். ஆகவே, 'நாடு' என்றால் அதில் மூன்றுவகையானவர்கள் சேர்ந்து வாழவேண்டும் என்னும் அரும்பேருண்மை நமக்குப் புலனாகின்றது.

அவருள் ஒரு வகையார், நிலத்தை ஆழஉழுது நாட்டுக்குத் தேவையான விளைபொருள்களை விளைத்துத் தருவோர்; நெசவு முதலான கைத்தொழில்களைச் செய்து ஆடைமுதலான விளைபொருள்களை விளைப்போரும் இவருள் அடங்குதல் கூடும். ஆகவே, இங்ஙனம் விளைபொருள் செய்வோரால் வாழ்க்கைக்கு வேண்டும் எல்லாப் பொருள்களும் நாட்டிற் கிடைக்க எது வாயிற்றென்று தெரிந்துகொள்கின்றோம். இனி, மற்றொரு வகையார், நாட்டில் இங்ஙனம் விளைக்கப்பட்ட விளைபொருள்களை அயல்நாடுகளுக்குப் பண்டமாற்றுமுகத்தால் வாணிகஞ் செய்து பொருள் பெருக்குவோராவர். இதனால், விளைபொருள்

களேயல்லாமல் வாழ்க்கைக்கு வேண்டும் பணநடமாட்டமும் நாட்டில் உண்டாக ஏதுவாயிற்றென்று அறிந்துகொள்கின்றோம். தெய்வத் திருக்குறளுக்கு நுட்பஉரை உரைக்கும் ஆற்றல் பெரிது படைத்த உரையாசிரியர் பரிமேலழகர், மேற்காட்டிய இருவகையாருள் முன்னவரால் "வாழ்வார்க்கு வறுமையின்மை பெறப்பட்டது" எனவும், பின்னவரால் "அரசனுக்கும் வாழ்வார்க்கும் பொருள்வாய்த்தல் பெறப்பட்டது" எனவும் இவ்வுண்மையை நன்கெடுத்துக் காட்டினர்.

இனித், 'தக்கார்' என்னும் ஒருவகையாரை ஆசிரியர் திருவள்ளுவர் இவ்விருவரோடு இணைத்துரைத்த சிறந்த நுட்பத்தை உரையாசிரியர் எவ்வாறோ தமது மதிவலத்தால் மிகப் பெரிதுங் கூர்ந்தாராய்ந்து தெளிந்து மெய்வழி தெரியாமல் அலமந்து அல்லற்படும் இவ்வுலகத்துக்கு மிக்க இரக்கத்தோடு தமது அளக்கலாகா நுண்ணுரையில் வெளிப்படுத்தியருளினர். உலகத்தவர் வறுமையிலும் அறியாமையிலுமிருந்து நீங்கிப் பொருளும் அருளும் ஒருங்கே பெற்று இன்ப வாழ்க்கையுடையராய் உய்யும் பொருட்டு நம் தெய்வ ஆசிரியர் திருவள்ளுவப் பெருமானும், அவ்வாறு ஆழ்ந்த கருத்தறிந்து நுணுக்க உரை உரைக்க வல்ல தெய்வ உரையாசிரியர் பரிமேலழகரும் குழைந்த அருள் உள்ளத்துடன் இவ் வரும்பேருண்மையைத் தம் நூலிலும் உரையிலும் வெளியிட்டருளிய அரிய அருட்செயலுக்கு உலகத்தவர் என்ன கைமாறு செய்யப்போகின்றனர்!

'தக்கார்' என்பவர் சான்றோர்; இவரால் "அறிவின்மை பெறப்பட்டது" என்று உரையாசிரியர் விளக்கியுரைத்தார். இந்த ஒரு மொழியே உலகத்தை நன்னிலையில் இருத்தவல்லது. இவ்வொரு மொழியின் அருமை பெருமையை உணர்ந்தொழுகும் நாளே உலகம் அல்லல் தீரும் நாள். இவ்வொருமொழியின் இயக்கம் உலகம் முழுமையுங் கவ்விப் பரவுமாயின் ஏனை இயக்கங்கள் அத்தனையுங் கட்டாயமில்லாமற் போம். நல்ல வளம் உண்டாகும்; வறுமையே தலைகாட்டாது. நல்ல அறிவொளி உண்டாகும்; அறியாமையிருள் வலிதேய்ந்து கெடும். நல்ல குண நலம் உண்டாகும்; உலகம் இன்னலினின்று விடுதலையடையும்.

மக்களும் சிற்றுயிர்களும் அடையவேண்டும் அனைத்து நலங்களும் இவ்வொருமொழி யியக்கம் ஒன்றினால்மட்டுமே உலகம் அடைய முடியும். திருவள்ளுவர் அருளிய மொழி பொய்யா மொழி; அது நிலையானது; அது கலங்கரை விளக்கம்போற் பேரொளிகொண்டு வட்டமிட்டுத் திகழ்ந்து உலகத்தைத் தன் மாட்டு ஈர்க்கவல்ல பேராற்றல் படைத்தது. விளையுளைச் செய்வோரால் ஒரு நாட்டின்கண் தள்ளா விளையுள் உண்டாக, வாணிகஞ் செய்வோரால் தாழ்விலாச் செல்வம் உண்டாக, அருட் சான்றோரால் அவை இரண்டும் அதனால் நாடும் அழியாமை நிலைபெறும் என்றால், ஒரு நாட்டுக்குச் சான்றோர் எனப்படுவோர் எவ்வளவு முதன்மையானவராயிருக்கின்றாரென்பது சொல்லவும் வேண்டுமோ?

'தமக்கு ஆண்டு பலவாகியும் நரை திரை இல்லையே; இளமை குறையவில்லையே; இங்ஙனம் அழியாத இளமை பெற்றிருப்பதற்கு ஏதுவென்ன?' என்று கேட்ட கேள்விக்கு "ஆன்று அவிந்து அடங்கிய சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்று விடையெழுந்ததானால், நாட்டில் எதுவும்அழியாமலிருப்பதற்குச் சான்றோர்களின் தவ முயற்சிகள் எவ்வளவு உதவியாயிருக்கின்றனவென்பது நன்கு விளங்குகின்ற தன்றோ! "சான்றோர் பலர் யான் வாழும் ஊரே" என்றமையால், ஓர் ஊரிற் பெரும்பாலார் பண்டு சான்றோரா யிருந்தனரென்பதும், 'சான்றோ'ரால் அவ்வூரும் அதன் சுற்றார்களும் விளையுளும் செல்வமும் என்றும் அழியாமல் நன்கு நடைபெறப்பெற்று வளமாய் எல்லாம் இன்பமாய் விளங்கும் என்னும் அரிய உண்மையை நம் நாட்டவர் மிகப்பழைய காலத்திலிருந்தே தெளிய உணர்ந்து ஒழுகி வந்தார்களென்பதும் பெறப்படுதலின், அவை எவ்வளவு மாட்சிமையான நாகரிகமாயிருக்கின்றன பாருங்கள்!

கண்ணகி நல்லாள் என்னுங் கற்பின் மாது, தன் காதற் கொழுநனான கோவலன் பொற்கொல்லனொருவன் சூழ்ச்சியால் நடுவிகந்து கொல்லப்பட்டான் என்பது கேட்டுத் திடுக்கிட்டவளாய், ஆறாத் துயரத்தோடு அவன் கொலைசெய்யப்பட்ட இடத்துக்குத் தாவிச் சென்று, பொன் துஞ்சும் அவனது

அழகு உடலம் வெவ்வேறாய்த் துணிபட்டுப், புழுதிபடிந்து, குருதி வெள்ளத்தில் தரைமூழ்கிக் கிடப்பது கண்டு, பதை பதைத்து மேல் வீழ்ந்து 'கோ' வென்று அலறி அழுது புலம்புகின்றபோது, அப் புலம்பலினிடையே ஆ, "சான்றோ ரும் உண்டுகொல்; சான்றோரும் உண்டுகொல்" என்னும் அருமைத் திருமொழி தன்னை மறந்த உணர்வுநிலையில் அவள் பால் வீறிட்டு எழுந்தது! சான்றோரிருந்தால் இத்தகைய அழிவுநிலை இங்கே நிகழாதே என்பது அதன் கருத்தன்றோ! நமது நாட்டில் இவ்வுண்மை பெண்டிர்முதலாக எல்லாரிடத்தி லும் எவ்வளவு உணர்வு தோய்ந்த முறையில் முதன்மை பெற்றிருந்ததென்பது இதனால் நன்கு விளங்கும். ஆகவே, நாட்டின்கட் சான்றோர் மிகவேண்டும் என்று இங்ஙனம் பண்டு தொட்டே இயங்கிவரும் இச் 'சான்றோரியக்கம்' இப்போது நாடு முழுமையுந் தலைமை பெறுமானால் அப்போதுதான 'அது நாடு' என்னும் பெயருக்கு உரியதாகுமென்பது எளிதின் துணிதற்குரியதேயாம்.

இனி, விளையுள் செய்வோரும் வாணிகஞ் செய்வோருங் கூடச்சான்றோராயிருக்கலாம். கண்ணகி புலம்பல்கள்,

பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்! பெண்டிரும் உண்டுகொல்!
சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்!
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்! சான்றோரும் உண்டுகொல்!

என வருதலிற், 'கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம் பெண்டிர்' என்றமையால் இல்வாழ்க்கை நடத்துங் கற்பின் மகளிரும் 'ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம் சான்றோர்' என்றமையால் அவரால் ஈனப்படுங் குழந்தைகளை மேன்மேல் அறிவுநிலையில் உயர்த்து வளர்க்கும் அவர்தங் கணவருங் குறிக்கப் படுகின்றாரெனத் தெரிதலின், சான்றோரெனப்படுவோர் விளை யுளோ வாணிகமோ செய்துகொண்டு தங் காதன் மனையாளு டன் கூடி இல்வாழ்க்கை நடத்துவோராயு மிருப்பரென்பது

துணிந்துகொள்ளப்படும். அன்றி வேறு தொழிலொன்றுமே செய்யாமல், தவமுயற்சி யொன்றுமே முதன்மையாகக் கொண்டு சான்றோராய் நிற்பாரும் உண்டு.

பண்டைக் காலத்தில் அரசு நடத்தினவர்களும் செல்வர்களும் தம் நாட்டின்கட் சான்றோர்களை இருக்கச் செய்து, அங்கங்கும் அவர்கள் அருள் முயற்சிகட்கு ஏற்றவாறு மலர்ச் சோலைகளும், தெளிநீர் நிலைகளும், தவ இருப்புகளும், நூல் நிலையங்களும், விரிவுரையவைகளும், பிறபலவும் அமைத்துக் கொடுத்துத் தாமும் அச்சான்றோர் கருத்தின்வழி ஒழுகுவர். இவ்வாற்றால், நாட்டில் எல்லாச் செல்வங்களுங் குறையாமல் நிரம்பி, எங்கும் நல்லெண்ணங்களுந் தூய்மையுமே சூழவிட்டு அமைதியும் இன்பமும் நிலவும். நிலந்தரு திருவிற் பாண்டியன் என்னுங் குமரி நாட்டுப் பெருவள மன்னன், ஆசிரியர் தொல்காப்பியனார் அதங்கோட்டாசான் முதலான சான்றோர்களைப் பெரிது போற்றுங் கடமையுடையனாயிருந்த குறிப்புத் தமிழ் மொழியின்கட் பழைய செழுந்தமிழ் முழுமுதல் நூலான தொல்காப்பியம் என்னும் இலக்கணநூலிற் காணப்படுதல் கொண்டும், 'துஷ்யந்தன்' என்னும் வடநாட்டு வளமன்னன் கண்ணுவர் தவவிருக்கையைப் பாதுகாக்குங் கடமையுடையனாயிருந்த குறிப்பு வடமொழியின்கட் பழைய நல்லிசைப் பெரும் புலவரான 'காளிதாச' ரென்பவரால் அவரது 'சாகுந்தலம்' என்னும் அழகிய நாடகநூலிற் குறிப்பிடப்படுதல் கொண்டும் 'சான்றோர்களைத் தமது நாட்டில் இருத்திப் போற்றுதல்' என்னும் ஒரு புனித முயற்சி பண்டுதொட்டே இந் நாவலந் தீவின் அரசர்கள்பால் இருந்துவந்ததென்று நன்கு துணியலாம். பிற்காலத்திலும் 'ஹர்ஷன்' 'அசோகன்' முதலியோரும் இத்தகைய 'சான்றோர் இயக்க' நன்முயற்சியிற் சிறந்திருந்தனர். இன்னும், தமிழகத்திற் பண்டுதொட்டே இப் புனித நன்முயற்சியிற் பெருங்கண்ணாயிருந்த பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்; சேரமான் செல்வக் கடுங்கோவாழி யாதன், யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை;

சோழன் நல்லுருத்திரன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், வேள் பாரி, இருங்கோவேள், ஓய்மான் நல்லியக் கோடன் முதலான எத்தனையோ வேந்தர்கள் செல்வர்களான பெருமக்களேயும், அங்ஙனமே இத்தமிழகத்திற் சான்றாண்மை யைத் தம்பால் மலர்த்துக்கொள்ளுதலிலேயே பெருங்கண்ணு யிருந்த தெய்வத் திருவள்ளுவர், ஔவையார், கபிலர், மாங்குடி மருதனார், கோவூர் கிழார், பெருந்தலைச் சாத்தனார், பெருஞ் சித்திரனார், பிசிராந்தையார், மாறோக்கத்து நப்பசலையார் முதலிய எத்தனையோ ஆண் பெண்பாலாரான சான்றோர்களை யும் இங்கே எடுத்துக்காட்டப் புகுந்தால் இது வரம்பின்றி விரியும். ஆகவே நமது நாடு, 'நாடு' என்னும் பெயருக்கு உரியதாய்த் திகழவேண்டுமானால், நம் நாட்டுமக்கள் கல்வி, அறிவு, உழவு, வாணிகம், ஏனைக் கைத்தொழில்கள் முதலிய வற்றிற் சிறந்திருத்தலோடு மெய்யுணர்வும் நல்லொழுக்கமும் உள்ள சான்றோர்களாயும் உயர்ந்து திகழவேண்டுவது மிகவுங் கட்டாயமாகுமென்று உறுதியாய்த் தெளியப்பெறுகின்றோம். 'சான்றோர்' என்னும் பெயருக்கு ஓர் ஒப்பரிய உரைகல்லாய் விளங்கிய திருவள்ளுவப் பெருமான் 'தமிழ்' என்னும் மொழி யறிவும், 'உழவு' என்னுந் தொழிலறிவும் உடையராய் அவற் றோடு சான்றோராந்தன்மையும் பெற்றுச் சிறந்திருந்தனரன்றோ!

இச் சான்றோராந் தன்மையைப் பண்டைக் காலத்து ஆசிரியர்கள் 'அறம்' 'துறவு' 'அந்தண்மை' 'சான்றாண்மை' முதலான பல பெயர்களாற் சிற்சில படிமுறைகளுடன் வழங்கி னர். மேல் திருக்குறளுரையில், "அறவோர், துறந்தோர் அந்தணர் முதலாயினர்" என்று பரிமேலழகர் உரைப்பதும் இதனை மெய்ப்பிக்கும். "அந்தணர் என்போர் அறவோர்" என்பதும் இங்கு நினைவுகூர்தற்குரியது. இப்போது நாம் அதனை எவ்வேறுபாடுகட்கும் இடமில்லாமற் 'சான்றாண்மை' என்னும் பெயரால் வழங்குவோம். வழங்கவே, முதலிற் காட்டிய 'தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல் வரும்' என்னுந் திருவள்ளுவப் பெருமான் கருத்துப்படி நம்

நாட்டுமக்கள் 'உழவு, சான்றாண்மை, வாணிகம்' என்பவற்றிற் சிறக்கவேண்டும் என்று சுருக்கமாய் உரைக்கலாம். இத்தகைய நல்ல துறைகளில் மக்களை இளமையிலேயே பழக்கும் அருள் நிலையங்களே இப்போது நமது நாட்டுக்கு இன்றியமையாதன வாயிருக்கின்றன.

இனி, எழுத்தறிவும், இலக்கண அறிவும், கணக்கறிவும், ஏனைக்கல்வியறிவுமெல்லாம் இத்திருக்குறட் பொருளான உழவு, சான்றாண்மை, வாணிகம் என்னுஞ் சிறப்பியல்களுக்குமுன் அவற்றோடு ஒத்த நிலையில் ஆசிரியர் திருவள்ளுவப் பெருமானால் எண்ணியுரைக்கப்படாத பெருநுட்பமுங் கண்டுகொள்ளல் வேண்டும். எழுத்தறிவு கணக்கறிவு முதலானவை இம் மூன்று சிறப்பியல்புகளுக்கும் பொதுவானவையென்க. எழுத்தறிவு முதலான கல்வியறிவுகள் உழவுசெய்வோர்க்கும் வேண்டும்; வாணிகஞ் செய்வோர்க்கும் வேண்டும். பண்டைக் காலத்தே சிறந்த உழவு தொழிலாளரான ஆலூர் கிழார் கூடலூர் கிழார் முதலியோர்க்கும், சிறந்த சான்றாண்மை நடத்துவோரான கபிலர் இளங்கோவடிகள் முதலியோர்க்கும், சிறந்த வாணிகஞ் செய்வோரான உறையூர் இளம்பொன் வாணிகனார் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் முதலியோர்க்கும் நல்ல எழுத்தறிவு, இலக்கண அறிவு, கணக்கறிவு, ஏனைக் கல்வியறிவு என்னும் இக் கலையறிவுகளெல்லாம் இனிது நிரம்பியிருந்தமை நாடறிந்தனவேயாம். நாட்டின் வளர்ச்சிக்கு எழுத்தறிவு முதலான இப் பொதுவியல்புகளினும் பார்க்க, அவற்றோடு கூடிய உழவு சான்றாண்மை வாணிகம் என்னும் சிறப்பியல்புகளே முதன்மையானவையென்பது ஆசிரியர் திருவள்ளுவர் கருத்து. இச் சிறப்பியல்புகள் மூன்றனுள்ளும் சான்றாண்மையை முதன்மையாகக்கொண்டே ஏனை உழவு வாணிகங்கள் நடைபெறுதல்வேண்டுமென்பதும் அப் பெரியார் திருவுளமாகும். அவ்வுண்மை, அவர் ஏனை இரண்டுக்கும் நடுவே அச் சான்றாண்மையை நடத்துந் 'தக்கார்' என்பாரை முதன்மை பெற வைத்தமையினாலேயே நன்குணரப்படுதலோடு, ஏனை உழவு வாணிகங்கள் அழியாமல் நிகழப்பெறுதற்குத் 'தக்கா'

ரது சான்றாண்மையே ஏதுவென்று உரையாசிரியர் பரிமேலழ கரும் முதன்மை தந்து உரைத்தமையினாலும் மேலும் ஐயுற வின்றி இனிதுணரப்படுமென்பது.

உற்றுழி யுதவும் ஊன்றுகோல் போன்ற இத் திருவள்ளு வரின் திருந்திய கருத்துகட் கிணங்கவேதான், சான்றாண்மை யை முதன்மையாகக் கொண்டு ஏனை உழவு வாணிகங்களான சிறப்பியல்புகள் எண் எழுத்துக்களான பொதுவியல்புகளுடன் இனிது நடைபெறுவனவான உயர்ந்த 'குருகுலக் கல்விக் கழ கங்கள்' பண்டைக்காலத்தில் அங்கங்கும் விளங்கித் திகழ்ந்தன. பதினாறு ஆண்டுகட்கு உட்பட்ட சிறுவர்கள் அக் குருகுல நிலை யங்களில் ஐந்தாண்டுதொட்டே அமர்ந்து அவ்விடத்திலேயே உண்டு உடுத்து, நிலைய ஆசிரியர்களோடு ஒருங்கிருந்து பழகிப் பொதுவியல்பான கலையறிவுஞ் சிறப்பியல்பான தொழிற் பழக்கமும் ஒருங்கு நிரம்பப் பெற்று இவையெல்லாவற்றினும் மிகச் சிறந்ததான சான்றாண்மையும் வாய்ந்து மேன்மக்களாய் உயர்ந்து, பின் அக் குருகுல நிலையங்களினின்று வெளிப்பட்டுத் தத்தம் இல்லம் எய்தித் திருமணங்கூடி நாட்டின் நல்லொளி களாய் வறுமையறியாதுங் கவலையறியாதும் வாழ்க்கை நடத்து வாரானார். தமக்கிசைந்த மணமகள் வாய்க்கப்பெறாத சிலர் தூய துறவுகோலம் பூண்டு இங்ஙனமே 'குருகுலக் கல்வி நிலை யங்கள்' கோலி, அவற்றின் திருப்பணியிலுந் தலைப்படுவா ரானார். இங்ஙனங் குருகுலக் கல்வி நிலையங்கள் நடத்தும் ஆசிரியரிற் பெரும்பாலார், திருமணங்கூடி வாழ்க்கை நடாத்திப் பின் சில காலங்கழித்துக் கலைமுதிர்ச்சியும், உலகியற் பழக்க மும், உள்ளத்தகுதியுந் தக்காங்கு வாய்ந்தபின், தாம் வாழ்ந்த ஊருக்கு அருகிலோ அல்லது விரும்பிய வேற்றிடங்களிலோ சோலையுஞ் சாலையும் ஆறும் அருவியுங் காடும் மலையுமான இயற்கையழகுகள் நனிசெறிந்து சிறந்து விளங்குந் தனி இருப்புகளில் தம் அகன்ற தவ இருப்புகள் நிறுவித், தம் மனைவி மக்கள் ஒக்கல்களுடன் அருளில் வாழ்வோரேயாவர்.

இத்தகைய மேதகவினர்பால் உயர்ந்த அருளொளி கிளர்ந்து தோன்றி, அவரிருக்குங் கல்வி நிலைய முழுது நிரம்பி

நாலாபக்கமும் வட்டமிட்டுச் சுழன்றொளிருமாகலின், அங்குச் சென்று பழகும் மாணாக்கர்கள் அவ்வருளொளிப் பெருக்கில் ஆர அமரப் படிந்து தம் உடம்பூடும் உணர்வூடும் நுண்மையுந் தூய்மையும் ஊடுருவப் பெற்று அதனால் ஏனையெல்லா அறிவு உணர்வு அருளாற்றல்களும் அவற்றின் நலங்களும் படிப்படியாக நிரம்ப எய்தித் திருந்தி மேம்படுவர். தவத்தான் மிக்க இத்தகைய அருளொளிக் கல்விக் கழகங்களே நமது நாட்டிற் பண்டுதொட்டுப் பள்ளிக்கூடங்கள் என்னும் பெயராற் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றன. 'பளிச்சிடுதல்' என்றால் 'ஒளி விடுதல்' என்பது பொருள். இவ்வொளிவிளக்கத்தினாற் கண்ணாடியும் 'பளிங்கு' எனப்பட்டது; கருப்பூரமும் 'பளிங்கு' எனப்பட்டது. (சிந். ௧௧:௩௰) கருப்பூரத்துக்குப் 'பளிதம்' என்பதும் ஒரு பெயர் (பரிபா, ௰:௮௨). ஆகவே மேலே காட்டிய 'அருளொளி நிலையங்'கட்கும் 'பள்ளி' என்பது பொருத்தமான பெயராகவே அமைந்தமை நன்கு தெளியப்படும். எல்லாவற்றிற்கும் 'பள்' என்பதே முதனிலை. 'ஒளி' யென்பது அதன் பொருள். தவக்கோட்டத்துக்கும் இப்பொருள்பற்றியே 'பள்ளி' யென்னும் பெயர் வந்தது. உறக்கத்தை யுணர்த்தும் போதும் 'பள்ளி' யென்னும் சொல் ஒளியுள்ள அறிதுயிலையே உணர்த்துமென்க. 'திருமால் பள்ளிகொள்கின்றார்' 'திருப்பள்ளியெழுச்சி' முதலான வழக்குகள் இவ்வொளிதுயிலையே உணர்த்துகின்றன. இவ்வாறு பல. மிகப் பழைய காலங்களில் இங்ஙனந் தவவொளி மிக்க சான்றோர்கள் ஆசிரியர்களாய்த் திகழ்ந்தனர். மாணாக்கர்களும் அவர்கள் தவப் பள்ளிக்குச் சென்று தம் அறிவொளி முதலியன நிரம்பப் பெற்றனர்.

இத்தகைய 'குருகுலக் கல்லூரிக'ளாற் பண்டு நமது நாடு, 'நாடு' எனப் போற்றத் தகுந்த முறையிற் சிறந்திருந்தது. இக்காலக் கல்விமுறை முற்காலக் கல்விமுறையினும் முற்றும் மாறாக உள்ளது. இக்காலத்திற் கல்லூரிகளிலிருந்து வெளிவரும் பிள்ளைகள் எண் எழுத்து முதலான பொதுவியல் திறங்களை ஓரளவுக்குப் பொதுவாகப் பயின்று வருகின்றார்களேயல்லாமல், உழவு சான்றாண்மை வாணிகம் என்னும் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத சிறப்பியல் திறங்களில் எல்லாரும் நிரம்பிவருதலில்லை. ஆதலால், அப் பிள்ளைகளால் நாட்டுக்கு ஆவதான பெரும்பயன் ஒன்றுமில்லாமற்போகின்றது. அன்றி அவர்தாமும், 'வையத்து வாழ்வாங்கு வாழும்'

வகையறியாதவராய் அலமருகின்றார். எழுத்து, இலக்கணம், கணக்கு, ஏனைக் கலைகள் என்பவற்றை விளைபொருள் சான்றாண்மை வாணிகம் என்னுஞ் சிறப்பியலறிவினின்றும் வேறு பிரித்து, அவற்றைமட்டுமே முதல் நோக்கமாகக் கொண்டு இக்காலக் கல்வித்திட்டம் அமைந்திருப்பதும், அதன்வழியே கல்லூரிகள் நடைபெறுகின்றமையுமே இதற்கு ஏது. தெய்வத் திருவள்ளுவரின் மெய்க்கருத்துக்கு மாறுபட்டால் நமக்கு உய்தியில்லை.

திருவள்ளுவப் பெருமான் வகுத்துத் தரும் திட்டங்கட்கு முதன்மை தந்து அவர் கருத்தின் வழியே நடைபெறும் அழகிய நோக்கமுள்ள தமிழ்க் கல்லூரிகளே தமிழகத்துக்கு இன்றியமையாதனவாம். இப்போது நடைபெறுங் கல்லூரிகளையுந் திருவள்ளுவர் தந்த கல்வித்திட்டப்படியே மாற்றியமைக்க முயலலாம். அக்கல்லூரிகளிலிருந்து வெளிவரும் பிள்ளைகள் விளைபொருள்கள் உண்டாக்குதல், சான்றாண்மை நடாத்துதல், வாணிகம் செய்தல் முதலான வாழ்வியல் துறைகளில் வல்லமையும் பழக்கமும் வாய்ந்தவர்களாய், இவற்றிற்குக் கருவியாகவே எழுத்து இலக்கணம் கணக்கு முதலான கலையறிவுத் துறைகளைத் தம் தாய்மொழி வாயிலாகவே நன்கு பயின்றவர்களாய், இவையெல்லாவற்றின் பயனாகச் சிறந்த சான்றாண்மைக்கே முதன்மை தந்து அதன்கண் மாட்சிமை மிக்கவர்களாய் வெளிவருமாறு செய்ய எல்லா நன்முயற்சிகளும் அங்கங்கே நடைபெறுதல் வேண்டும். கல்வித்துறையில் இக்காலத்தில் முற்றிய அறிவும் பழக்கமுமுள்ள பெருமக்களும், வரவர, ஆசிரியர் தெய்வத் திருவள்ளுவர் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே முடித்துக் காட்டியருளிய இவ்வுயர்ந்த கல்வித்திட்டத்துக்கே இன்று இயைந்துவரக் காண்கின்றோம். இது நாட்டின் நல்ல காலமென்றே சொல்ல வேண்டும். என்னே! தெய்வத் திருவள்ளுவரின் அழியாப் பெருமாட்சிமை! எக்காலத்துக்கும் உதவும்படி தமக்கு அமைந்துள்ள அழியாத் தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் மக்கள் தக்கவாறு தெரிந்தொழுகினால், அஃதவர்கட்கு எவ்வளவு நலஞ் செய்வதாயிருக்கும்!

சேக்கிழார் காலம்

திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்
ஆசிரியர், திருவையாறு.

சைவ சமயத்தின் வலக்கண் போல்வதாய், தேவார முதலிய திருநெறித் தமிழ்மறைகளுக்கு ஓர் விளக்கவுரை யனைய தாய், அன்புநெறிச் செல்வர்க்கோர் பெருவிளக்காய் விளங்குந் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தைப் 'பத்திச்சுவை நனிசொட்டச் சொட்ட'வும், செந்தமிழ் நறு மணம் திசைதொறுங் கமழவும், அருளிச்செய்த பெரியார் சேக் கிழாராவர். அப்பெரியார் தன்கண் தோன்றும் பேறு பெற்ற திருப்பதி 'சான்றோ ருடைத்தெ'ன ஆன்றோர் புகழ்ந்த தொண்டை நன்னாட்டுப் புலியூர்க் கோட்டத்து அமைந்த குன் றாப்புகழ்மலி குன்றத் தூராகும். 'உலகத்துக்காணி' எனத் திருவள்ளுவர் புகழ்ந்த காளாண்மை மிக்க வேளாண் குலத்திற் சேக்கிழார் குடியில் தோன்றி, அருண்மொழித் தேவர் என்னும் பிள்ளைத் திருப்பெயர்பெற்ற இவர் அக்குலத்துக்கு ஒரு திலக மென முதன்மை பெற்றுத் திகழ்ந்ததால் சேக்கிழார் என்ற குலப்பெயராலேயே குறித்தழைக்கப் பெற்றார்.

கல்வி கேள்விகளில் நிறைந்து திருந்திய ஒழுக்கம்வாய்ந்து விளங்கிய சேக்கிழாரைச் சோழ மன்னன் தனக்குக் கண்ணனைய சூழ்ச்சித் துணைவராகக் கொண்டு உத்தமச் சோழப் பல்லவன் என்ற சிறப்புப் பட்டமளித்துப் பாராட்டி வாழ்ந்தான்.

அந்நாளிலே அம்மன்னன் தமிழ்ச்சுவை திளைத்தல் ஒன் றனையே பெரிதும் விரும்பிச் சீவகசிந்தாமணி என்னும் சமண காவியத்தைப் படித்தின்புறுவதிலே பெரும்பொழுது போக்கு வதைக் கண்ட சேக்கிழார், அவனைத் திருத்தி நன்னெறியிற் செலுத்தத் திருவுளங்கொண்டு 'அரசே, சமணர் பொய்ந் நூலாகிய இது மறுமைக்காகாது'. இம்மைக்கும் அப்படியே.

ஆதலால் இம்மை மறுமை இரண்டினுக்கும் சிவகதை உதவும் என்றார். அத்தகைய சிவகதை எது? என அரசன் வினவ, சுந்தரமூர்த்திநாயனர் பாடிய திருத்தொண்டத்தொகையையும் அதை விரித்து நம்பியாண்டார் நம்பிகள் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் கூறி அவற்றுளடங்கிய நாயன்மார் வரலாறுகளையும் சொல்ல, அரசன் கேட்டு, அவற்றைச் செந்தமிழ் வளந்ததும்பக் காவியமாகப் புனைந்து தருமாறு வேண்டினன்.

அவ்வேண்டுகோட்கு இணங்கிய சேக்கிழார் தில்லைநகர் சென்று, கூத்தப்பிரான் திருமுன்னிலையில் வணங்கி அருள் வேண்டி நிற்ப எம்பெருமான் திருவருளால் 'உலகெலாம்' என்ற திருவாக்கு எழுந்தது. அதையே முதற் சொல்லாகக்கொண்டு திருவருட்டுணையால் பெரிய புராணத்தைச் சேக்கிழார் பாடி முடித்தார்.

அதை யறிந்த வளவன் தில்லையடைந்து, புராணத்தை அரங்கேற்றுவித்துச் சேக்கிழாரை யானைமேலேற்றி ஊர்வலஞ் செய்வித்து, தன் இருகையாலும் அவருக்கு வெண்சாமரைவீசிப் பெருமைப்படுத்திப் பேறு பெற்றான். நம்பியாண்டார் நம்பிகள் வகுத்தருளிய பதினொரு திருமுறைகளுடன் பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டுப் பொலிந்து நிற்கின்றது. நிற்க,

இவ்வாறு பெரிய புராணம் பாடுவித்த சோழன் யார்? என ஆராய்வோம். கல்வெட்டுத் துறையின் 1926—27 ஆண்டைய அறிக்கையில்* பெரிய புராணம் பாடுவித்தவன் இரண்டாங் குலோத்துங்க சோழன் என்று கண்டிருக்கிறது. அது பொருந்துவதாகத் தோன்றவில்லை.

ஆசிரியர் சேக்கிழார் தம் நூலில் அநபாயன் என்ற ஒரு சோழனைப் பல இடங்களில் புகழ்ந்திருக்கின்றார். அவ்வநபாயன் பேரம்பல முகட்டுக்குப் பொன் வேய்ந்தான் என்பது

---

* Annual Report on Epigraphy for 1926—27.

"மேய இவ்வுரை கொண்டு விரும்புமாம்
சேய வன்திருப் பேரம்ப லம்செய்ய
தூய பொன்னணி சோழன்நீ டூழிபார்
ஆய சீர்அன பாயன் அரசவை."

என்ற பாயிரச் செய்யுளால்* விளங்குகிறது. எனவே பேரம்பல முகடு பொன்வேய்ந்த சோழனே பெரிய புராணம் பாடுவித்த வன் என்பது உறுதியாகின்றது. பேரம்பல முகடு பொன் வேய்ந்தவன் யார்? என்பதைத் துணிதல்வேண்டும். கல் வெட்டுத் துறையாளர் குலோத்துங்கன் II பேரம்பலம் பொன் வேய்ந்தான் எனக் கொண்டனர். ஆனால் அவ்விரண்டாங் குலோத்துங்கனது தமிழாசிரியரும், அவனுக்கு முன்னும் பின்னும் நெடுங்காலம் வாழ்ந்தவரும் மூன்று சோழர்களுக்கு உலாவும், தக்கயாகப் பரணியும் பாடியவருமாகிய கவிச்சக்கர வர்த்தி ஒட்டக்கூத்தர் குலோத்துங்க சோழ னுலாவிலே அவ னது அரிய செய்கைகள் பலவற்றை 75-ஆம் அடிமுதல் 116-ஆம் அடிமுடிய விவரித்துக் கூறுகையில் அவன் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்ததைக் கூறுகின்றனரே யன்றிப் பேரம்பலத் திற்குப் பொன் வேய்ந்தமையைக் கூறவில்லை. எனவே பேரம் பலம் பொன் வேய்ந்தவனும் பெரிய புராணம் பாடுவித்தவனும் இரண்டாங் குலோத்துங்கனல்லன்.

அஃதன்றியும், குலோத்துங்கன் தில்லை மன்றிற் கிடந்த திருமாலைக் கடலிற் போகட்ட செய்தியை ஒரு சிவத்தொண் டெனக் கருதிப் பாராட்டி,

'தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத்
தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து' என்று

குலோத்துங்க சோழனுலாவினும்,

'முன்றிற் கிடந்த கருங்கடல்போய்
முன்னைக் கடல்புகப் பின்னைத்தில்லை
மன்றுக் கிடங்கண்ட கொண்டல்பெற்ற
மரகத மேருவை வாழ்த்தினவே.' என்று

* திருத்தொண்டர் புராணம், பக்கம் 2 சைவசித்தாந்த மகாசமாஜப்பதிப்பு.

தக்கயாகப் பரணியிலும் பாடிய கூத்தனார், அக்குலோத்துங்கன் செய்வித்திருந்தால் பெரிய புராணம் பாடுவித்த பெருஞ் சிறப்பைப் பாராட்டிச் சொல்லியிருப்பாரன்றோ? அவ்வாறு அவர் சொல்லாமையாலும் அவன் பெரிய புராணம் பாடுவித்தவனல்லன் என்பது பெறப்படும். மற்றொரு செய்தியும் இதனை வற்புறுத்தும். இரண்டாங் குலோத்துங்கன் ஒட்டக்கூத்தர் பால் பேரன்புடைய மாணவன் என்பது

'பாடுங் கவிப்பெரு மானொட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் சொல்லுவரே'

என்ற அவன் வாக்கினால் அறியலாம். தன் மதிப்புக்குரியவரும், பெருஞ் சைவப்பற்று உடையவருமாகிய கூத்தரைக்கொண்டு அவன் பெரியபுராணம் செய்வித்திருக்கலாமே? அவ்வாறு செய்யாமையும் அவன் பெரிய புராணம் பாடுவிக்காமைக்குச் சான்றாகும்.

கல்வெட்டுத் துறையாளர் திருப்புறம்பயம் சிவன்கோயில் அர்த்தமண்டபத்தின் (இடை நாழிகையின்) தென் சுவரிலுள்ள "சுவஸ்திஸ்ரீ திருப்பேரம்பலம் பொன்வேய்ந்த திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஏழு" என்று தொடங்கும் கல்வெட்டினை இரண்டாங்குலோத்துங்கனதென்று தவறாகக் கொண்டு, சேக்கிழாரை அவன் காலத்தவரென்று துணிந்தனர். அக்கல்வெட்டு அவனுடையது அன்று.

ஏனெனின் அக்கல்வெட்டினுக்கு மேலே "சுவஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு ௰௫-வது" என்று தொடங்கும் மற்றொரு கல்வெட்டுளது. அது மூன்றாம் இராசராசன் கல்வெட்டென்று கல்வெட்டுத்துறையாளர்கொண்டனர். இரண்டாங் குலோத்துங்கனுக்கு மூன்று தலைமுறைக்குப் பிந்தியவன் மூன்றாம் இராசராசன். எனவே மூன்று தலைமுறைக்கு முந்தியவன்கல்வெட்டுக் கீழும், பிந்தியவன் கல்வெட்டு மேலும் அமையுமாறு எங்ஙனம்? முந்தியவனதுமேலும் பிந்தியவனது கீழும் அமைவதன்றோ இயலும். ஆகவே கல்

வெட்டுத் துறையாளர் கொண்ட கருத்துத் தவறுடையதாகும். உண்மையாதெனின் மேற்கூறிய கல்வெட்டுக்களில்கண்ட இராசராசன் இரண்டாம் இராசராசனே. குலோத்துங்கன் மூன்றாங் குலோத்துங்கனே. இவ்வாறு கொள்ளின் யாம் மேலே கிளப்பிய ஐயத்திற்கு இடமிராது.

மேலும் மூன்றாங் குலோத்துங்கன் மிகுந்த சைவப்பற்று உடையவன் என்று தெரிகின்றது. அவனை, சிவபெருமானின் ஏகபக்தன் என்று ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது. அவனே பேரம்பலம் பொன் வேய்ந்தவனும் பெரிய புராணம் பாடுவித்தவனுமாவான் என்பது மேலே கூறிய காரணங்களால் உறுதிப்படுகிறது.

எனவே சேக்கிழார் பெருமான் வாழ்ந்தது மூன்றாங் குலோத்துங்கன் காலத்திலே யாம்.

[இவ்வாராய்ச்சிக்குப் பயன்படக் கூடிய மேற்குறித்த கல்வெட்டுக்களின் எஞ்சிய தொடர்களில் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுகின்றேன். இவைகள் இதுகாறும் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் வெளிவராதவைகள்.]

I

இடை நாழிகையின் (அர்த்த மண்டபத்தின்) தென்புறம்.

1 சுவஸ்திஸ்ரீ திரிபுவனசக்
2 ரவர்த்திகள் ஸ்ரீராஜராஜதேவற்
3 கு யாண்டு ௬வது விக்கிர
4 ம சோழவளநாட்டு அண்டாட்டுக்
5 கூற்றத்து துடையார்க்கு
6 திருப்புறம்பிய முடை
7 யார் தேவ தாந மாந திருப்
8 புறம்பியத்துக் குடிமகன்
9 ஆலங்குடை யான் அடிகள் புறம்

10 பியன் உடையாற்கு குடுத்த

11 நொந்தா விளக்கு.....................என்று தொடர்கிறது.

II

1 சுவஸ்திஸ்ரீ திருப்பேரம்பலம் பொன்வேய்ந்த திரி

2 புவன சக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழதேவற்

3 குயாண்டு எ-வது வடகரை விக்கிரம சோழவளநாட்டு அண்டாட்டுக் கூற்றத்து திருப்

4 புறம்பயத்து இருக்கும் ஆலங்குடையான் அடிகள் புறம்பியனும் அயிற்

5 காடுடையான் குற்றி திருச்சிற்றம்பலமுடையானும் இவ்விருவோம் உடையார்க்கு திங்கள் அமா

6 வாசைக்கு அமுது செய்தருள அமாவாசை ஒன்றிற்கு ஆளுடை நாச்சிக்கும், திருப்பள்ளியறை நா

7 ச்சியார்க்கும் செந்நெல் திருஅமுது.....................

8 நாநாழியும் கூத்தாடுந் தேவர்க்கும் பிராட்டியார்க்கும் பூரிக்கு அமுது அரிசி நாலு நாழியும், பி

9 ள்ளையார் முத்துமுளைக் கன்றுக்கு திரு அமுது அரிசி நாநாழியும் பிள்ளையார் அறம்பயந்த பிள்ளை

10 யார்க்கு திருஅமுது அரிசி நாநாழியும் ஆக பூரித்த அரிசி...................என்று தொடர்கிறது.

வள்ளல் அதியமான் நெடுமானஞ்சி

(ஒரு சிறு நாடகம்)

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமையாசிரியர், கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி, தஞ்சை

(முற்றொடர்ச்சி துணர் 13. மலர் 11. பக்கம் 435.)

இயல் ச—காட்சி க

உறுப்பினர்கள்:—ஔவையார்; அதியமான்; கருணாகரர்; வீரவேள்மா; பிறைசூடி; காவலன்; நங்கை-இயன்மொழி; செல்வி-அருண்மொழி; தேவி-தேமொழி.

இடம்:—அதியர்கோவின் அரசப்பெருமன்றம்.

பொழுது:—முற்பகல்.

[திருக்கோவலூர் மலையமான் தோல்வியும் அதியற்குத் திருமகன் தோற்றமும்]

ஔவையார்:—வென்றி நலந்தோன்ற வீற்றிருக்குங் கோவே! நினது சினம் ஒடுங்குக. நின் படைப் பெருமக்கள் ஈண்டு, மலையமானையோட்டி வாகைசூடிய நினது வெற்றியைப் போற்ற, விழைந்து நிற்கின்றனர். திருமுடிக்காரி போரிலாற்றாது புறங்காட்டியோடியும் ஏனோ உனக்கு இன்னும் அவன்பால் சினந்தணிந்திலது? நின் பகை யொழிந்தது; நீ வீரவாகை சூடினாய்; நின்னை எதிர்ப்பவர் இந்நானிலத்துமின்று; ஆதலால், அதிய, நினது நெஞ்சம் அமைதியுறுவதாகுக.

அதியமான்:—அன்னாய்! தாங்கள் அம்மலையனை நன்கு அறியாதவர்கள் போலும்? அவன் நெஞ்சம் என்றும் வஞ்சகத்

தாலாயது. புறங்காட்டி இன்று ஓடிய அவன், நாளை ஒரு படையுடன் நம்முன் நிற்பினும் நிற்பன். அவன்றன் திருமுடி, என் சினத்தீ அவியுமாறு இம்மண்மீது உருண்டோடாமற் போயினும் அவனை யான் சிறைசெய்து தளையிடாது தவிர்ந்தமையே என்னை வருத்துகின்றது. என் செய்வது? அவனன்றி நம்மாலாவது என்?

கருணாகரர்:—எம்பெரும! "நமது யானைகள் பகைவர்களது எதிர்ப்பு ஒழியுமாறு போர்முனையில் பொருதமையால் அவற்றின் கொம்பு நுனிகள் தேய்ந்து குறுகின. அவைசெல்வதைக் கண்ட நம் பகைஞர் தம் மதில்வாயிற் கதவுகளின் பழைய தாழ்ப்பாள்களை நீக்கி புதியன பொருத்துகின்றனர். மற்றும் நம் பரிகள், போர்க்களத்தில் மாண்டவர்தம் உருவு அழியுமாறு பிணங்களின்மீது உழக்கிச்சென்றமையால் குருதிக்கறை மிகுந்த குளம்புகளோடு உள்ளன; அவற்றின் செலவைக்கண்டு, காடுகளின் சிறுவழிகள்யாவும் கவைத்துள்ள வேல முள்ளால் அடைக்கப்பெறுகின்றன." அண்ணலே, இவையாவும் நின்பாற்கொண்ட அச்சத்தால் நிகழ்வனவேயாம்.

வீரவேள்மா:—வீரர்தம் தலைவ, 'உறைக்குள் கட்டி வைக்கப்பெறாத நினது வேற்படைக்கு அஞ்சி, பகைஞர், கேடகப்பிடியுடன் தமது கைப்பிடிப்பினை நெருக்கிக்கொள்ளுகின்றனர்; ஏனெனில் நின்வேல் அவரது மார்பகத்தே எறியப்படும்போது அவர்தம் பரிசையையும் ஊடுருவிச் செல்லும்' என்பதனை உணர்வர். "இன்னும் வாள்பட்ட புண்ணால் வடுப்பெற்ற நம் வீரமிக்க படைஞர்தம் வலிமையைக் கண்டு, புண்ணிலிருந்து ஒழுகும் குருதியால் நனையப்பெற்ற அம்புகளை, நம் பகைஞர் தூணியகத்தே எடுக்காமல் வைத்துள்ளனர்."

பிறை சூடி:—எம் நாயக, "உயிரினைக் காக்கும் பொருட்டு வெண்சிறுகடுகைப் புகைத்தாலும் தடைப்படாது, விரைந்து சென்று, தக்க முறையால் இயல்பின்புறமாயிருந்து ஆவியைக் கொள்ளும் இயமனையே ஒத்துள்ளாய் நீ. ஆதலால், தலை

சாய்ந்துள்ள நெற்கதிர்கள், வரப்புடன் சேர்ந்து சுழலும் கழனிகளோடு, நீர்வளம் மலிந்த பகைஞர் தம் அகன்ற நாடு, நின் சினம் பெற்றால், அப்பகைவர் வாடும்படி அழிவது திண்ணம்."

ஔவையார்:—எம் தலைவ, நின் ஆற்றலழியுமெனக்கருதி, மலையமான் தப்பினமைக்குக் கவல்கின்றனையோ? அவ்வாறெனில் அதனைவிட்டொழிக. நினக்கு நிகர் நீயே. (காவலன் பணிவுடன் வருதல்) ஏடா! என் செய்தி?

காவலன்:—அம்மையே, வணங்குகின்றேன். நமக்கு, பெறுதற்கரிய நன்னாளாகுமிந்நாளின் இந்நற்பொழுதில், முருகன் திருவருட் பெருக்கால், பூப்போலும் வடிவினையுடைய மைபூசப் பெற்ற கண்கள் மயங்கவும் தோள்கள் மெலியவும் தன்னை நோக்கிய மகளிர் தம் நெஞ்சைப் பிணிக்குமாறுள்ள அழகுடன், இளஞாயிறுபோன்ற ஓரிளவரசர் நமது அன்னையர்பால் தோன்றியுளர்.

ஔவையார்:—நல்ல செய்தியே! இதனைப் பெற்று மகிழ்க (ஒரு பொற்காசு அளித்தல்). நமது இறைமகன் வாழ்க! வேந்தே, இனிநம்பால் எத்தகைய உளைவும் தோன்றுதலாகா. மகன் பிறந்த இம்மங்கலநாளில் நினது உளம் பெருமகிழ்ச்சியால் பொலிவதாகுக. ஏடா, காவல! நீ விரைந்து சென்று நம் வள்ளுவனை அழைத்து, நம் மன்னர்மகன் பிறந்தமையை, இம்மாநகர் உணருமாறு முரசொலி செய்து தெரிவிக்க விடுக்க. மற்றும், நமது நகர்ப்பெருந்தகை—அம்பலவாணரையணுகி, அரசர், இளவரசர் பிறந்தநாட் சிறப்புக்கு வேண்டுவன விரைவினிலியற்ற ஒரு திட்டம் விரும்புகிறார் எனவும் அறிவிக்க. (காவலன் பணிந்து செல்லுதல்) ஓ! அதோ, நமது செவிலித்தாயர்களும் மகவுடன் வருகின்றனரே?

நங்கை-இயன்மொழி :—(திரைக்குள்).

மாணிக்க மால்வரைமேல் மன்னுசெக்கர்வானமென
வேணிப்பிரான் தோளில் மேவுஞ் சிறுகுருந்தோ.

செல்வி-அருண்மொழி :—(திரைக்குள்)
செஞ்சதங்கை கொஞ்ச சிறுகிண் கிணியாடக்
கஞ்சமலர்த் தாளுமையாள் கண்களிக்கவந்தானே.

தேவி-தேமொழி :—(திரைக்குள்)
பெண்ணாய்ந்த கற்புப் பிடியும் பிணைமானும்
கண்ணாரக் கண்டு களிக்கவரு கற்பகமோ.

மூவரும் :—(மகவுடன் மன்னன் முன்)
நீலமயில் வாகனனே நெட்டிலை வேலாயுதனே
கோலநிறைக் கோழிக் கொடிபடைத்த சேவகனே

நங்கை :—குன்றமுங் கொக்கும் குரைகடலும் சூர்மார்பும்
குன்ற வடிவேல்எறிந்த கொற்றவனேநற்றவனே

செல்வி :—உள்ளத் திமிரம் ஒழித்துச் சிவானந்த
வெள்ளத்துள் அன்பர் விளையாட வைத்தானே

தேவி :—முத்தோ குலிசமோ மூதொளி மாணிக்கமோ
சித்தோ தென்போரூர்ச் சிவானந்த வாரிதியோ

மூவரும் :—ஞானக் கரும்போ மெய்ஞ்ஞானனந்தக்கடலோ
தானமற்றோர் போற்றும் தமிழமுதத் தண்ணளியோ.

ஔவையார் :—(அண்மையிற் சென்று நோக்கி) செவிலியர்காள்! நீவிர் கூறியன மெய்தான்: நமது வேந்தன் முருகவேளைத் தான் திருமகனாகக் கொண்டுள்ளான். வாழ்க நம் மன்னன்! வேந்தே, உனது அருமை மகனை இவண் இனிது காண்க. (அதியமான் அமைதியின்றி நோக்குதல்) மன்ன! அரும்பெறல் திருமகனைக் கண்டுமா நினக்கு இன்னும் அமைதி ஏற்படவில்லை? அரசே! "விண்ணவரை வழிபட்டு நல்வேள்வியில் ஆவுதி அளித்து, இவ்வுலகிற்கு, பெறுதற்கரிய மரபு வாய்ந்த கரும்பைக் கொண்டுவந்து, இந்நிலவுலகத்தில் ஆணைசெலுத்திய, தொன்மை நிலை பெற்றுயர்ந்த நினது மரபின் முன்னோர்களை யொப்பவே நீயும் பொன்வீரக்கழல் புனை காலினையுடையாய்: பெரிய பனம் பூ மாலையைப் பூண்டுளாய்; மலர் மலிந்த பொழிலையும் பெற்றுளாய். இன்னும், நாளும் புதிய புலால்மணநாறும் நீண்ட

வேலையும், தமிழ்நாட்டு எழுமன்னர்களோடும் ஒன்றுகூடி நாடும் நீங்காத அரசவுரிமையையும் குறைவிலாது பெற்றுளாய்: எனினும் அமைதிபெறாது போரினை விரும்பி ஒலி மிகும் முரசு முழங்க மன்னர் எழுவருடன் பகைத்து மேற்சென்று போரில் வெற்றிவாகை சூடி, நின் வலிமையை விளங்கக்காட்டிய அந் நாளிலும் உனது புகழின் மேன்மையைப் பாடுநர்கள் பாடவியலாது போயினர். ஆனால் இன்று, எதிர்ப்பு மிகுந்த கோவலூரை யழித்து வென்று, மற்றும் பகைஞர்தம் அரண்களை அழிக்கும் திறல் மிகுந்த ஆழியைத்தாங்கியுள நினது தோளை, மாபெரும் புலவன்—பரணன், தன் பெருமை தோன்றப் பாடினன்.'' இதனால் நின் வலிமையின் நிலைமை விளங்குவதன்றோ!

(இந்நிலையினும் சினம் நீங்காமைகண்டு) "கையிலுள்ளது வேல்; காலில் இருப்பது புனைகழல்; மெய்யினில் வேர்வையுள்ளது; குருதிநிரம்பிய பசியபுண் தொண்டையின்பால் ஏற்பட்டுள்ளது. பகைவர்கள் ஒழியுமாறு வளர்கின்ற இளம் பனையினுச்சியில் ஊசிபோன்றுள்ள வெண்மலரையும், பெரிய வெட்சிப்பூவினையும், வேங்கைமலரோடு சேர்த்து, சுருண்ட கரிய மயிரினில் வனப்புற அணிந்து, புலியுடன் போர்செய்த வலிமை மிகுந்த யானைபோல, சினம், இன்னமும் தணியவில்லை. பகைஞரை வெகுண்டு நோக்கிய அவனது கண்கள், தனக்குற்ற அருமைச் சிறுமகனைக் கண்டும், சிவப்பு மாறாதுள்ளன. ஆதலின் இவனைச் சினமூட்டியவர்கள் ஐயோ, பிழைக்கமாட்டார்கள்.

கருணாகரர்:—தண்ணளி வேந்தே! தாயின் தனிமொழியை ஓம்புக. அவர்தம் உணர்ச்சியும் உளமும் வெறுத்த எவையும் தாங்களிதுவரையிற் புரிந்ததில்லையே! பெரும! எமது, முழுமதி நிகர்க்கும் திருநிறை இளவரசைப்பெற்று, உளமகிழ்வு பெற்றருள்க.

அதியமான்:—அன்னாய்! எனது அடங்காச் சினத்தை இன்னே அவித்தேன். தங்களுளம் வாட மனங்கொளேன். தேவி, தருக எம் மகனை. (மன்னன் தன் மகனை ஏந்தி மகிழ்தல்)

கருணாகரர்:—தண்மதி நிகர்க்கும் பொன் இளங்கோவுடன் எம்மிறை அதியமான் என்றும் வாழ்க!

யாவரும்:—வாழ்க, வாழ்கவே.

காட்சி முடிவு.

மதிப்புரை

தேவாரத் திருப்பதிகங்கள் (மதுரையும், ஈழநாடும்):— யாழ்ப்பாணத்துவணிகர், திரு. சு. வே. வில்லிபுரம் பிள்ளை அவர்களின் நன்மகன் திரு. சா. வ. சோமசுந்தரனார் தமது அன்னையாரின் நினைவின்பொருட்டு இத்தெய்வத் திருப்பாடல்களைத்தொகுத்து வெளியிட்டும், நூல்களை சைவநன்மக்களின் நலங்கருதி இலவசமாக நாடெங்கும் அனுப்பிவரும் செயல்அரிய சிவத்தொண்டாகும். பிள்ளை அவர்களின் பரந்த உள்ளத்தையும், தூயமனத்தையும் மிகமிகப் பாராட்டுகின்றோம்.

வெள்ளிவிழா நன்கொடை

திரு. K. தியாகராசபிள்ளை, Electrical Engineer, Bombay	50—0—0
,, D. சதாசிவம் பிள்ளை, New Delhi	50—0—0
,, T. R. விசுவநாதபிள்ளை, Bapatla	25—0—0
,, T. இராதாகிருட்டின நாயடு B. A. B. L., தஞ்சை	3—0—0
,, கச்சி ஏகம்பனார்	20—0—0
,, அ. கந்தசாமிப் பிள்ளை	5—0—0

(துணர் 13. மலர் 11-ன் பிழைதிருத்தம்)

	பிழை	திருத்தம்
கல்விச்செய்திகள்—பக்.	457, 458, 459	437, 438, 439

உ

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

தமிழ்க்கல்லூரிக் குரிய மாணவர்கள்

இச் சங்கத்தில் தனித்தமிழ்க் கல்லூரியின் தொடக்கம் அண்மையில் நடந்த வெள்ளிவிழாவில் ஏற்பட்டது தமிழன்பர்கள் அறிவார்கள். இதுபோது சென்னைப் பல்கலைக் கழகத்திற் குரிய வித்துவான் பயிற்சியின் புதுமுகவகுப்பாகிய 'Entrance' வகுப்புத் தொடங்கப்பெற்றுளது. இவ்வகுப்பிற்கு இவ்வாண்டில் முப்பது மாணவர்கட்கு உணவு உதவி ஏற்பட்டுளது. மாணவர்கள் 'S. S. L. C.' அல்லது அதற்கொப்பான அங்கில அறிவுடையர்களாக இருத்தல் வேண்டும். தமிழில் சிறந்த பயிற்சியுளதேல் அங்கில அறிவு சற்றுக் குறைந்திருப்பினும் ஏற்றுக்கொள்ளப்படும். மே மாத இறுதிக்குள் விண்ணப்பங்கள் சங்க அமைச்சருக்கு அனுப்புதல் வேண்டும். ஒப்புக்கொள்ளப்பெற்ற மாணவர்கட்கு விவரம் உடன் அறிவிக்கப்படும். அவர்கள் சூன் மாத முதல் வாரத்தில் வந்து சேரல்வேண்டும்.

த. வே. உமாமகேசுவரன்,

தலைவர்.

[பக். 472-ன் தொடர்ச்சி]

இயல் ௪—காட்சி ௨

உறுப்பினர்:—அதியமான்; ஔவையார்; காவலன்

இடம்:—மன்னன் கோயில்

பொழுது:—பகற்பொழுது.

[அதியமான் போருக்கு ஆயத்தமாதல்]

அதியமான்:—அன்னாய்! அம் மலையமானின் செய்தியை இன்று அறிந்தீர்களா? அன்றே யான் அவனைச் சிறை செய்யாமல் தப்பவிட்டதனாலன்றோ இன்று எனக்கு இவ்விடர் நேர்ந்தது. நெடும்போர் செய்து நீடுபுகழ் பெற்று 'நம்மை எதிர்ப்பவர் இன்றெவரும் இல்லை'யென எண்ணி இறுமாந்திருந் தேற்கு, அம்மலையமான் திருமுடிக்காரியினது எதிர்பாரா இவ்வெதிர்ப்பு எனது வெற்றியில் மிகுந்த ஐயத்தை விளைவிக்கின்றது. மற்றும், தனக்குள்ள நீங்காப் பகைஞனாய, விற்றொழில் வீரன் வெற்றிமிகு ஓரியைக்கொன்று, அவனது கொல்லிமலை நாட்டையுங் கைப்பற்றுதற்குத் துணைநின்றமை யாற்றான், இன்று, அம்மலையமானுக்குப் பெருந்துணையாகத் தனது நாற்பெரும்படைகளோடும் அச்சேரமான் பெருஞ்சேரவிரும்பொறை, இவண் என்னை எதிர்த்து வந்தனன் போலும்? பகைஞர்கள் நம் மதிற்புறத்தே முற்றுகையிட்டு நம்மைப் போருக்கு அழைப்பதன் முன்னர், நம் படைகள் யாவையும் ஒன்றுகூட்டவியலுமோ, என்ற ஐயந்தோன்றுங்கால், என்

பால் அச்சமும் உடன் நிகழ்கின்றது. என்செய்வது ?... காவல! நீ விரைந்து நமது கருணாகரரிடம் சென்று, 'நமது மன்னர், படையின் அணி வகுப்புக் காண வருகின்றார்' எனக் கூறுக. (காவலன் வணங்கிச்சேல்லுதல்)

ஔவையார் :—பெரியதகைமையையுடையாய்! நீ இவ்வாறு அஞ்சினால், நல்ல வார்களாற் கட்டப்பெற்ற 'இழும்' என ஒலிக்கும் முரச முழங்கப் பகைவர் மேற்சென்று, போர் புரிவது யாங்ஙனம்? நினது மாற்றலர், நின்பாலுள்ள தூசிப் படையைக் கண்டதும் மிகுந்த நடுக்கங்கொண்டு பலதிசைகளினும் சிதறியோடுகின்றனர். மற்றும், நீ போர் செய்யுங்கால், நின் பகைஞர், போரினில் வாளினால் வெட்டுண்டு சாவாது, ஏதோ நோயின்காரணமாக அப்போர்க்களத்தே இறக்க நேரிடினும் அப்போது அவர்களை அறமுறை வழுவாத நான்மறையந்தணர்களின் நல்ல வழிபாட்டினால் தரப்பெற்ற, பசுமையான நாணற் புல்லிற் கிடத்தி, வீரப்போர்முனையில் இறந்துபட்ட வீரக் கழல் புனையும் வேந்தர்கள் செல்லும் வீரர் மேலுலகத்திற்குச் செல்லும் வீரவழிபாடுகள் நிகழும்ன்றோ? இவற்றையெலாமுணர்ந்து நின் வலிமைதோன்ற மனந்தடுமாற்றமின்றி மாபெரும் போரை இன்னே சென்று புரிக. அதோ! பறையொலி எழுகின்றது. நமது படைகளும் ஆரவாரிக்கின்றன. நினது செலவினால் அவை முன்னினும் பன்மடங்கு வலிமை பெறும். எழுக வேந்தே! வெல்க பகைஞரை! எல்லாம் இறைவன் திருவருள்.

அதியமான் :—தமிழ்த்தாயே; விடைபெறுகின்றேன். போரினின்றுமீளும்கருத்து எனக்கு இதுபோது தோன்றவில்லை, எனினும் என்கடமையைப்புரிவேன். என்றுமிலாதனவாய ஐயமும் அச்சமும் விரவிய கருத்துக்கள் ஒன்றன்பின்னொன்றாக என்னுளத்தே தோன்றி என் வலிமையையும் திட்பத்தையுங் குலைக்கின்றன. யாது கருதியோ எனக்கு மேலுமேலும் அமைதியின்மை பெருகுகின்றது. தாயே! எவைவரினும் அவைபற்றி அஞ்சேன். இவ்வுலக வாழ்க்கை, புல் நுனிமேற்றங்கும் நீர்த்

துளித்தெனை நன்குணர்வேன். ஆகலினால் என் இறப்பு கருதி யான் எட்டுணையும் கருத்தழிந்திலேன். ஆனால் ஒன்றுமட்டும் தங்களை வேண்டுகின்றேன். எனது தனயன், இளைஞன்; கருத்திலான்; ஒன்றும் உணராதவன். என்பின், என்துணைவி இவ்வுலகில் உயிருடன் உறையாள். ஆதலால் தாங்கள் அவனுக்கு, தாயும், தந்தையும், ஆசிரியனும், அண்ணலும், ஆண்டவனுமாயிருந்து அவன் பிற்றைநாளில் வெற்றியுடன் வாழ்ந்து இன்புற்றிருக்க வேண்டுவன புரிவீர்களாக. இதுவே எனது பணிவுமிகுந்த தங்கள்பால் விரும்பும் இறுதிவேண்டுகோள் ஆகும். எனது கடன் இவ்வுலகில் இனி வேறில்லை. இனிமேல் யான் போர்க்கு விரைந்து எழுகின்றேன். அன்னையே! என்னருமைத் தமிழ்ச் செல்வியே! எனது உளமார்ந்த நெடுவணக்கங்கள் தங்கட்கு உரியவாகுக. தங்களது இனிய நட்புரிமைக்கு யான் எழுபிறப்பினும் தங்கட்குக் கடப்பாடுடையவனாகின்றேன். எனக்கு விடைதருக. (ஔவை கண் கலங்குதல்) தாயே! அமைதி பெறுக. சென்று வருகின்றேன். (அதியமான் செல்ல, ஔவை பெருமூச்செறிந்து நிற்றல்.)

இயல் ச—காட்சி உ முடிவு.

இயல் ச—காட்சி ரு

உறுப்பினர் :—அம்பலவாணர்; ஔவையார்; கருணாகரர்; அதியமான் நெடுமான் மகன் பொகுட்டெழினி; காவலன்

இடம் :—அரசப்பெருமன்றம்

பொழுது:—வைகறைப்பொழுது

[அதியமான் வீழ்ச்சியும், அவன் மகன் பொகுட்டெழினியின் முடிசூட்டும்]

அம்பலவாணர் :—ஆ! முருக! நினது திருவடியே துணையென நம்பிய எமக்கு இவ்வாறு இடர்ப்பாடு ஏற்படலாகுமா? கைக்குக் கிட்டியது வாய்க்கு எட்டாமற் போயிற்றே! ஐயகோ! அன்று எம் தகடூர்நாயகனின் பிரிவால் வாட்டமுற்ற யாம், பெரிதும் போற்றி வழிபடுமாறு எமக்குப் பற்றுக்கோடாகி, இதுகாறும் இத்தகடூர் பெருஞ்சிறப்புடன் மிளிர, தண்ணளி சுரக்கத் தனியரசு செலுத்திய, எம்மிறைவனின் முடிவு, இவ்வாறுவது நன்றோ? தன்மரபிற்றோன்றியவனென அச்சேரலர் கோன்—பெருஞ்சேரலிரும்பொறை கருதாதது ஏற்றிற்கோ? முகத்தினும் மார்பினும் பட்ட இவ்விழுப்புண், அருள்வடிவமாய அஞ்சியண்ணலை எம்மிடைநின்று அகற்றியதோடமையாது, இத் தகடூரார்அனைவரும் தாய்தந்தையரற்றுத் தவிக்கும் தனி யிளங்குழவிகள் போலேங்கவும் வைத்ததே! ஏ, பெரும! வினை வலியை வெல்ல எவராலாகும்?

ஔவையார்:—(பெருமூச்செறிந்து) 'வெட்டிச்சுடப்பெற்ற கொல்லையில் குறவன் முறித்த மரத்துண்டுபோல, கரிந்த மேற் பட்டையுடைய விறகாலாய ஈமப்பள்ளியில் எரியும் தீயினில்

உடல் சுடுதற்குச் சேரினும் சேருக. சேராது, வான்உற உயரினும் உயருக. குளிர்ந்த சுடரையுடைய மதிபோன்ற வெண்குடை பெற்ற ஒளிமிக்க ஞாயிற்றை நிகர்க்கும் எமது அஞ்சியின் புகழ் மாயாது.

கருணாகரர் :—அன்னாய் ! நமது பெருமான்றன் புகழுடம்பு எவ்வாறு மறைய வியலும்? 'அவனுடன் இணைந்து, மகிழ்ந்து கழியாத, காலைமாலைப் பொழுதுகள் இனி இல்லையாகுக. யான் வாழும் நாட்களும் இனி எனக்குப் பயனிலாமையால் அவை அல்லாத நாட்களேயாகுக. முடியோடுயர்ந்து விளங்கு மலைபொருந்திய நாடுமுழுதும் தரினும் அதனைப் பெறாது மறுத்தவனாய எம் இறைவன், தனது நடுகல்லின்மீது மயிற்றோகை யணிந்து வணங்கி வழிபட்டுப் பின்னர், பன்னாடை யாலரிக்கப் பெற்ற தூயமதுவைச் சிறிய கலத்துள் அன்பின்றி வழங்கினால் ஏற்றுக்கொள்வனோ? உண்மை வீரனாம்பனாயின் யான் இனி உயிர் தாங்குதல் ஒண்ணாது.

ஔவையார் :—அன்பர்களே ! என்செய்வேம்? சிறிதளவு மது பெற்றால் அதனை எமக்கே தருவன் : இனி அஃதில்லை ! மிகுதியாகப் பெற்றால், யாம் உண்டு பாட, எஞ்சியதனை அவன் நுகர்வன் ; அஃது இனி ஏற்படாது ! சிறிதளவு சோறு இருப்பினும் மிகப் பலரோடு உண்ணுவன் ; அது கழிந்தது ! பெருஞ் சோறு பெறினும் பலருடனேயே உண்பன் : அது நீங்கியது ! என்புடன் கூடிய தசையுணவு எலாம் எங்கட்குத் தருவன் : அஃது இல்லாகியது ! போர்க்களத்திலே அம்புடன் வேல்பாயுமிடங்களிலெல்லாம் தான் சென்று நிற்பன் : அச்செயலும் அற்றது ! நரந்தமலர் மணக்கும் தன்கையால் புலால்நாறும் எமது தலையை அன்பால் தடவுவன் : அஃதினி நிகழாது ! அவனது அரிய மார்பிற் பாய்ந்தவேல் அரிய தலைமைபெற்ற பெரும்பாணர்களது அகன்ற ஏற்குங்கலன்களைத் துளைத்து, இரப்பவர்தம் கைகளை ஊடுருவிச்சென்று, தன்னாற்காக்கப்பெறும் சுற்றத்தாரது சிறிய கண்பாவைகளின் ஒளிமழுங்க, அழகிய சொற்களின் நுண்ணிய தேர்ச்சிமிகும் புலவர்களது நாவினிற்

போய்த் தைத்தது. பற்றுக்கோடாகிய எம்மிறைவன் எவ்விடத்துள்ளான்? இனிப்பாடுவோருமில்லை: பாடுவார்க்கு, ஒன்று ஈவாருமில்லை. ஆதலால், இவ்வுலகில், குளிர்ந்த நீர்த்துறையின் தேன்மிக்க பெரிய பகன்றைமலர் எவராலும் அணியப்பெறாதது போல, பிறருக்கு ஒன்றும் நல்காது மாய்ந்துபோகும் உயிர்களும் மிகப் பலவாகும்.

வீரவேள்மா:—பீடுடைய பெருமக்களே! யாவும் அறிந்த தாங்களே இவ்வாறு உளங் கலங்கினால் நமது குடிமக்கட்கு ஆறுதல்மொழி கூறுபவர் யாவர்? மாற்றலர்தம் கொடுமையால் மண்ணுடுதுறந்த நம்மன்னர்பிரான் மிகுமாண்புற்றவரே: யெனினும் ஊழ்வினை பெருவலியுடைத்தன்றோ? அதனின்று நீங்க எவராலாகும்? பெரியீர், இதுபோது, நமது படைச்செருநர்கள் யாவரும் ஒற்றுமை குலையாது போர் புரிந்தமையால், நம்மிறைவன் நம்மைப்பிரிந்தும், நமது தகடூர் நகரைக் கைக்கொள வகையறியாது தமது பெரும் படைகளுடன் நம்மெதிரிகள் பின் வாங்கினர். மலையமான் திருமுடிக்காரியோவெனில், தனது திருக்கோவலூரைத் திரும்பப்பெற்றதும் உள நிறைவுகொண்டு போரை முடித்தனன். அவன் மகிழ்வு கண்டதும் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையும் தமருடன் தன் நாடு ஏகினன். எனவே, இனி நமக்குத் துன்பமின்று: அச்சமுமில்லை. ஆதலால் இன்னே, நமது மன்னர்மகன் திருவளர் போகுட்டெழினிக்கு, நமது நாட்டின் தலைமையை யளிப்பேம். முடிசூட்டு விழாவுக்கு யாவும் திட்டஞ்செய்து, தங்களாணைப்படி இதோ நம், பிறைசூடியும், இளவரசரை மங்கலநீராட்டி, மடியுடுத்தி, மணிமுடிசூட்ட, இவண் அழைத்து வருகின்றனன். நாம் யாவரும் நம்நம் வினைமே லுளங் கொள்வோம்.

[அமைதியுடனிருந்து, இளவரசரை அரியணைமீது இருத்தி, அரசவிருதுகளளித்து, அவற்கு மணிமுடி சூட்டேல்.]

அம்பலவாணர் :—குதிரை மலைநாட்டுத் தகடூர் வாழும் குடிமக்களே ! நமது பழைய மன்னர் தகடூர் நாயகற்குப் பிறகு நம்மைப்புரந்து நல்லரசு செலுத்திய நமதிறைவன் அதியமான்—நெடுமானஞ்சி, அண்மையில் நடந்தேறிய திருக்கோவலூர் மலையமான் திருமுடிக்காரிக்காகச் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையினால் தோற்றுவிக்கப்பட்ட போரில், சேரமானது வேற்படையால் விழுப்புண் அடைந்து, உம்பகுலகாளச்சென்றமையால், இத்தகடூர் ஆட்சியை, அவ்அதியமானின் திருமகன் போகுட்டெழினி, ஆன்றோர்வாழ்த்த, அரசியற்றலைவர்கள் அணியுடன் வணங்க, ஐம்பெருங்குழுவினர் அடிதொழ, திருவருட்டுணைகொண்டு, நம் நாட்டவர் முன்னிலையில், அரசுகட்டிலேறி, மணிமுடிஏற்று, நம்மன்னர்பிரானாக விளங்குகின்றார். ஆதலால் நாம் இன்றுமுதல் அவரடிதொழூஉம் குடிமக்களாயினேம். எனவே, நமதுகடமைகளை இனித்தவறாது அவருக்கு முறைப்படி புரிவோமாக.

ஔவையார் :—அலர்பூந்தும்பை அணிந்தவனே ! அழகிய வலிய மார்பையுடைய எம் தலைவ !! திரண்டு நீண்ட கைகளையுடைய எமது மன்னன் மகனே !!! நீ என்றும் இன்பச்சிறப்பும் வென்றிச் சிறப்பும் பெற்றவனாக நெடிது வாழ்வாயாக. மற்றும், உப்புவாணிகர் தமது பண்டம் நிறைந்தவண்டிக்கு ஏதஞ்சிறிதும் வாராதவாறுஅமைத்துள்ள சேமஅச்சுப்போல, நீயும், நின்னாற் புரக்கப்படுகின்றநாட்டினில் ஏற்படுகின்ற இடையூறுகளுக்குத் தக்க காவலனாய் அமைக. நினக்கு என்றும் திருமுருகன் அருள் பொலிவதாகுக.

கருணாகரர் :—வீரருள் வீரனாய எமது வீர அஞ்சியின் பின்தோன்றலே ! யாமும் எமது படைஞரும் இன்று முதல் தங்கள் ஊழியர்கள் : எமது கடமைகள் தங்கள் உளமகிழ என்றும் இனிதே நிறைவேறும். எங்களது வணக்கத்தை ஏற்றருள்க. (தலைவணங்குதல்) எமது இறைவன் பொகுட்டெழினி வாழ்க ! [யாவரும் :—வாழ்கவே !] புலவர்போற்றி, இரவலர்

புரக்கும் எமது பொருட்டெழினி வாழ்க !! [யாவரும் :—வாழ்கவே !!] தகடூர் முறைசெயுந் தண்ணளியுடைய குதிரைமலை நாட்டுக் கொற்றவன் பொருட்டெழினிதேவன் வாழ்க !!! [யாவரும் :—வாழ்க, வாழ்கவே !!!]

இந்நாடகம் முற்றும்

வாழிபல ஊழிதொறும் வாழி தமிழ்அன்னை !
மைந்தரொடுந் தொண்டரொடும் வாழி தமிழ்அன்னை !!

நலம் ! நலம் !! நலம் !!!

குறிப்பு:—இச்சிறுநாடகம் எழுதத்தூண்டியது Dr. உ. வே. சாமிநாதையரவர்களது 'புறநானூறு' ஆகும். இது, கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி மாணவர்களால், அக்கல்லூரியின் பதினாறாம் ஆண்டுவிழாவின்போது 5—11—1932ல் சிறப்புற நடிக்கப்பெற்றது.